THAIVEEDU APRIL 2023 ஏப்பிரல் www.thaiveedu.com

# தாய்வீடு










**பேராசிரியர் க. கைலாசபதி பிறந்து 90 ஆண்டுகள்! -சில நினைவுகள்**

- கா. இந்திரபாலா

**வங்கியும் வங்குரோத்தும்**

- ரதன்

**வங்கதேசத்தின் கடல் மதில் அரண் சுந்தரவனக் காடுகள்**

- சதீஸ் செல்வராஜ்

**வைகறை தெளியும் ஒளிர் நட்சத்திரம் மு. நித்தியானந்தன்**

- நடராசா சுசீந்திரன்



NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law




Sri Nadarajasundram
Real Estate Broker
RE/MAX ACE
416-276-6666
srinada21@gmail.com




Siva Shanmuganathan
Broker
416-545-7482
Joy Selvanayagam
Broker
416-358-6928
Knowledge. Experience. Success
Siva & Joy Real Estate Team
HomeLife/Future Realty Inc., Brokerage *
205-7 Eastvale Dr., Markham ON, L3S 4N8
Bus: 905.201.9977 Fax: 905.201.9229
*Independently Owned and Operated




Your Trusted Realtor
Buying | Selling | Leasing | Investing
RE/ON
Homes Realty Inc.
Brokerage
FREE HOME EVALUATION
Justin William
Broker of Record/ Owner
25 Karachi Drive #15, Markham ON L3S 0B5 - Office 905.209.8080
Dir. 416.803.7344
www.reon.ca




RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
Baskaran Sinnadurai
Broker
Commercial - Industrial - Investment
Dir: 416.880.8585
Off: 416.270.1111
Fax: 416.270.7000
baskaran.toronto@hotmail.com




MORTGAGE ALLIANCE
Lic# 10530
Best Rates & Advice You Can Trust!
உங்கள் அனைத்து அடைமானக்கடன் தேவைகளுக்கும்
Purchase | Refinance | Renewal
Ram Krish
MORTGAGE AGENT
416-427-5555
795 Milner Ave D2, Scarborough, ON M1B 3C3




Tennyson Dilipkumar
Realtor
416-896-8989
tennysondilipkumar@gmail.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife Galaxy
Real Estate Ltd. Brokerage*




உடனடி வேலை வாய்ப்பு!
Toronto தொழிற்சாலையில்
காலை, மாலை, இரவு நேர வேலை வாய்ப்புகள்
Shinol inc.
போக்குவரத்து வசதிகள் வழங்கப்படும்
தொடர்புகளுக்கு - 416-286-6375
(திங்கள் முதல் வெள்ளி 9:00மணி முதல் 5:00மணி வரை)




MORTGAGE ARCHITECTS
THEVEN KANKESU
Mortgage Agent FSCO Lic.: M08008759
1193A Brimley Rd. #7
Toronto, Ontario, M1C 5G3
T: 416.939.8789
F: 416.439.1965
theven.kankesu@mtgarc.ca
thevenk1.tk@gmail.com




Vela Subramaniam
Sales Representative
416 786 0760
vela4homes@gmail.com
Find me on: facebook
vela4homes
www.vela4homes.com
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc., Brokerage*




VENTHAN KANDIAH
Sales Representative
Cell : 6476286109
Residental
Commercial
Investment

**Publisher & Editor**
P.J. Dilipkumar
**பதிப்பாளர், ஆசிரியர்**
பி.ஜெ. டிலிப்குமார்
**நிறுவன வரைகலைஞர்**
கருணா
**ஆலோசகர் குழு**
அருண்மொழிவர்மன்,
சேரன்,
துஷி ஞானப்பிரகாசம்,
ஞானம் லெம்பட்,
கந்தசாமி கங்காதரன்,
பொன்னையா விவேகானந்தன்,
ரவிச்சந்திரிகா.
**ஓவியங்கள்**
டிராட்ஸ்கி மருது (இந்தியா),
ஜீவா (இந்தியா),
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
ரமணி (இலங்கை),
சௌந்தர் (இங்கிலாந்து),
றஷ்மி (இங்கிலாந்து).
எஸ். தர்மதாஸ் (இலங்கை).
**புகைப்படங்கள்**
K. கிருஷ்ணராஜா (இங்கிலாந்து),
சர்வேசன்,
துசியந்தன் துரைரத்தினம்.
**தட்டச்சு**
சாம் டானியல்.
**ஒப்புநோக்கல்**
கௌரி,
கந்தசாமி கங்காதரன்.
**பொது உறவுத் தொடர்பு**
குமணன் தம்பிஜயா
**ரொறன்ரோ விநியோகம்**
இராமநாதன் ரூபன்,
சசி,
மெய்யழகன்.
**மொன்றியால் தொடர்பு**
சுகுமாரன் சின்னையா.
**ஒட்டாவா தொடர்பு**
அலெக்ஸ் சிவசம்பு: 613-276-7253
**அஞ்சல் முகவரி**
Editor
P.O.Box #63581
Woodside Square
1571 Sandhurst Cir.
Toronto, ON. M1V 1V0
Tel :416-646-3422, 416-857-6406
Fax : 416-849-0594
Web : www.thaiveedu.com
E-mail : info@thaiveedu.com

## ஆட்டங்காணும் அதிகார ஒழுங்கு!

'புதிய உலக ஒழுங்கு' என்ற சொற்றொடர் முதன்முதலில் அறிமுகமானது முதலாம் உலகப்போரின் முடிவிலேயே. அப்போர் நடைபெற்ற 1914 முதல் 1918 வரையான காலப்பகுதியில் அமெரிக்க அதிபராக இருந்த வூட்ரோவ் வில்சன், போரின் இறுதியில் நிறுவமுயன்ற, உலக வல்லரசுகளுக்கு இடையிலான அதிகாரச் சமநிலையே 'புதிய உலக ஒழுங்கு' என அழைக்கப்பட்டது. தனிப்பட்ட அரசுகளின் வல்லமைக்கு அப்பாற்பட்ட உலகளாவிய சிக்கல்களை அடையாளங்கண்டு, அறிந்துணர்ந்து, அவற்றைத் தீர்க்க ஆவன செய்வதன் மூலம் பலம்வாய்ந்த நாடுகளுக்கிடையே மோதல்நிலை உருவாவதையும் அது அவற்றின் சார்பு நாடுகளுக்கும் கடத்தப்பட்டு உலகப்போராக உருமாறுவதையும் தடுக்கவேண்டி வில்சன் பலம்வாய்ந்த உலக நாடுகளின் கூட்டமைப்பு ஒன்றை உருவாக்க விரும்பினார். வில்சனின் எண்ணப்படி, 1920-இல், முதலாம் உலகப்போர் முடிந்த இரண்டு ஆண்டுகளுக்குள் உருவாக்கப்பட்ட 'உலக நாடுகள் சங்கம்', 1940-இலே இரண்டாம் உலகப்போர் தொடங்கிய ஓராண்டுக்குள் - தன் தோல்வியை ஒப்புக்கொண்டதுபோல - செயலிழந்து-போனது. ஆனால், உலகளாவிய சிக்கல்களைக் கையாள்வதற்குத் தேவையான அதிகாரம்பெற்றதோர் அமைப்பு இருக்கவேண்டும் என்ற சிந்தனை இரண்டாம் உலகப்போரின் பின்னர் மேலும் வலுப்பெற்றது. அதன் விளைவாகவே, 1945-இலே, இரண்டாம் உலகப்போர் செப்ரெம்பர் மாதத்தில் முடிவடைய, அடுத்த மாதத்திலேயே ஐக்கிய நாடுகள் அவை உருவாக்கப்பட்டது. இந்த ஐக்கிய நாடுகள் அவையின் உருவாக்கத்துக்கான முதற் கூட்டம் நடைபெற்றது அமெரிக்காவின் சான் ஃபிரான்சிஸ்கோ நகரிலேயே என்பதையும், அதன் தலைமைச் செயலகம் அமையவெனத் தெரிவான நகரம் அமெரிக்காவின் நியூ யோர்க் நகரமே என்பதையும் வைத்துப் பார்க்கும்போது, இந்தப் புதிய உலக ஒழுங்கின் அதிகார மையம் எங்கே இருந்தது என்பதை இலகுவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

இரண்டாம் உலகப் போரையடுத்த காலகட்டத்தில் அமெரிக்காவின் ஏகபோக எதேச்சாதிகாரத்துக்குச் சவாலாக இருந்தது சோவியத் யூனியனே. எனினும் இந்தப் பனிப்போர்க் காலத்தில் நன்மைகள் எவையும் விளையவில்லை. மாறாக, அதிகாரப் பசிகொண்ட இந்த இரு வல்லரசுகளதும் பதிலிப்போர்களுக்குள் சிக்குண்டு பல நாடுகள் சிதிலமாகின. 1991-இல் சோவியத் யூனியனே உடைந்துபோக, அமெரிக்கா தனிச் சண்டியனானது. அதையடுத்து, ஐக்கிய நாடுகள் அமைப்பின் செயற்பாடுகளும் பெரும்பாலும் அமெரிக்காவினதும் அதன் தலைமையின் கீழ் அணிவகுத்து நின்ற மேற்குலக நாடுகளினதும் நலன்களைப் பாராமரிப்பதாயும் அவற்றின் நோக்கங்கள் ஈடேற ஏது செய்வதாயுமே அமைந்திருந்தன. இனவழிப்பில் முடிவடைந்த ஈழப்போரையும், பலஸ்தீனத்தில் இன்றும் நடந்து கொண்டிருக்கும் இனவழிப்பையும், ஈராக், லிபியா போன்ற இறையாண்மை மிக்க நாடுகள் மீது ஒருதலைப்பட்சமாகத் தொடுக்கப்பட்ட போர்களையும், அவை தொடர்பான ஐக்கிய நாடுகளின் எதிர்வினையையும் அருகிருந்து பார்த்தவர்களுக்கு இதுபற்றி எந்த ஐயமும் எழாது.

எனினும், 2000-இலே விளதிமிர் புட்டின் அதிகாரம் பெற்றது முதல், அமெரிக்காவைத் தலைமையாகக் கொண்ட இந்தப் புதிய அதிகார ஒழுங்குக்கு எதிரான சவால் பலம்பெற்று வந்திருக்கிறது. தற்போது உக்கிரேனில் நடந்துகொண்டிருக்கும் போரை இந்தச் சவாலின் உச்சக்கட்டமாகவே நோக்கமுடியும். 2014-இலே உக்கிரேனின் கிறைமியா பகுதி மீதான ஊடுருவலின் வெற்றியால் தன்னம்பிக்கை பெற்ற ரஷ்யா, 2022-இலே உக்கிரேன் மீது பெருமெடுப்பிலான போரைத்தொடுத்தது. பலமற்றதொரு சிறிய நாடான உக்கிரேன் மீது பலம்பொருந்திய ரஷ்யா தொடுத்த அந்தப் போர், ரஷ்யா எதிர்பார்த்ததுபோல் உடனடி வெற்றியை அளிக்கவில்லை என்பது மீண்டும் ஒரு பதிலிப்போர் நடக்கிறது என்பதையே சுட்டிநிற்கின்றது. பதிலிப்போர் இம்முறை ஆசியாவிலோ, இலத்தீன் அமெரிக்காவிலோ நிகழாமல் ஐரோப்பாவிலேயே நிகழ்கிறது என்பதே கூடுதல் சங்கடம். சங்கடத்துக்குக் காரணம், போரின் பயனாக மேற்கு ஐரோப்பாவின் செல்வந்த நாடுகளின் சாதாரண குடிமக்கள் முகங்கொடுக்கும் என்றுமில்லாத வகையிலான உணவுக்கும் எரிபொருளுக்குமான தட்டுப்பாடும், அதன் விளைவாக பாரீசினதும், இலண்டனினதும், இன்னும் பல தலைநகரங்களினதும் வீதிகளில் தொடர்ந்து நடைபெறும் மக்கள் போராட்டங்களுமே.

இந்நிலையில், தற்போது சீனா இடைப்புகுந்து ரஷ்யாவுக்குப் பகிரங்கமாகவே நேசக்கரம் நீட்டியிருப்பதும், பிரதிபலனாக ரஷ்யா, சீன நாணயத்தில் வர்த்தகப் பரிவர்த்தனைகளைச் செய்துகொள்ள முன்வந்திருப்பதும் இரண்டாம் உலகப்போரின் பின்னர் நிலவிவந்த இருமுக அதிகாரச் சமநிலையில் மற்றொரு முகம் உள்நுழைந்திருப்பதையே காட்டுகின்றன.

இரண்டாம் உலகப்போரின்போது பலம்வாய்ந்த ஐரோப்பிய அரசுகள் தம்மிடையே மோதிக்கொள்ள, ஜப்பான் தன்பாட்டுக்கு ஆசியாவை ஆக்கிரமிக்கும் முயற்சியில் ஈடுபட்டது. அம்முயற்சி தோல்வியிலேயே முடிவடைந்தது. இப்போது, வரலாறு மீண்டும் நிகழ்கிறது. ஆனால் இம்முறை பலச்சமநிலை சீனாவுக்குச் சார்பாகவே இருப்பதாகத் தோன்றுகிறது.

இந்தச் சமநிலை மாற்றத்தால் வளர்ந்துவரும் நாடுகள் புதிய புதிய முறைகளில் ஒடுக்கப்படும் என்பதும் சுரண்டப்படும் என்பதும் உறுதி. அது எப்போது எவ்வகையில் பரிணமிக்கப்போகிறது என்பதை அச்சத்தோடு நோக்குவதைத் தவிர, வேறெதையும் செய்யும் பலமற்றவர்களாகவே நாமனைவரும் எஞ்சியிருக்கிறோம்.

# தாய்வீடு இம்மாதத் தாய்வீட்டில்...


ஆட்டங்காணும் அதிகார ஒழுங்கு! 3

மதங்களின் குறியீடுகளால் கோறைப்படுத்தப்படும் தமிழர் தேசமும் கூறுபடுத்தப்படும் தமிழ்ச் சமூகமும்
- செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை 5

ஆபிரிக்கக் கண்டம்: ஊடகத் தளம் அமைக்கின்ற வல்லரசுகள் வரிசையில் துருக்கி
- ரூபன் சிவராஜா 10

வங்கியும் வங்குரோத்தும்
- ரதன் 14

ஏட்டில் எழுதிவைத்தார் - அங்காதிபாதம் 400 நாடி நிதானிக்கக்கூடாதோர்
- பால. சிவகடாட்சம் 17

வசந்தகால வீட்டுப் பராமரிப்பு
- வேலா சுப்ரமணியம் 20

வதிவிடக் காப்புறுதி
- செந்தூரன் புனிதவேல் 22

பெருந்தன்மை: கருணையின் ஒரு குரல்
- சி. நற்குணலிங்கம் 24

கட்டடக் காடுகளால்...
- வேதநாயகம் தபேந்திரன் 26

படைப்பாற்றல் துறையில் தடம் பதிக்கும் ரோபோக்கள்
- சுப்ரமணியம் ஜெயசீலன் 28

உரோமர் காலத்துக் காட்சியரங்க அமைப்புகள்
- குரு அரவிந்தன் 30

கேரளாவில் சில நாட்கள்
- சி. நற்குணலிங்கம் 34

பெண்ணிலைவாதக் கலைச் செயற்பாட்டாளர் கமலா வாசுகி
- து. கௌரீஸ்வரன் 36

அரவிந்தனின் சிறிய உலகம்
- ஓவியர் ஜீவா 38

வங்கதேசத்தின் கடல் மதில் அரண் சுந்தரவனக் காடுகள்!
- சதீஸ் செல்வராஜ் 43

பேராசிரியர் க. கைலாசபதி பிறந்து 90 ஆண்டுகள்! - சில நினைவுகள்
கா. இந்திரபாலா 48

பதிப்புத் துறையில் தடம் பதித்த அமரர் மயிலங்கூடலூர் பி. நடராசன்
- என். செல்வராஜா 54

வைகறை தெளியும் ஒளிர் நட்சத்திரம் மு. நித்தியானந்தன்
- நடராசா சுசீந்திரன் 58

இலக்கிய வித்தகர் கலாநிதி நாவற்குழியூர் நடராஜன்
- வே. விவேகானந்தன் 61

அன்ரன் சின்னராசா பிலிப் மக்கள் பணியாளர்
- சுபகரன் பாலசுப்பிரமணியம் 64

துறவி நிலையிலும் பொது நிலையிலும் அருட்தந்தையாக வாழ்ந்த அன்ரன் சின்னராசா பிலிப்
- எஸ்.எம். வரதராஜன் 68

ரீவீஐ நிர்வாகப் பொறுப்பு
P. விக்னேஸ்வரன் 72

ஆன் ரணசிங்க கவிதை
- ஜிஃப்ரி ஹாசன் 82

பனிவிழும் பனைவனம் - குண்டுகள் விழுந்த தேசத்தின் கதைகள்
- சுப்ரம் சுரேஷ் 83

மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி 'மலைக்குயில்' தந்த மாத்தளை அல் அஸூமத்
- மல்லியப்புசந்தி திலகர் 84

வரலாற்றின் குற்றக் கிடங்கு
- கருணாகரன் 88

மரத்துப்போன சொற்கள்
- நெல்லை ஜெயசிங் 92

கோசலை
- ரதன் 94

ஊர்காவற்றுறை
- ஜோன் பென்றி லூவிஸ்
தமிழில்: மணி வேலுப்பிள்ளை 96

காலத்தை வென்று நிற்கும் கட்டுரை
- கிருங்கை சேதுபதி 98

ஆதி திராவிடன்: இலங்கையின் முதலாவது தலித் பத்திரிகை
- என். சரவணன் 105

கார்ல் பொப்பரின் பொய்ப்பித்தல் கோட்பாடு
ஆங்கில மூலம்: ஜயதேவ உயன்கொட
தமிழில்: க. சண்முகலிங்கம் 112

இலங்கையின் கோப்பியுகத்து முதல் ஆங்கில நாவல்
- மு. நித்தியானந்தன் 116

இலங்கையில் மகிழ்ச்சிகரமான ஈராண்டுகள்
- சி. எஃப். கோர்டன் கம்மிங்
தமிழில்: சா. திருவேணிசங்கமம் 124

தமிழவனின் திறனாய்வு முறைமை
- சு. வேணுகோபால் 133

லெனினின் உயில்: எழுதாத நகலும் மறையாத மெய்யும்
- தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ 136

வட்டார வழக்கிலுள்ள பழமொழிகள் - சம்மாந்துறை
- எம்.ஐ.எம். சாக்கீர் 148

கிழக்கிலங்கைப் பூர்வ குடிகள் அமைப்பின் உருவாக்கம்
- க. பத்திநாதன் 152

வைராவியர் குலமகள்
- த. ஜீவராஜ் 154

தொல்காப்பியத்தில் சமூகவியல் - மறுவாசிப்பு
- பொன்னையா விவேகானந்தன் 158

கம்பனின் கருவூலம் திறந்து....
- மாவிலி மைந்தன் சி. சண்முகராஜா 161

சங்க இலக்கியம் வழி - ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள்
- செல்வநாயகி ஸ்ரீதாஸ் 164

தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும்
- நா. சுப்பிரமணியன் 167

விசாரணை
- அகரன் 174

கனவுகள் பொய்ப்படும்
- பொன்னையா விவேகானந்தன் 179

சாம்பரில் திரண்ட சொற்கள்
- தேவகாந்தன் 185

பிறிஸ்பிற்றேறியன் பாடகர் குழு
- வில்லியம் சரோயன்
தமிழில் என்.கே. மகாலிங்கம் 192

# மதங்களின் குறியீடுகளால் கோறைப்படுத்தப்படும் தமிழர் தேசமும் கூறுபடுத்தப்படும் தமிழ்ச் சமூகமும்

– செல்வின் இரேனியஸ் மரியாம்பிள்ளை

‘பட்டுவேட்டி பற்றிய கனாவில் இருந்தபோது கட்டியிருந்த கோவணம் களவாடப்பட்டது’ என்ற கவிஞர் வைரமுத்துவின் கவிதை வரிகளைத்தான் இன்றைய ஈழத் தமிழ்ச்சமூகத்திற்கு ரிய அறக்கூற்றாக இன்று கொள்ளவேண்டியுள்ளது.

இலங்கைத் தீவில் தமிழர் மரபுவழித்தாயகத்தில் என்ன நடக் கின்றது? தமிழ்ச்சமூகத்தை யார் எதனை நோக்கி இழுத்துச் செல்கின்றனர்? சொந்தமான நிகழ்ச்சிநிரல் இல்லாத, தொலைநோக்கான தலைமை இல்லாத தமிழர் தேசத்தையும் சமூகக்கட்டமைப்பினையும் மிகவும் துல்லியமாக திட்டமிட்டு சிதைவுக்கு நகர்த்தும் அவர்கள் ஒருவரா? பலரா? தனிநபர் களா? குழுக்களா? பாரிய அரசுகளா? இல்லை பன்னாட்டு நிறுவனங்களா? அவர்களின் நிகழ்ச்சி நிரல்தான் என்ன?

இந்த விடயங்களை தமிழ்மக்கள் சார்பாக சிந்தித்து முன்னெ டுப்பது யார்? காலநீட்சியில் தமிழ்ச்சமூகத்தை கூறுபோட்டு கரைந்து போகச்செய்யும் நிகழ்ச்சித் திட்டங்களினை தடுப் பது யார் பொறுப்பு?

தேர்தலும் அரசியல் கட்சிகளின் கோசங்களும் தெருமுனைப் போராட்டங்களும் சிதறித் தெளிக்கும் உதவித்திட்டங்களும் மட்டும் தாயகத்தின் தற்போதைய கையறுநிலையினைத் தடுத்து, தாயக தேசத்தையும் சமூக வாழ்வினையும் தக்க வைக்குமா?

இவ்வாறான பலநூறு கேள்விகள் இன்று எம்முன் வீரியத்து டன் எழுந்து நிற்கின்றன.

இலங்கைத் தீவு அந்நிய செலாவணி நெருக்கடியிலும் பொருளாதார பிரச்சினைகளாலும் ஒரு திசையில் வீழ்ந்து கொண்டிருக்கும் சமகாலத்தில் தமிழ் அரசியல்கட்சிகளுடன் தான் தொடர்ந்து பேசிக்கொண்டிருப்பதாகவும் தீவின் தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிப்பதாகவும் இந்த வாரம் மேற்கத்தேய பல்கலைக்கழக சமூகத்துடன் நடந்த காணொளிக் கலந்துரையாடலில் சிறீலங்காவின் சனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டிருக்கின்றார்.

உள்ளக கலந்துரையாடல்கள் முனைப்புகளுக்கு ஊடாக தீர் வுகளைக்காணும் முயற்சிகளை முன்னெடுப்பதாக கூறிவரும் அவருக்கு ஆதரவாக ஆளும் தரப்பினரும் எதிர்க்கட்சிகளும் கூட தமிழ் அரசியல் கட்சிகளின் தலைவர்கள் அவசரப்படக் கூடாது என்று ஆலோசனைகளை வழங்கிக்கொண்டிருக்கின் றார்கள்.

இதனையும் கடந்துபோய் ஜே.வி.பி எனப்படும் மக்கள் விடு தலை முன்னணியினர் தமிழ்மக்களின் பிரச்சினைகளுக்கு 13-வது அரசியலைப்பு திருத்தத்தின் கீழான மாகாண சபைகள் பொருத்தமல்ல. அவற்றை இல்லாது ஒழிக்கவேண்டும். சிறீ லங்காவின் அரசியலமைப்பினை மறுசீரமைத்து பிரச்சினை-களை தீர்க்கும் வழிகளைத் தேடவேண்டும் என்று கூறியிருக் கின்றார்கள்.

அதேவேளை அவர்கள் அரசியலமைப்பினூடாக எத்தகைய தீர்வு மாதிரிகள் அல்லது அதிகாரப்பகிர்வு முறைகள் அறி முகப்படுத்தப்படவேண்டும் என்பதிலும் தாங்கள் முன்மொழி யும் அரசியல் முறைமை பற்றியும் எதுவுமே கூறமுடியாதவர் களாகவும் உள்ளனர்.

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்துடன் கலந்துரை யாடல்களுக்காக யாழ்ப்பாணம் வந்திருந்த அனைத்து பல்க லைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் வசந்த முத லிகே தலைமையிலான குழுவினரும் இலங்கையின் தேசிய இனப்பிரச்சினையும் தமிழ்மக்களுடனான அதிகாரப்பகிர்வு தொடர்பாக கற்றுக்குட்டித்தனமான கருத்துக்களையே உதிர்த்துவிட்டு சென்றிருக்கின்றனர்.

அவர்களுடன் விவாதித்த யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகளும் தங்களை போதியளவில் கருத்தியல் ரீதியாக தயார்படுத்தியிருந்தார்களா அல்லது வழமையான கோரிக் கைகளை வலியுறுத்தி முன்மொழிந்திருந்தார்களா என்பது பற்றி அவதானிகளால் திருப்திகரமான அபிப்பிராயங்களைத் தெரிவிக்க முடியவில்லை.

மறுபுறம் கச்சதீவில் பௌத்த ஆலயம் உருவாக்கப்பட்டுள் ளது என வந்த செய்திகளை நாட்டின் பிரதமர் உட்பட ஆளும் தரப்பினரும் கடற்படைத் தளபதிகளும் மறுக்கின்ற னர். பின்பு கச்சதீவில் பாதுகாப்புக்காக தளம் அமைத்துள்ள சிறீலங்காவின் கடற்படையின் பௌத்த வீரர்களின் வழிபாட் டிற்காக ஒரு சிறிய வழிபாட்டிடத்தை தங்கள் தங்குமிடத்தில்

வைத்துள்ளதாக இடைநிலைக் கடற்படைத் தளபதிகள் சப் புக்கட்டுகின்றனர்.

அண்மையில் யாழ்ப்பாணத்தில் நிலாவரை ஆழக்கிணற்று வளாகத்தில் திடீரென ஒரு புத்தர் சிலை வழிபாட்டு தலத் துடன் அமைக்கப்பட்டிருந்தது. அது ஓர் இராணுவ வீரன் கண்ட கனவின் விளைவு என்று கூறி வலிகிழக்கு பிரதேச சபையின் தலைவரின் கடுமையான எதிர்ப்புகளால் அகற்றப் பட்டது.

கடந்த வாரம் சிறீலங்காவின் கூட்டுப்படைகளின் தளபதி சவேந்திர சில்வாவினால் நாவற்குழி பௌத்த விகாரத்தின் சூடாமணி நிலைநிறுத்தப்பட்டது.


இராணுவவீரர்களும் படைத்தளபதியும் மனிதர்கள் தானே!. அவர்களுக்கு இறைபக்தி இருப்பது மிகவும் வரவேற்கத்தக்க தும் கூட. அவர்கள் தங்களது நம்பிக்கையின் அடிப்படை யில் தங்களது வழிபாட்டு கடமைகளைச் செய்வதனை நாங் கள் அங்கீகரிக்கத்தான் வேண்டும். ஆனால்... இலங்கைத் தீவில் நடைபெற்று வரும் விடயங்கள் தனிமனிதர்களின் சமய நம்பிக்கைகளையும் வழிபாட்டு உரிமைகளையும் பாதுகாப்ப தாக அமையவில்லையே.

முல்லைத்தீவு குருந்தூர் மலையில் புத்த விகாரம் நீதிமன்றக் கட்டளைகளையும் மீறிக் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. தொல் லியல் திணைக்களத்தின் நேரடியான கட்டுப்பாட்டின் கீழ் இந்த முயற்சி முன்னெடுக்கப்பட்டுள்ளது. தொல்லியல் திணைக்களமும் அதன் பணியாளர்களும் சட்டத்தின் ஆட் சிக்கு விதிவிலக்கானவர்களா? இல்லை அதிமேதகு சனாதி பதி ரணில் விக்கிரமசிங்காவினால் கட்டுப்படுத்த முடியாத சக்திகளா?

சிறீலங்காவின் தொல்லியல் திணைக்களம் தனது தொல்லி யல் பணிகளை எவ்வாறு முன்னெடுக்கின்றது?. தொல்லியல் என்பது கடந்த காலத்தின் வாழ்வியல் எச்சங்களை கண்ட றிந்து அதனை அகழ்ந்து ஆய்வுசெய்து கடந்தகால மாந்த ரின் வாழ்வியல் பற்றிய உண்மைகளை வெளிக்கொணர்வ தும் அந்த தொல்லியல் சான்றுகளை அதே நிலையில் அழிந்து போகாமல் பாதுகாப்பதுமேயாகும்.

உலகின் பல தேசங்களிலும் தொல்லியல் ஆய்வுகள் மிக வும் அதிஉயர் புலமையுடனும் மிகவும் பொறுப்புக்கூறல் கடப்பாட்டுடனும் வெளிப்படைத்தன்மையுடனும் சுதந்திரமான ஆய்வாளர்களால் முன்னெடுக்கப்படுகின்றது.

இலங்கையில் தொல்லியல் திணைக்களம் அதுவும் குறிப் பாக வடக்கு கிழக்கு தமிழர் தாயகப் பகுதியில் என்ன செய் கின்றது. தொல்லியல் எச்சங்கள் காணப்படக்கூடிய இடங்க ளையும் அல்லது தாங்கள் அத்தகைய எச்சங்கள் இருப்ப தாக குறிப்பிடும் பகுதிகளையும் உடனடியாக தங்களின் கட் டுப்பாட்டிற்கு உட்பட்டதும், பொதுமக்களும் ஏனைய ஆய் வாளர்களும் அணுகமுடியாததுமான பிரதேசங்களாக பிரகட





னப்படுத்திக் கட்டுப்படுத்துகின்றது.

உடனடியாகவே அந்த இடம் குடிசார் சட்டத்தின் கீழ் பாது காக்கப்படுவதற்கும் மேலாக இராணுவ அதிகாரத்திற்கு கீழ் பாதுகாக்கப்படும் பௌத்த வரலாற்று எச்சங்கள் கொண்ட புனிதப்பிரதேசமாகவும், அதி உயர் பாதுகாப்பு வலயமாக வும் மாற்றப்படுகின்றது. மிகவும் நிதானமாகவும் அவதானமா கவும் அகழ்வு ஆய்வுகள் தொல்லியல் தொழிநுட்ப தகமை யும் புலமையும் கொண்ட ஆய்வாளர் குழுவினால் ஆய் வுக்கு உட்படுத்தப்பட்டு ஆய்வு முடிவுகள் உலகத்திற்கு அறிக்கைகளாக பிரகடனப்படுத்தப்படாமலேயே உடனடியாக அந்த இடத்தில் தொல்லியல் சான்றுகளைப் பாதுகாப்பதற் காக மீள்கட்டமைத்தல் என்ற பெயரால் பௌத்த விகாரங்கள் கட்டமைக்கப்படுகின்றது.

ஏன் இந்த அவசரம்? தொடர்ந்து ஆய்வு செய்யப்படவேண் டிய இடங்களை மூடிக்கட்டுவதன் பின்னாலுள்ள இரகசியம் தான் என்ன?

1970-களில் ஒரு சிங்கள சமூகவியல் பேராசிரியர் குறிப்பிட்ட விடயத்தை இவ்விடத்தில் குறிப்பிடவேண்டும்.

*‘சிங்கள பௌத்த தேசியவாதிகள் இலங்கையின் தொல்லி யல் அகழ்வாராட்சிகள் மேற்பரப்புடன் மட்டும் மட்டுப்படுத் தப்படவேண்டும் என்பதில் மிகவும் கவனமாக உள்ளனர். தமிழ் மற்றும் இந்துமதங்களுடன் தொடர்புடையவர்கள் மேற் பரப்பினையும் தாண்டி மேலும் சில அடிகள் ஆழமாக தொல்லியல் சான்றுகளைத் தேடிச்செல்ல விருப்பம் கொண் டுள்ளனர். ஆனால் இரு தரப்பினரும் மேலும் ஆழமாக சென்று தொல்லியல் ஆய்வுகளைச் செய்யவும் மானிடவியல் ஆய்வுகளைச் செய்யவும் தயாராக இல்லை. ஏனெனில் அதன் பெறுபேறுகளும் உண்மைகளும் அவர்களுக்கு உகந் ததாக இருக்காது’.*

காலத்திற்கு காலம் முடியாட்சிகளும் படையெடுப்புகளும் மதங்களினதும் பண்பாடுகளினதும் எழுச்சியும் வீழ்ச்சியும் உலகின் பல நிலப்பரப்புகளில் நடந்தது போன்றே இலங் கைத் தீவிலும் நிகழ்ந்துள்ளது.

பல மில்லியன் ஆண்டுகளில் தொடர்ந்த பரிணாம வளர்ச்சி யின் தொடர்ச்சியாக மானிடர்கள் உட்பட உயிரினங்களின் தொடர்ச்சியான நகர்வு, புலப்பெயர்வு, பூமித்தகடுகளுக்கிடை யிலான நகர்வு ஆகியன காரணமாகத் தான் இன்றைய பூகோள அமைப்பும் நிலப்பரப்பும் உருவாகியுள்ளது.

இதுவரை அறியப்பட்ட தகவல்களின் அடிப்படையில் பொது ஆண்டிற்கு முன் (கி.மு) முன்னரான மூன்றாம் நூற்றாண்டில் உருவாகிய பௌத்தம் என்கின்ற மார்க்கம் இலங்கைத் தீவிற்கு வருவதற்கு முன்னரேயே இந்த தீவில் மனிதர்கள் வாழ்ந்து வந்திருக்கின்றனர். மகாவம்சத்தின் கூற்றுப்படி லாலா தேசத்திலிருந்து நாடுகடத்தப்பட்டு இத்தீவில் கரை யொதுங்கிய விஜயனும் அவனது தோழர்கள் எழுநூறு பேரும் கரையொதுங்கியபோது இத்தீவில் இயக்கர், நாகர் என்ற இனக்குழுமங்கள் வாழ்ந்தாக கற்றுத்தந்திருக்கின்றார் கள்.

பேராசிரியர் கா. இந்திரபாலா அவர்கள் இலங்கைத் தீவிற் கும் பக்கத்தில் இருந்த பெருநிலப்பரப்பான இன்றைய இந் திய உபகண்டத்திற்கும் இடையிலான நிலத்தொடர்ச்சி இற் றைக்கு இருந்து பின்னாக ஏழாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வரை இருந்தது என்றும் கடல் நீர்மட்டத்தின் உயர்வினால் அந்த நிலத்தொடர்பு அறுந்து போனது. அதுவரை பெருநி லப்பரப்புக்கும் இச்சிறு நிலப்பரப்புக்கும் இடையிலான உயி ரினங்களின் ஊடாட்டம் தொடர்ச்சியாக இருந்துள்ளது என தனது அண்மைய நூலில் குறிப்பிட்டுள்ளார்.

இந்த உண்மையினை உணரும் போது இலங்கையில் முன் னெடுக்கப்படும் அகழ்வாராய்வுகளின் முடிவுகள் மிகவும்



வேறுபட்டதாகவே அமையும்.

அதேபோன்று தற்போது இந்தியாவின் தமிழ்நாட்டில் கீழடி யில் மேற்கொண்டுவரும் அகழ்வாய்வுகள் கடந்த காலத்தின் பொற்காலத்தின் மீது வெளிச்சத்தைப்பாய்ச்சியுள்ளது. இது வரை வாழ்வியல் எச்சங்களும் ஆதாரங்களும் அங்கு கண்டு பிடிக்கப்பட்டிருந்தும் மதம் சார்ந்த ஆதாரங்கள் எதுவும் கண்டுபிடிக்கப்படாமை, வைகை ஆற்றின் தமிழர் பண்பாட் டின் மதங்கள் கடந்த பொதுநிலைப் பெருமையினை பிரகட னப்படுத்திக்கொண்டு இருக்கின்றது.

சிறீலங்காவின் பௌத்த மதவாதமும் விஸ்தரிப்பு நிகழ்ச்சித் திட்டமும் ஒருபுறம் தொடர மறுபுறம் தமிழ்ச்சமூகத்தின் மத்தி யில் மற்றுமொரு முரண்பாட்டு முனைப்பு தீவிரம் கொண்டுள் ளது.

சிறீலங்காவின் ஆட்சியாளர்கள் வடக்கு கிழக்கில் பௌத்த அடையாளங்களை நிறுவுவதற்கு போட்டியாக சைவம் அல் லது இந்து மத அடையாளங்களை நிறுவும் போட்டி அது வும் குறிப்பாக சிவலிங்கத்தை அல்லது சிவ அடையாளங் களை நிறுவும் அலை ஒன்று தற்போது மேலெழுந்துள்ளது.

ஐரோப்பியர் வருகைக்கு முன்பே இந்தியாவின் தென்பகுதி யில் கிறீஸ்தவ போதகர்களின் வருகையும் சேவையும் மத மாற்றமும் இருந்திருக்கின்றது. எனினும் ஐரோப்பியரின் வரு கையுடன் இவர்களால் இங்கு கொண்டுவரப்பட்ட கிறீஸ்தவ மும் கத்தோலிக்கமும் ஆட்சிப் பின்புலத்துடனும் அறிவூட்டல் முனைப்புகளுடனும் இத்தீவில் அறிமுகமாகி பலம்பெற்றது. மதமாற்றம் என்பது அன்றைய காலத்திலிருந்து மக்களின் துன்பங்களுக்கு விடுதலை போன்றும் சமூக மேலெழுச்சிக் கான திறவு கோலாகவும் முன்னிறுத்தப்பட்டுள்ளது.

இதற்கு இந்தியாவின் அரசியலமைப்பின் தந்தை எனப்படும் சட்டமேதை அம்பேத்கார் தலைமையில் ஒரே நாளில் பௌத் தத்திற்கு மாறிய பலலட்சம் இந்துக்களான புறந்தள்ளப்பட்ட மக்கள் சான்று.

கடவுள் கோட்பாடு அல்லது இறைநம்பிக்கை என்ற எல்லை- களையும் அந்த மார்க்கங்கள் போதிக்கும் விழுமியங்களை யும் அவை சார்ந்த வாழ்வியலையும் கடந்து அந்தந்த மதநி றுவனங்களின் இருப்புக்கான ஆட்பலத்தைத் திரட்டும் முயற் சியாகவும் இத்தகைய மதமாற்ற முயற்சிகள் அவதானிக்கப் பட்டுள்ளது.

தமிழர் தேசத்தின் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட யுத்தமும் இடப்பெயர்வும் வாழ்வியல் கோரங்களும் மக்களை நேரடி யாக தாக்கிய போது பல புதிய ஆவிக்குரிய சபைகளின் பெயரால் (New Evangelical Movements) பலர் தனியாகவும் குழுக்களாகவும் பாதிக்கப்பட்டு துயரப்பட்டுக்கொண்டிருந்த குடும்பங்கள் மத்தியில் இறங்கியிருந்தார்கள்.

மறுபுறத்தில் மன்னார் மாவட்டத்தில் தீவிலும் பெருநிலப்ப ரப்பிலும் கத்தோலிக்க தீவிர சிந்தனை கொண்டவர்களுக்கும் இந்து சமயத்தவர்களுக்குமான முரண்பாடுகளும் போட்டிக ளும் கூர்மையடைய வைக்கப்பட்டன.

மன்னார் மாவட்டத்தின் நிர்வாக அதிகாரக்கட்டமைப்பினை கட்டுப்படுத்துவதிலும் வளங்களை அபிவிருத்திக்காக ஒதுக் குவதிலும் கூட இந்துக்கள், கத்தோலிக்கர்கள், இஸ்லாமியர் கள், புதிய ஆவிக்குரிய சபையினர் மத்தியில் கடுமையான போட்டிகளும் எதிர்ப்புக்களும் உருவாகின.

இவற்றினைப் போன்றே இந்து மதத்தின் தீவிரவாத சிந்தனை கொண்ட ஒரு தொகுதியினரும் இந்துக்கடவுள்களின் பெய ரால் மக்களைத் தூண்டிவிடவும் முரண்பாடுகளைத் தோற்று வித்து அதனை முன்னெடுப்பதிலும் மிகவும் ஆக்ரோசமாக இறங்கியுள்ளனர்.

ஒட்டுமொத்தத்தில் மதங்களின் பெயரால் தமிழ்ச்சமூகத்தி னுள் மிகப் பாரிய ஆபத்தான நச்சுவிதைகள் விதைக்கப்பட் டுள்ளன.

போருக்குப் பின்னரான சூழலில் தமிழ்ச்சமூகத்தை மீட்டெ டுத்து ஒருங்கிணைத்துக் கட்டியெழுப்புவதற்கு வேண்டிய தலைமைத்துவத்தை கட்டியெழுப்புவதற்கு பதிலாக பல்வ கைச் சமயங்களும் போதிக்கும் அறநெறிகளை தாண்டி குறி யீட்டு சமயவாதம் மிகவும் திட்டமிட்டு வளர்த்தெடுக்கப்பட்டு வருகின்றது.

இதனைப் பேசாப் பொருளாக கடந்து செல்லவே தற்போ தைய வாக்கு வங்கி அரசியல் கட்சிகள் முயற்சிக்கின்றன.

தமிழ் மொழி என்பது மதங்களின் பெயரால் தன்னை அடை யாளப்படுத்தாத பெருந்தன்மை கொண்டது. 'யாதும் ஊரே யாவரும் கேளீர்' என்ற முதுபெரும் தமிழ் சான்றோன் கணி யன் பூங்குன்றனின் வரிகளால் வளம் பெற்றது.

அத்தகைய மொழியைத் தாய்மொழியாக கொண்ட சமூகம் இன்று மதங்களின் பெயராலும் மதக்குறியீடுகளின் பெயரா லும் உள்முரண்பாடுகளை பெருக்கிக்கொண்டு போகின்றது

என்றால் தவறு எங்கே இருக்கின்றது என்பதனைக் கண்டறிய வேண்டும்.

ஈழத்தமிழர்களில் இன்று கிறீஸ்தவ, கத்தோலிக்க, இஸ்லாமிய மதங்களில் நம்பிக்கை கொண்டவர்கள் இருக்கின்றமையினை நோக்குபவர்கள் இவர்களை இந்து அல்லது சைவ சமயத்திலிருந்து மதம் மாறியவர்கள் என்று குறிப்பிடுகின்றனர். அது உண்மையும் கூட.

இவ்விடத்தில் தமிழ்மொழி சார்ந்து பண்படுத்தப்பட்ட சமூகத்தின் மதம் எது என்ற வினாவும் விவாதமும் கூட எழுகின்றது. இன்று இந்து மதத்தின் குறியீடுகளை ஏனைய மதங்களின் குறியீடுகளுக்கு போட்டியாக நிறுவுவதற்கு பணியாற்றும் குழுவினர் தமிழ் மக்களின் முன்னைய காலங்களில் கொண்டிருந்த படைப்புக் கோட்பாடுகள், இறை நம்பிக்கைகள், வழிபாட்டு முறைகள் பற்றிய தேடலினைப் போதியளவில் செய்யவில்லை என்றே முடிவுக்கு வரவேண்டியுள்ளது.

இந்து சமயம் என்பது இந்து (சிந்து) நதிக்கு இந்தப்பக்கம் வாழ்ந்த மக்கள் பின்பற்றிய பலவிதமான நம்பிக்கைகள் கோட்பாடுகளினை தனக்குள் உள்ளடக்கிய ஒரு கூடையாகவே பலர் விபரித்துள்ளனர். பல்வேறு சிந்தனைகளையும் தத்துவங்களையும் படைப்புத் தொடர்பான கோட்பாடுகளையும் வழிபாட்டு முறைகளையும் சடங்குகளையும் சம்பிரதாயங்களையும் கொண்டிருந்த பல மொழிபேசும் மக்களின் தொகுதியாகவே இந்து என்ற அடையாளம் பார்க்கப்படுகின்றது.

அதன் காரணத்தால்தான் ‘தமிழும் சைவமும்’ என்ற இணை மொழியைப் பயன்படுத்துவோர் தமிழர்களின் சமயமாக சைவத்தை வலியுறுத்துகின்றார்கள். ஆனாலும் தமிழர்கள் சைவர்களாக தங்களை அடையாளப்படுத்த முன்பு ‘ஆசீவகம்’ என்ற சமயக் கோட்பாடு தான் தமிழ்மொழிப் பண்பாட்டுடன் இணைந்திருந்தது என இன்று நிறுவும் ஆய்வாளர்களும் தமிழ்நாட்டில் உள்ளனர்.

காலத்தின் சுழற்சியிலும் பண்பாடுகளின் எழுச்சியிலும் வீழ்ச்சியிலும் ஆசீவகம், சைவம், சமணம், பௌத்தம், கிறீஸ்தவம், இஸ்லாமியம் எனப் பல மதங்களின் கோட்பாடுகளாலும் விழுமியங்களாலும் வளம்பெற்ற தமிழ்ச் சமூகம் அதுவும் ஈழத் தமிழ்ச்சமூகம் இன்று கூறுபடுத்தப்படுகின்றது என்றால் அதனைப் புரிந்து கொண்டு மக்களை மீண்டும் ஒரு-வழிப்படுத்த வேண்டியுள்ளது.

குறியீட்டு அரசியல்களினால் மக்களைக் கூறுபோட்ட தலை-முறைகளைக் கொண்ட நாங்கள் இப்போது மதக் குறியீடுகளினால் கூறுபடுத்தப்படுவதனை பார்த்துக் கொண்டிருக்கின்றோம்.

இலங்கைத் தீவில் இன்று இனவாத அரசியல் ஆதிக்கத்தின் திரட்சியாகவும் குறியீடாகவும் பௌத்தம் தேரவாத பௌத்தமாக கட்டியெழுப்பப்பட்டுள்ளது. பௌத்தத்தின் தேரவாத பிரிவினை அழிவிலிருந்து மீட்டெடுத்து பாதுகாத்ததில் இலங்கைத் தீவிற்கும் இங்குவாழும் சிங்கள மக்களுக்கும் முதன்மையான பங்கு உண்டென்பது மறுக்க முடியாததும் அங்கீகரிக்கப்பட வேண்டியதுமான உண்மையாகும்.

எனினும் பௌத்தம் போதிக்கும் அறங்களும் விழுமியங்களும் இங்கு கட்டியெழுப்பப்படுகின்றனவா என்பது மிகவும் கேள்விக்கு உள்ளாக்கப்பட வேண்டியதே. இலங்கையின் ஆட்சியதிகாரத்திற்கு வருவோரும் பௌத்த சமயத்தையும் அதன் விழுமியங்களையும் சிங்கள மக்கள் தவிர்ந்த ஏனைய இனக்குழுமங்கள் மத்தியில் பரப்ப ஆர்வம் கொண்டுள்ளனரா என்ற வினாவும் இங்கு முக்கியமானது. அவர்கள் தேரவாத பௌத்தத்தை சிங்கள தேசியவாதத்துடன் ஒருங்கிணைத்து முன்னெடுக்கவே விரும்புகின்றனர்.

இராணுவ முகாம்களில் நிறுவப்பட்டுள்ள கௌதம புத்தரினை வழிபட்டுவிட்டு வெளியே வந்து அந்த இராணுவத்தினர் நிகழ்த்திய மனித அனர்த்தங்கள் ஏராளம். இங்கு கௌதம புத்தரின் கொல்லாமையும் கருணையும் அன்பும் முற்றாக மறுக்கப்படுகின்றது.

வடக்கு கிழக்கில் பௌத்த குறியீடுகளும் வழிபாட்டு தலங்களும் உருவாக்கப்படுவது தமிழர்களை பௌத்தர்களாக ஆக்குவதற்கல்ல. சிங்கள பௌத்த அரசியல் மேலாண்மையினை தீவெங்கும் விரிவாக்கம் செய்து ஏனைய இனமதக் குழுமங்களின் ஆளுகை உரிமையினையும் அரசியல் பங்கேற்பினையும் வலுவிழக்கச் செய்வதற்கே.

இதனையொத்ததாகவே இன்று தமிழ்ச்சமூகத்தினுள் தூண்டப்பட்டுள்ள குறியீட்டு மதவாதமும் அவற்றை நிறுவுவதிலும் பிற மத சின்னங்களை சேதப்படுத்துவதிலும் உள்ள ஆர்வம் புரிந்துகொள்ளப்படவேண்டும்.

நிகழ்த்தப்பட்ட யுத்தமும், திட்டமிட்டு தூண்டப்பட்ட இடப்பெயர்வும், திணிக்கப்பட்ட போதைப்பொருள் கலாசாரமும், சமூகச் சீரழிப்பு சக்திகளுக்கு எதிராக செயற்பட மறுக்கும் சட்டமும் ஒழுங்கும் என்பவற்றின் இன்னுமொரு அத்தியாயமாகவே தற்போதைய மதக்குறியீடுகளினை நிலைநிறுத்த முற்படும் முயற்சிகளையும் அவதானத்தில் கொள்ளவேண்டியுள்ளது.

வான்மறை தந்த வள்ளுவனுக்கே காவிகட்டி திருநீறு சாத்தி பூணூல் தரித்து அவமதிக்கும் அளவுக்கு தமிழ்ச்சமூகமும் தலைவர்களும் தடுமாறிப் போயுள்ளனர் இங்கே.

இந்தியாவில் நடைபெற்ற மாதிரியான மத வன்முறைகளின் களமாக ஈழத்தமிழ்ச் சமூகம் மாற்றப்பட்டுவிடக்கூடாது என்பதனைக் கருத்திற்கொண்டு அத்தகைய சக்திகளின் செல்வாக்கிற்கும் நிகழ்ச்சி நிரல்களுக்குள்ளும் ஆட்கொள்ளப்படக்கூடிய தொகுதியினருடன் குடிசார் சமூகம் திறந்த மனதுடன் பேசவேண்டும் என்பதும் மிகவும் அவசரமானதும் அவசியமானதுமான கடமையாக உள்ளது.

அதில் புலம்பெயர் சமூகமும் முதன்மைப்பாத்திரத்தை கொண்டிருக்கவேண்டும். என்பது இவ்விடத்தில் வலியுறுத்தப்பட வேண்டியுள்ளது.



selvin.ireneuss.mariampillai@thaiveedu.com



# ஆபிரிக்கக் கண்டம் :
## ஊடகத் தளம் அமைக்கின்ற வல்லரசுகள் வரிசையில் துருக்கி

- ரூபன் சிவராஜா

**அரசுகள் சர்வதேச அதிகாரப் போட்டிகளில் தம்மை வெளிப்படுத்தவும் தமது நலன்களுக்குச் சாதகமான சூழமைவுகளை ஏற்படுத்தவும் ஊடகங்களைக் கையாண்டுவருகின்றமை வரலாற்றில் நீண்டகாலமாக இடம்பெற்றுவருகின்ற நிகழ்வு. அது அரசியல், பொருளாதாரம், படைத்துறை, கலாச்சார ரீதியிலான விவகாரங்களை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கின்றன. தமது இலக்குகளை அடைய - அவை எந்தவகையினவாக இருந்தாலும் - ஊடகங்கள் கருவியாகக் கைக்கொள்ளப்படுகின்றன. முதன்மையாக அந்தந்த நாடுகளின் பொதுமக்கள் அபிப்பிராயத்தைத் தமக்குச் சாதகமாக மாற்றுவது அல்லது திருப்புவதென்பதே அவற்றின் இலக்கு.**

ஆபிரிக்கக் கண்டத்தில் சீனா, ரஷ்யாவைத் தொடர்ந்து துருக்கி தனது ஊடகப் பிரசன்னத்தை உருவாக்கி - விரிவுபடுத்தி வருகின்றது. ஊடகப் பிரசன்னம் என்பது வணிக உறவுகளையும் ஆபிரிக்க நாடுகளின் வளங்கள் மீது செல்வாக்குச் செலுத்தும் நோக்கத்தினையும் கொண்டவை. இந்நாடுகள் அமெரிக்க ஊடகச் செல்வாக்கிற்குச் சவால்விடுகின்ற வகையிற் செயற்படத் தொடங்கியுள்ளன என்ற விடயம் தற்போது பேசுபொருளாகியுள்ளது. அரசியல், பொருளாதார மற்றும் வணிக நோக்கங்களோடு ஆபிரிக்காவில் கடந்த சில ஆண்டுகளாக இந்நாடுகள் தமது ஊடகப் பிரசன்னத்தை அதிகரித்து வருகின்றன.

2022 மே மாதம் துருக்கியத் தலைநகரில் 45 ஆபிரிக்க நாடுகளைச் சேர்ந்த இராஜதந்திரிகள் மற்றும் ஊடகவியலாளர்கள் கலந்துகொண்ட முதலாவது துருக்கிய - ஆபிரிக்க உயர்மட்ட ஊடக மாநாடு நடத்தப்பட்டுள்ளது. துருக்கியச் செய்தி நிறுவனமான ‘Anadolu’ ஏலவே எதியோப்பியா, நைஜீரியா, கென்யா ஆகிய நாடுகளில் அலுவலகங்களைக் கொண்டிருக்கின்றது. கென்யாவில் நிருபர்களையும் கொண்டிருக்கின்றது. சூடான், சோமாலியா, தென்-ஆபிரிக்கா ஆகிய நாடுகளின் தலைநகரங்களில் அலுவலகங்களைத் திறக்கவுள்ளதாக அறியவந்துள்ளது.

### ஊடகத் தளம் அமைத்தல்:

துருக்கியத் தொலைக்காட்சிச் சேவையான ‘TRT’ ஆபிரிக்க நாடுகளுக்கான ஒளிபரப்புகளை ‘TRT-Africa’ எனும் திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தி வருகின்றது. துருக்கியின் பல தனியார் ஊடகங்களும் ஆபிரிக்க நாடுகளிற் செயற்படத் தொடங்கியுள்ளன. 2017-லிருந்து அந்நாட்டின் NRT தொலைக்காட்சி சேவையானது, 49 ஆபிரிக்க நாடுகளுக்குச் செயற்கைக் கோள் மூலம் ஒளிபரப்புகளைச் செய்து வருகின்றது. பொருளாதாரம், வர்த்தகம், செய்திகள், சினிமா, சுகாதாரம், விவசாயம், கலாச்சாரம், சுற்றுலா, கல்வி, தொடர்கள் மற்றும் கார்ட்டூன்கள் அதன் உள்ளடக்கங்கள் என அத்தொலைக்காட்சிச் சேவையின் இணையத்தளத்தில் அறியக்கிடைக்கின்றது. அத்தோடு தமது ஒளிபரப்பு, தம் நாட்டின் நலன்கள் மற்றும் பிம்பத்திற்கு எப்போதும் முன்னுரிமை கொடுக்கும் என்பதையும் வெளிப்படையாகக் குறிப்பிட்டுள்ளது அத்தொலைக்காட்சி நிறுவனம்.

இந்த ஊடக இருப்பினை உருவாக்குதல், விரிவுபடுத்துதல் என்பதற்கு ஒரு பொருளாதார இலக்கு இருக்கின்றது. அது முற்றிலும் வணிக, மூலதன இலாபத்தை அடிப்படையாகக் கொண்டது. அதற்கமைய ஊடக இருப்பினை விரிவுபடுத்தும் செயல்கள் பொருளாதார, அரசியல் உறவுகளின் விரிவாக்கத்தோடு சமாந்தரமாக முன்னெடுக்கப்படுகின்றன. கடந்த இருபது ஆண்டுகளில் 5 பில்லியன் டொலர்களிலிருந்து இருபத்தைந்து பில்லியன் டொலர்களாக - ஐந்து மடங்குகளாகப் பெருகியுள்ளது ஆபிரிக்க நாடுகளுடனான துருக்கியின் வணிகப் பெறுமதி. ஆனாலும் சீனாவுடன் ஒப்பிடுகையில் இது பத்தில் ஒரு பங்கு மாத்திரமே. ஆனால் துருக்கிக்கு பல அனுகூலங்கள் உண்டென ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அதாவது துருக்கி முஸ்லீம் நாடென்பதை ஆபிரிக்க நாடுகள் பல சாதகமாகப் பார்க்கின்ற சூழல் நிலவுகின்றது. புவியியல் அமைவிட ரீதியாகத் துருக்கிக்கும் ஆபிரிக்காவிற்குமிடையிலான தூரம் குறைவென்பது மற்றையது. இவை சீனாவோடு ஒப்பிடுகையிற் துருக்கிக்கு இருக்கக்கூடிய கூடுதல் அனுகூலங்கள். அதைவிட அமெரிக்கா, ரஷ்யா, சீனா ஆகியவற்றோடு ஒப்பிடுகையில் துருக்கி ஒரு நடுநிலையான தரப்பென்ற பார்வையும் நிலவுகின்றது.

ஆபிரிக்காவில் 62 விமான நிலையங்களில் ஓட்டங்களைக் கொண்டுள்ளது ‘துருக்கிய எயார்லைன்ஸ் - Turkish Airlines’.




ஆபிரிக்கப் பின்னணியில்லாத வேறு வெளி விமான சேவைகள் இந்த எண்ணிக்கையில் அங்கு இல்லை. ஆபிரிக்காவில் தற்போதைய சூழலில் 43 தூதரகங்களைத் துருக்கி கொண்டுள்ளது. 2000-ம் ஆண்டு காலப்பகுதியில் 12 தூதரகங்களையே கொண்டிருந்தது.

## உத்தியும் அணுகுமுறையும்:

இது அடிப்படையில் பொருளாதார இலக்குகளைக் கொண்ட வெளியுறவு அரசியல் மூலோபாயம். சீனாவின் வெளியுறவு அரசியல் அணுகுமுறையைப் பின்பற்றுகின்ற அல்லது தத்தெடுக்கின்ற அணுகுமுறையுமாகும். எர்டோகன் அரசாங்கம் 2004-லிருந்து 58 தடவைகள் ஆபிரிக்கக் கண்டத்திற்குப் பயணம் செய்துள்ளார். அந்தப் பயணங்களில் 32 வெவ்வேறு நாடுகளின் தலைநகரங்கள் அடங்குகின்றன. இதுவும் சீனாவை முன்மாதிரியாகக் கொண்ட அணுகுமுறைதான். துருக்கி தனது சொந்தத் தயாரிப்பிலான 15 மில்லியன் கொரோனா தடுப்பூசிகளை ஆபிரிக்க நாடுகளுக்கு அனுப்பவுள்ளதாக 2021 டிசம்பர் துருக்கிய ஜனாதிபதி எர்டோகன் தெரிவித்திருந்தமை நினைவு கொள்ளத்தக்கது. கோவிட்-19 தடுப்பூசிகள் பங்கீடு சார்ந்த பாரபட்ச அணுகுமுறைகளையும் ஆபிரிக்காவை நியாயமற்ற முறையில் மேற்கு நடத்துவதையும் சுட்டிக்காட்டியிருந்தார். துருக்கி தனது சொந்த கொரோனாத் தடுப்பூசியை உருவாக்கும் பணியில் ஈடுபட்டிருந்தது. துர்கோவாக் (Turkovac) என்பது அதன் பெயர். ஆபிரிக்காவில் சேவையிலுள்ள துருக்கி விமானசேவையின் அனைத்துப் பறப்புத் தளங்களும் இலாபகரமானவை இல்லை. ஆனாலும், துருக்கி ஒரு முனைப்பினைக் காட்டுகிறது. மனங்களை வெல்லவும் அதனூடாகக் காலூன்றவும் இத்தகு அணுகுமுறை உத்திகள் உதவக்கூடியது.

## கருவி:

உலக வல்லரசுகள் தமது அரசியல் பொருளாதார நலன்களைப் பாதுகாப்பதற்கும் விரிவுபடுத்துவதற்கும் ஊடகங்களை நீண்டகாலமாகக் கருவியாகக் கைக்கொண்டுவருகின்றன. தொலைக்காட்சி, வானொலி, செய்தி நிறுவனங்கள் உட்பட்ட இன்னபல ஊடகங்களை அவை பயன்படுத்தி வந்துள்ளன.

சீன ஊடகங்கள் 1950-களில் ஆபிரிக்காவிற் தளம் அமைக்கத் தொடங்கின. (1956-ல் - Radio Peking, 1985-லிருந்து - Radio Beijing). சீனச் செய்தி நிறுவனமான Xinhua இன்று ஆபிரிக்கக் கண்டத்தில் முப்பத்தொரு அலுவலகங்களைக் கொண்டுள்ளது. 2010-ல் இருபத்து நான்கு அலுவலகங்களை அச் செய்தி நிறுவனம் கொண்டிருந்தது. 2012-லிருந்து சீன மத்திய தொலைக்காட்சி (China Central Television - CCTV) பெயரை சீன உலகத் தொலைக்காட்சி இணையவலை (China Global Television Network - CGTN) என மாற்றிக் கொண்டு கென்யாவின் தலைநகரில் நிறுவியது. சீனாவிலிருந்து வெளிவரும் முதன்மையான ஆங்கில நாளிதழான சைனா டெய்லி (China daily) தென்-ஆபிரிக்கத் தலைநகரில் அலுவலகத்தினைத் திறந்திருக்கின்றது. சீன - ஆபிரிக்க நாடுகளுக்கிடையிலான ஊடகக் கூட்டில் பெரும்பாலும் Xinbua அல்லது CGTN உள்ளடக்கப்பட்டிருக்கும்.

CGTN தொலைக் காட்சியின் நிகழ்ச்சிகள் கென்யா, லிபேரியா, தென்-ஆபிரிக்கா, மற்றும் பல ஆபிரிக்க நாடுகளின் அதிகாரபூர்வ தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பப்படுகின்றன. சீனத் தொலைக்காட்சித் தொடர்கள் பல்வேறு ஆபிரிக்க மொழிகளுக்கு மொழிமாற்றம் (Dubbing) செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுகின்றன. அந் நாடுகளின் ஊடகவியலாளர்கள்,

மற்றும் தொடர்பாடல் ஆலோசகர்கள், தொலைக்காட்சித் தொழில்நுட்பக் கலைஞர்களுக்குச் சீனா கற்பித்தல் மற்றும் பயிற்சிகளை வழங்குகின்றது. குறித்த கால இடைவெளிகளில் சீனப் பல்கலைக்கழகங்கள், கற்கை மையங்களுக்கு அவர்கள் அழைக்கப்பட்டு மேற்படிப்பு மற்றும் கருத்தரங்குகள் நடத்தப்படுகின்றன.

## முதலீடு - வணிகம் - மூலதனம்:

இவற்றின் அடிப்படை நோக்கம் வணிக உறவுகளை ஏற்படுத்துதல், முதலீடுகளை விரிவாக்கம் செய்தல் என்பனவாகும். 2016 - 2020 காலப் பகுதிக்குள் ஆபிரிக்காவில் சீனா 70 பில்லியன் டொலர் பெறுமதியான மூலதனத்தினை முதலீடு செய்தது. இது அமெரிக்கா, பிரான்ஸ், பிரித்தானியா மற்றும் ஜேர்மனி ஆகியனவற்றின் மொத்த முதலீட்டுத் தொகை. அதாவது இந்நான்கு நாடுகள் முதலீடு செய்யும் மூலதனத்தினைக் கூட்டும்போது வரும் தொகையும் சீனா தனியாக முதலீடு செய்துள்ள தொகையும் சமம் என்பதாகும்.




இவை இவ்வாறிருக்க ரஷ்யா தனது TASS செய்தி நிறுவனத்திற்கூடாக ஆபிரிக்காவிற் தனது ஊடக இருப்பினை நிலைநிறுத்தி வருகிறது. அத்தோடு 'RT' எனும் வானொலிச் சேவை மற்றும் 'Sputnik' தொலைக்காட்சி ஒளிபரப்பின் மூலமும் அது நிகழ்கிறது. 2019-ல் ரஷ்ய - ஆபிரிக்க உயர்மட்ட மாநாடு ரஷ்யாவின் Sotsji நகரில் நடைபெற்றபோது அதில் 43 ஆபிரிக்க நாடுகள் பங்குபற்றியுள்ளன. அதில் மேற்கின் ஊடகமேலாதிக்கத்திற்கு எதிர்வினையாற்றல் தொடர்பாகப் பேசப்பட்டுள்ளது. மேற்கு தனது அரசியல் பொருளாதார, மூலதன, வணிக, முதலீட்டு நலன்களுக்குச் சாதகமான பார்வையை ஆபிரிக்கா உட்பட்ட உலக நாடுகளில் திணிக்கின்றது, பரப்புகின்றது ரஷ்யா.

## கொலனித்துவ சக்திகளின் ஆபிரிக்காவிற்கான பந்தயம்:

1800-களின் இறுதியில் ஐரோப்பிய கொலனித்துவ சக்திகள் ஆபிரிக்காவைத் தமது ஆதிக்கத்தின் கீழ் வைத்திருப்பதற்கான போட்டி நிலவியது. இன்றும் அந்தப் பந்தயம் தொடர்கின்றது. ஆனால் அதன் தரப்புகள் - ஆதிக்க சக்திகள் மாறியிருக்கின்றன. அல்லது புதிய சக்திகள் களமிறங்கியுள்ளன எனலாம். அதில் அமெரிக்கா, சீனா, ரஷ்யா ஆகிய தரப்புகளுடன் துருக்கி புதிதாக உள்ளிறங்கியுள்ளது. நூற்றாண்டுகளாக ஆபிரிக்காவிற் காலூன்றித் தளம் அமைக்கவும் தமது அதிகாரத்தை நிலைநிறுத்தவும் செல்வாக்கினை உறுதிசெய்யவும் பல தரப்புகள் போட்டாபோட்டி போட்டன. 1800-களின் இறுதிவரை ஆபிரிக்கக் கண்டம் மீதான ஐரோப்பிய வல்லரசுகளின் ஈடுபாடு அரசியல், பொருளாதார, இராணுவ ரீதியில் நீடித்தது. அப்பொழுதிலிருந்தே வல்லரசுகளின் இந்தக் காலூன்றும் போட்டி 'ஆபிரிக்காவிற்கான பந்தயம்' என்று விளிக்கப்படுவதுண்டு.

இரண்டாம் உலகப் போரின் முடிவின் பத்தாண்டுகளுக்குள் ஆபிரிக்க நாடுகளிற் பல சுதந்திரமடைந்தன. அதனால் வெளிச் சக்திகள், வல்லரசுகளின் செல்வாக்குச் செலுத்தல், தளம் அமைத்தல் ஈடுபாடு குறைந்துவிடவில்லை. பனிப்போர் காலத்தில் அமெரிக்காவும் சோவியத்தும் புதிதாகச் சுதந்திரமடைந்த நாடுகளைத் தமது நட்பு அணிக்குள் இணைக்கப் பெரும் பிரயத்தனம் எடுத்தன.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கப் போனாற் கடந்த பத்தாண்டுகளுக்குள் ஆபிரிக்க நாடுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட வெளிநாடுகளின் தூதரகங்கள் திறக்கப்பட்டுள்ளன. பல நாடுகள் பில்லியன் கணக்கான முதலீடுகளைச் செய்துள்ளன. இராணுவத்தளங்கள் பல நிறுவப்பட்டு படைத்துறைக் கூட்டுச் செயற்பாடுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

அமெரிக்கா, ரஷ்யா மற்றும் பிரான்ஸ் ஆகியவை நிலப்பரப்பிற் சிறிய பாலைவன தேசமான ஜிபூட்டியில் (Djibouti) தமது படைகளைக் குவித்துள்ளன. துருக்கி 2017 காலப்பகுதியில், சோமாலியாவின் தலைநகரான மொகடிசுவில் தனது மிகப்பெரிய தளத்தைத் திறந்துள்ளது. இது ஏடன் வளைகுடாவினை (Gulf of Aden) அண்டிய பகுதிகளுக்கான கப்பற் போக்குவரத்துக்கான வாய்ப்பினைத் துருக்கிக்கு வழங்கியுள்ளது. அத்துடன் போரினால் பாதிக்கப்பட்ட சோமாலியாவின் மிக முக்கியமான வர்த்தக பங்காளிகளில் ஒன்றாகவும் துருக்கியை ஆக்கியுள்ளது என்கிறார் Tyrkiskpolitikk.no இணையத்தள ஆசிரியர் Morten Myksvoll. ஏனைய வெளிச்சக்திகள் அக்கறை கொள்ளாத கிழக்கு - ஆபிரிக்கப் பிராந்தியங்களைத் தேர்ந்து துருக்கி களமிறங்கியுள்ளதாகவும் அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## அமெரிக்க மூலோபாயம்:

இப்பிராந்தியத்தில் சீன மற்றும் ரஷ்ய செல்வாக்கை முறியடிக்கும் முயற்சியில், ஆபிரிக்க நாடுகளுடன் நெருக்கமான ஒத்துழைப்பிற்கான புதிய உத்தியை அமெரிக்கா தொடங்கியுள்ளமை பற்றிய செய்தி கடந்த ஆண்டு (2022) நடுப்பகுதியில் வெளிவந்திருந்தது. அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் 2020-ல் பதவியேற்றதை அடுத்து ஆபிரிக்க நாடுகளுடன் கூட்டினைப் பலப்படுத்துவதில் கவனம் மேலோங்கியுள்ளது. இந்த மூலோபாயம் அமெரிக்க தேசிய பாதுகாப்பு நலன்களுக்கு ஆபிரிக்கப் பிராந்தியத்தின் முக்கியத்துவத்தை மறுவடிவமைக்கிறது என்று இது தொடர்பாக ஓகஸ்ட் 2022 வெளிவந்த வெள்ளை மாளிகையின் அறிக்கையிற் தெரிவிக்கப்பட்டிருந்தது.

சீனா, ரஷ்யா மற்றும் ஏனைய வெளிநாட்டுத் தரப்புகளின் தீங்கு விளைவிக்கும் நடவடிக்கைகளை எதிர்கொள்வதற்

குரிய வகையிலான வெளிப்படையான சமூகங்களை ஊக்குவிப்பதை உள்ளடக்கிய மூலோபாயம் என்றும் குறிப்பிடப்பட்டிருக்கின்றது.

அத்தோடு ஆபிரிக்க நாடுகள் ஜனநாயக மற்றும் பாதுகாப்புச் சார்ந்த நன்மைகளை அடைவதோடு, சர்வாதிகார மற்றும் இராணுவ ஆட்சியதிகாரங்களுக்கு இட்டுச் செல்லப்படுவதைத் தடுப்பதும் தமது நோக்கம் என்று அமெரிக்க அறிக்கை கூறுகிறது. அத்தோடு கொரோனாப் பெருந்தொற்று மற்றும் அதனுடன் தொடர்புடைய சமூக விளைவுகளை எதிர்கொள்வதற்கான திட்டங்களையும், காலநிலை நெருக்கடியால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்க நாடுகளுக்கான உதவிகளைத் தாம் முன்னெடுக்கவுள்ளதாகவும் குறிப்பிடப்பட்டிருந்தது.

ஜோ பைடன் பதவியேற்றதிலிருந்து, பெய்ஜிங் மற்றும் மொஸ்கோவின் செல்வாக்கை எதிர்கொள்ளும் இலக்குடன், ஆபிரிக்காவிற் தமது பழைய கூட்டணிகளை புதுப்பிக்கவும், புதிய கூட்டணிகளை உருவாக்கவும் முயன்றுவருகின்றார் என்பதை இவ்வறிக்கை வெளிப்படுத்துகின்றது. சீனா, ரஷ்யா, துருக்கி ஆகியன நேரடியாகத் தமது பொருளாதார முதலீடுகளுடன் களமிறங்குகின்றன. அமெரிக்கா வழமை போல ஜனநாயகம், பாதுகாப்பு, நல்லாட்சி போன்ற போர்வைகளுடன் களமிறங்குகின்றது என்பதே இதிலுள்ள வித்தியாசம். தவிர, நோக்கமென்பது அடிப்படையில் எல்லா வெளிச் சக்திகளுக்கும் ஒன்றே.

## துருக்கியின் புதிய வெளியுறவு அரசியல்:

அயல்நாடுகளுடன் நட்புறவை வளர்த்துத் தனது மென்வலுவை (Soft Power) வலுப்படுத்துவது என்பதை 2002-ல் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் வெளியுறவுக் கொள்கையாக வகுத்தது. ஆனால் அந்தக் கொள்கை வெற்றியளிக்கவில்லை. ஆனால் ஆபிரிக்காவில் தனது காலை ஊன்றுவதில் வெற்றிகரமாக நகரத் தொடங்கியுள்ளது. ஆபிரிக்க நாடுகளில் உட்கட்டுமானம், கட்டடத்துறை உட்பட்ட பல்வேறு சமூக, பொருளாதார அபிவிருத்தி சார்ந்த தேவைகள் அதிகம் உள்ளன. எனவே சீனா, ரஷ்யா மற்றும் துருக்கி ஆகியனவற்றின் முதலீடுகளுக்கும் மூலதன விருத்திக்குமான வெளிகள் நிறையவே உள்ளன. துருக்கியின் எர்டோகன் அரசாங்கம் ஐரோப்பாவில் செல்வாக்கிழந்து வருகின்றமை கண்கூடு. எனவே ஆபிரிக்காவில் செல்வாக்கினை நிலைநாட்டுவதோடு மூலதனப் பெருக்கத்திலும் ஈடுபடுவதை மூலோபாயமாக வகுத்துக் கொண்டிருக்கின்றது என்ற முடிவுக்கும் வரமுடிகிறது.

துருக்கியின் ‘TIKA’ எனப்படும் கூட்டுச்செயற்பாட்டு மற்றும் அபிவிருத்திக்கான மையம் (Turkish Cooperation and Coordination Agency) ஆபிரிக்காவில் 22 நாடுகளில் செயற்படுகின்றது. துருக்கி இத்தனை பல நாடுகளில் முக்கிய வணிக-அரசியல் கூட்டுறவை நிறுவி வருகின்றமை ஏனைய சக்திகளை அச்சமூட்டியுள்ளது என்று கூறுகின்றார் பிரான்ஸைச் சேர்ந்த அரசறிவியலாளர் Jean Marcou. துருக்கியின் இந்த விரிவாக்கம், நிறுவனமயப்பட்டதும் எழுந்துவருகின்றதுமான வெளிச்சக்திகளுக்கிடையிற் கடுமையான போட்டி நிலவுகின்ற ஒரு காலகட்டத்தில் நிகழ்கிறது என்கிறார் ‘Middle East Institute’ சிந்தனைக் குழாத்தைச் சேர்ந்த John Calabrese. ஆபிரிக்கக் கண்டத்தில் தனக்கான சந்தைகளைக் கைப்பற்றி, தனது அதிகாரத்தை நிலைநாட்டி, கௌரவத்தையும் ஸ்திரத்தையும் உயர்த்தும் துருக்கியின் முனைப்பு இவற்றுக்கிடையிலான அதிகாரப் போட்டியைப் பிரதிபலிக்கின்றது என்றும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

அரசுகள் சர்வதேச அதிகாரப் போட்டிகளில் தம்மை வெளிப்படுத்தவும் தமது நலன்களுக்குச் சாதகமான சூழமைவுகளை ஏற்படுத்தவும் ஊடகங்களைக் கையாண்டு வருகின்றமை வரலாற்றில் நீண்டகாலமாக இடம்பெற்றுவருகின்ற நிகழ்வுதான். அது அரசியல், பொருளாதாரம், படைத்துறை, கலாச்சார ரீதியிலான விவகாரங்களை உள்ளடக்கமாகக் கொண்டிருக்கின்றன. இன்னும் தெளிவாகச் சொல்வதானால் தமது இலக்குகளை அடைய - அவை எந்த வகையினவாக இருந்தாலும் -ஊடகங்கள் கருவியாகக் கைக்கொள்ளப்படுகின்றன. முதன்மையாக அந்தந்த நாடுகளின் பொதுமக்கள் அபிப்பிராயத்தைத் தமக்குச் சாதகமாக மாற்றுவது அல்லது திருப்புவதென்பதே அவற்றின் இலக்கு.


**இக்கட்டுரையில் பயன்படுத்தியுள்ள தரவுகளுக்கான ஆதாரங்கள்:**

- ‘The news war in Africa’, Le Monde diplomatique - January 2023
- ‘Turkey shows its muscles in Africa’, Dagens næringsliv, 17.12.17
- ‘U.S. launches new Africa strategy’, Dagsavisen, 08.08.2022
- ‘Turkey promises millions of vaccines to Africa’, VG, 12.12.2021





rooban.s@thaiveedu.com



STAY ONE STEP AHEAD OF CRA

X-CRA Officers are on staff.

SARVAA CPA
PROFESSIONAL CORPORATION

Our passion is to solve your tax problems:
- Unfiled Tax Returns - Last ten years (2011 - 2023)
- Appeals, Audits and Adjustments
- GST/HST Owner-Built & Rental Rebates
- Negotiate Collection, Garnishment and Payment Plan
- Voluntary Disclosure Program (VDP)
- Estate, Trust & Non-Residents
- US Tax (PTIN) - IRS 1040 & State Returns

CPA CHARTERED PROFESSIONAL ACCOUNTANTS

Shawn Y. Sarvaa, CPA, CGA
2750 14th Ave., Suite 206
Markham ON L3R 0B6
ideas@sarvaacpa.ca

TECHNICAL EXCELLENCE | INTEGRITY | PROFESSIONALISM

VANCOUVER 604 398 7272
TORONTO 647 219 3110
CALGARY 403 879 7272



# வங்கியும் வங்குரோத்தும்

- ரதன்

2022-ஆம் ஆண்டின் பொருளாதாரத்துக்கான நோபல் பரிசு மூவருக்கு கொடுக்கப்பட்டது. தெரிந்தோ, தெரியாமலோ இவர்கள் மூவரும் பொருளாதார மந்த நிலை, பொருளாதார உடைவு, வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்களின் நிதிப் பற்றாக்குறை போன்ற விடயங்களை ஆய்வு செய்தமைக்காகவே வழங்கப்பட்டது. விருது வழங்கப்பட்டு ஒரு வருட காலத்துக்குள் மூன்று வங்கிகள் தொடர்ந்து இயங்க முடியாத நிலைக்கு தள்ளப்பட்டன. இவற்றுள் இரண்டு அமெரிக்காவிலும், மூன்றாவது வங்கி சுவிற்சிலன்ட்டிலும் உள்ளன.

நோபல் பரிசைப் பெற்ற மூவருள் Ben Bernanke அமெரிக்காவின் மத்திய வங்கி எனப்படும் Federal Reserve System (FD) தலைவராக 2006-2014 வரை கடமையாற்றினார். 2008-ல் நடைபெற்ற நிதி உடைவின் போது இவர் பதவியில் உள்ளார். இவர் ஒரு பொருளாதார பேராசிரியர். பல பொருளாதார நூல்களின் ஆசிரியர். நோபல் பரிசு விமர்சனங்களுக்குரியது எனினும் இப்பரிசு வழங்கப்பட்ட காலம் முக்கியமானது. பரிசு பெற்ற மூவரையும் விட வேறு பலரும் நிதி நிறுவனங்களின் நிதி நிலைமை மற்றும் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்படுவது குறித்து ஆய்வுகள் செய்துள்ளனர். இவர்களை விட அவர்கள் கருத்துக்கள் மிக முக்கியமானவை என்பது மறுப்பதற்கல்ல.

இவர்கள் முன்வைத்த கருத்துக்களை பார்ப்பதற்கு முன்னர், பலராலும் இன்று கவனிக்கப்படும் வங்கியான சிலிக்கன் வலி வங்கி (Silicon Valley Bank) ஏன் வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது என்பதனை பார்ப்பது முக்கியம்.

பங்குனி 9-ம் திகதி வங்கியில் பணத்தை வைப்புச் செய்தவர்கள் அல்லது நிறுவனங்கள் 42 பில்லியன் அமெரிக்க டொலர்களை வங்கியிலிருந்து மீளப் பெற முயற்சித்தார்கள். வங்கியில் அவர்களுக்கு கொடுப்பதற்கு பணம் இல்லை. வங்கி மூடப்பட்டது. வங்கியில் வைப்புச் செய்யப்பட்ட பணம் எங்கே? அமெரிக்க நிதி சட்ட நிறுவனம் கவனிக்கத் தவறிவிட்டதா? வங்கி மட்டுமல்ல வாடிக்கையாளர்களும் வங்குரோத்து நிலைக்குச் செல்லவேண்டுமா? போன்ற பல கேள்விகளில் சிலவற்றிற்கு விடையுள்ளது.

சிலிக்கன் வங்கி தொழில் நிறுவனங்களை புதிதாக ஆரம்பிக்கும் (startup companies) வாடிக்கையாளர்களை அதிகளவு கொண்டுள்ள வங்கியாகும். இவர்கள் நீண்ட காலத்திற்கு பணத்தை வைப்பிலிடமாட்டார்கள். இந்நிறுவனங்களின் தேவைகள் அதிகமாகவிருக்கும். தொழிலாளர்களுக்கான வேதனம், புதிய முதலீடுகள் போன்று அவர்கள் அவ்வப்போது பணத்தை வங்கியிலிருந்து மீளப் பெறுவார்கள். பங்குனி 2020-ல் 60 பில்லியன் அமெரிக்க டொலர்களை வாடிக்கையாளர்கள் வைப்பிலிட்டிருந்தார்கள். இத்தொகையானது இரு வருடங்களில் 2022 பங்குனியில் 200 பில்லியனாக அதிகரித்திருந்தது.

வங்கியின் தலைமை அதிகாரிகள் வைப்பிலிட்ட பணத்தை நீண்ட கால கடன் பத்திரங்களில் (bond) முதலீடு செய்திருந்தார்கள். இவை பாதுகாப்பானவை. அதிகளவில் அமெரிக்க அரசுசார் நிறுவனங்களின் கடன் பத்திரங்களாகவிருக்கும். (Long-term Treasurys) இவை அதற்கான காலம் முடியமுன்னர் விற்றால் அதற்கான பெறுமதி கிடைக்காது. இவை வட்டி வீதம் அதிகமாகவிருக்கும் பொழுது பெறுமதி குறைந்தும், வட்டி வீதம் குறைவாக இருக்கும் பொழுது பெறுமதி அதிகரித்தும் இருக்கும். இது ஒரு பொதுவான கருதுகோள்.

குறைவான காலத்தில் வருமானத்தைப் பெறும் முதலீடுகளில் மிகக் குறைவாகவே சிலிக்கன் வங்கி முதலீட்டிலிருந்தது. வைப்பிலிருப்பவர்களின் பணத்தை வங்கிகள் வீட்டுக் கடனாக, மற்றும் பங்குச் சந்தைகளில், கடன் பத்திரங்களாக முதலீடு செய்வார்கள். சிலிக்கன் வங்கி அதிகாரிகள் தங்களது வாடிக்கையாளர்கள் யார்? அவர்களது தேவை என்ன? போன்ற விடயங்களை முறையாக கணிக்கத் தவறிவிட்டார்கள். கடந்த ஒரு வருடமாக பிரதான ஆபத்தைக் கணிக்கும் அதிகாரி (Chief Risk Officer)இன்றியே வங்கியியங்கி வந்துள்ளது.

2022 பங்குனியிலிருந்து மார்கழி 2022 வரையிலான பத்து மாத காலத்தில் சுமார் 27 பில்லியன் டொலர்களை வாடிக்கையாளர்கள் வங்கியிலிருந்து மீளப் பெற்றுள்ளார்கள். இதற்கான பணத்தைப் பெறுவதற்கு வங்கியால் உடனடியாக செய்யக்கூடிய விடயம் கடன் பத்திரங்களை விற்பனை செய்வதேயாகும். ஏனெனில் இவர்களிடம் குறைந்த கால முதலீடுகள் மிகக் குறைவாகவேயிருந்தது. இதனால் கடன் பத்திரங்கள் நட்டத்தில் விற்பனை செய்யப்பட்டன. ஏற்கனவே இந்த கடன் பத்திரங்களின் விலையானது கூடிய வட்டி வீதத்தால் குறைந்திருந்தது. இதனை வாங்கிய நிறுவனங்களில் ஒன்று

Goldman Sachs என்ற மிகப் பெரிய அமெரிக்க முதலீட்டு வங்கியாகும்.

படிப்படியாக சரிவுக்கு சென்று கொண்டிருந்த வங்கி, திடீரென வங்குரோத்து நிலைக்கு சென்று விட்டது.

அமெரிக்க நிதி நிறுவனங்கள் 250 பில்லியன் டொலர்களுக்கு மேற்பட்ட வைப்பீடு இருந்தால் அமெரிக்க அரச நிதி கட்டுப்பாட்டுக்குள் கண்காணிக்கப்படும். 50 பில்லியனிலிருந்து இதனை 250 பில்லியனாக மாற்றவேண்டும் என அரசிடம் வற்புறுத்தியவர்களுள் சிலிக்கன் வங்கி தலைமையதிகாரி முதன்மையானவர்.

இது நியு யோர்க் போஸ்ட்ன் செய்தி.

'SVB touted by Forbes on 2023 America's Best Banks list last month'.

Federal Deposit Insurance Corporation (FDIC) வாடிக்கையாளர்களுக்கு 250,000 டொலர்களை நட்டஈடாக வழங்கும். இதில் முதலீடு செய்தவர்களின் பணம் முழுமையாக இவர்களுக்கு கிடைக்குமா என்பது கேள்விக்குறியே.

அமெரிக்க வங்கிகள் மொத்த வைப்பில் 10 வீதமான பணத்தையே fractional reserve கையிருப்பில் வைத்திருந்தால் போதும் என சட்டம் கூறுகின்றது. எனவே வங்கியிடம் வாடிக்கையாளர்களுக்கு வழங்குவதற்கு பணம் இல்லை.

கடந்த சில வாரங்களில் cryptocurrency-focused bank - Silvergate Signature Bank, SVB ஆகிய அமெரிக்க வங்கிகளுடன் சுவிஸ் வங்கியும் வங்குரோத்து நிலைக்குச் சென்றன. FDIC-ன் இணையத்தளம் 2000-ம் ஆண்டு ஐப்பசி மாதத்திலிருந்து இன்று வரை 565 அமெரிக்க வங்கிகள் வங்குரோத்து நிலையடைந்ததாக குறிப்பிடுகின்றது.

2008-ல் நடைபெற்ற நிதிப் பிரச்சினையை விட தற்போதைய பிரச்சினை மிக மோசமானது என கருதப்படுகின்றது. கடந்த வார இறுதியில் கனடா, ஐக்கிய இராச்சியம், ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம், அமெரிக்கா போன்ற நாடுகளின் மத்திய வங்கி ஆளுநர்கள், முக்கிய அதிகாரிகள் இன்றைய நிதி நிலைமை பற்றி ஆலோசித்துள்ளனர். இது நிலைமையின் தீவிரத் தன்மையை எடுத்துக்காட்டுகின்றது.

subprime mortgage crisis 2007-2010 காலப்பகுதியில் ஏற்பட்டது. Washington Mutual வங்கி வங்குரோத்து நிலைக்கு தள்ளப்பட்டது. இதன் பின்னால் பல காரணங்கள் முன்வைக்கப்பட்டன. அமெரிக்க வீடு விற்பனை bubble நிலையில் இருந்தது. வீட்டின் விலைகள் கட்டுப்பாட்டற்று இருந்தன. பல வீட்டுக் கடன்கள், கடன் பெறுபவரது உண்மையான நிதி நிலைமையை முன்வைக்காமல், போலியான பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டு வீட்டுக் கடன்கள் பெற்றதாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் பலர் வீட்டை வாங்கிய பின்னர், வீட்டுக் கடன்களை கட்டமுடியாமல் இருந்துள்ளனர். இதற்கு வங்கிகளின் தவறான அணுகுமுறையும் ஒரு காரணமாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

Bubble நிலை மாறி வீட்டின் விலைகள் குறையத் தொடங்கின. வீட்டில் பெறப்பட்ட கடனை விட, வீட்டின் விலைகள் மிகக் குறைவாகவேயிருந்தன. இதனை தீர்க்க ஒபாமா அரசு வட்டி வீதத்தை வெகுவாகக் குறைத்து, வீட்டின் விலைகளை மீண்டும் செயற்கையாக அதிகரிக்கச் செய்தன. வீடுகள் அதிகளவு மீண்டும் விற்பனையாகின. நீண்ட கால கடன் முறைகள் மூலம் மீண்டும் வங்கிகள் வீட்டுக் கடன்களை வழங்கி வந்தன. இப்பொழுது வீட்டின் விலைகள் அதிகமாக இருப்பதால் வங்கிகளில் பெறப்பட்ட கடன் தொகை அதிகம். வட்டி வீதம் குறைவு. வங்கிகளின் லாபத்தை அதிகரிக்க வேண்டுமானால் வட்டி வீதத்தை அதிகரிக்க வேண்டும். வட்டி வீதம் அதிகரிக்க செய்யப்பட வேண்டுமாயின் பணவீக்கம் அதிகமாக வேண்டும். கொரோனா, அதன் பின்னர் ரஷ்யா - உக்கிரேன் போர். இவையிரண்டும் தாராளமாக பணவீக்கத்தை அதிகரிக்கச் செய்ய போதிய காரணங்கள். இப்போ பணவீக்கம் தலைக்கு மேல்.

பணவீக்கத்தை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர பணப்புழக்கத்தை குறைக்க வேண்டும். வட்டி வீத அதிகரிப்பு என்பதே இதற்கான ஒரே தீர்வு என பொருளாதார அறிஞர்கள் கருதுகின்றார்கள். இதனையே புத்தகங்களும் தெரிவிக்கின்றன. புத்தகங்கள் யதார்த்தத்தை கவனத்திலெடுப்பதில்லை.

அரசும், பெரும் நிறுவனங்களும், மிகப் பெரிய நிதி நிறுவனங்களும் எதைச் செய்ய வேண்டும் என்று எதிர்பார்க்கின்றார்களோ அது தானகாவே நடைபெறுகின்றது.

வட்டி வீதம் 4.5-ஆக அதிகரித்த போதும், உங்கள் வைப்பிற்கான வட்டி .2 வீதமாகவே வழங்கப்படுகின்றது. வங்கிகள் மக்களை எவ்வளவு தூரம் மிக மோசமாக சுரண்டுகின்றார்கள். அது மட்டுமல்ல சேவை கட்டணங்களை அவ்வப்போது அதிகரிப்பார்கள். ஆகக் குறைந்த தொகையை நீங்கள் தொடர்ந்து வைத்திருந்தாலே சேவைக் கட்டணம் குறைப்பு அல்லது இல்லாமல் இருக்கும். இது வங்கிக்கு வங்கி மாறுபடும்

அமெரிக்க எல்லையின் வடக்கில் அமைந்துள்ள கனடா பெரும்பாலும் அமெரிக்காவின் நிதி முடிவுகளிலேயே தங்கியுள்ளன. அண்மைக் காலங்களில் Fed hikes interest rate 0.25 point என்ற வார்த்தைகளை கனடாவில் கடந்த பல மாதங்களாக அடிக்கடி கேட்டிருப்பீர்கள். கனடாவின் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி இரண்டும் அதிகளவு அமெரிக்காவிற்கானதாகவேயுள்ளது. இதனால் அமெரிக்கா வட்டி வீதத்தை அதிகரித்தால் அதன் டொலரின் பெறுமதி அதிகரிக்கும். அதனை ஈடுகட்ட கனடாவும் தனது வட்டி வீதத்தையதிகரித்து கனடிய டொலரை ஒரு அமெரிக்க டொலருக்கு 75-80 சதங்களுக்குள்ளாக கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்க முயற்சிக்கும். அண்மைக் காலங்களில் கொரோனாவின் பின்னர் பொருட்களின் விலையேற்றம் பணவீக்கத்தை அதிகரித்தது. கனடிய மத்திய வங்கிக்கு வட்டி வீதத்தை அதிகரிக்க இவ்விரண்டு காரணிகளும் காரணமாகின.

கனடிய வங்கிகள் பாதுகாப்பானவை என்ற கருத்துள்ளது. 2008-ல் அமெரிக்காவில் உள்ள நிலைமை தற்பொழுது கன டாவில் உள்ளது என்பதே உண்மை. கடந்த காலங்களில் ஏற்பட்ட வீட்டின் விலை அதிகரிப்பால், வீட்டுக் கடன்கள் மிக மோசமான நிலைமையை அடைந்துள்ளன. .25 வீதம் அதிகரிப்பு என்பது ஒரு மில்லியன் வீட்டுக் கடன் கட்டும் குடும்பத்துக்கு அண்ணளவாக 500 டொலர்கள் பற்றாக்கு றையை ஏற்படுத்தும். கடந்த ஒரு வருடத்தில் கனடிய மத் திய வங்கியால் நான்கு தடவைகள் வட்டி வீதம் அதிகரிக் கப்பட்டது. அடுத்த மூன்றிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் கனடாவில் வங்கி நிலைமைகள் மோசமடையலாம். இதற் கான வாய்ப்புகள் 20 வீதம் இருப்பதாக ஆய்வு நிறுவனங் கள் தெரிவிக்கின்றன.

1970-1996 காலப்பகுதியில் 43 கனடிய வங்கிகள் வங்கு ரோத்து நிலையடைந்துள்ளன. 1996-ல் Security Home Mortgage Corporation கல்கரியை மையமாகக் கொண்ட வங்கி வங்குரோத்து நிலையை அடைந்தது. 2600 கனடியர்கள் வைப்பிலிடப்பட்ட 42 மில்லியன் டொலர்களை இழந்தனர். ஆனால் Security Home Mortgage Corporation 60,000 டொலர் களை காப்புறுதிப் பணமாக வாடிக்கையாளர்களுக்கு வழங் கியது. அறுபதினாயிரத்துக்கு மேல் வைப்பிலிடப்பட்டவர்கள் மிகுதிப் பணத்தை இழந்தனர். இப்பொழுது இந்தக் காப்புறு திப் பணம் 100,000 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது. ஆனால் 1996-ன் பின்னர் கனடிய வங்கிகள் அல்லது நிதி நிறுவனங் கள் எதுவும் வங்குரோத்து நிலையை அடையவில்லை.

கனடாவில் ஆறு பிரதான வங்கிகள் உட்பட மொத்தமாக 85 நிதி நிறுவனங்கள் உள்ளன. Big 6" in Canada (Toronto Dominion, Royal Bank of Canada, Bank of Nova Scotia, Bank of Montreal, Canadian Imperial Bank of Commerce, and National Bank of Canada) இவை சிடிஐசி-யில் அங்கத்தவர்களாக உள்ளனர். அமெரிக்காவில் இதன் தொகை எட்டாயிரத்துக்கு மேல். இவற்றுள் ஐந்து மிகப் பெரிய வங்கிகளும் அடங்கும். Big 5" in the U.S. (JPMorgan Chase, Bank of America, Citigroup, Wells Fargo. and Goldman Sachs) இந்த ஐந்து வங்கிக ளும் அமெரிக்காவின் மொத்த வங்கி வணிகத்தின் 44 வீதத் தையே செய்கின்றனர். ஆனால் கனடாவில் மிகப் பெரிய ஆறு வங்கிகளும் வங்கி வணிகத்தின் 85 வீதத்தை செய்கின் றனர். கனடிய வங்கிகளின் நெம்புகோல் விகிதம் அமெரிக்க வங்கிகளினை விட மிக அதிகமானது. Leverage (Assets/ Equity) Ratio (Big Banks) US 9.3, Canada 18.3.

கனடிய வங்கிகளினது நடவடிக்கைகளை அரசு மிகவும் உன்னிப்பாக அவதானிக்கின்றது. குறிப்பாக ஆறு வங்கிகள் 85 வீத வங்கியியலை இயக்கும் பொழுது, இலகுவாக அவ தானிக்க முடியும். கனடிய ஊடகங்களும் இவற்றின் செயற் பாடுகளை ஆய்வு செய்யத்தவறுவதில்லை. Luxembourg Income Study Database-ஐ முன்வைத்து நியு யோர்க் ரைம்ஸ் பத்திரிகை வெளியிட்ட கருத்தில் (Canada has a large - and the world's richest - middle class) உலகின் செல்வந்த மிகப் பெரிய மத்திய வர்க்கம் கனடாவில் உள்ளது எனக் குறிப்பி டுகின்றது. ஏழை - பணக்கார விகிதம் குறைவாக உள்ளது. பல அத்தியாவசிய சேவைகளை அரசே நடத்துகின்றது (கல்வி, சுகாதாரம்). எனவே, வங்கிகள் கனடாவில் இலகு வாக இயல்பாக இயங்க முடிகின்றது.

போர்ப்ஸ் சஞ்சிகை 2023-ம் ஆண்டு இதழில் அமெரிக்கா வின் சிறந்த வங்கிகளின் பட்டியலில் SVB வங்கியின் பெய ரையும் குறிப்பிட்டுள்ளது. வணிக செய்தி இதழ்களின் தவ றான செய்திகளும், பிரச்சார செயற்பாடுகளும் மக்களை தவ றான நிறுவனங்களை நோக்கி செல்லவைக்கின்றன.

1933-ல் ரூஸ்வெல்ட் முதலீட்டு வங்கிகளையும், வணிக வங்கி களையும் வெவ்வேறாக்கி Glass-Steagall Act of 1933 சட் டத்தை அமுல்படுத்தினார். இதே ஆண்டு எப்.டி.ஐ.சி தோற் றுவிக்கப்பட்டது. இதுவே வங்கிகள் வங்குரோத்து நிலைய டையும் பொழுது வாடிக்கையாளர்களுக்கு 250,000 வரை காப்புறுதிப் பணத்தை வழங்கும். 1999-ம் ஆண்டு பில்-கிளின்டன் ரூஸ்வெல்ட்டின் சட்டத்தை மாற்றி வங்கிகள் வணி கம், முதலீடு, காப்புறுதி என அனைத்தையும் செய்யலாம் என மாற்றினார். Glass-Steagall Act of 1933. 2007-2008 காலப் பகுதியில் மூன்று மிகப் பெரிய முதலீட்டு வங்கிகள் வங்கு ரோத்து நிலைக்கு தள்ளப்பட்டன. (Bear Stearns, Merrill Lynch and Lehman Brothers).

2010-ல் ஒபாமாவின் ஆட்சியின் போது 50 பில்லியின் டொலர் களுக்கு மேல் முதலீடு உள்ள வங்கிகள் அனைத்தையும் கண்காணிக்க Dodd-Frank Act சட்டத்தை அமுல்படுத்தினார். இதனை பல சிறு வங்கிகள் விரும்பவில்லை. 2010-ல் இவர் களை திருப்திப்படுத்த உலகின் பிரபல்யமான அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் 50 பில்லியனை 250 பில்லியனாக மாற்றினார். நோபல் பரிசு பெற்றவர்களும் புதிதாக எதனை யும் கூறவில்லை. அரசு வங்கிகளை காப்பாற்ற வேண்டும்.

அமெரிக்க மத்திய வங்கி 2007-ல் இருந்து 2023 வரையிலான காலப்பகுதியில் .9 ரில்லியனிலிருந்து 8.34 ரில்லியன் டொலர்களை வங்கி வணிகத்துக்குள் புகுத்தியுள்ளது. இது 2007-ல் இருந்ததை விட 900 வீதம் அதிகமாகும். பொருளா தார தேக்கம், வட்டி வீதம், வீட்டின் விலை, பொருட்களின் விலை போன்றவற்றை செயற்கையாக தீர்மானிக்கின்றார்கள். இதனால் ஏற்படும் விளைவுகளுக்கு போர், தொற்று நோய் என பல்வேறு காரணிகளை காரணங்களாக சுட்டிக் காட்டு கின்றார்கள். அல்லது புதிய போர்களை உருவாக்குகின் றார்கள். இதன் விளைவுகளில் ஒன்றே அண்மையில் ஏற்பட்ட வங்கிகளின் வங்குரோத்து நிலை. எஸ்.வி.பி வங்கி கலிபோர் னியாவில் உள்ளது. அம் மாநிலம் ஜனநாயக் கட்சியின் கோட்டை. எனவே 250,000-க்கு மேல் முதலீடு வைத்திருந்த வர்களுக்கு பைடன் அரசு மிகுதிப் பணத்தை கொடுக்கும்.

பெரும் நிறுவனங்கள் செய்யும் ஒவ்வொரு பரீட்சார்த்த முறை களும், தவறுகளும் சாதாரண மக்களையே தண்டிக்கும். நிறு வனங்கள் அரசாளாக் கூடாது. அரசு நிறுவனங்களையும் வங்கிகளையும் கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிடில் வங் கிகளின் வங்குரோத்து தொடர்ந்து கொண்டிருக்கும்.



rathan@thaiveedu.com

## ஏட்டில் எழுதிவைத்தார்

# அங்காதிபாதம் 400

திருக்கோணமலை ஈசனை முதலில் போற்றித் தொடங்கும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலான அங்காதிபாதம் 400 என்னும் நூலுக்குரிய பாடல்கள் 124 மட்டுமே எமக்குக் கிடைத்த ஏட்டுசுவடிகளில் உள்ளன. எனினும், நூலினை முழுமைப்படுத்த எண்ணி இந்நூலினைப் பெரிதும் ஒத்திருப்பதும், பராரசசேகரத்தைச் சார்ந்ததாக அறியப்படுவதும், 1936-ம் ஆண்டு ஐ. பொன்னையா என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதும், இன்றுவரை உரை எழுதப்படாமலும் இருக்கும் அங்காதிபாதம் என்னும் பிறிதொரு நூலில் இருந்து மீதிப் பாடல்கள் பெறப்பட்டு உரையுடன் இங்கு தரப்படுகின்றன.

– பாலு. சிவகடாட்சம்

திருக்கோணமலை ஈசனை முதலில் போற்றித் தொடங்கும் ஈழத்துத் தமிழ் மருத்துவ நூலான அங்காதிபாதம் 400 என்னும் நூலுக்குரிய பாடல்கள் 124 மட்டுமே எமக்குக் கிடைத்த ஏட்டுச்சுவடிகளில் உள்ளன. எனினும், நூலினை முழுமைப்படுத்த எண்ணி இந்நூலினைப் பெரிதும் ஒத்திருப்பதும், பரராசசேகரத்தைச் சார்ந்ததாக அறியப்படுவதும், 1936-ம் ஆண்டு ஐ. பொன்னையா என்பவரால் அச்சிட்டு வெளியிடப்பெற்றதும், இன்றுவரை உரை எழுதப்படாமலும் இருக்கும் அங்காதிபாதம் என்னும் பிறிதொரு நூலில் இருந்து மீதிப் பாடல்கள் பெறப்பட்டு உரையுடன் இங்கு தரப்படுகின்றன.

*இயம்பியதோர் வாதமா நாடி தானும்*
*எழும்பியே பித்தத்தின் வீட்டைச் சேர*
*மயங்குபித்த நாடியது மெல்லச் சென்று*
*மன்னுசிலேற் பன வீட்டை மருவிச் சாரத்*
*தியங்குசிலேற் பன நாடி தனது வீட்டைச்*
*சேரவிட்டுக் கண்டமதிற் செல்லு மாகில்*
*வயங்குசெம்பொற் குடமனைய முலைமின் னாளே*
*மறலியூர் தனிற்சென்று வசிப்பர் தாமே 184*

சொல்லப்பட்ட வாதம் என்னும் நாடியானது பித்தத்துக்குரிய இடத்தைச் சேர பித்தநாடியானது தடுமாறி சிலேத்துமத்தின் இருப்பிடத்தைத் தழுவிச்சேர சிலேத்தும நாடியானது எல்லையை நெருங்குமாகில் நோயாளி எமனுலகம் செல்ல நேரிடும் என்பதைத் தூயசெம்பொற் குடம்போன்ற மார்பகங்களை உடைய பெண்ணே அறிவாயாக.

*வசியாம லோடி யிளைத் திட்ட பேர்க்கும்*
*வாகனமா திகளேறி மெலிந்து ளோர்க்கும்*
*பசியாக நெடுநேர மிருந்த பேர்க்கும்*
*பல நாளும் வியாதியினி லழுந்தினோர்க்கும்*
*நசையுண்ட வுடனெண்ணெய் முழுகி னோர்க்கும்*
*நன்னயமாய்க் கீதங்கள் பாடி னோர்க்கும்*
*கசிவான மழை நீரின் முழுகி னோர்க்குங்*
*கடிதான வேலைசெய்து களைகொண் டோர்க்கும்*
*185*

தொடர்ந்து ஓடிக் களைத்தவர்களுக்கும் வாகனங்களில் பயணித்து வாடிப்போனவர்களுக்கும் நெடுநேரமாகப் பசியோடு இருந்தவர்களுக்கும் பல நாட்களாக நோயில் கிடந்து அழுந்துவோருக்கும் விரும்பி உணவு உண்டவுடன் எண்ணெய் முழுக்குச் செய்தவர்களுக்கும் நன்றாகப் பாடல்களைப் பாடினோர்க்கும் கசிந்தொழுகும் மழைநீரில் முழுகிக் குளித்தோர்க்கும் கடினமான வேலைகளைச் செய்து களைத்தோர்க்கும்,

*களையாத கூத்துவிளை யாடினோர்க்குங்*
*கன்னியரைக் கூடியின்பங் களித்து ளோர்க்கும்*
*இழிவான பழிக்கஞ்சி யேங்கி னோர்க்கும்*
*இரவுசயனத்தினிலே துயில்செய் வோர்க்கும்*
*ஒழியாத பேதிகண்டு கழிந்திட் டோர்க்கும்*
*முயர்ந்துகுதித் திட்டறிவு மயங்கி னோர்க்கும்*
*அழிவான மரணந்தான் கிட்டினோர்க்கும்*
*அறிந்திடுவாய் நாடிசம னாகு மன்றே 186*

சலித்திடாமல் கூத்து ஆடினோர்க்கும் இளம்பெண்களைக் கூடி இன்பம் அனுபவித்தோர்க்கும் கேவலமான பழிக்கு அச்சப்பட்டு ஏக்கம் அடைந்தோர்க்கும் இரவில் நித்திரை கொள்வோர்க்கும் விடாத பேதி கண்டு பலமிழந்தோர்க்கும் உயரத்தில் இருந்து குதித்ததால் மூர்ச்சையடைந்தோர்க்கும் சாவு நெருங்கி விட்டோர்க்கும் நாடிகள் தத்தமக்குரிய வேகம் இல்லாது சமனாக இயங்கும்.

*சமனாக வாதபித்த நேராய் நிற்கில்*
*தங்கிய நோ யெட்டுநாள் தன்னில் மீளும்*
*கமனாக மீறியே பதறி யோடிற்*
*கனத்தநோய் வருமெனவே கண்டு கொள்வாய்*
*எமனாக வையமுடன் வாத மீறில்*
*ஈரைந்து நாழிகையில் இடரே செய்யும்*
*திமனாகப் பித்தமது பிசகா தோடில்*
*தீங்கில்லை நெடுநாளில் தீருந் தானே 187*

வாதநாடியும் பித்தநாடியும் ஒரேமாதிரி இயங்கினால் ஏற்பட்டிருக்கும் நோயானது எட்டு நாட்களில் தீரும். வாதமும் பித்தமும் வேகமாகத் துடித்து ஓடினால் கடுமையான நோய் ஒன்று

வரவிருக்கின்றது என்று கண்டு கொள்வாய். சிலேத்துமமும் வாதமும் அளவுக்கு மீறில் பத்து நாழிகைக்குள் (நான்கு மணித்தியாலங்களுக்குள்) நோய்த்துன்பம் ஏற்படும். பித்தம் தனக்கு உரிய கதியில் பிழையில்லாது ஓடினால் தீங்கு வராது. பலநாட்களின் பின்னர் நோய் தீரும்.

*தானென்ற பித்தமுட னையங் கூடிச்*
*சமனாக நடந்திடுகி னோய்க ளரும்*
*தோணவே நாகம்போற் றத்து மாகிற்*
*சுறுக்காகத் தீராது தொந்த மாகும்*
*பேணவே மதயானை போலே நிற்கில்*
*பிடிப்புடனே பலநோய்க ளடுப்ப தாகும்*
*நாணவே சிறுத்தடங்கி யூரு மாகில்*
*நாளொன்றின் மரண மென நாடு வாயே 188*

பித்தத்துடன் சிலேத்துமம் கூடி இரண்டும் சமமாக நடந்தால் நோய்கள் தீரும். பாம்பு போல் தத்துமாகில் நோய் விரைவில் தீராது தொடரும். மதம் பிடித்த யானைபோல் எழுந்து நிற்கில் பலநோய்கள் வந்து சேரும். மெல்லச் சிறுத்து அடங்கி மெதுவாக ஊருமாகில் ஒரு நாளில் மரணம் சம்பவிக்கும்.

*நாடுவாய் பித்தமது கொதித்துப் பாய்ந்து*
*நற்றவளை போனிற்கிற் பயித்திய மாகும்*
*வாடியே புரண்டுமயில் போலே யோடில்*
*வந்தபிணி விரைவாக மாறு மென்க*
*கூடியே திரண்டுநெடுத் தோடு மாகில்*
*கொடியசுரம் வந்துமிகக் கோட்டி செய்யும்*
*ஆடியே மெல்லவசைந் தோடு மாகில்*
*அடங்கிவிடுஞ் சணத்தில் வந்த பிணிக டாமே 189*

பித்தநாடியானது கொதிப்படைந்து தவளைபோல் பாய்ந்து நிற்கில் மனநலக் கோளாறு ஏற்படும். தளர்வடைந்து புரண்டு மயில்போல் ஓடினால் வந்த நோய் விரைவாகத் தீரும். பித்த நாடியின் துடிப்பு அதிகரித்துத் தொடர்ந்து ஓடுமாகில் கடுமையான காய்ச்சல் வந்து மிகவும் துன்பம் தரும். பித்தநாடி மெல்ல அசைந்து ஓடுமாகில் வந்த நோய்கள் குறுகியகாலத்தில் அடங்கிப்போகும்.

*பிணியான சிலேற்பனந்தா னன்னம் போலே*
*பிசகி நடந் திடுகினோய் பிலனாய் நிற்கும்*
*துணிவான காகம்போற் றத்து மாகிற்*
*சுகமில்லை யத்திதனிற் சூடுண் டாகும்*
*தணிவாக வட்டையைப்போ லூரு மாகில்*
*தரிப்பில்லை யமனுலகிற் சார்வ தாகும்*
*அணியான சிலேற்பனத்தின் கொள்கை யீதென்*
*றறிந்திடுவாய் வாகடநூ லடக்க மென்றே 190*

சிலேத்தும நாடியானது ஒழுங்கு தவறி அன்னத்தைப்போல் நடக்குமாகில் நோய் பலமாக நிற்கும். காகம்போல் தத்துமாகில் எலும்பினில் சூடு உண்டாகும். தணிந்து அட்டைபோல் ஊருமாகில் நோய் மாறாது மரணம் சம்பவிக்கும். சிலேத்தும நாடியின் இயல்பு இதுவென்று மருத்துவநூலில் கூறப்படுவதை அறிந்து கொள்வாய்.

*அடங்கியே வாதந்தான் பதறு மாகில்*
*அதிகமாய்ப் பழமலஞ்சிக் காகு மென்க*
*துடங்கியெழு ந்தேநிற்கின் மந்த மாகிச்*
*சுரத்துடனே தீன்மறந்து சுகமின் றாகும்*
*அடங்கியே மெல்லவசைந் தோடு மாகில்*
*வயிற்றெரிப்புப் பலவிதனம் வந்து சேரும்*
*நடுங்கிவிறைத் தேநெடிதாய் நிற்கு மாகில்*
*நாண்மூன்றிற் சன்னிவந்து கூடுந் தானே 191*

வாதநாடி உள்ளடங்கித் துடிக்குமாகில் மலச்சிக்கல் உள்ளது என்பதை அறிக. முதலில் எழுந்து பின் மந்தமாக நிற்கில் காய்ச்சலுடன் உணவு மறந்து சுகயீனம் உண்டாகும். அடக்கத்துடன் மெல்ல அசைந்தோடுமாகில் வயிறெரிவு போன்ற பல துன்பங்கள் உண்டாகும். வாதநாடி நடுக்குற்று விறைத்து நெடுநேரம் நிற்குமாகில் மூன்று நாளில் சன்னி நோய் வந்து சேரும்.

*கூடியே வாதங்கோ பித்தான் மந்தங்*
*கொண்டெழுந்து வாயு தனிற் குமிறி நிற்கும்*
*ஓடியே புழுப்போல வோடு மாகில்*
*உண்மூச்சுப் பிசத்தலிவை தோட மாகும்*
*வாடியே மடங்கிவிர லுள்ளாய் நிற்கில்*
*வாயுவுடன் சுரமடுத்து வருவ தாகும்*
*நாடிதான் பாய்ந்துபுழுப் போல நின்றா*
*நங்கைவயிற் றினிற்கருப்ப மாமென் றோதே 192*

வாதம் கூடியே கோபித்தால் மந்தம் கொண்டெழுந்து மூச்சுத் திணறல் ஏற்படும். வாதம் புழுப்போல ஓடுமாகில் உள்மூச்சு, பிதற்றல் என்னும் தோஷங்கள் தோன்றும். வாட்டத்துடன் விரல் மடங்கி உள்ளே நின்றால் வாய்வுடன் காய்ச்சலும் தொடர்ந்து வருவதாகும். வாதநாடி பாய்ந்து புழுப்போல் நின்றால் பெண் கர்ப்பம் அடைந்துள்ளாள் என்று கூறுவாய்.

*ஓதியவிட் டிலைப்போல வாத நின்றால்*
*உற்றகருப் பம்மூன்று மாத மாகும்*
*பேதியாத் திங்களது பத்து மட்டும்*
*பெலக்காம லுட்பதுங்கி மெல்லப் பாயும்*
*மோதிவெடித் துச்சிதறி வாத மோதின்*
*முந்துசுறோணிதமடவார் வயிற்றிற் றங்கி*
*வேதனைசெய் தேயிடுப்பு வலித்து மாத*
*விடையதனை மறித்துமிகக் குத்துண் டாமே 193*

மூன்று மாதக் கருவைச் சுமந்திருக்கும் பெண்ணின் வாதநாடி விட்டில் பூச்சி போல் துடித்திருக்கும். கர்ப்பம் பத்துமாதத்தை நெருங்கும்போது வாதநாடி வலுவடையாமல் மெல்லப் பதுங்கிப் பாயும். வாதம் பலமாக உதைத்து மோதினால் முட்டையானது பெண்ணில் தங்கி வேதனையுண்டாக்கி இடுப்பு வலித்து மாதவிடாயை மறித்து வாயுக்குத்தை உண்டாக்கும்.

*குத்தியெழுந் தேபாயுங் குதிரை போலக்*
*கோபித்து வாதமது குமிறி நிற்கின்*
*நித்தியமாய்க் குதிரைவலி மூன்று நாளி*
*னேரிட்டு வந்து பொல்லா வருத்தஞ் செய்யும்*
*சத்தியமாய் நாண்மூன்றுக் குள்ளே கொல்லுந்*
*தலைமயிரிற் பேன் போலத் தணித்தே யோடின்*
*மெத்துநா ளில்லையிரு கடிகை தன்னுள்*
*விட்டுயிரை யமனுலகில் விரைந்து போமே 194*

குந்தி எழுந்து பாயும் குதிரை போன்று வாதம் குமுறி எழுந்து நின்றால் மூன்று நாளில் குதிரைவலி வந்து பெருந் துன்பத்தைக் கொடுக்கும். நிச்சயமாய் மூன்று நாட்களுக்குள் மரணம் சம்பவிக்கும். தலைமயிரில் பேன் போல் குறைந்து ஓடினால் ஒரு நாள்கூடச்செல்லாது இரண்டு நாழிகைக்குள் (48 நிமிடங்களுக்குள்) உயிர் பிரிந்துவிடும்.

*விரைவாகப் பித்தந்தான் பெலத்தே யோடில்*
*மிகமூளை தானுருகி வரட்சி காணும்*
*திரைவாகப் புலிபோலச் சீறி நிற்கிற்*
*சிரசு தனிற் கிறுகிறுப்பாய் வற்றுந் தேகம்*
*வரைவாக மந்தித்து நிற்கு மாகில்*
*வன்சுரமாய் மண்டைதனிற் குத்துண் டாகும்*
*நிரையாக விலைப்புழுப்போ னிற்கு மாகில்*
*நீங்காத பிரமேக நெடிதுண் டாமே      195*

பித்தநாடி பலமாக ஓடினால் மூளை சோர்வுற்று வரட்சி ஏற்படும். புலிபோலச் சீறிப் பாய்ந்தோடினால் தலைச்சுற்றும் உடல்மெலிவும் ஏற்படும். பித்த நாடி மந்தமாக நிற்குமாகில் காய்ச்சலும் மண்டைக்குத்தும் ஏற்படும். இலையில் ஊரும் புழுப்போல் தொடர்ந்து நிற்குமாகில் நீடித்து நிற்கும் வெட்டைநோய் உண்டாகும்.

*நெடிதான பிரமேகம் வரட்சி சூடு*
*நீர்க்கடுப்போ டனல்வெக்கை நெருங்கி நிற்கும்*
*கொடிதான பித்தமது மடங்கி யோடிற்*
*கூக்குரலாய்ப் பிதற்றிக்கை கொட்டி யாடிக்*
*கடிதான பயித்தியந்தான் வந்து சேருங்*
*கனத்தபித்த மது திரண்டு நெடுத்தே யோடில்*
*வடிவான மெய்வெதுப்பு மெலிவு நாளும்*
*வந்துமிக நலிவுசெய்யு மங்கை யாளே 196*

நீடித்திருக்கும் வெட்டை நோய், வரட்சி, சூடு, நீர்க்கடுப்பு என்பவற்றுடன் வெக்கையும் சேர்ந்து நிற்கும். கொடிய பித்தமானது அடங்கி ஓடினால் கூக்குரல் இட்டுப் பிதற்றிக் கைகொட்டி ஆடும் பைத்திய நோய் உண்டாகும். பித்தம் திரண்டு நெடிதாக ஓடினால் உடல் வெதுப்பும் மெலிவும் தொடர்ந்து வந்து உடலை நலிவடையச் செய்யும் என்பதை அறிவாய் பெண்ணே.

*மங்கையே சிலேற்பனமா நாடி யோங்கி*
*வலுவாக வேதனித்து நிற்கு மாகில்*
*தங்கியே யிருமலிழைப் புடனே விக்க*
*றான் சேரு மிறுகியே தடித்து நின் றால்*
*தொங்கியே மூச்சுழை பொல்லாக் காசஞ்*
*சுருங்கியே சளிவரண்டு பலவுங் காட்டும்*
*சிங்கியே திரண்டோடிற் பீனி சங்கள்*
*சிரநோய் நீர்ப் பாய்ச்சலிவை வருவ தாமே      197*

பெண்ணே! சிலேத்துமநாடியானது மேலோங்கி வலுவடைந்து தனித்து நிற்குமாகில் இருமல் தொய்வு விக்கல் என்பன சேரும். சிலேத்துமம் இறுகித் தடித்து நின்றால் மூச்சுவிடுதலில் சிரமம் கொடிய காசநோய் என்பவற்றுடன் சளி வரட்சி அடைந்து பல துன்பங்களைக் கொடுக்கும். சிலேத்துமநாடி திரண்டு ஓடினால் பீனிசம், சிரசுநோய், மூக்கு நீர்ப்பாய்ச்சல் என்பவை தோன்றும்.

*வருவது தான் சிலேற்பனத்திற் பலதொந் தங்கள்*
*வந்தாலு மாறாது மடிவே செய்யும்*
*வெருவுறுமச் சிலேற்பனந்தான் கடின மெத்த*
*விதியதுவே யென்ன மறை விரித்துப் பேசும்*
*பெருவாதை தீரவென்றாற் றன்ம தானம்*
*பேணியே சிவபூசை குருவின் பூசை*
*ஒருவாத கன்மத்தை நிவர்த்தி பண்ணி*
*உற்றதவ விரதங்கள் ஒருங்கு செய்யே 198*

சிலேத்தும தோஷம் தொடர்ச்சியாகப் பல நோய்களைத் தருவதாய் இருக்கும். இந்நோய்கள் வந்தாலும் மாறாது கேடு விளைவிக்கும். பயப்படக்கூடிய சிலேத்தும தோஷமானது கடினமானது. இது வருவது பாதிக்கப்படுவோரின் விதி என்று வேதம் விரித்துக் கூறும். சிலேத்தும தோஷத்தால் ஏற்படக்கூடிய வியாதிகள் தீரவேண்டுமென்றால் தரும தானங்களையும் சிவபூசை, குருபூசை என்பவற்றையும் செய்வதுடன் தொடரும் கர்மவினையை நிவர்த்தி செய்வதற்குத் தேவையான தவ விரதங்களையும் சேர்த்துச் செய்வாயாக.



Sivakadadcham@thaiveedu.com





# வசந்தகால வீட்டுப் பராமரிப்பு

- வேலா சுப்ரமணியம்

கடந்தகாலக் கட்டுரைகளில் குறிப்பிட்டது போல் காலநிலைக்கு ஏற்றவகையில் வீட்டைப் பராமரித்து வந்தால் திடீரென ஏற்படும் பாரிய செலவுகளைத் தவிர்த்துக்கொள்ளலாம். அந்தவகையில் குளிர்காலம் முடிவடைந்து கோடைகாலத்தை எதிர்பார்த்து நிற்கும் எங்களுக்கு வசந்த காலத்தில் எந்தவகையில் வீட்டைப் பராமரிக்கலாம் அல்லது கோடைகாலத்திற்கு தயார்ப்படுத்தலாம் என்பது பற்றி குறிப்பிடுவது பொருத்தமானது.

### மரத்தளம் - Deck:

பொதுவாகக் குளிர்காலத்தில் தேங்கிக்கிடந்த பனிப்படிமானங்கள் கரையத் தொடங்கியதும் நீர், மரப்பலகைக்குள்ளேயோ அல்லது மரச் சட்டங்களுக்குள்ளேயோ உட்புகத் தொடங்கலாம். மரச்சட்டங்களில் உரிய எதிர்ப்புத் தன்மையற்றுப் போய்விட்டால் உட்புகும் நீரால் மரம் உரிய காலத்திற்கு முன்னர் உக்கிப் பழுதடைந்து விடும். இக்காலத்தில் நீர்க்கறை, பொருமல் என்பவற்றை அவதானிப்பதன் ஊடாக கோடைகாலம் வரும்போது உரியமுறைப்படி நீர் எதிர்ப்புக்குரிய பூச்சுக்களை பூச (Water Resistent Paint) எம்மைத் தயார்ப்படுத்திக் கொள்ளலாம். அத்துடன் Mold, Moss போன்ற பங்கஸ் பிடிக்காமல் இருப்பதற்காக ஒருதடவை Power Washer உதவியுடன் கழுவியும் விடலாம்.

### குளிரூட்டி - Air conditoner:

குளிரூட்டியைச் சுற்றி சருகுகள், குப்பை கூழங்கள் குவிந்திருக்க வாய்ப்பு உள்ளது. அவற்றைச் சுத்தப்படுத்துவதோடு குளிரூட்டியைச் சுற்றியுள்ள வலைப்பகுதியினை (Net) Garden hose மூலமோ அல்லது Vacum Cleaner-ன் உதவியுடனோ, சுத்தம் செய்து காற்றோட்டம் தடைப்படாதவாறு குளிரூட்டி இயங்கக்கூடிய நிலையை உறுதிசெய்தல் வேண்டும்.

### அத்திவாரம் - Foundation:

பனி உருகி கரைந்தோடும் காலப்பகுதியாகவும் மழைப் பொழிவு அதிகமுள்ள காலமாகவும் இக்காலம் விளங்குவதால் பொதுவாக நிலக்கீழ் அறையில் தண்ணீர் உட்புகும் இடர் இக்காலத்தில் தான் அதிகமாக இருக்கும். எனவே, மயிரளவு (Hairline Crack) வெடிப்பினாற்கூட தண்ணீர் உட்புகும் வாய்ப்பு இருப்பதால், நிலைமை மோசமாகுமுன்னர் சற்று கூர்ந்து அவதானித்தால் உரிய நடவடிக்கைகளை ஆரம்பத்திலேயே எடுத்துவிடமுடியும்.

### வாகனக் கொட்டகைக் கதவு:

வாகனக் கொட்டகைக் கதவு திறப்பதற்குப் பொதுவாக மோட்டர்கள் பொருத்தப்பட்டிருக்கலாம். அதன் தொடர்பைத் துண்டித்துவிட்டு கையால் கதவை ஒரு தடவை திறந்து பார்த்து, கதவு தடைகளின்றி இலகுவாக திறந்து மூடுகிறதா என்பதை உறுதி செய்து கொள்ளுங்கள். தடைகள் இருந்தால் over head spring-ஐ சரிசெய்ய வேண்டிய தேவை இருக்கலாம். அத்துடன் உரிய முறையாக வேலை செய்கின்றனவா? என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ளுங்கள்.

### தண்ணீர் பீலிகள் - Gutters:

அடைபட்டு இருக்கக்கூடிய பீலிகளை நன்கு சுத்தம் செய்து இலகுவில் நீர் வழிந்தோடும் தன்மையை உறுதி செய்தல் வேண்டும். அத்துடன் கீழ் நோக்கி விழும் குழாய்கள் (Downspout) உரிய முறையில் நீரை வெளியேற்றுகிறதா? என்பதையும் அவதானித்தல் நல்லது. முக்கியமாக அதன் அடியில் பொருத்தப்பட்டிருக்கும் Leader pipes அடைக்காதிருக்கின்றதா என்பதை உறுதி செய்வதோடு நீர் நேரடியாக அத்திவாரத்திற்கு அடியில் உட்புகாதவாறு பார்த்துக்கொள்ளல் வேண்டும். குறிப்பாக அத்திவாரத்தில் இருந்து 5 அடிக்கு வெளியே நீர் சென்றடையும் விதத்தில் அவை பொருத்தப்பட்டிருப்பது சாலவும் சிறந்தது.

### கூரை - Roof:

Chimney, Skylight-ஐ அண்டிய பகுதிகளில் நீர்க்கசிவு ஏற்படலாம். இக்காலப்பகுதியில் Attic ஊடாக நீர்க்கசிவுக்கான அடையாளங்களை இலகுவாகக் கண்டுகொள்ளலாம். பொதுவாக 15-20 வருடங்களுக்கு கூரையில் போடப்பட்டிருக்கும் Shingles நின்றுபிடிக்கும் என்றாலும், காற்று மற்றும் புறக்காரணிகளால் பழுதடைந்துள்ள அல்லது இடைவெளியாக உள்ளவற்றை பழுதுபார்ப்பது அவசியம்.

### மரங்கள்:

வீட்டைச் சுற்றி மரங்கள் இருப்பது ஆரம்பத்தில் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் காலப்போக்கில் அதுவே பெரிய பிரச்சினை ஆகிவிடும். வளர்ந்த மரங்கள் கூரையையோ, யன்னல்களையோ தாக்கி சேதங்களை உண்டு பண்ண வாய்ப்பு இருக்கின்றது. கொப்புகள் வளர்ந்து பாரம் ஏறமுதல் அவற்றை கத்தரிப்பதற்குரிய சிறந்த காலம் இதுவே. மரங்கள் அளவுக்கு அதிகமாக வளர்ந்திருந்தால் அதற்குரிய



தொழில்சார் வல்லுனர்களை நாடுவதே சாலவும் சிறந்தது.

### வாகனப்பாதை - Driveway:

வாகனப்பாதைக்கு குளிர்காலத்தில் உப்பால் குளிப்பாட்டி இருப்போம். இந்த வருடம் அவ்வளவாக இல்லாவிட்டாலும் போட்ட உப்பு தங்கி இருந்து அதற்குரிய பணியைச் (அரிப்பு) செய்து கொண்டே இருக்கும். Asphalt, Inter-lock, congrete என்று எந்த வகை வண்டிப் பாதையாக இருந்தாலும் இக்காலப் பகுதியில் Power washer உதவியுடன் முதலாவது வேலையாக வண்டிப் பாதையை நன்றாகக் கழுவி உப்



பின் தன்மையை இல்லாது செய்தல் வேண்டும்.

குறிப்பாக Inter Lock உள்ளவர்கள் கல்லின் இடைவெளிகளில் பூண்டுகள் முளைப்பதை அவதானிக்கலாம். எனவே அவை முளைக்க முன்னர் அதனைத் தடுக்கக்கூடிய விதத்தில் உரிய மண்ணைப் போட்டு (Brush stone dust) பாதுகாக்கலாம். Congrete வாகனப்பாதையாக இருந்தால் இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறையாவது அதனை Seal பண்ணத் தவறக்கூடாது. Asphalt வாகனப் பாதையாக இருந்தால் இருக்கக்கூடிய வெடிப்புகளை, அடைத்த பின்னர் நல்ல வெப்பமான காலநிலை வரும்போது இரண்டு வருடத்திற்கு ஒருமுறையாவது Seal பண்ணத் தயாராதல் வேண்டும்.

### கவனத்தில் கொள்ளவேண்டிய மேலும் சில...

- வெப்பமாக்கியுடன் பொருத்தப்பட்டிருக்கும் ஈரப்பதனாக்கியை (Cenral humidifier) முற்றாக நிறுத்தி விடுங்கள்.
- வெப்பமாக்கிக்கோ (Furnace), Fire place-க்கோ முதன்மை விளக்குகள் (Pilot Lamps) பொருத்தப்பட்டிருந்தால் அவற்றை நிறுத்தி விடலாம்.
- வெளி வளவிற்கோ அல்லது முன்வளவிற்கோ (Back Yard & Front Yard) போகும் குழாய்களின் நீரை நிறுத்தி இருந்தால் (Shut Off) அவற்றைத் திறந்துவிடலாம்.
- 3 மாதத்துக்கு ஒருமுறை வெப்பமாக்கிக்குரிய வடிகட்டியை (Filters) மாற்றிவிடவேண்டும் என்ற அடிப்படையில் அதனையும் உறுதி செய்து கொள்ளுங்கள்.
- யன்னல்களுக்குரிய வலைகளைச் (Net) சுத்தப்படுத்தி அல்லது அவசியம் ஏற்பட்டால் பிரதியீடு செய்து தயார்ப்படுத்திக் கொள்ளல் வேண்டும்.
- தண்ணீர் வெளியேற்றத்திற்குரிய வெளிப்புறப் பாதைகள் அடைபட்டிருந்தால் அவற்றை சுத்தம் செய்தல் வேண்டும்.
- பூக்கன்றுகள், காய்கறி வைப்பவர்கள் மண்ணைத் தயார் செய்து தேவை ஏற்பட்டால் பசளைகளைப் போட்டு தமது பணிகளை ஆரம்பிக்கலாம்.



velasubramaniam@thaiveedu.com

# வதிவிடக் காப்புறுதி

– செந்தூரன் புனிதவேல்

உங்கள் மிக உயர்ந்த சொத்து உங்கள் வீடும் உடமைகளும் ஆகும். எனவே அவற்றைக் காத்துக் கெள்வது உங்கள் தலையாய பொறுப்பு.

சொந்தமாகவோ, வாடகைக்கோ உங்கள் வீடு அல்லது அடுக்குமாடி கூடம் எதுவானாலும் அவற்றில் அனர்த்தத்தால் ஏற்படும் அழிவுகளின் இழப்பை ஈடுசெய்ய உங்கள் வீட்டுக் காப்புறுதி உதவும்.

ஒன்டாரியோ மாகாணத்தைப் பொறுத்த வரையில் வீட்டு வாடகைக் காப்புறுதிகள் சட்டப்படி பெற்றிருக்க வேண்டும் என்பதில்லை. ஆனால் வங்கிகளும் கடன் கொடுப்பவர்களும் காப்புறுதி இருக்கிறதா என கவனித்த பின்புதான் கடன் கொடுப்பார்கள். வடகை வீட்டு உரிமையாளர்களும் தமது வாடிக்கையாளர் உடமைகளுக்கு காப்புறுதி உள்ளதா என அவதானித்துத் தான் வாடகைக்கு விடுவார்கள். அதே போன்றே அடுக்குமாடி உரிமையாளர்களும் காப்புறுதி உள்ளதா? என அவதானித்த பின்பே குடியேற அனுமதிப்பார்கள்.

இங்கு வெவ்வேறு வகையான பல வீட்டுக் காப்புறுதிகள் உள்ளன. அவற்றைச் சற்று விரிவாக தனித்தனியாகக் கவனிப்போம்.

## வீட்டுக் காப்புறுதி:

இவைகள் தனியார் வீடுகளைக் காப்புறுதி செய்யும். வீடு வாங்குபவர்கள், தமது வீட்டையும், உடமைகளையும் இழப்புகளில் இருந்து காப்புறுதி செய்வதுடன் பொறுப்புடமை (Liability)-யையும் ஈடு செய்யும். ஒரு சராசரி வீட்டுக் காப்புறுதியானது, களவு மற்றும் புயல், வெள்ளம் போன்றவற்றால் வரும் இழப்புகளை ஈடுசெய்யும்.

வீட்டு உரிமையாளர் காப்புறுதி பெறுவதில் கவனிக்க வேண்டிய விடயங்கள்:

ஒரு வீட்டுக்கு உரிமையாளராய் இருப்பவர் பெருளாதாரகாவலராகவும் பாதுகாவலராகவும் இருக்க வேண்டும். ஒரு வீடு இருந்தால் கிரமமாக பல விடயங்கள் செய்யவேண்டிய தேவைகள் இருக்கும். பராமரிப்பு வேலைகள் இருக்கும். வீடுகள் பொறுப்புடன் பராமரிக்காவிடில், உங்கள் காப்புறுதி அமைப்பு காப்புறுதி ஒப்பந்தத்தை இரத்து செய்ய முடியும் அல்லது வருடக் கடைசியில் புதுப்பிப்பதற்கு மறுக்கவும் முடியும்.

## வீட்டு பராமரிப்பில் கவனிக்க வேண்டிய விடயங்கள்:

கூரையின் தராதரத்தை கவனமாக கவனியுங்கள். கூடியது, இருபது வருடங்களுக்கு ஒருமுறை கூரையை புதுப்பிக்காவிடில் கூரை ஒழுகத் தொடங்கும், இதனால் உங்கள் பொருட்களுக்கு பழுது ஏற்படுவதுடன் அத்திவாரமே ஆட்டம் காணலாம்.

சுவர்களில் ஏற்படும் வெடிப்புகளையும் பழுதுகளையும், உடனே திருத்திவிடுங்கள். சுவர்கள் சுகமாக இருப்பின் வீடு குளிராமல் இருக்கும். சிறு வெடிப்புகள் காலப்போக்கில் வீட்டையே ஆட்டம் காண வைக்கும். சிறு வெடிப்புகள் அத்திவாரம் பழுதடைவதால் பெரும்பாலும் ஏற்படுகிறது. தக்கதொழில் வல்லுனருடன் தொடர்புகொண்டு அவற்றைத் திருத்திக் கொள்வதவசியம்.

கூரையின் நீர் வடி குழாய்கள், வாய்க்கால்கள் இலையுதில் காலத்தில் அடைபடாவண்ணம் துப்பரவு செய்தல் மிக அவசியம். அந்தத் தருணத்தில் தவறவிட்டலும் இலைதுளிர் காலத்தில் ஒன்ராறியோவில் அதிகம் மழை பெய்வதனால் அக்காலத்தில் மழை நீர் வடியும் குழாய்கள் துப்பரவாக இருக்கக் கவனித்துக் கொள்ளுங்கள்.

கழிவு நீர் குழாய்களை பராமரிப்பது மிகவும் முக்கியமான ஒரு விடயமாகும். கழிவு நீர்க் குழாய்கள் அடைபடுவதால் பெரும் நஷ்டம் ஏற்படுவது உண்டு. முக்கியமான விடயமாக பொரித்த எண்ணையை சமையலறையில் கொட்டுவதால் குழாய் அடைபடுவது சகஜம். காப்புறுதி செய்தவரான நீங்களே கழிவு நீர் குளாய் அடைப்புக்கு காரணமாய் இருந்தீர்கள் என்றால் உங்கள் கேட்பனவு மறுக்கப்படலாம் என்பதனை மறக்க வேண்டாம்.

## அடுக்கு மாடிக் காப்புறுதி (Condo Insurance):

நீங்கள் வசிக்கும் கட்டடத்திற்கு ஒரு காப்புறுதி இருப்பினும்



அடுக்கு மாடிக் காப்புறுதியானது, உங்கள் மனையின் உள்ளே உள்ளவற்றையும், உங்கள் பொறுப்புடமை (Liability) இழப்புகளையும் ஈடு செய்யும். அது அடுக்கு மனை உரிமையாளரால் பெறப்பட வேண்டும். இங்கு பொறுப்பு டமை என்பது உங்கள் கவலையீனத்தால் ஏற்படும் இழப்பு களை ஈடுசெய்வதற்காகும்.

ஒரு அடுக்குமனை கட்டடக் காப்புறுதி தங்கள் உடமைகளை காப்புறுதி செய்யும் எனச் சிலர் தவறாக எண்ணுவ துண்டு. அக்காப்புறுதி கட்டடத்துக்கு ஏற்படும் இழப்புகளை யும் பொது இடங்களான படிக்கட்டுகள், கூரை, நீச்சல் தடாகம் நடைக்கூடம் அகியவற்றைத்தான் காப்புறுதி செய்யும். அது மட்டுமல்லாமல் அத்தகைய இழப்பிற்கு நீங்கள் தான் காரணமாய் இருப்பின் உங்களிடமிருந்து அறவிடவும் செய் யும். அத்துடன் அடுக்குமனைக் காப்புறுதிக் கட்டணத்தை உங்களிடம் இருந்து பெறப்படும் பராமரிப்புத் தொகை மூலமே செலுத்தப்படுகிறது.

பொதுவாக அக்காப்புறுதி உங்கள் சொந்த குடியிருப்புப் பகுதியில் ஏதும் இழப்பு ஏற்பட்டால் அதற்கு நஷ்டஈடு கொடுக்காது என்பதுடன் உங்கள் தவறால் வேறு யாராவது குடியிருப்பாளருக்கு நஷ்டம் வரின் அதை ஈடு செய்து பின் உங்களிடமிருந்து அறவிடுவார்கள். அத்தொகையை உங் கள் தனிப்பட்ட அடுக்கு மனைக் காப்புறுதிதான் ஈடு செய் யும்.

அடுக்கு மனைக்காப்புறுதி இடத்துக்கு இடம் வேறுபடுவ துண்டு. இதனால் நீங்கள் அடுக்கு மனையில் ஒரு வீடை வாங்கும் வேளையில் பொதுக் காப்புறுதியையும் கேட்டுப் பெற்றுக்கொள்ள உரிமையுண்டு. அதனைக் கவனமாக வாசித்து அதற்கு ஏற்றபடி உங்கள் சொந்தக் காப்புறுதி யைப் பெற்றுக்கொள்ளுங்கள். சில அடுக்குமனை கூட்டுத்தா பனம், நீங்கள் ஒரு குறிப்பிட்ட தொகைக்கு காப்புறுதி செய்ய வேண்டும் என விதிகள் வைப்பது விதிப்பதுமுண்டு.

இவற்றை உங்களால் வாசித்து விளங்கிக் கொள்ள முடியாத வேளையில் நீங்கள் உங்கள் காப்புறுதி முகவருடைய உத வியை நாடலாம்.

## வாடகையாளர் காப்புறுதி:

இது அடிப்படையில் உடைமைகளுக்கான காப்புறுதியாகும். அதாவது எங்கு வசித்தாலும் அந்த வதிவிடம் அவர்களு டைய உடமை அல்ல. அதே வேளை பொறுப்புடமை (Liability) இழப்புகளையும் ஈடுசெய்யும். இந்த வாடகையாளர் காப்புறுதி, உதாரணத்திற்கு நீங்கள் சமைக்கும் போது தீப் பற்றி எரிந்து வீட்டிற்கு ஏற்படும் இழப்புகளை இக்காப்புறுதி ஈடு செய்யும். அது மட்டுமல்ல அந்தத் தீ அடுத்த வீட்டிற்கு பரவினால் அதற்கும் நீங்கள் பெறுப்பாதலால் அதனையும் ஈடுசெய்யும்.

வாடகையாளர் காப்புறுதி உங்கள் வீட்டிற்கு வந்த விருந்தி னர் குறுக்காக இருந்த ஒரு பொருளில் தடக்கி விழுந்தால் அவருக்கான வைத்தியச் செலவு போன்றவைக்கு நீங்கள் பொறுப்பு என்பதனால் அதனையும் ஈடுசெய்யும் எத்தகைய காப்புறுதி எடுப்பதானாலும் ஒரு காப்புறுதி முகவருடன் விளக்கமாக கதைத்து காப்புறுதியை பெறுவது தான் சிறப்பு. நீங்கள் பெறும் காப்புறுதி தேவையான போது பயன் தர வேண்டும்.

உங்கள் இல்லம் சிறப்புற வாழ்த்துகிறேன்.



senthuran.p@thaiveedu.com

# பெருந்தன்மை : கருணையின் ஒரு குரல்

**– சி. நற்குணலிங்கம்**

பெருந்தன்மை என்பது தாராள மனப்பான்மை. இது துல்லியமாகச் சுயநலமின்மை மற்றும் உண்மையான பரோபகாரத்தை அடிப்படையாகக் கொண்டது. இதில் அர்ப்பணிப்புக் காணப்படும். நமது உள்ளங்களில் எண்ணங்களும் மற்றவர்கள் குறித்து நல் உணர்வுடனும், நல்ல மனநிலையிலும் இருக்கும் தன்மை பெருந்தன்மையாகும். இது உங்களால் முடிந்ததைவிட அதிகமாகக் கொடுப்பது, பெருமை என்பது உங்களுக்குத் தேவையானதைவிடக் குறைவாக எடுத்துக் கொள்வது. பெருந்தன்மை என்பது யாரையும் குறைசொல்லாமலும், எதிர்பார்ப்புடன் உதவி செய்யாமலும், முன்விட்டு பின்புறம் பேசாமல் இருப்பதும், மனதாரப் பாராட்டுவது! தட்டிக்கொடுத்து வேலை வாங்குவது! பிரியத்துடன் விட்டுக் கொடுத்து வாழ்வது. இது பலருக்கும் உதவுவது, அறியாமல் செய்யும் பிழை பொறுப்பது, சிலவற்றைத் தெரிந்தும் தெரியாததுபோல் நடிப்பது, சிலவற்றை அறிந்ததும் பாராட்டுவது, பலவற்றைக் கண்டும் காணாமல் இருப்பது, தன்மை அறிந்து மறுப்பது, தன்மை அறிந்து கொடுப்பது, எதையும் பெரிதுபடுத்தாமல் மன்னிக்கும்தன்மை ஆகும்.

'பிறர் தன்னை உயர்த்திப் பேசும்போது நாணுதலும், தன்னை விரும்பாதவர் இகழ்ந்து பேசும்போது பொறுத்துக் கொள்ளலும், பிறர்க்கு கைமாறு கருதாமல் உதவி செய்வதும் பெருந்தன்மையாகும். மனித குணங்களுள் பெருந்தன்மை சிறப்புப் பெறுகிறது. பெருந்தன்மை கருணையின் ஒரு குரல். இது ஒரு நபருக்கு இருந்தால் தாராளமான இதயம். இதன் பொருள் அவர் மற்றவர்களுக்காக எதையும் விட்டுவைக்கவில்லை, விருப்பத்துடன் தனக்குரியதை அடுத்தவருக்குக் கொடுக்கிறார், பிரச்சினையில் உதவுகிறார் எனக் கொள்ளலாம். தாராள இதயமாக இருப்பது என்பது ஒருவருக்கு ஒருவர் இணக்கமாக வாழமுடியும் மற்றும் வாழத்தயாராக இருக்க வேண்டும் என்பதாகும். ஒருவரிடம் இருந்து நீங்கள் பொருளை, செல்வத்தை, மதிப்புப் போன்றவற்றைப் பெற்றிருந்தால் அதை தாராளப் பரிசு என அழைக்கலாம். அவருக்குத் தாராளமான கை, தாராளமான மனம் எனவும் கூறலாம்.

*'ஒத்தது அறிவான் உயிர் வாழ்வான்*
*மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்'*

உலகியலை உணர்ந்து எளியவர்க்கு உதவுபவரே உயிர் உள்ளவர். உதவாதவர் பிணத்திற்குச் சமமானவர் என்கிறார் வள்ளுவர்.

தன்னைச் சுற்றி உள்ளவர்களுக்காக ஏதாவது செய்யும் ஒருவர் கொஞ்சம் மகிழ்ச்சியாகவும், சகிப்புத்தன்மையுடனும், கனிவாகவும் இருப்பார். அவரது வாழ்க்கை படிப்படியாகப் புதிய அர்த்தத்தால் நிரப்பப்படுகிறது. புதிய அம்சங்கள் அதில் திறக்கப்படுகிறது. பெருந்தன்மை என்பது உலகின் ஒரு குறிப்பிட்ட பார்வை. ஒருவரின் சொந்தப் பிரச்சினைகள் மற்றும் அன்றாடத் துன்பங்களில் இருந்து விலகும் திறன். எல்லோருக்கும் சிரமங்கள் உள்ளன. ஆனால் என்ன நடக்கிறது என்பதற்குப் பொறுப்பேற்க, அவருடைய வாழ்க்கையின் எஜமானராக ஆவதற்கு எல்லோரும் உண்மையில் தயாராக இல்லை. மற்றவரது அனுபவங்களில் அலட்சியமாக இல்லாத ஒரு நபர் உண்மையில் உதவி தேவைப்படும் ஒருவரிடமிருந்து ஒருபோதும் விலகமாட்டார். பெருந்தன்மை என்பது ஒருவரின் இயல்பான தேவை. இது நன்மை செய்ய விரும்புகிறது. துரதிஷ்டவசமாக பலர் இதை உணர்வதில்லை. எனவே அவர்களின் உண்மையான இயல்பிலிருந்து தப்பிக்க முயற்சி செய்கிறார்கள்.

உங்கள் சொந்தப் பிரச்சினைகள் மீதான ஆவேசம் பெரும்பாலும் உங்கள் சிறந்த குணநலன்களைக் காட்ட உங்களை அனுமதிக்காது. தேவைப்படுபவர்களுக்கு உதவுவதை இலக்காகக்கொண்டு ஒரு நபர் உண்மையில் தனக்குள்ளேயே அர்த்தமுள்ள வாய்ப்புக்களைத் திறந்து தனது திறனை வளர்த்துக்கொள்கிறார். பெருந்தன்மையாக இருப்பது என்பது, உலகத்தை வெளிப்படையாகப் பார்ப்பது. எல்லா வகையான முகமூடிகளையும், பாசாங்குகளையும் கைவிடுவதாகும். தனக்குள்ளேயே இரக்கம்காட்டும் விருப்பத்தை வெளிப்படுத்துவதாகும். பெருந்தன்மையை யாரும் பணம் கொடுத்து வாங்க முடியாது. எனவே இது உண்மையான செல்வம். இது சுயநலத்தை முழுமையாக மறுப்பதுடன், செயல்கள் மற்றும் எண்ணங்களால் உறுதிப்படுத்தப்படுகிறது. இதற்கு வெகுமதி மரியாதை, பாராட்டு. நன்றி தேவை இல்லை. பெருந்தன்மை மனப்பான்மை மனதை வெல்லும்.

நீங்கள் எதையாவது கொடுத்திருக்கிறீர்கள், நல்லவை செய்

திருக்கிறீர்கள் என்ற மகிழ்ச்சியைக் கொடுப்பதும், உணருவ
தும் பெருந்தன்மை மனப்பான்மையின் சிறந்த பண்பாகும்.
உங்கள் இதயத்திலிருந்து உண்மையான, நேர்மையான
பெருந்தன்மையைக் காட்ட முயற்சியுங்கள். பெருந்தன்மை
யைப் புரிந்துகொள்ள ஏழையாக இருக்க வேண்டும் என்பார்
கள். ஒரு ஏழையின் பெருந்தன்மை ஆன்மீகப் பெருந்தன்மை
என்பர். பெருந்தன்மை உடையவர்களாக இருக்கவேண்டும்
எனில் எல்லோரிடமும் அன்பாக இருக்கவேண்டும், பொருள்
ரீதியாக மட்டுமன்றி இதயத்திலும், மனதிலும் அனைவரிட
மும், எப்பொழுதும் நல்ல உணர்வுடன் இருக்கவேண்டும்
என்பதே இதன் பொருள். எதைப் பற்றியும், எவரைப் பற்றி
யும் மனதில்கூட ஒருபோதும் தீய எண்ணங்கள் இருக்கக்
கூடாது. இவர்கள் எப்போதும் மற்றவர்களது சந்தோஷத்தி
னால், மகிழ்ச்சியினால் தாங்களும் சந்தோஷமாகவும், மகிழ்ச்
சியாகவும் இருப்பார்கள். அனைவரிடமும் சுமுகத்துடனும்,
கனிவுடனும் அணுகுவார்கள்.


பெருந்தன்மை பெரும்பாலும் துன்பங்களை முடிவுக்குக்
கொண்டுவரக்கூடியது. யாரும் செய்யும் தவறை புரிந்து
தாண்டிச் செல்வர். மனதைப் புண்படுத்தமாட்டார்கள்.
பாதிப்பை ஏற்படுத்தமாட்டார்கள். ‘அகழ்வாரைத் தாங்கும்
நிலம்போலத் தம்மை இகழ்வாரைப் பொறுத்தல் தலை’
வாழுகின்ற இந்தப் பூமியை ஆழமாகத் தோண்டுகின்றோம்,
அகலமாக வெட்டுகின்றோம் ஆயினும் அது தாயாக நம்
மைத் தாங்கிப் பாதுகாக்கிறது. அதுபோல நாமும் நம்மைத்
திட்டுவோரை, தாக்குவோரைப் பொறுத்துக்கொள்ள வேண்
டும். அதுவே சிறப்பாகும் என்கிறது வள்ளுவம். இவர்கள்
மகான்களாக மதிக்கப்படுவார்கள்.

யாரைப்பற்றியும் மனத்தாலும், எண்ணத்தாலும் தீய எண்ணங்
களை மனதிலிருந்து அகற்றுவதே பெருந்தன்மையின் அடை
யாளமாகும். பெருந்தன்மை ஒரு சுவற்றில் அடித்த பந்து
போல. அதை உங்கள் பகைவர்களிடமும் காட்டலாம். அது
நிச்சயமாகத் திரும்பிவரும். உங்களுக்குத் தேவை பொறு
மைமட்டுமே. பெருந்தன்மை நமக்குப் பலமான மனவலிமை
யையும், பல நன்மைகளையும் தருகிறது. மனிதரே மனித
ருக்கு முதன்மையான எதிரியாகவுள்ள இக்காலத்தில், குழந்
தைகளுக்கு இதன் முக்கியத்துவம் புரியப்பட வாய்ப்பளிக்
கப்பட வேண்டும். மரங்களின் வாழ்க்கைக்கு அடித்தளத்தை
வேர்கள் உருவாக்குகின்றன. குழந்தைகள் தங்கள் குழந்
தைப் பருவத்திலிருந்தே மிகவும் கவனத்துடன் தூய்மையான
பழக்கங்களோடு தூய்மையாக வளர்க்கப்பட வேண்டும்.
பெருந்தன்மை பெரும்பேற்றைத் தரும். மனித மனங்களில்
குடிகொண்டிருக்கும் குணநலன்களில் உயர்வான நற்குணம்
பெருந்தன்மையாகும்.

பெருந்தன்மை வெளிப்பட்ட நேரம் பேரன்பு மலரும். பெருந்
தன்மை என்பது கண்டும் காணாமல் இருப்பது. நாம் எவ்வ
ளவு அளித்தோம் என்பதில்லை, அதை எப்படி அளித்தோம்
என்பதில்தான் அடங்கி உள்ளது பெருந்தன்மை. மற்றவர்க்கு
உதவியதைக்கூடச் சுட்டிக்காட்டாமல் இருப்பதும் பெருந்தன்
மையே. நம்மை வேண்டாம் என்று ஒதுக்கியவர்களுக்கு நல்ல
வாழ்க்கை அமையவேண்டும் என மனதார நினைப்பது. பிரி
யத்தைக் கொடுத்து பிரியாதொரு கண்ணீர்த் துளிகளைப்
பரிசாக வாங்குவார்கள். ‘இடன்இல் பருவத்தும் ஒப்புரவிற்கு
ஒல்கார் கடன்அறி காட்சியவர்’ தனது செல்வம் குறைந்த
காலத்திலும் உதவும் மனம் உடையவர் உதவி செய்யும்
ஈகைக் குணத்தை விடமாட்டார்கள் என்கிறார் வள்ளுவர். ‘புத்
தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே ஒப்புரவின் நல்ல
பிற’ இந்தப் பூமியில் ஆகட்டும், வான உலகத்தில் ஆகட்
டும் மற்றவர்க்கு உதவுவதுபோல் நல்ல செயல் இல்லை
எனும் வள்ளுவர் வாக்கு, பெருந்தன்மையாளர்களுக்கு மிக
வும் பொருத்தமானதாகும். மற்றவர்க்குக் கொடுப்பதைப்பற்றி
அதிகம் சிந்திக்கத் தேவையில்லை. செல்வம் குறையாது.
‘இறைத்தொறும் ஊறும் கிணறு’ என்பது பழமொழி. இறைத்த
கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும் என்பதையும்
நினைக்கவும்.

தவறான வார்த்தைகளுக்குத் தண்டிக்காமல் விடுவது, துரோ
கிகளைக்கூடத் துன்புறுத்தாது விடுவது, விட்டுக்கொடுத்ததை
வெளியில் சொல்லாதது, நம் முதுகின் பின் விமர்சனம் செய்
யும் பலரையும் தூக்கி எறியாமல் ‘நீரறிந்தது அவ்வளவுதான்’
என்ற புரிதலோடும், புன்சிரிப்போடும் கடந்து செல்லல், மன்
னிப்போடு மறப்பது, பெருமை விடுத்து, பொறாமை
அறுத்து, நீங்கள் பெரிதும் நேசிக்கும் ஒன்றை பிறர் மகிழ்ச்
சிக்காக விட்டுவிடுவது, ஆணவம் கலைந்து, ஆத்திரங்கள்
மறந்து மனங்கொண்டு நிறைந்தும் இருந்துவிடும் நற்குணமே
பெருந்தன்மை. வேண்டாம் என்று அடிக்கடி சொல்லத் தெரிந்
தவர்க்கு மட்டும் உரியது பெருந்தன்மை. இறக்கப்போகி
றோம் என்று தெரிந்ததும் மற்றவர் உயிரைக் காப்பாற்றிட
அவர்கள் செய்யும் உடல் உறுப்புத்தானம், பாரபட்சம் பார்க்
காதமனம், உன்னத புரிதலுக்கு உள்ளான ஒருவித தர்மம்,
வற்றிய பின்னும் கொடுக்கத் துடிக்கும் கரங்களிலும் உண்டு
பெருந்தன்மை.

பெருந்தன்மை இருந்தால் அது நற்பண்புகளை அழகாகப்
பிரகாசிக்கும். நற்பண்புகளில் அழகிருந்தால் அது இல்லத்
தில் இணக்கமுடன் வாழத்தூண்டும். எதற்கும் நல்ல மனப்
பாங்கற்ற விரோதிகளை அணைத்து வைத்திருக்கக் கூடாது.
‘பொறாமை, பேராசை, கோபம், பிறர் மனம் புண்படும்படி
நடத்தல் நான்கும் உன் விரோதிகள்’ என்றார் பெர்னாட்ஷா.
நாம் வாழ அதிக நாட்கள் இல்லை. மற்றவர்களுக்கும் பிடித்
தமாதிரி வாழ்ந்து பார். மயிலைப்போல் மகிழ்ச்சியாக இருக்
கலாம், மனத்தூய்மையாக வாழலாம். ‘நாம் இன்று இப்படி
இருப்பதற்கு நாமே பொறுப்பு. இனி எப்படி இருக்க வேண்
டும் என்று விரும்புகிறோமோ அப்படி நம்மை செய்துகொள்
வதற்கான ஆற்றலும் நம்மிடமே உள்ளது’ என்கிறார் விவே
கானந்தர். கருணை இருந்தால் வள்ளல் ஆகலாம், கடமை
இருந்தால் வீரர் ஆகலாம். பெருந்தன்மையாக நடப்பதைவிட
ஆற்றல் மிக்க ஆயுதம் வேறில்லை.



natkunalingam@thaiveedu.com

# கட்டடக் காடுகளால்...



## - வேதநாயகம் தபேந்திரன்

வளங்கள் கொட்டிக் கிடக்கும் இலங்கைத் திருநாடு மீள எழும்ப முடியாது எனக் கூறப்படுமளவுக்கு கடனில் மூழ்கி உள்ளது. இதனைக் கூட உழைத்து நிமிர்த்தி விடலாம். ஆனால் வகை தொகையின்றி இயற்கை வளங்களை அழிக்கும் நடவடிக்கை காரணமாக விரைவில் ஏற்படவுள்ள இயற்கை அழிவு, புதிய வடிவிலான பொருளாதாரச் சிக்கல்கள் ஆகியவை முகம் கொடுக்க முடியாத அளவுக்கு நெருக்கடியை ஏற்படுத்தப் போகின்றது.

எமது நாட்டின் எந்தப் பிரதேசம் என்றாலும் பெருந்தெரு வழியாகப் பயணம் மேற்கொள்ளும் போது இரண்டு கரைகளையும் நோட்டம் விட்டுப் பாருங்கள். மரங்கள் வேகமாக அழிக்கப்பட்டுக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருவதைப் பார்க்கலாம்.

பயிர் செய்யும் நிலங்கள் கட்டடங்களால் நிறைகின்றன. வீடுகளாகவோ, கடைகளாகவோ, தொழிற்சாலைகளாகவோ தான் கட்டடங்கள் அமைகின்றன. பயிர்செய் நிலங்கள் கட்டடங்களாக மாறிப் பணத்தை வழங்குகின்றன.

பணத்தை உண்டு உயிர் வாழ முடியாது. ஏனெனில் பணம் என்பது வெறுமனே ஒரு காகிதத்தாள் தான்.

இந்தக் காகிதத் தாளை அதிகம் சேர்ப்பதற்காக இடைவிடாது ஓடுகின்றோம். பணத்தைக் கட்டுக் கட்டாகச் சேர்க்கலாம். ஆனால் அவற்றைச் சாப்பிட முடியாது என்ற உண்மை பலருக்கும் தெரிவதில்லை.

பொருளாதார ரீதியில் உயர்ந்த வளர்ச்சியை அடைந்த நாடுகள் தமது நாடுகளின் நிலப்பயன்பாடு தொடர்பாக மிகச் சிறந்த திட்டமிடலையும் தூர நோக்குடனான செயற்பாடுகளையும் கொண்டுள்ளன.

இதனால் அவை எந்தவொரு பேரிடருக்கும் தாக்குப் பிடித்து வளர்கின்றன. அங்கு அரசியல் செயற்பாடுகள் நாட்டின் அபிவிருத்தியை நோக்கியே இருக்கும்.

எமது நாட்டிலும் நிலப் பயன்பாட்டுத் திட்டமிடலுக்கெனத் தனியான ஒரு துறை உள்ளது. இதற்கென அரசதுறை அதிகாரிகள் உள்ளனர். ஆனால் காணிகளில் கட்டடங்களைக் கட்டும் முறைமையைத் தீர்மானிப்பதில் இந்தப் பிரிவு போதுமான செல்வாக்கைச் செலுத்துவதாகத் தெரியவில்லை.

இலங்கையில் ஒரு கட்டடமொன்று கட்டப்படுவதாயின் அந்தப் பிரதேசத்தின் நிர்வாகத்துக்குப் பொறுப்பான உள்ளூராட்சி அமைப்புகளில் ஒன்றான மாநகரசபை அல்லது நகரசபை அல்லது பிரதேச சபையில் கட்டட அனுமதிக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

கட்டடம் வீதிக் கரையோரமாக உள்ள காணியில் அமைவதாயின் வீதி அபிவிருத்தித் திணைக்களம் அல்லது வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பராமரிப்பிலுள்ள வீதி ஆயின் அவர்களது அனுமதியும் தேவை.

அதற்கேற்ற கட்டட நிர்மாணம் இடம் பெறல் வேண்டும்.

நகர அபிவிருத்தி அதிகாரசபையின் நிர்வாகத்தின் கீழ் வரும் பிரதேசமாயின் அவர்களது அனுமதியும் தேவை.

தொழிற்சாலைக் கட்டடமாயின் மத்திய சுற்றாடல் அதிகார சபையின் அனுமதியும் பெறப்படல் வேண்டும்.

இந்த அனுமதிகள் ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான கட்டணங்கள் செலுத்தப்படல் வேண்டும்.

ஒரு கட்டடத்தை அமைப்பதற்கு இத்தனை அனுமதிகள் தேவை.

ஆனால் வளம் மிகுந்த இந்த நாட்டை முன்னோக்கிச் செலுத்துவதற்கான திட்டமிடல்கள், நடைமுறைகள் எவை என்பது தொடர்பாகக் கேள்வி எழுப்பினால் அதற்குரிய விடை என்ன?

வயல் காணிகளில் கட்டடம் கட்டுவதற்கு அனுமதி இல்லை-யெனச் சட்டம் சொல்கிறது. ஆனால் சட்டத்தை வளைத்துக் கட்டடங்கள் அன்றும் சரி இன்றும் சரி எழுகின்றன.

தோட்டக் காணிகளில் கட்டடங்கள் கட்டக் கூடாதென்ற விதி முறைகள் எங்கும் இல்லை. அதனால் வளம் மிகுந்த மண் உள்ள தோட்டங்கள் கட்டடங்களால் நிறைகின்றன.

நிலம் அருமையானதொரு வளம். புதிதாக உருவாக மாட் டாது. இருக்கின்ற நிலத்தை மிகவும் சிக்கனமாகப் பயன்ப டுத்தி உயர்ந்த வினை திறனைப் பெறல் வேண்டும். கட்ட டங்களால் நிலத்தை நிரப்பும் போது வினைதிறனுக்கு எங்கே இடம்.

வளர்ந்த நாடுகள் அடுக்குமாடிக் கட்டடங்களைக் கட்டி சிறிய ஒரு நிலப்பரப்பில் பல்லாயிரம் பேர் குடியிருப்பதை ஊக்குவிக்கின்றனர். அவர்களது இந்த நகரமயமாக்கக் கொள்கை காரணமாகப் பல நன்மைகள் விளையும்.

பயிர் செய்யும் நிலம் பாதுகாக்கப்படும். மரங்கள் அழிவடை யாது. சூழல் சமநிலை பேணப்பட்டு பருவகால மழைகள் ஒழுங்காகப் பொழியும்.

சிறியதொரு பிரதேசத்தில் ஏராளம் மக்கள் வசிப்பதன் மூல மாக பாடசாலை, வைத்தியசாலை, சந்தை, வங்கி போன்ற நிறுவனங்கள், போக்குவரத்துச் சேவை, பூங்கா, பொழுது போக்கு வசதிகள் உட்பட்ட பல சேவைகளை மிகவும் திற மையாக வழங்க முடியும்.

இத்தகைய பொருளாதார அடிப்படைக் கட்டமைப்புகள் குறு கியதொரு பிரதேசத்தில் திறமையாகச் செயற்படும் போது நாட்டின் பொருளாதாரம் வேகமாகவும் உறுதியாகவும் வளர்ச் சியடையும்.

அரசாங்கத்திற்கும் தனியார்துறைக்கும் இவற்றை உருவாக்கு வதற்கான சுமை குறைவாக இருக்கும்.

ஆனால் எமது நாட்டில் நிலத்துடன் கூடிய கட்டடங்களைப் பரவலாகக் கட்டி வாழ்வதற்கே விருப்பப்பட்டுள்ளோம். பழக் கப்பட்டுள்ளோம். இது பண்பாட்டு ரீதியான ஒரு பாரம்பரிய மாகி விட்டது.

இதன் விளைவாக பொருளாதார அடிப்படைக் கட்டமைப்பு களை நாடெங்கும் உருவாக்குவதற்கான பொருளாதாரச் சுமை அரசாங்கத்தின் மீதே பெருமளவில் சுமத்தப்படுகின் றது. இவற்றை நிறைவாக வழங்க முடியாத நிலைமை கார ணமாக எமது நாட்டின் வளர்ச்சியும் பாதிக்கப்படுகின்றது.

உணவுப் பொருள்களை உற்பத்தி செய்வதை விட இந் தியா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளிலிருந்தும் ஏனைய நாடுகளில் இருந்தும் இறக்குமதி செய்து உண் போம். அது மலிவானது என்ற சிந்தனை நிறையப் பேரிடம் வலுத்து விட்டது.

ஆனால் இன்றைய பொருளாதாரச் சூழலில் இறக்குமதிக்கு ரிய அந்நிய செலாவணி இல்லாமல் பெரிதும் துன்பப்படு கின்றோம்.

ஆளும் கட்சி அரசியல் தலைவர்களும் உற்பத்தியை விட இறக்குமதிகளைத் தான் அதிகம் விரும்புகின்றனர். காரணம் இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை வழங்கித் தமது ஆதர வாளர்களைத் திருப்திப்படுத்தலாம். தாமும் நாலு பணம் உழைத்துக் கொள்ளலாம்.

பாராளுமன்றத்திற்கும், மாகாண சபைகளுக்கும் விருப்பு வாக்கு முறையிலமைந்த விகிதாசாரத் தேர்தல் முறைமை இந்த நாட்டின் பெரும் நிர்வாகச் சீர்கேடுகளுக்கு எல்லாம் காலாய் அமைந்து விட்டது.

சிறுபான்மை இனங்களின் அரசியல் பிரதிநிதிகளைத் தெரிவ தற்கான வாய்ப்பு உள்ள ஒரு தேர்தல் முறை காரணமாக ஏற்க வேண்டியுள்ளது.

இயற்கையின் சீற்றங்களால் பல அழிவுகளைக் காணுகின் றோம். மனித நடத்தைகளால் வரும் பேரழிவுகளை இனி வரும் காலங்களில் காணப் போகின்றோம்.

பிரித்தானிய விஞ்ஞானி ஸ்ரீபன் ஹாக்கிங் மனிதர்கள் இயற் கையின் சமநிலைக்கு எதிராக மேற்கொள்ளும் நடவடிக்கை கள் காரணமாக இன்னமும் நூறு வருடங்களில் பூமி மனிதர் கள் வாழ்வதற்கு உகந்ததாக இல்லாத நிலையை அடையப் போவதாக எச்சரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபையும் கடந்த 2021-ம் ஆண்டில் ஸ்கொட்லாந்தின் கிளாஸ்கோ நகரில் காலநிலை மாற்றம் தொடர்பான சர்வதேச மகாநாட்டை நடத்தியது. பல முன் னோடித் தீர்மானங்களை எடுத்தது.

இயற்கையின் சமநிலையைக் காப்பதில் தனி ஒரு நாடு பங் களித்து ஒரு பயனும் இல்லை.

எமது நாட்டில் இயற்கையை நேசித்து நாட்டைப் பேணும் பண்பைப் பாடசாலைகளில் ஆரம்ப வகுப்பு முதலே செய்ய வேண்டும்.

அப்போது தான் நாடு வளம் பெறும். கட்டடக் காடுகளால் மட்டும் நிறைந்த நாடு ஆரோக்கியமான ஒன்றல்ல.

இயற்கை தரும் உணவைப் பேணியபடியே நாட்டை அபிவி ருத்தி செய்யும் கொள்கையே எமது நாட்டுக்கான காலத்தின் தேவை.



thabendran.v@thaiveedu.com



# படைப்பாற்றல் துறையில் தடம் பதிக்கும் ரோபோக்கள்

**- சுப்ரமணியம் ஜெயசீலன்**

கலைப் படைப்புகள் மனிதரினால் மனித சமூகத்திற்காக சிருஷ்டிக்கப்படுபவை என்ற பொதுவான மரபுத் திரையைக் கிழித்தெறியும் வகையில் மனித சமூகத்தின் கலைத் தாகத்தைத் தீர்ப்பதற்காக அதிநவீன தொழில்நுட்ப வளர்ச்சியின் மற்றுமொரு படியாக மனித உருவிலான இயந்திர மனிதரின் கலைப் படைப்பாற்றல்கள் விந்தை மிக்கவையாகக் காணப்படுகின்றன.

மனிதர்களின் உணர்வுகளைத் தன்னகத்தே தாங்கி அபரிமிதமான படைப்பாற்றலுடன் புதிய கோணங்களில் புதிய கலைப் படைப்புகளை உருவாக்கி அசத்தும் செயற்கை நுண்ணறிவுடனான ஒரு மனித வடிவிலான ரோபோ பற்றிய தகவல்களை நாம் உங்களுடன் பகிர்ந்துகொள்ள விழைகின்றோம்.

உலகின் முதலாவது மனித உருவைக் கொண்ட இயந்திரம் (humanoid robot) அல்லது செயற்கை நுண்ணறிவுடன் கூடிய இயந்திர மனிதக் கலைஞராகப் பிரித்தானிய நாடாளுமன்றில் முதல் தடவையாக ஒரு ரோபோ உரையாற்றியது. இந்த இயந்திர மனிதருக்கு எய்-டா (Ai-Da) எனப் பெயரிடப்பட்டுள்ளது. நாட்டின் எதிர்காலப் படைப்பாற்றல் தொழிற்துறை தொடர்பில் பிரித்தானிய நாடாளுமன்றப் பிரபுக்கள் சபையின் விசாரணைகளின் ஒரு பகுதியாக இயந்திர மனிதரின் உரை நிகழ்த்தப்பட்டது. கலைஞர்களுக்கு இந்தப் புதிய தொழில்நுட்பமானது ஆபத்தாகவும் சந்தர்ப்பமாகவும் அமையும் எனக் குறித்த மனித உருவ ரோபோ நாடாளுமன்றில் தெரிவித்துள்ளது.

‘நான் எனது கண்களில் காணப்படும் கமராக்கள், எனது செயற்கை நுண்ணறிவுப் படிமுறை, எனது இயந்திரத் தானியங்கிக் கை போன்றவற்றைப் பயன்படுத்தி ஓவியம் தீட்டுகின்றேன். இயற்கை வலையமைப்புகள் பெருமளவிலான/பாரியளவிலான இலக்கியத் தொகுப்புகளை ஆராய்தல், படிமங்கள் மற்றும் உள்ளடக்கங்களைப் பயன்படுத்தி நான் எனது கவிதைகளைப் படைக்கின்றேன்.’ என எய்-டா கூறியது.

மனிதரின் அறிவாற்றல் திறனில் இது எவ்வாறு மாறுபடுகின்றது? எனினும், அவற்றைப் பற்றிப் பேசிய போதிலும், எனக்கு பாடஞ்சார்ந்த எவ்வித அனுபவங்களும் கிடையாது.

எய்-டா ஓர் பெண் மனித உருவினைக் கொண்ட ரோபோவாகும், பிரித்தானியாவின் பிரபல கணித மேதையான அடா லொவலோஸ் (Ada Lovelace) நினைவாக இந்தப் பெயர் குறித்த ரோபோவிற்குச் சூட்டப்பட்டுள்ளது. ஒரேஞ் நிற மேலாடை, டெனிம் காற்சட்டையுடன் கறுப்பு நிறத்திலான விக் ஒன்றையும் இந்த ரோபா அணிந்திருந்தது. எவ்வாறெனினும், இந்த ரோபோவின் இயந்திரக் கை அவ்வாறே தெரியும் வண்ணமிருந்தது.

மனிதரின் படைப்புகளுக்கும் இந்த ரோபோவின் படைப்புகளுக்கும் என்ன வித்தியாசம் எனக் கேள்வி எழுப்பப்பட்டது. இதற்குப் பதிலளித்த ரோபோ ‘நான் கணினி நிகழ்ச்சிகள் மற்றும் படிமுறைகளில் முழுமையாகத் தங்கியிருக்கின்றேன் எனவும், நான் உயிர் வாழவில்லை என்ற போதிலும் எனக்குக் கலைப் படைப்புகளைச் செய்ய முடியும்’ எனவும் தெரிவித்துள்ளது.

மனிதர்களைப் போன்று சுயமான தீர்மானங்களை எடுக்கும் ஆற்றல் இந்த ரோபோக்களுக்குக் கிடையாது, அது ஒருசில சாட்சியங்களை வழங்கிய போதிலும், தனது உரிமை என்ன என்பது கூட இந்த ரோபோக்களுக்குத் தெரிவதில்லை. ஒரு தடவை இந்த ரோபா நிறுத்தப்பட்ட போது, அதனைச் செயற்படுத்துபவர் மீளவும் இயக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

பிரித்தானிய நாடாளுமன்றின் பிரபுக்கள் சபையின் தொடர்பாடல் மற்றும் டிஜிட்டல் குழுவினர் எழுப்பிய கேள்விகளுக்கு இந்த மனித வடிவிலான ரோபோ, கலைக்காட்சிக் கூடத்தின் பணிப்பாளரும், தன்னை உருவாக்கியவருமான எய்டன் மில்லருடன் இணைந்து பதிலளித்தது.

படைப்பாற்றல் துறையில் தொழில்நுட்பம் எவ்வாறான தாக்கங்களைச் செலுத்தும் எவ்வாறான பாதிப்புகள் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உண்டு என்பன குறித்தும் நாடாளுமன்றக் குழுவினருக்கு மனித உருவிலான ரோபோ, புத்தி ஜீவிகள் மற்றும் துறைசார் தொழில் வல்லுனர்கள் என்போர் விளக்கம் அளித்துள்ளனர்.

இந்தக் கருத்தரங்கில் பங்கேற்ற ரோபோவான எய்-டா வின் சில சாட்சியங்கள் ஆச்சரியத்தை ஏற்படுத்தக் கூடிய வகையிலானது என அதனை உருவாக்கிய எய்டன் மில்லர் தெரிவிக்கின்றார். சில ஆண்டுகளுக்கு முன்னதாக இவ்வாறான ஒரு விடயம் நடைமுறைச் சாத்தியமானது என நீங்கள்



நினைத்துக்கூடப் பார்த்திருக்கமாட்டீர்கள். எனினும், செயற்கை நுண்ணறிவின் அபரிமிதமான வளர்ச்சியின் வெளிப்பாடே எய்-டா-வின் பரிணமிப்பாகும்.

எய்-டா உலகின் முதல் மிகவும் யதார்த்தமான ரோபாக் கலைஞர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'இது மிகவும் விந்தை மிக்கது. மனிதர்களினால் பார்க்க முடியாத தகவல்கள் மற்றும் வடிவங்களை இந்த ரோபோவினால் பார்க்க முடிவதுடன் அது அவற்றைப் பயன்படுத்திக் கொள்கின்றது. தொழில்நுட்பத்துறையில் இந்த முன்னேற்றமானது ஆஹா என வியந்து பாராட்டத்தக்கது என்பதில் மாற்றுக் கருத்துக் கிடையாது.' என்கிறார்.

ஏன் இந்த ரோபோவிற்கு மனித உருவம் வழங்கப்பட்டது. அதிலும், ஏன் பெண் உருவம் வழங்கப்பட்டது எனக் கேள்வி எழுப்பப்பட்டது. இந்த ரோபோவினை உருவாக்குவதற்கு ஆண்கள் பெண்கள் என 30 பேர் உழைத்திருக்கின்றார்கள் எனவும் அதனால் மனித மற்றும் பெண் உருவம் வழங்கப்பட்டது எனவும் மில்லர் கூறுகின்றார்.

தொழில்நுட்பத்தை மனிதராக நோக்குவது ஒரு நெறிமுறை சார்ந்த பிரச்சினை என்றே கூறமுடியும், எய்-டா ஒரு தூண்டுதலாக இருக்க வேண்டும் என்பதில் நான் மிகவும் கரிசனை கொண்டுள்ளேன்.

ஒக்ஸ்போர்ட் கலைக் காட்சிக் கூடத்தை நடத்திவரும் எய்டன் மில்லர் மற்றும் அதன் பொறுப்பாளரான லூசி சீல் ஆகியோர் எய்-டா ரோபோ எண்ணக்கருவினை உருவாக்கியிருந்தனர்.

உலகின் முதலாவது மிகவும் யதார்த்தமான ரோபோக் கலைஞர் எய்-டா என அதன் இணையத்தளத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இந்த ரோபோ, கலைஞராகவும் ஓவியராகவும் பன்முகத் திறன்களை வெளிப்படுத்தும் ஒரு படைப்பாளி போல் மிளிர்கின்றது. செயற்கை நுண்ணறிவு உதவியுடன் கலைப்படைப்புகளையும், ஓவியத் திறன்களையும் வெளிப்படுத்துகின்றது. ஓவியங்கள் மட்டுமன்றிக் கவிதைகள், சிற்பங்கள் என்பனவற்றிலும் இந்த ரோபா ஆற்றலை வெளிப்படுத்தி அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்துகின்றது.

மறைந்த பிரித்தானிய மகாராணி இரண்டாம் எலிசபத்தின் பவள விழா நிகழ்வில் எய்-டா மகாராணியின் உருவப்படத்தை ஓவியமாகத் தீட்டி அசத்தியிருந்தது. இந்த ஓவியம் மனித உருவினைக் கொண்ட ரோபா தொடர்பில் பெரிதும் பேசப்படுவதற்கான ஒரு ஏதுவாக அமைந்திருந்தது.

எய்-டா ரோபோ கடந்த 2019-ம் ஆண்டு உருவாக்கப்பட்டுள்ளது. முதல் தடவையாக ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் இந்த ரோபோவின் கலைப்படைப்புகள் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. உலகின் மாற்றங்களுடன் கலைப்படைப்புகள் எவ்வாறு பரிணமிக்கின்றது என்பது குறித்து சமூகத்தில் ஓர் ஊடாடலை ஏற்படுத்தும் வகையில் இந்த ரோபோவின் வருகை காணப்பட்டது. பல்வேறு இடங்களுக்கு இந்த ரோபோ பயணம் செய்துள்ளதுடன் மெய்நிகர் தொழில்நுட்பம் வழியாக ஐக்கிய நாடுகள் அமைப்பிலும் கண்காட்சியொன்றை நடத்தியுள்ளது.

இவ்வாறான செயற்கை நுண்ணறிவுடைய ரோபோக்கள் படைப்பாற்றல் துறையில் பிரவேசிப்பது மனித சமூகத்தில் சாதகமான தாக்கத்தை ஏற்படுத்தும் அதேவேளை, பல்வேறு வழிகளில் படைப்பாற்றலின் மனித உணர்வுகளின் மெய்யான பிரதிபலிப்பினைப் போலியாக்கக் கூடிய அபாயங்களையும் மறுப்பதற்கில்லை.

உலகின் ஏனைய துறைகளைப் போன்றே தற்பொழுது படைப்பாற்றல் துறையிலும் செயற்கை நுண்ணறிவினைத் தன்னகத்தே தாங்கிய ரோபோக்களின் பிரசன்னம் பல்வேறு அதிர்வுகளை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.



jeyaseelan.s@thaiveedu.com



# உரோமர் காலத்துக் காட்சியரங்க அமைப்புகள்

### - குரு அரவிந்தன்

வரலாறு கற்றவர்கள் ஹரப்பா, மொகஞ்சதாரோ சிந்து திராவிட நாகரிகம் பற்றி எல்லாம் அறிந்திருப்பார்கள். அதே போல வெளியுலகில் பிரபலமாக இருந்த எகிப்து, கிரேக்க, உரோம நாகரிகங்கள் பற்றியும் அறிந்திருப்பார்கள். இதை எல்லாம் கற்பனை செய்து பார்த்திருப்போமே தவிர, என்றாவது ஒரு நாள் நிஜமாகவே பார்க்கலாம் என்று நினைத்திருக்க மாட்டோம். இத்தாலிக்குச் சென்ற போது உரோம நாகரிக காலத்தில் இருந்த சில இடங்களை நேரடியாகப் பார்க்க முடிந்தது. உரோமர் காலத்தைக் கண்முன்னால் கொண்டு வந்த சில நகரங்களையும், அரங்கங்களையும், அதன் அமைப்புகளையும் பார்த்தபோது அப்படியே ஆச்சரியத்தில் மூழ்கிப் போனேன்.

எகிப்து மற்றும் கிரேக்க நாகரிகத்தின் தொடர்ச்சியாக உரோம நாகரிகம் உருவாக்கப்பட்டிருந்ததை அங்கே இருந்த கட்டட அமைப்புகளில் அவதானிக்க முடிந்தது. மாபிள் என்று சொல்லப்படுகின்ற பளிங்குக் கற்களால் தரைகளும், சுவர்களும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. அக்கால வரலாற்றைச் சொல்லும் சிலைகள் கூடப் பளிங்குக் கற்களில் செதுக்கப்பட்டிருந்தன. அதனால்தான் 2000 வருடங்களாகியும் இந்தக் கட்டடங்கள் முற்றாகப் பழுதடையாமல் இன்றும் இருக்கின்றன. நாடொன்று இல்லாததால், எங்களால் 200 வருடகால எமது அடையாளங்களைக்கூடக் காப்பாற்ற முடியவில்லையே என்ற ஆதங்கம் அப்போது ஏற்பட்டது.

உரோம் மன்னராட்சியில் (பொ.ஊ.மு.- கி.மு.)625-510) இருந்து குடியரசாக (பொ.ஊ.மு. 510-31) மாறி, அதன் பின் பேரரசாக மாறியிருந்தது. எங்கள் மாணவப் பருவத்தில் வரலாற்றில் படித்த, பலராலும் அறியப்பட்ட உரோமச்சக்கரவர்த்தி யூலியஸ் சீசர் மற்றும் அவரது காதலி கிளியோபட்ரா பிரபலமானவர்கள். யூலியஸ் சீசர் (பொ.ஊ.மு. 44) கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, அவரது வளர்ப்பு மகனான அகஸ்தஸ் (பொ.ஊ.மு. 31) பேரரசனாகப் பதவி ஏற்றான். இந்தப் பேரரசு பொ.ஊ.மு. 31 தொடக்கம் பொ.ஊ.பி. 286 வரை எழுச்சி பெற்று ஒன்றாக இருந்தது. அதன்பின் அரசியல் போட்டி காரணமாகக் கிழக்கு உரோமப் பேரரசு மேற்கு உரோமப் பேரரசு என்று இரண்டாகப் பிரிந்து பொ.ஊ.பி. 476 வரை உரோமப் பேரரசு நிலைத்திருந்தது.

உரோமர் ஆட்சிக்காலத்தில் 'அம்பித் தியேட்டேஸ்' என்ற அரங்குகள் உரோமப் பேரரசுப் பகுதிகளில் பிரபலமாக இருந்தன. நாடகம், சினிமா போன்றவற்றில் ஆர்வம் இருந்ததால், அம்பிதி தியேட்டர் (Amphi theatre) என்று அழைக்கப்படும் இத்தகைய அரங்குகள் சிலவற்றையாவது பார்க்க வேண்டும் என்ற ஆர்வம் இருந்தது. 'அம்பி' என்றால் கிரேக்க மொழியில் வட்டம் என்று பொருள்படும். இப்படியான இடத்தில் பார்வையாளர்கள் அரங்கத்தில் வட்டமாக அமர்ந்திருந்து அங்கு நடப்பதைப் பார்த்து ரசிப்பார்கள். உரோமில் உள்ள கொலோசியத்தைப் பார்க்கப் போன போது, இத்தகைய அரங்குகள் இத்தாலியில் வேறு எங்கே இருக்கின்றன என்று வழிகாட்டியிடம் கேட்டபோது, அவர் அதைப்பற்றிச் சில விபரங்களைத் தந்தார். எனக்குக் கிடைத்த நேரத்திற்கு ஏற்ப, ஓரளவு நல்ல நிலையில் இருந்த நான்கு இடங்களில் உள்ள அரங்கங்களைச் சென்று பார்க்க வாய்ப்புக் கிடைத்தது.

தலைநகரில் உள்ள பிரபலமான பிளேவியன் என்று அழைக்கப்பட்ட கொலோசியம், நேப்பிள்ஸ் நகரத்தில் இருந்து சுமார் 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள கப்புவா நகரில் உள்ள 'கப்புவா அம்பித் தியேட்டர்,' மற்றும் தெற்கே 240 கிலோ மீட்டர் தூரத்தில் இருந்த பொம்பே என்ற இடத்தில் உள்ள 'பொம்பே அம்பித் தியேட்டர்,' மத்திய இத்தாலியில் 270 கிலோ மீட்டர் தூரத்தில் லூக்கா என்ற இடத்தில் உள்ள 'லூக்கா அம்பித் தியேட்டர்' ஆகியவற்றைச் சென்று பார்க்க முடிந்தது. லூக்கா மக்கள் கிளாடியேற்ரேசை நினைவுபடுத்த விரும்பாததால், அந்த அரங்கத்தை நிரப்பி, இப்போது மக்கள் ஒன்றுகூடக் கூடியதாக சுற்றிவர பலவிதமான வர்த்தக நிலையங்களை அமைத்திருக்கிறார்கள். இந்த அரங்கத்திற்கு அருகே இருந்த நினைவுக் கோபுரம் மட்டும் அப்படியே இருக்கின்றது.

பழமையைப் பேணும் நோக்கத்தோடு, 2000 வருடங்களுக்கு முற்பட்ட கட்டடங்கள் என்பதால், உடைந்து சிதைந்து போன பாகங்களை எடுத்துத் திரும்பவும் அந்தந்த இடங்களில் பொருத்திக் கொண்டிருந்தார்கள். அதனால் சில இடங்களில்



நிலக்கீழ் அறைகளைச் சென்று பார்ப்பதில் சிரமப்பட வேண்டி இருந்தது. அக்காலத்தில் இப்படியான அரங்குக ளில் ஒலி அமைப்புகள் முக்கிய இடம் பெறவில்லை. அரங்க நிகழ்வுகளின் போது அவர்கள் ஓசையைக் கேட்க வேண்டும் என்ற அவசியமும் இருக்கவில்லை. காரணம் ஒலி-யோடு சம்பந்தம் இல்லாத நிகழ்வுகளே இந்த அரங்கத்தில் அதிகமாக இடம் பெற்றன. நடக்கும் நிகழ்வை நேரடியாகப் பார்க்கும் வசதி இருந்தால் போதுமானதாக இருந்தது, எனவே அரங்கம் எந்தப் பெரிதாக இருந்தாலும் பரவா யில்லை என்ற நோக்கத்தோடு அரங்கங்கள் வடிவமைக்கப் பட்டன. இவை வட்டவடிவமாக இருந்ததால் எல்லோராலும் சுற்றிவர இருந்து இலகுவாகப் பார்க்க முடிந்தது.

மற்ற வேலைகளை ஒதுக்கிவைத்துவிட்டு இந்த அரங்கு களை ஒவ்வொன்றாக நேரம் கிடைத்த பொழுது வண்டி ஒன்றை வாடகைக்கு எடுத்துக்கொண்டு சென்று பார்த்தேன். முன்கூட்டியே அவர்களிடம் இதற்கான அனுமதியை நான் பெற்றிருந்ததால், ஆச்சரியம் தரும் இத்தகைய அரங்கங்க ளைக் குறிப்பிட்ட நாட்களில் இலகுவாகச் சென்று பார்க்க முடிந்தது. இந்த அரங்குகள் இன்று நேற்றுக் கட்டப்பட்டவை அல்ல, உரோமப் பேரரசு காலத்தை நினைத்துப் பாருங்கள். 2000 வருடங்களுக்கு முன் இது போன்ற சுமார் 230 சிறிய அரங்குகள் வரை இருந்ததாகக் குறிப்புக்கள் தெரிவிக்கின் றன.

நான் சென்றுபார்த்த நான்கு அரங்குகளில், அம்பித் தியேட் டர் ஒவ் கப்புவா பொ.ஊ.மு. முதலாம் நூற்றாண்டில் கட்டப் பட்டிருந்தது. கிளாடியேற்ரர்களில் மிகவும் பலசாலியாகப் பேசப்படும் ஸ்பாகாடஸ் இந்த அரங்கில் பொ.ஊ.மு. 73-ல் சண்டையிட்டதாகக் குறிப்புகள் தெரிவிக்கின்றன. இது 560 அடி நீளமும், 456 அடி அகலமும் கொண்டது. 151 அடி உயரமான இந்த அரங்கம் நான்கு அடுக்கு மாடிகளைக் கொண்டது. பொ.ஊ.பி 456-ம் ஆண்டு வான்டல்ஸ் இனத்த வர்களால் கைப்பற்றப்பட்ட போது, மேல் மாடிகள் இடித்து அழிக்கப்பட்டன. எதிரிகளாலும், இயற்கையின் சீற்றத்தாலும், காலத்தாலும் அழிந்து உடைந்துபோன பகுதிகளை அப்ப டியே எடுத்து, இப்போது ஒவ்வொன்றாகப் பொருத்திக் கொண்டு இருக்கிறார்கள்.

இந்த அம்பித் தியேட்டர் போலவே இத்தாலியின் தெற்கே பாம்பே என்ற இடத்திலும் ஒன்று இருந்தது. அங்கு இருந்த அம்பித் தியேட்டர் அதிஷ்டவசமாக இடிபாடுகளில் இருந்து தப்பியிருந்தது. காரணம் அருகே இருந்த 'விசுவியஸ்' என்ற எரிமலை திடீரென வெடித்ததால், பல அடி உயரத்திற்குச் சாம்பலை அள்ளிக் கொட்டியிருந்தது. அந்தச் சாம்பலால் இந்தச் சுற்றாடலில் 'பாம்பே' மற்றும் 'ஹேர்குலியம்' பகுதி யில் உள்ள கட்டடங்கள் எல்லாம் மூடப்பட்டிருந்தன. பொ.ஊ.பி 62-ம் ஆண்டு ஏற்பட்ட பூமியதிர்வால் அம்பித் தியேட்டர் பாதிக்கப்பட்டிருந்தாலும், அதில் திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நில அதிர்வும், தொடர்ந்து எரிம லைத் தாக்கமும் இங்கு ஏற்பட்டதால் அபசகுணமாகக் கரு திய தப்பியிருந்த மக்கள் இந்த இடத்தை விட்டு வெளியேறி யிருந்தனர். வரலாற்று ஆய்வாளர்கள், சுமார் 2000 வருடங்க ளின் பின், கவனிப்பாரற்று இருந்த இந்த நகரத்தை நவீன சாதனங்களைக் கொண்டு மூடியிருந்த எரிமலைச் சாம்பலை அகற்றியிருக்கிறார்கள். அங்கேயிருந்த அதிசயிக்க வைக் கும் அம்பித் தியேட்டரையும் பொதுமக்கள் பார்வைக்கு இப் போது வைத்திருக்கிறார்கள்.

இந்த அரங்கத்தை மட்டுமல்ல, 'பொம்பே' என்ற சுமார் 1200 குடியிருப்புக்களைக் கொண்ட மிகப்பழைய நகரத்தையே காட்சிக்கு வைத்து, சுற்றுலாப் பயணிகளை வியக்க வைத்தி ருக்கிறார்கள். அந்த நாட்களில் இருந்த உணவகங்கள், வெதுப்பகங்கள், பொதுக்குளியல் இடங்கள், மருத்துவம னைகள், சிவப்புவிளக்குப் பகுதிகள், நீதிமன்றங்கள், பொது மக்கள் கூடுமிடங்கள், ஈயத்தால் செய்யப்பட்ட தண்ணீர்க்கு ழாய் வசதிகள் என்று பலவற்றைக் காணமுடிந்தது. சில சுவர்களில் இருந்த ஓவியங்கள் மூலம் அந்தந்த இடங்களை ஓரளவு அடையாளப்படுத்த முடிந்தது.

அம்பித் தியேட்டர் ஒவ் கப்புவா என்ற இடத்தில் இருக்கும் அரங்கம்தான் உரோமர்களால் முதலில் கட்டப்பட்ட அரங் கம் என்று ஆய்வாளர் ஜீன் கல்வின் என்பவர் குறிப்பிட்டிருக் கின்றார். இன்னுமொரு மிகப்பெரிய அம்பித் தியேட்டரான புகழ் பெற்ற கொலோசியம் அமைவதற்கு முன்மாதிரியாக இது இருந்திருக்கின்றது. உரோமில் உள்ள கொலோசியத் திற்கு அடுத்ததாக உலகிலேயே இரண்டாவது பெரிய அரங் கமாக இது இருந்தது. இது பொ.ஊ.மு முதலாம் நூற்றாண் டில் கட்டப்பட்டது. உரோமில் உள்ள கொலோசியத்தைப் பார்க்கப் போனபொழுது மாடிகளை மட்டுமே பார்க்க அனும தித்தார்கள் நிலக்கீழ் அறைகளில் திருத்த வேலைகள் நடை பெறுவதால், பாதுகாப்புக் கருதி நிலக்கீழ் அறைகளைப் பார்க்க அனுமதிக்கவில்லை. கப்புவா அரங்கத்திற்குப் பொறுப்பாக இருந்தவருடன் சினேகபூர்வமாக உரையாடிய போது, ‘பார்வையாளர்களை அனுமதிப்பதில்லை, நீங்கள்



ஒரு ஊடகவியலாளர், அதுவும் கனடாவில் இருந்து வந்திருக் கிறீர்கள் என்பதால் நானே அழைத்துச் சென்று காட்டுகின் றேன்’ என்று நிலக்கீழ்ப் பகுதிக்கு அழைத்துச் சென்று பல இடங்களைக் காட்டி, அதற்கு விளக்கங்களும் தந்து, புகைப் படங்களும் எடுக்க அனுமதி தந்தார். அடிமைகளை - இந்த அடிமைகள் வெள்ளை நிறத்தவர்கள், கொடிய மிருகங்களை அடைத்து வைத்த இடங்களை எல்லாம் ஆதாரத்தோடு சுட் டிக் காட்டி அதற்கு விளக்கமும் தந்தார். அதற்காக அவ ருக்கு நன்றி தெரிவித்துவிட்டு வந்தேன்.

நான் பார்த்த இடங்களைப் பற்றிக் குறிப்பிடுமுன், இந்த அரங்கங்கள் எதற்காகப் பாவிக்கப்பட்டன என்பதைக் குறிப் பிடுவது நல்லதென நினைக்கின்றேன். உரோமர்கள் எந் தெந்த நாடுகளைக் கைப்பற்றினார்களோ, அந்தந்த நாட்டுப் பொருட் செல்வங்களை மட்டுமல்ல, சிறந்த கலைச்செல்வங் களையும் அங்குள்ள மக்களைக் கொண்டே தங்கள் நாட்டுக் குக் கொண்டு வந்து சேர்த்தார்கள். அப்படிக் கைப்பற்றிக் கொண்டு வந்த மக்களைத் தங்கள் அடிமைகளாகப் பாவித் தார்கள். அந்த அடிமைகள்தான் 2000 வருடங்களுக்கு முன் கிளாடியேற்ரேஸ் என்று அழைக்கப்பட்டார்கள். அவர்களில் பலசாலிகளைத் தெரிவு செய்து அவர்களுக்கு பல விதமான உடற்பயிற்சிகளையும் கொடுத்தார்கள். இதற்கான பயிற்சிப் பள்ளிகளும் அரங்கத்தில் இருந்தன.

முதலாளிக்காக ஒருவரோடு ஒருவர் தனியாக மல்யுத்தம் போலச் சண்டையிடுவது, ஆயுதங்களுடன் சண்டையிடுவது, மிருகங்களுடன் சண்டையிடுவது, தோல்வி அடைந்தவரின் கழுத்தை அங்கேயே வாளால் துண்டிப்பது போன்ற செயல் கள் இந்த அரங்குகளில் நிறைவேறின. இதைவிட குதிரை ஓட்டப் போட்டி, தேரோட்டப் போட்டி போன்ற நிகழ்வுகளும் இங்கே இடம் பெற்றன. சூதாட்டம் போலப் பணத்திற்காக வும், பொழுதுபோக்குக்காகவும் இந்த நிகழ்வுகள் இடம் பெற்றன. உரோமர்கள் சண்டை என்றால் வெறிபிடித்தவர்கள் போல நடந்து கொள்வார்கள். குறிப்பாகப் போட்டி என்று வந்துவிட்டால், எதிரியின் கையை, காலை, கழுத்தைக் கூடத் தயங்காமல் சட்டென்று துண்டித்து விடுவார்கள்.

நிலக்கீழ் அறைகளில் அடிமைகளையும் மிருகங்களையும் அடைத்து வைத்திருந்தார்கள். சிங்கம், புலி, ஓநாய், காட்டு நாய்கள், கழுதைப்புலிகள், பாம்புகள், முதலைகள் போன்ற வற்றையும் தனித்தனியாகவும், மனிதர்களுடன் சண்டைபோட வும் வைத்தார்கள். இதற்காகப் புலிகள் இந்தியாவில் இருந்து கொண்டுவரப்பட்டன. சிங்கங்கள் ஆபிரிக்காவில் இருந்து கொண்டுவரப்பட்டன. போட்டிகளில் மரணமடைந்த அடிமைகளில் சிலருக்கு இறுதி மரியாதைகள் செய்யப்பட்ட தற்கான அடையாளங்களையும் இங்கு கண்டெடுத்திருக்கி றார்கள்.

மிகப்பெரிய அம்பித் தியேட்டர் உரோம் நகரத்தில் இருக் கின்றது. பிளேவியன் கொலோசியம் என்று இதை அழைக் கிறார்கள். சுற்றுலாப் பயணிகளால் அதிகம் கவரப்பட்ட இட மாகவும் இது இருக்கின்றது. பொ.ஊ.பி 69-ல் தொடங்கி பொ.ஊ.பி. 79 வரை வெஸ்பாஷியன் என்ற அரசன் காலத் தில் கட்டப்பட்டது. உள்ளூர் மக்கள் கலகங்களில் ஈடுபட்ட தால், அவர்களைத் திசைதிருப்ப இந்த அரங்கம் கட்டப்பட்ட தாக வரலாறு குறிப்பிடுகின்றது. குறிப்பிட்ட காலத்தில் அரங்கம் கட்டி முடிக்கப்படாததால், அடுத்து பதவிக்கு வந்த அவனது மகனான ரைற்ரஸ் என்ற மன்னனால் பொ.ஊ.பி. 80-களில் கட்டி முடிக்கப்பட்டது. தொடர்ந்து வந்த அரசன் டோமிடியன் காலத்தில் (81-96 வரை) கொலோசியத் தின் திருத்த வேலைகள் செய்யப்பட்டன.

அரங்க அமைப்பைப் பற்றிச் சொல்வதானால், ரொரன்ரோ வில் உள்ளவர்களுக்குப் பழக்கமான ஸ்கைடோம் போன்ற கட்டட அமைப்போடு ஓரளவு ஒப்பிட முடியும். ஆனால் கப்பு வாவில் உள்ள இந்த அம்பித் தியேட்டர் 80 வாசல்களைக் கொண்டதாகவும், 50,000 மக்கள் வரை கொள்ளக் கூடியதா கவும் இருந்தது. அகஸ்ரஸ் மன்னன் காலத்தில் கட்டப்பட்ட இந்த அரங்கத்தின் சில திருத்த வேலைகள் ஹேட்ரின் மன் னன் காலத்தில் மேற்கொள்ளப்பட்டன. சீமெந்துக் கலவை கண்டு பிடிக்கப்படாத காலத்தில், பெரியகற்களை ஒன்றோடு ஒன்றாக அடுக்கி, இந்தப் பிரமாண்டமான அரங்கம் கட்டப் பட்டிருக்கின்றது.

தலைநகரில் உள்ள கொலோசியமும் 80 வாசல்களைக் கொண்டதாகவும், 60,000 பார்வையாளர்களைக் கொள்ளக் கூடியதாகவும் இருந்ததாகச் சொல்கிறார்கள். கிளேடியேற்ரே சுக்கான பயிற்சிப்பள்ளி மறுபக்கத்தில் தனியே இருந்தது. நிலக்கீழ்ச் சுரங்கத்திற்குள்ளால் அவர்கள் கொண்டுவரப் பட்டு, போட்டிகளில் கலந்து கொள்ள வைக்கப்பட்டனர். தொடக்க விழாவன்று நடந்த போட்டிகளின் போது 1000-ற்கு

மேற்பட்ட அடிமைகள் போட்டிச் சண்டைகளில் வென்றவர்களால் கொல்லப்பட்டும், பட்டினி கிடந்த மிருகங்களோடு சண்டையிட்ட போது, மிருகங்களுக்கும் பலியாக்கப்பட்டனர்.

அம்பித் தியேட்டரின் இருக்கை அமைப்பைப் பொறுத்தவரையில் காவ்யா, அரீனா, வொமிற்ரோறியம் என மூன்று பிரிவாகப் பிரித்திருந்தார்கள். அரச குடும்பத்தினருக்குப் பிரத்தியேக இடம் தனியாக வாசலோடு ஒதுக்கப்பட்டிருந்தது. அரச குடும்பம் வந்து செல்வதற்கு இரகசியப் பாதையும் இருந்தது. நிலமட்டத்தில் இருக்கும் இருக்கை வசதிகள் அரசியல் செல்வாக்கு உள்ளவர்களுக்கும், செல்வந்தர்களுக்கும் உரியதாக இருந்தன. அதற்கு மேலுள்ள தட்டுகளில் உள்ள இருக்கைகள் பொதுமக்களுக்கானவை. ஆக உயரத்தில் உள்ள தட்டுகளில் இருக்கும் இருக்கைகள் பெண்களுக்கும், சிறுவர்களுக்குமானவை. இதிலும் முன்பக்கத்து இருக்கைகளைப் பிறீமா என்றும், பின்பக்கத்து இருக்கைகளை அல்ரிமா என்றும் அடையாளப்படுத்தி இருந்தார்கள். பார்வையாளருக்கும், போட்டி நடக்கும் இடத்திற்குமிடையே பாதுகாப்புத் தடுப்பு வேலிகள் இரண்டு இருந்தன. அக்காலத்தில் இலத்தீன் மொழிதான் அங்கு பாவனையில் இருந்ததால், அந்த மொழியிலேயே அனேகமான இடங்களில் எழுதப்பட்டிருக்கின்றன.

இத்தகைய அரங்கங்களைக் கட்டியெழுப்புவதற்கு எவ்வளவு அடிமைகளின் மனிதசக்தி, இயந்திரங்களற்ற அந்தநாட்களில் பயன்படுத்தப்பட்டிருக்கும் என்பதை நினைத்துப்பார்க்க, வியப்படையாமல் இருக்க முடியவில்லை. சுருங்கச் சொன்னால் அம்பித் தியேட்டர்கள் எல்லாம் உரோமக் கட்டடக் கலையை எடுத்துச் சொன்னாலும், செல்வந்தர்களின் கேளிக்கை மையமாகவே இவை இருந்திருக்கின்றன. அதே சமயம் அடிமைகளின், மிருகங்களின் சித்திரவதைக் கூடமாகவும், அப்பாவிகளின் உயிர் பறிக்கும் பலிபீடமாகவும் வரலாற்றில் பதிந்து விட்டன. உரோமப் பேரரசு அக்காலத்தில் எப்படியான செல்வாக்கோடு இருந்தது என்பதற்கு இந்தக் கட்டடங்களின் அமைப்புக்களே அத்தாட்சியாக இருக்கின்றன. பொ.ஊ.பி 442-ம் ஆண்டும் அதன்பின் பொ.ஊ.பி. 508-ம் ஆண்டும் பூமியதிர்ச்சியால் பாதிக்கப்பட்டாலும் திருத்தப்பட்டு பொ.ஊ.பி. 524-ம் ஆண்டு வரை இந்த அம்பித் தியேட்டர் பாவனையில் இருந்தது. உரோமப் பேரரசின் வீழ்ச்சிக்குப்பின் பிற்காலத்தில் கிறிஸ்தவ மதம் மேலோங்கியதால், வத்திக்கானின் கட்டுப்பாட்டுக்குள் சில பகுதிகள் வந்தன. அதன் காரணமாக கிளாடியேற்ரேசின் நிகழ்ச்சிகளுக்கு அம்பித் தியேட்டர்களில் தடைகள் விதிக்கப்பட்டன. சமீபத்தில் இதைப் பற்றிய கதைகளைக் கொண்ட ரஸல்குறோ நடித்த ‘கிளாடியேற்ரேஸ்’ போன்ற சில சினிமாப் படங்களும் வெளிவந்திருக்கின்றன. இத்தாலிய நாணயத்திலும், உலக அதிசயத்தில் ஒன்றான கொலோசியம் இடம் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.


உசாத்துணை:
https://en.wikipedia.org/wiki/Colosseum





kuruaravindan@thaiveedu.com




# கேரளாவில் சில நாட்கள்

- சி. நற்குணலிங்கம்

கேரளம் ஆங்கிலத்தில் கேரளா(Kerala) என அழைக்கப் படுகிறது. இது இந்தியாவின் தென் மாநிலங்களில் ஒன்று (State Of India). கேரளம் கிழக்கில் தமிழ் நாட்டையும், வடக்கில் கர்நாடகத்தையும், மேற்கில் அரபுக் கடலையும் கொண்டுள்ளது. மலையாளம் கேரளாவின் முதன்மையான மொழி. தமிழ் பேசுவோரும் உள்ளனர். இதன் பரப்பளவு 38,852 ச.கி.மீ. ஆகும். திருவனந்தபுரம், கோழிக்கோடு, கொச்சி, கோட்டயம், திருச்சூர் இங்குள்ள முக்கிய நகரங்களாகும். இது 14 மாவட்டங்களை உள்ளடக்கியுள்ளது. 1956 நவம்பர் 01 இம்மாநிலம் நிறுவப்பட்ட நாளாகும். இதன் தலைநகரம் திருவனந்தபுரம். மிகப் பெரிய நகரமும் இதுவே. கேரளா என்ற சொல் தமிழ்ச் சொல்லான சேரளம் அல்லது சேரநாடு என்பதிலிருந்து தோன்றியது என்பது அறிஞர்களின் கருத்து. மூன்றாம் நூற்றாண்டில் பேரரசர் அசோகரின் கல்வெட்டில் கேரளா கேரளபுத்திரர் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. ரோமானிய வணிகரான பெரிபுளுஸின் நில வரைபடத்தில் இன்றைய கேரளப் பகுதியை சேரபுத்ரா என்று குறிப்பிடுகின்றார். கேரள மக்கள் மலையாளிகள் என்று அழைக்கப்படுகின் றனர். இவர்கள் கேரளாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில் வாழ்பவர்கள் என்பது அதன் பொருளாகும்.

பரசுராமரின் கோடரி கடலைப் பிளந்ததால் தோன்றிய நாடு கேரளம் என்பது புராணக்கதை. போத்துக்கேயர், ஒல்லாந்தர், ஆங்கிலேயர் என ஐரோப்பியர் கேரளத்தில் தங்கள் ஆதிக் கத்தை நிலைநாட்டினர். 1947 அளவில் கேரளம் திருவிதாங் கூர், கொச்சி மற்றும் மலபார் என மூன்று சமஸ்தானங்களாக இருந்தது. 1956 மலபார் சீரமைப்புச் சட்டத்தின்படி இம் மூன்று சமஸ்தானங்களும் இணைக்கப்பட்டு 1956-ல் இன் றைய கேரளம் உதயமானது. ஏப்ரல் 05 1957-ல் ஜனநாயக முறைப்படி ஆசியாவிலேயே முதன்முதலாக கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சிக்கு வந்த முதல் மாநிலம் கேரளாவாகும். காசர் கோடு, கண்ணூர், வயநாடு, கோழிக்கோடு, மலைப்புரம், பாலக்காடு, திருச்சூர், எர்ணாக்குளம், இடுக்கி, ஆலப்புழா, கோட்டயம், பத்தனம்திட்டா, கொல்லம், திருவனந்தபுரம் என 14 மாவட்டங்களாக கேரளா பிரிக்கப்பட்டுள்ளன கேரளத்தில் 63 வட்டங்களும், 1634 வருவாய் ஊராட்சிகளும், 978 ஊராட் சிகளும், 05 நகராட்சிகளும் உள்ளன. 20 மக்களவைத் தொகுதிகளாக உள்ளன. கேரள சட்டமன்றத்திற்காக கேர ளத்தை 140 தொகுதிகளாகப் பிரித்துள்ளனர். இங்கு இந்து சமயத்தவர் 54.73%, இஸ்லாமியர் 26.56%, கிறிஸ்தவர் 18.38%, சீக்கியர் 0.01%, சமணசமயம் 0.01%, பௌத்தம் 0.01% உள்ளனர்.

இந்திய மாநிலங்களில் எழுத்தறிவு கூடிய மாநிலம் இதுவா கும். ஏறக்குறைய கல்வி அறிவு 93.91% ஆகும். பெண்க ளின் படிப்பறிவு வீதத்தைவிட ஆண்களின் படிப்பறிவு வீதம் கூட. மக்கள் தொகை 34.8 மில்லியன். பாலின விகிதம் ஏறக் குறைய 1000 ஆண்களுக்கு 1084 பெண்களாகும். மக்கள் தொகை அடர்த்தி ஏறக்குறைய ச.கி.மீ-க்கு 860 பேர். கேரளா வின் பரப்பளவு 38,852 ச.கி.மீ ஆகும். ஆட்சி மொழியுடன் தமிழ், கன்னடம், உருது, கொங்கணி மொழியும் உள்ளன. கதகளி, மோகினி ஆட்டம், தெய்யம், துள்ளல், கூடியாட்டம் என்பன கேரளத்தின் நாட்டிய வகைகளாகும். செண்டை மேளம் புகழ் பெற்றது. ஓணம், விஸு முக்கிய பண்டிகைக ளாகும். கிறிஸ்மஸ், ரம்ழான் பெருநாள், திருச்சூர் பூரம் திரு விழா, மகர விளக்குத் திருவிழா, மகம் திருவிழா ஆகிய விழாக்கள் நடைபெறுகின்றன. கதகளி நடன வடிவத்தின் பிறப்பிடம் கேரளாவாகும்.

கேரள மாநிலப் பறவை மலை இருவாட்சி (Buceros Bicor-nis). மாநிலப் பழம் பலாப்பழம், பலாப்பழம் இங்கு அதிகம் விளைகிறது. மாநில விலங்கு யானை, மாநிலப் பறவை கிரேட்கார்ன்பில். மாநில மலர் கன்னிகோனா. மாநில மரம் தென்னை. இங்குள்ள நெய்யாறு, பம்பை, பெரியாறு, சித் தாறு என்பன முக்கிய ஆறுகளாகும். விவசாயம் முக்கிய தொழில். பணப்பயிர் உற்பத்தி, கைத்தறி, கைவினைப் பொருட்கள் தயாரித்தல் சிறப்பாக நடைபெறுகின்றன. கேர ளாவின் சிறப்புகளாக ஆயுர்வேதம், படகுவீடு, கேரள உணவு, விழாக்கள், சுற்றுலாத் தளங்கள், மலைகள், காயல் கள், கடற்கரைகள், வன உயிர்கள், நீர்வீழ்ச்சிகள் ஆகிய இயற்கையின் பரிசுகளை அதிகம் கொண்ட நாடு.

கேரளா என்றாலும் சுற்றுலா என்றாலும் ஒன்றுதான். தேக்கடி, பெரியார் தேசியப் பூங்கா, மூணார் (Munnar), வயநாடு (Wayanad), ஆலப்புழா, கொச்சி, கொல்லம், கோவளம், கும ரகம், பூவார் பீச், ஆத்திரப்பாலி நீர்வீழ்ச்சி, (Athirappally Waterfalls) மலயாட்டூர் தேவாலயம், வல்லார் பாடம் தேவால

யம், புனலூர் தொங்கு பாலம் என்பன பிரதான சுற்றுலாத் தலங்களாகும். பிரமாண்டமான மலைகள், அழகிய நீர் நிலைகளின் கரங்களில் இருக்கிறது கேரள பூமி. அழகிய மற்றும் அரிதான தாவர மற்றும் விலங்குகளின் புகலிடமாக கேரளாவில் பல பிரபலமான வனவிலங்குச் சரணாலயங்கள் உள்ளன. 14 வன விலங்குச் சரணாலயங்களும், 02 புலிகள் காப்பகங்களும் உள்ளன. இந்தியச் சோம்பல் கரடி, சிங்க வால் குரங்கு, இந்தியக் காட்டெருமை, வங்கப் புலி, நீலகிரி வரையாடு முதலியனவும், ஆறு தேசியப் பூங்காக்களும் கேரளாவில் உள்ளன. சைலண்ட்வேலி தேசியப் பூங்கா, பாலக் காடு பெரியார் புலிகள் சரணாலயம், தேக்கடி குமரகம் பறவைகள் சரணாலயம், ஆரளம் வனவிலங்குச் சரணாலயம். பரம்பிக்குளம் காட்டுயிர்ச் சரணாலயம், இடுக்கி வன விலங் குச் சரணாலயம். இரவிக் குளம் தேசியப் பூங்கா, கடலுண் டிப் பறவைகள் சரணாலயம், சின்னாறு வனவிலங்குச் சரணா லயம், இடுக்கிச் சிம்மினி வனவிலங்குச் சரணாலயம். சூலன் னூர் மயில்கள் சரணாலயம், பாலக்காடு செந்தூர்னி வனவி லங்குச் சரணாலயம், கொல்லம் தட்டேகாடு பறவைகள் சர ணாலயம், ஏர்ணாக் குளம் குதிரை மாளிகை, குமுளி அருவி. இவை தவிர சபரிமலை, ஆற்றுக்கால் பகவதி கோவில், சோட்டானிக்கரை பகவதி கோவில், அய்யப்பன் கோவில்கள், மீன்குளத்திப் பகவதி கோவில், குருவாயூர் குரு வாயூரப்பன் கோவில், திருவனந்தபுரம் பத்மநாபசாமிக் கோயில், மங்கலதேவி கண்ணகி கோயில் ஆகிய ஆன்மீகத் தலங்களும் உள்ளன.

சுற்றுலா நாடுகளுள் கேரளாவும் பார்க்க வேண்டிய ஒரு இடம். மூணார், மலைப் பிரதேசம். மூன்று ஆறுகள் ஒன்று சேரும் இடம். தமிழ்நாட்டுக் கலாசாரம் நிறைந்த இடம். பள் ளத்தாக்குகள், பசுமையான மலைகள், எட்டுக்கு மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள், மைனாப்பாறை, தேயிலைத் தோட்டங்கள், யானைச்சவாரி, அருங்காட்சியகம் என்பன உள்ளன.

கேரளாவின் முதன்மையான ஹனிமூன் ஸ்தலமாகும். வய நாடு, முக்கியமான சுற்றுலாத்தளம். இது பூலோக சொர்க் கம். வற்றாத அழகு கொட்டிக்கிடக்கும் இடம். இங்கு கூடிய பகுதி வனப்பகுதி. மேற்குத் தொடர்ச்சியின் பசுமையான மலைகளுக்கிடையில் உள்ளது. ஜுன் முதல் செப்ரெம்பர் வரை மழைக்காலம். இங்கு தங்குவதாயின் மரவீடுகள் உண்டு. கடல்மட்டத்திலிருந்து 2100 மீற்றர் உயரமான செம்ப ராசிச் சிகரம் உள்ளது. இங்கு செல்வதாயின் வழிகாட்டி தேவை. ஏறுவதற்கு பணம் அறவிடப்படும். மலைக் குடில் கள் உள்ளன. மனிதரின் மண்டை ஓடு போன்ற தலைப் பாறை உண்டு. மனிதஇதய வடிவில் ஒரு ஏரி உள்ளது. மனித வாழ்க்கை வரலாற்றை அறியக்கூடிய பகுதிகள் உள் ளன. கோப்பித் தோட்டமும் உண்டு. இங்கிருந்து காற்றில் மிதந்துவரும் நறுமணம், மனதை மயக்கும் சுற்றுலாத் தளங் கள் பல உள்ளது.

திருவனந்தபுரம், மகாத்மாகாந்தி இந்நகரத்தை என்றும் பசுமை மாறாநகரம் என்று குறிப்பிட்டுள்ளார். மேற்குத் தொடர்ச்சி மலைகளுக்கும், அரபிக்கடலுக்கும் இடையில் பொதிந்துள்ள கண்ணூர் பிரதேசமானது இயற்கை எழில், தனித்தன்மை வாய்ந்த பாரம்பரிய கலாசார இயல்புகளைக் கொண்டது. சபரிமலை, மேற்குத் தொடர்ச்சி மலையில் அடர்த்தியான காடுகள் நிரம்பிய பகுதியில் ஓடைகள் மற்றும் வளைந்து நெளிந்து ஓடும் பம்பாநதி ஆகிய அம்சங்களைக் கொண்டுள்ளது. தலைநகரான திருவனந்தபுரத்துக்கு அருகில் 16 கி.மீ. தூரத்தில் உள்ள பிரபலமான கடற்கரைச் சுற்று லாத்தளம் கோவளம் ஆகும். கோவளம் எனும் பெயருக்கு மலையாள மொழியில் தென்னந்தோப்பு என்பது பொருள். பெயருக்கு ஏற்றபடி கடற்கரைப் பகுதியில் அதிக தென்னந் தோப்புகள் உள்ளன. ஆலப்புலா, கேரளா கடவுளின் சொந்த தேசம் என ஏன் அழைக்கிறார்கள் என்பதைப் புரிந்து கொள்ளச் செல்ல வேண்டிய இடம். படகு இல்லத்தில் (Houseboat Cruise) ஓடைகளுக்கு நடுவே வீற்றிருக்கும் ரம்மி யமான பசுமை போர்த்த சோலை வழியாக இயற்கைக் காட் சிகளைப் பார்த்துக்கொண்டே ஒரு நாள் முழுவதும் பயணம் செய்யும்போது ஏற்படும் அனுபவமும், இனிமையான மகிழ்ச் சியும் சொல்லியடங்காது என நான் அனுபவித்தவன் என்றவ கையில் கூறுகின்றேன்.

கொச்சின், நவீனம் மற்றும் பாரம்பரியம் இரண்டுமே கலந்து காட்சியளிக்கும் இடம். இரசனையில் வேறுபட்ட ஒவ்வொருவ ருக்கும் ஏதாவதொன்று இங்கு உள்ளது. இங்கு விமானநி லையமும் உள்ளது. இங்குள்ள எந்த கொட்டேலுக்குச் (Hotel) சாப்பிடப்போனாலும் சாப்பிட்ட பின்னர் சாப்பாடு ஜீர ணிக்கக் கூடியவகையில் கொறிப்புகளும், நீரும் தருவார்கள்.

உலகிலேயே இரண்டாவது பெரிய வில்லணை இடுக்கியில் உள்ளது. சொக்கவைக்கும் இயற்கைக் காட்சிகளைப் பின்ன ணியாகக் கொண்ட இடம். கொல்லம், 'கொல்லம் கண்டவர் இல்லம் திரும்பார்' என்று மலையாளப் பழமொழி. இந்த இடத்துக்கு விஜயம் செய்தால் அதன் கலாசாரம் மற்றும் செழிப்பில் சுற்றுலாப் பயணிகள் மயங்கிவிடுவார்கள். கேர ளாவின் மிகப்புகழ் பெற்ற சிற்பங்களில் ஒன்றாகத் திகழும் யஷி சிலை அற்புதமான கலைப்படைப்பாகப் போற்றப்படு கிறது. கேரளாவின் புகழ்பெற்ற சிற்பிகளில் ஒருவரான கானைக்குஞ்சிராமன் 1969-ல் புராணக் கதாபாத்திரமான யஷிக்கு சிலை வடிவம் கொடுத்தார். இச்சிலை 30 அடி உயரமான நிர்வாணச் சிலையாகும். இதைக் காண்பதற்காக மலம்புழா கார்டனுக்குச் சுற்றுலாப் பயணிகள் அதிகம் செல் கிறார்கள்.

கேரளாவின் பிருந்தாவனம் என அழைக்கப்படும் மலாப்பு ழாத் தோட்டம். இது இயற்கையின் அற்புதம். புதுமையின் அழகு. ஆடம்பரமான புல்வெளிகள், மலர்ப் படுக்கைகள், நீரூற்றுகள், குளங்கள், ஓவியங்கள் சூழப்பட்ட இடம். இந்தத் தோட்டத்தில் மனித உழைப்பினால் உருவான கால்வாயில் படகுமூலம் இன்பமாகப் பொழுதைக் கழிக்கலாம்.




natkunalingam@thaiveedu.com

# பெண்ணிலைவாதக் கலைச் செயற்பாட்டாளர்

# கமலா வாசுகி

- து. கௌரீஸ்வரன்



இலங்கைத் தமிழ்ச் சூழலில் கலைச்செயற்பாடுகள் ஊடாகப் பெண்ணிலைவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வரும் ஓவியக் கலைஞர் கமலா வாசுகி அவர்களின் கலைப்படைப்பாக்கங்களின் கண்காட்சி எதிர்வரும் ஏப்பிரல் 05-ஆந் திகதி தொடக்கம் 10-ஆந் திகதி வரை மட்டுநகர் இல. 55, லேடிமனிங் டிறைவ் எனும் முகவரியிலுள்ள இல்லத்தில் நடைபெறவுள்ளது. இதை முன்னிட்டு கமலா வாசுகியின் படைப்புவெளி சார்ந்து தாய்வீடு ஏப்பிரல் 2023 இதழிற்கான இக்கட்டுரையில் உரையாடப்படுகின்றது.



கமலா வாசுகி அவர்கள் இலங்கையின் யாழ்ப்பாணத்தில் பிறந்து அங்கேயே கல்வி கற்றவர். ஓவியத்தில் இவருக்கிருந்த நாட்டம் இவருடைய பாடசாலைச் சித்திரப்பாட ஆசிரியையான திருமதி எம்.வி.ஆர். சின்னப்பு அவர்களால் ஊக்குவிக்கப்பட்டு பிரபல ஓவியர் மாற்கு மாஸ்டர் அவர்களின் வழிப்படுத்துகையுடன் வளர்த்தெடுக்கப்பட்டுள்ளது.

1986-ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஓவியர்களான அருந்ததி, சுகுணா, நிர்மலா ஆகியோரின் பிரமாண்டமான ஓவியக்காட்சியால் கவரப்பட்டு அதன்பின்னர் ஓவியக் கலைஞர் அருந்தியுடன் நெருக்கமாகி ஈழத்தின் குறிப்பிடத்தக்க பெண்ணிலைவாத ஓவியக் கலைஞராகத் தன்னுடைய படைப்பாக்கங்களுடாகக் கமலா வாசுகி அவர்கள் தனது அடையாளத்தை வெளிக்காட்டியுள்ளார். இவருடைய ஓவியச் செயற்பாடுகளைக் கவனத்திற் கொண்டு 2001-ம் ஆண்டு யப்பான் இலங்கை நட்புறவுச் சங்கம் இவருக்கு அனைத்துலக BUNKA AWARD-ஐ வழங்கி மாண்பு செய்துள்ளது.

இவருடைய முதலாவது தனிநபர் ஓவியக் காட்சி யாழ். பல்கலைக்கழகத்தில் 1989 பெப்பிரவரி 02-ம் திகதி ஆரம்பித்து ஐந்து தினங்கள் நடைபெற்றுள்ளது. பின்னர் 1990-களில் கொழும்பில் விபவி கலாசார நிலையத்தில் ஒரு வருடம் பணியாற்றிவிட்டு மீண்டும் யாழ்ப்பாணம் திரும்பினார். அக்காலத்தில் யாழ் குடா நாட்டில் நடைபெற்ற பல்வேறு காத்திரமான நாடக அரங்கச் செயற்பாடுகளில் காண்பியக் கலைஞராகச் செயற்பட்டுள்ளார். 1995-ம் ஆண்டு மட்டக்களப்பு வருகிறார். மட்டக்களப்பில் சூரியா பெண்கள் அமைப்பின் பெண்ணிலைவாத கலையாக்க நடவடிக்கைகளில் தீவிரமாகப் பங்குபற்றிய நிலையில் 1998-ம் ஆண்டு மட்டுநகர் சாள்ஸ் மண்டபத்தில் தனது ஓவியக்கண்காட்சியை நடத்தியிருந்தார். இக்காட்சியில் இவரால் ஆக்கப்பட்டிருந்த பிள்ளையார் பறை ஓவியம் பலரது கவனிப்பிற்கும் உரியதாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

தொடர்ந்து தனது கலையாக்க நடவடிக்கைகளூடாகப் பெண்ணிலைவாதச் செயற்பாடுகளை முன்னெடுக்கும் ஒரு கலைச் செயல்வாதியாக அனைத்துலகப் பெண்ணிலைவாதிகளின் வலைப்பின்னலுடன் இணைந்து தென்னாசியச் சூழலில் இயங்கிக்கொண்டிருக்கின்றார்.

தன்னுடைய கலையாக்க வல்லமைகளைப் பயன்படுத்தி பெண்ணிலைவாதச் சிந்தனைகளை அதற்கான வாழ்க்கை முறைமைகளைப் பரவலாக்கஞ்செய்யும் செயற்பாடுகளில் சமூகக் குழுக்களுடன் இவர் இயங்குவதால் இளந் தலைமுறைகளைச் சேர்ந்த கலைச் செயற்பாட்டாளர்கள் பலர் உருவாக்கம் பெறுவதற்குரிய ஆக்கபூர்வமான பங்களிப்பை வழங்கி வருகின்றார். இவருடைய இணைப்பாக்கத்தில் வன்முறையற்ற வாழ்வுக்கான ஓவியர்களின் குழு, சமதை பெண்ணிலைவாத நண்பிகள் குழு என்பன உருவாக்கப்பட்டு அதனூடாகப் பல ஓவியக் கலையாக்கக் காட்சிகள் இலங்கையின் பல்வேறு இடங்களிலும் நடைபெற்று வருகின்றமை இங்கு குறிப்பிடத்தக்கது.

வரைவதிலும், நுண்ணிய ஆக்க வெளிப்பாடுகளில் ஈடுபடுவதிலும் ஆர்வமும் திறனுமுடைய மனிதர்கள், எவ்வாறு அவற்றினூடாகத் தத்தமது உள்ளத்து உணர்வுகளைக், கருத்துக்களை வெளிப்படுத்த முடியும் என்பதற்கான இலகுபடுத்துனராகப் பல்வேறு களப்பயிற்சிகளில் இவர் காரியமாற்றுவதால் ஓவியங்கள் மற்றும் கலையாக்கங்கள் ஊடாகச் சாதாரண மக்களின் உணர்வுகளையும், குரல்களையும் பொதுவெளிக்குக் கொண்டு வரும் கலைச்செயல்வாதியாக இவர் இயங்கி வருகின்றார். பல்வேறு இடங்களிலும் பலதரப்பட்ட சமூகக் குழுவினருடன் இவர் நடத்திய கலையாக்கக் களப்பயிற்சிகளும் அதனூடாக உருவாக்கம் பெற்ற கலையாக்கங்களும் இதற்கான சாட்சியங்களாகக் காணப்படுகின்றன.

இவ்வாறு தன்னிடமுள்ள ஓவியக் கலையாக்க வல்லமையினைப் பயன்படுத்திப் பெண்ணிலைவாதச் சிந்தனைகளை, பால்நிலை ஏற்றத்தாழ்வற்ற வாழ்க்கை முறைகளைப் பரவலாக்குவதில் முழு அளவில் தன்னை ஈடுபடுத்தித் தீவிரமாக இயங்கி வரும் கமலா வாசுகி அவர்கள் தன்னுடைய அனுபவங்களைத் தனக்குக் கைவந்த ஊடகமான ஓவியம் ஊடாகப் பதிவாக்கி அதனைப் பொது வெளியில் பகிர்வதற்கும் தயாராகி வந்துள்ளார். அவ்வாறு தனது மூன்று தசாப்த காலத்து அனுபவங்களைப் பகிரும் களமாக 2023 ஏப்பிரல் 05 - 10 வரையான கண்காட்சியை நடத்தத் திட்டமிட்டுள்ளார்.

இலங்கைத் தீவின் வரலாற்றில் 1980 தொடக்கம் 2010 வரையான காலம் பல்வேறு சமூக, பொருளாதார, அரசியல் பண்பாட்டு மாற்றங்களை உருவாக்கிய காலம். ஏகாதிபத்தியம், பூகோள அரசியல், பிராந்திய மேலாண்மை, அடையாளங்களின் அரசியல், அடிப்படைவாதங்களின் அரசியல் எனப் பல்வேறு ஆண் மேலாதிக்க நடவடிக்கைகள் இலங்கைத்தீவின் வரலாற்றில் தாக்கஞ் செலுத்தியுள்ள பின்னணியில் இவை எவ்வாறு பெண்களையும், சிறுவர்களையும், விளிம்பு நிலைச் சமூகங்களையும், இயற்கையினையும் பாதிக்கச் செய்து வருகின்றது என்பதையும், இதற்கான பெண்நிலைப் பார்வைகளையும், பதில்களையும் வழங்கும் வகையில் இந்த மாறுபட்ட காலங்களில் பிரக்ஞையுடன் செயலாற்றிய ஒரு கலைச் செயற்பாட்டாளரின் அனுபவங்களாக கமலா வாசுகியின் ஓவியங்கள் நம்முடன் உரையாடுகின்றன.

அதாவது நமது வரலாற்றில் நமது பண்பாடுகளில் நடைபெறும் ஒவ்வொரு நிகழ்வுகள் பற்றியும் மிகப்பெரும்பாலும் ஆண் ஆதிக்க மையப்பட்ட பார்வைகளும், பதிவுகளும், வியாக்கியானங்களும், கருத்துருவாக்கங்களும், திறனாய்வுகளுமே மேலோங்கிக் காணப்பட்டு வரும் பின்புலத்தில், பெண்ணிலை நின்று பார்க்கும் பார்வைகளும், பதிவுகளும், கருத்துருவாக்கங்களும், திறனாய்வுகளும் மிகவும் தேவையாக உணரப்படும் இன்றைய காலத்தில் கமலா வாசுகியின் கலையாக்கங்கள் கடந்த மூன்று தசாப்த காலத்து அனுபவங்களைப் பெண்ணிலை நின்று வெளிக்காட்டுபவையாக முக்கியம் பெறுகின்றன.

கமலா வாசுகியின் படைப்பாக்கங்கள் அனுபவங்களைப் பேசுபவையாகவே காணப்படுகின்றன. அதாவது நிகழ்வுகள், சம்பவங்கள் என்பவற்றுடன் எவ்விதத் தொடர்புகளுமற்றுத் தேவை கருதிக் கலையாக்கஞ் செய்யும் ஒரு படர்க்கை நிலைப் படைப்பாளியாக அல்லாமல் தனது வாழ்க்கைப் பயணத்தில் தான் பங்குபற்றிய ஒவ்வொரு நடவடிக்கைகளினதும் அனுபவங்களையும் உணர்வுகளையும் வெளிக்காட்டும் ஊடகமாகவே தனது ஓவியப் படைப்புகளை இவர் உருவாக்கி வருகின்றார்.


ஒடுக்குமுறைகளை எதிர்கொள்வது அவற்றிற்கு எதிர்வினையாற்றுவது என்பது பெண்ணிலைவாதிகளைப் பொறுத்தளவில் வன்முறைத் தன்மை அற்றதாகவே இருந்து வருகின்றது. மிகப்பெரும்பாலும் படைப்பாக்கச் செயற்பாடுகளூடாக ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் பெண்ணிலைவாதிகள் தமது எதிர்ப்புக்களை வெளிக்காட்டி வருகின்றார்கள். இதனால் பெண்ணிலைவாதிகளின் போராட்டங்கள் எந்தவிதத்திலும் நிராகரிக்க முடியாதவையாக, நியாயமானவையாக மேலெழுந்து நிற்கின்றன. இந்தவகையில் கமலா வாசுகியின் கலைப்படைப்பாக்கங்கள் ஒவ்வொன்றும் கடந்த மூன்று தசாப்த காலத்தில் பல்வேறு தரப்புக்களினாலும் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு ஒடுக்குமுறைகளுக்கும் எதிரான ஒரு பெண்ணிலைவாதியின் நிராகரிக்க முடியாத எதிர்ப்புக் குரல்களாகக் காட்சி தருகின்றன.


கமலா வாசுகியின் படைப்புக்களும் செயற்பாடுகளும் கலையாக்கச் செயல்வாதத்தின் அழகியலின் பல்வேறு பரிமாணங்களை உய்த்துணரச் செய்பவையாகக் காட்சியளிக்கின்றன.

எனவே இலங்கையின் கடந்த மூன்று தசாப்த காலத்து அனுபவங்களைப் பேசும் கமலா வாசுகி எனும் பெண்ணிலைவாதக் கலைச் செயற்பாட்டாளரின் கலையாக்கங்களையும் அதனூடாக அவர் பகிரும் செய்திகளையும் கவனத்திற் கொள்ளுவோம். அவரின் படைப்பாக்க வெளியை மேலும் வலுப்படுத்திப் பரவலாக்குவோம்.



gowrieeswaran@thaiveedu.com





# அரவிந்தனின் சிறிய உலகம்

**– ஓவியர் ஜீவா**

ஓவிய மனம் கொண்ட இயக்குனர்கள் இயக்கும் திரைப்படங்கள் எப்போதுமே கலைத்தன்மை நிறைந்து, மற்ற திரைப்படங்களில் இருந்து வித்தியாசப்பட்டும் திகழ்வதை நாம் பார்க்கிறோம். ஹிட்ச்காக், சத்யஜித்ராய், பாபு, பி.என்.-மேனன், பரதன், அரவிந்தன், ஐ.வி. சசி, அமோல்பாலேக்கர், எம்.எப். ஹுசைன் தொடங்கி கதிர், ரஞ்சித் என்று இந்த பாரம்பரியம் தொடர்ந்து வந்து கொண்டே வருகிறது. நான் சென்னையில் படிக்கும்போது 'உத்தராயணம்' என்ற திரைப் படத்தை பார்த்தேன். அதன் உருவாக்கம் வெகு வித்தியாசமாக இருந்தது. இயக்குனர் அரவிந்தன் என்ற பெயர் மனதில் ஒட்டிக்கொண்டது!

அரவிந்தனின் தந்தை ஒரு நகைச்சுவை எழுத்தாளர். அரவிந்தனும் ஒரு கேலிச்சித்திரக்காரராக தன் கலைப்பயணத்தை மாத்ருபூமி பத்திரிகையில் தொடங்கினார். 'செரிய மனுஷ்யரும் வலிய லோகமும்' என்ற அவருடைய நகைச்சுவை படத் தொடரை அறியாத மலையாளிகள் இருக்கமாட்டார்கள்! அரசியல் மற்றும் சமூக வாழ்வு குறித்த அங்கதம் விரவிக்கிடந்த தொடர் அது. றப்பர் போர்டில் பணி புரிந்து கொண்டிருந்தாலும், நாடகத்துறை, பத்திரிகைத்துறை என்று அவரது ஆர்வம் பரந்து நீண்டிருந்தது. காவாலம் நாராயண பணிக்கர் என்ற நாடகத்துறை மேதையுடன் இணைந்து பணியாற்றி பல அனுபவங்களை பெற்றார். ஓவியர்கள், இலக்கியவாதிகள் என்று நெருங்கியிருந்த தொடர்புகளால் அவரது ஆக்கங்களில் பலருடைய பாதிப்புகள் விரவியிருந்தன. 'உத்தராயணம்'கூட பிரபல எழுத்தாளர் 'தெக்கோடியனால்' எழுதப்பட்டதுதான்.

சென்னையில் அடுத்த படத்தையும் பார்த்தேன். வால்மீகி ராமாயணத்தில் உத்தர காண்டத்தை தேர்ந்தெடுத்து அதை தனது பாணியில் ஸ்ரீ கண்டன் நாயர் 'காஞ்சன சீதா' என்ற நாடகத்தை எழுதியிருந்தார். தன் பிரஜைகளை சமாதானப்படுத்த, சீதையை காட்டுக்கு அனுப்புகிறான் ராமன். அதை தொடர்ந்து வெண்குதிரை அஸ்வமேத யாகம் செய்வதற்காக காட்டுக்குள் அனுப்பப்படுகிறது. இலக்குவனும் ஊர்மிளாவும் இராமனும் ஆந்திர ஆதிவாசிகளைப் போலதான் காட்சியளிக்கிறார்கள். ரவி வர்மா ஓவியங்களைப்போல அல்ல! கருத்த மேனியும், தாடி மீசையுமாக காட்சியளித்த ராம லட்சுமணர்கள் எனக்கு அப்போது அதிர்ச்சியை தந்தவர்கள். சீதையை காட்டாமல், அவளை இயற்கையோடு ஒத்திணைந்த பாத்திரமாக அமைக்கப்பட்டிருந்தது திரைக்கதை. ஆந்திராவின் பழங்குடிகள் வாழும் அடர்ந்த காடுகளில் படம் உருவானது. தங்களை ராமனின் வழித்தோன்றல்களாக அறிவித்த ராம செஞ்சு என்ற பழங்குடியை சேர்ந்த நடிப்பு அனுபவமற்ற மனிதர்களே முக்கிய பாத்திரங்களை ஏற்று நடித்தனர். ஷாஜி கருண் ஒளிப்பதிவும், பிரபல ஓவியர் நம்பூதிரியின் கலை இயக்கமும், அரவிந்தனின் தத்துவமயமான உருவாக்கமும் இந்த திரைப்படத்தின் அழகியலை மேலும் கூட்டி சிறப்பித்தன. ராமன் இறுதிக்காட்சியில் கையில் நெருப்புடன், சீதா சீதா என்று விளித்துக்கொண்டு ஆற்றில் இறங்குகிறான். ராமாயணத்தில் இல்லாத காட்சி, திரைப்பட சுதந்திரத்துடன் தோற்றம் தந்தது!

சர்க்கஸ் என்பது மலையாளிகளின் வாழ்க்கையோடு பின்னிப் பிணைந்தது. அந்த தொழில் உச்சத்தில் இருந்தபோது கலைஞர்கள் பெரும்பாலும் மலையாளிகளாகவே இருந்தனர். இதற்காக கோச்சிங் சென்டர்கள் கூட தலைசேரி போன்ற இடங்களில் இருந்ததாக கேள்விப்பட்டிருக்கிறேன். பல இயக்குனர்கள் சர்க்கஸ் பின்னணியில் அங்கு படங்களை உருவாக்கியிருக்கின்றனர். பி. பாஸ்கரன், பரதன், கே.ஜி-ஜியார்ஜ் என்ற வரிசையில் அரவிந்தனும் 'தம்பு' என்ற அற்புதத் திரைப்படத்தை உருவாக்கினார். தம்பு என்றால் கூடாரம். பாரதப்புழா நதிக்கரையில் இருக்கும் ஒரு சிறிய கிராமத்துக்கு முகாமிட வரும் ஒரு சர்க்கஸ் குழுவினரையும் அந்த கிராமத்தில் வாழும் மனிதர்களையும் இணைத்து உருவாக்கப்பட்ட திரைக்கதை. கருப்பு வெள்ளையில் மனித மனங்களின் உறவையும் வெறுமையையும் அலசிய திரைப்படம். இளைஞர்களாக இருந்த நெடுமுடி வேணு, கோபி, ஜலஜா போன்ற நடிகர்கள் ஒரு அரிய அனுபவத்தை தந்த திரைப்படம் இது! இந்த திரைப்படம் தற்போது புதிய தொழில்நுட்பத்தில் அரசால் புதுப்பிக்கப்பட்டு, டிஜிட்டல் திரைப்படமாக உலகெங்கும் உள்ள திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டு வருகிறது! அரவிந்தனுக்கு பல விருதுகளை பெற்று தந்த படம் இது!

கும்மாட்டி, எஸ்தப்பன் என்று இதற்கு பின்னால் வந்தவை, கேரள நாடோடிக்கதைகள், வாழ்வியல், கிராமத்து மனிதர்கள், விவிலிய குணச்சித்திரங்கள், குழந்தைகளின் உலகம் என்ற தளங்களில் ஒரு சுதந்திரத் தன்மையோடு வந்த திரைப்படங்கள். எஸ்தப்பன் என்பது ஸ்டீபன் என்ற கிறித்துவப் பெயரின் கொச்சை மலையாள உச்சரிப்பு! இரண்டுமே



நம்மை ஆக்கிரமிக்கும் மாயத்தன்மை மிளிர்ந்த திரைப்படங்கள்!

'போக்குவெயில்' ஒரு கவிதை எழுதும் இளைஞனின் தனிமையையும் அவனை சுற்றி வாழ்ந்த நட்புகளையும், அவனது மனப்பிறழ்வின் காரணங்களையும் ஒரு பிரத்யேக பாணியில் சொன்ன திரைப்படம். அவனது வாழ்க்கை அவனது தந்தை, புரட்சிகர சிந்தனையும் செயலுமாய் இருக்கும் ஒரு தோழன், விளையாட்டில் ஆர்வமிக்க இன்னொரு வகுப்புத்தோழன் மற்றும் இசையை நேசிக்கும் ஒரு இளம் பெண் ஆகியோரை சுற்றி வருகிறது. அவனது தந்தை இறந்து போகிறார், புரட்சிக்காரன் வேறு இடம் தேடி விலகிப்போகிறான், விளையாட்டு வீரன் அடிபட்டு படுக்கையில் வீழ்கிறான், பெண்ணை அவளது குடும்பத்தினர் நகரத்திற்கு அழைத்துச் செல்கிறார்கள், இவன் மனம் பிறழ்ந்து அறைக்குள் முடங்கிக்கிடக்கிறான்.

எந்த இலக்கிய வாசம் மிக்க பார்வையாளரையும் உலுக்கும் இந்த திரைப்படத்தில் நாயகனாக நடித்தவர் கவிஞர் பாலச்சந்திரன் சுள்ளிக்காடு. இவரது கவிதைகளே படம் முழுவதும் மிதந்து வந்தன. படத்திற்கு இசை அமைத்தவரும் இவரே. படமாக்கத்திற்கு முன்பே புல்லாங்குழல் மேதை ஹரிபிரசாத் சௌராசியாவும், சரோட் கலைஞர் ராஜீவ் தாராநாத்தும் இசையை வாசித்து பதிவு செய்த பின்பே, படத்தின் காட்சிகள் பின்னணி இசைக்கு ஏற்ப அமைக்கப்பட்டன. இது அப்போதே ஒரு புதுமை! மனித மனதின் வரையறுக்க முடியாத தன்மை இந்த படத்தின் கரு. அதற்கேற்ப நேர்வடிவமற்ற காட்சிகளின் மூலம் அவனுடைய வாழ்க்கை நமக்கு சித்தரிக்கப்பட்டது. நாயகனின் சிநேகிதியாக நடித்தவர், பின்னர் தமிழ்ப்படங்களில் பருத்த உருவமுடைய பெண்ணாக வந்த கல்பனா! அரவிந்தனின் திரைப்படங்களில் எனக்கு மிகவும் பிடித்த படமிது!

'சிதம்பரம்', அரவிந்தனின் அடுத்த திரைப்படம். சி.வி ஸ்ரீராமன் எழுதிய கதை. இதில் கொஞ்சம் புகழ் பெற்ற நடிகர்களை நடிக்க வைத்தார். மலையாள சினிமாவின் பிரபல நகைச்சுவை நடிகரும், கதை வசனகர்த்தாவும், இயக்குனருமான சீனிவாசன், ஹிந்தித்திரையுலகின் புகழ் பெற்ற நடிகை ஸ்மிதா பாட்டீல், அற்புத நடிகர் கோபி முக்கிய பாத்திரங்களில் நடித்தனர்.

கதையின் தளம் தேயிலைத்தோட்டங்களும் மாட்டுப்பண்ணைகளும் மிகுந்த மூணாறு. அங்குள்ள மாட்டுப்பண்ணையின் மேலாளர் சங்கரன். புகைப்படங்களில் ரசனையுள்ள நல்ல மனிதன். அவருடன் பணிபுரியும் ஜேக்கப் கண்டிப்பும் கடுகடுப்பும் மிக்கவன். பண்ணையில் பணி புரியும் முனியாண்டி ஒரு எளிய தமிழன். தமிழ்நாட்டில் நடைபெறும் தனது திருமணத்திற்கு விடுப்பு கேட்கிறான். தமிழ்நாட்டை புகைப்படமெடுக்கவும் திருமணத்தில் கலந்து கொண்டு அங்கும் புகைப்படங்கள் எடுக்கவும் சங்கரனும் கிளம்பிச் செல்கிறான். இங்குள்ள கிராமங்கள், அங்கு நீண்ட வரிசையில் நிற்கும் மண் குதிரைகள், திருமண சடங்குகள் எல்லாமே அவனது புகைப்படத்தாகத்திற்கு தீனியாகின்றன.

மூணாறு வரும் புதுப்பெண் சிவகாமிக்கு எல்லாமே புதுமையாக இருக்கின்றன. பசுமை கொஞ்சும் புற்காடுகள், மோட்டர் பைக் ஒலிகள் எல்லாமே அவளை மருளச்செய்கின்றன. பின்னர் பல நிகழ்வுகள் மூவரையும் இணைக்கின்றன. முனியாண்டியின் மனதில் சந்தேகத்தின் விதைகள் முளைக்கின்றன. அவனது சந்தேகம் ஜேக்கப் மீதுதான். ஒருநாள் மனம்

குழம்பிய முனியாண்டியின் வீட்டருகே பைக் ஒலி கேட்க, அவன் விரைந்து ஓடிச்செல்ல அந்த இருளில் ஓடி மறைந்தது ஜேக்கப் அல்ல, சங்கரன்தான்!

அடுத்த நாள் மாட்டுக்கொட்டடியில் முனியாண்டி தூக்கில் தொங்குகிறான்.

சங்கரனின் வாழ்க்கையே இந்த சம்பவத்திற்கு பின் மாறிப் போகிறது. குடியில் மூழ்குகிறான். கடமையை மறந்து சாராயக்கடைகளை தேடி அலைகிறான்! குற்ற உணர்ச்சி அவனை படாத பாடு படுத்துகிறது! டாக்டர் சொல்லும் அறிவுரைப்படி சுற்றுப்பயணம் கிளம்புகிறான். தமிழகத்தில் சிதம்பரம் கோவில் அவனை வரவேற்கிறது. பிரபஞ்ச நடனம் ஆடும் நடராஜர் சந்நிதியிலிருந்து வெளியே வந்து செருப்பை அணியும்போது, அதற்கு காவல் இருந்த பெண்மணி நிமிர்ந்து பார்க்கிறாள். தற்கொலைக்கு முன் முனியாண்டியால் முகத்தில் ஏற்பட்ட வெட்டுக்காயத்துடன் வயதான தோற்றத்துடன் இருக்கும் சிவகாமியின் முகம் அவளுக்கு இருக்கிறது. சங்கரனின் வாழ்க்கை வட்டம் இந்த சுற்றில் வந்து நிற்கிறது! ‘சிதம்பரம்’ ஒரு அற்புத அனுபவம். குற்ற உணர்ச்சியின் பயணத்தின் கதை. முனியாண்டியாக சீனிவாசனும், சங்கரனாக கோபியும், சிவகாமியாக ஸ்மிதாவும் இந்த திரைப்படத்திற்கு அமைந்த கூடுதல் பலங்கள்!

‘ஓரிடத்து’ அரவிந்தன் படங்களில் கொஞ்சம் மாறுதலானது. தம்புவில் ஒரு சர்க்கஸ் குழு ஒரு கிராமத்தில் நுழைந்து அங்கு ஏற்படும் மாற்றங்களும் சலனங்களும் குறித்த ஒரு பார்வை இருக்கும். இந்த திரைப்படத்தில் நவீனத்துவம் ஒரு பகுதியில் நுழையும்போது ஏற்படும் மனித மன மாற்றங்கள் குறித்த ஒரு அங்கதப்பார்வை இருக்கும். இங்கு நவீனத்துவம், மின்சார அறிமுகம் மூலம் வருகிறது. ஐம்பதுகளில், கேரளத்தில் ஏற்படும் அரசியல் மாற்றங்களின் போது, மின்சாரம் இல்லாத கிராமங்களுக்கு மின் தொடர்பு தரப்படுகிறது. அதன் பின்னணியில் இந்த திரைப்படத்தின் திரைக்கதை அமைக்கப்பட்டிருக்கிறது. அரவிந்தன் தன் பயணத்தை தொடங்கியது கேலிச்சித்திர தொடர்களின் வாயிலாக என்பதால், இதிலும் ஒரு கேலிச்சித்திர தொடர் பாணியில் கதாபாத்திரங்களும் சம்பவங்களும் அமைக்கப்பட்டன. அப்போதைய கேரளத்திற்கே உரிய பாத்திரங்களான எப்போதும் புரட்சி முழக்கங்கள் இடும் கம்யூனிஸ்ட் தையல்காரர், பண்ணையார், அவரது விசுவாச வேலையாட்கள், அறிவாளியான பள்ளி ஆசிரியர், விடலைப் பையன்களும் பெண்களும், போலி டாக்டர், மின்கம்பங்கள் நடுவதற்கும் மின் இணைப்பு தருவதற்கும் வந்திருக்கும் குழுவின் ஓவர்சீயர், அதிகாரிகள், கிராமத்து திருவிழா, அதில் அரங்கேற இருக்கும் மேடை நாடகம், சில காதல் விளையாட்டுக்கள் என்று ஏராளமான பாத்திரங்களும் சம்பவங்களும் நிறைந்து வழிந்தது ஓரிடத்து. நெடுமுடி வேணு, திலகன், சீனிவாசன், சித்-தாரா, வினீத் என்று புகழ் பெற்ற நடிகர்கள் இந்த கேலிச் சித்திரக் கதைக்கு உயிர் கொடுத்தனர். முழுத் திரைப்படமும் அப்போது மின்சார வருகையினால் ஏற்பட்ட கலாச்சார அதிர்ச்சியையும், அதன் சாதக பாதகங்களையும் கோடிட்டு காட்டியது.

அரவிந்தனின் இறுதிப்படங்களாக ‘உண்ணி’யும், மோகன்-லால், நீனாகுப்தா நடித்த ‘வாஸ்துஹரா’வும் அமைந்தன. ‘எஸ்தப்பன்’ தந்த அனுபவத்தால் பிறரது திரைப்படங்களுக்கு இசையமைக்கும் பணியிலும் ஈடுபட்டார். ‘ஆரோ ஒராள்’, ‘பிறவி’ மற்றும் ‘ஒரே தூவல்பட்சிகள்’ என்ற திரைப்படங்கள் அவரது இசை அறிவையும் வெளிப்படுத்தின!

அரவிந்தனின் மறைவு, ஒரு வெற்றிடத்தை ஏற்படுத்தியது என்று சொன்னால் அது மிகையல்ல!



jeeva@thaiveedu.com






மழைக்காடுகளின் தாய்மடி அலையாத்திக் காடுகள்! அலையாத்தித் தாவரங்கள் அல்லது சதுப்புநிலத் தாவரங்கள், கண்டல் தாவரங்கள் (Mangrove) கடலோரங்களில் உள்ள சதுப்பு நிலங்களில், உவர் நிலங்களில் வளர்வன. கடலும் நிலமும் சேர்ந்து சேற்றுப்பகுதியாகவும், சில அடி உயரத்துக்கு நீர் நிறைந்தும் காணப்படும் கரையோரங்களில் இவை செறிந்து வளரும். அலையாத்தித் தாவரங்களில் ஏறக்குறைய 80 இனங்கள் காணப்படுவதுடன், இவற்றில் சிறிய செடிகள் முதல் கட்டடங்களுக்குப் பயன்படும் 60 மீட்டர் உயரமான பெரிய மரங்கள் வரை உள்ளடங்கும். இலங்கை கடலோரப் பிரதேசங்களில் தென்பகுதி மக்களின் பாரம்பரிய நடனங்களின் போது அணியும் முகமூடிகள் திவி கதுரு (Teberneamontana dichotoma) என சிங்களத்தில் அழைக்கப்படுகின்ற இவை அலையாத்தித் தாவரத்தில் இருந்து உருவாக்கப்படுகின்றன.

கண்டல் தாவரங்கள் ஒட்சிசன் குறைவான மண்ணில் வளரும் தன்மை கொண்டன. நிலநடுக் கோட்டுக்கு அண்மையாக இருக்கும், வெப்ப மண்டலம் (Tropics), அயன அயல் மண்டலம் (Subtropics) பகுதிகளிலேயே இவை வளரும் என்றும் அறியப்படுகிறது. மிகவும் கடினமான, சூழலைத் தாங்கும் தன்மை கொண்ட ஒரு சில இனங்கள் மட்டுமே மிதவெப்ப மண்டலத்தில் வாழும் தன்மை கொண்டிருக்கின்றன.

'கண்டல் தாவரங்களென்பது ஓர் அற்புதமான சுற்றுச்சூழல் அமைப்பாகும். அவை எண்ணற்ற விலங்குகள் மற்றும் தாவரங்களுக்கு வாழ்விடங்களை வழங்குகின்றன. கரையோரங்களை அரிப்பு மற்றும் புயல்களிலிருந்து பாதுகாக்கின்றன. மேலும் நீரிலிருந்து மாசுபடுத்திகளை வடிகட்டுகின்ற வடிகட்டியாக செயற்படுகின்றன. இந்த 'கடலின் காடுகள்' உண்மையிலேயே நமது கிரகத்தின் இயற்கை அமைப்புகளின் முக்கிய பகுதியாகும்.' என்கிறார் அமெரிக்க கடல் உயிரியலாளரும் நாடுகாண் பயணருமான சில்வியா எலிஸ் ஏர்லி (Sylvia Alice Earley). அலையாத்திக் காடுகள் உலக சமனிலையைப் பேணி உலக ஜீவராசிகளை பாதுகாப்பதற்கு எந்தளவிற்கு பங்களிக்கின்றன என்பதை இதை விட எளிமையாக விளக்கிவிட முடியாது. தவிர, மனிதச் சமூகத்துக்கும் உயர்ந்த பொருளாதார நன்மைகளையும் இவை வழங்குகின்றன. ஆனால், இலாப வெறிப் பிடித்துப் போயுள்ள மனிதர் இந்த அலையாத்திக் காடுகளையும் விட்டுவைக்க தயாரில்லாத சூழலிலேயே நாம் வாழ்ந்துகொண்டிருக்கிறோம்.

உலகப் பரப்பில் 6 சதவீதத்தை அலையாத்திக் காடுகள் கொண்டுள்ளன. பூமியின் வெப்பமண்டல காடுகளில் இவை 0.7 சதவீதம் மட்டுமே உள்ளன. 1980-ம் ஆண்டில், உலகளவில் மொத்த கண்டல்நிலப் பரப்பளவு ஏறக்குறைய 198,000 சதுர கிலோமீட்டராக இருந்தது. 2000-ம் ஆண்டில், மொத்த பரப்பளவு 150,000 சதுர கிலோமீட்டருக்கும் குறைவாக இருந்தது. 1980-ல் இருந்து 25 சதவீதத்தை சதுப்பு நிலக் காடுகள் இழந்துள்ளன. அதாவது, இந்த இருபது ஆண்டுகளில் காடழிப்பு ஆண்டு விகிதம் 1-3% வரை இருந்தது.

தற்போதுள்ள சதுப்புநிலங்களில் ஏறக்குறைய 26 சதவீத இழப்புக்கு எரிபொருள் மற்றும் வெட்டு மரங்களைப் பெறுவதற்கான காடழிப்பு காரணமாகும். தவிர, மீன் வளர்ப்பு, இறால் பண்ணை, சுற்றுலா விடுதிகள், ஹோட்டல்கள் என்று பெரும் முதலாளிகளின் தலையீட்டினாலும் உலகம் முழுவதும் இக்காடுகள் அழிக்கப்பட்டு வருகின்றன. பல நாடுகளில் கண்டல் காடுகளுக்கு சட்டபூர்வ பாதுகாப்பை ஏற்படுத்தியிருந்தாலும் பொருளாதாரப் போட்டியினால் இச்சட்டங்கள் மீறப்பட்டுக்கொண்டிருக்கின்றன.

உலகில் உள்ள ஏறக்குறைய 70 தனித்துவமான சதுப்புநிலங்கள் உலகளவில் சுமார் 17,000,000 ஹெக்டேர் பரப்பளவைக் கொண்டிருக்கின்றன. மிகக் குறைந்த பன்முகத் தன்மை அமெரிக்கா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ளது. இங்கு 1-3 இனங்கள் வரை காணப்படுகின்றன. தென்கிழக்கு ஆசியாவில்தான் மிகப்பெரிய பன்முகத்தன்மை உள்ளது. 36-46 அலையாத்தித் தாவர இனங்கள் காணப்படுகின்றன.

இவ்வாறிருக்க தென்கிழக்காசியா முழுவதும் 2000 தொடக்கம் 2012-ற்கு இடைப்பட்ட காலப்பகுதியில் அலையாத்திக் காடுகள் ஆண்டுக்கு சராசரியாக 0.18 சதவீதத்தால் இழக்கப்பட்டுள்ளன. இந்தக் காலகட்டத்தில் மீன்வளர்ப்பு, இறால் பண்ணைகள் சதுப்புநில அமைப்புகளில் ஒரு பெரிய அழுத்தமாக இருந்தது. மியான்மாரில் சதுப்புநில இழப்புக்கு முக்கிய உந்துதலாக நெல் விவசாயம் உள்ளது. செம்பனை எண்ணெய் (Palm oil) உற்பத்தியும் விரிவாக்கமும் மலேசியா மற்றும் இந்தோனேசியாவில் ஒரு முக்கிய அச்சுறுத்தலாக உள்ளது. இந்தோனேசியாவின் பப்புவாவிலும் செம்பனையின் அச்சுறுத்தல் எதிர்காலத்தில் அதிகரிக்க வாய்ப்புள்ளது. அதேபோல், பங்களாதேஷின் சுந்தரவனக் காடுகளும் (சுந்தர்




பான் காடுகள்) வர்த்தகப் போட்டியில் பலியாகி அழிந்து வருகின்றன. இந்த சுந்தரவன அலையாத்திக் காடுகளைப் பற்றிதான் இனிப்பார்க்கப் போகிறோம்.

## சுந்தரவன (சுந்தர்பான்) அலையாத்திக் காடுகள்:

இந்தியாவிற்கும் பங்களாதேஷிக்கும் இடையில் 10,000 சதுர கிலோமீட்டர் பரப்புக்கும் மேல் சதுப்பு நிலத் தாவரங்களால் நிறைந்த மிகப்பெரிய சதுப்பு நிலப்பகுதிதான் சுந்தரவன ஒதுக்கக் காடுகள் (The Sundarbans Reserve Forest) ஆகும். சுந்தரவனக் காட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் 1875-ம் ஆண்டு ஆங்கிலேய அரசு இதனை ஒதுக்கக் காடு அல்லது காப்புக்காடாக அறிவித்தது. இதன் 60 சதவீதம் தற்போது பங்களாதேஷ் நாட்டின் எல்லைக்குள் வருகின்றது. உலகத்தின் மிகப்பெரிய அலையாத்திக் காடான இது வங்காள விரிகுடாவில் கங்கை, பிரம்மபுத்திரா மற்றும் மேக்னா நதிகளின் கழிமுகத்தில் அமைந்துள்ளது. அத்துடன் 3 விலங்குகள் சரணாலயங்களையும் உள்ளடக்குகிறது. சுந்தரவனக் காடுகள் பங்களாதேஷின் குல்னா பிரிவில் உள்ள பாலேஸ்வர் நதியிலிருந்து இந்தியாவின் மேற்கு வங்க மாநிலத்தில் ஹுக்ளி நதி வரை நீண்டு கிடக்கிறது.

உலகில் அழிந்து வரும் பல இனங்களின் சொர்க்க பூமியாக சுந்தரவனக் காடுகள் விளங்குகிறது. பங்களாதேஷ் மற்றும் இந்தியாவின் சிறப்பு அடையாளங்களுள் ஒன்றான வங்காளப்புலிகள் (Royal Bengal Tiger) அதிகம் காணப்படும் ஒரே இடம் இந்த சுந்தரவனக் காடுதான். நீரிலும் நீந்தி உயிர்வாழும் தன்மை இங்குள்ள புலிகளுக்கு உண்டு. எனவே அவற்றைப் பாதுகாக்கும் எண்ணத்தில் இந்திய அரசு 1973-ல் சுந்தரவனக் காடுகளை புலிகள் காப்பகமாக அறிவித்தது. ஏறக்குறைய 693 வகையான வனவிலங்குகள், 290 பறவை இனங்கள், 315 வகையான நீர்ப்பறவைகள், 210 வகையான வெள்ளை மீன் இனங்கள், 120 வகையான மீன்கள், 24 வகையான இறால் இனங்கள், 14 வகையான நண்டுகள், 49 வகையான பாலூட்டி இனங்கள். 59 வகையான ஊர்வன, 8 வகையான நிலம் மற்றும் நீரில் வாழும் உயிரினங்கள், கழுகு இனங்கள் என சுந்தரவனக் காட்டை தன் அடைக்கல பூமியாகக் கொண்டுள்ளது ஏராளமான உயிர்கள்.

வங்காள புலியைத் தவிர்த்து, காட்டுப்பூனை, மீன்பிடி பூனை, சிறுத்தை, சித்தல் மான், முதலை, உப்புநீர் முதலை, மக்கர் முதலைகள், காண்டாமிருகங்கள், சதுப்புநில மான்கள், அழியும் நிலையில் உள்ள ஜாவன் காண்டாமிருகங்கள் இங்கு அதிகம் காணப்படுகின்றது. இந்த கடற்கரையில் இரவின் நிலவின் ஒளியில் ஒளிரும் பிளாங்டன் வகை தாவரங்கள் அதிகம் காணப்படும். 1900-ம் ஆண்டுகளின் தொடக்கத்தில், டேவிட் பிரெய்ன் என்ற உயிரியல் ஆய்வாளர், ஏறக்குறைய 330 உயிரினங்கள், இங்கே இருந்ததாக குறிப்பிட்டுள்ளார்.

உலகின் உவர்த்தன்மையுள்ள அலையாத்தி சதுப்புநிலக் காடான இதில் சுந்தரி மற்றும் கோல்பாடா வகை மரங்கள் பெருமெண்ணிக்கையில் காணப்படுகின்றன. கண்டல் தாவரங்கள், சதுப்புநிலக் கோரைகள், கடலில் மிதக்கும் தாவரங்கள், சங்கு போன்ற கடல்வாழ் உயிரினங்கள், கரியமில வாயுவைக் கிரகிக்கும் ஆற்றல் பெற்றவை. அவை சேமித்து வைக்கும் கரியமில வாயுவுக்கு ‘நீலக் கரியமில வாயு’ என்று பெயர். காற்றிலிருந்து கரியமில வாயு உள்ளிழுக்கப்படுவதால் புவிவெப்பம் தணிகிறது. ஆனால் தற்போது, சுந்தரவனக் காடுகளிலுள்ள மரங்களுக்கு, காற்றில் உள்ள கரியமில வாயுவை உறிஞ்சி, ஒட்சிசனை வெளியிடும் ஆற்றல் குறைந்து வருகிறது என்ற தகவல் வெளியாகியுள்ளது. சுந்தரவனக் காடுகள் வேகமாக அழிவை நோக்கிச் செல்வதே இதற்கான காரணமாக இருக்கிறது.

சட்டவிரோத வெட்டுமரத் தொழில், விவசாய விரிவாக்கம், இறால் பண்ணை, சனத்தொகை பெருக்கம் மற்றும் நகரமய மாக்கல், கால்நடை வளர்ப்பு, பருவநிலை மாற்றம் மற்றும் ராம்பால் அனல் மின்நிலையம் ஆகியன சுந்தரவன அலை யாத்திக் காட்டை சவக்கிடங்குக்குள் தள்ளிக்கொண்டிருக்கின் றன.

சுந்தரவனப் பகுதிகளில் சட்டவிரோத வெட்டுமரத் தொழில் கொடிகட்டி பறப்பதுடன், சகல துறையிலும் ஊழல் மலிந்து காணப்படுகிறது. மேலும், உப்பை தாங்கும் நெல் நடவு செய்வதற்காக உள்ளூர் விவசாயிகளால் திட்டமிடப்படாத முறையில் ஏராளமான மரங்கள் வெட்டப்படுகின்றன. இவ் வாறு விவசாயம் வரையறையின்றி விரிவடைந்து செல்வதால் விலங்குகளின் வாழ்விடங்கள் ஆபத்தில் இருக்கின்றன. மேலும், நிலங்களில் பயன்படுத்தப்படும் நைட்ரேட்டுகளின் எண்ணிக்கையால் சுற்றியுள்ள ஆறுகளின் நீரின் தரம் பாதிக் கப்படுகிறது.

அத்துடன் இறால் பண்ணைகளின் ஆக்கிரமிப்பு இந்தக் கண்டல் காட்டின் அழிவுக்கான பிரதான காரணங்களில் ஒன் றாக இருக்கிறது. 1980-களில் இருந்து இறால் வளர்ப்புக்கான



பரப்பளவு கிட்டத்தட்ட 10 மடங்கு அதிகரித்துள்ளது. தற் போது ஒட்டுமொத்தமாக, பங்களாதேஷில் இறால் வளர்ப் பால் 10,000 ஹெக்டேர் சதுப்புநில இழப்பு ஏற்பட்டுள்ளது.

தவிர, பெருகிவரும் மக்கள்தொகைக்கு ஏற்ப மக்களின் தேவை அதிகரித்து, காடுகள் சுருங்குவதற்கு வழிவகுக்கி றது. வீடு கட்டுதல், சாலைகள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைத்தல் போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக காடழிப்பு பெருமளவில் நடைபெறுகிறது. சுந்தரவனக் காடுக ளில் 54 சிறிய தீவுகள் உள்ளன. இவற்றில் 44 இலட்சத்துக் கும் மேற்பட்ட மக்கள் வாழ்கின்றனர்.

அதுபோல, அதிகரித்து வரும் கால்நடை வளர்ப்பின் காரண மாக சதுப்புநில காடுகளின் சுற்றுச்சூழலில் பெரும் இடை யூறு விளைவிக்கும் விளைவுகள் ஏற்படுகின்றன. கிட்டத்தட்ட 340 மில்லியன் டொன் கரியமில வாயு வளிமண்டலத்தில் வெளியேற்றப்படுகிறது, இது உலகளவில் கால்நடை வளர்ப் பால் ஏற்படும் காடழிப்பு மற்றும் தற்போதைய உலகளாவிய உமிழ்வுகளில் சுமார் 3.4% பங்களிக்கிறது.

அத்துடன், காலநிலை மாற்றத்தின் விளைவு காரணமாக மனித உயிர்களின் பாதுகாப்பு, நீர்வாழ் உயிரினங்களுக் கான நாற்றங்கால், மர உற்பத்தி, ஒட்சிசன் உற்பத்தி, கழிவு மறுசுழற்சி, அனைத்தும் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன. வண்டலும், கசடும் ஆற்றில் சமனிலையின்றி படிவதும் சுந்த ரவனக் காடுகளின் அழிவில் தாக்கம் செலுத்துகின்றன. அதனை தடுப்பதற்கு இங்குள்ள செங்கல் சூளைகளைவேறு இடத்திற்கு மாற்றுமாறு சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கோரிக் கையை முன்வைத்துள்ளனர். பங்களாதேஷின் கடலோரப் பகுதிகள் காலநிலை மாற்றத்தின் முன் வரிசையில் இருப்ப தால், புயல், அலைகள், மற்றும் கடல் மட்ட உயர்வு ஆகி யவை நேரடியாக சுந்தரவனக் காடுகளின் இருப்பை அச்சு றுத்துகின்றன. 2080-ஆம் ஆண்டுக்குள் கடல் மட்ட உயர்வு மற்றும் சில பிராந்திய மாறுபாடுகள் காரணமாக கடலோர சுற்றுச்சூழலில் 20% இழக்கப்படும் என்றும் ஆய்வுகள் தெரி விக்கின்றன.

2007-ல் வங்கக்கடலில் உருவான cyclone sidr புயலால் கிட் டத்தட்ட 40% சுந்தரவனம் பாதிப்புக்குள்ளானது. மேலும் 2009-ல் வங்கக்கடலில் உருவான cyclone aila புயல் மீண்டும் சுந்தரவனத்தை அதிகளவில் சேதமடைய வைத்தது. அதனை தொடர்ந்து 2019-ல் cyclone bulbul புயலும் 2020 மே 20-ல் super cyclone amphan புயலும் அடுத்தடுத்து தாக்கின. இவ் வாறான புயலுக்கு தன்னை தியாகம் செய்து பல உயிரி னங்களை பாதுகாத்து பீனிக்ஸ் பறவையாய் உயிர்பெற்று நிற்பவைதான் இன்று நாம் பார்க்கும் சுந்தரவனக் காடுகள்.

'அம்பன் சூறாவளி இந்தியாவின் மேற்கு வங்கத்தில் 1 மில் லியனுக்கும் அதிகமான வீடுகளை அழித்துள்ளது, ஆனால் வங்காளதேசத்தில் சேதம் ஒப்பீட்டளவில் குறைவாகவே உள் ளது. இந்த நூற்றாண்டின் வலிமையான புயலை எதிர்த்து சுந்தரவனக் காடுகள் எண்ணற்ற உயிர்களைக் காப்பாற்றின.' என்று இந்திய சுற்றுச்சூழல் ஆர்வலர் சவுமியா தத்தா தெரி வித்த கருத்து சுந்தரவனக் காடுகளின் இருப்பு ஜீவராசிகளின் இருப்புக்கு நிகரானது என்பதை மேலும் ஊர்ஜிதப்படுத்துகி றது.

ஆனால், சுந்தரவனக் கண்டல் காடுகளின் இருப்பையும், அதனால் காக்கப்படுகின்ற மனிதர் உள்ளிட்ட ஜீவராசிகளின் இருப்பையும் கேள்விக்குட்படுத்தும் வகையில் பாரிய அழிவை விளைவிக்கக் கூடிய ராம்பால் அனல் மின்நிலைய திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

ராம்பால் அனல் மின் உற்பத்தி நிலையம் என்பது, வங்காள தேசத்தின் குல்னாவில் உள்ள பாகர்ஹாட் மாவட்டத்தின் ராம்பால்உபாசிலாவில், 1320 மெகாவாட் நிலக்கரி மூலம் இயங்கும் மின் நிலையமாகும். இது இந்திய அரசுக்கு சொந்தமான தேசிய அனல் மின் நிறுவனம் (National Thermal Power Corporation) மற்றும் பங்களாதேஷ் மின் மேம் பாட்டு வாரியம் (Bangladesh Power Development Board) ஆகியவற்றுக்கு இடையேயான 50:50 கூட்டு முயற்சியாகும். இதை BIFPCL (Bangladesh India Friendship Power Company Limited) நிறுவுகிறது. ராம்பால் மின் நிலையம், Maitree



Super Thermal Power Project என்றும் அழைக்கப்படுகிறது.

ராம்பால் அனல் மின் நிலையம் 1834 ஏக்கர் நிலப்பரப்பில் (விவசாய நிலங்களும் கையகப்படுத்தப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது), சுந்தரவனக் காடுகளுக்கு வடக்கே 14 கிலோமீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இது பங்களாதேஷ் நாட்டின் மிகப்பெரிய மின் உற்பத்தி நிலையமாக இருக்கும் என்றும் எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த திட்டம் நிலக்கரி அடிப்படையிலான அனல் மின் நிலையங்களுக்கான சுற்றுச்சூழல் பாதிப்பு மதிப்பீட்டு வழிகாட்டுதல்களை மீறுகிறது. இவ்வாறிருக்க, 2013 ஒகஸ்ட் 1-ம் திகதி பங்களாதேஷின் எரிசக்தி துறை ராம்பால் கட்டுமானத்திற்கு ஒப்புதல் அளித்தது. அத்துடன் திட்டங்களை மாற்றி 50 முன் நிபந்தனைகளயும் வைத்தது. ஆனால், அதன் அடிப்படை நிபந்தனையையே ராம்பால் அனல் மின் நிலையம் மீறியுள்ளது. அதாவது, இவ்வாறான திட்டங்கள் சுற்றுச்சூழலின் உணர்திறன் பகுதியின் வெளிப்புற சுற்றளவில் இருந்து 25 கிலோமீட்டர் சுற்றளவிற்கு வெளியே இருக்க வேண்டும் என்றிருக்க, ராம்பால் மின் உற்பத்தி நிலையம் சுந்தரவனக் காடுகளில் இருந்து 14 கிலோமீட்டர் தொலைவில் அமைக்கப்பட்டு வருகிறது.

சுந்தரவனக் காடுகளை உருக்குலைக்க வந்திருக்கும் இத்திட்டத்திற்கு எதிராகவும், இத்திட்டத்தின் துவாரம் வழியாக ஊடுருவியிருக்கிற இந்திய ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் மக்கள் போராடி வருகின்றனர்.

ராம்பால் மின் நிலையத்தில் நிலக்கரியை எரித்து மின்சாரம் தயாரிக்கும் போது வெளியாகும் நிலக்கரி சாம்பல் சுந்தரவனக் காடுகளின் சுற்றுச்சூழலுக்கு முதல் அச்சுறுத்தலாக அமைவதாக யுனெஸ்கோ தெரிவிக்கிறது. மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து வெளியேறும் கழிவுகள் மற்றும் நீர் இரண்டாவது அச்சுறுத்தலாக கருதப்படுகிறது.

இந்தத் திட்டத்தைச் சுற்றியுள்ள சுந்தரவனப் பகுதியில் கப்பல் போக்குவரத்து அதிகரிப்பது மற்றும் அகழ்வுகளை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் ஆகியன சுந்தரவனக் காடுகளின் சுற்றுச்சூழலுக்குப் பாதிப்பை ஏற்படுத்தலாம் என்றும், அனல்மின் நிலையத்தைச் சுற்றியுள்ள பகுதியின் ஒட்டு மொத்த தொழில்மயமாக்கல் மற்றும் வளர்ச்சி நடவடிக்கைகள் சுந்தரவனத்தின் சுற்றுச்சூழலை அச்சுறுத்தும் என்றும் யுனெஸ்கோ கருதுகிறது.

ராம்பால் திட்டம் பஸ்சூர் ஆற்றங்கரையில் (Pashur river) அமைந்துள்ளதால், குளிரூட்டலுக்கும் நிலக்கரி போக்குவரத்துக்கும் இந்த ஆறு பயன்படுத்தப்படும். இம்மின் உற்பத்தி நிலையம் செயற்பட ஆரம்பித்தவுடன், ஒவ்வொரு நாளும் 5,150 கன மீட்டர் சுடுநீர் பஸ்சூர் ஆற்றில் வெளியேற்றப்படும் என்று உத்தியோகபூர்வ சுற்றுச்சூழல் தாக்க மதிப்பீடு (EIA) சுட்டுகிறது. இது நதி சுற்றுச்சூழலைப் பாதிக்கிறது. அத்துடன், பஸ்சூர் ஆற்றில் பல்லுயிர் பெருக்கத்தையும் குறைக்கும். மேலும், நிலக்கரியை சுமந்து செல்லும் கப்பல்களின் போக்குவரத்துக்காக ஆறு அகழ்ந்தெடுக்கப்பட்டு வருகிறது. இதிலிருந்து வெளியேறும் எண்ணெய் மற்றும் இரசாயன கழிவுகள் தண்ணீரை மேலும் அசுத்தப்படுத்தும். ஆற்றைத் தவிர்த்து, காற்று, ஒளி மாசடைவதாலும் துர்நாற்றம் வீச நேரிடுவதாலும் அது குடிமக்களுக்கும், வனஜீவராசிகளுக்கும் தீங்கை விளைவிக்கும்.

ராம்பால் அனல் மின் நிலையத்துக்கு 4.72 மில்லியன் டொன் நிலக்கரி இறக்குமதி செய்ய வேண்டும். இந்த பிரமாண்டமான சரக்கு போக்குவரத்திற்கு 80,000 டொன் திறன் கொண்ட 59 கப்பல்கள் தேவைப்படுகிறது. அவை பஸ்சூர் ஆற்றங்கரையில் உள்ள துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்படும். அங்கிருந்து 40 கிலோமீட்டர் தூரத்தில் இருக்கும் ஆலைக்கு சுந்தரவனக் காடுகளை வெட்டி அமைக்கப்பட்டுள்ள ஆற்றுப்பாதை வழியே கொண்டு செல்லப்படும்.

இவ்வாறு நிலக்கரி சுமந்து செல்லும் வாகனங்கள் அதிக அளவில் சாம்பல், நிலக்கரி தூசி மற்றும் கந்தகத்தை சிதறடிப்பதால் அவை பிற நச்சு இரசாயனங்களை வெளியிடுவதாக சூழலியலாளர்கள் தெரிவிக்கின்றனர். டிசம்பர் 2014 முதல் ஜனவரி 2017 வரையிலான காலப்பகுதியில் நிலக்கரி,

எண்ணெய் மற்றும் பொட்டாஷ் ஏற்றப்பட்ட ஐந்து கப்பல்கள் அருகிலுள்ள ஆறுகளில் மூழ்கியுள்ளன. அதனால், ஆழ மற்ற ஆறுகள் வழியாக அதிக அளவு நிலக்கரியை எடுத்துச் செல்வது அச்சுறுத்தலாக உள்ளது.

தவிர, இந்த மின் உற்பத்தி நிலையம் carbon monoxide, nitric oxide மற்றும் sulfur dioxide உள்ளிட்ட நச்சு வாயுக்களை தொடர்ந்து வெளியிடும். இந்த வாயுக்கள் பிரதேச மக்களின் ஆரோக்கியத்தைப் பாதிப்புறச் செய்வதுடன் பண்ணைகள் மற்றும் மீன்வளங்களின் உற்பத்தித்திறனையும் குறைக்கும். தவிர, 2 மில்லின் மக்களின் வாழ்வாதாரத்தையும் பாதிக்கிறது. மின்நிலையத்தை நிர்மாணிக்க விவசாயக் காணிகள் கையகப்படுத்தப்பட்ட போது பலர் அவ்விடத்தை விட்டு இடம்பெயர்ந்து சென்றதாகவும் சொல்லப்படுகிறது.

மனிதருக்கும் சுந்தரவனக் காடுகளுக்கும் ஆபத்தையும் அழிவையும் ஏற்படுத்தக் கூடிய ராம்பால் மின் உற்பத்தி நிலையத்துக்கு எதிராக பங்களாதேஷில் கடந்த 20 வருடங்களாகவே போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. சுந்தரவனச் சதுப்புநிலக் காடுகளை பாதுகாப்பதற்கு மும்முரமாக செயற்பட்டு வரும் அதேநேரம், நேரடியாகவே ராம்பால் மின் உற்பத்தி நிலையத்தை எதிர்க்கும் ‘சுந்தரவன இயக்கம்’ 2013-ம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் வங்காளதேசத்தின் தலைநகரான டாக்காவிலிருந்து சுமார் 400 கி.மீ தொலைவில் உள்ள ராம்பால் வரை Long march (நீண்ட நடைபயணம்) என அழைக்கப்படும் ஐந்து நாள் அணிவகுப்பை முன்னெடுத்திருந்தது. அவ்வியக்கம் சாதித்திருந்த மிகப்பெரிய எதிர்ப்பு நடவடிக்கை இதுவாகும். ஆவணப்படங்கள், கலை காட்சிகளை காண்பித்தல் மற்றும் பொது வேலைநிறுத்தங்கள் என்றும் இத்திட்டத்துக்கு அவ்வியக்கம் எதிர்ப்பு காட்டுகிறது. ‘சக்திக்கு மாற்று நிலக்கரி என்று கொக்கரிக்கிறார்கள். ஆனால், சுந்தபான் காடுகளுக்கு மாற்று இங்கு எதுவுமில்லை.’ என்கிறது சுந்தரவன இயக்கம்.

‘இந்தோ - வங்காள எரிசக்தி உரையாடல்’ என்ற தலைப்பில் நடைபெற்ற மெய்நிகர் கருத்தரங்கில் கலந்துகொண்டிருந்த இந்திய சுற்றுச்சூழல் ஆர்வலர் சவுமியா தத்தா, ‘ராம்பால் மின் உற்பத்தி நிலையத்தால் சுந்தரவனக் காடுகளின் காற்றும், நீரும் மாசுபடும். குறிப்பாக நிலக்கரியில் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து வெளியாகும் பாதரசம் தண்ணீரில் கலந்து மீன்கள் மற்றும் நீர்வாழ் உயிரினங்களை அழித்துவிடும். சுந்தரவனக் காடுகளை இழந்தால், எதிர்காலத்தில் அம்பன் போன்ற சூறாவளிகளில் இருந்து வங்காளதேசத்தைப் பாதுகாக்க யாரும் இல்லை.’ என்று குறிப்பிட்டார்.

ராம்பாலுடன், இந்தியாவின் ஜார்க்கண்டில் உள்ள அதானி - கடா நிலக்கரி மின் திட்டமும் ரத்து செய்யப்பட வேண்டும் என்றும் இந்தக் கருத்தரங்கில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. ராம்பால் போலவே அதானி - கட்டாவும் உயிரையும் இயற்கையையும் அழிக்கும் திட்டம் என்று கூறப்படுகிறது. இத்திட்டத்தால், அப்பகுதியின் காற்று மற்றும் நீர் மாசுபடுவதுடன், நிலத்தின் வளம் பாதிக்கப்படும் என்றும், அந்த திட்டத்தை செயல்படுத்தும் போது, பழங்குடி சாவ்தான் சமூகத்தினர் வெளியேற்றப்பட்டு, அவர்களின் விவசாய நிலங்கள் பறிக்கப்படுகின்றன என்றும் குற்றஞ்சாட்டப்பட்டது.

நிலக்கரியை அடிப்படையாகக் கொண்ட அனல் மின் நிலையம் (9-13 கிலோமீட்டர்) குறுகிய தூரத்தில் கட்டுவது சுந்தரவனத்துக்கு பேரழிவை ஏற்படுத்தும் என பல்வேறு சுற்றுச்சூழல் அமைப்புகள் ஆரம்பம் முதலே எதிர்ப்பு தெரிவித்து வருகின்றன. சர்ச்சைக்குரிய காலகட்டத்தில், யுனெஸ்கோ ஒக்ரோபர் 2016-ல் திட்டத்தின் சாத்தியமான தோல்வி குறித்து முப்பது பக்க நீண்ட ஆய்வு அறிக்கையையும் வெளியிட்டது.

ராம்பாலில் நிலக்கரி அடிப்படையிலான மின் உற்பத்தி நிலையம் கட்டப்படுவதால், சுந்தரவனக் காடுகளும் அதன் விலங்கு பன்முகத்தன்மையும் படிப்படியாக அழிந்துவிடும் என்கிறார் பங்களாதேஷின் எண்ணெய்-எரிவாயு-கனிம வளங்கள் மற்றும் மின் துறைமுகங்கள் பாதுகாப்புக்கான தேசியக் குழுவின் உறுப்பினர் பேராசிரியர் அனு முஹம்மது. வங்கதேசம் போன்ற இயற்கை பேரழிவுகளால் பாதிக்கப்படும் ஒரு நாட்டிற்கு இது ஓர் அச்சுறுத்தும் சமிக்ஞையாகும் என்றும் எச்சரிக்கிறார். நிலக்கரியில் இயங்கும் மின் உற்பத்தி நிலையங்கள் மற்ற மின் உற்பத்தி நிலையங்களை விட அதிக காபனீரொட்சைட்டை வெளியிடுகின்றன எனும் விடயத்தையும் அவர் சுட்டிக்காட்டுகிறார்.

அமில மழை படிவுகள், அத்துடன் நச்சு காற்று மற்றும் இரசாயனங்கள் சுந்தரவனக் காடுகள், சுற்றுச்சூழல் மற்றும் பல்லுயிர் பெருக்கத்திற்கு ஆபத்தானவை என்று யுனெஸ்கோ அறிக்கை மேலும் குறிப்பிடுகிறது. சுந்தரவனக் காடுகள் நீண்ட காலத்துக்கு உயிர் வாழ்வது கவலைக்கிடமாக இருப்பதாகவும் அவ்வறிக்கை தெரிவிக்கிறது. அத்துடன், அனல் மின் நிலையத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட தொழிநுட்பமும் சர்வதேச தரப்படுத்தல்களும் பயன்படுத்தப்படவில்லை என்றும் அவ்வறிக்கையில் பதியப்பட்டுள்ளது.

‘தற்போது supercritical மற்றும் ultra supercritical தொழில்நுட்பத்தை பயன்படுத்தப்பட வேண்டும் என்று பங்களாதேஷ் அரசாங்கம் சொல்கிறது. இது கடலின் மார்பில் இருந்து ஒரு வாளி தண்ணீரை அகற்றுவது போன்ற விடயம்.’ என்கிறார் பேராசிரியர் அனு முகமது.

‘அதிக வெப்பநிலையில் நிலக்கரியை எரித்தால், குறைந்த நிலக்கரியில் அதிக மின்சாரம் தயாரிக்க முடியும். அதாவது அதிக வெப்பநிலையில் நிலக்கரியை எரிப்பதால் சுற்றுச்சூழல் மாசுபாட்டையும் குறைக்கலாம்.

அடிப்படையில் இந்த வெப்பநிலை வேறுபாடு supercritical மற்றும் ultra supercritical தொழில்நுட்பம் இடையே உள்ளது. தொழில்நுட்பம் எவ்வளவு மேம்பட்டதோ, அவ்வளவு வெப்பத்தை உற்பத்தி செய்கிறது.

இந்த தொழில்நுட்பத்தின் மூலம் மாசுபாட்டை 10% வரை குறைக்கலாம். 10% குறைவான மாசுபாடு சுற்றுச்சூழல்

பாதிக்கப்படும் விகிதத்தில் எந்த மாற்றத்தையும் கொண்டு வராது.' என்று அவர் குறிப்பிடுகிறார்.

'நிலக்கரியில் இயங்கும் அனல்மின் நிலையங்களால் ஏற்படும் சுற்றுச்சூழல் பேரழிவைத் தடுக்கக்கூடிய எந்த தொழில்நுட்பமும் உலகில் கண்டுபிடிக்கப்படவில்லை. பாதிப்பைக் குறைக்க முடியாத supercritical மற்றும் ultra supercritical தொழில்நுட்பத்தைப் பற்றி அரசாங்கம் பேசுகிறது.' என்றும் பேராசிரியர் அனு முகமது தெரிவித்துள்ளார்.

உலகின் மூன்றாவது பெரிய கார்பன் உமிழ்வைக் கொண்ட இந்தியா இதுவரையில் நிகர பூச்சிய இலக்கை எட்ட எந்தக் காலக்கெடுவையும் அறிவிக்கவில்லை. தவிர, பாரிஸ் ஒப்பந்தத்தின்படி, 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை திருத்தப்பட்ட கார்பன் குறைப்பு சமர்ப்பிக்கவில்லை. இவ்வாறான இந்திய நாட்டுடன் இணைந்தே சுற்றுச் சூழலுக்கு ஆபத்தை ஏற்படுத்தக் கூடிய ராம்பால் அனல் மின் நிலையம் உருவாக்கப்பட்டுள்ளது.

முறையான தொழில்நுட்பம் பயன்படுத்தப்படாத, தற்காலத்துக்கு அதுவும் சுந்தரவனக் காடுகள் உள்ள பகுதிக்கு கொஞ்சமும் பொருந்தாத அனல் மின் நிலையத் திட்டத்தினால் சுந்தரவனக் காடுகளும், வனஜீவராசிகளும் அழிவடைந்து வருகின்றன. இவ்வாறு சூழலுக்குப் பொருத்தமில்லா திட்டத்தினால் வெளியாகும் காபனீரொட்சைட்டு வளிமண்டலத்தில் அதிகரிக்க போவதுடன், பருவநிலை மாற்றமும் ஏற்படும். ராம்பால் அனல் மின்நிலையம் உருவாக்கப்பட்ட பின்னர் அடுத்தடுத்த வருடங்கள் இரு தடவைகள் சுந்தரவன சதுப்பு நிலக் காடுகள் சூறாவளிக்கு முகம்கொடுத்துள்ளது. இவ்வாறான இயற்கை அனர்த்திலும் கூட ராம்பால் போன்ற திட்டங்கள் செல்வாக்கு செலுத்துவதை மறுக்க முடியாது.

மீன் குஞ்சுகளின் நாற்றாங்காலாக திகழக்கூடிய சுந்தரவனக் காடுகளின் சதுப்பு நிலத் தாவரங்கள் வெட்டப்படுவதாலும், இரசாயன தாக்கங்களால் அழிவடைவதாலும், எதிர்காலத்தில் இக்கடற் பரப்பில் பல மீன் இனங்கள் அழிந்து போவதற்கான சாத்தியக் கூறுகளும் உள்ளன. அதனால், மீன்பிடியை நம்பியிருக்கின்ற மீனவக் குடும்பங்களும் பாதிப்படையும். இது பங்களாதேஷ் நாட்டின் தேசியப் பொருளாதாரத்திலும் தாக்கத்தை ஏற்படுத்தும்.

இந்திய தேசம் பிளவுப்படுவதற்கு முன்பிருந்தே வங்காளம் தன் பிரதேசம் சார்ந்த கலைக்கு பிரசித்திப் பெற்றது. பல மகத்தான கலைஞர்களை மண்ணுக்கு தந்துள்ளது. தற்போதைய பங்களாதேஷிலும் இதன் தாக்கம் சிறிய ஊர்கள் வரையிலும் காணப்படுகிறது. டாக்கா போன்ற நகரங்களின் சிறிய ஊர்களில் முற்றத்தில் நாடக மேடைகள் அமைக்கப்பட்டுள்ளன. இவ்விடத்தில் மக்களின் கலைகள் அரங்கேற்றப்படுகின்றன. தற்போது இந்தக் கலை பயணமும் அஸ்தமனமாகிக் கொண்டிருக்கிறது. இவ்வாறான மக்கள் மேடைகளிலும் ராம்பால் மின் உற்பத்தி நிலையத்தை எதிர்த்தும், சுந்தரவனக் காடுகளை பாதுகாப்பதற்கான விளிப்புணர்வினை ஏற்படுத்தும் முகமாகவும் நாடகங்கள், நாட்டியங்கள், இசைக்கச்சேரிகள் அரங்கேற்றப்படுகின்றன.

ஆக, சதுப்புநிலங்கள் இல்லாத உலகம் என்பது பெரும்பாலான மீன்வளம் இல்லாத உலகமாகும். புயல்களிலிருந்து காக்கும் உயிர்க் கவசங்கள் இல்லாத உலகமாகும். தவிர, பல பறவைகள் மற்றும் பிற இனங்கள் இல்லாத உலகமாகும். ஒரு தனித்துவமான வாழ்விடமான சதுப்புநிலங்களை இழப்பதென்பது, உலக மக்கள்தொகையில் ஒரு பில்லியனுக்கும் அதிகமான மக்களை நேரடியாக ஆபத்தில் ஆழ்த்திவிடும் என்பதை உணர்வோம்.

சுந்தரவனக் காடுகளை ராம்பால் போன்ற டோசர்களிடம் இருந்து பாதுகாக்க நம்மால் இயன்றவற்றை செய்வோம். உலக நாடுகளில் தரைமட்டமாக்கப்பட்டுக் கொண்டிருக்கின்ற சதுப்பு நிலக் காடுகளையும், சதுப்பு நிலங்களையும் காத்திடுவோம். இவ்வாறான வனாந்திரங்கள் எமக்கு எப்போதும் சர்வதேசியத்தையே போதித்துக் கொண்டிருக்கிறது.


**உசாத்துணை:**

- பூமியின் புதுமை! சுந்தரவனக் காடுகள் பாதுகாப்பு - மேரி தெரேசா (vaticannews.va)
- இந்திய பாரம்பரிய இடங்கள் 17! சுந்தரவனக் காடுகள் அழிந்து வரும் உயிரினங்களின் சொர்க்கம்! - புதிய தலைமுறை
- உலகின் மிக பெரிய சதுப்பு நிலக்காடுகளான சுந்தரவனகாடுகள் பற்றிய தகவல்கள் - tamilgeographynews
- The loss of Species: Mangrove Extinction Eisk and Geographic Areas of Global concern - B.A.Polidoro, K.E.Carpenter
- Mangrove deforestation rates increase - staff reporter (4th march 2020) - theecologist.org
- Rates and drivers of mangrove deforestation in Southeast Asia, 2000- 2012 - Daniel R. Rishards and Daniel A. Friess
- Solutions to blue carbon emissions: Shrimp cultivation, mangrove deforestations and climate change in coastal Bangladesh - Nesar Ahmed, William W.L.Cheung, Shirley Thompson and Marion Glaser (Enviromental Law Alliance Worlwide)
- Environmental Degradation Due to Deforestation in Sundarban Forest of Bangladesh. (International Journl of Scientific and Engineering Research - July 2021)
- The Sundarbans - unesco
- Environmentalists stand against Rampal power plant - Mamun Abdullah (dhakatribune.com)
- Sundarbans, Rampal Coal-power Plant and Peoples Movement - Anu Muhammad
- Protests against Bangladesh power plant begin in Dhaka and Cambridge - Shreya Dasgupta (mongabay)
- Proposed Rampal Power Station (Life in The Sunderbans Mangrove Forest)




sathees.selvarajah@thaiveedu.com



உங்கள் நம்பிக்கையோடு
எங்கள் 18 ஆண்டுகால சேவை...
STANDARD MORTGAGES INC
• Mortgages
• Refinance
• Second Mortgages
• Short Term Secured Loans
SMI
STANDARD
MORTGAGES INC.
Residential & Commercial
சுமையான கடன்களை சுகமான அனுபவமாக்கிட
Raj Subrayam AMP
Director
80 Corporate Drive, Suite # 307 Toronto, Ontario, M1H 3G5
Tel: 416 298 1700
Fax: 416 754 8651
www.standardmortgagesinc.com
raj@smi4loan.com



# பேராசிரியர் க. கைலாசபதி
## பிறந்து 90 ஆண்டுகள் - சில நினைவுகள்

– கா. இந்திரபாலா

ஆண்டு 1953. இலங்கையில் நிறுவப்பட்ட முதலாவது பல்கலைக்கழகமாகிய இலங்கைப் பல்கலைக்கழகத்தின் நிரந்தர வளாகமாகிய பேராதனை வளாகத்துக்கு முதல் முறையாகக் கலைப்பீட முதலாண்டு மாணவர்கள் நேராக அனுமதிக்கப்பட்டனர். அந்த மாணவர் குழுவில் ஒருவராக இருந்தவர் க. கைலாசபதி.

இலங்கைப் பல்கலைக்கழகம் அக்காலகட்டத்தில் கலைப்பீடத்துக்கு ஒவ்வோராண்டும் 250-க்கும் குறைந்த எண்ணிக்கையிலேயே மாணவர்கள் முழுநாட்டு உயர்நிலைப் பாடசாலைக




ளில் இருந்து இறுக்கமான ஒரு புகுமுகப் பரீட்சை மூலம் அனுமதிக்கப்பட்டனர். அவர்கள் எல்லோரும் பேராதனை வளாகத்தின் விடுதிச்சாலைகளிலேதான் கட்டாயமாகத் தங்க வேண்டியிருந்தது. இவ்விடுதி மண்டபங்கள் இங்கிலாந்தின் ஒக்ஸ்போட் மற்றும் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களைப் பின்பற்றி அமைக்கப்பட்டிருந்தன. உணவுச்சாலையில் மேசைகளும் வாங்குகளும் மத்தியகால இங்கிலாந்தில் இருந்த தளபாளங்களை ஒத்தவகையில் செய்யப்பட்டிருந்தன. மாணவர்கள் இருந்து உண்பதற்கு மேசை தயாராக்கப்பட்டபோது ஒவ்வொருவருக்கும் முள்ளுக்கரண்டியும் மேசைக் கரண்டியும் வைக்கப்பட்டிருக்கும்.

சமூகத்தின் உயர் குழாத்தைச் சேர்ந்த குடும்பங்களின் பிள்ளைகள் படிக்கும் இடமாகப் பேராதனை வளாகம் விளங்கியது. இவர்கள் சிறப்பாகப் பெரு நகரங்களில் இருந்த பிரபலமான கல்லூரிகளில் இருந்து வருபவர்களாக இருந்தனர். கைலாசபதி கொழும்பு ரோயல்கல்லூரியில் இருந்து சென்றார். அவர் பேராதனையில் படித்த காலத்தில் கலைப்பீடத்தில் படித்த பலர் பின்னர் பேராசிரியர்களாகவும் நிர்வாக உயர் அதிகாரிகளாகவும் சிறப்புடன் விளங்கினர்.

கைலாசுடன் சமகாலத்தவர்களாகப் பேராதனையில் படித்த ஒரு சிலரைக் குறிப்பிடலாம். கணநாத் ஒபேசேகர (பின்னர் பிரின்ஸ்டன் பல்கலைக்கழகத்தில் மானுடவியல் பேராசிரியர்), கிங்ஸ்லி டி சில்வா (பின்னர் பேராதனையில் இலங்கை வரலாற்றுப் பேராசிரியர்), ஆர். சித்தார்த்தன் பேரின்பநாயகம் (பின்னர் நியூயோர்க்கில் மானுடவியல் பேராசிரியர். பிரபல அரசியல்வாதி ஹண்டி பேரின்பநாயகத்தின் மகன்), கா. சிவத்தம்பி (பின்னர் யாழ்ப்பாணத்தில் தமிழ்ப் பேராசிரியர்), யஸ்மின் (குணரத்ன) டயஸ் பண்டாரநாயக (பின்னர் ஆங்கில இலக்கியப் பேராசிரியர், ஆஸ்திரேலிய மக்வாரி பல்கலைக்கழகம். பண்டாரநாயக குடும்பத்தவர்), லக்ஷ்மி நாகநாதன் (பின்னர் வெளிநாடுகள் பலவற்றுக்கு இலங்கையின் தூதுவர். பிரபல தமிழ் அரசுக்கட்சிப் பிரமுகர் செனற்றர் ஈ.எம்.வி. நாகனாதனின் மகள்) ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்கள்.

கைலாஸ் பேராதனையில் படித்த காலத்தில் பல துறைகளில் இந்தியப் பேராசிரியர்களும் விரிவுரையாளர்களும் கடமையாற்றினர். குறிப்பாக, பொருளியல் துறையில் பேராசிரியராக தாஸ்குப்தாவும் விரிவுரையாளராகக் கலாநிதி சர்க்காரும் இருந்தனர். மெய்யியல் விரிவுரையாளராக இன்னொரு கலாநிதி சர்க்கார் இருந்தார். வரலாற்றுப் பேராசிரியராக ஹேம் சந்திரராய் என்பவரும் விரிவுரையாளராகக் கலாநிதி ஸிங்ஹா என்பவரும் மேற்கு வங்காளத்தில் இருந்து வந்திருந்தனர்.

இதே காலத்தில் சர்வதேச அங்கீகாரம் பெற்ற இலங்கை அறிஞர்கள் சிலரும் கலைப்பீடத்தில் இருந்தனர். அவர்களுள் பாளி மற்றும் பௌத்த நாகரிகம் ஆகியவற்றுக்கான துறையில் பேராசிரியராக இருந்த பிரபல பௌத்த அறிஞர் ஜி.பி. மலலசேகர, ஆங்கிலத்துறையின் பேராசிரியர் ஈ.எவ்.சி.




**Seated (Left to Right):** Prof. K. Indrapala (Dean of Humanities and Head of the Department of History), Prof. K. Kailasanathakurukkal (Head of the Department of Hindu Civilization), Mr. L. H. Sumanadasa (Vice-Chancellor), Prof. K. Kailasapathy (President and Head of the Department of Tamil), Prof. P. Kanagasabapathy (Dean of Science and Head of the Department of Mathematics and Statistics), Mr. K. P. G. Wijayasurendra (Deputy Registrar).

**Standing (Left to Right):** Dr. S. Mageswaran (Head of the Department of Chemistry), Prof. V. K. Ganeshalingam (Head of the Department of Zoology), Mr. K. Ratnatilake (Assistant Treasurer), Mr. R. S. Thambiah (Librarian - in - Charge), Prof. K. Kunaratnam (Head of the Department of Physics).

லுடோவைக், தமிழ்ப் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை ஆகியோரைக் குறிப்பிடலாம்.

இத்தகைய ஒரு பின்புலத்தைக் கொண்ட பேராதனை வளாகத்தில்தான் கைலாஸ் தனது பல்கலைக்கழகக் கல்வியைப் பெற்றார். இவர் பிறந்த இடம் இன்றைய மலேஷியத் தலைநகரான கோலாலம்பூர் ஆகும். இவர் தந்தையார் இளைய தம்பி கனகசபாபதி அங்கு ஆங்கிலேய நிர்வாகத்தில் பணியாற்றிக் கொண்டிருந்தபோது, 1933 ஏப்ரல் 5-ம் திகதி கைலாஸ் பிறந்தார். இவர் கோலாலம்பூர் விக்டோரியா நிறுவனத்தில் (Victoria Institute) கல்வி கற்கத் தொடங்கியபோது இரண்டாவது உலகப் போர் தொடங்கியது. 1945-ல் போர் முடிவுற்றதும், தாயார் தில்லைநாயகியுடன் கைலாஸ் இலங்கைக்குச் சென்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் தனது கல்வியைத் தொடர்ந்தார். அங்கு இவர் பத்தாம் வகுப்பை முடித்துக்கொண்டு, கொழும்பு ரோயல்கல்லூரியில் இரண்டு ஆண்டுகள் கல்வி பயின்று, பல்கலைக்கழகப் புகுமுகத் தேர்வில் தேர்ச்சிபெற்று 1953-ல் பேராதனைக்குச் சென்றார்.

### பல்கலைக்கழக வாழ்க்கை:

ஆண்டு 1956. நான் யாழ்ப்பாணக் கல்லூரியில் இருந்து முதல் ஆண்டு மாணவனாகப் பேராதனைக்குச் சென்றேன். கைலாஸ் அப்பொழுது தமிழைச் சிறப்புப்பாடமாகக் கற்கும் இறுதி ஆண்டு மாணவராக இருந்தார். அவருடைய வதிவிடம் இராமநாதன் விடுதிச்சாலை. அப்பொழுது பேராதனையில் இருந்த மிகப் பெரிய விடுதிச்சாலை. எனது வதிவிடம் அருணாசலம் விடுதிச்சாலை... அப்பொழுது அங்கிருந்த மிகச் சிறிய விடுதிச்சாலை.

வளாகத்தில் கைலாஸ் நன்கு அறியப்பட்ட ஒருவராக இருந்தார். தமிழ்த் துறையில் ஒரு சிறந்த மாணவராக மட்டுமல்லாது, பேராசிரியர் கணபதிபிள்ளை எழுதி, கலாநிதி வித்தியானந்தன் மேடையேற்றிய நாடகங்களில் பிரதான நடிகராகவும் கைலாஸ் பெயர்பெற்றிருந்தார். 1957-ல் அவர் இறுதிப் பரீட்சையில் முதல் வகுப்பில் சித்தியடைந்து வளாகத்தை விட்டுச் செல்லும் வரை அவருடன் எனக்கு எந்தவித தொடர்பும் இருக்கவில்லை.

### துணை விரிவுரையாளர்:

ஆண்டு 1960. நான் எனது இறுதிப்பரீட்சையை முடித்ததும், வரலாற்றுத் துறையில் தற்காலிகத் துணை விரிவுரையாளராக நியமனம் பெற்றேன். அப்பொழுது கைலாஸ் கொழும்பில் தினகரன் செய்தித்தாளின் பிரதம ஆசிரியராகக் கடமையாற்றிக் கொண்டிருந்தார். அடுத்த ஆண்டு, 1961-ல், கலைப்பீட வெற்றிடங்கள் நிரப்பப்பட்டபோது அவரும் நானும் ஒரே நேரத்தில் நிரந்தரத் துணை விரிவுரையாளர்களாக நியமனம் பெற்றோம்.

நான் தொடர்ந்தும் அருணாசலம் விடுதிச்சாலையில் தங்கியிருந்தேன் கைலாஸ் மீண்டும் இராமநாதன் விடுதிச்சாலையிலேயே தங்கியிருந்தார். அதனால், அவரைச்சந்திக்கும் வாய்ப்புக்கள் அதிகம் இருக்கவில்லை.

ஒரு நாள் இரவு, வளாகத்தில் இருந்த Faculty Club-ல் நான்



**Seated (Left to Right):** Mr. S. R. Kanaganayagam, Prof. A. A. Hoover (Dean - Faculty of Medicine), Mr. S. Ambikaipakan, Prof. S. Vithiananthan (Vice Chancellor), Prof. A. W. Mailvaganam, Mr. M. Sri Kantha.

**Standing (Left to Right):** Dr. Neelan Thiruchelvam, Prof. S. Rajaratnam (Dean - Faculty of Arts), Mr. N. Vijayasingham, Prof. K. Kailasapathy, Prof. C. Sivagnanasunderam, Prof. V. Tharmaratnam (Dean-Faculty of Science), Prof. K. Kunaratnam.

ஒரு நண்பருடன் table tennis விளையாடிக் கொண்டிருந்த போது, அங்கு இருந்த கைலாஸ் அடுத்ததாக என்னுடன் விளையாட விருப்பம் தெரிவித்தார். நாம் இருவரும் விளையாடும் போது, அவருக்கே சிறப்பாக உரிய பாணியில் மெதுவாக என்னைப்பற்றி அறிவதற்குக் கேள்விகளைத் தொடுத்தார். வரலாற்றில் அவருக்கு இருந்த ஆர்வத்தை எனக்கு உணர முடிந்தது. அன்று ஆரம்பித்த நட்பு அவருடைய இறுதி நாள் வரை நீடித்தது.

### இங்கிலாந்துக்குப் பயணம்:

இருவரும் ஒரேகாலத்தில் நிரந்தர நியமனம் பெற்றபடியால், ஒரே காலத்தில் மேற்படிப்புக்குச் செல்லவும் வாய்ப்பு இருந்தது. நான் லண்டன் பல்கலைக்கழகத்தின் School of Oriental and African Studies நிறுவனத்துக்குச் செல்ல விரும்பினேன். அங்கு அப்பொழுது தென்னாசிய வரலாறு, தென் கிழக்காசிய வரலாறு ஆகியவற்றில் புகழ்பெற்றிருந்த பேராசிரியர் A.L. Basham, J.G. de Casparis ஆகியோருடைய வழிநடத்தலில் ஆய்வு மேற்கொள்ள வாய்ப்பு இருந்தது. கைலாசுடைய எண்ணங்கள் வேறொரு திசையில் சென்றன.

ஐரோப்பிய வீரயுகச் செய்யுள்களில் கைலாசுக்கு ஒரு தனி ஆர்வம் இருந்தது. பழந்தமிழ்ச் செய்யுள்களை ஒத்த பழம் கிரேக்க மொழிச் செய்யுள்கள் மற்றும் அயர்லாந்து போன்ற பிற ஐரோப்பிய இடங்களில் இயற்றப்பட்ட பழைய பாடல்கள் ஆகியவற்றுடன் பழந்தமிழ்ச் செய்யுள்களை ஒப்பிட்டு ஆய்வு செய்ய அவர் ஆர்வம் கொண்டார். ஐரோப்பிய இலக்கிய ஆய்வாளர் பயன்படுத்திய ஒப்பீட்டு இலக்கிய ஆய்வு முறைகளைத் தமிழ் இலக்கிய ஆய்வில் பயன்படுத்துவது அவருடைய முதல் நோக்கமாக இருந்தது. ஐரோப்பிய இலக்கியத்தில் சிறப்பிடம் பெற்று நிற்கும் பழம் கிரேக்கப் புலவராகிய ஹோமருடைய கவிதையைப் பழந்தமிழ்க் கவிதையுடன் ஒப்பிட்டு, இரண்டும் வீரயுகக் கவிதை எனப் பொதுவாக வழங்கப்படும் இலக்கியத்துக்கு உரிய சூழ்நிலையைப் பிரதிபலிக்கின்றன என விளக்குவது அவருடைய இரண்டாவது நோக்கமாக அமைந்தது.

இத்தகைய ஆய்வுக்குச் சிறந்த வழிகாட்டியாகத் தனக்கு உதவக் கூடியவர் பர்மிங்ஹம் (University of Birmingham) பல்கலைக்கழகத்தில் கிரேக்க இலக்கியப் பேராசிரியராக அக்காலத்தில் புகழ் பெற்றிருந்த George Thomson எனக் கைலாஸ் தீர்மானித்தார். பேராசிரியர் தொம்ஸன் கிரேக்க அறிஞராகவும் மார்க்சீயச் சிந்தனையாளராகவும் பெயர் பெற்றிருந்தார்.

இருவரும் பல்கலைக்கழகங்களுக்குச் செல்ல அனுமதி பெற்றதும், 1963-ல் பிரித்தானியக் கல்வியாண்டு தொடங்கும் ஒக்ரோபர் மாதத்தில் இங்கிலாந்தில் இருக்கக்கூடிய வகையில் பயண ஏற்பாடுகளைச் செய்யத் தொடங்கினோம். அந்நாளில் கப்பல் வழியாகவே எம் போன்ற மாணவர்களும் பொதுவாகப் பிறரும் இங்கிலாந்துக்குச் சென்றனர்.

கொழும்பில் இருந்து இங்கிலாந்து செல்வதற்கு அக்காலத்தில் P&O Lines செலுத்திய கப்பல்களே வசதியாக இருந்தன. எடுத்துக் காட்டாக, ss Canberra என்ற கப்பல் ஆஸ்திரேலியாவில் இருந்து கொழும்பு வழியாக இங்கிலாந்தின் தென்கரைத் துறையாகிய Southampton துறைக்குச் செல்லும். இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட பயணிகளை ஏற்றிச்செல்லும் வசதி கொண்டது. கட்டணமும் அதிகம். Messageries Maritimes என்ற பிரெஞ்சு வணிகக் குழு செலுத்திய கப்பல்கள் பிரெஞ்சுத் துறையாகிய Marseilles வரை செல்லும். அதன் பின், அங்கிருந்து தரை வழியாகப் பாரிஸ் நகரத்துக்குச் சென்று அங்கிருந்து Calais துறைக்குப் போய், மீண்டும் கப்

பல் வழியாக இங்கிலாந்தின் Dover துறைக்குச் சென்று, அங்கிருந்து தரைவழியாக லண்டனுக்குச் செல்ல வேண்டியிருந்தது. ஆனாலும், அது மலிவாக (75 பவுண் மட்டுமே) இருந்தது.

கைலாசும் நானும் பிரெஞ்சுக் கப்பலில் செல்வதற்குத் தீர்மானித்தோம். பயண ஒழுங்குகளைச் செய்வதற்கு நான் பொறுப்பு எடுத்தேன். பிரெஞ்சு வணிகக் குழுவுக்கு மூன்று கப்பல்கள் இருந்தன. மூன்றுக்கும் கொடுக்கப்பட்ட பெயர்கள் தென்கிழக்காசியாவில் பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்டிருந்த நாடுகளின் பெயர்கள்: ss Cambodge, ss Vietnam, ss Laos.Cambodge என்பது ஆங்கிலத்தில் கம்போடியா என வழங்கும் பெயர், முற்காலத்தில் காம்போஜ என வழங்கிய சமஸ்கிருதப் பெயரில் இருந்து வந்தது.

ஆண்டு 1963. செப்ரெம்பர் 4-ல் கைலாசும் நானும் ss Cambodge கப்பலில் கொழும்பில் இருந்து புறப்பட்டோம். இந்தக் கப்பல் நடுத்தர வர்க்கத்தைச் சேர்ந்த சிறிய பிரயாணக் கப்பல். இதன் நீளம் 166 மீட்டர் 347 பயணிகள் செல்வதற்கு வசதிகளைக் கொண்டிருந்தது 117 பேர் முதல் வகுப்பில், 110 பேர் இரண்டாம் வகுப்பில், 120 பேர் மூன்றாம் வகுப்பில். எல்லாமாக இக்கப்பலில் ஏழு அடுக்குகள் (decks) இருந்தன. முதல் வகுப்புப் பயணிகளுக்கு ஒரு பிரத்தியேக நீச்சல் தடாகமும் இருந்தது.

எங்களுடன் வேறும் இரு துணை விரிவுரையாளர்கள் பேராதனையில் இருந்து வந்தனர். எங்களுக்கு மூன்றாம் வகுப்புத் தளத்தில் ஓர் அறை (cabin) தரப்பட்டது.

மாலை 5 மணி அளவில் கொழும்புத் துறைமுகத்தை விட்டு எங்கள் கப்பல் புறப்பட்டபோது, கொழும்பில் புதுப்பயணிகளாகக் கப்பல் ஏறிய எங்களுக்கு ஏற்பட்ட உணர்ச்சிகளை வர்ணிப்பது கஷ்டம். பேச்சுமூச்சின்றி நாம் எல்லோரும் கப்பல் தளத்தில் நின்று கொண்டு, மெதுவாக எங்கள் நாட்டின் கரை கண்ணுக்கு எட்டாத தூரத்தில் மறைந்து கொண்டு போவதைக் கவலை தோய்ந்த முகத்துடன் பார்த்தோம். திடீரென நாடே மறைந்து விட்டது. நாலாபக்கமும் கடல் கொந்தளித்துக் கொண்டிருந்தது. மறக்க முடியாத ஓர் அனுபவம்.

எங்கள் கப்பல் ஜப்பானியத் துறையாகிய யொகொஹாமாவில் இருந்து புறப்பட்டு, வழியில் மனிலா (பிலிப்பீன்ஸ்), ஸைகோன் (இன்றைய ஹோ-சி-மின் நகரம், வியட்நாம்), சிங்கப்பூர் ஆகிய இடங்களுக்குச் சென்று கொழும்பை வந்தடைந்தது. அந்நாளில், வியட்நாமில் கடும் போர் நடைபெற்றுக் கொண்டிருந்த படியால், பெருந்தொகையான வியட்நாமிய அகதிகள் பிரான்ஸ் நாட்டுக்குச் செல்வதற்காக எங்கள் கப்பலில் இருந்தனர்.

கப்பல் மெதுவாகத் தரை தெரியாத தூரத்துக்குச் சென்றதும், இனி இதுதான் எங்கள் உலகம் என்பதை ஏற்றுக்கொண்டவர்களாய் மௌனமாகத் தளத்தில் ஆரவாரத்துடன் நின்ற பயணிகளைப் பார்த்தோம். பிரெஞ்சுமொழிப் பேச்சும் பிறமொழிப் பேச்சும் காதில் விழுந்தன. ஆங்கிலம் பேசுவோர் எவரும் இருந்ததாகத் தெரியவில்லை.

தளத்தில் இருந்த ஒரு வாங்கில் சிறு பிள்ளைகள் சூழ, தென்கிழக்காசியர் தோற்றமுடைய ஒருவர் தினகரன் செய்தித்தாளைப் படித்துக்கொண்டிருந்தார். இந்த விசித்திரமான காட்சி கைலாசுடைய கவனத்தை ஈர்த்தது. மெதுவாகச் சென்று அவர் அருகே உட்கார்ந்து அவருடன் கைலாஸ் தமிழில் உரையாடத் தொடங்கினார்.

கைலாஸ் அறிந்துகொண்ட செய்தி எங்களுக்கு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் கொடுத்தது. அந்நியர் நிறைந்த எங்கள் கப்பலில் விரைவாக ஒரு நண்பரைக் கண்டு கொண்ட மகிழ்ச்சி. பிரெஞ்சு மொழி தெரியாத எங்களுக்கு ஒரு மொழி பெயர்ப்பாளர் கிடைத்த ஆறுதல்.

இந்தப் புதிய நண்பர் ஒரு வியட்நாமியர். அவர் தன் குடும்பத்துடன் அகதியாக நாட்டை விட்டு வெளியேறி வந்திருந்தார். ஐந்து சிறு பிள்ளைகள். அடுத்த பிள்ளை எந்த நேரமும் பிறக்கலாம் என்ற அச்சத்தால் மனைவி கப்பல் அறையை விட்டு வெளியே வரவில்லை. இவர் ஒரு வர்த்தகர். தந்தையாருடன் வர்த்தகத்தில் ஈடுபட்ட காலத்தில் இந்தியாவுக்குச் சென்று சிறிது காலம் சென்னையில் இருந்தார். அப்பொழுதுதான் தமிழைக் கற்றிருந்தார். இந்தியாவில் வேறிடங்களுக்கும் வர்த்தக நோக்குடன் போயிருந்தபடியால் சிறிது ஹிந்திமொழியும் அவருக்குத் தெரியும். ஆங்கிலத்தைப் பேசவும் படிக்கவும் முடியாது. இதனால், ஸைகோனில் இருந்து புறப்பட்டபின் உலகில் என்ன நடக்கிறது என்பதை அறிய வியட்நாமிய செய்தித்தாளோ பிரெஞ்சுச் செய்தித்தாளோ அவருக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, கொழும்பில் இறங்கியபோது அவசரமாகத் தன் கண்ணுக்குப்பட்ட தமிழ்ப்பத்திரிகை ஒன்றை வாங்கிவந்து ஆவலுடன் படித்தார். கடும்போர் நடந்துகொண்டிருந்த ஒரு நாட்டில் இருந்து தப்பியோடி வந்த ஒருவருக்கு அத்தகைய ஆவல் இருந்தது எதிர்பார்க்கத்தக்கதே. (எங்கள் பயணம் முடிந்து ஒரு சில வாரங்களில், நவம்பர் மாதத்தில், மக்களால் பெரிதும் வெறுக்கப்பட்டு அமெரிக்கப்படைகளில் தங்கியிருந்த தென் வியட்நாமிய ஜனாதிபதி டின் டியெம் என்பவரும் அவருக்குப் பக்கபலமாக உதவிய சகோதரன் நூவும் சுட்டுக் கொல்லப்பட்டனர்.)

**கேரளக்கரையோரம்:**

மாலைப்பொழுதில் கொழும்பை விட்டுப் புறப்பட்ட எங்கள் கப்பல் கேரளத்துக்கு அருகே அராபியக் கடலை வந்தடைய நல்ல இருள் பரந்திருந்தது. கப்பல் கரையிலிருந்து வெகுதூரம் செல்லாது பம்பாய் (இன்றைய மும்பை) துறைமுகத்தை நோக்கி ஓடியதால் கேரளக்கரையோரத்துத் துறைகள், சிறியனவும் பெரியனவும், கண்கொள்ளாக் காட்சியைக் கொடுத்தன. கைலாசும் நானும் நெடுநேரம் கப்பல் தளத்தில் நின்று இக்காட்சியை ரசித்தோம்.

பெரிய துறைகளில் நிறுவப்பட்டிருந்த வெளிச்சவீடுகள் ஒவ்வொன்றும் அதற்கே உரிய தனித்துவமான முறையில் வெளிச்சத்தை வீசிக்கொண்டிருந்தது. எந்த வெளிச்சவீடு எந்தத்துறையைச் சேர்ந்தது என்பது எங்களுக்கோ தெரியாது. கேரளக்கரையின் தெற்கில் விழிஞத் துறையில் இருந்து, கொல்லம், கொச்சி, கோழிக்கோடு ஆகிய துறைகளைத் தாண்டி, வடக்கே சஞ்சலமின்றி ஓடி, மறுநாள் காலை எங்கள் கப்பல் பம்பாயை அடைந்தது.

பம்பாயில் ஒரு முழுநாள் எங்கள் கப்பல் தங்கி நின்றதால், கைலாசும் நானும் மற்ற நண்பர்களும் வியட்நாமிய நண்பரு

டைய வழிகாட்டலுடன் நகரத்தைச் சுற்றிப்பார்த்தோம். அத்துடன், கப்பல் அதிகாரிகள் ஒழுங்குசெய்த சுற்றுலா மூலம் நகரத்தின் முக்கிய பாகங்களையும் வெளியே ஒரு தொல்லியல் தலத்தையும் பார்க்க வாய்ப்புக் கிட்டியது. இந்திய வரலாற்றைப் பல ஆண்டுகளாகக் கற்ற எனக்கு முதல் முறையாக இந்திய மண்ணில் கால் வைத்தமை பலவகைப்பட்ட உணர்ச்சிகளைக் கொடுத்தது.

### அராபியக் கடலைக் கடத்தல்:

பம்பாயில் இருந்து புறப்பட்ட பின் எங்கள் கப்பல் முதல்



முறையாக ஆழ்கடலுக்குச் சென்றது. பேரலைகள் மோத, கப்பல் பலமாக ஆடத்தொடங்கியது. அதுவரை ஆரவாரத்துடன் கப்பல் தளத்தில் நின்று உரையாடிக் கொண்டு இயற்கைக்காட்சியை ரசித்த பலர் தங்கள் அறைகளுக்கு ஓடி மறைந்தனர். கடல்நோய் (sea sickness) என்ற குழம்பிய நிலை அவர்களைப் பீடித்தது. இதனால் பலருக்கு வாந்தி வரும். கைலாஸ் இதனால் பெரிதும் பாதிக்கப்பட்டார். பிற இலங்கை நண்பர்களும் ஓரளவு பாதிக்கப்பட்டிருந்தனர். உணவுச்சாலைக்கே வராது படுக்கையிலேயே நேரத்தைப் போக்கினர். நான் மட்டும் தப்பிவிட்டேன்.

அராபியக்கடலைக் கடந்த பின் ஆபிரிக்காவின் வடகிழக்கில் உள்ள ஜிபூத்தி (Djibouti) என்ற துறையை அடைந்தோம். அது அந்நாளில் பிரெஞ்சு சோமாலிலாந்து என்ற பெயரால் வழங்கிய பிரெஞ்சு ஆட்சிக்கு உட்பட்ட நிலப்பகுதியின் தலைநகராக விளங்கியது. அங்கு முதல் முறையாகக் கைலாசும் நானும் ஆபிரிக்க மண்ணில் கால் வைத்தோம். பிரெஞ்சுமொழி பேசப்பட்ட அவ்விடத்தில் எங்கள் வியட்நாமிய நண்பருடன் ஒரு சந்தைக்குச் சென்று ஆபிரிக்கச் சூழலை ஆர்வத்துடன் அனுபவிக்க முடிந்தது.

### பிரமிடுகளைப் பார்க்கும் வாய்ப்பு:

அடுத்ததாக எங்கள் கப்பல் எகிப்தியத் துறையாகிய சுவெஸ் (Port Suez) துறையை அடைந்தது. சுவெஸ் கால்வாயின் தென் எல்லையில் இருந்த இத்துறையில் இருந்து கால்வாயின் வட எல்லையில் இருக்கும் ஸைத் (Port Said) துறைக்குச் செல்ல வேண்டும். கால்வாயின் அகலம் பெரிதாக இல்லாததால், ஒரே நேரத்தில் ஒரு திசையில் மட்டும்தான் கப்பல்கள் செல்லலாம். இதனால், ஓர் ஒழுங்கு முறைப்படி ஒரு குறிப்பிட்ட தொகைக் கப்பல்களை வடக்கில் இருந்து கால்வாயை கடக்கவிட்டு, அதன் பின் தெற்கில் இருந்து கப்பல்களைச் செல்லவிடுவர்.

இதனால், பலமணி நேரம் ஒவ்வொரு கப்பலும் பொறுத்திருக்க வேண்டியிருந்தது. இத்தாமதத்தைப் பயன்படுத்திச் சுற்றுலா நிறுவனங்கள் பயணிகளைக் கெய்ரோவுக்குக் கூட்டிச் சென்று பிரமிடுகளைப் பார்த்துவிட்டு, வட எல்லையில் இருந்த ஸைத் துறையில் தங்கள் கப்பல்களைச் சேர்வதற்கு சுற்றுலாக்களை ஒழுங்கு செய்திருந்தன. கட்டணம் பத்துப்பவுண். எங்களுக்கு இலங்கை அரசாங்கம் அந்நியச் செலாவணியாக 25 பவுண் மட்டுமே தந்திருந்த படியால் இப்படியான சுற்றுலாக்களில் பணத்தைச் செலவிட என் நண்பர்கள் விரும்பவில்லை. எனக்குத் தொல்லியலில் இருந்த ஈடுபாட்டினால் நான் இச்சந்தர்ப்பத்தைத் தவற விடக்கூடாது என்று கைலாஸ் என்னை வற்புறுத்தினார். எனக்கும் பெரிதும் ஆசையாக இருந்தது.

Thomas Cook & Son நடத்திய சுற்றுலாவில் சேர்ந்து, ஒரு நாள் முழுக்க கீஸாவின் பிரமிடுகளைப் பார்த்தும், கெய்ரோவின் பிரசித்தி பெற்ற அருங்காட்சியகத்தில் துற்றன்காமனுடைய செல்வங்களைப் பார்வையிட்டும், பின்னர் வரலாற்றுப் புகழ் மிக்க அலெக்ஸாந்திரியா நகரில் இரா உணவு அருந்தியும் நல்ல அனுபவத்தைப்பெற்று, இறுதியில் ஸைத் துறையில் நின்ற கப்பலை வந்தடைந்தேன். மறக்கமுடியாத இந்த அனுபவத்துக்குக் கைலாஸ் காரணமாக இருந்தார்.

### காம்போஜ் பயணத்தின் முடிவு:

ஸைத் துறையில் இருந்து மத்தித்தரைக் கடலைக் கடந்து நேராக பிரான்ஸ் நாட்டின் மர்ஸேய் (Marseilles) துறைக்கு எங்கள் கப்பல் வந்து சேர்ந்தது. இரண்டு வார காலம் காம்போஜ் கப்பலில் மிகவும் மகிழ்ச்சிகரமாக நாம் பயணித்திருந்தோம். (1970இன் பின் இக்கப்பல் ஒரு கிரேக்க நிறுவனத்தால் வாங்கப்பட்டு, ss Stella Solaris என்ற பெயரைப் பெற்று ஒரு சுற்றுலாக் கப்பலாக மாற்றப்பட்டது.)

மர்ஸேயில் இருந்து ரயில்வண்டியில் நாம் பாரிஸ் நகருக்கு சென்று, அங்கிருந்து கலே (Calais) என்ற துறைக்குச் சென்று, சிறு கப்பலில் இங்கிலாந்தின் கரையில் உள்ள டோவர் (Dover) துறைக்குப் போய், அங்கிருந்து ரயில்வண்டியில் லண்டன் விக்டோரியா நிலையத்தை வந்தடைந்தோம். கொழும்பில் இருந்து லண்டன் வரை எங்கள் பயணம் 18 நாட்கள் எடுத்தது.

## இங்கிலாந்து வாழ்க்கை:

லண்டனில் இருந்து கைலாஸ் பர்மிங்ஹம் பல்கலைக் கழகத்துக்குச் சென்று, பேராசிரியர் தொம்ஸனின் வழிநடத்த லில் தனது ஆய்வுகளைத் தொடங்கினார். நான் லண்டனில் படித்தபடியால் அவரைச் சந்திக்க வாய்ப்பும் இருக்க வில்லை. ஆனால் ஒரு விஷயம் சம்பந்தமாக இருவருக்கும் இடையில் தொடர்பு இருந்தது.

நாம் இங்கிலாந்துக்குச் சென்றபோது, வியட்நாமில் அமெ-ரிக்கா நடத்தியபோருக்கு எதிராக அமெரிக்கப் பல்கலைக்க ழகங்களில் மட்டுமல்லாது, பிரித்தானியப் பல்கலைக்கழகங்க ளிலும் கடுமையான எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் அமர்வுக ளும் (sit-ins) நடந்துகொண்டிருந்தன. இவற்றுடன் தொடர்பு டைய வகையில் ஊடகங்கள், சிறப்பாக வலதுசாரி ஊடகங் கள், சீனாவுக்கு எதிரான பரப்புரைகளை வெளியிட்டன.

சீனாபற்றிப் பொதுமக்களிடையே பரவும் தவறான கருத்துக்க ளைப் பல்கலைக்கழக அறிஞர் சிலர் மாற்றுவதற்கு முயற்சி எடுத்தனர். அவர்களுள் கைலாசுடைய பேராசிரியராகிய தொம்ஸனும் ஒருவர். அவரும் அக்காலத்தில் பிரபலம் பெற் றிருந்த பேராசிரியர்களாகிய Joan Robinson (பொருளியல் பேராசிரியர், கேம்பிரிட்ஜ்), Joseph Needham (கேம்பிரிட்ஜ்), Hugh Trevor-Roper (வரலாற்றுப் பேராசிரியர், ஒக்ஸ்போர்ட்) போன்றோரும் இணைந்து Society for Anglo-Chinese Understanding (SACU) என்ற கழகத்தை அமைத்தனர். அதில் கைலாசும் நானும் சேர்ந்திருந்தோம். லண்டனில் SACU நடத்திய கூட்டங்களை ஒழுங்கு பண்ணுவதில் நானும் பங் கேற்றுப் பிரபல பேராசிரியர்களைச் சந்தித்தேன். இந்த வாய்ப்பு எனக்குக்கிட்டுவதற்குக் கைலாஸ் காரணமாக இருந் தார் என்பதை என்னால் மறக்கமுடியாது.

## இலங்கைக்குத் திரும்பிவருதல்:

ஆண்டு 1966. எனது ஆய்வுரையை 1965 ஒக்ரோபரில் முடித்து, நேர்காணல் பரீட்சையை டிசம்பரில் முற்றுவித்து, 1966 ஜனவரி 7-ல் Ph.D. பட்டத்தைப் பெற்று, ss Vietnam கப்பலில் நாடு திரும்பினேன். சில மாதங்களின் பின் கைலா சும் தன் Ph.D.-யைப் பெற்றுக்கொண்டு பேராதனைக்குத் திரும்பிவந்தார்.

மீண்டும் கைலாசுடன் சேர்ந்து பல முயற்சிகளில் ஈடுபட எனக்கு வாய்ப்புக் கிட்டியது. அவற்றை எல்லாம் இக்கட்டு ரையில் கூறுவதற்கு இடமில்லை. ஒரு சிலவற்றை மட்டும் இங்கு குறிப்பிடலாம்.

கலைப்பீடத்தில் தமிழ்மொழி மூலம் விரிவுரையாற்றும் பணி தொடங்கி ஐந்து ஆண்டுகளுக்கு மேலாகியும் தமிழில் தர மான ஒரு சமூகவியல் சஞ்சிகை இல்லாத குறையை நாம் உணர்ந்தோம். அப்படி ஒரு சஞ்சிகையைத் தொடங்குமாறு கைலாஸ் என்னை வற்புறுத்தினார். இறுதியில் நான் சம்ம தித்த போது, சஞ்சிகைக்குச் 'சிந்தனை' என்ற பெயரையும் கொடுத்தார். சிந்தனை என்ற சஞ்சிகையைப் பல ஆண்டு கள் பேராதனையில் இருந்து வெளியிட்டேன். 1974-ன் பின் அதன் வெளியீட்டுப் பொறுப்பை யாழ்ப்பாண வளாகத்தின் கலைப்பீடம் ஏற்றுக்கொண்டது.

பேராதனை வளாகத்துக்குள் ஒதுங்கியிருக்கும் போக்கினைப் பெற்றிருந்த என்னைக் கொழும்புக்கு அழைத்து ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தில் நிகழ்ச்சிகளை நடத்தவும், எஸ். கணேச-லிங்கன் அவர்களை எனக்கு அறிமுகப்படுத்தி என் நூல் ஒன்றை வெளியிட உதவியும் கைலாஸ் என்னைப் பேராத னைக்கு வெளியே கொண்டுவந்தார். அக்காலத்தில் பிரபலம் பெற்றிருந்த ஊடகவியலாளர் பலரை (வி. சுந்தரலிங்கம், சி.வி. ராஜசுந்தரம், சில்லையூர் செல்வராசன் போன்றோரை) எனக்கு அறிமுகப்படுத்தியவரும் அவரே.

## யாழ்ப்பாண வளாகம்:

ஆண்டு 1974. கைலாஸ் இலங்கைப் பல்கலைக்கழகத்தின் களனி வளாகத்தில் தமிழ் மற்றும் இந்து நாகரிகத்துக்கான துறைக்குத் தலைவராகக் கடமையாற்றி கொண்டிருந்தார். நாட்டில் பல்கலைக்கழகக் கல்வி தொடர்பாகப் பல பிரச்சி னைகள் எழுந்திருந்தன. இப்பின்புலத்தில் அரசாங்கம் யாழ்ப்பாணத்தில் ஒரு புதிய வளாகத்தைத் திறப்பதற்குத் தீர்மானித்தது.

புதிய வளாகத்தின் தலைவராகக் கைலாஸ் நியமனம் பெற் றார். மனிதப்பண்பியல் பீடம், அறிவியல் பீடம் ஆகிய இரண்டு பீடங்களுடன் வளாகத்தை தொடங்கும் பொறுப்பு அவரிடம் ஒப்படைக்கப்பட்டது. பேராதனை வளாகத்தை விட்டு வேறெங்கும் போகும் நோக்கில்லாது இருந்த என் னைத் திடீரென அணுகி, மனிதப்பண்பியல் பீடத்தின் தலை-வராகப் பொறுப்பேற்கும்படி கைலாஸ் கேட்டுக்கொண்டார்.

யாழ்ப்பாண வளாகத்தைக் கட்டி எழுப்புவதற்கு நாம் எடுத்த முயற்சிகள் பற்றிய வரலாறு வேறோர் அத்தியாயம் ஆகும். யாழ்ப்பாணத்துக்குள் ஒரு குறுகிய நோக்குடைய பீடமாக வளராது, பரந்த நோக்குடன் பல்லினப் பண்பாட்டை ஊக்கு விக்கும் பீடமாக மனிதப்பண்பியல் பீடம் வளரவேண்டும் என்ற கருத்துடன் தென்னாசியவியலை அடித்தளமாக வைக்க நான் எடுத்த முயற்சிகளுக்குக் கைலாஸ் முழுமூச்சாகத் துணைநின்றார்.

கொழும்பில் இருந்து வெகு தூரத்தில் ஒரு சிறிய வளாகமாக இருந்த யாழ்ப்பாண வளாகத்துக்குத் தென்னாசியவியல் கருத்தரங்கில் உரையாற்றப் பல பிரமுகர்கள் வந்து சென்ற னர். சிலர் Howard Wriggins(Columbia University), Robert Kearney போன்ற அமெரிக்கப் பேராசிரியர்கள். சிலர் சித்தார் வாத்திய மேதை ரவி ஷங்கர் போன்ற பிற துறை விற்பன்னர் கள். தொடக்க ஆண்டுகளில் நடந்த தென்னாசியச்சாசனவி யல் (South Asian Epigraphy Seminar) கருத்தரங்குக்குப் பேராசிரியர் பி.ஈ.ஈ. பர்னாந்து, பேராசிரியர் ஓ.எச்.டி.ஏ. விஜே-சேகர, கலாநிதி ஸத்தாமங்கல கருணாரத்ன போன்றோர் வந்து சென்றனர். இந்த முயற்சிகளுக்குக் கைலாஸ் பெரிதும் உதவியிருந்தார். இந்த வரலாறு வேறாக எழுதப்பட வேண்டியது.



indrapala.ka@thaiveedu.com



# பதிப்புத் துறையில் தடம் பதித்த அமரர் மயிலங்கூடலூர் பி. நடராசன்

– என். செல்வராஜா

மயிலங்கூடலூர் பி. நடராசன் (14.10.1939 - 12.05.2022) அவர்கள் சிறந்த திறனாய்வாளராகவும், எழுத்தாளராகவும், வரலாற்று ஆய்வாளராகவும், கவிஞராகவும், வெளியீட்டாளராகவும் அறியப்பெற்றவர். இலக்கியம், வரலாறு, அறிவியல், கல்வியியல் சார்ந்து பல கட்டுரைகளை ஆடலிறை, செந்தூரன், பொய்கையார், காங்கேசன், கூத்தன், நடராஜ மைந்தன், திருப்பெருந்துறை இறை எனப் பல புனைபெயர்களிலும் தனது ஆக்கங்களை எமக்குத் தந்து மகிழ்வித்தவர்.

இவர் 1939 ஒக்ரோபர் 14-ல் யாழ்ப்பாணத்தின் வடக்கே மயிலங்கூடல் என்ற ஊரில் பிறந்து, தனது ஆரம்பக் கல்வியை இளவாலை மெய்கண்டான் மகாவித்தியாலயம், பன்னாலை சேர். கனகசபை வித்தியாசாலை, இளவாலை புனித என்றியரசர் கல்லூரி ஆகியவற்றில் பெற்றுக்கொண்டவர். இடைநிலைக் கல்வியை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியில் பெற்ற இவர் தமிழார்வம் காரணமாக விழிசிட்டி பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, பண்டிதர் செ. கதிரேசர்பிள்ளை ஆகியோரிடம் தமிழிலக்கியம் கற்று பால பண்டிதர் பரீட்சையில் சித்தியடைந்தார். பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் ஆசிரியப் பயிற்சிபெற்ற இவர் 1985-ல் யாழ்ப்பாணம் ஆசிரிய வள நிலையத்துக்குப் பொறுப்பாகப் பணியாற்றினார். இவர் யாழ்ப்பாண இந்துக் கல்லூரியில் வளநிலையப் பொறுப்பாளராக இருந்த வேளையில் அவருடனான எனது தொடர்பு ஏற்பட்டது.

1987-ல் இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக திரு. சுந்தரம் திவகலாலா அவர்கள் பணியாற்றிய வேளையில் அத்திணைக்களத்தினர் 1989-ம் ஆண்டு ஒக்ரோபர் மாதத்தில் 'ஈழத்து நூல், சஞ்சிகை, ஓவிய, சிற்ப கண்காட்சி' ஒன்றினை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியில் ஒழுங்கு செய்திருந்தார்கள். மூன்று நாள் நிகழ்வாக யாழ். இந்துக்கல்லூரியில் இடம்பெற்ற இந்தக் கண்காட்சியின் ஒழுங்குபடுத்தலில் மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்களுடன் ஓய்வு ஒழிச்சலின்றி நானும், ஆவணஞானி குரம்பசிட்டி இரா. கனகரத்தினம் அவர்களும் இணைந்து பணியாற்றினோம். அவரது ஆசிரிய வள நிலையமும் அந்தக் கட்டடத்திலேயே இருந்ததாக நினைவு. அதன் பின்னர் எம்மிருவருக்கிடையேயான உறவு, நான் 1991-ல் பிரித்தானியாவுக்குப் புலம்பெயரும் வரை தொடர்ந்தது. பாடசாலையிலிருந்து நல்லூர் நாயன்மார்கட்டிலிருந்த அவரது இல்லத்துக்கு அவர் தனது சைக்கிளில் பயணிக்கும் வேளைகளில் அவரது பயணப்பாதையில் இருந்த எமது இவ்லின் இரத்தினம் பல்லினப்பண்பாட்டியல் நிறுவன நூலகத்திற்கும் அடிக்கடி விஜயம் செய்து நூலகவியல், நூலியல், பதிப்புத்துறை என பல்வேறு விடயங்களையிட்டு என்னுடன் உரையாடுவார். அவரது தூய வெண்நிற ஆடை மாத்திரமல்லாது அவரது தூய தமிழாக அமையும் அவரது பேச்சு மொழிகூட என்னை வெகுவாகக் கவர்ந்திருந்தது. என்னைச் சந்திக்கும் பொழுதெல்லாம் தான் வெளியிடும் நூல்களைக் கையளிப்பார். அவருடன் கதைக்கும் ஒவ்வொரு பொழுதிலும் அவரிடம் புதையுண்டு கிடக்கும் தகவல் களஞ்சியத்தின் பிரம்மாண்டத்தை எண்ணி நான் அதிசயிக்கத் தவறுவதில்லை.

அவர் தன் வாழ்நாளில் புத்தகங்களுடனேயே ஊடாடியவர். பண்டித வகுப்பில் படித்த காலத்தில் 'பண்டிதம்' என்ற கையெழுத்துச் சஞ்சிகையின் ஆசிரியராக இருந்தார். பலாலி ஆசிரிய கலாசாலையில் 'சுடர்' அறிவியல் சஞ்சிகையின் ஆசிரியராக 1965-1966 காலகட்டத்தில் இருந்தார். பின்னர் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தில் பணியாற்றிய வேளையில், அந்நிலையத்தின் செய்தி வெளியீடான FWC News Letter-இன் ஆசிரியராக 1978-1984 காலகட்டத்தில் பணியாற்றியுள்ளார்.

1971 முதல் 1976 வரை தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் 'மகாஜனன்' இதழ்களின் பதிப்பாசிரியராகவும் இருந்துள்ளார்.

1977-ல் வித்துவான் சொக்கலிங்கம் முத்தமிழ் வெளியீட்டுக் கழகத்தை ஆரம்பித்த போது பி. நடராசனும் அதில் இணைந்து செயற்பட்டார். மேற்படி கழகம் வெளியிட்ட ஐந்து நூல்களைப் பதிப்பிக்கும் பொறுப்பை இவர் ஏற்று வெற்றிகரமாக அதனை முடித்திருந்தார். பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை, பேராசிரியர்கள் சு. வித்தியானந்தன், அ. சண்முகதாஸ், நா. சுப்பிரமணியன், கலாநிதி க. சொக்கலிங்கம்

ஆகியோரின் தமிழியல் ஆய்வு நூல்களை அவ்வேளையில் இவர் பதிப்பித்திருந்தார். 'சிந்தனைச் செல்வர் பொ. கைலா-சபதி ஆக்கமும் ஆளுமையும்' என்ற நூலைத் தொகுத்தது டன் 'பாவலர் துரையப்பாபிள்ளையின் சிந்தனைச் சோலையை மீள்பதிப்புச் செய்தார்.

1977-ம் ஆண்டிலேயே இவரது 'ஈழத்துத் தமிழறிஞர்' என்ற நூலும் வெளிவந்தது. இது யாழ்ப்பாணத்தில், மலர்விழி சிற்றி தழில் 1977-ல் பிரசுரமான கட்டுரைகளின் மறுபிரசுரமாகும். இச்சிறுநூலில், தமிழ்வளர்த்த சி.வை. தாமோதரம்பிள்ளை, வித்துவசிரோமணி மறைத்திரு சி. கணேசையர், மகாகவி



உருத்திரமூர்த்தி ஆகியோரின் இலக்கிய வாழ்வு பற்றி இவர் எழுதியிருந்தார்.

பேராசிரியர் சி. சிவலிங்கராசாவுடன் இணைந்து 1982-ல், 'தமி ழியற் கட்டுரைகள்' என்ற தொகுப்பு நூலையும், கலாநிதி க. சொக்கலிங்கத்துடன் இணைந்து 1991-ல் 'கட்டுரைக்கோவை' நூலையும் எழுதியுள்ளார். அர்ச்சுனா சஞ்சிகையில் எழுதிய சுதந்திரமாகப் பாடுவேன் என்ற மொழிபெயர்க்கப்பட்ட பாடல் தொடர் 'வரதர் கதை மலர்' வெளியீடாகவும் நூலுருப் பெற் றுள்ளது.

மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள் நலிந்து கிடந்த ஈழத்து நூற்பதிப்புத் துறையில் ஒரு புரட்சிக்கு வித்திட்டவர். தேசிய இனப்பிரச்சினை படிப்படியாக தீவிரமடைந்துவந்த அந்தக் காலகட்டத்தில் ஆசிரிய வெளியீட்டாளர்களின் நூல் வெளியீடுகள் மந்த கதியிலேயே இடம்பெற்று வந்தன. பெரும்பாலும் தனிநபர் முதலீடுகளுடனேயே புத்தக வெளியீ டுகள் அமைந்திருந்தன. முதல் நூலின் விற்பனையைப் பொறுத்தே அடுத்த நூலின் அச்சாக்கம் தீர்மானிக்கப்பட்டு வந்த காலம் அது. முன்னர் வெளியிடப்பட்டு பிரபல்யமாயி ருந்த முக்கிய வரலாற்று நூல்கள்கூட பிரதிகள் அழிந்த நிலையில், ஈழத்தமிழ்த் தேசியத்துக்கானதொரு ஆவணக்காப் பகம் இல்லாதிருந்த நிலையில் பாதுகாக்கப்பட வாய்ப் பின்றி, மீள் அச்சுக்கும் பிரதியற்ற நிலையில் நிரந்தரமான மறைவை எதிர்கொண்ட வண்ணம் இருந்தன. அவற்றுக்குப் புத்துயிரளித்து, பதிப்புத்துறையை புதிய திசையில் எடுத்துச் செல்ல முயன்றவர் இவர்.

1906-ம் ஆண்டு த. கைலாசபிள்ளை அவர்களினால் யாழ்ப் பாணத்தில் வெளியிடப்பட்ட 'முத்துராச கவிராசரின் கைலாய மாலை' என்ற நூலை இராஜராஜேஸ்வரி கணேசலிங்கம் அவர்களின் உரையுடன் யாழ்ப்பாணம், சுழிபுரம் வள்ளி யம்மை முத்துவேலு ஞாபகார்த்த வெளியீடாக, பெப்ரவரி 1983-ல் 74 பக்கங்களில் பதிப்பித்து இலவசமாக நூலகங்கள் தோறும் விநியோகித்து கைலாயமாலைக்கு மறுவாழ்வளித்த வர் இவர். இதற்கான நிதி உதவிகளை சம்பந்தப்பட்ட குடும் பங்களிடம் இருந்து நடராசன் பெற்றுக்கொண்டார். அவர்க ளும் நல்லதொரு பதிப்புப் பணிக்குத் தமது நிதியுதவி பயன் படுகின்றதென்ற திருப்தியை அடைந்தார்கள். 'வையா என் னும் நாட்டுவளப்பம்' (1993) 'கவிராசரின் கோணேசர் கல் வெட்டு' ஆகிய வரலாற்று நூல்களையும் அன்பளிப்பு மலர்க ளாக இவர் வெளியிட்டிருந்தார்.

சமகாலத்தில் எம்மவரிடையே சரமகவிகள் அரிதாகி வந்தி ருந்த நிலையில் சரமகவி பாடும் வல்லமைபெற்றிருந்த புல வர்கள் ஒருவர் பின் ஒருவராக மறைந்து, அந்தியேட்டி அல் லது சபிண்டீகரணக் கிரியைகளின் போது வெளியிடப்படும் கல்வெட்டுக் கலாச்சாரம் கூட வலுவிழந்து புதியதொரு ஆரோக்கியமற்றதொரு பரிமாணத்தை எட்டியிருந்தது.

ஈழத்தின் புகழ்பூத்த கல்விமான்கள் பலர் அன்று சரமகவி பாடி உள்ளனர். தம்முடன் நெருங்கிய தொடர்புடையோரின் பிரிவுத்துயர் தாங்காது அவர்கள் பாடிய இரங்கற்பாக்கள் இன்றும் 'கல்வெட்டு' வடிவில் நினைவு கூரப்பட்டு வருகின் றன.

ஆறுமுக நாவலர் இறந்த போது உடுப்பிட்டிச் சிவசம்புப் புலவர், சி.வை. தாமோதரம்பிள்ளை இருவரும் பாடிய சரம-கவி, ஆசுகவி கல்லடி வேலுப்பிள்ளை தன் மனைவி ஆச் சிக்குட்டிப்பிள்ளையின் பிரிவில் பாடிய 'நாயபிரலாபம்', அதே ஆச்சிக்குட்டிப் பிள்ளையின் பேரில் உடுப்பிட்டி சிவ-சம்புப் புலவர், ஆ. முத்துத்தம்பிப் பிள்ளை ஆகியோர்

பாடிய இரங்கற் பாக்கள், பேராசிரியர் கா. சிவத்தம்பியின் தந்தையார் பண்டிதர் த.பொ. கார்த்திகேசு பேரிலும், வதிரி தேவரையாளி இந்துக் கல்லூரியின் ஸ்தாபகர் சைவப்பெரியார் கா. சூரன் பேரிலும் நாடக கவிமணி எம்.வீ. கிருஷ்ணாழ்வார் (கரவெட்டி ஆழ்வார்ப்பிள்ளை) பாடிய சரமகவிகள் போன்றவையும் அவற்றில் குறிப்பிடத்தகுந்த சிலவாகும். உடுப்பிட்டி சிவசம்புப்புலவர், கரவெட்டி கிருஷ்ணாழ்வார் போன்றோர் அக்காலத்தில் பிரபல சரமகவிகளாகத் திகழ்ந்துள்ளார்கள் என்பது அக்கால கட்டத்தில் வெளிவந்த கல்வெட்டுக்களின் இலக்கிய நயத்திலிருந்து புலனாகும்.

சரமகவி பாடுவோர்களின் இடத்தை பின்னாளில் தேவார திருவாசகங்கள் இட்டு நிரப்பின. மரணித்தவரின் வாழ்க்கை வரலாறு கூறல், வம்சாவளி அட்டவணை என்று அவை குறுகி, பக்தி இலக்கியத் தொகுப்புகளுடன் இறுதியில் நின்றுவிட்டன.

இந்நிலையில் அதிக பணச்செலவில் குடும்பத்தினர்கள் அச்சிட்டு வெளியிடும் கல்வெட்டு நூல் வெளியீட்டிற்கு புதிய அர்த்தத்தினை வழங்கியதில் மயிலங்கூடலூர் நடராசனுக்குப் பெரும் பங்குண்டு. அவரது இல்லத்துக்குப் போகும் வேளைகளில் அவரிடம் கல்வெட்டொன்றுக்காக அல்லது நினைவுமலரில் சேர்த்துக்கொள்வதற்குப் பொருத்தமான படைப்பாக்கங்களையும் ஆலோசனைகளையும் எதிர்பார்த்து அவரது இல்லத்தில் ஓரிருவர் அமர்ந்திருப்பதை அடிக்கடி கண்டிருக்கிறேன்.

மயிலங்கூடலூர் பி. நடராஜன் அவர்கள் ஏராளமான சிறுவர் பாடல்களையும், மழலைப் பாடல்களையும் சிறு நூல்களாகத் தொகுத்து கல்வெட்டுகளாக அச்சிட்டு வெளியிட்டு வந்தார்.

திரு. இயல்வாணன் அவர்கள் திரு. பி. நடராஜனை ஒரு தடவை நேர்கண்டு வெளிச்சம் (புரட்டாசி-ஐப்பசி 2004) இதழில் விரிவான அந்த நேர்காணலை பிரசுரித்திருந்தார். அதில் இயல்வாணனின் கேள்வியும் மயிலங்கூடலாரின் பதிலும் இவ்வாறமைந்திருந்தன.

**கேள்வி:** வெறுமனே புலம்பல்களையும் அஞ்சலிச் செய்திகளையும் உவப்பற்ற விடயங்களையும் தாங்கியே கல்வெட்டு எனப்படும் நினைவு மலர்கள் வெளிவந்த சூழலில், சிறுவர் இலக்கியத்தைக் கல்வெட்டுக்களில் இடம்பெறச் செய்த பெரும்பணியை ஆற்றியுள்ளீர்கள். அவ்வாறு செய்வதற்கு உங்களுக்குத் தூண்டுதலாக இருந்தவர்கள் யாவர்?

**பதில்:** எனது ஆசிரியர் பண்டிதர் செ. கதிரேசர்பிள்ளை, மகாஜனக் கல்லூரி ஆசிரியர் ஒருவர் இறந்த போது அவரது நினைவாக மகாஜனவின் ஆசிரியர்கள், மாணவர்களின் குழந்தைப் பாடல்களைத் தொகுத்து கல்வெட்டாக வெளியிட்டார். அதுபோல, பண்டிதர் சி. அப்புத்துரை தனது சகோதரி இறந்த போது அவரது நினைவாக ‘மழலைச் செல்வம்’ என்ற பெயரில் குழந்தைப் பாடல்களை வெளியிட்டார். அவர்களைப் பின்பற்றி நானும் பல நினைவு மலர்களில் குழந்தைப் பாடல்களை இடம்பெறச் செய்தேன். என்னிடம் நினைவு மலரை ஆக்கித் தருமாறு கேட்பவர்களிடம் குழந்தைப் பாடல்களை வெளியிடுமாறு சிபார்சு செய்வேன். குழந்தைப் பாடல்கள் சிறுவர்களால் மட்டுமல்ல பெரியவர்களாலும் இரசித்துப் படிக்கப்படுபவையாகும். ஈழத்துக் குழந்தைக் கவிதைகளை எல்லோரும் அறியச் செய்வதற்கும், அவற்றைப் பயில்வதற்குமான எளிமையான வழியாக நினைவு மலர்களைப் பயன்படுத்திக் கொண்டேன். தில்லைச்சிவன், கல்வயல் வே. குமாரசாமி, மு. பொன்னம்பலம், சபா. ஜெயராசா, குறமகள், புத்தொளி ந. சிவபாதம், பா. சத்தியசீலன் எனப் பல படைப்பாளிகளும் இத்தகைய முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர்.

மயிலங்கூடலூர் பி. நடராசன் அவர்கள், கல்வெட்டுகளுக்கான பிரதியீடாக மாத்திரம் தனது பிரசுரங்களையும் மீள்பதிப்புகளையும் மட்டுப்படுத்திவிடாமல், திருமண நாள் பரிசுகளாகவும், பூப்புனித நீராட்டுவிழா பரிசில்களாகவும் நூல்களை வெளியிடும் பாரம்பரியத்துக்கு புத்துயிரளித்தார். ‘தமிழர் திருமணம்’ என்ற பெயரில் நூலொன்றினை தனது அயலவரான பண்டிதர் சி. அப்புத்துரையுடன் இணைந்து தெல்லிப்பழைக் கலை இலக்கியக் கள வெளியீடாக ஓகஸ்ட் 2001-ல் 78 பக்கங்களில் வெளியிட்டிருந்தார். இதனை இளவழகன் - விமலினி இணையரின் திருமணநாள் வெளியீடாக 24.08.2001-இல் வெளியிட்டிருந்தார். இந்நூலில் கல்யாணப் பரிசுக்குப் பொருத்தமாக, தமிழர் திருமணம் (சி. அப்புத்துரை), பழந்தமிழர் திருமணம் (மயிலங்கூடலூர் பி. நடராஜன்), வரலாற்று நோக்கில் திருமண நடைமுறைகள் (சி. அப்புத்துரை), ஆகிய மூன்று கட்டுரைகளையும், அனுபந்தங்களாக அருந்ததி வரலாறு, பெறவேண்டிய 16 பேறுகளின் பட்டியல் என்பனவற்றையும் தொகுத்திருந்தார்.

இவ்வாறாக, ஒருநாள் நிகழ்வுக்காக மாத்திரம் வெளியிடப்படும் கல்வெட்டுக்களை, வாழ்நாள் முழுதும் வாசித்துப் பாதுகாத்து வைக்கும் சிறு நூல்களாக மதிப்பளித்து மகிழ்ந்தார். நினைவு மலரை வெளியிடும் குடும்பத்தினரின் நிதிநிலைமைக்கேற்ப 12 முதல் 70 பக்கம் வரை இந்நூல்களின் பக்கங்கள் அமைந்திருந்தன.

இவர் தனது வாழ்நாட் காலத்தில் தன் படைப்பாக்கங்களை சிதறிவிடாது பாதுகாத்தமைக்கு இவரது ஆவணக்காப்புப் பற்றிய அக்கறையே முக்கிய காரணம். நாம் இருவரும் உரையாடும் பொதுப்புள்ளி எப்பொழுதும் ‘ஈழத்தமிழர்களுக்கானதொரு ஆவணக்காப்பகம் உருவாக்கப்பட்டு எமது முன்னோரின் அறிவியல் தேட்டங்கள் அனைத்தும் சேகரிக்கப்பட்டு பாதுகாக்கப்படவேண்டும்’ என்பதாகவே அமைவதுண்டு.

தான் வாழும் காலத்திலேயே ‘ஆடலிறை குழந்தைப் பாடல்கள்’ (2005), ‘ஆடலிறை மழலைப் பாடல்கள்’ (2006) ஆகியவற்றுடன், 2018-ல் இறுதியாக வெளிவந்த ‘ஆடலிறை ஆக்கங்கள்’ (பெருந்தொகுப்பு) என்பன வெளிவந்துவிட்டன. அமரர் மயிலங்கூடலூர் பி. நடராசன் தனது பெரும்பான்மையான படைப்பாக்கங்கள் ஆவணமாக்கப்பட்ட திருப்தியுடன் இறையடிசேர்ந்துள்ளார். இந்தப் ‘பொசுப்பு’ பலருக்கு தமது வாழ்நாட்காலத்தில் வாய்த்ததில்லை.



selvarajah.n@thaiveedu.com




# Lower rates. Exceptional service.

Connect with an insurance company that puts clients first. Discover why The Co-operators is the right choice for your Auto and Home insurance.

Ask us about our significant discounts, 24-hour Emergency Claims Service, free Identity Theft coverage with our Home policies, and Accident Forgiveness Endorsement option. All backed by our Claims Guarantee.

**Senthooran Punithavel**

Phone: **416-396-0707**
Fax: 416-396-1221
Email: Senthooran_Punithavel@cooperators.ca

We've Moved
Our New Address

10 Milner Business Court - Unit 708
Scarborough, ON M1B 3C3

## குறைந்த கட்டணங்கள் பெரும்பயன் நல்கும் சேவைகள்

வாடிக்கையாளர் நலனை முன்னிலைப்படுத்தும் எம் காப்புறுதி அமைப்போடு தொடர்பு கொள்ளுங்கள்

வீடு, வாகன காப்புறுதி சேவைகளுக்கு உகந்த தெரிவு The Co-operators நிறுவனமே என்பதைக் கண்டுகொள்ளுங்கள்

உங்களுக்கான கட்டணக் கழிவுகளை பெற்றுக் கொள்ளுங்கள்

24 மணிநேர அவசர கேட்பனவுச் சேவை வழங்கப்படும்

Home Auto Life Investments
Group Business Farm Travel

the co-operators®
A Better Place For You®



### வைகறை தெரியும் ஓரிர் நட்சத்திரம்

# மு. நித்தியானந்தன்

## - நடராசா சுசீந்திரன்

மனிதர்களைப் பற்றிய புறத்தோற்றம், அவர்களின் அகத்தே நிறைந்த சீரிய எண்ணங்கள், அவர்களது சேவைகள், அனுபவங்கள், சுகங்கள், துக்கங்கள், ஏனைய பிறவற்றையும் உணர்வுபூர்வமாக, அறிவார்ந்த தளத்தில், அச்சொட்டாக நறுமணம் வீசும் அழகிய சொற்களை அர்த்தமுறக் கோர்த்துக் கொடுப்பதில் வல்லவராகத் திகழ்பவர் மு. நித்தியானந்தன் அவர்கள்.

'புலன்களும் அறிவாற்றலும் ஒத்துழைத்தாலன்றி அறிவு தோன்றாது' என்பார் அறிவு எப்படி உருவாகிறது என்று எண்ணித் தேடிய இம்மானுவேல் கான்ட் (Immanuel Kant) அவர்கள். வரலாறு, நிலவியல், அரசியல், பொருளியல், நாட்டார் வழக்காறு, மானுடவியல், மக்கள் இலக்கியங்கள், நவீன இலக்கியங்கள், போராட்டங்கள், தியாகங்கள் என்று மலையகமாகும் முழுமையும் பற்றிய மிகப் பரந்த அறிவும் உணர்வும்தான் மு. நித்தியானந்தன் அவர்களது மேதமைக்குக் காரணிகளாக அமைகின்றன.

மனுகுல நாகரிகத்தினதும் பண்பாட்டினதும் மையமாக ஐரோப்பாவை வரித்துக் காலனியச் சுரண்டலுக்கும் பின்பேரினவாத அடக்குமுறைக்கும் ஆளாகிய மக்கள் கூட்டத்தினர் பட்ட துன்பங்களையும் இருநூறு ஆண்டுகளாக மலையக மக்களின் பாதை சமைத்துப் பயணப்பட்ட வரலாற்றையும், மரணங்களையும், போராட்டங்களையும், எழுச்சிகளையும், பட்ட பாடுகளையும், அவற்றினைப் பேசும் பாடல்களையும், இலக்கியங்களையும் எழுதிச் செல்கின்ற அறிஞர்களின் பட்டியலில் மு. நித்தியானந்தன் அவர்களது எழுத்துகள் ஆய்வில் ஆழ வேரூன்றித் தனித்து நிற்கின்றன. மு. நித்தியானந்தன் அவர்களது 'கூலித்தமிழ்' என்ற நூல் நீண்டகாலத் தேடலின் மிகச் சிறந்த அறுவடையாகும்.

இப்பொழுது இன்றைய சித்திரை பூக்கும் முதற் தினத்தில் பவளவிழாக் காணும் வயதினை எட்டும் மு. நித்தியானந்தன் அவர்களின் நான்கு புதிய நூல்கள் இம்மாதம் வெளிவருகின்றன. அறுபதுகளிலிருந்து அவ்வப்போதும், அங்குபல இங்குபலவாக எழுதப்பட்டவற்றைத் தொகுத்து வகைபிரித்து நூல்களாக வெளியிட்டிருப்பதை அறிகின்றபோது மகிழ்ச்சி மேலிடுகின்றது.

மலையகம் பற்றிய பிரக்ஞையும் மலையகத்தின் எழுத்துகள், இலக்கியங்கள், பண்பாட்டுக் கோலங்கள், மகத்தான மனிதர்கள், அவர்களது தியாகங்கள் இன்ன பிறவற்றைப் பற்றிய ஆர்வமும் அறிவும் புகலிடத் தமிழர்களுக்கு மத்தியிற் பரம்ப






லடைவதற்குக் காரணமாக இருப்பவர் பேராசிரியர் மு. நித்தி யானந்தன் அவர்கள். எண்பதுகளின் இறுதிக் காலகட்டத்திலி ருந்து இலங்கைக்கு வெளியே சமூகம், இலக்கியம், அரசி யல் என்று உற்சாகமாக இயங்கிக்கொண்டிருப்பவர் அவர். மலையகத்தின் கொடூரமான கோப்பிக் கால வரலாறு தொடக்கம், அண்மைக்கால போராட்டங்கள் வரை, அவற் றோடு தொடர்புடைய மனிதர்களது செயல்களையும் சேவைக ளையும் எடுத்துச் சொல்ல அவரால் இலகுவாக முடிகின்றது. இன்னும் சொல்லப்போனால் இலங்கை இந்தியத் தமிழ் அறி வுலக, இலக்கிய அரசியற் சக்திகளின் தலைமுறைகளை எல்லைகள் தாண்டி இணைக்கும் பாலமாகவும் இருந்துவரு கின்றார் பேராசிரியர் மு. நித்தியானந்தன் அவர்கள்.

மேலே நான் குறிப்பிட்ட கூலித்தமிழ் என்ற அவரது முதல் நூலில் 'துரைத்தன அடக்குமுறையும் கூலித்தமிழும்' என் றொரு கட்டுரை காணப்படுகின்றது. அதில் கோப்பி யுகத் தின் கொடுங்கோன்மை பற்றிய பல்வேறு சம்பவங்களையும் எடுத்துக்காட்டி எழுதப்பட்டிருக்கும் ஒரு தகவற் களஞ்சியம் அந்த ஆய்வுக் கட்டுரை. அந்தக் கட்டுரையினை எழுதுவதற் குப் பெருமளவு நூல்களையும், ஆவணங்களையும் அறிக் கைகளையும் படித்திருக்க வேண்டும், அவை எங்கெங்கே காணப்படுகின்றன என்பதை ஞாபகத்தில் வைத்திருக்க வேண்டும் என்றெல்லாம் நினைக்கும் பொழுது மிகப்பெரிய மலைப்பாக இருக்கின்றது. உணர்வுடன் படிப்பவை பசும ரத்து ஆணிபோல் ஆழப் பதிந்துவிடும் போலும்.

மேற்சொன்ன அந்தக் கட்டுரையில்தான் ஒரு தோட்டத் தொழி லாளப் பெண்ணொருத்தி வேலைக்குச் செல்லவில்லை என்ப தால் அந்தத் தோட்டத்துக் காவற்காரன் ஒருவன் அவளைச் சுட்டுக் கொன்றான் என்று முனியம்மா என்றொருபெண் சாட்சி யமளிப்பது அதில் எழுதப்பட்டிருக்கின்றது.

'எங்களால் முடிந்தவரை வேலை செய்கிறோம்' என்று கறுப் பண்ணன் என்ற தொழிலாளி, தனக்குக் கட்டளையிட்ட தோட் டத் துரையினைப் பார்த்துப் பதில்கூறிய-வாய்திறந்த கார ணத்தால் அத் தொழிலாளியை அடித்தே கொன்றிருக்கின் றான் ஒரு தோட்டத்துரை என்பது Donovan Moldrich அவர்க ளின் Bitter Berry Bondage நூலில் இருப்பதாக இதிற் சொல் லப்பட்டிருக்கின்றது.

'எனக்குத் தெரிந்தது சவரத்தொழில் தான். அதற்காகவே நான் கங்காணியால் இங்கே கூட்டிவரப்பட்டேன்' என்று தன் இயலாமையைக் கூறியதற்காக ஒரு தொழிலாளிக்கு ஒரு மாதச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டதும் இங்கே சொல்லப் பட்டிருக்கின்றது.

ஹிட்லரின் ஆட்சியில் நாசிகள் தமது நாட்டிலும் தாம் கைப் பற்றிய நாடுகளிலும் யூத இனத்து ஆண்கள், பெண்கள், குழந்தைகள் எல்லோரையும் பிரமாண்டமான சிறைச்சாலைக- ளில் வதைமுகாம்களில் அவர்கள் கொல்லப்படும்வரை வைத்திருந்தார்கள். அவ்வாறான சிறைச்சாலைகளில் வதை முகாம்களில் 'வேலை, வேலை மட்டுமே விடுதலை செய்யும்' _(Arbeit macht frei) என்ற வாசகமே காணப்படும். அக்கா லத்துத் தோட்ட லயங்களை, நாசிகளின் இந்த முகாம்களு டனும் சிறைச்சாலைகளுடனும் சரியாகவே ஒப்பிடுகின்றார் மு. நித்தியானந்தன் அவர்கள். செக் நாட்டில் இருக்கின்ற த்ரேசியன் நகரத்தில் நாசிகளின் மாபெருஞ் சிறைச்சாலைக்கு

நாங்கள் சென்றிருக்கின்றோம். அங்கும் மற்றும் Prag நகரிலும் இருந்த யூத மக்களின் பாடுகள், வதைகள், அவலங்கள், மரணங்கள் பற்றிய காட்சிச் சாலைகளைப் பார்த்திருக்கின்றோம். அங்கே ஓவியங்களைப் பார்த்தோம். அவை குழந்தைகளால், பிஞ்சுகளால் முகாமிலிருந்த குறுகிய காலத்தில் கீறப்பட்டவை. அவர்கள் யாரும் உயிர்தப்பவில்லை.

காலனித்துவத் துரைத்தனத்து அடக்குமுறைக்குத் தாக்குப்பிடிக்க முடியாத பலமற்ற மனிதர்களின் ஆயுதமாகத் தோட்டங்களை விட்டு ஓடிவிடுவதுதான் ஒரே ஒரு தேர்வாக இருந்திருக்கின்றது. இப்படி ஓடிவிடுவதைத் தடுக்க காலனித்துவம் இயற்றிய சட்டங்களும் கூட அவர்களது அடிமைச் சுண்டலுக்கு வாய்ப்பாகவே இருந்திருக்கின்றன. தோட்டங்களின் கொடுமை தாங்காது, கோப்பித் தோட்டங்களை விட்டு ஓடிவிட்டார்கள் என்ற காரணத்திற்காக மட்டும் ஆயிரக்கணக்கில் ஆண்களும் பெண்களும் குழந்தைகளுமாய் மலையகத்தின் சிறைச்சாலைகளை நிறைத்திருக்கிறார்கள். அந்தச் செய்திகள் எல்லாம் அடிமைமுறை ஒழிக்கப்படுவதற்கு முன்னர் அமெரிக்காவில் கறுப்பின மக்களுக்கு நடந்தவற்றையே ஞாபகமூட்டுகின்றன.

இந்த நான்கு நூல்களில் மலையகச் சுடர்மணிகள் என்றொரு நூலும் வெளிவருகின்றது. அண்மையில் காலமான இலங்கையின் கல்வியியற் சிந்தனையாளர் பேராசிரியர் சோ. சந்திரசேகரம் அவர்கள் முதற்கொண்டு தோட்டத்துக் குழந்தைகளின் படிப்பிற்காக பாரதி பெயரில் கல்லூரியமைத்த பாரதி ராமசாமி அவர்களின் துயர வாழ்வும் தூய சேவையும், மற்றும் தான் பெறும் சொற்ப சம்பளத்தில் மாதாமாதம் கழித்துக் கொள்ளுமாறு முற்பணம் பெற்றுக் 'கதைக் கனிகள்' என்ற நூலை வெளியிட்ட பத்திரிகையாளர் கார்மேகம், இன்னும் மலையத்தில் முதன் முதலில் தொழிற்சங்கம் நிர்மாணித்தவரும் 1947ல் அவர் இறக்கும்வரை மலையக மக்களின் துயர் நீக்க உழைத்த பத்திரிகையாளருமான 'தேச பக்தன்' கோ. நடேசய்யர், மலையக அடையாள அரசியலின் தனிநாயகன் பெ. சந்திரசேகரம், இளவயதில் காலமாகிவிட்ட ஆய்வாளர் லெனின் மதிவானம், கோகிலம் சுப்பையா என்று பெரிய ஆளுமைகளைப் பற்றி எங்களுக்கு அறியத்தருகின்றார்.

இந்த நூலில் கோகிலம் சுப்பையா அவர்களின் பலதுறை ஆளுமையும் வரலாறும் விமர்சனங்களோடு அழகுற எடுத்தியம்பப்படுகின்றது. கோகிலம் சுப்பையா அவர்கள் 'தூரத்துப் பச்சை' என்ற ஒரு நாவலை எழுதிய எழுத்தாளர் என்பதற்கு அப்பால் அறியப்படாதிருந்த அவரைப் பற்றிய இதில் வரும் கட்டுரை, ஒரு தனி நூலாகவே அமையக் கூடியளவு நீண்டது. கமில் சிவெலபில் என்ற செக் நாட்டுத் தமிழறிஞர், ராகுல சாங்கிருத்தியாயனின் வால்காவிலிருந்து கங்கைவரை நூலை மொழிபெயர்த்து வெளியிட்ட கண. முத்தையா, மற்றும் ஆங்கில எழுத்தாளரும் சென்னை அரச சேவைத் தலைமைச் செயலாளராக இருந்த செட்டூர், தொ.மு. சிதம்பர ரகுநாதன் போன்றவர்களோடு அவருக்கிருந்த அறிவார்ந்த நட்புகள், அவரது சங்க இலக்கிய மொழிபெயர்ப்புக்கள் போன்ற அரிய தகவல்களை அள்ளிச் சொரிகின்றார்.

இலங்கையில் 70-களின் இறுதிக் காலப்பகுதியில் நல்லூரில் அப்போதைய விரிவுரையாளர் மு. நித்தியானந்தன் அவர்களைத் தற்செயலாக அவரது நல்லூரடி வீட்டில் முதன்முதலில் சந்தித்தேன். அப்போது செங்கையாழியான் எழுதிய 'வாடைக்காற்று' என்ற நாவல் வெளிவந்து, அது 'நெடுந்தீவு மக் களை அவமதிக்கின்றது' என்று குற்றம் சாட்டப்பட்டு எழுத்தாளர்களுக்கு மத்தியில் கருத்தாடல்கள் இடம்பெற்றுக் கொண்டிருந்த ஒரு காலை. அப்போது வெறும் உணர்ச்சியிலேயே விடயங்களை அணுகும் மாணவப் பருவம் என்னது. அந்த நேரடிச் சந்திப்பில் நித்தியானந்தன் அவர்களது யதார்த்தபூர்வமான கருத்துகள் அன்று என்னை அதிசயிக்கவும் சிந்திக்கவும் தூண்டியிருக்கின்றன. ஆனால் வெங்கட் சாமிநாதன் அவர்கள் சொல்வனம் இணைய சஞ்சிகையில் வேடிக்கையாக எனக்கு எழுதியது போன்று '…Of I might have been one among the hundreds you might have met for the first time and you may not remember that; -1951ல் ஒரிஸ்ஸாவுக்கு நீங்கள் தேர்தல் பிரச்சாரத்துக்கு வந்தபோது சம்பல்பூர் பொதுக்கூட்டத்தில் உங்கள் காருக்கு அருகில் நான் நின்றிருந்தேனே, நினைவு இருக்கிறதா என்று நேருவைக் கேட்டால் அவர் என்ன சொல்வார் பாவம்.' என்றவாறு அச் சந்திப்பு நித்திக்கு மறந்துவிட்டிருந்தது.

1980-களின் நடுப்பகுதியில் இருந்து ஜெர்மன் மொழிப் புகலிட இலக்கியங்கள் (1933-1947) பற்றி நான் அறிந்துகொண்டிருந்தேன். 1988-களில் இருந்து இலக்கியச் சந்திப்பு என்ற ஒரு தொடர்நிகழ்வு ஜெர்மனியில் ஆரம்பமாகி மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாக நடந்துகொண்டிருந்தது. 1989ம் ஆண்டு மே மாதம் 'புதுமை' என்ற சிற்றிதழின் ஆசிரியர் குழுவினைச் சேர்ந்த நண்பர் பாரதிதாசன் உள்ளிட்ட பலர் நடத்திய ஐந்தாவது இலக்கியச் சந்திப்பில் நான் 'புகலிட இலக்கியங்கள்' (Exile Literature) பற்றிப் பேசுவதாக ஏற்பாடு. இத்தலைப்பில் நான் பேசுவதற்கு உதவியாக, நித்தி அவர்களிடமிருந்து ஒரு கடிதம் கிடைத்தது. அக் கடிதத்தில் நிறைவான உதவிக் குறிப்புக்களும் நான் எனது எண்ணங்களை வளர்த்துச் செல்லவேண்டியவைகளைத் தூண்டும் கேள்விகளும், வரைவிலக்கணம், வரையறை செய்து கொள்ளவேண்டிய பதங்களுங்கூட ஓர் ஆய்வு மாணவனை வழிநடத்தக்கூடிய பேராசிரியரிடமிருந்து கிடைக்கும் வழிகாட்டியாக அவை இருந்தன. இக் கடிதமே எங்களது கெட்டியான உறவிற்கு முதல் மூலமாக அமைந்தது. 1989ம் ஆண்டின் இறுதியில் பேர்லினில் நடைபெற்ற ஆறாவது இலக்கியச் சந்திப்பில் நித்தி அவர்கள் 'மலையக மக்கள்: அங்கும் (இலங்கை) இங்கும் (இந்தியா)' என்ற தலைப்பில் ஆற்றிய உரை மிகப் புகழ்பெற்றது. மலையக மக்கள் பற்றிய தமிழின் தலைசிறந்த பேச்சுக்களில் ஒன்றாக அது இருக்கின்றது.

தமிழுலகப் புகலிடப் பரப்பில் அவரது வழிகாட்டலிலும், பங்களிப்பிலும் நடைபெற்ற மிகவும் ஆக்கபூர்வமான இலக்கிய, அரசியல் நிகழ்ச்சிகள், புத்தக வெளியீடுகள், நூலாக்கங்கள், விமர்சன அரங்குகள், மேடைகள், ஊடகத்துறைசார் ஆக்கங்கள் என்று பலவற்றைக் குறிப்பிட்டுச் சொல்லலாம். குறிப்பாக இலங்கை மலையகத்தின் - மக்கள், வரலாறு, அரசியல், இலக்கியம், போராட்டம் இன்ன பிறவற்றைப் பிரக்ஞைபூர்வமாக முன் எடுத்துச் செல்பவராக அவர் இன்றும் இருந்துவருகின்றார். அவரை வாழ்த்துவதில் நான் மிகுந்த பெருமை கொள்கிறேன்.



suseendran.n@thaiveedu.com



# இலக்கிய வித்தகர்
# கலாநிதி நாவற்குழியூர் நடராஜன்

– வே. விவேகானந்தன்

ஈழத் திருநாட்டில் தமிழ் இலக்கிய வானிலே, நாவற்குழியூர் நடராஜன் என்னும் பெயரில், புகழ் பெற்று விளங்கியவர் க.செ. நடராஜா அவர்கள். இவர் வனப்பும் செழிப்பும் மிக்க நாவற்குழியூரில் பெரும் நிலபுலங்களுக்குச் சொந்தக்காரரான கனகசபை செல்லப்பா - அன்னம்மா இணையருக்கு மகனாக 1919-ம் ஆண்டு ஜூன் மாதம் 30-ம் திகதி பிறந்தார்.

இவரது தந்தையார் தனது நிலபுலங்களைப் இவர் பேணிப் பாதுகாத்துப் பராமரிக்க வேண்டும் என்றே விரும்பினார். ஆனால் நடராஜா அவர்கள் சிறுவயதிலேயே தமிழ் மொழி மீது ஆர்வமும், சமூகப் பற்றும், கவிதைகள் புனைவதில் திறமையும் கொண்டவராக விளங்கினார். இதனை அறிந்த தந்தையார் நடராஜாவின் முயற்சிகளுக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்தார். நடராஜா அவர்கள் இளமையாக இருக்கும் போதே கவிதைகள் புனைந்து 'சிலம்பொலி' என்னும் கவிதை நூல் தொகுதியை வெளியிட்டார். இவரது கவிதைகளை இந்திய சஞ்சிகைகளும் வெளியீட்டு வந்தன. 1940-ம் ஆண்டு அளவில் தனது நண்பர்களுடன் இணைந்து 'சமூக சேவை அமைப்பு' என்னும் அமைப்பினை உருவாக்கி அதன் மூலம் சமூக சேவைகளையும் மேற்கொண்டு வந்தார்.

பாடசாலைக் கல்வியிலும் கவனம் செலுத்தி வந்த அவர் 1946-ம் ஆண்டு இலங்கைப் பல்கலைக் கழகத்திற்குப் பிரவேசித்தார். அதே ஆண்டு சுவாமி விபுலானந்தரும் அங்கு தமிழ்த் துறைப் பேராசிரியராக நியமனம் பெற்றிருந்தார். சுவாமி விபுலானந்தரிடம் தமிழ் படிக்கும் பாக்கியம் பெற்ற நடராஜா அவர்கள், தனது தமிழ் அறிவை நன்கு கூர்மைப் படுத்தி 'வித்துவான்' என்னும் பட்டத்துடன் வெளியேறினார். பின்னாளில் யாழ்ப்பாண சரித்திரத்தைக் கூறும் 'வையாபாடல்' என்னும் செய்யுள் நூலை ஆய்வு செய்து முது கலைமானிப் பட்டத்தினையும், ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி 14-ம் நூற்றாண்டு முதல் 18-ம் நூற்றாண்டு இறுதிவரை என்னும் தலைப்பில் கலாநிதிப் பட்டத்துக்கான ஆய்வினை மேற்கொண்டு, கலாநிதிப் பட்டப்படிப்பினையும் நிறைவு செய்தார். இவரது இந்த ஆய்வு 1982-ம் ஆண்டும் மற்றுமொரு ஆய்வு நூலான வையாபாடல் 1980-ம் ஆண்டும் கொழும்பு தமிழ்ச் சங்க வெளியீடுகளாக நூலுருவில் வெளிவந்தன.

பட்டப்படிப்பை நிறைவு செய்த நடராஜா அவர்கள் கொழும்பு ரோயல் கல்லூரியில் ஆசிரியராகத் தனது தொழிலை ஆரம்பித்தார். அதேவேளை லண்டன் இளமானிப் பட்டப்படிப்பினையும் நிறைவு செய்தார். தமிழ் மொழியிலும் ஆங்கில மொழியிலும் மிகப் புலமை பெற்ற நடராஜா அவர்கள் ஆசிரியர் தொழிலில் மிகக் குறுகிய காலமே பணியாற்றினார்.

அக்காலப் பகுதியில் இலங்கை வானொலியில் பணியாற்றி வந்த அவரது நண்பர் 'சானா' என அழைக்கப்படும் சண்முகநாதனின் வேண்டுகோளை ஏற்று 1951-ம் ஆண்டளவில் இலங்கை வானொலியில் இணைந்து கொண்டார். அங்கு பேச்சுப் பகுதியில் இணைந்து கொண்ட அவர் 1953-ம் ஆண்டு அப்பகுதியின் பொறுப்பாளராகப் பதவி உயர்வு பெற்றார். பல்வேறு கவியரங்குகளையும் கருத்தரங்குகளையும் சிறப்பாக நடத்தினார். சுவாமி விபுலானந்தரிடம் பெற்ற கல்வியும், அவர் பெற்றிருந்த நுண்ணறிவும், செயற்திறனும் பக்கபலமாக அமைய அவரைப் பதவி உயர்வுகள் நாடி வந்தன. B.B.C-யின் புலமைப் பரிசில் பெற்று, பிரித்தானியாவுக்குச் சென்று ஒலிபரப்புக் கலையின் நுட்பங்களில் விசேட பயிற்சி பெற்று மேலதிக பணிப்பாளர், தேசிய சேவை (Additional Director National Service) என்னும் பதவியில் அமர்ந்து அவர் ஆற்றிய பணிகள் மகத்தானவை. தேசிய சேவை தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் இடம்பெற்றது. அவரால் அப்பதவி பெருமை அடைந்தது. அவரது நிர்வாகத்தின் கீழ் ஊழல் இருக்கவில்லை, பாரபட்சம் காட்டப்படவில்லை, உண்மையும் நேர்மையும் நிலவியது. திறமைக்கு உரிய இடம் கொடுக்கப்பட்டது. நடராஜா அவர்களின் இத்தகைய அரிய பண்புகள் மும்மொழி இளம் ஒலிபரப்பாளர்கள் இடையே எதிர்கால நம்பிக்கைக்கு உரமூட்டின.

1971-ம் ஆண்டளவில் உயர் அதிகாரியாகப் பணியாற்றி வந்த சுனில் முனசிங்க அவர்கள் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுஸ்தாபனத்தை மொழிவாரி சேவைகளாகப் பிரித்தார். அதனையடுத்து தமிழ் சேவைக்கான இயக்குனராக நடராஜா அவர்கள் நியமனம் பெற்றார். இவரது இந்த நியமனம் அவரது அதிகார எல்லையைக் குறைத்ததாகப் பரவலான அபிப்பிராயம் நிலவிய போதிலும், மறுபுறம் தமிழ்ச் சேவையை மேலும் மெருகூட்டி செயற்படுத்தக் கிடைத்த சந்தர்ப்பமாகவும் கருதப்பட்டது. இவ்வாறு பல்வேறு படிநிலைகளில் பணியாற்றி வந்த நடராஜா அவர்கள் 1978-ம் ஆண்டு இலங்கை வானொலித் துறையிலிருந்தும் ஓய்வு பெற்றார். எனினும்

இலங்கை ஒலிபரப்பு கூட்டுஸ்தாபன ஆளுநர் சபை, இலங்கை திரைப்படக் கூட்டுஸ்தாபன ஆளுநர் சபை ஆகியவற்றில் அங்கத்தவராக செயற்பட்டு வந்தார்.

நடராஜா அவர்கள் ஓய்வு பெற்ற பின்னர் கொழும்புத் தமிழ் சங்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு தொடர்ந்தும் தமிழ்ப் பணிகளை ஆற்றி வந்தார். குறிப்பாக தமிழ் சங்கம் நடத்தும் தமிழ் வகுப்புகளை மேற்பார்வை செய்தல், பரீட்சைகளை ஒழுங்கு செய்தல், திறமையாகச் சித்தியடைந்த மாணவர்களுக்குப் பரிசிகள் வழங்குதல், கருத்தரங்குகள், கவிதை அரங்குகள் என்பவற்றை ஏற்பாடு செய்தல், 25-க்கும் மேற்பட்ட நூல்கள் வெளிவரப் பேருதவி புரிந்தமை, நூலகத்தின்



முற்பகுதிக் கட்டட அமைப்பு பணிகள் நிறைவு பெற்றமை போன்ற பல செயற்பாடுகள் இவர் சங்கத் தலைவராக இருந்த போது நிறைவேறின. ஐந்து ஆண்டுகள் கொழும்புத் தமிழ் சங்கத் தலைவராக அரும்பணியாற்றினார்.

இலங்கையில் சுறுசுறுப்புடன் இயங்கிவந்த நடராஜா அவர்கள் 1987-ம் ஆண்டு ஜுன் மாதம் கனடிய தேசத்தில், அல்பேட்டா மாகாணத்திலே எட்மண்டன் நகரில் குடியேறினார். அங்கும் அவர் தனது தமிழ் சமயப் பணிகளைத் தொடர்ந்து மேற்கொண்டார் அல்பேட்டா பல்கலைக்கழகத்தின் தெற்காசிய-பசுபிக் (South Asian-Pacific Studies) படிப்புத்துறையில் அங்கத்தவராக இணைந்து பழந்தமிழ் இலக்கியம், தமிழ் கலை கலாச்சாரம் மற்றும் பாரம்பரியம் தொடர்பான விரிவுரைகளை நடத்தினார் இதன் மூலம் தமிழர்களும், தமிழர் அல்லாதவர்களும் தமிழின் பெருமையினையும், தமிழர் தம் சிறப்பினையும் அறியச் செய்தார் பைபிளுக்கு அடுத்ததாக அதிக மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்ட நூல் திருக்குறள் எனக் குறிப்பிட்டு அதன் பெருமையினையும், அதனைப் படிக்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்.

அல்பேட்டா, மகா கணபதி ஆலய நிர்மாணப் பணிகளிலும் பெரும் பங்காற்றினார். அங்கு சமய சொற்பொழிவுகளையும், சமய வகுப்புகளையும் நடத்தினார். மேலை நாட்டவர்க்கு சிவதாண்டவம், பிள்ளையாரின் யானை முகம், முருகக் கடவுளின் ஆறுமுகம், லிங்க வழிபாடு போன்றவற்றின் தத்துவங்களை விளங்கப்படுத்தினால் புரிந்து கொள்வார்கள் என்னும் ஆர்வத்தினால் India Magazine என்னும் தொலைக் காட்சியில் ‘Who is a Hindu’ என்னும் தொடரை ஆங்கிலத்தில் நிகழ்த்தி வந்தார்.

தமிழ் பாடசாலை ஒன்றினையும் உருவாக்கி அங்கு வாழ்ந்த தமிழ் சிறார்கள் தமிழ் மொழியைக் கற்க ஊக்கமளித்தார்.

ஐந்து ஆண்டுகள் அல்பேட்டாவில் தமிழ் சமயப் பணிகளை ஆற்றிவந்த நடராஜா அவர்கள் 1992-ம் ஆண்டு மே மாதம் ஒன்ராறியோ மாகாணத்துக்கு இடம் பெயர்ந்து ஸ்காபரோவில் குடியேறினார். பெருமளவு தமிழர்கள் ரொறன்ரோ மாநகரில் வாழ்வதனைக் கண்டு அகமகிழ்ந்து தனது பணிகளை உற்சாகத்துடன் தொடர்ந்து மேற்கொண்டார். ஸ்காபரோவில் தமிழ் சிறுவர்களுக்கு தமிழ் கலாச்சாரத்தின் சிறப்பையும், சைவசமயத்தின் பெருமைகளையும் விளங்க வைக்கும் நோக்கில் ஆங்கில மொழி மூலம் சனிக்கிழமைகளில் வகுப்புகளை நடத்திவந்தார்.

தேமதுரம் வானொலியின் பிரதம ஆலோசகராக விளங்கி அதன் வளர்ச்சிக்கு அவசியமான ஆலோசனைகளை வழங்கி வந்தார். அத்துடன் தமிழ் மொழியை எழுத்துப் பிழையின்றி எழுதவும், உச்சரிப்புப் பிழையின்றி வாசிக்கவும் வேண்டும் என்னும் கொள்கையை இறுக்கமாகக் கடைப்பிடித்த அவர் ‘வளரும் தமிழில் நுழையும் வழுக்கள்’ என்னும் தலைப்பில் தொடர் சொற்பொழிவை அதே வானொலியில் நிகழ்த்தி வந்தார். ‘நாதரஞ்சனி’ என்னும் தொலைக்காட்சிச் சேவை இவரது ஆலோசனையைத் தொடர்ந்து ஆரம்பிக்கப்பட்டது. 1993-ம் ஆண்டு கனடாத் தமிழ் எழுத்தாளர் இணையத்தின் அங்குரார்ப்பணக் கூட்டத்தில் ஆர்வத்துடன் கலந்து கொண்டு, அதன் போஷகர்களில் ஒருவராகப் பணியாற்றி அதன் முன்னேற்றத்துக்கும் பங்களித்துள்ளார். தமிழரின் பாரம்பரிய சமூக, கலை கலாச்சார அறிவை அடுத்த தலைமுறைக்கு இட்டுச்செல்லும் பெருநோக்குடன் ஆரம்பிக்கப்பட்ட தமிழ்க் கலை தொழில்நுட்பக் கல்லூரியின் தலைவராகப் பணிபுரிந்து அதன் வளர்ச்சியிலும் பங்களித்தார்.

1994-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம், கனடா தமிழ் பண்பாட்டுக் கழகம் சர்வதேச ரீதியில் தமிழ் பண்பாட்டு மகாநாடு ஒன்றினை ரொறன்ரோ மாநகரில் நடத்த ஏற்பாடுகள் செய்து கொண்டிருந்தது. இம்மகாநாட்டு, ஆய்வுக் கட்டுரைக் குழுவிற்கு, நடராஜா அவர்களே தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்தார். இத்தகைய சூழ்நிலையில் 1994-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 17-ம் திகதி மாரடைப்பின் காரணமாகத் திடீரெனத் தமது எழுபத்தைந்தாவது வயதில் இவ்வுலக வாழ்வை

நீத்தார். தமிழ் கூறும் நல்லுலகம் ஒருகணம் நிலை குலைந்து. நின்றது.

அமரர் கலாநிதி நடராஜா அவர்கள் பல ஆய்வு முயற்சி களை மேற்கொண்ட போதிலும் அவை அனைத்தும் நூலு ருப் பெறவில்லை. எனக் கூறப்படுகிறது. 'ஈழத்துத் தமிழ் இலக்கிய வளர்ச்சி', 'வையா பாடல் திருத்திய பதிப்பு' என் பன இவரது ஆய்வு நூல்கள் ஆகும். 'ஈழத்துத் தமிழ் இலக் கிய வளர்ச்சி' என்னும் நூலுக்கு 1991-ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலம் 'இலக்கிய வித்தகர்' என்னும் பட்டத் தினை வழங்கியதுடன் 10,000 ரூபா பணப் பரிசினையும், பதக்கத்தினையும், போன்வண்ணச் சின்னத்தினையும் வழங் கிப் பாராட்டியது. நடராஜா அவர்கள் சிறந்தவொரு மரபுக் கவிஞராவார். ஏராளமான மரபுக் கவிதைகளை வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஊடாக மக்களைச் சென்றடை யச் செய்தவர்.

இவரது கவிதைகள் 'சிலம்பொலி', 'கவிக்கற்பரசி' என்னும் பெயர்களில் நூல்களாக வெளிவந்தன. 'கவிக்கற்பரசி' கவிதை நூலில் இடம்பெற்றுள்ள கவிதைகள் மனித சமூகத் தின் மீது இவர் கொண்டிருந்த அக்கறையினைப் பிரதிபலிப் பனவாக அமைந்துள்ளன. இக்கவிதை நூலுக்கு 1993-ம் ஆண்டு இலங்கை சாகித்திய மண்டலம் பரிசில் வழங்கி, கௌரவித்தது. நடராஜன் அவர்கள் வெளியிடுவதற்குத் தயா ராக வைத்திருந்த நூல் 'உள்ளதான ஓவியம். என்பதாகும். இக்கவிதை நூல் 600-க்கும் மேற்பட்ட பாடல்களைக் கொண்ட சிறந்த நூலாகும். இதனைக் கனடா தமிழ் எழுத்தா ளர் இணையம் 1998-ம் ஆண்டு வெளியிட்டது. இவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகளுள் ஆறு கட்டுரைகளை 'ஓய்ந்தாய்ந்து பார்க்கையிலே' என்னும் பெயரில் 'தமிழர் தகவல்' சஞ்சிகை, அகிலன் ஞாபகார்த்த ஐந்தாவதாண்டு வெளியீடாக 1994-ம் ஆண்டு வெளியிட்டது. 1995-ம் ஆண்டு தமிழர் தகவல் சஞ்சி கையின் நான்காவது ஆண்டு மலர் வெளியீட்டு வைபவத் தின் போது, ஆசிரியர் தம்பையா இலட்சுமணசாமி அவர்கள் நினைவாக சூரியன் பத்திரிகை ஆசிரியர் ஆர். என். லோகேந்திரலிங்கம் அவர்கள் வழங்கிய தங்கப்பதக்கமும், தமிழர் தகவல் விருதும் அமரர் நடராஜா அவர்களை கௌர விக்கும் முகமாக, அவரது மனைவியார் திருமதி கலாநிதி தங்கராணி நடராஜா அவர்களுக்கு வழங்கப்பட்டது.

பேச்சாளர், எழுத்தாளர், ஆசிரியர், நூலாசிரியர், ஆய்வாளர், கவிஞர், ஊடகவியலாளர், திறமை மிக்க நிர்வாகி, எனப் பன் முக ஆளுமை கொண்ட அமரர் கலாநிதி நடராஜா அவர் கள் இலங்கை முதல் கனடா வரை 'என் கடன் பணி செய்து கிடப்பதே' என்பதற்கேற்ப தமிழ்ப் பணியே தன் பணியாக எண்ணி வாழ்ந்தவர். தமிழ் இருக்கும் வரை அவர் நாமமும் நிலைத்திருக்கும். என்பதில் ஐயமில்லை.



vivekananthan.v@thaiveedu.com











# அன்ரன் சின்னராசா பிலிப்
## மக்கள் பணியாளர்

**- சுபகரன் பாலசுப்பிரமணியம்**



**அன்ரன் சின்னராசா பிலிப்**
**தலைவர்,**
**போரால் பாதிக்கப்பட்டோருக்கும்**
**மனித உரிமைகளுக்குமான நடுவம்**
**Center for War Victims and Human Rights (CWVHR)**
**- - -**
**அன்ரன் சின்னராசா பிலிப்**
**ஆலோசகர்/நன்கொடையாளர்,**
**அறம் செய்வோம் அறக்கட்டளை, கனடா**
**(LetUsHelpNow Foundation, Canada)**

'கவனமாப் போயிற்று வாங்கோ,' அன்ரன் அண்ணா என்னோடு பகிர்ந்த இறுதி வார்த்தைகள். 2023 பெப்ரவரி 8-ம் திகதி, புதன்கிழமை. ஸ்காபுரோவில் பனியின்றி விடிந்த ஒரு குளிர்கால காலை. அன்ரன் அண்ணா கடந்த சில மாதங்களாகவே உடல் நலிவுற்றிருந்தார். தொலைபேசியில் அவரை அழைப்பதற்கு முன்னர் கதைக்கக் கேட்டு குறுஞ்செய்தியொன்று அனுப்புவது வழக்கம். கடந்த சில மாதங்களாக அவரின் அனுமதி பெற்ற பிற்பாடே அழைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்தேன். ஆனால், அன்று கட்டாயம் கதைத்து விடவேண்டும் என்ற உணர்வு என்னை ஆட்கொண்டிருந்தது. நான் இலங்கைக்கு போவது பற்றியும் அங்கு நடைபெறவிருக்கும் நிகழ்வுகள், செல்லவிருக்கும் காப்பகங்கள் பற்றியும் அன்ரன் அண்ணாவுடன் பகிர்ந்து கொள்ள வேண்டும் என்ற உள்ளுணர்வுடன் இருந்தேன்.

அன்ரன் அண்ணா அழைப்பை ஏற்றுக்கொண்டு வழமையாக கதைக்க முற்பட்டார். ஆனாலும் வழமைக்கு மாறாக அவரின் குரல் மிகவும் தளர்ந்து இருந்தது. பேச்சை மீறிய மூச்சிரைக்கும் சத்தம் அவரால் கதைக்க இயலாமையை வெளிக்காட்டியது. 'அண்ணா நீங்கள் கதைக்க வேண்டாம், நான் கதைப்பதை கேட்டுக் கொண்டு இருங்கள்,' என்று அவரை வேண்டினேன். அவருடன் பகிர வேண்டும் என்று நினைத்து வைத்திருந்த விடயங்கள் அனைத்தையும் அவருக்குச் சொல்லி முடித்தபோது தான் தன் மெல்லிய குரலில், 'கவனமாப் போயிற்று வாங்கோ,' என்றார். நானும் அதற்குப் பதிலாக, கட்டாயம் வந்தவுடன் முழு விபரங்களையும் உங்களுக்குச் சொல்கிறேன் என்றும், நீங்கள் விரைவில் நலம் பெறுவீர்கள் என்றும் கூறி விடைபெற்றேன். அந்த அமைதியான குளிர்கால காலைப்பொழுது, அக்கணம் தான் அன்ரன் அண்ணா எனும் தமிழ்ச் சமூகத்தின் ஒரு முக்கிய வரலாற்று மனிதருடனான இறுதி உரையாடலாக இருக்கும் என்பதை நான் அறிந்திருக்கவில்லை.

2008-ம் ஆண்டின் இறுதிப்பகுதி, தாயகத்தில் கட்டவிழ்க்கப்பட்டிருந்த போரும் இனவழிப்பும் மிகவும் மோசமான ஒரு நிலையை எட்டிக் கொண்டிருந்த காலம். புலம்பெயர் தேசங்களில் இருந்த நாம் அனைவரும் எமது பங்கிற்கு எம்மால் இயன்ற செயற்பாடுகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த காலம். இதில் நானும் என்னால் பங்களிக்க இயலுமான வீதியோரக் கவன ஈர்ப்புப் போராட்டங்கள் அனைத்திலும் செயற்பட்டுக் கொண்டிருந்த காலம். நேரு அண்ணா வீதியோரங்களிலிருந்த எம்மில் சிலரை ஆவணப்படுத்தலுக்குத் தயாராக்கி, இனவழிப்பினையும் மனித உரிமை மீறல்களையும் உயிரிழப்




புகளையும் ஆவணப்படுத்த ஆரம்பித்திருந்த காலம்.

2009-ம் ஆண்டின் முற்பகுதி, கனடாவிலுள்ள ஸ்காபுரோ நகரின் கெனடி வீதியில் இருந்த தமிழ் அன்பருக்குச் சொந்தமான மண்டபத்தில் விசேட கூட்டம் எனவும் புதிதாக ஒருவரை எமக்கு அறிமுகப்படுத்துவதாகவும் கூறப்பட்டது. அன்று தான் அன்ரன் அண்ணாவை இரண்டாவது தடவை மிக அருகில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. உயர்ந்த தோற்றம், சீரான உடை, ஆழமான பார்வை, ஆர்ப்பரிக்காத அமைதியான தெளிவான உரைநடை, மனித உரிமைகள் மீது அவருக்கிருந்த அறிவும் மக்கள் மேலிருந்த அளவற்ற பற்றும் எம் அனைவரையும் கட்டிப்போட்டது என்றே சொல்லலாம். அவரை முதலாவது தடவை சந்தித்த பொழுதுக்கும் இப்பொழுதுக்கும் ஒரே ஒரு வித்தியாசம். முதலாவது தடவை மஞ்சள் சிவப்புச் சால்வை அணிந்திருந்ததாக ஞாபகம். அன்றிலிருந்து அன்ரன் அண்ணா தன்னை ஒரு மனித உரிமைச் செயற்பாட்டளாராகவும் நடுநிலைமையாளராகவும் வாழ்ந்து காட்டினார்.

போரியல் சூழலில் ஆவணப்படுத்தலின் அவசியம், ஆவணப்படுத்தலுக்கான உரிய வழிமுறைகள், அதனை ஓர் அமைப்பாகச் செய்ய வேண்டியதன் அவசியங்கள் என்பன அனைவராலும் சீரிய முறையில் ஆராயப்பட்டு, போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவம் (Centre for War Victims and Human Rights) என்ற அமைப்பை தொடங்குவதற்கான ஆரம்பப்புள்ளி இடப்பட்டது.

இந்நடுவத்தின் ஆரம்பகாலச் செயற்பாடாக செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் ஆவணமாக்கல் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருந்தன. அவை முற்றும் கடதாசிப் படிவங்களை நிரப்புவனவாகவே இருந்தன.

அன்ரன் அண்ணா மனித உரிமைகள் தொடர்பிலான ஆவணமாக்கலை சர்வதேச நியமங்களுடன் மேற்கொள்வதற்காக Human Rights Information and Documentation Systems (HURIDOCS) இனை எமக்கு அறிமுகப்படுத்தியதுடன் மட்டுமன்றி, அங்கிருந்த அலுவலர்களூடாக தகுந்த பயிற்சிகளும் பெற்றுத்தந்தார். இந்த உரையாடல்களின் மூலம் அன்ரன் அண்ணா HURIDOCS உடனும் மனித உரிமைகள் தொடர்பில் செயற்படும் பல்வேறு சர்வதேச தரப்புகளுடனும் பணியாற்றியிருந்தமையையும் அறியக்கூடியதாக இருந்தது. மனித உரிமை மீறல்களை கணினிப்படுத்தும் முயற்சியை அன்ரன் அண்ணா பெரிதும் ஊக்கப்படுத்தியதோடு அதற்கான உள்ளீடுகள் தருவதிலும் தானே முதலாவது நபராக அவற்றைப் பரிசோதித்துப் பார்ப்பவராகவும் செயற்பட்டார்.

ரொறன்ரோ நகரின் பல்வேறு பகுதிகளிலும் பிரம்டென், மொன்றியல் மற்றும் ஒட்டோவாவிலும் இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை ஆவணமாக்குவதற்கு பல்வேறு அமைப்புகளின் உதவியினைப் பெற்று திறம்பட நிர்வகித்து வந்தார். இவ்வேளையில் இப்பணிக்கான நிரந்தரமான இடம் ஒன்றின் தேவையை உணர்ந்து பிரோகிறஸ் வீதியில் ஓர் அலுவலகத்தை 2009-ம் ஆண்டின் நடுப்பகுதியில் எடுத்து ஆவணப் பதிவு வேலைகளை நாளாந்தம் செய்யத் தொடங்கிய போது, வாரத்தில் அனேகமான மாலை வேளைகளை இங்கு சந்திப்பதிலும் ஆவணமாக்கலிலும் செலவிட்டார். இதற்காகத் தன்னிடமிருந்த பல அரிய மனித உரிமை ஆவணங்கள், நூல்கள், பத்திரிகைகளை அனைவரும் படித்துப் பயன்பெறும் வகையில் காட்சிப்படுத்தி வைத்தது மாத்திரமல்லாது, அதனை நேரம் கிடைக்கும் பொழுதுகளில் படித்தும் காண்பித்தார்.

ஒரு முறை எம்மிடம் தன் உறவு ஒன்றினை ஆவணப்படுத்துவதற்காக பிரம்டனிலிருந்து ஒருவர் வந்திருந்தார். அன்றைய நாள் அவரின் தகவலை ஆவணமாக்குவதற்கு நேரம் சென்றதால் அவர் திரும்பிச் செல்ல வேண்டிவந்தது. இவ்விடயம் அன்ரன் அண்ணாவின் கவனத்திற்கு வந்தபோது அதனை மிகவும் ஆழமாக நோக்கி, இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாத வண்ணம் செயற்படுவதற்காக முழுக் காரணங்களையும் கண்டறிந்து உதவ முற்பட்டார். இது அவரின் மனித உரிமைப் பணிமேல் இருந்த பக்தியை வெளிக்காட்டியது எனலாம்.

சர்வதேச மனித உரிமை நாள், சர்வதேச இனப்பாகுபாடு ஒழிப்பு நாள் போன்ற சர்வதேச நாட்களை தமிழ்ச் சமுகமாக நாம் அறிந்து சிறப்பிக்கும் வகையில் பல நிகழ்வுகளை கனடா தமிழ் அமைப்புகளுடன் இணைந்து முன்னின்று நடத்தினார்.

2010-ம் ஆண்டு மே மாதம் 15-ம் திகதி போரினால் பாதிக்




கப்பட்டோர் மற்றும் மனித உரிமைக்கான நடுவத்தின் சார்பாக ரொறன்ரோ நகரின் ஷெரேட்டன் பார்க்வேயில் மனித உரிமைகள் பற்றிய ஒரு நாள் கருத்தரங்கினையும் 'தமிழினப் படுகொலைகள்' நூல் வெளியீட்டு விழா ஒன்றினையும் அன்ரன் அண்ணா அவர்கள் ஒழுங்கு செய்திருந்தார்.

இம்மாநாட்டில் காலை நிகழ்வாய் மனிதகுலத்திற்கு எதிரான குற்றங்கள், போர் குற்றங்கள், இனப்படுகொலை தொடர்பிலான மாநாடு நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் 250-க்கும் மேற்பட்ட அறிஞர்களும் சட்டத்தரணிகளும் மனித உரிமைப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். மாநாட்டில் போர்க்குற்றங்கள், மனிதத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை பற்றிய ஆய்வுகள், தடுப்பதற்கான வழிவகைகள், ஐக்கிய நாடுகளின் பங்கு மற்றும் கனடாவின் பங்கு, அனைத்துலக மனிதாபிமான சட்டங்கள், ஜெனிவா பிரகடனம் மற்றும் போர்க்குற்ற விபரங்கள், இலங்கை போர்க்குற்றங்கள் தொடர்பில் ஐக்கிய நாடுகள் விசாரணை செய்வதற்கான சாதக நிலைமைகள் மற்றும் அவற்றை மறைப்பதற்கான சதி முயற்சிகள் ஆகிய விடயப்பரப்புகள் தொடர்பான விரிவான விவாதங்கள் மனித உரிமை அமைப்புகளின் ஆர்வலர்கள், சட்ட வல்லுநர்கள், பேரறிஞர்களால் உரையாடப்பட்டன.

உணவு இடைவேளைக்குப் பின்னர் வடகிழக்கு மனித உரிமைகள் செயலகத்தினால் தொகுத்து வெளியிடப்பட்ட 'தமிழினப் படுகொலைகள்' நூல் வெளியீட்டு விழா இடம் பெற்றது. இந்த நூற்பிரதிகள் இந்தியாவிலிருந்து கப்பல் மூலம் கனடா வருகையில் இலங்கை துறைமுகத்தில் சுங்கச் சோதனையின் போது முற்றாக தடுத்து வைக்கப்பட்டது. பின்னர், பல மாதகால அன்ரன் அண்ணாவின் அயராத முயற்சியினால் மீட்கப்பட்டு கனடா வந்து சேர்ந்தது.

2011 பெப்ரவரி மாதம் 16-ம் திகதி கனடியப் பாராளுமன்றத்தில் இலங்கையின் தற்போதைய மனித உரிமைகள் தொடர்பிலான சந்திப்பினையும் ஓவியக் கண்காட்சி ஒன்றினையும் அன்ரன் அண்ணா ஒழுங்கு செய்து, அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கும் அன்றைய நிலை பற்றிய தரவுகளை வழங்கினார். அன்ரன் அண்ணா அவர்கள் கட்சி பேதமின்றி அனைவருடனும் பேணிய நல்லுறவினை தமிழ் மக்களின் நன்மைக்காகவே பயன்படுத்தியதை நாம் கண்கூடாகக் காணக்கிடைத்தது.

போரால் பாதிக்கப்பட்டோருக்கும் மனித உரிமைகளுக்குமான நடுவமானது ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையம் (United Nations Human Rights Council) நான்காண்டுகளுக்கு ஒருமுறை நடத்தும் இலங்கை தொடர்பிலான அமர்வில், அதன் The Universal Periodic Review (UPR)-க்கு 2012 மற்றும் 2017-ம் ஆண்டுகளில் இலங்கையின் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அறிக்கைகளைச் சமர்ப்பித்தது. இவ்விரு அமர்வுகளிலும் இலங்கையில் போரின் பின்னரான காலப்பகுதியில் இலங்கை அரசாங்கத்தினால் மீறப்பட்ட மனித உரிமை மீறல்கள், நடைமுறைப்படுத்துவதாக வாக்குறுதி வழங்கப்பட்டு அரசாங்கத்தினால் மீறப்பட்ட அனைத்து மனித உரிமைச் செயற்பாடுகளையும் பட்டியலிட்டு அறிக்கை தயாரிப்பதில் அன்ரன் அண்ணா பெரும்பங்காற்றினார். இவ் அறிக்கையினைத் தயாரிக்கும் போது அதற்கான உள்ளீடுகளை சர்வதேச மனித உரிமை ஆர்வலர்களின் நேரடிச் சந்திப்புக்களின் ஊடாகப் பெற்றுத் தந்தது மட்டுமன்றி ஏனைய அமைப்புகளும் இச்செயற்பாட்டில் பங்குபெற வாய்ப்பளித்து அவர்களையும் இவ்வறிக்கையைச் சமர்ப்பிக்க உற்சாகமூட்டினார்.

போரினால் பாதிக்கப்பட்டு கனடா வந்த புகலிடக் கோரிக்

கையாளர்களுக்கு அன்ரன் அண்ணா தன்னாலான உதவிக ளையும் ஆலோசனைகளையும் வழங்கினார். அத்துடன் அவர்களுக்கு ஏற்பட்ட மனித உரிமை மீறல்களை நேரடி யான வாக்குமூலங்களாக மனித உரிமை ஆர்வலர்களால் மேற்கொள்ளப்பட்ட பல தரவுச் சேகரிப்புகளுக்கு வழங்கவும் உதவினார்.

போரினால் காணாமல் ஆக்கப்பட்டோரினை தேடிக்கொண்டி ருக்கும் சமூகத்தினை ஆவணப்படுத்தும் செயற்பாட்டினைப் பற்றிய சிந்தனைகளை கொண்டவராகவே அன்ரன் அண்ணா காணப்பட்டார். மனித உரிமைச் செயற்பாட்டாளராகவும் மனித உரிமை மீறல்களை சர்வதேச முறைகளுக்கு அமைய



ஆவணப்படுத்துவதிலும் மனித உரிமை மீறல்கள், மனித உரிமை தொடர்பிலான ஆவணங்களைச் சேகரிக்கும் நூலக மாகவும் திகழ்ந்தார்.

2019-ம் ஆண்டின் பின்னரான காலப்பகுதியில் 'அறம் செய் வோம் அறக்கட்டளை' என்னும் அமைப்பினைத் தொடங்கி தாயகத்திலிருக்கும் காப்பகங்களுக்கு எம்மாலான பணிகளை ஆரம்பித்திருந்தோம். அன்ரன் அண்ணா இலங்கையின் வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் இயங்கி வரும் கிருத்துவ அமைப்புகளுடனான தொடர்புகளையும் அறிமுகங்களையும் தொடர்ந்து எமக்கு வழங்கிய வண்ணம் இருந்தார். தனது பல்வேறு அறப்பணிகளுக்கு மத்தியிலும் மாதாந்த நிதிப் பங்களிப்பையும் தனக்கு அறிமுகமானவர்களிடமிருந்தும் பெற்றுத்தந்தார். இவை எல்லாவற்றையும்விட மிகுந்த உற்சா கத்தை எமக்கூட்டுவார். அவராற்றிய பணிகளுடன் ஒப்பிடும் போது எமது பணிகள் கடுகளவே ஆனாலும் மனமாறப் பாராட்டுவார். அடுத்து என்ன செய்யவேண்டும் என்பதை யெல்லாம் அடுக்கிக்கொண்டே செல்வார்.

அன்ரன் அண்ணாவினது பன்முக ஆளுமைகள் பலருக்குப் பலவிதமான உதவிகளை தொடர்ந்து வழங்கிய வண்ணமே இருந்தது. தனது செயற்பாடுகள் பற்றி அவர் பெரிதும் அலட்டிக்கொள்வதில்லை. அவராக எதனையும் சொல்லிக் காட்டியதும் இல்லை. அவர் செயற்பாடுகளால் பயனடைந்த வர்கள் சொன்னால் மாத்திரமே அறிய இயலும்.

மதகுருவாக தனது பயணத்தை ஆரம்பித்து மக்களுக்கு பணியாற்றுதல் என்ற பெரும் பணியையே இறைபணியாகக் கொண்டு தன் வாழ்நாள் முழுவதையும் ஒடுக்கப்பட்ட மக்க ளின் மனித உரிமைகளுக்காகவும் மனித உரிமை மீறல் களை ஆவணமாக்கி வெளியுலகிற்கு கொண்டு செல்லும் பணிகளுக்காகவுமே அர்ப்பணித்து வாழ்ந்தார்.

அன்ரன் அண்ணா இயல்பிலேயே நல்ல கதை சொல்லி. வழ மையாக உரையாடல்களுடன் தன் வாழ்நாள் பற்றிய நிகழ் வுகளை எம் கண்முன்னே அப்படியே கொண்டுவரும் ஆளுமை அவரிடம் இருந்தது. அவர் பகிர்ந்து கொண்ட யாழ் நூலக எரிப்பும் அந்நாளினை அவர் ஆவணப்படுத் திய முறைமையும், 1983-ம் ஆண்டு வெலிக்கடைச் சிறையில் கண்முன்னே தனது அறையில் இருந்தவர்கள் கொல்லப்பட்ட போது தாம் போராடிய விதம், மட்டக்களப்புச் சிறை, இந்திய வாழ்வு, மனித உரிமை அமைப்புகள், தனிநாயகம் அடிக ளார் மேலுள்ள பற்று என எண்ணிலடங்கா நினைவுகள், நிகழ்வுகள்.

பலரையும் ஆவணப்படுத்திய எமக்கு அன்ரன் அண்ணாவின் வாழ்வையும் பணியையும் ஆவணப்படுத்த வேண்டும் என்ற அவசரம் என்றும் வந்ததேயில்லை. என்றும் இளமையான உயிர்த்துடிப்புடன் ஓடித் திரிந்து கொண்டிருந்த அந்த ஆன் மாவை இருத்தி வைத்து ஆவணப்படுத்த இறுதி வரை எம் மால் இயலாமல் போனது. அன்ரன் அண்ணாவை, அவரை அறிந்தவர்கள் வாயிலாகவும் அவர் சேகரித்த ஆவணங்கள் வாயிலாகவும் ஆவணப்படுத்தலும் அவரது மனித உரிமை மற்றும் மனிதநேயப் பணிகளை பல்வழிகளில் தொடர்வதுமே நாம் அனைவரும் அவருக்குச் சொல்லும் நன்றி பகிரலாகும்.

'அமைதியாய் போயிற்று வாங்கோ அண்ணா,' அன்ரன் அண்ணாவின் கண்கள் மூடிய முகம் பார்த்து நான் சொன்ன இறுதி வார்த்தைகள். இலங்கையிலிருந்து ரொறன்ரோ பியர் சன் விமான நிலையத்தில் வந்து இறங்கிய கையோடு நேரே அவரைப் பார்க்கத் தான் சென்றிருந்தேன். அது ஒரு வெள் ளிக்கிழமை மாலை, 2023 மார்ச் 3-ம் திகதி. அன்றும் அதே சாந்தமான மனிதர் அமைதியாக மீளாத்துயிலில் ஆழ்ந்திருந் தார். சொல்ல நினைத்தவை, இலங்கையில் அவரிடம் சொல் வதற்காக காப்பகங்களில் சேகரித்த தகவல்கள் அனைத்தை யும் அவரிடம் சொல்லி முடிக்கும் போது யன்னலுக்கு வெளியே குளிர்கால உறை வெண்பனிப்புயல் தனது பங் கிற்கு கொட்டிக் குவித்துக்கொண்டிருந்தது.

subakaran@thaiveedu.com



# துறவி நிலையிலும் பொது நிலையிலும் அருட்தந்தையாக வாழ்ந்த
# அன்ரன் சின்னராசா பிலிப்



**எஸ். எம். வரதராஜன்**

ஈழத் தமிழர்களின் அறிவாலயமாகத் திகழ்ந்த யாழ். நூலகம் என்றதும் முதலில் வரும் பெயர் வண. பிதா லோங் அடிகள். அதனை அமைப்பதற்காக அல்லும் பகலும் உழைத்த போது, அவர் தமது மறைநிலை சார்ந்த நிருவாகப் பிரச்சினை முதல் பல சவால்களையும் இடர்களையும் எதிர்



கொண்டவர். யாழ். நூலக முன்றலில் அவருக்குச் சிலை அமைத்ததன் மூலம் யாழ். மாநகர சபை தனது மரியாதையையும் மதிப்பையும் அளித்தமை என்பது தமிழரின் வரலாறு.

அந்நூலகம், பேரினவாதிகளால் எரிக்கப்பட்டபோது, அதனைப் பார்த்ததனால் ஏற்பட்ட அதிர்ச்சியால் மரணித்தவர் பன்மொழி அறிஞர் தாவீது அடிகள். தமது ஆய்வுகளுக்கு, யாழ். நூலகத்தைத் தமது இல்லமாகத் தினமும் பாவித்தவர் அவர் என்பர். 35 மொழிகளில் வல்லவரான அவர், தமது குருவான நல்லூர் சுவாமி ஞானப்பிரகாசர் வழியில் 'சிங்கள, தமிழ் மொழிகள் ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவை என்பதில் ஆய்வை மேற்கொண்டிருந்தவர். இன, மொழி, மத பேதம் பார்க்காதவர். தாயை குழந்தைப்பருவத்தில் இழந்த தமக்கு மற்ற மதத்துத் தாய்மாரும் வேறு சாதித் தாய்மாருந்தான் பாலூட்டியவர்கள் என்று சொல்லிச் சாதி மத பேதத்தை எதிர்த்து வந்தவர்.

யாழ். நூலகம் தீச்சுவாலைகளுக்குள் அழிந்தபோது, அது தன்னுடன், தன் நேசரான அவரையும் அழைத்துச் சென்றதாக அவரது மாணாக்கர்களில் ஒருவர் அப்போது குறிப்பிட்டார்.

இந்த வரிசையில் யாழ். நூலகத்துடன் இணைந்த ஒருவராக அண்மையில் காலமான அன்ரன் சின்னராசா பிலிப் அவர்கள் எம்முன் வருகிறார். இவருடன் மன்னார் வங்காலையில் சிங்களப் படையினரால் கொல்லப்பட்ட மேரி பஸ்ரியன் அடிகளும் யாழ். நூலகமும் அதனோடு தமிழர்களின் பொருளாதார வளங்களின் மையமான யாழ். நகரமும் எரிக்கப்பட்ட போது அவற்றை ஆவணமாகத் தொகுத்து வெளிநாட்டு தூதரகங்களுக்கு அனுப்புவதில் முன்னின்று செயற்பட்டவர் என யாழ். மறைமாவட்டக் குருக்கள் தரப்பில் கூறப்படுவதுண்டு.

அருட்தந்தை மேரி பஸ்ரியன் மன்னார் நகரில் எண்பதுகளில் இடம்பெற்ற தீவைப்புச் சம்பவங்களை உடனுக்குடன் படங்கள் எடுத்துப் பல இடங்களுக்கும் அனுப்பியதால் இலங்கை அரசுக்கு நெருக்கடி ஏற்பட்டதாகவும் அப்போது பேசப்பட்டது. 1985 தை ஆறாம் திகதி அவர் கொல்லப்பட்டார்.

அன்று அருட்தந்தையாகத் தம் சமூகத்துக்குப் பணிபுரிந்த அமரர் அன்ரன் சின்னராசா பிலிப் அவர்களை நினைவுகூரும் போது, மேற்சொல்லப்பட்டவர்களும் மனமுகிலில் தோன்றுகின்றனர்.

இறை விசுவாசம் என்பது நாம் வாழும் முறையில் இணைந்தது என்பது எல்லா மதங்களுக்கும் பொதுவானது.

'அன்பே சிவம்' என்பதைப் போல, சாப்பிட முதல் உன் அயலவன் உண்டுவிட்டானா என்று பார் என்ற நபிகளின் வாக்கைப் போல, உன்னைப் போல் உன் அயலானையும் நேசி என்ற இயேசுவின் போதனைக்கு ஏற்ப - தாம் வாழ்ந்த சமூகத்தைத், துறவி நிலையிலும் - இல்லற நிலையிலும் நேசித்த ஒருவராகத் தம் வாழ்நாள் முழுவதும் வாழ்ந்து தம்மை அர்ப்பணித்தவர் அன்ரன் சின்னராசா பிலிப் அவர்கள்

1957, 1977, 1981-க்குப் பின் இன அழிப்பின் உச்சமாக அமைந்தது 1983 ஜூலை இன வன்செயல்.

1983 ஜூலை 25-ம் திகதி மாலையில் கரவெட்டி முழுவதும் அந்தச் சோகமான செய்தி பரவியது! ஏற்கனவே கொழும்பிலிருந்து வந்த பல 'காயமான' செய்திகளில் 'வேலைப் பாய்ச்சியது' போல அந்தச் செய்தியும் வந்தது

'வெலிக்கடையில் இருந்த கைதிகள் படுகொலை செய்யப்பட்டு விட்டனராம். சின்னராசா சுவாமியுமாம்' என்ற தகவல் தான் அது.

கரவெட்டியிலுள்ள அவர்களது வீட்டில் உறவினரும் அயலவரும் அயலூராரும் குவிந்தனர். மரணவீடாகவே அன்று அது அழுது நிறைந்தது.

வடமராட்சியின் மூத்த ஊடகவியலாளர் தில்லைநாதன் அண்ணர் 'தம்பி, கரவெட்டியில் பரபரப்புச் செய்தி, பாதர் சின்னராசா கனடாவில் காலமாகி விட்டாராம் ஆலயத்தில் சோக மணி ஒலிக்கப்பட்டதாம்' என்று சொன்ன போது வந்த நினைவலைகளில் அந்த 83 நாள் நினைவு முக்கியமான ஒன்று.

ஏற்கனவே வெலிக்கடையிலும் மட்டக்களப்பிலும் மரணங்களைத் தாண்டிய அவரால் கனடாவில் தாண்ட முடியவில்லை. கனடாவிலிருந்து அவர்தம் உறவினரிடமிருந்து செய்தி வருவதற்கு முன்னரே கரவெட்டியிலிருந்து செய்தி வந்தது என்றால், அவர் ஊருடன் மனதாலும் இணைந்திருக்கிறார் என்பதை உணரவைத்தது.

அவர் குருமாணவராயிருந்த வேளையில் கரவெட்டி பரலோகமாதா அன்னை ஆலய விழா ஒன்றுக்கு தமிழ்த்திரு



தனிநாயகம் அடிகளாரைப் பிரதம அதிதியாக அழைத்து வந்தபோது தனிநாயகம் அடிகளாரிடம் எனது 'ஓட்டோகிராபில்' கையெழுத்து வாங்கிய நினைவு. 'தமிழ் வாழ்க! சேவியர் தனிநாயகம்' என அவர் ஒப்பமிட்டிருந்ததும் ஞாபகம்.

அவர் தமிழ் வாழ்க என்று தமிழ் மொழிக்காகப் பணியாற்றினார். மொழி வாழவேண்டுமாயின் முதலில் அதைப் பேசும் மக்கள் சுதந்திரமாக வாழவேண்டும் என்பதில் தம்மை அர்ப்பணித்த குருக்களில் அன்ரன் சின்னராசா பிலிப்பும் ஒருவராவார். தனிநாயகம் அடிகள் மீதான அவரது பற்று கனடா வரை சென்றது. அது பின் யாழுக்கும் திரும்பி இன்று விழு

தாகியுள்ளதாக அறிகிறோம்.

அன்று, வண.பிதா சிங்கராயருடன் கைதான மூன்று குருக்க ளில் இவரும் ஒருவர். கைதான பின்னர் குருநகர் இராணுவச் சித்திரவதை முகாமில் தாம் பட்ட அனுபவங்களை ஆவண மாகப் பதிவு செய்து வைத்திருந்தார். அவை முறையாக வெளிவரவேண்டும்.

அமரர் சின்னராசா 'பாதராக'க் கரவெட்டிக்கு வந்தது, அந்த வைபவத்திற்கு எனது தாயார் பிள்ளைகளுக்கு வரவேற்புக் கீதம் பழக்கியது, பாதராக அவரை அந்த உடையில் அடிக் கடி பார்த்தது, முதற் குருவானவராக வந்தபின் கரவெட்டி இளையோருக்கு அவர் ஒரு கருத்தரங்கம் வைத்தது, தொடர்ந்து 83 நினைவுகள் என.. இன்றுவரையாகத் தொடர்ந் தன.

மறைந்த எனது அண்ணனுடன் பள்ளி நாள்களிலிருந்தே நல்ல நட்புடன் அவர் பழகினார். குருமாணவரான காலத்தில் விடுமுறைக்கு வரும்போது அண்ணாவிடம் வந்துவிடுவார்.

அப்படியான நாட்களில் தமிழக நாதஸ்வர வித்துவான் ஷேக் சின்னமௌலானா கரவெட்டியிலுள்ள விநாயகர் ஆலயம் ஒன்றில் கச்சேரி நிகழ்த்த வந்தபோது இவர்களுடன் நானும் சென்றேன். அவரது கலாரசனை உணர்வுகள் கனடா வரை தொடர்ந்தன. தமது மகளுக்கு நடனம் பயிற்றுவித்து அரங் கேற்றமும் நடத்தியுள்ளார்.

கலாரசிகரான அவரது தந்தையார் பிலிப் சிறந்த ஆர்மோ னியக் கலைஞர். கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் நீண்டகாலம் எழுதுவினைஞராகப் பணியாற்றியவர். தேவால யத்தில் இலத்தீன், தமிழ் இரண்டிலும் பாடுவதில் விண்ணர்.

'இங்கிலிஷ் பள்ளிக்கூடம்' என அக்காலத்தில் அழைக்கப் பட்ட கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் 'கிளார்க்' என்ற எழுதுவினைஞராகப் பணியாற்றியவர். அக்காலத்தில் 'கிளார்க்' என்ற பணி மத நிறுவனங்களின் பாடசாலைகளில் முகாமைக்கடுத்த பணிபோன்றது என எனது மூத்தோர் சொல் வதுண்டு. அத்தகைய பொறுப்பான பதவியில் அவரிருந்தார். பிலிப் கிளாக்கர் பாடசாலை நிகழ்வுகளிலும் வைபவங்களி லும் அதிபருடன் பங்கேற்று நடத்தினார். கரவெட்டி திரு இருதயக் கல்லூரியில் கற்ற பழைய மாணவர்களான மூத்த வர்கள் ஆசிரியர்களை மறந்தாலும் கிளார்க் பிலிப்பரை மறந்ததில்லை.

தந்தை எப்படி அந்தக் கல்லூரியை நேசித்தாரோ அதே நேயமுடன் இறுதிவரையும் அன்ரன் சின்னராசா பிலிப் தாம் கற்ற அக்கல்லூரியின் அபிவிருத்தி பற்றி எண்ணியவர்.

அண்மையில் எனது அண்ணனின் மகளின் திருமணத்தை அவர் ஓர் உறவினராகவும் அண்ணாவின் நண்பராகவும் நின்று நடத்தியிருந்தார். அவரை நேரில் சந்திக்கும் வாய்ப்பு எனக்கு இல்லாமற் போனது கவலையே. இல்லாவிடின், இன் னும் பல தகவல்களை இங்கு நான் பகிர்ந்திருக்கலாம்.

சில மாதங்களுக்கு முன் ஒரு சிரேஷ்ட ஊடகவியலாளருடன் எதிர்வரும் ஜூலை மாதம் வெலிக்கடை இனப்படுகொலை நாற்பதாவது ஆண்டை முன்னிட்டு சின்னராசா அவர்களிட மும் ஒரு பேட்டியை ஒழுங்கு செய்யலாம் எனச் சொல்லியி ருந்தேன். ஏனெனில், 83 ஜூலை என்றவுடன் எமது ஊடகங்க ளின் மனதுக்குள் வருபவர்கள் சிலரே.

ஆனால், சில தினங்களுக்கு முன், எனது உறவினரும் அருட்தந்தையுமான ஜெயக்குமார் அடிகளிடம் இதனைச் சொன்னபோது, அவர் சின்னராசா அவர்களின் உடல்நிலை பற்றிய சோகமான தகவலைப் பகிர்ந்தார்.

வெலிக்கடை இனப் படுகொலையை ஆவணமாக நினைவுப டுத்த இன்று சிலரே நம்மத்தியில் உள்ளனர்.

அவர்களுக்குப் பின், யாவும் காற்றோடு கலந்த கதையாக மறைந்து போய்விடும் என்பது, நமது ஊடகங்களின் மட்டு மல்ல சமூக ஆவணக்காப்பாளர்களினதும் கவனத்திற்குரி யது.

இலங்கை வானொலியில் பணியாற்றி, பின் காணாமல் ஆக் கப்பட்ட குகமூர்த்தி அண்ணர் எண்பதுகளில் யாழ்ப்பாணத் தில் பண்ணை உப ஒலிபரப்பு நிலையத்தில் பணியாற்றும் காலத்திலிருந்து சின்னராசா சுவாமியுடன் பழகியவர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் முன்னாலிருந்த ரூபவாஹினியில் பணியாற்றிய நான் அவரைச் சந்தித்த வேளையில், எனது ஊரைச் சொன்னபோது அவர் என்னிடம் முதற் கேட்ட கேள்வி 'பாதர் சின்னராசாவைத் தெரியுமா?' என்பதே.

அவருடனான எனது உறவு முறையைச் சொன்ன பின்னர் குகமூர்த்தி அண்ணனின் நட்பின் நெருக்கம் அதிகரித்தது. குகமூர்த்தி அண்ணர் காணாமலாக்கப்பட்ட போது அது தொடர்பாக, நாலாம்மாடி வரையும் என்னையும் விசாரணைக் காகப் போகவும் வைத்தது.

சின்னராசா சுவாமி பற்றிக் குகமூர்த்தி அவர்கள் சொன்ன போது... யாழ். நூலக எரிப்பின்போது பல்கலைக்கழக மாண வர்கள் சிலருடன் சேர்ந்து அச்சியல் மூலம் ஆற்றிய பணிக ளைக் குறிப்பிட்டார்.

நீர்வேலி வங்கிக் கொள்ளையில் அமரர் சின்னராசாவுக்குத் தொடர்பிருந்ததோ இல்லையோ, அவரது இனநலனுக்கான செயற்பாடுகளே அவர் மீதான கைதுக்குக் காரணமாயின என்ற கருத்துப் பொதுவானது.

'பாதர்' சிங்கராயர் தம்மிடம் இளைஞர்கள் தந்த பணத்தைப் பிரித்து தமிழர் உரிமை விடயத்தில் ஆர்வமுள்ளவர்களாகத் தமக்குப்பட்ட மூன்று குருமார்களிடம் கொடுத்து, அதனை வங்கிகளில் இட்டு வைக்குமாறு கேட்டிருந்தார். அவர்களில் ஒருவர் தான் அன்றைய அருட்பிதா. அன்ரன் சின்னராசா பிலிப்.

பத்திரிகைகளில் வந்த வண. சிங்கராயரின் உரைகள், பிர சங்கங்கள் தொடர்பாக நோட்டம் விட்ட அன்றைய இரகசி

யப் பொலிசார் அவரது அறையைச் சோதனையிட்டபோது ஏனைய 'பாதர்மாரின்' வங்கி ரசீதுகள் கைப்பற்றப்பட்டன.

சிங்கராயர் குருநகர் வதைமுகாமில் விசாரிக்கப்பட்டார். விசாரித்த அதிகாரி நேரே ஆயரிடம் வந்து 'கொலைகளும் இணைந்த கொள்ளை ஆயர்!' என்று சொன்னாராம்.

குருமார்களைக் கைது செய்ய வேண்டாம் எனவும், அவர்களைத் தாமே கொண்டு வந்து நீதிமன்றத்தில் தருவதாகவும் அன்றைய யாழ். ஆயர் தியோகுப்பிள்ளை விடுத்த கோரிக்கையை அரசு ஏற்கவில்லை. குருமார் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.

பிணையில் பின்னர் விடப்பட்டபோது ஒருவர் வெளிநாடு சென்று தொழில் நிமித்தமாக வேறு ஒரு கிறிஸ்தவ சபையில் 'பாஸ்டர்' ஆனார். மற்றவர் குற்றமற்ற நிலையிலோ என்னவோ விடுதலையானார். வண. பிதா சிங்கராயரும் சின்னராசாவுமே சிறைத் தண்டனையை அனுபவித்தனர்.

வெலிக்கடை இனக் கோரத்தைத் தொடர்ந்து, மட்டுநகர் சிறைக்கு கைதிகள் மாற்றப்பட்ட பின்னர், அங்கிருந்து மீண்டும் வெலிக்கடைக்கு மாற்றப்படுவார்கள் என்ற செய்திகள் வந்தபோது கைதிகள் இயக்கங்களால் கடத்தப்பட்டுப் பின் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

'பாதர்' சிங்கராயர் மட்டுமே அவர்களுடன் போகாமல் இருந்தார். செய்திகளில் வந்தது போல அவர் மீண்டும் வெலிக்கடைக்கு மாற்றப்பட்டார். அருட்தந்தை அன்ரன் சின்னராசா பிலிப் அவர்கள் இந்தியா சென்று, நோர்வே சென்று பின்னர் கனடாவுக்குப் புலம் பெயர்ந்தார்.

இந்தியாவிலிருந்தபோதும் அவர் ஆற்றிய பல பணிகளில் ஒன்றைக் குறித்துச் சொல்லப்படுவது. முக்கிய போராளி இயக்கம் ஒன்று பிரதேச ரீதியாக முரண்பட்ட நிலையில், அது உச்சநிலையை அடைந்தபோது அதில் இணைந்திருந்த பெண் பிள்ளைகள் தாயகத்திற்கும் திரும்பமுடியாத இக்கட்டான நிலைக்கு ஆட்பட்டிருந்த வேளை, அவர்கள் இவரை நாடியபோது அவர்களின் விருப்பப்படி அவர்களை அன்ரன் பாலசிங்கம் அவர்களுடன் பேசி அவர்களின் கண்காணிப்பில் இணைத்துவிட ஏற்பாடு செய்தவர் என்பதே அது.

விடுதலை இலட்சியம் எல்லா இயக்கங்களிலும் ஆரம்பத்தில் இருந்தது என்பதும் அவற்றில் இணைந்தவர்கள் எல்லோருமே அந்த இலட்சிய வேட்கையில் தம்மை உயிரினும் மேலாக அர்ப்பணித்தார்கள் என்பதையும் இவற்றையெல்லாம் தாண்டித் தமது சமூகப் பணியைத் தூரநோக்குடன் மேற்கொண்டவர் அன்ரன் சின்னராசா பிலிப் என்பதையும் இந்நிகழ்வு காட்டுகின்றது.

தாயகத்தையும், புலம்பெயர் மக்களையும் பிணைத்து வைத்திருக்கும் முக்கிய பணியைப் பல பரிமாணங்களில் செய்து நிறைவேற்றியுமுள்ளார். அவரது தமிழ்ப்பணி தமிழ் பேசப்படும் நாடுகளின் அறிஞர்களுடன் தொடர்புற்றிருந்தது.

தனிநாயகம் அடிகளார் நூற்றாண்டு விழாவைக் கனடாவில் ஏற்பாடு செய்ததுடன், அதனூடாக திருக்குறள் பற்றிய ஆய்வு நிகழ்வுகளை யாழ்ப்பாணத்தில் பாடசாலைகள் மட்டத்தில் ஆரம்பித்து நடத்தி, திருக்குறளின் பெருமையை யாழ். சென். ஜோன்ஸ், யாழ். மத்திய கல்லூரி போன்ற பல பாடசாலைகளிடையே பரப்பும் பணியை அது இன்று தொடர்வதாக, அருட்தந்தை ஜெயசேகரம் அடிகள் பெருமையுடன் குறிப்பிட்டார்.

கனடாவில் பல மூத்தவர்களுக்குக் கிறிஸ்தவ வேதாகமத்தில் பேசப்படும் இடங்களைக் காட்டும் புனித யாத்திரை என்ற



பணியில் தமது மொழியறிவையும் வேதாகம அறிவையும் பயன்படுத்தியுள்ளார். தமிழகத்திலிருந்து ஏற்கனவே பல குருக்கள் ஆயர்கள் எனப் போயிருந்தாலும், முதன் முதலாகத் தமிழில் கல்லொன்றை அங்கு அவரே வைத்ததாக அண்மையில் அருட்திரு ஜெயசேகரம் அடிகள் குறிப்பிட்டிருந்தார்.

துறவியல் வாழ்விலும் பொதுநிலை வாழ்விலும் சமூகப் பணியே தமது இலட்சியமாகக் கொண்டு சமூகத்தின் தந்தையாக வாழ்ந்தவர் அன்ரன் சின்னராசா பிலிப்.

நான் முதற் பந்தியில் குறிப்பிட்ட அருட்தந்தையர்கள் போலவே மொழி, மத, சாதி, பேதமற்றவராக 'அயலானை நேசித்த' சமூக வழிகாட்டியாக நல்ல மனம் கொண்ட மாந்தர் மனதில் அவர் என்றும் வாழ்வார்.



varatharajan.m@thaiveedu.com

# tvi
# ரீவீஜ நிர்வாகப் பொறுப்பு
## P. விக்னேஸ்வரன்

இப்போதெல்லாம் மிகத் துரிதமாக விருத்தியடைந்துவரும் தொழில்நுட்பம் காரணமாக எந்தவொரு தனிநபரும்கூட சில உபகரணங்களை வாங்கி சிறியளவில் வானொலி, தொலைக் காட்சிச் சேவைகளை வீட்டிலேயே நடத்தக்கூடிய நிலை வந் துவிட்டதால், ஊடகங்களை நிறுவனங்களாக நிர்வகிப்பதற் கான தேவை குறைந்துகொண்டே வருகிறது. ஆனால், ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்கள் தொழில்முறை ஊடக நிறுவனங்களாக ஆரம்பிக்கப்பட்டு, பல ஊழியர்களைக்கொண்டு ஊடக நிறு வனங்களுக்கான உட்கட்டமைப்புடன் இயங்கிக்கொண்டிருந் தன. அவ்வாறு இயங்குவதற்கான பலத்தைக் கொடுப்பது, அவற்றை இயக்குவதற்கான நிதி. இலங்கையில் நான் ஊட கத்துறையில் இருந்தவரை ஊடகங்கள் அரச நிறுவனங்க ளாக இயங்கியமையால் அவை பெரும் நிறுவனங்களாக அவற்றுக்கு வருவாய் ஈட்டித்தரும் விளம்பரப்பிரிவு, நிதி யைக் கையாள்வதற்கெனத் தனியான பிரிவு என்பனவற்றைக் கொண்டு இயங்கின. நிகழ்ச்சிப் பிரிவுகளை நிர்வகிப்பவர்க ளின் முதன்மைக் கரிசனை நிதி பற்றியதாக இருக்கவில்லை. ஊடகக் கலையின் தரம் பேணும் நடவடிக்கைகளே நிர்வா கிகளின் தலையாய கரிசனையாக இருந்தன. விளம்பரங்கள் தனியான பிரிவினால் கையாளப்பட்டாலும் அவற்றின் உள்ள டக்கங்கள் நிகழ்ச்சிப் பிரிவைச் சேர்ந்த அதிகாரிகளாலேயே அனுமதிக்கப்பட்டன. விளம்பரங்கள், மற்றும் வர்த்தக நிறுவ னங்களின் அனுசரணையோடு வெளியாரால் தயாரிக்கப்படும் நிகழ்ச்சிகள் அனைத்தும் ஒலி, ஒளிபரப்பு விதிகளுக்கு உட் பட்டவையா, அவை சமூக நலனுக்கு உகந்தவையா, சிறந்த தரத்தினைக் கொண்டிருக்கின்றனவா என்பவற்றை உறுதி செய்பவர்கள் நிகழ்ச்சி அதிகாரிகளே.

ஆனால், ஊடகங்களைத் தனியார் நடத்தத் தொடங்கியதும் நிதி பற்றிய கரிசனையே முதன்மை பெற்றது. இதன் காரண மாகவே தனியார் ஊடக நிறுவனங்களில் நிதிக் கட்டுப்பாட் டாளர்களும் சந்தைப்படுத்தல் (marketing) அதிகாரிகளும் முக்கியமானவர்களாகக் கருதப்படுகிறார்கள். தனியார் ஊடக நிறுவனங்களின் பிரதான நிகழ்ச்சிகளாக மக்களைக் கவரக்கூ டிய பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளே விளங்குகின்றன. எனவே தான் தனியார் ஊடகங்கள் மக்களின் சிந்தனையை, பார் வையை, இரசனையை மேம்படுத்தும் நிகழ்ச்சிகளை மக்க ளுக்கு வழங்குவதிலோ ஊடக நெறிமுறைகளைப் பேணுவ திலோ அக்கறை காட்டுவதில்லையென்ற கருத்து நிலவுகி றது. எவ்வளவு இலாபம் ஈட்டமுடியும் என்பதே தனியார் ஊட கங்களின் இலக்காகவும் வெற்றியாகவும் கருதப்படுகிறது. அதனால் தான் இந்தியாவில் வெற்றிகரமாக இயங்கும் தொலைக்காட்சி நிறுவனங்கள் பிரமாண்டமாகத் தயாரித்து, சந்தைப்படுத்தி இலாபம் சம்பாதிக்கும் நிகழ்ச்சிகளில் சில சமுதாயத்தை நெறி தவறிய நிலைகளுக்கு இட்டுச் செல்கின் றனவென்று சமூக அக்கறை கொண்டவர்கள் குற்றம் சாட்டுகி றார்கள்.

ரீவீஜ, சீஎம்ஆர் ஊடகங்களும் தனியார் ஊடகங்களே. தாம் இயங்குவதற்கான நிதியைத் தாமே திரட்டி இயங்கவேண்டிய ஊடகங்கள். ஆனால், யாராவதொரு முதலாளியோ அல்லது முதலாளிகளோ இலாபம் கருதிப் பணமீட்டும் தொழிலாக இல்லாமல் மக்களின் ஊடகங்களாக அவை ஆரம்பிக்கப்பட் டமையால், அந்நிறுவனங்களில் ஊடக அறம், நிகழ்ச்சிகளின் தரம் போன்ற விடயங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கப்பட் டது. அதன் காரணமாகவே ஊடகத்துறையில் நீண்டகால அனுபவம் பெற்றிருந்த எனக்கு ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங் களை ஆரம்பித்த இளைஞர்கள் மிகுந்த முக்கியத்துவத் தைத் தந்தார்கள்.

ஒப்பீட்டளவில் தொலைக்காட்சிச் சேவையை நடத்துவது மிகச் சிரமமானது. மிகுந்த முதல் தேவைப்படும் துறை. ரீவீஜ, ஆரம்ப நாட்களில் மிகச் சிரமப்பட்டே இயங்கியது. அங்கு பணிபுரிந்தவர்களுக்கு உரிய நேரத்தில் சம்பளம் வழங்குவதே சவாலாக இருந்தது. இந்நிலை, சீஎம்ஆர் வானொலி நிறுவனத்தை ஆரம்பித்ததும் சிறிது முன்னேற்றம டையத் தொடங்கியது. இருந்தபோதிலும் தொலைக்காட் சியை நிர்வகிப்பதில் நிதிக் கட்டுப்பாடு மிகுந்தளவில் கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்பதை உணர்ந்திருந்த, ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் பிரதம நிர்வாகியாகப் பொறுப்பேற்றிருந்த எஸ். பிரபாகரன், பதவியிலிருந்து விலகு வதற்கு முன்னராக ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் நிதிக் குப் பொறுப்பாக இருந்த கணக்காளரான வீ. ஜெயராம னுக்கு ரீவீஜ-யின் நிகழ்ச்சிகளை நிர்வகிக்கும் பொறுப்பை வழங்கினார். அதற்கமைய ஜெயராமனின் பணி, ரீவீஜ-யின் நிதி நிலைமைக்கேற்ப நிகழ்ச்சிகளைத் தயாரிக்கும் தீர்மா னத்தை எடுப்பதாக இருந்தது. அந்த நிகழ்ச்சிகளின் உள்ள டக்கங்களையும் தரத்தையும் தீர்மானித்து அனுமதிக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டது. நிதி நிலைமைகளுக் கேற்ப தயாரிக்கக்கூடிய நிகழ்ச்சிகளை ஜெயராமன் அனும தித்தாலும் அவற்றின் தரம் சரியாக அமையாது, அல்லது அமையவில்லையென்று நான் கருதினால், அந்த நிகழ்ச்சி கள் தயாரிக்கப்படக்கூடாதென்ற நிர்வாக நடைமுறை கண்

டிப்பாகப் பின்பற்றப்பட வேண்டுமென்று பிரபாகரனால் வலியுறுத்தப்பட்டது. அது அவர் எனது ஊடகத்துறை அனுபவத்துக்கு அளித்த மதிப்புக்கும் நான் தரம் பற்றிய முடிவை மிகச் சரியாக எடுப்பேன் என்று அவர் கொண்டிருந்த நம்பிக்கைக்கும் சான்றாக இருந்தது. நிகழ்ச்சிகளின் தரத்துக்கு அந் நிறுவனங்கள் வழங்கிய முக்கியத்துவம் எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அந்த நிர்வாக நிலை மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தப்பட்டது. வீ. ஜெயராமன் தனக்கு வழங்கப்பட்ட பொறுப்பை மிகக் கவனமாக நிறைவேற்றினார். அந்த நிர்வாக முறை பிரபாகரன் ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் செயற்பாட்டு உத்தியோகத்தர் பதவியிலிருந்து விலகிச் சென்றபின்னரும் கடைப்பிடிக்கப்பட்டது. ஸ்ரான் அன்ரனி ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றபின்னரும் அந்த நிலை தொடர்ந்தது.

தீர்மானிக்கப்பட்ட நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளை மேற்கொள்ளும் தயாரிப்பு மேலாளர் பதவி (Production Manager) எஸ். பாலேந்திரனுக்கு (Bali) வழங்கப்பட்டது. பாலி ரீவீஜ-யின் ஆரம்ப காலம்முதல் 'நகர் வலம்' என்ற, நகரில் நடக்கும் தமிழ் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களைத் தொகுத்து வழங்கும் நிகழ்ச்சியைத் தயாரித்தது முதல், அவ்வப்போது பல்வேறு பணிகளைச் செய்தவர். ஸ்ரான் அன்ரனி நிர்வாகத்தில் பாலிக்கு வழங்கப்பட்ட தயாரிப்பு மேலாளர் பதவியை, 2016-ம் ஆண்டில் ரீவீஜ நிர்வாகம் மாறும்வரை அவர் தொடர்ந்து வகித்தார். மேற்கூறிய நிர்வாக அமைப்புமுறை, ரீவீஜ-யின் நிதி நிலைக்கு ஏற்ற அதே வேளை, தரமான நிகழ்ச்சிகளைச் செய்வதற்குமேற்ற ஓர் ஏற்பாடாக அமைந்தது.

ஜெயராமன் ரீவீஜ நிகழ்ச்சிகளுக்கும் பொறுப்பாக இருந்த போது பல உள்ளூர் நிகழ்ச்சிகள் தயாரிக்கப்பட்டன. கே.எஸ். பாலச்சந்திரன் எழுதி, நெறிப்படுத்திய 'நாதன் நீதன் நேதன்' என்ற தொடர் நாடகம், 'வொண்டர்ஃபுல் வைத்திலிங்கம்' என்ற நகைச்சுவை நிகழ்ச்சி, படப்பிடிப்பாளர் வரன் தயாரித்த 'புது ராகம்', ப்ராஸ் லிங்கம் தயாரித்த 'தில்' என்னும் இளைஞர்களுக்கான நடன நிகழ்ச்சி, ராகவன் தயாரித்த 'க்றொஸ் றோட்' என்னும் ஆங்கில சமூக நிகழ்ச்சி, கனடியத் தமிழ்க் கலைஞர்கள் வழங்கிய 'காத்தவராயன்' நாட்டுக் கூத்து முதலியன எனக்கு உடனடியாக நினைவுக்கு வரும் சில நிகழ்ச்சிகளாகும்.

ரீவீஜ-யின் நிகழ்ச்சித் தயாரிப்புகள் அதிகரிக்கப்படவே மேலும் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கு ரீவீஜ-யில் அப்போது பணியாற்றிக்கொண்டிருந்த தயாரிப்பாளர்களின் எண்ணிக்கை போதவில்லை. ரீவீஜ-யில் நிரந்தரத் தயாரிப்பாளர்களாக வெகுசிலரே பணிபுரிந்தார்கள். படப்பிடிப்பாளர்கள் உட்படப் பலர் பகுதிநேரமாகப் பணியாற்றினார்கள். அத்தகைய படப்பிடிப்பாளர்களில் ஒருவரான கண்ணன் என்று அறியப்படும் எம். ராஜ்குமாரிடம் வெளியிலிருந்தே நிகழ்ச்சிகளைத் தயாரித்து வழங்கும் பொறுப்பு வழங்கப்பட்டது.

கண்ணன் நாள்தோறும் காலைவேளையில் ஒளிபரப்பாகும் 'உதயம்', மற்றும் 'கலைச்சோலை', 'தென்றல்' முதலிய நிகழ்ச்சிகளை வாரந்தோறும் தயாரித்து வழங்கினார். ரீவீஜ-யில் அதிகமான உள்ளூர் நிகழ்ச்சிகள் ஒளிபரப்பாகின. அத்தோடு, ஃபிரான்சில் இயங்கிய ரீரீஎன் தொலைக்காட்சி சேவையிடமிருந்து பெறப்பட்ட 'படலைக்குப் படலை', 'நையாண்டி மேளம்', 'விந்தை உலகம்' போன்ற எமது கலைஞர்கள் தயாரிக்கும் நிகழ்ச்சிகளும் ரீவீஜ-யில் ஒளிபரப்பப்பட்



எம். ஜெயக்குமார் (கண்ணன்)

டபோது எமது கலைஞர்களுக்கான ஒரு சிறந்த களமாக ரீவீஜ விளங்கியது. ரீரீஎன்-னில் இருந்து பெறப்பட்ட 'விந்தை உலகம்' நிகழ்ச்சியை என்னுடன் இலங்கை வானொலியில் ஒன்றாகப் பணிக்குச் சேர்ந்த டேவிட் ராஜேந்திரன் தொகுத்து வழங்கினார். அது எனக்கு மகிழ்ச்சியைத் தந்தது. அவர் இப்போது காலமாகிவிட்டார்.

தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தொழில்முறைத் தரமென்பது, நிகழ்ச்சிகளின் உள்ளடக்கத்தில் மட்டுமல்ல, அவை காட்சிகளாக எவ்வாறு வழங்கப்படுகின்றன என்பதிலும் பெருமளவு தங்கியிருக்கிறது. எமது செய்தித் தயாரிப்பின்போது எமக்கான ஒரு செய்தி அரங்கம் (set) இருக்கவில்லை. அறிவிப்பாளர் ஒரு நீலநிறத் திரையின் முன்பாக இருந்த மேசையின் பின்னாலிருந்து செய்தி வாசிக்கும்போது, செய்தி வாசிப்பவருக்குப் பின்னால் ரீவீஜ செய்திகள் என்பதைக் குறிக்கும் வகையிலான ஒரு படம், இலத்திரனியல் தொழில்நுட்பத்தின் மூலம் அந்த நீலத் திரையில் பதியப்பட்டு, செய்தி நிகழ்ச்சி தயாரிக்கப்பட்டது. க்றோமாக்கி என்று சொல்லப்படும் இந்தத் தொழில்நுட்பம் பற்றி நான் ரூபவாஹினி நிகழ்ச்சித் தயாரிப்புகள்பற்றி எழுதும்போது மிக விரிவாகக் குறிப்பிட்டிருக்கிறேன். இந்தத் தொழில்நுட்ப முறையில் நிகழ்ச்சிகளைத் தயாரிப்பது, குறிப்பாக செய்தி நிகழ்ச்சியைத் தயாரிப்பது, அவற்றுக்கு இருக்கவேண்டிய தொழில்முறைத் தரத்துக்கு ஏற்றதல்ல என்பது எனது நிலைப்பாடாக இருந்தது. செய்திகளைத் தயாரிப்பதற்கென ஒரு தொழில்முறைத் தரத்திலான அரங்கம் இருக்கவேண்டுமென்று நான் கருதினேன். அனைத்து மேலைநாடுகளிலும் பெரிய தொலைக்காட்சி நிறுவனங்களில் செய்திகள் அவ்வாறான அரங்கங்களிலேயே தயாரிக்கப்படுகின்றன. ரீவீஜ ஜார்வீஸ் கலையகத்தில் இயங்

கியபோதும் அவ்வாறான உண்மையான அரங்கத்திலேயே செய்திகள் தயாரிக்கப்பட்டன. ஸ்கார்பரோவில் பீஎன்ஆர் கலையகத்திற்கு இடம்மாறி சென்றதுமுதல் அப்படியான அரங்கம் அமைத்து செய்தி தயாரிக்கும் நடைமுறையைக் கடைப்பிடிக்க முடியவில்லை. இதை நான் ஜெயராமனுக்குத் தெரிவித்தபோது, அவர் உடனடியாகவே நடவடிக்கைகளை மேற்கொண்டு ரீவீஜ-யின் செய்திகளுக்கான ஓர் அரங்கத்தை நிர்மாணித்தார். அதன்பின்னர் எமது செய்தி நிகழ்ச்சி, காட்சி வடிவில் உண்மைத் தன்மை கொண்டதாகச் சிறப்பாக அமைந்தது.

அதுபோல் நாம் தயாரிக்கும் அனைத்து நிகழ்ச்சிகளுக்கும் வெவ்வேறு அரங்குகளைத் தயாரிப்பதற்கான செலவைக் கருத்திற்கொண்டு ஒரே அரங்க நிர்மாணப் பொருட்களைக் கொண்டு வெவ்வேறு அரங்கங்களை அமைக்கக்கூடிய ஒரு யோசனையை முன்வைத்தேன். பழுப்பு நிறத்தில் (off white) வெவ்வேறு வடிவிலான (shape) தட்டிகள் சிலவற்றைத் தயார் செய்து, அவற்றை ஒவ்வொரு நிகழ்ச்சியிலும் வெவ்வேறு ஒழுங்கில் அமைத்து, வேண்டிய நிறங்களில் அவற்றின்மீது ஒளியைப் பாய்ச்சுவதன்மூலம் பலவகை அரங்குகளை அமைக்கலாம் என்று நான் கூறிய ஆலோசனைக்கமைய ஜெயராமன் அத்தட்டிகளை அமைப்பதற்கு நிதி ஒதுக்கினார். ரீவீஜ-யின் பல்வேறு நிகழ்ச்சிகளில் தயாரிப்பாளர்கள் சிறந்தமுறையில் பயன்படுத்திய அத்தட்டிகளை நண்பர் வீ. சத்தியசீலன் உருவாக்கினார். இப்படி ரீவீஜ-யின் நிகழ்ச்சித் தயாரிப்புக்காக மிகவும் தீவிரமாக ஜெயராமன் பணியாற்றினார்.

நம் மக்களுக்கான ஊடகமென்றால், அது எமது கலைஞர்களையும் அவர்தம் திறமைகளையும் மக்களிடம் எடுத்துச்செல்லும் பணியை அதன் முதற்கடமையாகக்கொண்டு செயற்பட வேண்டும். அப்போதுதான் அது நமது ஊடகமென்ற பெருமையை மக்கள் மத்தியில் பெறமுடியும். அந்த நிலைப்பாட்டிலேயே நான் ரூபவாஹினியில் பணியாற்றியபோது எனது செயற்பாடுகள் அமைந்திருந்தன. அதையே ரீவீஜ-யிலும் கடைப்பிடிக்க வேண்டுமென்று நிர்வாகத்திடம் வலியுறுத்திக் கொண்டே இருந்தேன். அதற்கமைய ஜெயராமனும் நடவடிக்கைகளை மேற்கொண்டார்.

ஸ்ரான் அன்ரனியுடனும் ஜெயராமனுடனும் எமது நிகழ்ச்சிகள் எவ்வாறு அமையவேண்டுமென்பதுபற்றி நான் அவ்வப்போது பேசுவதுண்டு.

சீஎம்ஆர் ஒலி ஊடகமென்ற வகையில், அதன் தமிழ் நிகழ்ச்சிகளில் மக்களை எளிதில் மகிழ்விக்கக் கூடிய சினிமாப் பாடல்களையும் மக்களுக்கு அவசியமான செய்திகள், மற்றும் தகவல் நிகழ்ச்சிகளையும் ஒலிபரப்பி, அதற்கான மட்டுப்படுத்தப்பட்ட நேரங்களில் சிறப்பாக இயங்கிக்கொண்டிருந்தது. சீஎம்ஆரில்கூட ஆரம்பத்தில் கே.எஸ். பாலசந்திரன் ஒரு தொடர் நாடகத்தைத் தயாரித்தார். அவ்வப்போது உள்ளூர் இளம் பாடகர்களுக்கென அவர்தம் பாடல் திறமையை வெளிக்காட்டும் போட்டி நிகழ்ச்சிகளும் நடத்தப்பட்டன. முதலாவது தமிழ்ப் பண்பலை வானொலி என்ற வகையில் அது மக்களிடையே மிகவும் பிரபலமாக விளங்கியது. எனவே, அதன் நிகழ்ச்சி வழங்கல்பற்றி அவ்வளவாகக் கவலைப்பட வேண்டி இருக்கவில்லை. ஆனால், ரீவீஜ தமிழ் மக்களுக்கான இருபத்திநான்குமணிநேரத் தொலைக்காட்சி சேவை. அதிலே பலவிதமான நிகழ்ச்சிகளை ஒளிபரப்பக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை சிறந்த முறையிலே பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்பது எனது எண்ணமாக இருந்தது. ரீவீஜ-யில் உள்ளூர் நிகழ்ச்சிகளை எமது சக்திக்கேற்றவாறு தயாரித்து ஒளிபரப்பிக்கொண்டிருந்த அதேநேரம், திரைப்படங்கள், இந்தியாவில் தயாரிக்கப்படும் தொலைக்காட்சிப் பெரும் தொடர்நாடகங்கள், காட்சிகளுடன் கூடிய திரைப்படப் பாடல்கள் போன்ற நிகழ்ச்சிகளும் போதுமான அளவு ஒளிபரப்பப்பட்டன. ரீவீஜ-யில் சகலவிதமான இரசனையுள்ள நேயர்களையும் திருப்திப்படுத்த வேண்டுமென்ற நிகழ்ச்சி வழங்கல் கொள்கை கடைப்பிடிக்கப்பட்டது. அதை மேலும் சிறப்பாக நடைமுறைப்படுத்த சில யோசனைகள் என்னிடம் இருந்தன.

ரீவீஜ-யின் நிகழ்ச்சிகள் பற்றி ஒருமுறை ஸ்ரான் அன்ரனியின், ஸ்காபரோ கென்னடி வீதியில் அமைந்திருந்த வீடொன்றில் ஸ்ரான் அன்ரனி, ஜெயராமன், நான் எல்லோரும் கலந்துரையாடியபோது, இந்தியத் திரைத்துறை சார்ந்த செய்திகளை நாம் வாரம்தோறும் அங்கிருந்து பெறக்கூடிய ஏற்பாடுகளை மேற்கொண்டு, அவற்றை எமது தொகுப்பாளர்களைக் கொண்டு தொகுத்து வழங்கினால், அந்நிகழ்ச்சி அதிக மக்களைக் கவரும் என்று ஆலோசனை தெரிவித்தேன். ரீவீஜ-யில் எமது மக்களுக்குப் பழக்கப்பட்ட இரசனையைத் திருப்திப்படுத்தும் நிகழ்ச்சிகளையும் வழங்கினால் தான் ரீவீஜ-யின் பார்வையாளர்கள் அதிகரிப்பார்கள். அப்படி அதிகரித்த பார்வையாளர்களைக்கொண்ட தொலைக்காட்சியில் எமது கலைஞர்களின் நிகழ்ச்சிகளும் இடம்பெறும்போதுதான் அவர்கள் அதிகளவிலான மக்களுக்கு அறிமுகமாவார்கள். ஈழத் தமிழ் மக்களுக்கான தொலைக்காட்சிச் சேவைகளில் நிகழ்ச்சி வழங்கல் மிகத் திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்பட வேண்டிய பிரதான அம்சமாகும். முடிந்தளவு ரீவீஜ-யில் நிகழ்ச்சிகளை சரியான வகையில் நாம் வழங்கினோம். ஆனால், நான் எதிர்பார்த்த வாராந்த இந்திய சினிமாஉலகச் செய்திகளின் தொகுப்பு நிகழ்ச்சியை வழங்கும் நிலை, 2016-ம் ஆண்டின் இறுதியில் ரீவீஜ-யின் நிர்வாகம் மாறும்வரை எமக்கு ஏற்படவில்லை.

இலங்கைப் போர்ச் செய்திகளை கனடாவாழ் தமிழர்களின் எதிர்பார்ப்புக்கமைய அதிகளவில் ஒளிபரப்பியதால் ரீவீஜ பெற்றிருந்த மக்கள் செல்வாக்கு போர் முடிவுற்றதும் குறைந்துவிடுமென்று எதிர்பார்க்கப்பட்டபோதிலும் நாம் நினைத்தளவு மக்களிடையே அதன் செல்வாக்கு குறைந்துவிடவில்லை. போரின் பின்னரும் அதிகளவு பார்வையாளர்களைக்கொண்ட தமிழ்த் தொலைக்காட்சியாகவே ரீவீஜ இயங்கிக்கொண்டிருந்தது.

### ரீவீஜ நிர்வாகத்தில் மாற்றம்:

2009-ம் ஆண்டு, மே மாதம் 18-ம் திகதி ஈழப்போர் முடிவுக்கு வந்தது. 2010-ம் ஆண்டு, மே மாத நடுப்பகுதி வார நாளொன்றில், என்னையும் எஸ். பாலேந்திரனையும் ரீவீஜ-யின் பங்குதாரர்களான வீ. சொர்ணலிங்கமும் வைத்தியர். வீ. சாந்தகுமாரும் தம்மை, மிஸ்ஸிஸாகுவாவில் இயங்கிக் கொண்டிருந்த வைத்தியரின் அலுவலகத்தில் சந்திக்கும்படி கேட்டுக்கொண்டார்கள். அதன்படி நான் ஒருநாள் மாலை எனது வேலை முடிய வைத்தியர் சாந்தகுமாரின் அலுவலகத்திற்குச் சென்றேன். அங்கு சொர்ணலிங்கம், பாலேந்திரன்

ஆகியோரும் இருந்தார்கள். சொர்ணலிங்கமும் சாந்தகுமாரும், ரீவீஜ-யின் இயங்கும் (active) பங்குதாரர்கள். அவர்கள் ரீவீஜ தொடர்ந்து சீஎம்ஆருடன் இணையாமல் தனித்து இயங்குவதென அனைத்துப் பங்குதாரர்களும் முடிவெடுத்திருக்கிறார்கள் என்று கூறி, நான் ரீவீஜ நிறுவனத்தை மேற்கொண்டு நிர்வகிக்கும் பொறுப்பை ஏற்கவேண்டுமென்று கேட்டுக் கொண்டார்கள். எமக்கிடையே நடந்த உரையாடலில், ரீவீஜ தனியாகப் பிரிந்தேயாகவேண்டுமென்று அதன் பங்குதாரர்கள் உறுதியாக இருப்பது தெரியவந்தது. அந்த நிறுவனங்கள் ஆரம்பிக்கப்பட்ட நோக்கத்துக்கமைய இணைந்து இயங்குவதுதான் நல்லது என்று ஆலோசனை கூறும் நிலை இருக்கவில்லை. இரண்டு நிறுவனங்களையும் ஒப்பிடுவதானால், சீஎம்ஆர் பல்கலாச்சாரப் பண்பலை (FM) வானொலி. எனவே, வர்த்தக ரீதியில் வெற்றிகரமாக இயங்கக்கூடிய வாய்ப்புகள் அதிகம். மேலும், ஒலிபரப்புச் சேவை ஒன்றை நடத்துவது ஒளிபரப்புச் சேவையுடன் ஒப்பிடும்போது இலகுவானது. ஏற்கனவே கனடாவில் தமிழ் வானொலித்துறையில் ஈடுபட்டு ஓரளவு அனுபவத்தைப் பெற்றிருக்கும் பலர் சீஎம் ஆரில் பணியாற்றிக்கொண்டிருந்தார்கள். தர்க்க ரீதியாகப் பார்த்தால் தமிழர்களுக்குப் புதிய துறையாகிய தொலைக் காட்சித்துறையிலும் அனுபவத்தைப் பெற்றிருக்கும் எனது சேவை ரீவீஜ-க்குத்தான் அதிகம் தேவைப்படுகிறது என்று நான் எண்ணினாலும், நான் அதுவரை ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் உயர்மட்ட நிர்வாக விடயங்களை, குறிப்பாக நிதி நிர்வாகம் சம்பந்தமாக அறிந்திருக்கவில்லை. ரீவீஜ நிறுவனத்தை நிர்வகிப்பதென்பது, நான் அதுவரை ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களில் ஆற்றிக்கொண்டிருக்கும் பணியிலிருந்து வேறுபட்டது. ரீவீஜ-யின் நிதி நிலை, அதன் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள், அதற்கு ஏதேனும் கடன்கள் இருந்தால் அவற்றின் நிலை என்ன என்ற விபரங்கள் தெரியாமல் அதை நடத்தும் பொறுப்பை ஏற்க முடியாது. எனவே, ரீவிஜ, சீஎம்-ஆர் நிறுவனங்களை ஆரம்பித்தவர்களில் முக்கியமானவரும் அந்த நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரியாகப் பொறுப்பு வகித்து விலகிக்கொண்டவருமான எஸ். பிரபாகரனுடன் பேசவேண்டுமென்று நான் சொர்ணலிங்கம், சாந்தகு-மார் ஆகியோரிடம் தெரிவித்தேன். சொர்ணலிங்கம் தான் அந்த ஏற்பாட்டைச் செய்வதாகக் கூறினார். அத்துடன் எந்த வித முடிவும் எடுக்கப்படாமல் அன்றைய கலந்துரையாடல் முடிவடைந்தது.

சொர்ணலிங்கம் கூறியபடியே, அந்த வாரத்தின் இறுதி நாளொன்றில் பிரபாகரனைச் சந்திக்கும் ஏற்பாட்டைச் செய்தார். சந்திப்பு, நான் பணியாற்றும் அலுவலகத்தில் எனது அறையில் நடைபெற்றது. சொர்ணலிங்கம், பிரபாகரன், பாலேந்திரன் ஆகியோருடன் ரீவீஜ உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரே அதில் இணைந்து நிகழ்ச்சித் தயாரிப்புகளை மேற்கொண்டுவந்த ரமேஷ் ராஜதுரையும் ரீவீஜ-யின் ஆரம்பத்திலேயே அதில் இணைந்து பல்வேறு பணிகளையும் செய்து பின்னர் ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களுக்காக விளம்பரங்களைத் திரட்டும் உத்தியோகத்தராக இருந்த கணேஷ் முருகேசுவும் அழைக்கப்பட்டிருந்தார்கள். பிரிவது என்ற முடிவுபற்றிய அவர்களது அபிப்பிராயத்தை அறிந்துகொள்வது எனக்கு முக்கியமானதாக இருந்தது.

கலந்துரையாடலின்போது, பிரபாகரன் ரீவீஜ-யின் நிதி சம்பந்தமான விபரங்களையும் அதன் பங்குதாரர்கள் யார் என்பது போன்ற விபரங்களையும் விளக்கிக் கூறினார். சொர்ணலிங்கம், சாந்தகுமார் ஆகியோரைத் தவிர ஏனைய பங்குதாரர்கள்பற்றி நான் அதுவரை அறிந்திருக்கவில்லை. எனக்குக் கடன்கள்பற்றிக் கூறியதோடு, அந்தக் கடன்கள்பற்றி நான் கவலைப்பட வேண்டியதில்லையென்றும் அதை ரீவீஜ-யின் உரிமையாளர்களான பங்குதாரர்களே பார்த்துக்கொள்வார்கள் என்றும் கூறப்பட்டது. பிரபாகரன் ரீவீஜ-யின் பங்குதாரர்களில் ஒருவர் இல்லையென்றாலும் பெரும்பான்மையான பங்குதாரர்களின் பிரதிநிதியாக அவரும் சொர்ணலிங்கமும் அந்த உறுதிமொழியை எனக்குத் தந்தார்கள். மேலும், நான் அதிக நாட்கள் அந்தப் பொறுப்பில் இருக்கும் அவசியம் ஏற்படாதென்றும் ஒரு நான்கைந்து மாதங்கள் கவனித்துக் கொண்டால் போதும், பின்னர் நிலைமைகள் சரியாகிவிடுமென்றும் எனக்குக் கூறினார்கள். அன்று கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவரும் ரீவீஜ நிறுவனத்தைத் தனியாக நடத்துவது சாத்தியமானதேயென்ற நிலைப்பாட்டைக் கொண்டிருந்தார்கள்.

பிரபாகரன் என்னைப் பிரதம நிறைவேற்று அதிகாரி என்ற (Chief Executive Officer) என்ற பதவியை ஏற்காமல், பிரதம செயற்பாட்டு அதிகாரி (Chief Operating Officer) என்ற பதவியை ஏற்றுக்கொள்ளுமாறு ஆலோசனை வழங்கினார். எனக்கு அது ஒரு நல்ல ஆலோசனையாகப்பட்டது. ஏனெனில், பிரதம நிறைவேற்று அதிகாரியென்றால் ரீவீஜ-யின் சகல நடவடிக்கைகள் பற்றியும் முடிவெடுக்கவேண்டும், அவற்றுக்குப் பொறுப்பேற்க வேண்டும். குறிப்பாக, நிதி விடயங்களுக்குப் பொறுப்பேற்பது சற்று ஆபத்தானது. செயற்பாட்டு உத்தியோகத்தராகப் பணியாற்றும்போது பணிப்பாளர் சபை எடுக்கும் முடிவுகளைச் செயற்படுத்தும் பொறுப்பு மட்டுமே இருக்கிறது. அதனால் ஏற்படும் விளைவுகளுக்குப் பொறுப்பேற்கவேண்டிய அவசியம் இருக்காதென்று நான் கருதினேன். அப்படியான நிர்வாக அமைப்பில் எனக்கு அறிவுறுத்தல்களை வழங்குகின்ற பணிப்பாளர் சபையே நிறைவேற்று அதிகாரங்களைக் கொண்டிருக்கும். குறிப்பாக, நிதி சம்பந்தமாக எடுக்கப்படும் முடிவுகளில். அது எனக்கு ஏற்ற நிர்வாக அமைப்பு முறையாக இருந்தது. அதற்கமைய, அதுவரை நடைமுறையில் இருந்த அன்றாட வரவு செலவுகளைக் கவனித்துக்கொள்வதும் ஊழியர்களின் சம்பளம் முதல் மற்றும் அன்றாடச் செலவுகளுக்கான கொடுப்பனவுகளை மேற்கொள்ளும் காசோலைகளை வழங்குதல், விளம்பரங்களால் வரும் வருமானத்தை உரிய முறையில் கண்காணித்து செலவுகளைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருத்தல் (Budget-ary control) என்பன நிதி சம்பந்தமான எனது பணிகளாகத் தீர்மானிக்கப்பட்டது. காசோலைகளில் நானும் பணிப்பாளர் சபை அங்கத்தவர்களான சொர்ணலிங்கம் அல்லது சாந்தகுமாரும் கையொப்பமிடவேண்டும். ரீவீஜ-யின் நிதியைக் கையாள்கின்ற வங்கித் தொடர்புகளை நானும் ஒரு பணிப்பாளர் சபை அங்கத்தவரும் இணைந்தே மேற்கொள்ள வேண்டும். ரீவீஜ-யின் கடன்களைக் கொடுப்பதோ அல்லது கடன்களைப் பெறுவதோ மற்றும் ரீவீஜ-யிடம் கோரப்படும் எந்த விதமான நிதிக் கோரிக்கைகளையும் கையாள்வதோ எனது பணியல்ல. இவ்வாறு நிதியைக் கையாளும் விடயங்களில் பல முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்த நடைமுறைகள் எனக்குப் பாதுகாப்பளித்தன. எமது சமூகத்தில் நிதிக் கையாள்கை என்பது இலகுவாகக் குற்றம்சாட்டப்படத்தக்க ஒரு பொறுப்பென்பதால் நான் அத்தகைய முன்னெச்சரிக்கை நிலைப்பாட்டை மிகவும் விரும்பினேன். அன்றைய கலந்துரையாடலின் விளைவாக ரீவீஜ-யின்

பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தராக இயங்குவதற்குச் சம்மதித்தேன். எஸ். பாலேந்திரன் அவரது வழமையான முழு நேரப் பணியாகிய தயாரிப்பு மேலாளர் பதவிக்கான பணிக ளைச் செய்ய நானும் வழமைபோலவே எனது முழுநேரக் கணக்காளர் பணியைச் செய்துகொண்டே, ரீவீஜ-யை நிர்வ கிக்கும் பணிகளையும் செய்வதென்று தீர்மானிக்கப்பட்டது.

**நியமனக் கடிதம்:**

அன்றைய கூட்டத்தில் முடிவுசெய்தபடி 2010-ம் ஆண்டு, மே மாதம் 26-ம் திகதி, ரீவீஜ நிறுவனத்தின் செயற்பாட்டு உத்தி யோகத்தருக்கான நியமனக் கடிதம் வீ. சொர்ணலிங்கம், வீ. சாந்தகுமார் ஆகிய பங்குதாரர்களின் கையொப்பத்துடன் எனக்கு வழங்கப்பட்டது. அன்று நான் எனது அலுவலகத் திற்குச் செல்லவில்லை. ரீவீஜ நிலையத்திற்குச் சென்று காலை 11.00 மணியளவில் நியமனக் கடிதத்தை சொர்ண-லிங்கம், சாந்தகுமார் ஆகியோரிடமிருந்து பெற்றுக்கொண் டேன். உடனடியாகவே சொர்ணலிங்கம் ரீவீஜ, சீஎம்ஆர் ஆகி யவற்றின் நிதி உத்தியோகத்தர் ஜெயராமனிடம் சென்று அவரை ரீவீஜ-யின் நிதிப் பொறுப்பிலிருந்து விடுவிப்பதாக அறிவித்து, அவரையும் அழைத்துக்கொண்டு ரீவீஜ-யின் நிதி யைக் கையாளும் சீஐபிசீ வங்கிக்குச் சென்றார். அந்த வங்கி ரீவீஜ நிலையத்திலிருந்து ஏறத்தாழ ஐம்பது கிலோ மீற்றர் தொலைவில் நான் பணிபுரியும் அலுவலகத்திற்கு அண்மையில் இருந்தது. நானும் அந்த வங்கிக்கு எனது வாகனத்தில் சென்றேன். ரீவீஜ-யின் கணக்குகளைக் கையாள் பவர்களின் பெயர்கள் மாற்றப்பட்டன. வீ. சொர்ணலிங்கம், வீ. சாந்தகுமார் மற்றும் எனது பெயர்கள் ரீவீஜ-யின் நிதி யைக் கையாள்பவர்களாகப் பதியப்பட்டன. ஸ்காபரோவிலி ருந்து நான் ரீவீஜ-க்குத் திரும்பிச் செல்லும்போது ஜெயரா மனை எனது காரில் அழைத்துச் சென்றேன். இப்படி ஒன்றா கச் சேர்ந்து இயங்கும் நிறுவனங்கள் பிரிந்துபோகும் சந்தர்ப் பம் எதற்கும் அதற்கு முன்னர் நான் முகம்கொடுத்ததில்லை. எனக்கு அது மிகவும் அசௌகர்யமாக இருந்தது. ஜெயரா-மன் ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களில் பணியாற்ற வந்தநாள் முதல் எனக்கு மிகவும் மரியாதை தந்து பழகுபவர். அவர் ரீவீஜ-யின் நிகழ்ச்சி நிர்வாகத்தைக் கவனித்துக்கொண்ட போது, நிகழ்ச்சிகள் சம்பந்தமான எந்த முடிவுகளையும் என் னைமீறி எடுத்ததில்லை. திடீரென நிறுவனங்கள் பிரிந்துவி டவே, என்னுடன் சேர்ந்து இயங்கியவர்களுக்கு எப்படி முகம் கொடுப்பதென்பது மிகுந்த சங்கடத்தையும் கவலையையும் அளிப்பதாக இருந்தது. எல்லாமே விரைவில் சுமுகமாக முடிந்து, சகலரும் சேர்ந்தியங்கும் நிலை மீண்டும் வரவேண் டும் என்ற எனது எதிர்பார்ப்பை எனது நம்பிக்கையாக ஜெய ராமனிடம் தெரிவித்தேன்.

ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களின் பிரிவு, அவற்றின்மீது அக்க றைகொண்ட தமிழ் மக்களிடையே சலசலப்பையும் சிலரிடமி ருந்து கோபத்தையும் பிரதிபலிப்பாக வெளிப்படுத்தினாலும், கனடிய சட்டதிட்டங்களுக்கமைய அந்தந்த நிறுவனங்க ளுக்கு உரிமை கோரக்கூடியவர்களால் ஏற்படுத்தப்பட்ட பிரிவு என்பதால் ஒருவராலும் அந்தப் பிரிவைத் தடுக்க முடி யவில்லை. சமூக அக்கறை கொண்டவர்கள், இரண்டு நிறுவ னங்களின் சட்டரீதியான உரிமையாளர்களிடமும் பேச்சுவார்த் தைகள் நடத்திக்கொண்டிருந்த வேளையில், இரண்டும் தனித் தனியாக இயங்கத் தொடங்கின. நிறுவனங்கள் பிரிந்து இயங்கியபோதும் ஸ்ரான் அன்ரனி நிர்வாகப் பொறுப்பை ஏற்றபின்னர் விரிவாக்கம் செய்யப்பட்ட கட்டடத்தின் முற்பகு தியில் சீஎம்ஆரின் நிர்வாகமும், ரீவீஜ இயங்கிய பகுதியில் சீஎம்ஆரின் கலையகங்களும் இயங்கியபடியால் நிறுவனங்க ளால் முற்றுமுழுதாகப் பிரிய முடியவில்லை. எனவே, ஆரம்ப ஏற்பாட்டின்படி, சீஎம்ஆர் நிறுவனம், இரண்டு நிறுவ னங்களும் இயங்கிய கட்டடத்துக்கான வாடகையையும் மின் சாரம், நீர் விநியோகம் போன்றவற்றுக்கான கொடுப்பனவுக ளையும் செலுத்திக் கொண்டிருந்தது. அவை கட்டட ரீதியாக வும் முற்றாகப் பிரிக்கப்பட்டு, சகல தொடர்புகளும் அற்றுப் போவதற்குச் சில காலம் பிடித்தது.

இரண்டு நிறுவனங்களும் தனித்து இயங்கத் தொடங்கியதும் ரீவீஜ-யின் வருமானத்தில் பெரும்பகுதியை ஈட்டித்தரும் விளம்பரம் சேகரிக்கும் நடைமுறைகளை எவ்வாறு கையாள் வதென்பதைத் தீர்மானிப்பது எனக்குப் பிரதான விடயமாக இருந்தது. ஏனெனில், ரீவீஜ-க்கும் சீஎம்ஆருக்கும் கணேஷ் முருகேசு, சிறீ சிவசுப்ரமணியம், ராகுலன் சானா ஆகிய மூவருமே விளம்பரம் சேகரிப்பவர்களாகப் பணியாற்றினார் கள். அவர்கள் அந்த இரண்டு நிறுவனங்களிலும் நிரந்தர ஊதியம் பெறுபவர்கள் அல்லர். ஒவ்வொருவரும் கொண்டுவ ரும் விளம்பரங்களின் பெறுமதியில் ஒரு குறிப்பிட்ட விகிதத் தைத் தமக்கான வருமானமாகப் பெறுபவர்கள். அவர்களின் பணியை உடனடியாக இரண்டு நிறுவனங்களுமே நிறுத்தி விட முடியாது. அந்தப் பணி உரிய முறையில் நிர்வகிக்கப் பட வேண்டும். அதை இதுவரை காலமும் இரண்டு நிறுவ னங்களினதும் நிதிக் கட்டுப்பாட்டாளராக இருந்த ஜெயரா-மன் பார்த்துக்கொண்டார். இப்போது ரீவீஜ-யின் விளம்பரச் சேகரிப்பையும் அதன் சந்தைப்படுத்தும் (marketing) செயற் பாடுகளையும் ஒருவர் நேரடியாகக் கவனித்துக்கொள்ள வேண்டும். அந்தப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள எஸ்.-பாலேந்திரன் முன்வந்தார். அவரிடமே அந்தப் பொறுப்பும் ஒப்படைக்கப்பட்டது. விளம்பரம் கொண்டுவரும் மூன்றுபே ரும் தொடர்ந்து சில வருடங்கள் இரண்டு நிறுவனங்களுக் குமே பணியாற்றிக் கொண்டிருந்தார்கள். அடுத்து, ரீவீஜ-யின் கணக்குகளைக் கவனித்துக்கொள்வதற்கு ஒரு கணக்காளர் தேவைப்பட்டார். அதற்கு ஒரு முழுநேரக் கணக்காளரை வைத்து சம்பளம் வழங்க முடியாது. மேலும், ஒரு முழுநேரக் கணக்காளருக்கான வேலையும் அங்கு இருக்கவில்லை. பகு திநேரமாக யாராவது செய்தாலே போதுமானது. எனது அலு-வலகத்தில் என்னோடு பணியாற்றும் மகா சீலனைக் கேட்ட போது, அவர் ஒரு கிழமையில் ஒரு நாள் வந்து தொண்டு அடிப்படையில் அப்பணியைச் செய்வதற்கு சம்மதித்தார். மகா சீலன் வாரத்தில் ஒருநாள் என்னுடன் ரீவீஜ நிலையத் திற்கு வந்து, பாலேந்திரன் வங்கியில் வைப்பிலிடும் வர்த்தக விளம்பர வருமான விபரங்களைப் பதிவதோடு, ரீவீஜ கொடுக்க வேண்டிய செலவுகள் மற்றும் ஊழியர்களின் சம்ப ளம் முதலியவற்றுக்கான காசோலைகளைத் தயார்செய்தல் போன்ற பணிகளைச் செய்தார். அவர் தொண்டு அடிப்படை யில் ஒருவருடம் வரை பணியாற்றியபின்னர் அவருக்கு ஒரு சிறிய தொகைப் பணம் மாதம்தோறும் வழங்கப்பட்டது.

சகலதும் சீராக நடைபெற்றுக்கொண்டிருந்தன. ரீவீஜ-யின் வருமானத்தில் வீழ்ச்சி ஏற்படவில்லை. ரீவீஜ நிர்வாகத்தில் ஒரு விசேட தன்மை என்னவென்றால், அதன் பங்குதாரர்கள் அதற்கு உரிமையாளர்களாக இருந்தபோதிலும் அவர்களின் எவருமே ரீவீஜ-யிலிருந்து வருமானம் பெறும் முதலாளிகளாக இருக்கவில்லை. அனைவருமே தத்தமது தொழில்களில்

போதிய வருமானத்தைப் பெற்று வாழ்பவர்கள். எனவே, ரீவீஜ-க்கு கிடைக்கும் அனைத்து வருமானத்தையும் அங்கு பணியாற்றுபவர்களுக்கான சம்பளம், மற்றும் ரீவீஜ-க்குத் தொழில்நுட்ப ரீதியாகவும் நிகழ்ச்சிகள் தயாரிப்பதற்காகவும் ஏற்படும் செலவுகளுக்கே உபயோகிக்கக்கூடியதான நிலை இருந்தது. எனவே, எவ்வளவு சிறப்பாக ரீவீஜ-யை நடத்துகின்றோமோ அது அங்கு பணியாற்றும் ஊழியர்களுக்கே நன்மையளிக்கக்கூடியதாக இருந்தது. உண்மையில் ரீவீஜ ஊழியர்களே அதன் உரிமையாளர்கள் என்று சொல்லலாம். ரீவீஜ-யில் பணிபுரிந்தவர்கள் அனைவருமே மிகத் திறமையாகச் செயற்பட்டார்கள்.

ரீவீஜ-யின் நிகழ்ச்சிகளை ஒளிபரப்புக்கு வழங்கும் பிரதான கட்டுப்பாட்டறையை இயக்கியவர் எஸ். சுதன். ரீவீஜ-யின் ஆரம்ப நாட்களிலிருந்தே அதற்குத் தனது சக்திக்கு அப்



சுதன் சின்னையா

பாற்பட்ட விதத்திலும் உதவிகள் புரிந்து, சேர்ந்து பயணித்த சுதன், மிகக் கடினமான உழைப்பாளி. ரீவீஜ-யின் பிரதான கட்டுப்பாட்டறையை இயக்கும் தொழில்நுட்பப் பணியை மட்டுமல்ல, நிகழ்ச்சி வழங்கல் பணியையும் மிகச் சிறப்பாகச் செய்தவர். அவருக்கு ரீவீஜ-யில் ஒளிபரப்பாகும் நிகழ்ச்சிகள் பற்றிய சகல விபரங்களும் தெரிந்திருந்தது. அவரோடு பிரதான கட்டுப்பாட்டறையை இயக்கும் பணியை சதீஷ், கேசவன், திவாகரன் போன்றோர் செய்தார்கள். அவர்களையும் நிர்வகித்து, கட்டுப்பாட்டறையைத் தனது பூரண கட்டுப்பாட்டில் வைத்திருந்த சுதன், நிர்வாகத்திற்கும் பல பயனுள்ள தகவல்களைத் தரக்கூடியவராக இருந்தார். அவர் தரும் நிகழ்ச்சிகள் பற்றிய தகவல்களைக் கொண்டு நான் ரீவீஜயில் ஒளிபரப்புவதற்கு இந்தியாவிலிருந்து நிகழ்ச்சிகளைப் பெறுவதற்கான செலவைக் குறைக்க முடிந்தது.

ஜெயராமன் ரீவீஜ-யில் நிகழ்ச்சி நிர்வாகத்திற்கும் பொறுப்பாக இருந்தபோது, 2009-ம் ஆண்டின் பிற்பகுதியில் இந்தியாவின் 'பொலிமர்' ரீவீயிலிருந்து நாளாந்தம் நிகழ்ச்சிகளைக் கொள்வனவு செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்திருந்தார். இந்தியாவிலிருக்கும் ஒருவர் அதற்கான முகவராகச் செயற்பட்டு, அவரே நிகழ்ச்சிகளைப் பெற்று எமக்கு அனுப்பிக்கொண்டிருந்தார். ஒப்பந்தத்தின்படி அவர் நாள்தோறும் ஒரு குறிப்பிட்ட மணித்தியாலங்களுக்கு ஒளிபரப்பக்கூடிய நிகழ்ச்சிகளை அனுப்பவேண்டும், மாதாமாதம் அதற்கான பணத்தை அவருக்கு அனுப்பவேண்டும். நிகழ்ச்சிகளை அனுப்புவதற்கான பணத்தோடு அவற்றைத் தொழில்நுட்ப ரீதியாக (up load) இங்கே அனுப்புவதற்கும் தனியாக ஒரு குறிப்பிட்ட தொகைப்பணம் செலுத்தவேண்டும். இவை எழுத்துமூல ஒப்பந்தப்படி நிர்ணயிக்கப்பட்ட தொகை.

நான் நிர்வாகப் பொறுப்பை ஏற்றபின்னர் இந்தியாவிலிருந்து முகவர் நாளாந்தம் அனுப்பும் நிகழ்ச்சிகளில் மறு ஒளிபரப்புகளே அதிகம் இருப்பதாக சுதன் என்னிடம் தெரிவித்தார். அதன்படி ஒரே நிகழ்ச்சிக்கே நாம் பலமுறை பணம் வழங்கிக்கொண்டிருந்தோம். நான் அந்த முகவரைத் தொடர்பு கொண்டு, உடனடியாக அந்த ஒப்பந்தத்தை இரத்து செய்து, நாளாந்தம் அவர் அனுப்பும் புதிய நிகழ்ச்சிகளின் நேரத்தைக் கணிப்பிட்டு அதற்கான பணத்தை மட்டுமே வழங்குவதென்று புதிய ஒப்பந்தமொன்றைச் செய்தேன். அதற்கமைய சுதன், நாளாந்தம் வரும் நிகழ்ச்சிகளில் புதியவை எவை, அவை எத்தனை மணித்தியாலங்களுக்கு ஒளிபரப்பத்தக்கவை போன்ற விபரங்களைத் தர, நான் அவற்றுக்கான பணத்தை மட்டுமே வழங்கினேன். இதனால் மிகப் பெரியளவான பண விரயம் குறைக்கப்பட்டது. சுதன் போன்றவர்கள் எந்த நிறுவனத்தில் பணிபுரிந்தாலும் அந்த நிறுவனத்தை தமது சொந்த நிறுவனமாகப் பாவித்து, விசுவாசத்துடன் மிகத் தீவிரமாக உழைக்கக்கூடியவர்கள். அவ்வாறான சிலரை நான் எனது தொழில் வாழ்க்கையில் பார்த்திருக்கிறேன். அவர்களில் ஒருவர் சுதன்.

### றோய்ற்ரர் செய்திகள்:

நான் செலவைக் குறைக்க எடுத்த மற்றுமொரு நடவடிக்கையை செய்திப் பிரிவிலும் மேற்கொண்டேன். ரீவீஜ தொடங்கிய காலம்முதல் பிரபல செய்திச்சேவையாகிய றோய்ற்ரர் (Reuters)-ரிடமிருந்து எமக்கான வெளிநாட்டுச் செய்திகளைப் பெற்றுக்கொண்டிருந்தோம். அவர்கள் இங்குள்ள பிரதான ஆங்கில ஊடகங்களுக்கு வழங்குவதுபோலவே எம்முடனும் ஒப்பந்தம் செய்து, அவர்களிடமிருந்து பெறுவதுபோன்றே எம்மிடமிருந்தும் பணம் பெற்றனர். நான் அவர்களது ஒப்பந்தத்தை இரத்து செய்வதாகக் கடிதம் அனுப்பியதும் அவர்கள் அதற்கான காரணத்தை என்னிடம் கேட்டார்கள். நான், 'நாம் ஒரு சிறிய அளவிலான மக்கள் கூட்டத்துக்காக இந்த ஒளிபரப்பை நடத்துகிறோம். எமது செய்தி அறிக்கை தொழில்முறைத் தரத்தில் இருக்கவேண்டும் என்பதற்காகவே உங்களிடமிருந்து செய்திகளைப் பெறுகிறோம். நீங்கள் இங்குள்ள பெரிய ஊடக நிறுவனங்களிடமிருந்து பெறும் பணத்

தையே எங்களிடமிருந்தும் பெறுவதால் எம்மால் மேற்கொண்டு உங்களிடமிருந்து செய்திகளைப் பெறமுடியாத நிலை ஏற்பட்டிருக்கிறது' என்று சொன்னதும் அவர்கள் எமது தேவைக்கேற்றவாறு செய்திகளைத் தருவதாகக் கூறி மீண்டும் ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டோம். அதற்கமைய வெளிநாட்டுச் செய்திகளைப் பெறுவதற்கான செலவு மிகுந்தளவில் குறைந்தது.

இப்படிப் பெரியளவில் செலவைக் குறைக்கும் முயற்சிகளை மேற்கொண்ட அதேவேளை, புதிய கணினிகளை வாங்குதல், பிரதான கட்டுப்பாட்டறையைப் புதுப்பித்தல் போன்ற தொழில்நுட்ப முன்னேற்றத்துக்கான செயற்திட்டங்களையும் செயற்படுத்தக்கூடியதாக இருந்தது. சொர்ணலிங்கம், சாந்தகுமார் ஆகியோரின் அனுமதியுடன் இந்தத் தொழில்நுட்ப அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டேன். இவற்றைத் தொழில்நுட்பப் பிரிவுக்குப் பொறுப்பான ராஜன் கனகசபை முன்னின்று செய்து முடித்தார்.

### எனது வேதனத்தை வழங்க முன்வந்த பிரமுகர்:

நான் ரீவீஜ-யை நடத்தும் பொறுப்பை ஏற்றுக்கொண்ட ஆரம்ப நாட்களில், அதை என் எதிர்பார்ப்புக்கேற்றவாறு முன்னேற்றுவதென்றால் நான் முழுநேரமாக அங்கு பணியாற்ற வேண்டுமென்று நினைப்பதுண்டு. வாரத்தில் சில மணித்தியாலங்கள் அல்லது ஆகக்கூடியது ஓரிரண்டு நாட்கள் செலவிட்டு செய்யக்கூடிய பணிகளே தொண்டு என்ற வகையில் அடங்கக்கூடியன. ஆனால், ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களுக்கான பணிகளுக்கு நான் நாள்தோறும் பார்க்கும் நிரந்தரப்பணிக்கும் மேலாகப் பெருமளவு நேரத்தைச் செலவிடவேண்டி இருந்தது. இப்போது ரீவீஜயை முழுமையாக நிர்வகிப்பதற்கு மிக அதிகநேரம் செலவிடவேண்டும். ஆனால், நான் முழுநேரமாகப் பணியாற்றுவதாயின் எனக்கு வேதனம் வழங்குவதற்கு ரீவீஜ பணம் செலவிட வேண்டும். அந்தப் பணம் இருந்தால் ரீவீஜ-யை சிறந்த முறையில் இயக்குவதற்கு உதவுமென்று எண்ணி, முழுநேரமாகப் பணியாற்றும் எண்ணத்தைக் கைவிட்டேன். சொர்ணலிங்கம், சாந்தகுமார் ஆகியோர் ஆயிரம் டொலர் மேலதிகமாக எடுத்துக்கொள்ளும்படி கூறியபோதும் நான் அதற்கு நன்றி கூறி மறுத்துவிட்டேன். ஸ்ரான் அன்ரனியின் நிர்வாகத்தில், எனது சேவைக்காக மாதாந்தம் வழங்கப்பட்ட தொகையையே நான் இறுதிவரை பெற்றேன். அதற்கு முன்னர் மிகவும் சொற்பத் தொகைக்கு ஒரு தொண்டாகவே ரீவீஜ, சீஎம்ஆர் பணிகளை மேற்கொண்டேன்.

இந்த இடத்தில் ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களை ஆரம்பித்தவர்களில் ஒருவரும் அந்நிறுவனங்களின் பிரதான நிறைவேற்று உத்தியோகத்தராகப் பணியாற்றியவருமான எஸ்.பிரபாகரன் சில சந்தர்ப்பங்களில் எனக்குச் சொன்னவற்றை உங்களிடம் பகிர்ந்துகொள்கிறேன். 'ஊடக அனுபவத்தில் உங்களது நிலையிலுள்ள (caliber) மேல்நாட்டு விற்பன்னர் ஒருவரின் சேவையைப் பெறுவதென்றால் இலட்சக்கணக்கில் டொலர்களைச் செலவிடவேண்டியிருக்கும். அவரிடமிருந்து கூட ஊடகத்துறை பற்றிய தொழில்நுட்ப ரீதியான அல்லது நிர்வாக ரீதியான பயிற்சியைத்தான் பெறமுடியுமேயன்றி எமது சமூகத்தின் விற்பன்னரிடமிருந்துதான் எமது மொழி, கலாச்சாரம், அரசியல் சார்ந்த நிகழ்ச்சிகளைத் தயாரிப்பதற்கான அறிவையும் பயிற்சியையும் பெறமுடியும். நாம் உங்களுக்குத் தரும் சிறுதொகைப் பணம் எமது நன்றியைத் தெரிவிப்பதற்கான அடையாளமேயன்றி உங்கள் பணிக்கான சம்பளம் அல்ல' இவ்வாறு பிரபாகரன் கூறியவை உண்மையென்பது எனக்கும் தெரிந்திருந்ததால், அவர் கூறியது எனக்கு மிகுந்த மகிழ்ச்சியைத் தந்தது. எல்லோரும் அதை உணரக்கூடியவர்களாக இருந்தார்களா என்பது எனக்குத் தெரியாது. ரீவீஜ-யின் பிரதானிகளில் ஒருவராக இருந்த சிவா சண்முகா ஒருமுறை கொண்டாட்ட மேடையில் பல ஆயிரம் பார்வையாளர்களின் முன்பு எனது சேவையின் பெறுமதி பற்றிப் பேசியிருக்கிறார். எனக்குத் தெரிந்து, மிகச் சில ரீவீஜ, சீஎம்ஆர் பணியாளர்களும் அந்த உண்மையை உணரக்கூடியவர்களாக இருந்திருக்கிறார்கள்.

நான் ரீவீஜ-யின் பிரதம செயற்பாட்டு உத்தியோகத்தராகப் பொறுப்பேற்று ஓரிரு மாதங்களின் பின்னர், வீ. சொர்ணலிங்கம் தனக்குப் பழக்கமான கனடாவின் முன்னணித் தொழில் விற்பன்னர் ஒருவர் ரீவீஜ-யை சிறப்பான முறையில் நிர்வகிப்பதற்கு சில ஆலோசனைகளைத் தெரிவிக்க விரும்புகிறார், அவரைச் சந்திப்போமென்று கூறியபோது, ஒரு வார இறுதி நாளில் சொர்ணலிங்கமும் நானும் அவரைச் சந்தித்தோம். அந்தத் தொழில் விற்பன்னர் ரீவீஜ-யின் முன்னேற்றத்தில் மிகவும் அக்கறைகொண்டவராகக் காணப்பட்டார். ரீவீஜ-யை சிறந்த முறையில் நடத்துவதற்கு நான் முழு நேரமாக அங்கு பணியாற்ற வேண்டுமென்று ஆலோசனை கூறிய அவர், எனக்குரிய வேதனத்தைத் தனது நிறுவனம் வழங்குமென்று கூறினார். நான், எனக்கு வெளியில் முழுநேரப் பணி செய்துகொண்டு ரீவீஜ-யை நிர்வகிப்பதில் பெரிய பிரச்சினைகள் எதுவும் இல்லையென்று சொன்னேன். எனக்கு உதவுவதற்கு எஸ். பாலேந்திரனும் அவருக்கு உதவியாக நிரோசினி சிறீகாந்த் ஆகியோர் இருக்கிறார்கள். அவர்கள் எந்த நேரத்திலும் என்னைத் தொடர்புகொள்ளக்கூடிய நிலையிலும் தேவை ஏற்படுமிடத்து உடனடியாகவே புறப்பட்டு நிலையத்திற்குச் செல்லக்கூடிய நிலையே எனது பணியிடத்திலும் இருக்கிறது. எனவே, சிறிதுகாலம் பொறுத்துப் பார்ப்போமென்று கூறி, அவரது நல்லாதரவுக்கு நன்றி சொன்னேன். உண்மையில் ஓர் ஊடக நிறுவனத்தை நடத்தும் பிரதான பதவியில் இருப்பவருக்கு வெளியார் வேதனம் வழங்குவது ஏற்புடையதல்ல. வெளியாரிடமிருந்து வேதனத்தைப் பெற்றால் அது அந்த உத்தியோகத்தருக்கும் ஊடக நிறுவனத்திற்கும் வெகு விரைவிலேயே இக்கட்டான நிலையை ஏற்படுத்திவிடும் சாத்தியமிருக்கிறது.

நான் முழுநேரமாக ரீவீஜ-யில் பணியாற்றுவது உகந்தது என்றாலும், பகல் நேரத்தில், மேற்பார்வை செய்யவேண்டிய அவசியமில்லாது, தமது கடமைகளை நேர்மையாகச் செய்யக்கூடிய தயாரிப்பாளர்களும் எஸ். பாலேந்திரன், நிரோசினி ஆகியோரும் நிலையத்தில் இருப்பது, நான் அங்கு கட்டாயமாக இருக்கவேண்டியதன் அவசியத்தைக் குறைத்திருந்தன. பாலேந்திரன் வெளியே செல்லவேண்டியிருந்தால் நிரோசினி சகலவற்றையும் கவனித்துக்கொள்ளும் ஆற்றலைக் கொண்டிருந்தார். ரீவீஜ விசேட நாட்களில் தயாரிக்கும் நிகழ்ச்சிகளின் போது அவற்றுக்கு முன்னின்று உழைப்பவர்களில் ஒருவர் நிரோசினி. நாம் பெருமளவில் மேற்கொண்ட இளையோரின் இசை, நடனப் போட்டி நிகழ்ச்சிகளை வெற்றிகரமாக நடத்துவதற்குப் பெரிதும் உழைத்தவர். ஒரு சிறந்த மக்கள் தொடர்பாளராகப் போட்டிகளில் கலந்துகொள்ளும் இளையவர்களுடனும் அவர்களின் பெற்றோர்களுடனும் தொடர்புகளைப்

பேணி, அவர்களுக்கு சகல விதமான அறிவுறுத்தல்களையும் வழங்கி, நிகழ்ச்சி ஒளிப்பதிவுகள் திட்டமிட்டபடி உரிய



நிரோசினி சிறிகாந்த்

நாளில் நடப்பதற்கு உதவும் பணியை மிகச்சிறப்பாக நிரோசினி செய்தார். அதுமட்டுமல்ல, எனது நிர்வாகக் காலத்தில் ரீவீஜ மீண்டும் மூன்று 'கொண்டாட்டம்' நிகழ்ச்சிகளைச் செய்தபோது அந்த மூன்றிலும் பாலி, கணேஷ், சிறீ, ராகுலன் ஆகியோருடன் இணைந்து, வர்த்தகர்களுக்கான காட்சிச் சாலைகளை அமைத்தல், அவற்றை உரிய வர்த்தகர்களுக்கு வழங்குதல் போன்றவற்றை நிர்வகிப்பதில் மிகச் சிறப்பாகப் பணியாற்றிய நிரோசினி, பல்கலைக்கழகப் பட்டப்படிப்பை முடித்தவுடன் நேரடியாகவே ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்களில் இணைந்துகொண்டவர். ரீவீஜ-யில் தயாரிப்பாளராகப் பணியாற்றிய ராஜதீபனைத் திருமணம் செய்தார். ரீவீஜ-யில் இணைந்தபின்னர் திருமணம் செய்துகொண்ட மற்றுமொரு தம்பதியினர் தொழில்நுட்பவியலாளர் யோகி, அலுவலகத்தில் பணிபுரிந்த சுகிர்தா ஆகியோர்.

**மீண்டும் 'கொண்டாட்டம்':**

2005-ம் ஆண்டு, ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்கள் ஆரம்பித்த கொண்டாட்டம் என்னும் மிகப் பிரமாண்டமான வர்த்தகக் கலை நிகழ்ச்சி பற்றி ஏற்கனவே குறிப்பிட்டிருந்தேன். தொடர்ந்து சில ஆண்டுகள் நடைபெற்ற அந்த நிகழ்ச்சியை 2010-ம் ஆண்டு, இரண்டு நிறுவனங்களும் பிரிந்தபின்னர், அதே ஆண்டு சீஎம்ஆர் தனித்து நடத்தியது. கொண்டாட்டம் ரீவீஜ நிறுவனத்தினால் சட்டபூர்வமாகப் பதியப்பட்ட ஒரு கிளை நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும் நிகழ்ச்சியாகையால், அந்நிகழ்ச்சியை ரீவீஜ நிறுவனமே நடத்தவேண்டுமென்று அதன் உரிமையாளர்கள் முடிவெடுத்தனர். அதனால் 2011-ம் ஆண்டு கொண்டாட்டம் நிகழ்ச்சியை நடத்துவதற்கு ரீவீஜ முயற்சிகளை மேற்கொண்டது. அந்த நிகழ்ச்சி நடைபெறும் ரொரன்ரோ சர்வதேச மையம் (Toronto International Centre) எனப்படும் நிறுவனத்திற்குச் சென்று, கொண்டாட்டம் ரீவீஜ-யின் நிகழ்ச்சியென்று நிரூபித்து, ரீவீஜ மீண்டும் கொண்டாட்டம் நிகழ்ச்சியை நடத்துவதற்கான பேச்சுவார்த்தையை நடத்தினோம். அப்படியான பெரிய நிறுவனங்களுடன் வர்த்தக ரீதியான தொடர்புகளைப் பேணும்போது இவ்வாறான பிரிவினைகளால் ஏற்படும் பிரச்சினைகளினால் ஏதேனும் சட்டச் சிக்கல்கள் ஏற்படாது என்று சட்ட வல்லுநர்களுடன் கலந்தாலோசித்து முடிவுசெய்தபின்னரே இறுதி முடிவை எடுப்பார்கள். இதற்காக நாம் சர்வதேச மையத்துடன் பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நடத்தவேண்டியிருந்தது. வி. சொர்ணலிங்கம், எஸ். பிரபாகரன், எஸ். பாலேந்திரன், நான் எல்லோரும் கூட்டாக அந்தக் கூட்டங்களில் கலந்துகொண்டோம். நான் முழுநேரமாகப் பணியாற்றும் நிறுவனத்தில் மிகச் சிறப்பாகப் பணியாற்றி, ஒரு கௌரவமான நிலையில் இருந்ததால் பகல் நேரங்களில் எனது பணியிடத்திலிருந்து ஐம்பது, அறுபது கிலோ மீற்றர் தொலைவிலுள்ள சர்வதேச மையத்தில் நடைபெற்ற அந்தக் கூட்டங்களில் கலந்துகொள்ளத் தக்க நிலை எனக்கு இருந்தது. பல சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர் சர்வதேச மையம் ரீவீஜ மீண்டும் கொண்டாட்டம் நிகழ்ச்சியை அங்கு நடத்துவதற்கான அனுமதியை வழங்கியது.

2011-ம் ஆண்டு, கொண்டாட்டம் நிகழ்ச்சியைச் செய்வதற்கான சகல நடவடிக்கைகளையும் மேற்கொண்டோம். சர்வதேச மையத்துடனான தொடர்புகள், கொண்டாட்டத்தில் பல்வேறு விதமான பணிகளைச் செய்வதற்காக அமர்த்தப்படும் நிறுவனங்களுடனான தொடர்புகள், இந்தியாவிலிருந்து கலைஞர்களை அழைப்பதற்கான ஒழுங்குகள் முதலிய சகல பணிகளையும் ஈ மெயில் ஊடான தொடர்பாடல்கள் மூலம் நான் கவனித்துக்கொண்டேன். அதேநேரம் 'கொண்டாட்டம்' என்ற பெயரை வேறு எவரும் உபயோகப்படுத்தாத வகையில் சட்டரீதியாகப் பதிவுசெய்வதற்கான முயற்சிகளையும் மேற்கொண்டேன். இந்தப் பணிகள் அனைத்தையும் நான் எனது பணியிடத்திலிருந்தவாறே செய்யக்கூடியதாக இருந்தது. எஸ். பாலேந்திரன் கொண்டாட்டத்தில் இடம்பெறுவதற்கான நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்தல், வர்த்தகச் சாவடிகளை அமைத்தல் போன்ற நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட்டார். அவருக்கு உதவியாக ரீவீஜ-யின் வர்த்தக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் அனைவரும் பணியாற்றினார்கள்.

2005-ம் ஆண்டுக் கொண்டாட்டத்தின் பின்னர் அடுத்து நடந்த கொண்டாட்டங்கள், சர்வதேச மையத்தின் இரண்டு பிரமாண்டமான மண்டபங்களை வாடகைக்குப் பெற்று அவற்றில் இரண்டு நாள் நிகழ்ச்சியாகக் கொண்டாடப்பட்டன. 2011-ம் ஆண்டு கொண்டாட்டத்தை நடத்த ரீவீஜ தீர்மானித்தவுடன் எம்மால் இரண்டு மண்டபங்களைப் பெற்று முன்னர்போல் மிகப் பெருமளவில் நடத்த இயலாதென்றுதான் எண்ணியிருந்தோம். ஆனால் 2002-ம் ஆண்டு, தனது பீஎன்ஆர் கலைய

கத்தை ரீவீஜ-க்கு வாடகைக்குத் தந்தது முதல் ரீவீஜ, சீஎம் ஆர் நிறுவனங்களுடன் மிக நெருக்கமாக இணைந்து பய ணித்த நறிந்தர் ச்சனா (Narinder Channa) அவர்கள், தனது பீஎன்ஆர் கலையகத்தில் உருது மொழியில் நிகழ்ச்சிகள் தயாரித்து, கனடாவில் வாழும் பாக்கிஸ்தானிய மக்களுக்காக ஒளிபரப்பிய தில் மொஹமட் என்ற வர்த்தகரை எமக்கு அறி முகம் செய்துவைத்தார். மருந்து தயாரிக்கும் துறையில் வெற் றிகரமாக வர்த்தகம் செய்துவரும் அவர், கொண்டாட்டம் போன்றதொரு நிகழ்ச்சியைச் செய்வதற்கு ஆர்வமாக இருப்ப தையறிந்து வீ. சொர்ணலிங்கம், எஸ். பிரபாகரன், பாலி, நான் எல்லோரும் நறிந்தர் ச்சானா அவர்களின் ஏற்பாட்டில் தில் மொஹமட்டைச் சந்தித்தோம். அவருடன் மேற்கொண்ட சில சுற்றுப் பேச்சுவார்த்தைகளின் பின்னர், ஒரு மண்டபத் தில் கனடாவாழ் பாக்கிஸ்தானிய மக்களுக்கான நிகழ்ச்சி களை தில் மொஹமட் செய்வாரென்று முடிவெடுக்கப்பட்டது. மிகவும் தோழமையுடன் பழகும் தில் மொஹமட் அவர்களுட னான சந்திப்புகள் நல்ல உணவகங்களில் இடம்பெற்றன. தன்னுடன் தொடர்புகளை மேற்கொள்பவர்களுக்கு விருந்து கொடுத்து உபசரிக்கும் அவரது பண்பு அனைவரையும் கவர்ந்தது. அவர் எந்தவித தயக்கமும் இல்லாமல் இரண்டா வது மண்டபத்துக்கான முழுப் பணத்தையும் செலுத்துவதற் குச் சம்மதித்து அவ்வாறே செய்தார். அவர் பாக்கிஸ்தானிலி ருந்து கலைஞர்களை அழைப்பதற்கு நான் உத்தியோகபூர்வ மான கடிதங்களை வழங்கினேன். ஆனால், கலைஞர்களுக் கான விசா அனுமதியைப் பெற முடியவில்லை.

கொண்டாட்ட விழா ஆரம்பம் இரண்டு மண்டபங்களிலும் சிறப்பாக ஆரம்பித்தது. பாக்கிஸ்தானிய நிகழ்ச்சிகள் இடம் பெற்ற மண்டபத்தில் அப்போது கூட்டம் அதிகமாக இருக்க வில்லை. இந்திய - பாக்கிஸ்தானிய பார்வையாளர்கள் மாலை வேளைகளில் தான் அதிகமாக வருவார்கள் என் பதை நாம் சீஎம்ஆருடன் இணைந்து கொண்டாட்டம் நிகழ்ச் சிகளை நடத்தியபோது அறிந்திருந்ததால் அன்றும் தில் மொஹமட் அவர்களின் நிகழ்ச்சிகளுக்கு மாலை வேளையில் பார்வையாளர்கள் வருவார்கள் என்று எண்ணியிருந்தோம். கொண்டாட்டம் நிகழ்ச்சி ஆரம்பிக்கப்பட்டு இரண்டு அல்லது மூன்று மணித்தியாலங்கள் சென்ற நிலையில் திடீரெனப் பலத்த காற்றுடன் கூடிய பெருமழை பொழிந்தது. சிறிது நேரமே அந்த மழை பெய்ததென்றாலும் அடித்த சூறாவளிக் காற்றினால் அந்தப் பிராந்தியம் முழுவதற்குமே மின்சாரத் தடை ஏற்பட்டது. எல்லோருமே பெரும் அதிர்ச்சிக்குள்ளாகிப் பல வழிகளில் விசாரித்ததில் மின்னிணைப்புகள் மிகப் பாரிய அளவில் துண்டிக்கப்பட்டு விட்டனவென்றும் அவற்றை மீண்டும் சரிசெய்வதற்கு ஓரிரு நாட்கள் எடுக்கலா மென்றும் அதிர்ச்சித் தகவலைத் தந்தார்கள். என்ன செய்வ தென்று தெரியாமல் திகைத்து நின்றுவிட்டு, செய்த ஏற்பாடு களை இரத்துச் செய்ய முடியாது, அது மிகப் பெரும் நட் டத்தை ஏற்படுத்திவிடுமென்பதால் நாம் சில மின்னுற்பத்திச் சாதனங்களை (generators) வாடகைக்குப் பெற்று, எப்படியா வது கொண்டாட்டத்தை நடத்துவதென்று முடிவு செய்தோம். இலட்சக் கணக்கில் பணம் செலவுசெய்து ஏற்பாடு செய்யப் பட்ட நிகழ்ச்சியை இரத்துச் செய்துவிட முடியாது. ரீவீஜ-யின் தொழில்நுட்பப் பிரிவுக்குப் பொறுப்பான ராஜன் கனகசபை, எஸ். பாலேந்திரன் ஆகியோர் பெரும் முயற்சிசெய்து, மின் னுற்பத்திச் சாதனங்களை வரவழைத்து, மேடைகளுக்கு மின் னிணைப்பை வழங்கி, நிகழ்ச்சியைத் தொடங்குவதற்கு இரவு எட்டு மணியாகிவிட்டது. ரீவீஜ-யின் மண்டபத்தில் பல வர்த்த கச் சாவடிகள் அமைக்கப்பட்டு, பல கலைநிகழ்ச்சிகளும் ஒழுங்கு செய்யப்பட்டிருந்ததால் மக்கள் பொறுமையுடன் காத்திருந்து நிகழ்ச்சிகளைப் பார்த்துச் சென்றார்கள். தில் மொஹமட் அவர்களது நிகழ்ச்சிகள் நடந்த மண்டபத்துக்கும் மின்னிணைப்புச் சாதனங்கள்மூலம் மின்சாரம் வழங்கப்பட்ட போதிலும் அங்கு சொற்ப பார்வையாளர்களே காணப்பட்டார் கள். மின்சார சபை முதலில் மின்சார விநியோகத்தைச் சீராக்குவதற்கு சில நாட்கள் எடுக்கலாமென்று தெரிவித்திருந் தபோதிலும் அன்று நள்ளிரவே மின்சார விநியோகத்தை மீண்டும் வழமைக்குக் கொண்டுவந்துவிட்டது. அடுத்தநாள் கொண்டாட்டம் அதிகளவான பார்வையாளர்களுடன் மிகச் சிறப்பாக நடைபெற்றது. ஆனால், பாக்கிஸ்தானிய நிகழ்ச்சி கள் சிறப்பாக நடைபெறவில்லை. அங்கு எதுவும் நடைபெற வில்லையென்ற பிரமையையே ஏற்படுத்தியது. தில் மொஹ- மட் அவர்களிடம் பணம் தாராளமாக இருந்தபோதிலும் இத்த கைய பிரமாண்டமான நிகழ்ச்சிகளைச் செய்வதற்கேற்ற ஆட் பலம் இருக்கவில்லையென்ற அபிப்பிராயம் பலரிடமும் நில வியதை அறியக்கூடியதாக இருந்தது.

ரீவீஜ தொடர்ந்து 2012, 2013-ம் ஆண்டுகளிலும் கொண்டாட் டத்தை நடத்தியபோதிலும் நாம் எமது சக்தியையும் நேரத் தையும் பணத்தையும் அந்த நிகழ்ச்சிக்காகச் செலவிடுவதற் கேற்ற விதத்தில் பலன் கிடைப்பதில்லையென்று கருதிய தால் கொண்டாட்டம் நிகழ்ச்சியை தொடர்ந்து நடத்துவதில் லையென்று முடிவெடுக்கப்பட்டது.

### சட்டப் பிரச்சினைகளைக் கையாளும் அனுபவம்:

நான் எனது ஊடக வாழ்க்கையில் எனது துறைசார் அனுப வத்தை அதிகமாகவே பெற்ற அதேவேளை, நிறுவனங்களை நடத்தும்போது சட்டபூர்வமாக ஏற்படும் பிரச்சினைகளை எவ் வாறு எதிர்கொள்வது என்பதை ரீவீஜ, சீஎம்ஆர் நிறுவனங்க ளில் பணியாற்றும்போது மேலதிகமாகக் கற்றுக்கொண்டேன். 'கொண்டாட்டம்' என்ற பெயர் ரீவீஜ-க்கே உரியது, அதை வேறு எவரும் உபயோகிக்க முடியாதென்று சட்டபூர்வமாகப் பதிவு செய்வதற்குச் சட்டத்தரணிகளுடன் தொடர்புகளை மேற்கொண்டு செயலாற்றியமை ஒரு சிறிய அனுபவம். அதே வேளை, சட்டபூர்வமாக அனுப்பப்படும் கடிதங்களுக்கு உரிய நேரத்தில் பதிலளிக்காவிட்டால் ஏற்படும் பாரதூரமான விளைவுகள்பற்றி எனக்குக் கற்றுத் தந்தது பின்வரும் சம்பவம்.

### எனது நிதிநிலை அறிக்கை (credit report):

2010-ம் ஆண்டு, நான் ரீவீஜ-யின் செயற்பாட்டு உத்தியோ கத்தராகப் பொறுப்பேற்று இரண்டு மூன்று நாட்களுக்குள் ளேயே, ரீவீஜ தனக்குப் பணம் தரவேண்டுமென்று ஒருவர் சட்டபூர்வமாக அனுப்பிய கடிதத்தில் எனது பெயரும் அந் தக் கடனுக்குப் பொறுப்பானவரென்று குறிப்பிடப்பட்டிருந் தது. ரீவீஜ-யின் ஆரம்ப காலத்தில் அதனுடன் வியாபார ரீதி யான தொடர்புகளைக் கொண்டிருந்த ஒருவர், அதனால் தனக்கு ஏற்பட்ட இழப்பை ரீவீஜ தரவேண்டுமென்று கோரியி ருந்தார். அந்தக் கடிதத்தில் ரீவீஜ தரப்பில் கடனுக்குப் பொறுப்பானவர்களாக வீ. சொர்ணலிங்கம், வீ. சாந்தகுமார் ஆயோரின் பெயர்களுடன் எனது பெயரும் இடம்பெற்றிருந் தது. சட்ட நடவடிக்கை எடுத்தவருக்கும் ரீவீஜ-க்குமான கொடுக்கல் வாங்கல் பற்றிய விபரங்கள் எதுவுமே எனக்குத் தெரியாது. நான் ரீவீஜ-யின் பொறுப்பை ஏற்று இரண்டு

மூன்று நாட்கள்தான் ஆகின்றன. எனவே ரீவீஜ-யிடம் அவர் சட் டரீதியாகக் கேட்கும் பணத்திற்கும் எனக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லையென்று நானாகவே நினைத்துக்கொண்டு அந்தக் கடிதத்திற்கு எந்தவித நடவடிக்கையையும் நான் எடுக்கவில்லை. சாதாரணமாக தர்க்கரீதியாக சிந்தித்தபோது நான் எடுத்த நிலைப்பாடு மிகச் சரியானதாகவே எனக்குத் தோன்றியது. அந்தக் கடிதம்பற்றி நான் மறந்துவிட்டேன். பின்னர் இரண்டு மூன்று வருடங்கள் கழித்து நான் வீடொன்றை வாங்குவதற்குக் கடன் பெறுவதற்காக வங்கிக்குச் சென்றபோது, நான் சட்டரீதியாக இரண்டு இலட்சத்துக்கும் மேற்பட்ட தொகைப் பணத்தை யாருக்கோ கொடுக்கவேண்டுமென்று எனது நிதிநிலை அறிக்கையில் (credit report) தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும் அதனால் நான் வீட்டுக் கடனைப் பெறமுடியாதென்றும் வங்கி உத்தியோகத்தர் கூறினார். எனக்குத் தூக்கிவாரிப் போட்டது. நான் யாருக்கு அப்படிப் பெருந்தொகையான பணம் கொடுக்கவேண்டும் என்று யோசித்தேன். கடனென்றால் காததூரம் ஓடுபவன் நான். வீட்டுக்கடன், கார்க்கடன் போன்ற சட்டரீதியாக வங்கிகளிடம் வாங்கும் கடன்களைத் தவிர எனக்கு வேறு எந்தக் கடனும் கிடையாது. அத்தகைய கடன்களை வாங்கும்போது எனது நிதிநிலையைப் பரிசோதித்து எனக்கு அக்கடன்களைக் குறித்த தவணைகளில் ஒழுங்காகச் செலுத்தக்கூடிய நிலை இருந்தால் மட்டுமே வங்கிகள் அக்கடன்களை வழங்கும். நான் எனது தகுதிக்கு மீறி எந்தக் கடனையும் பெற்றதில்லை. மாதாமாதம் கடனட்டை மூலம் செலவிடும் பணத்தைக் குறித்த தினத்தில் முறையாகக் கட்டிமுடிப்பது எனது வழக்கம். எனக்கு எவ்வாறு இத்தனை பெரிய தொகையான கடன் வந்ததென்று பலவாறு யோசித்தபோது, மூன்று வருடங்களுக்கு முன்னர் ஒருவர் ரீவீஜ தனக்குப் பணம் தரவேண்டுமென்று கோரி அனுப்பிய சட்டரீதியான கடிதத்தில் எனது பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது நினைவுக்கு வந்தது. வீ. சொர்ணலிங்கம், எஸ். பிரபாகரன் ஆயியோருடன் கலந்து பேசியபோது, அந்த நபர் ரீவீஜ-யிடம் கோரிய கடன் பணம்தான் எனது பெயரில் முழுதாகப் பதிவாகியிருக்கிறதென்று புரிந்தது. அந்தக் கடன் கோரிக்கையில் குறிப்பிடப்பட்டிருந்த ஏனையவர்களான வீ. சொர்ணலிங்கம், வீ. சாந்தகுமார் ஆகியோர் ரீவீஜ-யின் சட்டத்தரணிமூலம் முறைப்படி அந்தக் கடிதத்திற்கான பதிலைச் சமர்ப்பித்துவிட்டதால், அந்தக் கடனுக்கும் எனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லையென்று நானே முடிவெடுத்து, அந்தக் கடிதத்தை உதாசீனம் செய்துவிட்ட என்மீது அந்த முழுத் தொகையும் பதிவாகியிருந்தது. சொர்ணலிங்கம், சாந்தகுமார் ஆகியோரும் நான் நினைத்தவாறே எனக்கும் அந்தக் கடனுக்கும் சம்பந்தமில்லையென்றே நினைத்திருந்தார்கள். எனது நிலையை அறிந்ததும் வீ.சொர்ணலிங்கமும், வீ. சாந்தகுமாரும் உடனடியாகவே ரீவீஜ-யின் சட்டத்தரணிமூலம் நடவடிக்கைகளை மேற்கொண்டதால் எனது நிதிநிலை அறிக்கையிலிருந்து அந்தக் கடன் தொகை நீக்கப்பட்டது. அதுமட்டுமல்ல, ரீவீஜ-யின் செயற்பாட்டு உத்தியோகத்தராக நான் மேற்கொள்ளும் சட்டத்துக்கமைவான செயற்பாடுகளுக்காக என்மீது எடுக்கப்படும் எந்தவித சட்டரீதியான நடவடிக்கைகளுக்கும் நான் பொறுப்புக்கூற வேண்டியதில்லை என்றும் அவ்வாறு ஏதேனும் நடவடிக்கைகள் எனக்கெதிராக எடுக்கப்பட்டால் அதற்கான முழுப் பொறுப்பையும் ரீவீஜ-யே ஏற்றுக்கொள்ளும் என்னும் பொருள்பட எழுதப்பட்ட ஒரு உறுதிக் கடிதத்தைச் சட்டத்தரணியூடாக வீ. சொர்ணலிங்கமும் வீ. சாந்தகுமாரும் எனக்கு வழங்கினார்கள். இத்தகைய உறுதிக் கடிதத்தை Assurance and Indeminity என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். அந்தக் கடிதம் எனக்கு மிகுந்த பாதுகாப்பு உணர்வைத் தந்தது.

**கொண்டாட்டம் சம்பந்தமான சட்ட நடவடிக்கை:**

அடுத்த சட்டம் சம்பந்தமான எனது அனுபவம், 2011-ம் ஆண்டு, கொண்டாட்டம் நிகழ்ச்சி சம்பந்தமாக எனக்குக் கிடைத்தது. அந்தக் கொண்டாட்டம் நிகழ்ச்சியை ரீவீஜ-யுடன் இணைந்து நடத்திய, தில் மொஹமட் என்னும் பாக்கிஸ்தானைப் பூர்வீகமாகக்கொண்ட கனடியர், அந்த நிகழ்ச்சியால் தனக்கேற்பட்ட நட்டத்துக்கு இழப்பீடு கேட்டு ரீவீஜ மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுத்தார். அவரது சட்டத்தரணிகள் அனுப்பிய கடிதத்தில் எனது பெயர் குறிப்பிடப்படவில்லை. பொதுவாக ரீவீஜ-யிடமே அந்தக் கோரிக்கையை விடுத்திருந்தார்கள். ரீவீஜ-யிடம் விடுக்கப்படும் கோரிக்கைகளுக்கு அதன் சட்டரீதியான உரிமையாளர்களான பங்குதாரர்களே பொறுப்பானவர்கள். இந்த விடயத்தில் ரீவீஜ நிர்வாகத்துக்குப் பொறுப்பானவரென்ற வகையில் கொண்டாட்டம் நடந்த அன்று நிகழ்ந்த அனைத்தையும் அவை நிகழ்ந்த நேர ஒழுங்கில் விபரித்து நீண்டதொரு அறிக்கையை ரீவீஜ-யின் சட்டத்தரணிகளுக்கு நான் வழங்கவேண்டியிருந்தது. அந்த அறிக்கையை ரீவீஜ-க்காக நான் தயாரித்து வீ. சொர்ணலிங்கம், வீ. சாந்தகுமார், எஸ். பிரபாகரன் ஆகியோரிடம் கொடுத்து உறுதிசெய்த பின்னர் சட்டத்தரணிகளுக்கு அனுப்பினேன். அது எனக்கு ஒரு பெரிய அனுபவமாக இருந்தது.

**ரீவீஜ-ப் பணியாளர்களின் சட்ட நடவடிக்கை:**

மூன்றாவதாக ரீவீஜ-யிடம் பணம் கோரி அங்கு பணியாற்றிய சில பணியாளர்கள், சட்டரீதியாக அனுப்பிய கடிதத்தில் எனது பெயரும் குறிப்பிடப்பட்டிருந்தது. நான் ஏற்கனவே இங்கு விளக்கமாகக் கூறியபடி, ரீவீஜ-யின் கடன்களுக்கும் அதன்மீது வைக்கப்படும் நிதி சம்பந்தமான கோரிக்கைகளுக்கும் எனக்கும் எந்தவிதமான சம்பந்தமுமில்லையென்று ரீவீஜ உரிமையாளர்களாகிய பங்குதாரர்கள் சட்டபூர்வமாகவே கடிதம் தந்திருந்தமையால் நான் எனக்கு வந்த கடிதத்தைப்பற்றி ரீவீஜ-யின் உரிமையாளர்களில் ஒருவரும் நான் ரீவீஜ-யின் கடன்களுக்குப் பொறுப்பானவனல்ல என்று கடிதம் தந்தவர்களில் ஒருவரும், அந்த நேரத்தில் ரீவீஜ கைமாறிவிட்ட நிலையில் சகல நடவடிக்கைகளையும் பொறுப்பேற்று நடத்தியவருமான வீ. சாந்தகுமாரிடம் பேசியபோது, அவர் அதற்கான சட்டரீதியான நடவடிக்கைகளை எடுப்பதாகக் கூறினார். நான் பதினைந்து வருடங்களாக ஒரு தொண்டுபோல், ரீவீஜ-யைத் தொழில்முறைத் தாபனமாக நடத்துவதற்கான முழு ஒத்துழைப்பையும் உழைப்பையும் வழங்கியபோதும், அங்கு பணியாற்றியவர்களே எனது பெயரையும் குறிப்பிட்டமை மிகுந்த மனவருத்தத்தைத் தந்தது. எனது ஊடகத் தொழில் வாழ்க்கையில் எனக்கு மனஉளைச்சல் தரும் இத்தகைய சம்பவங்கள் பல நடந்தபோதிலும் நான் அவற்றில் பலவற்றிற்கு எந்தவிதமான பிரதிபலிப்பையும் வெளிக்காட்டாமல் அமைதி காத்ததுபோலவே இப்போதும் நடந்துகொண்டேன்.



wikneswaran.p@thaiveedu.com

# ஆன் ரணசிங்க கவிதை

- ஜிப்ரி ஹாசன்

ஆன் ரணசிங்க ஒக்ரோபர் 1925 - டிசம்பர் 2016. ஜேர்மனியில் பிறந்த யூதப் பெண்மணி. இரண்டாவது உலக யுத்தம் தொடங்கு முன்பு, ஹிட்லரின் இனப் படுகொலையிலிருந்து தப்பி இங்கிலாந்துக்குச் சென்று, தாதியாகக் கடமை புரிந்தார். அங்கு ரணசிங்க எனும் இலங்கையரைச் சந்தித்து திருமணம் செய்து கொண்டார். ஆங்கிலத்தில் கவிதை எழுதத் தொடங்கிய அவர் ஆங்கில இலக்கிய உலகில் Anne Ranasinghe என அறியப்படுகிறார். இவரது கவிதைத் தொகுப்புகளில் Poems-And a Sun That Sucks The Earth to Dry (1971), With Words We Write our Lives - சொற்களினால் எமது வாழ்க்கையை எழுதுகிறோம் (1972), Against Eternity and Darkness - நித்தியத்துக்கும் இருளிற்கும் எதிராக (1985) போன்றன முக்கியமானவையாக கருதப்படுகின்றன.

அவரது July 1983 கவிதை பரவலான கவனிப்பைப் பெற்ற கவிதை.

அவரது கவிதை ஒன்று எனது மொழியில்.



jiffry.hassan@thaiveedu.com

## கருணை மன்றாட்டம்

*மலை உச்சியை நோக்கி*
*ஒரு வண்டியை மிகுந்த பிரயத்தனத்தோடு*
*இழுத்துச் செல்லும்*
*காளையை நாங்கள் கடந்து சென்றோம்*
*துருத்திக் கொண்டிருக்கும்*
*அதன் எலும்புகளும், தோலும்*
*கூரிய முட்கள் கொண்ட கேட்டிக் கம்பால்*
*அடிக்கப்படும் ஒவ்வொரு முறையும்*
*அது நடுங்குகிறது*
*எந்தவொரு உணர்ச்சியையும்*
*அது முகத்தில் காட்டவில்லை*
*அதன் கண்கள் கருணையை மட்டுமே வேண்டின*
*தன் எட்டுக்களைக் கூட்டுவதற்கு*
*முயற்சிக்கும் போதும்*
*காலிடறும் போதும்*
*அதன் வாயிலிருந்து நுரை தள்ளிக்கொண்டிருந்தது*
*என் மகள் என்னைக் கேட்டாள்*
*'வாழ்க்கை பெறுமதியானது என அது நினைக்குமா?'*
*நான் உண்மை அல்ல எனத் தெரிந்தும்*
*சொன்னேன்*
*'எப்போதுமே வாழ்வு சாவை விட மேலானது'*
*அவள் முகம் சுளித்தாள்.*
*அவள் சொன்னாள்:*
*'ஒரு புரட்சி நிகழ்ந்தால் நான் என்னையே*
*கொன்றுவிடுவேன்'*
*அவை அனைத்தும் அவர்கள் மக்களுக்குச் செய்கிற*
*பயங்கரமான செயல்களே.*
*கரடுமுரடான பாதை ஓரத்தில் காளை படுத்துவிட்டது*
*அது முயற்சிக்கிறது*
*ஆனால் தடி இருந்தபோதிலும்*
*அதனால் எழுந்து நிற்க முடியவில்லை*
*கடவுள் அதன் கண்களில் கருணையைப் பொழியட்டும்!*

*என் மகளுக்கு வெறும் பதின்மூன்று வயதுதான் ஆகிறது!*

**- ஆன் ரணசிங்க**
(இலங்கை)

# பனிவிழும் பனைவனம்

## குண்டுகள் விழுந்த தேசத்தின் கதைகள்

**- சுப்ரம் சுரேஷ்**




காலம் செல்வம் எழுதிய 'பனிவிழும் பனைவனம்' நூலை ஒரேபோக்கில் வாசித்து முடித்தாயிற்று. தமிழ்நாட்டில் காலச் சுவடு பதிப்பகத்தினூடு வெளிவந்த இந்த நூலை அதன் ஆசிரியர் செல்வம் அருளானந்தம் அவர்கள் கனடா செல் லும் வழியில் இலண்டனில் நடைபெற்ற அறிமுக நிகழ்வில் பெற்றுக்கொண்டேன்.

இவரது முன்னைய நூல்களான 'எழுதித் தீரா பக்கங்கள்', 'சொற்களில் சுழலும் உலகம்' போன்று இந்த நூலும் அனு பவ கதைகளாக அமைந்ததில் வாசிப்பில் சுவாரசியம் கூடி யது. தமிழ்த் தேசியப் போராட்டம் முகிழ்விடும் காலத்தில் ஆரம்பிக்கும் இக்கதைகள் அக்கால எம்மண்ணின் மாந்தர்க ளின் வாழ்வியலுடன் பயணிக்கின்றது. மெல்ல மெல்ல அந்த வாழ்வை போர் மேகங்கள் எப்படி விழுங்குகின்றன என்பதும் அலைந்துதிரியும் ஈழத்தமிழர் எப்படி புலம்பெயர் வாழ்வுக் குள் சிக்குப்படுகின்றார்கள் என்பதும் நிஜக்கதைகளாக விரி கின்றன. பெருமளவில் புலம்பெயரத் தொடங்கிய காலங்க ளில் மேலைத் தேசங்களைச் சென்றடைய வேண்டுமென்ற தவிப்பில் எவ்வாறான ஆபத்துக்களையும் கடக்கத் தயாராக இருந்த நம்மவர்கள் கடும் பனிப்பொழிவுகளில் புதையுண்ட கதைகள் ஏராளம். அவற்றில் சில உறைந்துகிடக்கும் பனிப் படலங்களை உடைத்துக்கொண்டு இக்கதைகளில் இடம்பெ றுவது நூலாசிரியரின் வரலாறு மீதான கரிசனத்தைக் காட்டு கின்றது.

எங்களின் சுயமான மொழிநடை ஒவ்வொரு வரிகளிலும் இயல்பாக நகர்ந்துசெல்ல. ஊரில வாழ்ந்த நாட்களை எங் கேயோ தொட்டுத் தொட்டு ஞாபகமூட்டியபடி இருந்ததை உணரமுடிந்தது. அனுபவங்களை இலக்கியமாக்கும் லாவ கம் கைகூடிய ஒருவர் தனது வாழ்வில் பெரும்பகுதியை மிக வும் சுவாரசியமாக வாழ்ந்தவர்போல் இருப்பதுதான் இந்த நூலின் சிறப்பு. என்னதான் விடுதலைக்கான யுத்தத்தில் நாம் தோற்றநிலையில் அந்த கதைகளை மீட்கும்போது ஒட்டிக் கொள்ளும் துயரம் மனதை நிறைக்கின்றபோதும் இவரது எழுத்தில் உள்ள சுவாரசியம் மனதில் நெகிழ்வைக்கொண்டு வருகின்றது.

ஈழத்தேசியப் போராட்டக் காலத்துக் கதைகள் பல சிறுகதை களாகவும் நாவல்களாகவும் வெளிவந்துள்ளன, வந்துகொண் டும் இருக்கின்றன. ஆனால் இந்த நூலில் உள்ள கதைகள் அந்தக் காலத்தின் வாழ்வை எளிமையான வடிவில் சொல் கின்றது. ஈழத்தமிழர் அவநம்பிக்கையில் உழன்றதும், ஏமாந் ததும், நொந்துகெட்டதும், தப்பி ஓடியதுமென அந்தச் சம்ப வங்கள் வருவதுடன் புலம்பெயரத் தொடங்கும் பெரும் கூட் டம் பிற நாடுகளுக்குச் சென்று நிலைநிறுத்திக்கொள்வதற்கு முற்படும் துயரச்சம்பவங்களும் இணைந்து எமது வரலாற்றை உள்ளபடி சொல்கின்றது.

எமது போர்ப் பரணி பாடும் இலக்கியங்கள் பல வந்தாலும் கொட்டிக்கிடக்கும் அனுபவங்களும் அந்தக்கதைகளும் ஒரு நூலுக்குள் அடக்கிவிடமுடியாது. அதுபோலத்தான் இந்த நூலும் போராட்டம் ஆரம்பிக்கின்ற காலத்தில் தொடங்கி ஈழத்தமிழர் புலம்பெயரும் கதைகளைத் தாங்கி நிறைவு பெறுகின்றது. இளைஞர்களின் அரசியல் எழுச்சியும் ஆயுதப் போராட்ட தொடக்கமும் அதன் வளர்ச்சியுமென நகர்ந்து, சாதிய பிடிப்பும் பின்னர் அது எவ்வாறு ஆயுதப் போராட் டத்தில் மழுங்கியது என்றும் நன்றாகவே பதிவு செய்கின்றது. யுத்தத்துக்குப் பயந்து மேலைத்தேச நாடுகளில் தஞ்சமடை யும் வாழ்வும் அதன் பயணமும் சொல்லும் துயர் நிறைந்த கதைகளை வாசிக்கும்போது அப்படியெல்லாம் துன்பப்பட்ட வர்கள் இன்று வாழும் வாழ்வை நினைத்துப்பார்ப்பதையும் தவிர்க்க முடியவில்லை.

நான் என்று வரும் கதாநாயகனின் உரையாடல்கள் இவரது மொழி போலத்தான் என் மனதில் உருவகப்படுத்தியது. ஆசி ரியரை ஓரிரு தடவைகள் சந்தித்ததும் சிலதடவைகள் அலை பேசியில் உரையாடியதும் அவரை நினைவுபடுத்துவதற்கு காரணமாக இருக்கலாம். அமைதியாக இருந்து ஆற்றல் படைக்கும் மனிதர் இவர். காலத்துக்குக் காலம் சில சஞ்சி கைகளில் ஆசிரியராக இருந்தாலும் கனடாவில் 'காலம்' சஞ் சிகையைத் தொடர்ந்து வெளிக்கொணரும் அசாத்தியச் சாத னைக்காரன்.

இவரது அருமையான மொழிநடைதான் புத்தகம் முழுவதும் என் கையைப்பிடித்துக் கூட்டிச்சென்றது. குறிப்பிட்டுச் சொல் லும் இடங்கள் ஏராளம் உள்ளன. எதைச் சொல்வது எதை விடுவது, நீங்கள் வாசித்துப்பாருங்கள் அறிந்துகொள்ளும் பல விடையங்கள் உள்ளன. இதில் உங்கள் கதைகளும் இருக்கலாம்.



subram.suresh@thaiveedu.com



# மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி

# 'மலைக்குயில்' தந்த மாத்தளை அல் அஸூமத்

**- மல்லியப்புசந்தி திலகர் -**

**1960**-களில் மலையகக் கவிதை இலக்கியத்துக்குள் கால்பதித்தவர்கள், எழுதத் தொடங்கியவர்கள் இன்றும் எழுதிக்கொண்டிருக்கிறார்கள். இவர்கள் தொடர்ந்தும் மரபுக் கவிதைகள் எழுதி வந்தமையால் 1970-களின் பிற்பகுதியில் மலையகத்தில் புதுக்கவிதையின் வரவு தொடங்கிய பின்னரு மாக அவர்களது நூல்கள் வெளிவந்துள்ளன.

எனவே அறுபதுகளில் எழுதிய கவிஞர்களின் கவிதைகளை 1980-களுக்குப் பின் வெளிவந்த நூல்களில் இருந்தும் எடுத்துக்காட்ட முடிகிறது. தவிரவும் அக்காலத்தில் மரபுக்கவிதை எழுதியவர்களின் பட்டியல் ஒன்றை தர முயன்றிருக்கும் கவி



ஞர் அஷ்ரப் சிஹாப்தீன் எழுதியுள்ள 'மறக்க முடியாத மரபுக் கவிதைகள்' எனும் (தீர்க்கவர்ணம், பக். 190, 2009) பத்தி ஒன்றில் பல மலையகக் கவிஞர்களின் பெயர்கள் இடம்பெற்றிருப்பதனைக் காணலாம். அவர்களுள் மரபுக்கவிதையை முறைப்படி கற்றவரான மலையகச் சிறுகதைத்துறையில் புகழ்பெற்ற மாத்தளை மண்ணின் மைந்தன் அல் அஸூமத் எழுதி வெளியிட்டுள்ள 'மலைக்குயில்' (கல்ஹின்னை தமிழ் மன்றம் வெளியீடு, 1987) கவிதைத் தொகுதி மிக முக்கியமானது. 'புலராப்பொழுதுகள்' எனும் காவியத்தையும் தந்துள்ளார். 'பூபாளம்' எனும் கவிதைச் சஞ்சிகையையும் நடத்தியுள்ளார். 'பௌர்ணமி' எனும் சஞ்சிகையின் ஆசிரியராகவும் செயற்பட்டுள்ளார்.

இவர் கவிதைத் தொகுதிகளை அதிகளவு வெளியிடாதபோதும் பல கவியரங்கங்களில், குறிப்பாக வானொலி கவியரங்கங்களில் பங்குபற்றி கவிபாடிய சிறப்புக்குரியவர். அவற்றைத் தொகுத்து 'குரல் வழிக்கவிதைகள்' (2009) எனும் தலைப்பில் நூலொன்றினையும் வெளியிட்டுள்ளார்.

'கவிதை புனைதல் அவருக்கு கைவந்த கலை. மரபுக் கவிதை, புதுக் கவிதை, ஆகிய இரண்டையுமே நேசிப்பவர். மரபுக்கவிதைக்கான இலக்கண விதிகளை கைவிரல்களின் நுனிகளில் வைத்திருக்கும் அதே வேளையில், புதுக்கவிதைக்கும் சிறந்த மதிப்பளித்து, அத்துறையை வளர்ப்பதற்கும் அயராதுழைப்பவர் என அல் அஸூமத் குறித்து எழுதுகிறார் கல்ஹின்னை தமிழ் மன்ற செயலாளர் எஸ்.எம்.- ஹனீபா.

இவரது 'மலைக்குயில்' வெளிவந்த காலம் மரபுக்விதைநிலை நின்று புதுக்கவிதைத் துறைக்குள் மலையகக் கவிதை இலக்கியச் செல்நெறி புகுந்த காலம் எனக்கொள்ளலாம். அரு.- சிவானந்தனின் 'வண்ணச்சிறகு', (ஆகஸ்ட் 1986 மலையரசி - சென்னை) சு. முரளிதரனின் 'தியாகயந்திரங்கள்' (1986 - மலையகம் வெளியீட்டகம், கண்டி) போன்றன வெளிவந்த காலப்பகுதியிலேயே (ஆகஸ்ட் 1987 தமிழ் மன்றம் - கல்ஹின்னை) மலைக்குயில் வெளிந்துள்ளது.

ஒரு வருடத்துக்கு முன்னதாக வெளிவந்த அந்த இரண்டு நூல்களும் முற்றுமுழுதாகப் புதுக்கவிதை வடிவங்களைத்

தாங்கிவர 'மலைக்குயில்' மரபுக்கவிதைகளையும் புதுக்கவிதைகளையும் கொண்ட தொகுப்பாக வெளிவந்துள்ளது. கூடவே கங்காணி காட்டப்பன், சின்னாச்சி ஆகிய இரண்டு கதாபாத்திரங்களுக்கு இடையிலான உரையாடல் ஒன்றினை கவிதை நடையில் தரும் சிறப்பும் இந்த நூலுக்கு உண்டு.

'போறினுக்குப் போறானாம்!' எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள அத்தகைய கவிதை உரையாடலின் ஒரு பகுதி இவ்வாறு அமைகிறது.




**காட்டப்பன்:**

*அடியேய் சின்னாச்சீ! அழகப்பன் எங்கேடீ?*

**சின்னாச்சி:**

*குடிச்சா மூலயில குந்திக்கிட்டு கிடங்களேன் பா!*
*எந்தநாளும் போராட்டம் இதுவாவே போயிறிச்சே!*

என ஆரம்பித்து, ஈறாக அழகப்பன் எனும் தன்மகன் வந்து சொன்ன சேதி கேட்டு இடம்பெறும் உரையாடலை இவ்வாறு எழுதுகிறார்.

**அழகப்பன்:**

*அஞ்சு நாள்ல போறதுக்கு ஆயத்தமா வான்னாங்கப்பா!*
*பஞ்சப்படி எல்லாஞ்சேத்துப் பத்தாயிரம் சம்பளமாம்.*

(கந்தப்பா நிதானமடைகிறார். பெருமை முகத்தில் படர்கிறது. பெருமையுடன் செருமிவிட்டுக் கந்தனிடம்:)

**காட்டப்பன்:**

*பார்த்தியாடா, கந்தப்பா! பத்தாயிரம் சம்பளமாம்!*
*சோத்துமாட்டுச் சோம்பேறீங்க சொன்னாக்கா நம்புவாங்களா?*
*ஏம்புள்ள ஏம்புள்ளதான்! எவனவுட கொசஞ்சவண்டா?*
*ஆம்புள்ள பொறப்பெடுத்தா அச்சாரஞ் சம்பாத்தியம் !*
*தோட்டத்ல பத்துவருசம் சுப்புரண்டன் வேல்னனாலும்*
*ஊட்டம் இருக்குமாடா? உருப்புட்டு வருமாடா?*
*சின்னாச்சீ சோத்தப்போடு! செமத்தியா பசி இருக்கும்!*
*கண்ணேறும் பட்டிருக்கும் கையோட திட்டிச்சுத்து!*

உரைநடை பாணியில் அமைந்த இந்தக் கவிதை மலையகக் கவிதை இலக்கியத்துக்கே உரிய நாட்டாரியல் வழக்கு வழி வந்த ஒரு மரபின் தொடர்ச்சி எனலாம். இப்போது கூட இசைநாடகமாக நடித்துக்காட்டத்தக்க ஒரு நாடகக் காட்சி போல இந்தக் கவிதை உரையாடல் இருப்பது சிறப்பாகும்.

'மலைக்குயில்' கவிதை நூலின் முதல் கவிதையாக அமைவது தொழிலாளி தோழா எனும் மரபுக்கவிதை. அதன் சில பகுதிகளைப்பார்க்கலாம்.

*தோட்ட மலையின் தோழா - நீ*
*தோளு யர்த்தி வாடா!*
*நாட்டைக் காக்கும் வீரா! - உனது*
*நாளை எண்ணி வாடா!*
*வீட்டை மாற்றி வந்தாய் - இந்தக்*
*காட்டை மாற்றி நொந்தாய்*
*கேட்டை எண்ண மாட்டாய் - இது*
*கீழ்மை அல்ல வாடா*

*போட்ட சட்டம் மீறி - நீயும்*
*போனதில்லை மாறி,*
*ஊட்டம், உயர்ச்சி அற்றாய் - மண்ணில்*
*உணர்விழந்து நின்றாய்!*
*கூட்டு கின்ற துன்பம் - இனிக்*
*குறைக்க வென்று கருதிப்*
*பூட்டப் பட்ட உன்றன் - மூளை*
*புலர வென்று வாடா!*

இவ்வாறு மரபுக் கவிதை உள்ளடங்கியுள்ள அதே தொகுப்பில் இரண்டாவது கவிதை புதுக் கவிதை வடிவத்திலும் கவிதைகள் உள்ளடங்கியுள்ளன.

'மலை' எனும் தலைப்பில் எழுதப்பட்டுள்ள கவிதை இவ்வாறு அமைகிறது.

*நடுநாட்டில் மட்டும்*
*என்*
*நலிவில்லா*
*இத்தனை மலைக்குவியல்கள்?*

*நித்திரை உழைப்பின்*
*கும்பகர்ணத்துவமா?*
*நிம்மதியை விற்றுப்பெற்ற*
*புதையற் கோபுரங்களா அவை?*

அன்றேல் -
உழைப்பாளிகள்
நிலப்பாயில் குப்புறக்கிடந்து,
செய்மதியாய் மாறிவிட்ட
சம்பளத்தை எண்ணித்
தேம்பியதால் உண்டான
விரக்திக் காற்று
விம்மிப் புடைத்து
அழியா வரம் பெற்று
நிலைகுத்தி நின்று விட்டனவா

நாட்டின்
முதுகெலும்புக் கணுக்களில்
கூன்கள் விழுந்து விட்டனவா?

இவரது ‘பிரஜாவுரிமைத்தூது’

காற்றே, காற்றே! கூற்றுவன வந்தால்
தோற்றிடுங் காற்றே! தேற்றிடும் முன்னர்
தோலெனப் போன தோட்டத் தானென்
வாலென வந்து வதங்கிய மனைக்குத்
தூதொன்று போகத் துணைவா காற்றே!
யாதென்று கேளாய்! ஆண்டுமுப் பதுவாய்ப்
பிரசா வுரிமைப் பிசாசத னாலே
அரசினர் தொழிலோ அதுபோன் றன்றோ
கிடைக்கா ததனாற் கீழாய்ப் போனேன்

அந்தோ காற்றே! ஆகாயக் காற்றே!
வெந்தேன் உள்ளம் வெறித்தேன் வெடித்தேன்!
பிள்ளைகள் அணைத்தப் பெரியன நினைத்தே
அல்லலில் வாடும் அகமுடை யாளைக்
காற்றே, நீபோய்க் காற்றாய்க் கண்டு
சாற்றுக இதனை சங்கடம் எனக்கேர்
‘எட்டாம் ஷரத்தின் இழிந்த பிரிவால்
தட்டப் பட்டது தங்கள் உரிமை’
என்றொரு கடதாசி எனக்காய்
இன்றுதான் வந்ததென் றியம்புக, காற்றே!

என சிறிமா-சாஸ்த்திரி ஒப்பந்தத்தின் எட்டாம் ஷரத்தின் உப பிரிவின் தாக்கத்தில் உருவான வரிகளை உரைநடைப் பாணியிலும் எழுதியுள்ளார்.

எங்கப்போற? எனும் தலைப்பில் அமைந்த கவிதை பேச்சு மொழியில் அமைந்திருப்பது இன்னுமொரு சிறப்பாகும்.

அடப்போடாப் பேப்பயலே!
அக்குறும்பு செய்யாதடா!
படப்போற பாட்டயெண்ணிப்
பக்குவமா நடந்துக்கடா!
அடுத்தவூட்டு அம்மாசி
ஆறுமாசஞ் செறயிலயே
படுத்துப்புட்டு வந்தானே,
பார்த்துக்கூட அறிவில்லியா?

தாயகம் திரும்புவதாக தமிழகம் சென்ற மலையகத் தமிழரின் வாழ்வு குறித்து ‘மலையகமும் மறுவாழ்வும்’ எனும் தலைப்பில் அண்மைய ஆண்டுகளில் வழக்கறிஞர் தமிழகன் தொகுத்துள்ளார். ஆனால் இன்றைக்கு 40 ஆண்டுகளுக்கு முன்னரே ‘புனர்வாழ்வு’ (பாரதத்தில் இருந்து வந்த கடிதம்) எனும் தலைப்பில் தாயகம் திரும்புவதாக தமிழகம் சென்ற மலையகத் தமிழரின் வாழ்வு குறித்து கவிதை ஒன்றை எழுதியுள்ளார்.

மாவலி கங்கை
எம் கண்களில் தொடங்குவதாக
நீ அடிக்கடி பாடுவாய்

நான் கூட நினைத்திருந்தேன்
எனது சோகாந்த இதிகாசத்தின்
கடைசி அங்கந்தான்
என் பிரியாவிடை என்று
இங்க வந்த பிறகுதான் தெரிகிறது
அந்த கடைசி அங்கம்
முதற்காண்டத்தின்
முடிவு மட்டுமே என்று
பாவங்களை புனிதப்படுத்தியே
காய்ந்துபோன
பாரதத்தின் ஆறுகள்
என்னைக் கண்டதும்
துள்ளிப்பெருகி ஓடுகின்றன!
இரண்டாவது காண்டம்
இங்கே தொடங்கியதடா!

இந்தக் கவிதையின் ஊடே அன்று அல் அஸுமத் வைத்த விமர்சனம் இன்று தமிழகனின் தொகுப்பிலும் வெளிப்பட்டு நிற்கும் யதார்த்தமாகும்.

‘மலைக்குயில்’ எனும் உருவக நெடுங்கவிதையை மகாகவி பாரதியின் குயில்பாட்டினை ஒத்ததாகத் தர முயன்று இருப்பது சிறப்பாகும்.

‘ஆவிப்பெண்’ எனும் தலைப்பில் அவர் எழுதியுள்ள அந்த நெடுங்கவிதை இவ்வாறு தொடங்குகிறது

வேதாந்தமாக விரித்துப் பொருளுரைக்க
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?
யாதானுஞ் சற்றே இடமிருந்தாற் கூறீரோ?
யாதானுஞ் சற்றே அடடா! குயிற்பாட்டை
என்னென் றழகா யெழுதிவைத்தான் பாரதியும்!
குன்னல் மொழி கூட்டிக் காதற் கருபு கட்டி
நீலக் குயிலொன்றும் நின்ற மனமூன்றும்
வாளை யெடுத்தெறியும் வீரக் கவியொன்றும்
மாய நிழற்கூட்டி மாடுங் குரங்கென்றும்
ஆயந் தமிழினத்தி னாயஜர மாயிரத்து
நேயர் குழப்பலவும் நின்ற குயிற் பாட்டில்...

இவ்வாறு மரபுக்விதை, புதுக்கவிதை, வசனக்கவிதை, வாய்மொழிக்கவிதை என அத்தனையும் ஒரு தொகுப்பில் வரும் ஒரு கவிதை நூலாக மலைக்குயில் மலையகக் கவிதை வரலாற்றில் ஒரு நிலைமாற்றுக் காலகட்டத்தைப் பதிவு செய்வதாக அமைகிறது. இந்த காலத்தின் பின்னர் மலையகத்தில் ‘புதுக்கவிதை’யின் வரவு அதிகமாயிற்று.

(தொடரும்)



thilagar@thaiveedu.com

# தமிழ்வலை - 90


‘தாய்வீடு’ சமூகத்துள் தாய்மொழியின் சொல்வளத்தை வலியுறுத்தும் நோக்குடன் முன்வைக்கப்படும் ‘தமிழ்வலை’யை முற்றிலும் சரிவர நிரப்பி அனுப்புவோருள் தேர்ந்தெடுக்கப்படும் ஒருவருக்கு தமிழ் நூல்களும் சஞ்சிகைகளும் பரிசாக வழங்கப்படும்.

**பெயர்:**

**முகவரி:**

**தொலைபேசி எண்:**

**மின்னஞ்சல்வரி:**



## தமிழ்வலை-90 வினா

**இடமிருந்து வலம்**

1 பேர்போன தமிழ் நடிகர் (3-4)
5 செவி
6 களவு
7 வழிக்கட்டணம்
8 கோவை
9 ஒரு பிராணி
11 குடிவகை
12 ஒரு நிறம்
14 புதல்வன்
16 படகு

**மேலிருந்து கீழ்**

1 “உன்னைப்போல் ஒருவன்” ஆசிரியர்
2 பொட்டு
3 சேறு
4 வீம்பு
7 அபாயம்
9 மேழியர்கள்
10 கூட்ட நிகழ்வு
11 அவை
13 பூமி
15 மாதரின் ஆடைவகை

விடைகளை அனுப்பவேண்டிய முகவரி
மினன்னஞ்சல் முகவரி:
**thamilvalai@thaiveedu.com**
தொலைநகல்: **416 849 0594**

**Thaiveedu**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

## தமிழ்வலை-89க்கான விடைகள்

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | ■ | ■ | ■ | 1 தொ | ■ | ■ | ■ | 2 சி | 3 ப |
| ■ | 4 அ | ப் | 5 து | ல் | ஹ | 6 மீ | ட் | ■ | னி |
| ■ | ஞ் | ■ | 7 வி | லை | ■ | ளு | ■ | 8 சா | வி |
| ■ | சா | ■ | ■ | ■ | ■ | ■ | 9 சீ | ■ | ழு |
| 10 மா | லை | தீ | வு | ■ | 11 வ | ந் | த | ன | ம் |
| ம் | ■ | ■ | ■ | 12 க | ■ | ■ | க் | ■ | ப |
| 13 ப | ண் | டா | ர | நா | ய | க் | கா | ■ | னை |
| ழ | ■ | ■ | ■ | சு | ■ | ■ | தி | ■ | வ |
| ம் | ■ | 14 நா | ன் | ■ | 15 ஓ | ■ | ■ | ■ | ன |
| ■ | 16 பா | ரை | ■ | 17 ப | டை | க் | க | ல | ம் |

## தமிழ்வலை-89 பெறுபேறுகள்

### முன்னணிப் போட்டியாளர்

பரமேல்வரி நடராசா, ஸ்கார்பரோ.
எல்.கே. புவிதாஸ், ரொறன்ரோ.
த.செ. நடராசா, ரொறன்ரோ.
நவரட்ணம் குகதாசன், மார்க்கம்.
அண்ட்ரூ ஜூட். நோத்யோர்க்

### பரிசுபெறும் போட்டியாளர்

## வசந்தி சிவகுமார்

**ஸ்கார்பரோ**

thamilvalai@thaiveedu.com

தமிழ்வலை போட்டிக்கான விடையை இம்மாதம் 23-ம் தேதிக்கு முன்னர் அஞ்சல் அல்லது மின்னஞ்சல் அல்லது தொலைநகல் வாயிலாக அனுப்பிவைக்கவும்.
அதற்கு தமிழ்வலையைப் பிரதிசெய்து அல்லது படப்பிரதியெடுத்து அல்லது கதிர்ப்பிரதியெடுத்து பயன்படுத்தவும்.
பெறுபேறுகள் நடுவர்களின் முடிபுக்கமைய அடுத்த மாத தாய்வீட்டில் வெளிவரும்.






# வரலாற்றின் குற்றக் கிடங்கு

**- கருணாகரன்**

வரலாற்று நிகழ்வுகளைச் சாராம்சப்படுத்தி எழுதப்படும் புனைவுகளுக்கும் எடுக்கப்படும் சினிமாக்களுக்கும் எப்போதும் ஒரு சிறப்புக் கவனம் இருப்பதுண்டு. அந்த நிகழ்வைப் பற்றிய மதிப்பீட்டை குறித்த வெளிப்பாடு எப்படிக் கொள்கி




றது? அதன் வரலாற்றுப் பெறுமானத்தை எப்படி அது மதிப்பீடு செய்கிறது? எவ்விதமாக நோக்குகிறது? போன்றவை இந்தக் கவனத்தை உண்டாக்குகின்றன. இதில்தான் கூரிய விமர்சனமும் எழுவதுண்டு. இதைப்போலவே வரலாற்று மனிதர்களைப் பாத்திரங்களாக்கிப் புனைவை உருவாக்கும்போதும் அந்தப் பாத்திரங்களின் மீது தனிக் கவனமும் விமர்சனமும் உண்டாகிறது. இந்த வகையில் அண்மையில் ஷோபா சக்தியினால் எழுதப்பட்ட ஆறு கதைகள் விவாதிக்கப்பட வேண்டியவையாக உள்ளன. இவை தனித்தனியாக வெவ்வேறு இதழ்களில் முதலில் வெளிவந்து இப்பொழுது 'கருங்குயில்' என்ற பேரில் தனித் தொகுப்பாக்கப்பட்டுள்ளன. இந்த ஆறு கதைகளில் முதல் மூன்று கதைகள் வரலாற்றுப் பாத்திரங்களையும் மீதி மூன்று கதைகள் வரலாற்று நிகழ்ச்சிகளையும் ஆதாரமாகக் கொண்டுள்ளன.

வரலாற்றுப் பாத்திரங்களைப் புனைவில் எடுத்தாளும்போது உண்டாகும் சவால்கள் பல. பாத்திரத்தின் உண்மைத் தன்மை அல்லது மெய்நிலை; அதன் உளநிலையும் உருவமும்; அது இயங்கும் காலமும் சூழலும்; அது கொண்டிருக்கும் அரசியல், பண்பாட்டு வெளிகள்; இதையெல்லாம் வெற்றி கொள்வதற்கு அவற்றைப் பற்றி உருவாக்கப்படும் சித்திரம் அவசியமானதாக, சிறப்பானதாக இருக்க வேண்டும். அந்தச் சித்திரத்தில் சிதைவோ போதாமையோ நிகழும்போது புனைவு எதிர்நிலைக்குள்ளாகிவிடும் அபாயமுண்டு. மட்டுமல்ல, புனைவாளர் மீதான வரலாற்றுக் கண்டனங்களும் உருவாகிவிடும்.

இங்கே ஷோபாசக்தி தனக்குள்ள முன்னனுபவத்தின் வழியாக அல்லது வரலாற்றுப் பாத்திரங்களையும் வரலாற்றுச் சம்பவங்களையும் புனைவாக்கும் பரிச்சயத்தின் வழியாக இந்தக் கதைகளை எழுதியிருக்கிறார். முதற்கதை மெய்யெழுத்து. விடுதலைப் புலிகள் இயக்கத்தில் உண்ணா விரதமிருந்து உயிர்நீத்த திலீபனைப் பற்றிய கதை மெய்யெழுத்து. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் கற்கைக்காக புலிகளால் வழங்கப்பட்டிருந்த திலீபனின் உடலை படையினர் கைப்பற்றிவிடக்கூடாது என வன்னிக்குக் கொண்டு சென்ற புலிகள், இறுதிப் போர் வரை அந்த உடலுடன் பயணித்ததை - பட்டபாடுகளைச் சொல்கிறது. இதில் திலீபனைப் பற்றிய பாடசாலைப் பருவச் சித்திரம் மட்டுமே அழுத்தமாக வரையப்படுகிறது. திலீபன் உண்ணாவிரதமிருந்த காட்சிகள் சுருக்கமாக விபரிக்கப்படுகின்றன. பின்னர் கதையைக் கொண்டு செல்வது புலிகளின் நிலைப்பாடே. ஒரு லட்சியவாத நிலைப்பாடு பலருடைய வாழ்க்கையை எப்

படியெல்லாம் மாற்றியமைத்து விடுகிறது! எவ்வளவு அலைச்சல்களை அமைப்புக்கும் அதனோடு உள்ளும் புறமுமாக நிற்பவர்களுக்கும் உண்டாக்குகிறது என்பதை மிகத் திறமாகச் சொல்கிறார் ஷோபாசக்தி.

எவ்வளவுதான் முயன்றபோதும் இறுதியில் திலீபனின் உடலைப் பேணுவதற்காகத் தன்னுடைய குடும்பத்தைப் பிரிந்து போர் நெருக்கடிகளின் மத்தியில் வாழும் மருத்துவர் ராகுலனின் தியாகமும் பயனற்றுப் போய்விடுகிறது. திலீபனின் உடலும் காப்பற்ற முடியாமல் புதைக்கப்படுகிறது. இயக்கம் திலீ பனின் உடலைப் பேணுவதற்காகக் கடுமையான முயற்சிகளை எடுத்தாலும் திலீபனுடன் இறுதிவரை பயணிப்பது அவருடைய பள்ளித் தோழர் ராகுலனே. இறுதியிலும் இறுதியாகப் பிணைந்து நிற்பதும் ராகுலன் மட்டுமே. இது உணர்த்த முற்படுகின்ற ஆழமான விசயம் கவனத்திற்குரியது.

ஆனால், திலீபனின் பள்ளிப்பருவ நிகழ்ச்சிகளை விபரிக்கும் போது பார்த்திபன் என்று குறிப்பிடுவதற்குப் பதிலாக திலீபன் என்றும் குறிப்பிடுவது கதைக்குச் சற்று இடைஞ்சல். மற்றும்படி கதையைக் கட்டமைத்துள்ள வகையில் ஷோபாசக்தியின் புனைவுத்திறன் மெச்சத்தக்கது.

புலிகளின் போராட்ட வரலாறும் அதன் வீழ்ச்சியும் வீழ்ச்சியோடு எல்லாமே பயனற்றுத் துயரத்தில் மூழ்கிப் போனதும் கதையில் குறியீடாகியுள்ளன. ஒரு சிறுகதையில் பெரும் வரலாற்றுண்மையைக் காண்பித்திருக்கிறார் ஷோபாசக்தி. லட்சியவாதத்தின் தோல்வி அல்லது அது தோற்கடிக்கப்படும் போது உண்டாகும் பாதிப்புகளும் துயரமும் சாதாரணமானதல்ல. இங்கே முள்ளிவாய்க்காலில் கொல்லப்பட்ட மக்களையும் - இறுதிப்போர்க்களத்தின் நிலவரத்தையும் கூடப் போகிற போக்கில் பதிந்து விடுகிறார். அவை அரசின் யுத்தக்குற்றங்களாக நிரூபணமாகின்றன. ஆனால், இதற்கு மாறாகவே சிங்கள அரசும் அதன் படையினரும் உள்ளனர். அதற்கொரு குறியீடே திலீபனின் உடல் புதைக்கப்பட்டதைப் பற்றி இராணுவ அதிகாரி அறியும்போது உண்டாகும் வெற்றிக் களிப்பு. இதை 'திலீபனின் ஒவ்வொரு எலும்பும் அவர்களது வெற்றிக் கேடயத்தில் பொறிக்கப்படும் ஒவ்வொரு நட்சத்திரம்' என்று குறிப்பிடுவதன் வழியே காண்பிக்கப்படுகிறது. வரலாறுதான் எத்தனை விசித்திரமானது! கொடுமைகளைத் தன்னுள் புதைத்திருப்பது. அதைப் புனைவாளரே மிகச் சிறப்பாக உணர்ந்து வெளிப்படுத்துகிறார். நமக்கும் உணரவைக்கிறார்.

அடுத்த கதை கருங்குயில். இது இலங்கையில் சிலி நாட்டுத் தூதராக இருந்தபோது, அவருடைய வீட்டு மலக்குழியைச் சுத்தம் படுத்தும் தலித் பெண்ணை உலகப்புகழ் வாய்ந்த கவிஞர் பாப்லோ நெருடா பாலுறவுக்குப் பயன்படுத்தியதைப் பற்றியது. நெருடாவின் டயறிக் குறிப்பில் உள்ள இந்த ஆதாரத்தைக் கொண்டு ஏற்கனவே சிங்களத்திலும் ஒன்றிரண்டு கதைகள் எழுதப்பட்டுள்ளன. ஷோபாசக்தி கவனப்படுத்துவது சம்பங்கி என்ற தலித் பெண்ணையும் அவளுடைய வறிய குடும்பத்தின் நிலையையும் எப்படித் தனக்கு வாய்ப்பாக நெருடா பயன்படுத்திக் கொண்டார் என்பதையே. இதுதான் வரலாறு முழுவதும் உலகம் முழுவதும் நடந்து வரும் மகா கொடுமை.

புத்திக்குறைவுள்ள சம்பங்கியை நெருடா பாலுறவுக்குப் பயன்படுத்திக் கொள்ளும் காட்சிகள் பதைப்பை உண்டாக்



குகின்றன, கூடவே நம்முடைய நெஞ்சில் கோபத்தை மூட்டுகின்றன. பிறநாட்டுத் தூதர் என்ற பெரும் பதவியைத் தன்னுடைய பாலுறவுக் கொண்டாட்டங்களுக்குப் பயன்படுத்துகிறார் நெருடா. பதவி என்கின்ற அதிகாரம் இதற்கான வாய்ப்பை எளிதில் அவருக்கு அளித்து விடுகிறது. அவரைக் கேள்வி கேட்பதற்கு யாருமில்லை. அதனால் சம்பங்கிக்கோ அவருடைய குடும்பத்தினருக்கோ நீதி கிடைக்கவில்லை. நெருடா செய்யும் மிக மலிவான கனவான் தந்திரங்கள் நெருடாவின் மீதான மதிப்பை இறக்கம் செய்கின்றன. இன்று நெருடா உலகின் மிகப் புகழ்வாய்ந்த பெருங்கவிஞர். சந்தேகமேயில்லை. அவருடைய கவிதைகள் சிறந்தனதான். ழான் பால் சார்த்தரும் கேப்ரியல் கார்சியா மார்க்வெஸும் மதிப்பதைப்போல அவர் தன்னுடைய கவிதைகளின் வழியாக நோபல் பரிசுக்குத் தகுதியானவர்தான். அதைப்போல நெருடாவின் அரசியல் நிலைப்பாடும் தத்துவப் புரிதலும் பெருமைப்படுத்தப்படுவனவே.

ஆனால், அவருடைய பாலுறவுத் தொடர்புகளும் அவற்றை அவர் மேற்கொண்ட விதமும் மிகக் கீழ்மையானவை. நெருடா மட்டுமல்ல, அவருடைய தந்தையும் அப்படித்தான். பெண்களைக் கேளிக்கைப் பொருளாகவே வாழ்க்கை முழுவதும் அப்பனும் மகனும் பயன்படுத்தியுள்ளனர். இங்கேதான் ஆயிரமாயிரம் கேள்விகள் எழுகின்றன. முன்வைக்கப்படும் பிரபலக் காட்சிக்கும் பின்னுள்ள நிலவரத்துக்குமிடையிலான முரண்கள் எப்படியானவை என பெரும் பதவியும் புகழுமுடைய நெருடாவின் மறுபக்கத்தில் புத்திக் குறைவான தலித் பெண் சம்பங்கி. இங்கே நெருடாவையும் விட சம்பங்கியையே தன்னுடைய புனைவுச் சாத்தியங்களின் வழியாகப் பன்மடங்கு மேலுயர்த்தி விடுகிறார் ஷோபாசக்தி. நெருடாவைக் குற்றவாளிக் கூண்டில் அடைத்து விடுகிறார். நெருடாவின் வரலாற்றுப் புகழைச் சிதைத்து உண்மையைக் காட்டுகிறார். வரலாற்றை அதன் மெய்யான பொருளில் மறுவாசிப்

புக்குட்படுத்துவதன் வழியாக இதைச் சாத்தியப்படுத்துகிறார். எழுத்தாளரின் பணியே இதுதான். பொதுமைப்படுத்தப்பட்ட, மகிமைப்படுத்தப்பட்ட வரலாற்றை மறுவாசிப்புக்குட்படுத்து வது. அதன் மூலம் மறுபக்கத்தைக் காண்பிப்பது. அகலி-கையை மறுவாசிப்புக்குட்படுத்திய புதுமைப்பித்தன், கோவை ஞானி தொடக்கம் பலரால் தமிழில் ஏராளம் புனைவெழுத் துகள் வந்துள்ளன. ராமாயணத்தையும் மகாபாரதத்தையும் மகாபாரதப் பாத்திரங்களையும் பலரும் பல விதமாக வாசிப் புச் செய்துள்ளனர். அண்மையில் நட்சத்திரன் செவ்விந்தியன் ஆறுமுக நாவலரை மறுவாசிப்புச் செய்து எழுதிய 'கனகிபு-ராணம்' என்ற கதையும் இந்த வகையிலான ஒன்றே. வெளி யாரோ நம்மவரோ வெள்ளையரோ நம் நாட்டுக்காரரோ யாராக இருந்தாலும் வர்க்க நிலையிலும் ஆண் என்ற வகை யிலும் தமக்குக் கீழ்ப்பட்ட நிலையிலுள்ள பெண்களைத் தமக்கேற்ற விதமாகப் பயன்படுத்திக் கொள்வதில் ஒன்றா கவே உள்ளனர். இந்தக் குற்றத்தை குற்றமற்றது என மிகச் சுலபமாகச் செய்து விடுகின்றனர். வரலாறும் இப்படித்தான் குற்ற மறைப்புத் திரையோடு நகர்ந்து கொண்டிருக்கிறது. இங்கே இந்தக் குற்றமறைப்பு வரலாற்றை மறுவாசிப்புச் செய்வதன் மூலம் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியை - நியாயத்தை பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சியை ஷோபா சக்தி எடுத்துள்ளார். இந்த நீதியையும் நியாயத்தையும் சம் பங்கியோ கனகியோ தங்கள் வாழ்வில் பெற்றுக் கொள்ள முடியாது. வரலாற்றில்தான் அதைப் பெற்றுக் கொள்ள முடி யும். இந்தக் கதைகள் அதையே செய்துள்ளன.

ஷோபாசக்தியின் சம்பங்கியும் நட்சத்திரன் செவ்விந்தியனின் கனகியும் விளிம்பு நிலைச் சமூகங்களைச் சேர்ந்தவர்கள். ஆகவே அவர்களின் நிலை நின்று இந்த விசாரணையை இருவரும் செய்துள்ளனர். கனகி இறந்து விடுறாள். சம்பங்கி வேறொருவரைத் திருமணம் செய்து கொள்கிறாள். கதையில் சம்பங்கி மணம் செய்து கொள்ளும் காட்சி இல்லை என்றா லும் அவளுக்கு திருமணத்தை ஏற்பாடு செய்கின்றனர் பெற் றோர். அவளிடம் உள்ள மறதிக்குணம், அவளுடைய கடந்த கால நினைவுகளையிட்ட பாதிப்பிலிருந்து அவளை விடு வித்து விடும் என்று ஆறுதற்படுத்துகிறார் ஷோபாசக்தி. இது ஒரு பேராறுதலாக சம்பங்கியின் பெற்றோருக்குள்ளது. ஆனால், நமக்கோ அதுவே பெருந்துயராக மனதை அழுத்து கிறது. இந்த இடத்தில் நாம் ஆடிப் போய் விடுகிறோம். உண்மையில் மெய்யெழுத்தை விடவும் வலுவான இடத்தைக் கருங்குயிலே பெறுகிறது.

மூன்றாவது கதை ஆறாங்குழி. யக்கடயா என்று சொல்லப்ப டும் இரும்பு மனிதனைப் பற்றிய கதையாக இருந்தாலும் மெய்யாகவே இது ஜே.வி.பியின் தலைவரான ரோஹண விஜேவீரவின் கதையே. சரியாகச் சொன்னால், விஜேவீர கொல்லப்பட்ட விதத்தைப் பற்றிய கதை. அதையும் கடந்து அரச பயங்கரவாதத்தின் கதை. அதற்குமப்பால் தான் உள் ளூர நேசித்த இயக்கத்தின் தலைவரை தவிர்க்க முடியாமல் தானே கொல்கின்ற - அரச அதிகாரத்துக்குப் பலியான யக் கடயாவின் நிலையைப் பற்றிய கதை.

அந்தக் காலகட்டத்தின் பயங்கர நிலையை அப்படியே கதைக்குள் இறக்கி நம்முள்ளே பரவ விட்டுள்ளார் ஷோபா-சக்தி. அரச பயங்கரவாதத்தின் முகத்தை, அதன் உட்கு ணத்தை மிகத்துல்லியமாகப் படம்பிடித்திருக்கிறார். அதிகார வர்க்கத்துக்கு இனம், மதம், மொழியெல்லாம் ஒரு பொருட் டேயல்ல. அது தன்னுடைய இனத்தைச் சேர்ந்தவராக இருக் கலாம். ஏன், தன்னுடைய குடும்பத்தைச் சேர்ந்தவராகக்கூட இருக்கலாம். தனக்கு எதிரான எந்தச் சக்தியையும் அழித்தே தீரும். தந்தையைக் கொன்று மகன் ஆட்சியைக் கைப்பற் றிய வரலாறுகள் பலவுண்டு. அதிகார வெறி தலைக்குள் ஏறி விட்டால் அழிப்பதற்கு மிக மோசமான வழிகளையெல்லாம் தேர்ந்து கொள்ளும். இதில் மிகச் சாமானியராக உள்ளவர்க



ளும் சுலபமாகச் சிக்கி விடுகின்றனர். அரச பணியாளர், அரச படையாளர் என்ற அடையாளம் அவர்களை ஒடுக்குமு றையைச் செய்யும் கருவியாக்கிவிடுகிறது. அவர்களில் மனச் சாட்சியுடன் இருப்பவர்களும் இதிலிருந்து விலகிவிட முடி யாது போய்விடுகிறது. இதிலிருந்து விலகினால், இதை எதிர்த்தால் கொல்லப்படுவோம் என்ற உயிர்ப்பயம் அவர்க ளுடைய சுயாதீனத்தை அழித்து விடுகிறது. தான் விரும்பிய, இப்படித்தான் தான் உள்ளூர ஆதரித்த இயக்கத்தின் ஆதர் சத்துக்குரிய தலைவரைத் தானே கொல்ல வேண்டிய நிலை வந்து சேர்கிறது யக்கடயாவுக்கு. வரலாற்றின் விசித்திரம் இது. வரலாறே இப்படித்தான் பெரும்பாலும் உள்ளது. ஈழப் போராட்ட இயக்கங்களில் இருந்த பலருக்கு இதையொத்த அனுபவங்கள் பலவுண்டு. இன்னொன்று, அரச ஒடுக்குமுறை யானது வேறு இனமென்று வரும்போது இரண்டு மடங்காகி விடுகிறது. அதற்கு நாம் வாழும் சாட்சிகளல்லவா. உண்மை யில் இந்தத் தொகுப்பில் மிகச் சிறந்த கதை என்றால் ஆறாங்குழியே. இந்தக் கதையைப் பற்றித் தனியாகவே ஒரு கட்டுரையை எழுத வேண்டும். அந்தளவுக்குப் பல உள்ள டக்குகளையும் உள்விரிவுகளையும் கொண்ட கதை இது.

இலங்கையின் அரசியற் களமும் கடந்த ஐம்பது ஆண்டு கால வரலாறும் எப்படி இருந்தன என்பதை மேற்படி மூன்று கதைகளும் ஒரு குறுக்கு வெட்டில் காண்பிக்கின்றன.

**வரலாற்றுச் சம்பவங்களை ஆதாரமாகக் கொண்ட கதைகள்:**

யாழ்ப்பாணத்தின் மேற்கே உள்ள வட்டுக்கோட்டைப் பகுதியில் சாதி ஒடுக்குமுறையினால் பெண்ணொருவர் கொல்லப்பட்ட மெய்ச் சம்பவத்தை வைத்து எழுதப்பட்டிருக்கும் கதை வர்ணகலா. புலம்பெயர்ந்து பிரான்ஸ் நாட்டில் வாழுகின்ற வர்ணகலா நல்லதொரு தமிழ் ஆசிரியையாகப் புகழ் பெற்றிருக்கிறார். அங்கே இருக்கின்ற பாலப்பா குடும்பத்தினருடன் ஆசிரிய உறவின் வழியாக மிக நெருக்கமாகப் பழகுகிறார். ஆனாலும் ஒரு கட்டத்தில் அவருடைய சாதிப் பின்னணி தெரியவரும்போது, அவரை ஏற்றுக் கொள்ளப்பட முடியாது என்று நிராகரித்து விடுகிறார்கள் பாலப்பா குடும்பத்தினர். நிராகரிப்பும் இறுதியில் நிகழ்த்தப்படுகின்ற கொலையும்தான் கதையின் மையம். புலம்பெயர்ந்து சென்றாலும் சாதியொடுக்குமுறை நீங்கவில்லை. கையில் பணமிருந்தாலும் சாதியை வென்றுவிட முடியவில்லை. இந்த எதார்த்தின் மீது கட்டியெழுப்பப்பட்டுள்ள கதையில் திருப்பமாக அமைவது பாலப்பாவின் மகள் மிதுனா, வர்ணகலாவைத் தேடிச் செல்வதே. இந்தத் தேடல், வர்ணகலாவை உயிரோடு மீட்பதல்ல, அவருக்கான இடத்தை - அங்கீகாரத்தை அளிப்பதற்கான தேடல். இளைய தலைமுறையினரிடத்தில் மாற்றம் ஒன்று நிகழ்வதற்கான குறியாக இதைக் கொள்ளலாம். ஆனாலும் இது போன்ற நம்பிக்கை தரும் குறிகாட்டிகள் பல ஆண்டுகளுக்கு முன்னேயே பலராலும் சொல்லப்பட்டன. யதார்த்த நிலைமை என்னமோ பாலப்பா குடும்பத்தின் கைகளில்தான் சிக்கியுள்ளது.

இதில் அடுத்த கதை One Way தொகுப்பில் இன்னொரு சிறந்த கதை. ஏனைய கதைகளைப் போல குறித்த வரலாற்றுச் சம்பவங்கள் எதுவும் இந்தக் கதையில் நேரடியாக எடுத்தாளப்படவில்லை என்றாலும், நம்முடைய வாழ்க்கை நிகழும் வரலாற்றை முன்னிறுத்தி, அதிலிருந்து ஒரு துளியை எடுத்து எழுதப்பட்ட கதையாக இதை மாற்றியிருக்கிறார் ஷோபா-சக்தி. பிரான்ஸிலிருக்கும் பிள்ளைகள், ஊரில் (இலங்கையில்) இருக்கும் தாயாரை எப்படியாவது அழைத்து தம்முடன் வைத்திருக்க விரும்புகிறார்கள். அதற்கு அவர்களுக்கு வழியில்லை. தொழில் ரீதியான தொடர்பால் வந்த உறவை வைத்துக்கொண்டு ஒலிம்ப் என்ற வெள்ளையின மூதாட்டியின் மூலமாக தாயாரைப் பிரான்ஸ்க்கு அழைத்து விடுகிறார்கள். ஆனால், அந்த அழைப்பு ஒரு விருந்தாளிக்குரியது மட்டுமே. மூன்று மாதங்கள் என்ற விசாவுக்கான கால அட்டவணை முடியும்போது தாயார் இலங்கைக்குத் திரும்பிவிட வேண்டும். இங்கேதான் வருகிறது பிரச்சினை. அறத்துக்கும் மனித உறவுக்கும் இடையிலான மோதலை, சுயநலன் எப்படியெல்லாம் விளையாடும் என்பதை மிக நுட்பமாக வெளிப்படுத்துகிறது கதை. ஒலிம்ப் அம்மையாரை வரலாற்றுப் பாத்திரமாக்கி விடுகிறார் ஷோபாசக்தி. இதில் குற்றவுணர்ச்சிக்குள்ளாகும் மகனின் பாத்திரத்தின் மூலமாக நியாயம் செய்யப்படுகிறது.

வியப்பையும் சுவாரசியத்தையும் தருவது இறுதிக்கதையான பல்லிராஜா. சமகால அரசியலைப் பச்சையாகவே பேசுகின்ற கதை. சித்தசுவாதீனத்திற்குள்ளாகியிருக்கும் இலங்கை அரசும் புத்த பிக்குகளும் தொல்லியல் அடையாளங்கள் என்ற பேரில் தமிழ்ப்பகுதிகளில் புத்தரையும் பௌத்த விஹாரைகளையும் நிறுவி வருவதைக் குறியீடாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. சரியாகச் சொன்னால், இந்தக் கதையைப் படிக்கும்போது இலங்கை அரசும் புத்த பிக்குகளும் சித்தசுவாதீனமடைந்துள்ளன என்பது நிரூபணமாகியுள்ளது. இல்லையென்றால், நாடும் சனங்களும் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கும்போது காட்டிலும் மேட்டிலும் சிலைகளை வைப்பதற்காக அலைந்து திரிவார்களா? குருந்தூர்மலைப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் விஹாரை அமைப்பதை நேரடியாகவே கதை விவரிக்கிறது. அல்லது கதையைப் படிக்கும் போது இந்தக் காட்சிகள் விரிகின்றன. ஆனால், வெறும் பத்திரிகைச் செய்தியாக இல்லாமல் புனைவின் உச்சமாக மாற்றியிருக்கிறார் ஷோபாசக்தி.

சீவலி தேரர் என்ற பாத்திரத்தை உருவாக்கிய விதம் மிகச்சிறப்பு. யக்கடயா எப்படியோ, அதைப்போல இங்கே சீவலி தேரர். மட்டுமல்ல, பௌத்த மதத்தின் அடிப்படைகளை விரிவாக ஆராய்ந்து கதையில் இணைத்துள்ளார், கதைக்குச் சற்று மிகையோ என்ற விதமாகக்கூட. இந்த மாதிரிக் கிடைக்கின்ற அல்லது தேடிய தகவல்களை எஸ். ராமகிருஸ்ணனும் ஜெயமோகனும் கதைகளில் நிரப்புவதுண்டு. இது புனைவைச் சற்றுப் பலவீனமாக்கி, கட்டுரையாக்கிவிடும். ஆனால், இதற்காகத் தகவல்களையும் அடிப்படைகளையும் தேடிக் கண்டடைவதற்கான உழைப்புப் பெரியது என்பதை நாம் மனம்கொள்ள வேண்டும். இந்த உழைப்பு மதிக்கத்தக்கது. இந்தக் கதையில் இந்த உழைப்பைக் காணலாம். வாளை வாளால் வெல்வதைப்போல பௌத்தத்தின் அடிப்படைகளை வைத்தே பௌத்த மேலாதிக்க வடிவம் - பிக்குகளின் பௌத்த மேலாதிக்க அரசியல் உடைக்கப்படுகிறது.

குற்றமும் அதைக் குறித்த உரையாடல்களுமே கதைகளின் சாராம்சம். அனைத்துக் கதைகளிலும் இது வெவ்வேறு நிலைகளில் உள்ளோடியுள்ளது. எங்கும் ஏதோ வடிவில் குற்றம் நிகழ்ந்து விடுகிறது. அதற்கெதிரான முனைப்பும் தவிப்பும் இருந்தாலும் குற்றம் நிகழ்வதைத் தடுக்க முடியவில்லை. யக்கடயாவுக்கும் சரி, ராகுலனுக்கும் சரி, நெருடாவுக்கும் சம்பங்கியின் பெற்றோருக்கும் சரி, One Way-யில் வரும் தம்பிக்கும் சரி இது மீறமுடியாத விதியாக உள்ளது.

எல்லாக் கதைகளிலும் நம்முடைய காலம் பிழிந்து நமக்கே தரப்படுகிறது. நமக்கு மட்டுமல்ல, எதிர்வரும் தலைமுறைகளுக்குந்தான். கடந்த காலமும் நிகழ்காலமும் எப்படிச் சிதையில் வைக்கப்பட்டுள்ளன என்பதை இந்தக் கதைகள் சொல்கின்றன. எப்படியான கொடுங்காலத்தைக் கடந்து இந்தச் சனங்கள் வந்திருக்கிறார்கள் என்பதை நாளைய தலைமுறையினர் உணர்ந்து கொள்வதற்கும் இவை உதவும். இதற்குக் காரணம், ஷோபாசக்தியே வெளிப்படையாகச் சொல்வதைப் போல இந்தக் கதைகள் அனைத்தும் ஒரு வகையில் அரசியல் பிரதிகளாக இருப்பதேயாகும். என்பதால், இவை வரலாற்றுச் சான்றுகளாகவும் வரலாற்று ஆய்வுகளாகவும் வரலாற்று விமர்சனமாகவும் வரலாற்றுக் கேள்விகளாகவும் வரலாற்று முகமாகவும் உள்ளன.

karunagaran@thaiveedu.com






# மரத்துப் போன சொற்கள்

## - நெல்லை ஜெயசிங்

தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறிமுகமான எழுத்தாளர் தோழர் நாறும்பூநாதன் அவர்களின் பதினோராவது நூலாக வெளிவந்துள்ளது 'மரத்துப் போன சொற்கள்' எனும் சிறு கதை தொகுப்பு. தமிழ் நாடு முற்போக்கு எழுத்தாளர் கலை ஞர்கள் சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினராக உள்ள தோழர் நாறும்பூநாதன் அவர்கள் 'கனவில் உதிர்ந்த பூ', 'ஜமீலாவை எனக்கு அறிமுகப்படுத்தியவன்', 'வேணுவன மனிதர்கள்' உள்ளிட்ட பத்துக்கு மேற்பட்ட கதை கட்டுரை- களை எழுதியுள்ளார். இவரது சில நூல்கள் தென்தமிழகத் தில் பிரசித்தி பெற்ற நெல்லையில் சில தன்னாட்சி பெற்ற கல்லூரிகளிலும், பல்கலைக்கழகத்திலும் பாடமாக இடம் பெற்றுள்மை குறிப்பிடத்தக்கதாகும். 'திருநெல்வேலி - நீர் - நிலம் - மனிதர்கள்' என்ற இவரது நூல் தென்னிந்தியாவின் Oxford என வர்ணிக்கப்படும் திருநெல்வேலியின் வரலாற்றை உலகிற்கு பறைசாற்றிய முக்கியத்துவம் வாய்ந்த வரலாற்று பதிவாகும்.

நாம் அன்றாடம் சந்திக்கும் பல்வேறுபட்ட கதாபாத்திரங் களை அருகில் இருந்து கண்டும் பார்த்தும் இரசித்தும் எழு தப்பட்ட ஓர் உயிரோவியமாக 'மரத்துப் போன சொற்கள்' சிறு கதை தொகுப்பு அமைந்துள்ளது. சந்தியா பதிப்பகத் தால் மிக நேர்த்தியாக இந்நூல் வெளியிடப்பட்டுள்ளது. 100 பக்கங்களைக் கொண்ட இந்நூலில்... 'கையெழுத்து, கோமா வின் கணவன், மெல்லப் பசித்து இனி வாழும், மூச்சுக் காற்று, மொகைதீன் வாத்தியாரும் எலக்ரிக் குக்கரும், விரட் டப்பட்டவர்கள், ஜனனம், உடையவன், மரத்துப் போன சொற்கள், செருப்பு' என பத்து சிறுகதைகள் அடங்கி உள் ளன. பிரபல சிறுவர் சிறுகதை எழுத்தாளர் தோழர் உதயசங் கர் குறிப்பிட்டதைப் போன்று அனைத்து கதைகளும் மனித உறவுகளை உயிரோட்டத்துடன் பேசுகின்றன. கதைகளில் வரும் கதாபாத்திரங்கள் அன்றாடம் நாம் சந்திக்கின்ற, நம்மை கடந்து சென்ற, நம்மோடு உறவாடிய முகங்களாக தெரிகின்றன.

மத்தியதர வர்க்கத்தை சுற்றியே கதைகள் பயணிக்கின்றன. பெரும்பாலான கதைகளை வாசிக்கும் போது எழுத்தாளர் தானும் ஒரு கதாபாத்திரமாக மாறி அனுபவித்து எழுதியிருப் பதைக் காணலாம். அதன் காரணமாக நாமும் அக்கதாபாத் திரங்களுடன் இணைந்து பயணிப்பதைப் போன்றதொரு உணர்வு ஏற்படுகிறது. சமூகத்தின் மீது அதிக அக்கறையும் இடதுசாரி கொள்கைகள் மீது ஈடுபாடும் கொண்டிருப்பதன் வெளிப்பாடாக நூலாசிரியர் சமூக உணர்வுடன் கதைகளை வடிவமைத்துள்ளார். சில கதைகளை வாசிக்கும் போது அக் கதைகளில் வரும் உயிரோட்டமுள்ள கதாபாத்திரங்களை நேரில் பார்க்க மாட்டோமா என்ற ஓர் உணர்வு ஏற்படுகிறது. நூலாசிரியர் வாழ்ந்த, வாழ்கின்ற நெல்லை - பாளையங் கோட்டை சுற்றாடலில் கதைகளை நகர்த்திச் செல்வது நூலின் சிறப்பு அம்சமாகும். நெல்லை தமிழ் உரையாடலு டன், பேச்சு மொழியும் ஆங்காங்கே பரவி கதையோட்டத்தை நூலாசிரியர் சுவாரசியமாக கொண்டு செல்கிறார்.

நூலின் முதல் சிறுகதையான 'கையெழுத்து' முத்தாய்ப்பாக அமைந்துள்ளது. முத்து முத்தாக எழுதும் ஆங்கில மொழி ஆசிரியர் சங்கரநாராயணன் ஓய்வுபெற்ற பின்னர் ஓய்வூதியம் பெற வங்கிக்கு செல்கிறார். வயது மூப்பு காரணமாக அவ ரால் பணம் பெறும் படிவத்தில் சரியாக கையெழுத்து இட முடியவில்லை. இதுதான் கதை. வங்கியில் அவருக்கும் அவ ரது மாணவனுக்கும் இடையே நடக்கும் உரையாடல், தனது கையெழுத்தை சரியாக போட இயலாது போன நிலையை நினைத்து அவர் படும் வேதனை, கையெழுத்துக்குப்பதிலாக கை ரேகை பதிய வேண்டிய நிர்ப்பந்தத்தை நினைத்து ஆசி ரியரான அவர் மனம் கொள்ளும் துயரம் என அனைத்தை யும் நூலாசிரியர் தேர்ந்தெடுத்த வார்த்தைகளால் வடிவமைத் திருக்கிறார். அந்த காலகட்டத்தில் ஆங்கில ஆசிரியர் எனும் போது ஒரு கர்வம் இருக்கும். அதற்கான அனைத்து தகுதியும் உடைய சங்கரநாராயணன் ஆசிரியரின் மன வேதனை நம் நெஞ்சைத் தொடுவதாக இருக்கிறது. அவரின் மன உணர்வுகளை வெளிப்படுத்துவதில் நூலாசிரியர் வெற் றியடைந்தவராகவே தெரிகிறார்.

'கோமாவின் கணவன்' என்ற இரண்டாவது கதை அகால மர ணம் அடைந்த கணவனின் இறப்பை தைரியமாக எதிர் கொண்ட 'கோமா' என்ற பெண்மணியைப் பற்றியதாகும்.

கணவன் இறந்த பிறகு உலகமே இடிந்து விழுந்ததாக எண்ணி ஒப்பாரி வைக்கும் பெண்ணாக இல்லாமல் யதார்த்த மான நிலைமைகளை புரிந்து செயல்பட வேண்டியதை உணர்த்துவதாக கதை செல்கிறது. அடுத்து வரும் 'மெல்லப் பசித்து இனி வாழும்' கதை வறுமையில் வாடும் ஒரு கவிஞ னைப் பற்றியதாகும். முழு நேர இலக்கிய வாதிகள், கலை ஞர்கள் அனைவருமே வசதி படைத்தவர்கள் அல்ல என் பதை நூலாசிரியர் இக்கதை ஊடாக கோடிட்டு காட்டுகிறார். கலைஞன் ஒருவனின் பல்வேறுபட்ட பரிதவிப்புகளை நூலாசி ரியர் நயம்பட இக்கதை ஊடாக கூறி இருப்பதைக் காண லாம்.

எழுத்தாளர் தோழர் உதயசங்கர் நூல் அறிமுகத்தில் குறிப் பிடுவதைப் போன்று அடுத்து வரும் 'மூச்சுக் காற்று', 'மொகைதீன் வாத்தியாரும் எலக்ரிக் குக்கரும்' ஆகிய இரு சிறு கதைகளும் மிக முக்கியமானவை. அடுத்து என்ன நடக் கும், வந்த காரியம் நிறைவேறியதா என ஆவலைத் தூண் டும் வகையில் கதையை நகர்த்தி இருக்கிறார் கதாசிரியர்.

தஞ்சை ஆபிரகாம் பண்டிதர் எழுதிய 'கருணாமிர்த சாகரம்' எனும் நூலைத் தேடி புத்தக ஆர்வலரான சிவராமன் வீட் டிற்கு நூலாசிரியர் சென்று புத்தகம் பற்றி கேட்காமலேயே வெறுங்கையுடன் திரும்பி வந்த நிகழ்வை 'மூச்சுக் காற்று' என்ற சிறு கதை கூறுகிறது. புத்தகப் பிரியரான சிவராமன் பற்றி கதாசிரியர் சிலாகித்து கூறுவதை வாசிக்கும் போது தொழிற்சங்க தோழரும் ஆயிரக்கணக்கான நூல்களை வாங்கி குவித்த மறைந்த தோழர் பால்வண்ணத்தின் நினைவு கள் நெஞ்சைத் தொட்டுச் செல்கின்றன. சிவராமன் என்பவர் எந்தளவுக்கு புத்தகங்களை நேசித்தார் என்பதை கூறும் போது... அவர் ஒரு புத்தக பிசாசு என நூலாசிரியர் குறிப்பி டுகிறார். நூலாசிரியர் தேடி வந்த 'கருணாமிர்த சாகரத்தை' என்ற அரிய நூல் அங்கே வரிசையாக அடுக்கி வைக்கப் பட்டிருந்த நூல்கள் மத்தியில் இருந்தும், எடுக்க மனமின்றி திரும்பி விட்டதாக நூலாசிரியர் கதையை முடிக்கும் போது நாமும் மௌனியாகி விடுகிறோம்.

நூலில் ஐந்தாவதாக இடம் பெற்றுள்ள 'மொகைதீன் வாத்தி யாரும் எலக்ரிக் குக்கரும்' என்ற சிறுகதை மிகவும் அருமை யானதாகும். மொகைதீன் என்ற வாத்தியார் எலக்ரிக் குக்கர் ஒன்றை வாங்க ஆசைப்படுகிறார். தன்னிடம் போதிய பணம் இல்லாத நிலையில் சலுகை விலையில் மிலிட்டரி விற்பனை நிலையத்தில் இராணுவ வீரர்களுக்கு கிடைக்கும் என அறிகி றார். அதனை இராணுவத்தில் பணியாற்றிய தனது முன் னாள் மாணவன் வாயிலாக வாங்கிவிடலாம் என்ற ஆசையு டன் அம்மாணவனின் வீட்டை தேடிப் பிடித்து மாணவனிடம் தயங்கி தயங்கி கூறுவதே இந்த கதை. மாணவனின் வீட் டைத் தேடிப் போகும் விதம், மாணவனிடம் தனது தேவையை கூற அவர் படும் அவஸ்தை, சங்கோஜம் என்ப வற்றை நூலாசிரியர் மிக தத்ரூபமாக எழுதியிருப்பதை வாசிக்கும் போது அந்த ஏழை மொகைதீன் வாத்தியாரை நாமும் தேடிப் போய் உதவ வேண்டும் போல் தோன்றுகி றது. இந்த உணர்வே கதாசிரியனுக்கு கிடைக்கும் மிகப் பெரும் அங்கீகாரமாகும்.

இதன் பின்னர் வரும் மற்ற ஐந்து கதைகளும் ஒவ்வொரு வகையில் சிறப்பாக எழுதப்பட்டுள்ளன. இந்நூலின் கதைக-ளில் காணப்படும் சிறப்பு அம்சம் அனைத்து கதாபாத்திரங் களுடன் நாமும் எதோ ஒரு வகையில் இணைந்து செல் கின்ற உணர்வாகும். மிக எளிய நடையில் பேச்சு வழக்கில் கதை அனைத்தும் வடிவம் பெற்றுள்ளது. பண்டைய பேச்சு மொழி, நாம் இன்று பேசத் தயங்கும் சொற்பதங்கள் ஆகிய வற்றை நூலாசிரியர் மிகவும் நேர்த்தியாக கையாண்டிருப்ப தைக் காணலாம். கதையோட்டத்தில் இரண்டு கதாபாத்திரங் கள் உரையாடும் போது இவ்வாறான சொற்கள் சிதறிக் கிடப்பதை காணலாம். 'ஒக்காந்துக் கோங்க, நீ ஒழுங்கா ஓட் டிட்டுப் போலே மூதி, சும்மா இங்கயே குடியேம்ல, ஒரு எட்டு வந்து பார்த்துட்டுப் போய்யா, சோத்தைத் திருடுதாரு டோய், தின்னாச்சுல்ல, சீவம் போயிருச்சு, உன்கிட்ட தாம்ல கேக்கேன், திரிவானுங்க... மயிராண்டிக, கொத்து பசி வந்து ஆளை லாத்தியது, நூலை யாரோ சுட்டுவிட்டார்கள், இங் கேயே குடியேம்ல, இவனாப்பில என்ன' என ஏராளமான சொற்களை பொருத்தமான இடங்களில் பயன்படுத்தி பேச்சு வழக்கோடு கதைகளை கதாசிரியர் சுவாரஸ்யம் குறையாமல் நகர்த்திச் செல்லும் சிறப்பு அவருக்கே உரியதாகும்.

நூலாசிரியர் இந்நூலில் கதைமட்டும் கூறவில்லை நாம் தெரிந்து கொள்ள வேண்டிய பல வரலாற்று உண்மைகளை யும் அவர் பாணியில் கூறுவதென்றால் போகிற போக்கில் கூறி இருப்பதைக் காணலாம். 'மாஞ்சோலைப் போராட்டம், தாமிரபரணி படுகொலை, சொக்கலால் பீடி, தானா மூனா கட்டடம், ராஜஸ்தான் மெஸ், காளி மார்க்' என நாம் மறந்து விட்ட பல நினைவுகளையும் நம் முன்னே கொண்டு வந்து நிறுத்தி இருப்பதும் சிறப்பு அம்சமாகும்.

பெரும்பாலான எழுத்தாளர்கள் தன்னைப் பற்றி மட்டுமே முன்னிலைப் படுத்த முயல்வர். இந்நிலையில் இந்நூலாசிரி யரான தோழர் நாறும்பூநாதன் அவர்கள் கடந்த கால, சம கால எழுத்தாளர்களையும் அவர்களது நூல்களையும் தனது சிறு கதைகள் ஊடாக மக்களின் கவனத்திற்கு கொண்டு வந் துள்ள பெருந்தன்மையையும் நாம் பாராட்டியே ஆக வேண் டும். புகழ்பெற்ற எழுத்தாளர்களான பாலகுமாரன், ஜானகிரா-மன், சுந்தர ராமசாமி, தஞ்சை ஆபிரகாம் பண்டிதர், தோப் பில் முஹம்மது மீரான், வல்லிக்கண்ணன், இந்துமதி, வண்-ணநிலவன், தி.க.சி., வண்ணதாசன் என பலரையும் வாய்ப்பு கிடைக்கும் இடங்களில் கதையின் போக்கு பாதிக்கப்படா மல் பயன்படுத்தி உள்ளார். அதே போன்று 'மோக முள், கம்பா நதி, பொன்னியின் செல்வன், தரையில் இயங்கும் விமானங்கள், கலைக்க முடியாத ஒப்பனைகள்' என பல் வேறு நூல்களையும் கோடிட்டு காட்டியுள்ளார்.

இவ்வாண்டு ஆரம்பத்தில் வெளிவந்த பல நூல்களில் தோழர் இரா. நாறும்பூநாதன் அவர்களின் 'மரத்துப் போன சொற்கள்' எனும் சிறுகதை தொகுப்பு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக கருதப்படுகிறது. மண்வாசனை கலந்த இந் நூலை வாய்ப்பு உள்ளவர்கள் வாசித்து மகிழ வேண்டும்.



jeyasingh@thaiveedu.com




# கோசலை

- ரதன்

தமிழ்ப்பிரபா எழுதிய கோசலை நாவல் அண்மைக் காலங்களில் வெளிவந்த நாவல்களில் குறிப்பிடத்தக்க ஒன்று. இவர் ஒரு நாவலாசிரியர், திரைக்கதையாசிரியர் மற்றும் வசன கர்த்தா. இந்நாவலும் ஒரு திரைப்படமாக மாற்றம் பெறக்கூ




டிய நாவல். அவ்வகையில் இந்நாவலைப் பற்றிய ஒரு சிறு குறிப்பே. நாவலைப் பற்றிய முழுமையான ஆய்வல்ல. அதன் அழகியலைப் பற்றியதுமல்ல. நாவல் குறிப்பிட்டுள்ள கருத்தியல் பற்றிய சிறு குறிப்பு.

கோசலை என்ற மூன்றடி உரமுள்ள கூனான பெண்ணைப் பற்றியது இந்நாவல். நாவலில் கோசலையுடன் அவளது காதலன், கணவன் ஜோதி, தந்தை அலங்காரவேலன், தம்பி கணேசன், சாம்பவமூர்த்தி ஆகியோரும் பயணிக்கின்றனர். இவர்களுடன் சிந்தாதிரிப்பேட்டை, நூலகம் ஆகியவையும் நாவலின் முக்கிய பாத்திரங்களாகவுள்ளன.

நாவல் நூலகத்தின் முக்கியத்துவத்தை வலியுறுத்துகின்றது. நூலகம் ஒரு சமூக மாற்றத்துக்கான முக்கிய தளங்களில் ஒன்று. உலகின் பல நாடுகளில் நூலகங்கள் எரிக்கப்பட்டமைக்கான காரணங்களில் முக்கியமானது, புரட்சி மற்றும் சமூக மாற்றத் தளமாக நூலகம் இயங்கியமையேயாகும். பாடசாலைக் கல்விக்கப்பால் நூலகமே சமூக இயங்கியல் அறிவு வளர்ச்சியை ஏற்படுத்துகின்றது. இன்று அது கூகிள் என்ற இணையத்துக்குள் முடக்கப்படுவது ஆபத்தானது. மேற்கத்திய நாடுகளில் சமூக நிலையங்கள் (Community Centre) ஒவ்வொரு கிராமத்திலும், நகரங்களின் பகுதிகளில் அமைக்கப்படுகின்றன. பெரும்பாலும் இவற்றுடன் நூலகங்களும் அமைந்திருக்கும். இளைஞர்கள், மாணவர்கள் பாடசாலைக்கு அப்பால் இங்கேயே அதிக நேரம் செலவிடுவார்கள். விளையாட்டுத் தளங்களில் விளையாடுவார்கள். கூடியிருப்பார்கள். நூலகத்தின் முக்கியத்துவத்தை தமிழ்ப்பிரபா இங்கு வலியுறுத்துகின்றார். ஆறு பேரிலிருந்து மேலும் பலரை நூலகத்துக்கு வரவழைக்க கோசலை எடுக்கும் முயற்சிகள் யதார்த்தமானவை.

கோசலையின் தந்தை அலங்காரவேலன் ஒரு இடதுசாரி. தொழிற்சங்களுடன் இணைந்து பணிபுரிபவர். அவர் இங்கு ஒரு முரணான பாத்திரமாக படைக்கப்பட்டுள்ளார். கோசலை ஜோதியை காதலித்த போது அலங்காரவேலன் எதிர்க்கின்றார். இதற்கான காரணம் சாதி என நாவலின் பின் பகுதியில் நாவலாசிரியர் குறிப்பிடுகின்றார். பொது வாழ்வில் ஒரு முக மூடியும், தனிப்பட்ட வாழ்வில் ஒரு முகமூடியுமாக உள்ளார் என்ற குற்றச்சாட்டை முன் வைக்கும் நாவலாசிரியர், பின்னர் கோசலை திருமணம் முடித்த பின்னர் குற்றவுணர்ச்சிக்குள்ளாகின்றார். சாதியின் உளவியலை கட்சி ஏன் கற்றுத்தரவில்லை என்ற கேள்வியையும் நாவலாசிரியர் அலங்காரவேலனுக்கூடாக முன்வைக்கின்றார். நாவலில் இரு பக்கங்களில் அலங்காரவேலன் விமர்சிக்கப்படுகின்றார். 'கட்சிப் பணியில் தனக்கு கிடைத்திராத மரியாதையைச் சாதி தக்கவைக்கும்

என்ற ஏக்கத்தினால் இம்மாற்றம் உருப்பெற்றதா', போன்ற கருத்துக்கள் நாவலில் முன்வைக்கப்பட்டுள்ளன. அலங்கார வேலன் கற்ற இடதுசாரி அரசியல், சாதியைப் புரிந்து கொள்ள உதவவில்லை என்ற கருத்தையும் நாவலாசிரியர் கூறத் தவறவில்லை.

கோசலை தந்தையுடன் இருக்கும் காலங்களில் குடும்பத்துக்கு உழைக்கும் பெண்ணாகவே சித்தரிக்கப்படுகின்றார். இடதுசாரித் தந்தை ஏன் கோசலையை ஒரு முன்மாதிரியான பெண்ணாக மாற்றவில்லை என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. சிங்காரவேலனினூடாக இடதுசாரிகள் குடும்பத்தில் பிரதிநிதித்துவம் அற்றவர்கள். அவர்கள் தங்களை ஒரு சமூக பிரதிநிதியாகவே வெளிப்படுத்துகின்றார்கள் என்பதை நாவல் பதிவு செய்கின்றது.

சிங்காரவேலனை விமர்சிப்பதில் நாவலாசிரியர் கவனஞ்செலுத்தியுள்ளார். ஆனால் பாரம்பரிய சமூக ஒடுக்கு முறைகளை வெளிப்படுத்துவதற்கு அவர் தவறிவிடுகின்றார்.

சாம்பவமூர்த்தி வீட்டிற்கு வேலைக்குச் செல்லும் கோசலையை, அம்பேத்கார் நூல்களை வாசிக்க வைத்து, ஒரு சமூக மாற்றத்துக்கான பெண்மணியாக மாற்றுகின்றார் நாவலாசிரியர்.

அம்பேத்காரின் முக்கியத்துவத்தையும், அவர் தொடர்ந்து வாசிக்கப்படவேண்டும், உரையாடப்பட வேண்டும் எனவும் தமிழ்ப்பிரபா வலியுறுத்துவது பாராட்டத்தக்கது. அம்பேத்காரின் மார்க்சியம் பற்றிய பார்வையையும் நாவலாசிரியர் உள்வாங்கியுள்ளார்.

அனு என்ற வங்காளப் படத்தில் மார்க்சிய போராளியை தேடிவரும் பாதுகாப்பு படை, அவனது காதலியை பாலியல் வல்லுறவு செய்து விட்டுச் செல்கின்றது. பின்னர் சிறையிலிருந்து வெளியே வந்த காதலன், காதலியுடன் உறவு கொள்ளும் போது பாதுகாப்பு படையினால் ஏற்பட்ட வடுக்களை பார்த்துவிட்டு உறவு செய்யாமல் சென்று விடுகின்றான். இதே போன்று பல படைப்புக்கள் மார்க்சிய போராளிகளை விமர்சனப்படுத்துகின்றது. இந்த நாவலும் அதனையே செய்கின்றது.

இலங்கையில் குறிப்பாக தமிழ்ப் பகுதிகளில் போர் தொடங்குவதற்கு முன்பாக தீண்டாமைப் போராட்டம் அதாவது சாதிய எதிர்ப்புப் போராட்டத்தை சண்முகதாசன் தலைமையிலான சீன-சார்பு கம்யூனிஸ்ட் கட்சி முன்னெடுத்து பல மாற்றங்களை ஏற்படுத்தியது. எனவே, இடது சாரி கட்சிகளுக்கு சாதிய ஒடுக்குமுறையின் முக்கியத்துவம் தெரியாது. அதன் உளவியல் தெரியாது என்பதன் அடிப்படை என்ன?

நாவலின் குறியும் அதுவே. ஓர் இடதுசாரி எதிர்ப் பிரச்சாரமாகவே இந்நாவல் உள்ளது.

rathan@thaiveedu.com








# தீவகக் குறிப்புகள்

– ஜோன் பென்றி லூவிஸ்

தமிழில் : மணி வேலுப்பிள்ளை

# ஊர்காவற்றுறை

ஜோன் பென்றி லூவிஸ் (John Penry Lewis) Topographical Notes on the Jaffna Islands (யாழ் தீவக இடவிபரக் குறிப்புகள்) எனும் தலைப்பில் எழுதிய குறிப்புகள் Spolia Zeylanica (இலங்கை மரஞ்செடிகொடிகள்) எனும் திரட்டில் இடம்பெற்றுள்ளன. இலங்கை அரசாங்க அச்சகத்தில் அச்சிடப்பட்ட இத்திரட்டு 1908-ல் இலங்கை அரும்பொருளகத்தால் வெளியிடப்பட்டது.

இலங்கை நிருவாக சேவை அதிகாரியாக விளங்கிய ஜோன் பென்றி லூவிஸ் இரணைதீவு, கச்சைதீவு, நெடுந்தீவு, ஊர்கா



வற்றுறை, புங்குடுதீவு, அனைலைதீவு, எழுவைதீவு, காரைதீவு, நைனாதீவு அனைத்தையும் பார்வையிட்டார். ஒவ்வொரு தீவையும் பற்றி தனித்தனியான குறிப்பை எழுதினார். இது அவர் எழுதிய குறிப்புகளுள் ஒன்று:

**ஊர்காவற்றுறை:**

1904 டிசம்பர் 29: ஊர்காவற்றுறையில், அதாவது துறைமுகத்தில் பலவித கடற்கலங்கள் காணப்பட்டன. அவற்றுள் 6 வத்தைகள் மசூலிப் பட்டணத்திலிருந்து வந்தவை. அவை தடித்த நடுக்கம்பங்கள் கொண்டவை. இவை மிகவும் வன்மையான படகுகள். முகப்புப் பாய் மிகவும் பரந்தது. நடுக்கம்பத்தை விட அணியத்தில் பொல்லுப் போன்ற சிறிய கம்பம் கொண்ட படகுகளில் மூன்று நான்கு பாய்கள் கணப்பட்டன.

தோப்புத்துறையிலிருந்து வந்த இரண்டு கள்ளத்தோணிகளும் காணப்பட்டன. அவற்றின் கம்பங்கள் நெருங்கி நிலைகொண்டவை. பாய்கள் சதுரமானவை. அவை அலங்கோலமான வள்ளங்கள். ஆனால் சில உள்ளூர் வணிகர்களுக்கு அவற்றில் நம்பிக்கை உண்டு. அவை சதுரமான கம்பங்களும், பாரிய சுக்கான்களும், கிடுகுக் கூரைகளும் கொண்டவை.

பின்பக்கப் பாய், இரட்டைக் கம்பம் கொண்ட தோணிகளும், பல்கம்பத் தோணிகளும், இலங்கைத் தோணிகளும் காணப்பட்டன. இலங்கைத் தோணிகள் பாரிய முகப்புக்கட்டையும், அதில் ஐந்து பாய்களும் கொண்டவை. தொண்டியிலிருந்து வந்த பல்கம்பத்தோணியில் பாய்கள் காணப்படவில்லை.

தோப்புத்துறையிலிருந்து கள்ளத்தோணிகளில் நெல், அரிசி, மந்தை என்பனவும், வத்தைகளில் அரிசியும் கொண்டு வரப்பட்டன. தோப்புத்துறையிலிருந்தும், அம்மா பட்டினத்திலிருந்தும் வெள்ளைமாடுகள் கொண்டுவரப்பட்டன. பாம்பனிலிருந்து இறைச்சி மாடுகள் கொண்டுவரப்பட்டன. பாண்டிச்சேரி, கூடலூர், பரங்கிப்பேட்டையிலிருந்து சட்டி, பானைகளும், அம்மா பட்டினத்திலிருந்து வேறு சாமான் சண்டிகளும் கொண்டுவரப்பட்டன.

வடபுலத்தைப் பொறுத்தவரை திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த கொட்டியாரத்துப் பானைகளே தலைசிறந்தவை. எனினும் இலங்கைப் பானைகளை விட பாண்டிச்சே






ரிப் பானைகள் நின்றுபிடிப்பவை. யாழ்ப்பாணத்துப் பானைகளும் பரவாயில்லை. பொன்னானியிலிருந்து ஓடுகளும், வெட்டுமரங்களும் இறக்குமதி செய்யப்பட்டன. கீழக்கரையிலிருந்தும் அம்மா பட்டினத்திலிருந்தும் களிமண் இறக்குமதி செய்யப்பட்டது. கல்தேக்கு மரம் இறக்குமதி செய்யப்பட்டு, வள்ளம் தயாரிக்கப்படுகிறது. மன்னாரிலிருந்து எரு கொண்டுவரப்படுகிறது. இந்த ஆண்டு முதல் தடவையாக பாம்பனிலிருந்து நெல் இறக்குமதி செய்யப்பட்டது. இராமேசுவரம், கோட்டைப் பட்டினம், பர்மாவைச் சேர்ந்த அக்கியாபுத் துறையிலிருந்தும் நெல் இறக்குமதி செய்யப்பட்டது.

இலங்கையின் மூன்றாவது முக்கிய துறை ஊர்காவற்றுறை. யாழ் குடாவிலுள்ள ஏனைய துறைகளைப் போலன்றி, ஊர்காவற்றுறை இயற்கைப் பாதுகாப்பு கொண்டதாக விளங்குவதால், காற்றுப்பெயர்ச்சிப் பருவங்கள் இரண்டிலும் திறந்திருக்கிறது. தென்மேற்குக் காற்றுப் பருவத்தில் தேவி பட்டினம், தொண்டி, அம்மா பட்டினம், கொல்லம்பட்டினம், அதிராம்பட்டினம், முத்துப்பேட்டை, கோடியக்கரை, தோப்புத்துறை, பாண்டிச்சேரி, பரங்கிப்பேட்டை, மசூலிப்பட்டினம், கோட்டைப்பட்டினம், அக்கியாபுத் துறைகளிலிருந்தும் நெல் இறக்குமதி செய்யப்பட்டது.

வடகீழ்க்காற்றுப் பருவத்தில் கொல்லம், குளச்சல், அலப்பி, பொன்னானி, கொச்சி, கோழிக்கூடு, மங்களூர், கீழ்க்கரை துறைகளுடன் வணிகம் நடக்கிறது. இரு காற்றுப் பருவங்களிலும் அரையரைவாசி வணிகம் நடக்கிறது. இரண்டு பருவங்களிலும் பாம்பனிலிருந்து மரக்கலங்கள் வருகின்றன. தென்மேற்குக் காற்றுப் பருவத்தில் மன்னார், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, முல்லைத்தீவு, பேசாலைத் துறைகளிருந்தும், வடகீழ்க் காற்றுப் பருவத்தில் காலி, வெருகல், நீர்கொழும்பு, கற்பிட்டித் துறைகளிலிருந்தும் மரக்கலங்கள் வருகின்றன.

இங்கு ஊர்காவல்துறை அமைந்திருந்தபடியால் இது ஊர்காவற்றுறை எனப்படுகிறது. ஒல்லாந்தப் படையினருடன் யாழ்ப்பாணம் சென்ற பால்டியஸ் பாதிரியார் இதை ‘ஊராத்துறை’ என்று சிதைத்துவிட்டார். பிறகு ‘ஊரா’ என்பதை காசிச்செட்டி ‘பன்றி’ என்று சிங்களச் சொல்லுடன் தொடர்புபடுத்தி, ‘பன்றித்துறை’ என்றார். ‘ஊர்காவற்றுறை’ எனும் தமிழ்ச்சொல்லின் திரிபே ‘ஊராத்துறை’ என்பது வெளிப்படையாகவே புலப்படுகிறது. இன்றும் ‘ஊர்காவற்றுறை’ எனும் தமிழ்ச்சொல்லே வழங்கி வருகிறது.

ஊர்காவற்றுறையை பால்டியஸ் பாதிரியார் ‘கைஸ்’ (Cays) என்று குறிப்பிட்டார். இது போர்த்துக்கேய மொழியில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்ட சொல். போர்த்துக்கேய மொழியில் அது துறைமேடை (quay) என்று பொருள்படும். ஊர்காவற்றுறை அமைந்திருக்கும் தீவு முழுவதையும் குறிக்கும் சொல் எதுவும் இல்லை. ஒல்லாந்தர் இத்தீவை ‘லேடன்’ (Leyden) என்று குறிப்பிட்டார்கள். இப்பொழுது அது வழக்கில் இல்லை. அளவைத் திணைக்களம் இதை வேலணை என்று குறிப்பிட்டுள்ளது. ஆனால் அது இத்தீவில் இருக்கும் முக்கிய ஊரின் பெயர் மட்டுமே.

இரணைதீவு என்று தமிழில் வழங்குவதை ஒல்லாந்தர் தமது மொழியில் ‘இரணைச் சகோதரர்கள்’ என்றும், இரணைமடுவை ‘இரணைக்குளம்’ என்றும் குறிப்பிட்டார்கள். நெடுந்தீவுக்கு Delft என்று ஒல்லாந்தர் இட்ட பெயர் மட்டுமே இற்றை வரை (ஆங்கிலத்தில்) நிலைத்துள்ளது.

காரைதீவின் கிழக்குக் கோடியில் இருக்கும் கோவளம் விறாட்டிமுனை எனப்படுகிறது. காய்ந்த சாணி கொண்ட முனை என்பது அதன் பொருள். காரைதீவை பொன்னாலையில் அமைக்கப்பட்ட சேது, குடாநாட்டுடன் இணைக்கிறது. ஆளுநர் வில்லியம் துவைனம் (Wilham Twynam) பதவிக்காலத்தில் அமைக்கப்பட்ட இச்சேதுவின் நீளம் 2 மைல். அது ஒரு நேர்கோடு போல் அமைந்துள்ளது. அது 10 பாலங்கள் கொண்ட சேது. அதன் பயனாக
காரைதீவில் செல்வம் கொழிக்கிறது.



mani.v@thaiveedu.com




ஆறாவது விரலாக நீளும் பேனாவின் வழியே இசைந்தொழுகும் எழுத்துகளைத் தாளில் ஏற்றித் தருகிற அச்சுக் கலை, சுலபமானதோ, சுகமானதோ அல்ல. ஈயத்தால் ஆன எழுத்துக் கட்டைகளை அதனதன் பெட்டிகளில் இருந்து ஒரே அளவினதாகத் தெரிந்தெடுத்து, ஒவ்வோர் எழுத்தாகக் கோத்து வரிசைக்கிரமமாகவும், பத்தி பத்தியாகவும் பிரித்து ஒரே அளவிலான பக்கத்தை வடிவெடுத்துக் கட்டமைப்பது அரிய கலை. விரல் நுனிகள் எரிச்சலடைந்தாலும், ஊதியம் கடந்த ஒரு நிறைவு பணி செய்பவர்களுக்குக்கிட்டும். அது ஒருவகையில் தமிழ்வாணிக்குச் செய்யும் தனிப் பூசை என்றே சொல்லலாம். மெய்ப்புத் திருத்திச் சரி செய்து உரிய வண்ண மை சேர்த்துத் தனித்தனித்தாள்களாக வரும் பக்கங்களை இணைத்து இதழ்களாகச் செய்து உரிய பொழுதுக்குள் வாசகர்களிடத்தில் கொண்டுபோய்ச் சேர்க்கிற பணி இருக்கிறதே, அது பெருந்தவம்.

நெருப்பின்மீது நின்று தவம் செய்யும் நெருக்கடி ஆசிரியருக்கு இருக்கும். காலத் தேவை கருதி, கருத்துகளைக் கவனத்தில் கொண்டு எழுதியவரின் மனநிலையை விளக்கும் வண்ணம் படங்கள் அமைத்துப் பக்கங்களை வடிவமைத்து வெளிவரும் அந்தப் பத்திரிகையை, மைமணம்கமழ, ஈன்ற பொழுதிற் பெரிதுவந்து ஏந்தும்போது எழுகிற மை மணம், பொய்மணமாகுமா, என்ன?

தாள் மக்கிப் போனாலும் அது தாங்கிய எழுத்துருக்கள் மங்கிப்போகாமல் இருக்கச் செய்த ‘ட்ரெடில்’ அச்சு, இப்போது அருகிவிட்டது. ஆனாலும், கூடிய மட்டில் பிழையின்றித் தரும் அதன் நேர்த்தியும் கலையும் நிலைத்திருக்கக் கூடியது தான்.

புத்தகமோ, தனித்தாளோ எதுவாயினும் பழைய ‘ட்ரெடில்’ அச்சுப்பெற்றதெனில் எடுத்து, ஒரு கணம் நுகர்ந்து பாதுகாக்கும் பழக்கம் எப்படியோ என்னிடம் படிந்துவிட்டது. அலைபடு வாழ்க்கையில் அவற்றை உரிய முறையில் பாதுகாக்க முடியாவிட்டாலும், அவ்வப்போது எடுத்துப் பார்த்து, முடிந்தால் படித்து மறுபடியும் ஒடியாமல் மடியாமல் மூடி வைத்து விடுவது என் வழக்கம்.

அப்படியானதோர் அட்டைப் பெட்டியை மீளவும் திறந்து பார்க்க வைத்துவிட்டது, அண்மையில் சென்னையில் நடந்த புத்தகத் திருவிழாவில் வாங்கிய ஒரு புத்தகம். அது பழ. அதியமான் பதிப்பித்த, வ.ரா. எழுதிய ‘மகாகவி பாரதியார்’ எனும் நூல்.

வ.ரா. என்னும் திருப்பழனம் வ. ராமஸ்வாமி ஐயங்கார், எழுதி, வை.கோவிந்தன் தனது ‘சக்தி காரியாலயம்’ வழியாக, 1944-ல் வெளியிட்ட நூல் இது. பதிப்பு பல கண்ட இந் நூலை, வ.ரா.வின் எழுத்துகள் நாட்டுடைமையாக்கப்பட்ட பின்னர் பல்வேறு பதிப்பகங்கள் வெளியிட்டிருக்கின்றன. ஆனாலும், விரிவான பதிப்புரையுடன் தக்க பின்னிணைப்புகளைத் தந்து இந்த நூலைச் சிறப்புறப் பதிப்பித்திருக்கிறார் பழ.அதியமான். அவர் வ.ரா. வின் படைப்புகளை ஆய்வு செய்து முனைவர் பட்டம் பெற்றிருப்பது கூடுதல் சிறப்பு.

முழு நூலாக வெளிவந்த இந்த நூலின் ஒவ்வொரு அத்தியாயத்தையும் தனித்தனிக் கட்டுரைகளாக, பேனா மன்னர் டி.எஸ். சொக்கலிங்கம் நடத்திய ‘காந்தி’ இதழில் வ.ரா. எழுதியிருக்கிறார். 5.9.1933-ல் தொடங்கி, 25.3.1935-ஆம் ஆண்டு வரை, தொடர்ந்து ஏறக்குறைய மூன்றாண்டுகள் அவை வெளிவந்திருக்கின்றன.

‘சுப்ரமணியபாரதியார்’ ‘சுப்பிரமணியபாரதியார்’, என்ற தலைப்புகளில் வெளிவந்த அக்கட்டுரைகளில் முதல் மூன்று, ‘பழனத்தான்’ என்ற பெயரிலும், பிற, வ.ரா. என்ற பெயரிலும் அச்சாக்கம் கண்டிருக்கின்றன. (திருப்பழனம். வ.ரா.வின் சொந்த ஊர்.) என்று தன் பதிப்புரையில் குறிப்பிடும் பழ. அதியமான் மேல் விளக்கமாகப் பின்வரும் செய்திகளைத் தருகிறார்.

‘காந்தி இதழில், 18 ஒக்ரோபர் 1933-ம் ஆண்டு இதழிலிருந்தே வ.ரா. பெயரில் தொடர் வெளிவரத் தொடங்கியது. கிடைத்துள்ள எட்டு இயல்களில் ஒன்று மட்டும் (25 மே 1934) பாரதியின் ஓவியம் இடம் பெற்றுள்ளது. மற்றவற்றில் எந்தப்படமும் இடம்பெறவில்லை. ‘காந்தி’ இதழில் வெளிவந்த வடிவத்துக்கும் நூலாக வெளிவந்த வடிவத்துக்கும் ஏதேனும் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளனவா என்பதை முழுவதும் அறிய இயலவில்லை. என் முனைவர் பட்ட ஆய்வுக் காலத்திலிருந்தே, அதாவது 1984-ம் ஆண்டிலிருந்தே ‘காந்தி’யைத் தேடிக் கொண்டிருந்தாலும் அதில் வெளிவந்த அத்தொடரின்

எட்டு இயல்கள் மட்டுமே எனக்குக் கிடைத்தன. அவையா வன:

5 செப்ரெம்பர் 1953-ம் ஆண்டு (இது நூலில் இடம்பெற வில்லை) 20 செப்ரெம்பர் 1933-ம் ஆண்டு (நூலின் முதல் அத்தியாயம்), 18 ஒக்ரோபர் 1933-ம் ஆண்டு (நூலின் இரண் டாவது அத்தியாயம்) 18 ஒக்ரோபர் 1933-ம் ஆண்டு (நூலின் மூன்றாம் அத்தியாயம்), 10 மார்ச் 1934-ம் ஆண்டு (நூலின் எட்டாவது அத்தியாயத்தின் ஒரு பகுதி), 25 ஏப்ரல் 1934-ம் ஆண்டு (நூலின் 12-ம் அத்தியாயம்), 25 மார்ச் 1934-ம் ஆண்டு (நூலின் 17-வது அத்தியாயம்) மொத்தம் 25 அத்தி யாயங்கள் கொண்ட முதல் பதிப்பு நூலில் மூன்றில் ஒரு பங்கான எட்டு இயல்களே கிடைத்துள்ள நிலையில் இவற் றைக் கொண்டே முதல் பதிப்புடன் ஒப்பிட முடிந்தது. ஒப்பீட் டிலிருந்து பெற்ற கருத்துகள் பின்வருமாறு.

'காந்தி'யில் வெளிவந்த முதல் இயல் நூலில் தவிர்க்கப்பட்


:: சுப்ரமணிய பாரதியார் ::

(வ. ரா. எழுதியது)

341 [25—5—34

டுள்ளது. செப்ரெம்பர் 20, 1933-ல் வந்த இரண்டாவது இயலே நூலின் முதல் அத்தியாயமாக அமைக்கப்பட்டிருக் கிறது. பத்தி மாற்றம்கூட இல்லாமல் இதழில் வெளிவந் தவண்ணமே நூலின் பிரதி அச்சாகியுள்ளது. இரண்டாவது அத்தியாயத்தில் (5.10.1933) ஸர்க்கார்-சர்க்கார், தொளைத்து - துளைத்து போன்ற சொல் மாற்றங்கள் தவிர வேறு மாற்றம் இல்லை. மூன்றாவது, எட்டாவது, 12-வது, 17-வது அத்தியா யங்களில் எந்த மாற்றமும் இல்லை. 13-வது அத்தியாயத்

தில் மட்டும் சில சொற்கள் (நிலையில் 'என்பது 'கேவலமான நிலையில்' என்பதுபோல) சேர்க்கப்பட்டிருக்கின்றனவே தவிர வேறு மாற்றமில்லை. எனவே கிடைத்த எட்டு இயல்களை வைத்து ஒப்பிட்டுப் பார்த்ததில் அவை அப்படியே நூலாகி யுள்ளன என்று சொல்லிவிடலாம். இரண்டாம் பதிப்பில்தான் ஏகப்பட்ட மாற்றங்கள் செய்யப்பட்டு நூலின் உள்முகமே மாறி சீரும் சிறப்புமான பிரதியாக நூல் ஆகியுள்ளது என்று சொல்லலாம்.

முதல் பதிப்புக்கும் இரண்டாம் பதிப்புக்குமான இந்த மலை யளவு வேறுபாடு இயலின் வடிவத்தை மாற்றாமல், உள்ள டக்கத்தில் கை வைக்காமல், பத்திகளைக்கூட அதிகம் மாற் றாமல் நிகழ்த்தப்பட்டிருக்கிறது. அணையில் இருந்து கண் மண் தெரியாமல் வெளிப்பாய்ந்த நீரின்வேகத்தைச் சமதளத் தில் ஓடும் நீரோடைபோல நிதானப்படுத்தியுள்ளனர்.

நிறுத்தக்குறிகள் தொடங்கிச் சொற்கள், தொடர் அமைப்பு கள், அபூர்வமாக இரண்டொரு இடங்களில் பத்திகள் ஆகிய வற்றில் இம்மாற்றங்கள் நிகழ்த்தப்பட்டுள்ளன. கூறியது கூற லைத் தவிர்த்துள்ளனர் நடையில் தமிழ் மரபைப் பேணியுள் ளனர் பிழையான, குழப்பமான, மிகையான பல சொற்களை யும் பல தொடர்களையும் முறையே சரிப்படுத்தியுள்ளனர் தெளிவுபடுத்தியுள்ளனர் நீக்கியுள்ளனர். சந்தேகத்திற்கு இடம் தரும் பொருளை உறுதிப்படுத்தியுள்ளனர் காலக்கிளவியைச் சரி செய்துள்ளனர். இப்படிச் செப்பம் செய்து பிரதியைக் கட் டுக்கோப்பாக்கி நூலை ஒளிபெறச் செய்துள்ளனர். தன் நண் பர்கள் வி.கிருஷ்ணசுவாமி, ஜே. தங்கவேலு ஆகியோரின் உதவியுடன் ஆசிரியர் வ.ரா. இதைச்செய்துள்ளார். செப்பம் செய்யப்பட்ட, வ.ரா. காலத்திலேயே வெளியான இரண்டாம் பதிப்பே இன்றுவரை அச்சில் தொடர்ந்து இருந்துவருகிறது. இந்தப்பதிப்பே இப்பதிப்புக்கும் மூலபாடமாகியுள்ளது.'

இந்தச் செய்தியை எழுதிய பழ.அதியமான், 'காந்தி' இதழில் கண்ட முதல் அத்தியாயத்தைத் தான் பதிப்பித்த நூலில் பின்னிணைத்திருக்கிறார். அது நூலில் சேர்க்கப்பெறாமைக் கான காரணத்தையும் யூகித்துப் பதிப்புரையில் எழுதியிருக்கி றார். கூடவே, இந்நூல் குறித்து, 'ரசிகன்' எழுதிய மதிப்புரை யையும் தந்திருக்கிறார். இந்த இரண்டு செய்திகளும் என்னி டம் இருந்த 'காந்தி' இதழைத் தேடத் தூண்டின.

வியப்பான செய்தி, என்னிடம் இருந்த இதழ், பழ. அதியமா னுக்குப் பார்க்கக் கிடைக்காத இதழ். அது மட்டுமல்ல. 'சுப்ர மணியபாரதியார்' என்ற தலைப்பில், பாரதியார் ஓவியத்துடன் வெளிவந்த இதழ். இந்த இதழில் மட்டுமே பாரதியின் படம் வந்திருப்பது என்பதும் சிறப்புக்குரிய செய்தி. தி.ச. சொக்க-லிங்கம் ஆசிரியராக இருந்து நடத்திய 'காந்தி' மாதமிரு-முறை இதழின் வரிசையில் (மாலை-10-மலர்-7) 25.05.1934-ம் ஆண்டு அன்றைய தேதியிட்டு வந்திருக்கிறது.

அதில் இடம்பெறும் வ.ரா.வின் கட்டுரை, 'சுப்ரமணியபாரதி-யார்' என்ற தலைப்பின் கீழ், (வ.ரா. எழுதியது) என்ற குறிப் புடன் நான்கு பக்கங்களில் வந்திருக்கிறது. இது தவிர, தனித்தலைப்போ, தொடர் எண்ணோ தரப்பெறாமல், முடிவில் தொடரும் என்றோ குறிப்பிடப்படாமல் வெளிவந்திருக்கிறது. தொடக்க நிலையில் அழகிய கோட்டோவியத்தை அடுத்து முதல் எழுத்தைப் பெரிய எழுத்தாக்கி வடிவமைக்கப்பட்ட இக்கட்டுரையில் பத்திகள் சரியாகப் பகுக்கப்பட்டிருக்கின்

றன. நடுவில் இடம்பெறும் கவிதை வரிகள் தனித்துத் தெரியும்படி வடிவமைக்கப்பட்டிருக்கின்றன. முடிவில் ஒரு கோட்டோவியமாக கோப்பை (பிளாக்) படம் இடப்பெற்றிருக்கிறது.

இந்தக் கட்டுரை, வ.ரா.வின் நூலில், 13-வது கட்டுரையாக இடம்பெற்றிருக்கிறது. இந்த நூல் பிரதிகள் பலருக்கும் கிடைக்கக்கூடும். ஆனால், இந்தக்கட்டுரையை இந்த இதழில் மட்டுமே படிக்க இயலும் என்பதால், இக்கட்டுரையைப பின்வரத் தந்திருக்கிறேன்.

# 'சுப்ரமணியபாரதியார்'

## (வ.ரா. எழுதியது)

மனிதர்களுக்கெல்லாம் நடமாட்டத்தில் ஆசை. ஒரே இடத்தில் நீண்டகாலம் இருப்பது முடியாத காரியம். அடைபட்டுக் கிடப்பது, சிறைவாசம்போல. கண்ணுக்குப் புதிய காட்சி, காதுக்குப் புதிய குரல்கள்[1], காலுக்கு நடமாட்டம், இரத்தத்துக்கு[2] ஓட்டம், உள்ளத்துக்குப் புத்தம் புதிய உணர்ச்சிகள்-இவைகள் மனிதனுக்குத் தேவை. ஒரே இடத்தில், நீண்டநேரம் உட்கார்ந்து கொண்டிருந்தால் கால், 'சூரை'ஓடிப்[3] போய் விட்டது என்று சொல்லி, அதை நீட்டவும் மடக்கவும் உதைக்கவும் செய்கிறார்கள்.

மனதுக்கும் நடமாட்டம் வேண்டும் இல்லாவிட்டால் அதுவும் 'சூரை'யோடிப்[4] போகும். பாரதியாருக்குப் புதுச்சேரி வாசம் சிறைவாசத்தைப் போலவேதானிருந்தது. எவ்வளவு காலம் ஒரேவித முகங்களைப் பார்த்துக்கொண்டு, ஒரே 'ஸெட்' ஆட்களோடு பேசிக்கொண்டிருப்பது? புதுச்சேரி அரசியலில், பிரிட்டிஷ் இந்திய தேசபக்தர்கள் கலந்துகொள்ளக்கூடாது. இத்தகைய நிபந்தனைகளுடன் துடிதுடிக்கும் உள்ளம் படைத்தவர்கள், சுகமாகக் காலந்தள்ள முடியாது; மனம் தோய்ந்து[5] போகும்.

அற்ப மனிதர்களுடன் பேச்சுச் சல்லாபம் வைத்துக்கொள்ளுவதைக் காட்டிலும் மௌன விரதம் மேலானது என்று ஒரு அறிஞர் கூறியிருப்பது உண்மை. வார்த்தைகளுக்கும் கருத்துக்களுக்கும் லட்சியத்துக்கும் கௌரவம் கெட்டுப்போகும். சுகம் என்றால் பிறனை வஞ்சித்துத் தனக்கு மட்டும் தேடிக்கொள்ளும் சுகம் என்று அற்பன் எண்ணுகிறான். உலக சுகம் என்றால் அது ஏமாற்று வேலை, ஏமாற்றுக் கருத்து என்று எண்ணுகிறான் மூடன். கவிதை என்றால் கூத்துப்பாட்டு என்ற ஆபாச எண்ணம் அவன் மனதில் தோன்றுகிறது. சுதந்தரம் என்றால் உயிரை இழப்பதற்கு ஏற்பட்ட தற்கொலைச் சந்தர்ப்பம் என்று அவன் மயங்குகிறான்.

இந்த நிலையில்[6] மனிதர்கள் இருப்பார்களாகில், மேதாவிகள் என்ன செய்வது? இந்த நிலைமையில் மூன்று காரியங்கள் செய்யலாம். ஒன்று மௌனமாயிருக்கலாம் அறிவிலிகளின் அவதூறைப் பொருட்படுத்தாமல், தங்கள் கருத்தை உலகத்துக்குத் மேதாவிகள் தெரிவிக்கலாம்[7] களைத்துச் சோர்ந்து போகுங்காலத்தில், இயற்கைத்தாயினிடம் சரண் புகலாம். இந்த மூன்று காரியங்களையும் பாரதியார் செய்தார்,

தோட்டங்களில்வசிப்பது கடற்கரைக்குப் போய், கடலின் ஓய்விலா அலை ஒலியில் ஈடுபட்டுத் தன் கவலையை மறப்பது, சிறிது காலம் மௌனவிரதம் கொள்ளுவது; தன் கருத்தை வெளியிடுவது-இவைகளை பாரதியார் செய்து வந்தார்.

பச்சைப் பசேலென்று கண்ணைக் கவரும் மரஞ்செடி கொடிகளுள்ள தோட்டத்தைக் காணுவதில், அதில் வசிப்பதில் பாரதியாருக்கு அளவில்லாத ஆனந்தம். வளர்ச்சியில் சொணையில்லாதவர்களுடைய[8] முகங்களைப் பார்ப்பதைக் காட்டிலும் வளருகிற கொடியைப் பார்த்து ஆனந்தமடையலாம் என்று பாரதியார் அடிக்கடி சொல்லுவார். 'ரோஷமில்லாத முகத்தை எப்படி ஓய் பார்த்துக்கொண்டேயிருப்பது?' என்று நொந்து கொண்டு சொல்லுவார்.

இந்த மாதிரி, வெறி பிடித்தாற் போலப் பேசும் காலத்தில், பாரதியார் வீட்டுக்குள் இருக்க இசைவதில்லை. யாரையேனும் அழைத்துக் கொண்டு, நண்பர் கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்துக்குப் போய்விடுவார்; அல்லது புதுச்சேரிக்கு அடுத்த வில்லியனூருக்குப் போவார்.

தோட்டத்தில் மரங்களையும் செடிகளையும் குளத்தையும் சின்னஞ் சிறு குருவிகளையும் பார்த்தவுடனே, பாரதியாரின் அலுப்பு சலிப்பு எல்லாம் எங்கேயோ மாயமாய்ப் பறந்து போய்விடும். ரஸிகத்தன்மை படைத்த உயிருள்ள தோழர்களுக்கு நடுவே இருப்பதாக அவர் எண்ணிக்கொள்ளுவாரோ, என்னவோ?[9] ஸரிக - க - காமா என்று அவர் வாய்க்குள்ளே சொல்லிக் கொண்டால், புதிய பாட்டுக்குத் தாளம் கோலிக் கொண்டிருக்கிறார். என்று பக்கத்திலிருப்பவர்கள் தெரிந்து கொள்ளலாம்.

மரத்தை வெறித்துப் பார்ப்பார்; குளத்தை உற்றுப் பார்ப்பார்; ஆகாயத்தை முட்டுகிறாற்போல மார்பை வெளியே தள்ளி, தலையை எவ்வளவு தூரம் நிமிர்த்தி உயர்த்த முடியுமோ அவ்வளவுதூரம் நிமிர்த்தி, உயர்த்திப் பார்ப்பார். ஸஸ்ஸ,-ஸஸ்ஸ,-ஸஸ்ஸ என்று மூச்சுவிடாமல், உரக்கக் கத்துவார். வலது காலால் தாளம் போடுவார்; தவறிப்போனால் இடது காலால் பூமியை உதைப்பார். ஒரு நிமிஷம் மௌனம். 'சொல் ஆழி வெண் சங்கே' என்ற கூக்குரல், கூப்பாடு. இல்லாவிட்டால் தாயுமானவரின் கண்ணிகளில் ஒன்று 'மத்தகஜம் என வளர்த்தாய்' என்ற சந்தோஷ முறையீடு. மீண்டும் ஒரு முறை ஸரிக-க-காமா.[10]

குழந்தை பிறக்கிற பிரசவ வேதனைதான்.[11] உற்சாகமும், சோர்வும், ஒன்றையொன்று பின்னிக்கொண்டு வெளிவருவதைப் பார்க்கக் 'கொடுத்து வைத்திருக்கவேண்டும்.' மனித உலகத்தோடு பாரதியாருக்கு அப்பொழுது உறவே கிடையாது என்று சொல்லிவிடலாம். புதுப்பாட்டு வருகிற வேகத்தில், அது அவருடைய கூட்டையே முறித்து விடும் போல இருக்கும்.[12] பாரதியாரின் கீதங்களில் ரத்தப் பசை, ஜீவகளை இருக்கின்றன. என்று சொல்லுவதில் பொய்யே கிடையாது.[13]

கலைஞர்கள், மேதாவிகள் புதுக்கருத்துக்களை உலகத்துக்கு அறிவிக்கையில் என்ன பாடு படுகிறார்கள் என்பதை உலகம் தெரிந்துகொள்ள முடியாது. புதுக்கருத்து ஒன்று -ஜீவகளை நிறைந்த கருத்து, - தர்க்க வாதம் நிறைந்த கருத்தல்ல - மேதாவிகளின் உள்ளத்திலிருந்து வெளிவருவதற்குள், அது உடல் முழுமையையும்[14] குலுக்கி, நடுநடுங்கச் செய்து, பிராணனை அரைகுறைப் பிராணனாகச் செய்துவிடுகிறது. உல

கத்துக்காக மேதாவிகள் ஒவ்வொரு நிமிஷமும் உயிரை விடு கிறார்கள் என்பது பல வகைகளிலும் உண்மை.

இந்த மாதிரி அவர்கள் ஏன் உயிரை விடவேண்டும் என்று சிலர் கேட்கலாம். அது இயற்கைத் தாயின் கொடிய விதி. இயற்கைச் சட்டத்தை ஏளனத்தால் கொல்லமுடியாது. குழந்தை பிறந்தவுடன், தாய்க்குப் பால் சுரப்பதைத் தடுக்க முடியுமா? குழந்தைகளைப் போல பெரும்பான்மையில்,[15] மனிதர்கள் இந்த உலகத்தில் இருக்குமளவும், மேதாவிகள் நிமிஷம் தவறாமல், உள்ளத்தில் பிரசவ வேதனைப்பட வேண்டியதுதான்.

ராமகிருஷ்ண பரம ஹம்சர், பக்தியின் பலவித பாவங்களை அனுபவிப்பதற்காக, பலவகை சிருஷ்டிகளாகத் தம்மை பாவித்துக்கொண்டாராம். கிருஷ்ணனிடம் ராதைக்கு இருந்த காதல் பக்தியை உயர்ந்ததாகச் சொல்லுவதுண்டு. அதை அனுபவிப்பதற்காக, சேலையுடுத்துக்கொண்டு, பெண்ணைப் போல, பாவித்து நடந்துகொண்டாராம்.[16] ராமனிடம் ஹனுமா னுக்கு இருந்த இணையற்ற விசுவாச பக்தியை உணரும் பொருட்டு, வாலைக் கட்டிக்கொண்டு, மரக்கிளையில் உட் கார்ந்துகொண்டு, ராமநாமம் ஜபிப்பாராம், ராமகிருஷ்ணர்.[17] இவைகள் ராமகிருஷ்ணரது கேலிச்சேஷ்டைகளல்ல; நாடக மேடை வேஷங்களல்ல.

படைப்பு கவிதை மயம். கவிதை உள்ளத்தைப் பெறாவிடில், படைப்பின் நுட்பத்தையும் ரகஸியத்தையும்[18] அறிய முடி யாது என்று பாபு விபினன் சந்திர பாலர்,[19] அபூர்வமான உண்மையின்[20] தரிசனத்துடன் சொல்லியிருக்கிறார். கவிக ளின் உள்ளம் குழைந்த குழந்தையின் உள்ளமாகும். [21]எதி லும் கள்ளம் கபடம் இல்லாமல் ஒட்டிக்கொண்டு உறவாடும் பான்மை, கவிகளுக்கு மிகுதியும் உண்டு.

புகழேந்திக்கும் ஒட்டக்கூத்தனுக்கும் சண்டை.[22] புகழேந்தி அபூர்வமான கவி. ஒட்டக்கூத்தனை அகராதிக் கவி எனலாம். பல ரகங்களான வார்த்தைகளைக் கொட்டுவதில் ஒட்டக்கூத்-தன் சமர்த்தர். சோழராஜனுக்கு இருவர் பேரிலும் பிரியம். அவர்களிருவரையும் பாட்டுப் பாட வேண்டும் என்று அரசன் வேண்டிக்கொண்டான்.[23] ஒட்டக்கூத்தன் முதலிலே பாடினார். பின்பு, ‘அதை வெட்டிப் பாடவோ, ஒட்டிப் பாடவோ’ என்றார் புகழேந்தி. ‘ஒட்டிப் பாடுக’ என்றான் அரசன். ஒட்டக்கூத் தனை ஒட்டிப் புகழேந்தி பாடியதாகக் கதை.

இயற்கையே, ஒரு அற்புதமான ஒட்டு வேலை. ஜீவராசிகள் அனைத்தும் தனித்துத் தனித்து நிற்பதாகத் தோன்றினாலும் அவைகள் யாவும் சூட்சுமமாய் ஒன்றோடொன்று ஒட்டிக் கொண்டிருக்கின்றன. மனிதனுடைய தேகத்தையே எடுத்துக் கொள்ளுவோம். காலோடு, தலை ஒட்டிக்கொண்டிருக்கிற அற்புதம் எவ்வளவு விசித்திரமாயிருக்கிறது? தலையின் தொழிலென்ன?காலின் வேலை யென்ன? தினையளவுகூடப் பொருத்தமில்லாத வேலைகள்! என்றாலும் இவை யிரண்டுக் குமிடையே இருக்கும் ஒட்டுதலைப் பார்த்தால், பிரமிக்கும்ப டியிருக்கிறது. பாரதியார் பாடுகிறார்;-

*காக்கை குருவி எங்கள்*
*ஜாதி-நீள்*
*கடலும் மலையும்*
*எங்கள் கூட்டம்*



*நோக்கும் திசையெல்லாம்*
*நாமின்றி வேறில்லை*
*நோக்க நோக்கக்*
*களியாட்டம்,*[24]

இதுதான் கவிகள் உலகத்துக்கு, எடுத்து உபதேசம் செய்யும் மூல மந்திரம். ஜீவராசிகளுக்குள் இந்த ஒட்டுதல் எப்படி யெல்லாம் புகுந்து பதிந்து கிடக்கிறதென்பதை, நவரஸங்க ளும் ததும்ப, விஸ்தாரமாக, விதரணையுடன் பேசுவதே கவிக ளின் வேலை.

நோக்கும் திசையெல்லாம் நாமின்றி வேறில்லை என்ற உண் மையை எந்த மனிதன் உணர்கிறானோ, அவன் கவி. அவ னுக்குப் பகைமை கிடையாது; எனவே, பலவீனம் துளிக்கூ டக் கிடையாது. அவனுக்குப் பிளவுப் பார்வை, உடைந்த நோக்கம் இல்லை; எனவே துயரம் கிடையாது. ‘நோக்க நோக்கக் களியாட்டம்’ அவனுக்கு ஏற்படுவதற்கு என்ன ஆட் சேபனை யிருக்கிறது?[25]

முத்தியாலுப்பேட்டை கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத் திலே, நோக்கி நோக்கிக் களியாட்டம் அடைவார் பாரதி யார்.[26] அவருடைய ஆனந்தம் வர்ஷ தாரையாகப் பெருக்க டையும், உன்மத்தனைப்போல, (வெறிகொண்டவனைப் போல,) சில சமயங்களில் அவர் ஆகிவிடுவார். இயற்கை யின் மின்சார சக்தி, கவிதை உணர்ச்சி என்ற கம்பி மூல மாக, பாரதியாரின் உடலிலும் உள்ளத்திலும் நுழைந்து, பாய்ந்து, பரவி, பூரித்துப்போகும்பொழுது, அவர் ஆனந்தக் கூத்தடிக்காமல் சும்மாயிருக்கமுடியுமா?[27] குரலிலே ஸரிக க

காமா; காலிலே தாளம்; கைகள் கொட்டி முழங்கும். உடல் முழுவதும் அபிநயம்தான். தேகமும் மனமும் அனுபவிக்கும் ஆனந்தத்தையும் சக்தியையும் கண்கள் வெளிக்காண்பிக்கும், ரிஜிஸ்டர் (பதிவு) செய்யும்.[28]

குழந்தை பிறந்தவுடன் சோர்ந்து போய் நித்திரையை வேண்டும் தாய்மார்களைப் போல[29], கவிதை பிறந்தவுடன் பாரதியார் சோர்ந்து போய், மண் தரையில் படுத்துக்கொள்ளுவார். தலைக்குயரமாய் எதையும் வேண்டார். எதையும் கொடுக்க, எங்களுக்கு தைரியமும் உண்டானதில்லை. இயற்கைத் தாய் நர்த்தனம் செய்த உடலுக்கு இயற்கையான சயனந்தான் வேண்டும் போலும்!

சிறிது நேரம், கண்ணயர்ந்ததுபோல பாரதியார்படுத்துக் கொண்டிருப்பார். அப்பொழுது அவர் உள்ளத்தில் என்ன நேருமோ[30], தெரியாது. தூக்கிவாரி போட்டாற்போல எழுந்திருப்பார். சேங்கன்றை நினைத்துக்கொண்டு, மேய்ச்சல் தரையிலிருந்து அம்மா என்று அலறிக்கொண்டு ஓடிவரும் பசுவைப்போல [31]பசுவாக அப்பொழுது பாரதியார் என் கண்ணில் படுவார்.[32] சேங்கன்றைப் பார்த்தபின் அல்லது அதன் குரலைக் கேட்டபின்தான், பசுவின் ஆவல் தாபம்[33] தணியும். சிறிது நேரத்துக்குமுன் நிகழ்ந்த இயற்கையின் ஆவேசம் கெட்டு மடிந்துபோயிற்றோ என்ற அச்சத்தால், பாரதியார் திடீரென்று எழுந்திருப்பாரோ என்னவோ? இத்தகைய சந்தர்ப்பங்களில் பாரதியாரின் முகவிலாஸம் [34] மிகவும் வசீகரம் கொண்டதாயிருக்கும். அகம்பாவம், மாச்சரியம் முதலிய சேஷ்டை உணர்ச்சிகளின் சின்னம், இருக்கவே இருக்காது.[35]

இயற்கையோடு ஒட்டிக்கொண்ட உள்ளத்தில் சிறுமை இருக்குமா? எனவே அதன் சின்னம் முகத்திலே எப்படித் தோன்றும்? நான் [36]ஆயிரம் வருஷங்கள் உயிரோடிருந்தாலும், பாரதியாரின் இந்த அற்புத முகத்தோற்றத்தை நான் மீண்டும் எப்பொழுது பார்க்கப் போகிறேன்? பாரதியாரின் கவிதைத் தருண ஜோதி முகத்தை, தமிழர்களில் ஆயிரம் பேர் பார்த்திருந்தாலும் போதுமே![37] நம் நாடு நிச்சயமாய் இதற்குள் கடைத்தேறியிருக்கும்![38] எனக்கு ஏற்பட்ட பாக்கியம் நூற்றுக்கணக்கான தமிழர்களுக்கு ஏற்படவில்லையே என்றுதான் என் நெஞ்சம் வருந்துகின்றது.[39]

புதுச்சேரியில், கனகசுப்புரத்னம் என்று ஒருவர் இருக்கிறார். இந்தப்பெயரால், அவரை நீங்கள் அடையாளம் கண்டு பிடிக்க முடியாது. அவர் 'பாரதிதாஸன்' என்ற புனைப் பெயருடன், ஆச்சரியப்படத்தக்க தமிழ்க் கவிதை எழுதுகிறார். அவர் பாரதியாருக்குத் தோழன், சீஷன், எனது அருமையான நண்பர். அவர், மேற்சொன்ன தோட்டத்தைப் பற்றி, அதிசயமான சேதி யொன்றைச் சொன்னார்.[40]

***காற்றடிக்குது கடல் குமுறுது***
***கண்ணை விழிப்பாய் நாயகனே***

என்று பாரதியார் பாடியிருக்கிறாரே, அது புதுச்சேரியில் அடித்த பெரும்புயல் சம்பந்தமாக[41]. இன்றைக்குச் சுமார் பதினைந்து வருஷங்களுக்கு[42] முன், புயல் அடித்தது. தமிழ்நாடு முழுதும் வெள்ளமும் புயலும். உடைத்துக்கொள்ளாத ஆறுகள், ஏரிகள் இல்லை. மரங்கள் சடசடவென்று சரிந்து வீழ்ந்தன. 'காடெல்லாம் விறகான செய்தி' ஆயிற்று நாடு முழுதும்.

புதுச்சேரி கடற்கரை நகரம் புயலால் நேர்ந்த சேதத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது. ஒதியஞ்சாலை என்ற தோட்டத்திலிருந்த அழகான மரங்கள் எல்லாம் தலைகுப்புற வீழ்ந்தன; தந்திக் கம்பங்கள் முறிந்து போயின் கட்டிடங்கள் வீழ்ந்தன.[43] கூரைகள் அப்படியே, கூடாரம் அடித்ததுபோல, உட்கார்ந்து விட்டன. நகரம் முழுதும் 'பேய் மேய்ந்த' காட்டைப்போலத் தோற்றம் அடைந்தது.


இவ்வளவு பயங்கரமான சேதத்தினடுவே,[44] முத்தியாலுப் பேட்டை கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்திலிருந்த மரங்கள் மட்டும் விழவில்லை என்று பாரதிதாஸன் சொன்னார். [45]எனக்கும் அவருக்கும் அற்புதத்தில் நம்பிக்கையில்லை. ஆனால் நிகழ்ந்ததைநம்பித்தானே ஆகவேண்டும்! இந்த மரங்கள் தப்பித்துக் கொண்ட காரணத்தை முழுதும் ஆராயாமல், அற்புதம் என்று அதைக்கொள்ள,[46] என் மனம் கூசுகின்றது. தனது ரகஸியத்தை, இயற்கைத் தாய் பாரதியாருக்கு அளித்த இடம்[47] கெடாமல் இருக்கவேண்டும் என்பது அவளது[48] விருப்பமோ, என்னவோ என்று கற்பனை கலந்து பேசலாம். ஆனால், மனிதனுடைய அறிவிலே அற்பமும் மகத்தும்[49] கலந்து நிற்கின்றன. இயற்கையின் சூதை அற்ப அறிவினால் அளக்கமுடியாது; அளப்பதற்குக் கவிதை உள்ளம் வேண்டும்.

*மேலே தரப்பட்ட கட்டுரை நூலாக்கம் பெறுகிறபோது செய்யப்பட்டுள்ள மாற்றங்களையும் திருத்தங்களையும், சேர்ப்பு மற்றும் நீக்கங்களையும் பொறுமையாகக் கண்டறிந்தபோது வெளிப்பட்டவை பின்வருமாறு. (அடிக்குறிப்பிட்ட எண்களுக்கேற்ற திருத்தங்கள் நிரல்படத் தரப்பட்டிருக்கின்றன.)*

- [1.]முதல் பத்தியில் குரல்கள் என்பது குரல் என்பதாகியிருக்கிறது.
- [2.]இரத்தம்- ரத்தம்
- [3.]'சூரை' ஓடிப்போய்விட்டது என்பது காந்தி இதழில் இடம் பெறும் தொடர். நூலில், இது 'மரத்துப்போய்விட்டது' என்று திருத்தம் கண்டிருக்கிறது. அதே பத்தியில்.
- [4.]'சூரை'யோடிப் போய் என்பது மீளவும்'மரத்து' என்றாக்கம் கண்டிருக்கிறது.
- [5.]மனம் தோய்ந்துபோகும் - மனம் தாழ்ந்துபோகும்.
- [6.]நான்காவது பாராவின் இடம்பெறும், 'இந்த நிலையில் மனிதர்கள் இருப்பார்களாகில்' - எனும் தொடர், நூலாக்கத்தில், இந்தக் கேவலமான நிலையில் என்று திருத்தம் கண்டிருக்கிறது.
- [7.]ஐந்தாம் பாராவில், அறிவிலிகளின் அவதூறைப் பொருட்படுத்தாமல், தங்கள் கருத்தை உலகத்துக்கு மேதாவிகள் தெரிவிக்கலாம் எனும் வாக்கியம், அறிவிலிகளின் அவதூறைப் பொருட்படுத்தாமல், பிடிவாதமாகத் தங்கள் கருத்தை உலகத்துக்குத் தெரிவிக்கலாம்; என அமைகிறது. மூலப்படிவத்தில் உள்ள மேதாவிகள் என்ற சொல் நீக்கப்பெற்றிருக்கிறது. பிடிவாதமாக என்ற சொல் சேர்க்கப்பெற்றிருக்கிறது.
- [8.]சொணையில்லாதவர்களுடைய என்பது சுரணையில்லாதவர்களுடைய என்பதாகத் திருத்தம் பெற்றிருக்கிறது. மூலப்படிவத்தில் சொரணை என்று இருந்து இடையில் 'ர'கரம் விடுபட்டுப் போயிருக்கக் கூடும்.

- [9-10] பத்திகள் பிரிப்பு முறையில் வேறுபடுகின்றன. இதழின் பக்கங்களுக்கேற்ப, வடிவமைப்புச் செய்வதில் உள்ளதை, நூலாக்கம் செய்கிறபோது மாற்றிக் கொள்ள நேரிட்டிருக்கும் அல்லவா?

- [11] பத்தாவது பாராவின் குழந்தை பிறக்கிற பிரசவ வேதனைதான் என்ற முதல் தொடர் குழந்தையைப் பெற்றெடுக்கும் பிரசவ வேதனைதான் என்பதாகச்செறிவூட்டப்பெறும் நிலையில் திருத்தப்பெற்றிருக்கிறது. அதே பாராவில், தோரணையில் என்பது வேகத்தில் என்பதாகவும் மாற்றப்பட்டிருக்கிறது. தோரணை வேறு, தோற்றம் வேறல்லவா? பொருள் ஆழம் கருதி இந்த மாற்றத்தைச் செய்திருக்கிறார்கள்.




- [12] 'அது அவருடைய கூட்டையே முறித்து விடும் போல இருக்கும்' என்பது, 'அது அவருடைய கூட்டையே முறித்து விடுமோ என்று தோன்றும்' என்று மாற்றப்பெற்றுள்ளது.

- [13] பாரதியாரின் கீதங்களில் ரத்தப் பசை, ஜீவகளை இருக்கின்றன என்று சொல்லுவதில் பொய்யே கிடையாது என்ற தொடரில் 'இருக்கின்றன' என்ற சொல், நூலாக்கத்தில் 'இருக்கிறது' என்பதாக மாற்றம் பெற்றிருக்கிறது.

- [14] 11-வது பாராவில், முழுமையையும் - முழுவதையும் எனத் திருத்தம்.

- [15] 12-வது பாராவில், பெரும்பான்மையில் என்ற சொல், ஏராளமான என்று திருத்தப்பெற்றிருக்கிறது.

- [16] 13-வது பாராவில், 'சேலை யுடுத்துக்கொண்டு, பெண்ணைப்போல பாவித்து நடந்துகொண்டாராம்' என்ற தொடர், நூலாக்கத்தில், 'சேலையுடுத்திக்கொண்டு, தம்மைப்பெண்ணாகப் பாவித்து நடந்துகொண்டாராம்' என்று மாற்றப்பெற்றிருக்கிறது.

- [17] அதே பாராவில், மரக்கிளையில் உட்கார்ந்துகொண்டு, ராமநாமம் ஜபிப்பாராம், ராமகிருஷ்ணர். என்ற வாக்கியத்தின் இறுதிப் பெயர்ச் சொல், நூலாக்கத்தில் நீக்கம் பெற்றிருக்கிறது.

- [18] 14-வது பாராவில் பின்வரும் திருத்தங்கள் உள்ளன. ரகஸிசயத்தையும் - ரகசியத்தையும்

- [19] பாபு விபின சந்திர பாலர் - பாபு விபின் சந்திர பாலர்

- [20] உண்மையின் தரிசனத்துடன் - உண்மை தரிசனத்துடன்

- [21] கவிகளின் உள்ளம் குழைந்த குழந்தையின் உள்ளமாகும் - கவிகளின் உள்ளம் குழந்தையின் குழைந்த உள்ளமாகும்.

- [22] 15-வது பாராவில், ஒட்டக்கூத்தன் என்பதில் உள்ள அன் ஈற்றுவிகுதி, அர் விகுதி பெற்று ஒட்டக்கூத்தர் என்பதாகத் திருத்தப்பட்டுள்ளது. (ஒட்டக்கூத்தன்- ஒட்டக்கூத்தர், ஒட்டக்கூத்தனை- ஒட்டக்கூத்தரை, ஒட்டக்கூத்தனுக்கு- ஒட்டக்கூத்தருக்கு)

- [23] அதே பாராவில், அவர்களிருவரையும் பாட்டுப் பாட வேண்டும் என்று அரசன் வேண்டிக்கொண்டான் என்ற தொடர், பாட்டுப் பாட வேண்டும் என்று அவர்களிருவரையும் அரசன் வேண்டிக்கொண்டான் என்று திருத்தப் பெற்றுள்ளது.

- [24] காக்கை குருவி எங்கள் ஜாதி என்ற பாடல் அடிகள் இதழியல் வசதிக்காக, வடிவமைக்கப்பட்டிருக்கிறது. நூலாக்கத்தில் நான்கடிப் பாடலாக வடிவமைக்கப்பட்டிருக்கிறது. நாமின்றி- என்ற சொல், நூலில்நாமன்றி என்று முறைப்படுத்தப்பட்டுள்ளது. (19வது பாராவிலும் இதே மாற்றம் உள்ளது.)

- [25] 19-வது பாராவில், 'எனவே, பலவீனம் துளிக்கூடக் கிடையாது. அவனுக்குப் பிளவுப் பார்வை, உடைந்த நோக்கம் இல்லை எனவே துயரம் கிடையாது. 'நோக்க நோக்கக் களியாட்டம் அவனுக்கு ஏற்படுவதற்கு என்ன ஆட்சேபனையிருக்கிறது?' என்ற தொடர்கள், நூலாக்கத்தின்போது, உரிய முறையில் திருத்தமும் செறிவும் கருதி, 'எனவே, பலவீனம் துளிகூடக் கிடையாது. 'நோக்க நோக்கக் களியாட்டம்' அவனுக்கு ஏற்படுவதற்கு என்ன ஆட்சேபணை யிருக்கிறது? என்று மாற்றம் பெற்றிருக்கிறது. இத்தொடரில், 'அவனுக்குப்பிளவுப் பார்வை, உடைந்த நோக்கம் இல்லை. எனவே துயரம் கிடையாது' என்ற வாக்கியங்கள் முற்றிலும் நீக்கப்பட்டதோடு, ஆட்சேபனை என்ற சொற்பிழையும் திருத்தப்பட்டிருக்கிறது.

- [26] 20-வது பாராவின் தொடக்கத்தில் உள்ள முத்தியாலுபேட்டை- முத்தியாலுப்பேட்டை என்று திருத்தப்பட்டு, நிறைவில், நோக்கிக் களியாட்டம் அடைவார் பாரதியார் என்ற வாக்கியம், நோக்கிக் களியாட்டம் ஆடுவார் பாரதியார் என்று ஆக்கப்பட்டிருக்கிறது. அதே பாராவில் பின்வரும் இரு திருத்தங்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

- [27] ஆனந்தக் கூத்தடிக்காமல் - ஆனந்தக் கூத்திடாமல்,

- [28] ஆனந்தத்தையும் சக்தியையும் கண்கள் வெளிக்காண்பிக்கும், ரிஜிஸ்டர் (பதிவு) செய்யும் என்ற வரிகளில் உள்ள ‘வெளிக்’ என்ற சொல்லும், ரிஜிஸ்டர் (பதிவு) செய்யும் என்ற வாக்கியமும் நீக்கப்பட்டு, ‘ஆனந்தத்தையும் சக்தியையும் கண்கள் காண்பிக்கும்’ என்பதாகக் கொள்ளப்பட்டிருக்கிறது.
- [29] குழந்தை பிறந்தவுடன் சோர்ந்து போய் நித்திரையை வேண்டும் தாய்மார்களைப் போல - குழந்தை பிறந்தவுடன் சோர்ந்து நித்திரையில் ஆழ்ந்துவிடும் தாய்மார்களைப் போல,
- [30] நேருமோ - நிகழுமோ,
- [31] பசுவைப்போல - சுவாக
- [32] என் கண்ணில் படுவார். - என்கண்ணுக்குப் படுவார்.
- [33] பசுவின் ஆவல் தாபம் - பசுவின் தாபம்
- [34] முகவிலாஸம்- முகவிலாசம்
- [35] உணர்ச்சிகளின் சின்னம், இருக்கவே இருக்காது - உணர்ச்சிகளின் சின்னத்தை முகத்தில் காணவே முடியாது.
- [36] நான் - இந்தச் சொல், நூலாக்கத்தில் தவிர்க்கப்பட்டுள்ளது.
- [37] ‘பாரதியாரின் கவிதைத் தருண ஜோதி முகத்தை, தமிழர்களில் ஆயிரம் பேர் பார்த்திருந்தாலும் போதுமே! ’ என்ற வாக்கியம், ‘கவிதை பிறக்குந் தருணத்தில் காட்சியளிக்கும் பாரதியாரின் ஜோதி முகத்தை, தமிழர்கள் ஆயிரம் பேர் பார்த்திருந்தாலும் போதுமே!’ என்று முறைப்படுத்தப்பட்டுள்ளது.
- [38] கடைத்தேறியிருக்கும்.- கடைத்தேறி யிருக்குமே!
- [39] என்றுதான் என் நெஞ்சம் வருந்துகின்றது - என்று என் நெஞ்சம் வருந்துகிறது
- [40] புதுச்சேரியில், கனகசுப்புரத்னம் என்று ஒருவர் இருக்கிறார். இந்தப்பெயரால், அவரை நீங்கள் அடையாளம் கண்டுபிடிக்க முடியாது. அவர் ‘பாரதிதாஸன்’ என்ற புனைப்பெயருடன், ஆச்சரியப்படத்தக்க தமிழ்க் கவிதை எழுதுகிறார். அவர் பாரதியாருக்குத் தோழன், சீஷன், எனது அருமையான நண்பர். அவர், மேற்சொன்ன தோட்டத்தைப் பற்றி, அதிசயமான சேதியொன்றைச் சொன்னார்.

  இந்தப் பாரா, முற்றிலும் செறிவாக்கம் கருதிப் பின்வருமாறு மாற்றப்பெற்றுள்ளது.

  ‘பாரதிதாஸன்’ என்ற புனைபெயருடன், ஆச்சரியப்படத்தக்க தமிழ்க் கவிதை எழுதும் வாத்தியார் கனக. சுப்புரத்தினத்தை பற்றி முன்னமே குறிப்பிட்டிருக்கிறேனல்லவா? அவர் பாரதியாருக்குத் தோழன், சீஷன். மேற்சொன்ன தோட்டத்தைப் பற்றி அவர் அதிசயமான சேதி யொன்றைச் சொன்னார்.
- [41] சம்பந்தமாக- என்றதுடன் முடிவுறும் இந்த வாக்கியம், சம்பந்தமாகத்தான் என்று திருத்தப்பட்டுள்ளது.
- [42] ‘இன்றைக்குச் சுமார் பதினைந்து வருஷங்களுக்குமுன் புயல் அடித்தது’ என்று. வ.ரா. ‘காந்தி’ இதழில் எழுதிப் பிரசுரமாகிய நாள், 25.5.1934 அப்புயல் புதுச்சேரியைச் சிதைத்த நாள், 22.11.1916.இடைப்பட்ட காலம், 1.9.1944-ல் நூலாக்கம் பெற்ற இதன் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது, 10.9.1945. எனவே, பதினைந்து வருஷங்களுக்கு என்ற கருத்தாக்கம் மாற்றப்பெற்று, இன்றைக்குச் சுமார் முப்பது வருஷங்களுக்கு முன் என்று கொள்ளப்பட்டிருக்கிறது. இப்போது 15 வருஷங்கள் என்பது போய் முப்பது வருஷங்கள் என்பதே நிலைத்து நிற்கிறது.
- [43] கட்டிடங்கள் வீழ்ந்தன- கட்டடங்கள் சரிந்தன
- [44] சேதத்தினடுவே- சேதத்தின் நடுவே,
- [45] முத்தியாலுபேட்டை கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்திலிருந்த மரங்கள் மட்டும் விழவில்லை என்று பாரதிதாஸன் சொன்னார் - முத்தியாலுப்பேட்டை கிருஷ்ணசாமி செட்டியாரின் தோட்டத்திலிருந்த மரங்கள் மட்டும் விழவில்லை என்று பாரதிதாஸன் சொன்னார். மட்டும் என்ற சொல் உறுதிப்பாடு கருதி அழுத்தமாகச் சொல்லும்பொருட்டு, நூலாக்கத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.
- [46] அதைக்கொள்ள் - அச்சுப் பிழை. நூலாக்கத்தில் அதைக்கொள்ள
- [47] தனது ரகஸியத்தை, இயற்கைத் தாய் பாரதியாருக்கு அளித்தஇடம் - தனது ரகசியத்தை, பாரதியாருக்கு போதித்த இடம்
- [48] அவளது - இயற்கைத் தாயின்
- [49] மகத்தும்-மகத்துவமும்

‘காந்தி’ இதழில், நான்கு பக்கங்களில் (25.5.1934 அன்று) வந்த இந்தக் கட்டுரை, நூலாக்கம் செய்யப்பட்டு இரண்டாம் பதிப்பாகி (10.9.1945 அன்று) வந்த போது, நிறுத்தற்குறிகள், அடைப்புக்குறிகள் நீங்கலாக, சுமார் 49 திருத்தங்கள் பெற்றிருக்கின்றன. இது மிக முக்கியமான செய்தி. எழுதுங்காலத்தில் மனப்போக்கில் அமைந்தும், இதழ்ப்போக்கில் வடிவுற்றும் வருகிற கட்டுரை, நூலாக்கம் பெறுகிறபோது, அதன் அமைப்பு, வாசிப்புத்தன்மை, காலக் கணிப்பு ஆகியனவற்றைக் கவனத்திற்கொண்டு மாற்றமும் திருத்தமும் செய்யப்படவேண்டும் என்பதை வலியுறுத்துகிறது. இதனால் நம்பகத்தன்மையும் செறிவும் அழகும் மிகவே செய்யும் என்பது உறுதி.

இவற்றையெல்லாம்விட, எட்டயபுரத்துக் கவிஞர் பாரதி எல்லையற்ற மனிதம் பாடும் மகாகவியாகப் பரிணமித்த பாங்கை விவரிக்கும் கட்டுரை இது என்பதும், இந்தக்கட்டுரையில்தான் பாரதியின் ஓவியம் இடம்பெற்றிருக்கிறது என்பதும் நாம் கவனத்திற் கொள்ள வேண்டிய செய்திகள்.

89 ஆண்டுகளுக்குமுன், இதழில்வெளிவந்த ஒரு கட்டுரை, இப்போது கவனத்திற்கு வருகிறதென்றால், அதற்குக் காரணம், 2022-ம் ஆண்டு டிசம்பரில் காலச்சுவடு பதிப்பகத்தின் வாயிலாக, பழ. அதியமான் கொண்டுவந்த வ.ரா.வின் மகாகவி பாரதியார் என்ற நூல் என்பதுதான்.

எழுதியவரும், இந்நூலின் நாயகரும் சமகாலத்தவர்கள் என்பது ஒருபுறம் இருக்க, எழுதப்பட்ட வரலாறு காலங்கடந்து, காலத்தை வென்று நிற்கும் பெருமையுடையதாக விளங்குகிறதல்லவா, அதுதான் சிறப்பே!



sethupathi@thaiveedu.com




# இலங்கையின் முதலாவது தலித் பத்திரிகை

- என். சரவணன் -

நூறாண்டுகளுக்கு முன்னர் அதாவது 1919-ம் ஆண்டு கொழும்பில் இருந்து வெளியான ஆதிதிராவிடன் பத்திரிகையானது இலங்கையின் தாழ்த்தப்பட்ட சமூகத்தினரால் தாழ்த்தப்பட்டவர்களுக்காக நடத்தப்பட்ட பத்திரிகையாகும். இது இலங்கையில் ஒடுக்கப்பட்ட சமூகத்தினரின் முதலாவது பத்திரிகையாகும். இந்திய வம்சாவளியினரில் ஒடுக்கப்பட்ட சமூகத்துக்காக வெளியானது. ஆதி திராவிடர் என்போர் யார். ஆதிதிராவிடன் பத்திரிகையை வெளியிட்டவர்கள் யார்? எந்த சங்கத்தால் வெளியிடப்பட்டது? அப்பத்திரிகையின் உள்ளடக்கம் என்ன? இலங்கையில் திராவிட இயக்கங்களின் வருகை? திராவிட சித்தாந்தத்தின் இலங்கை வடிவம் எப்படி இருந்தது? என்பது பற்றிய தேடலை இக்கட்டுரை ஆற்றுகிறது.

தமிழகத்தில் திராவிட இயக்கங்களின் வளர்ச்சியிலும், திராவிடக் கருத்துகள், சாதி எதிர்ப்பு, சாதி மறுப்பு, சாதியொழிப்பு, போன்ற கருத்துக்களின் வேகமான வளர்ச்சிக்கு அன்றைய பத்திரிகைகளும், நாடகங்களும் முக்கியமான காரணங்கள். இவை பல்வேறு உயிர் அச்சுறுத்தல்களின் மத்தியில் நடத்தப்பட்டன.

பத்திரிகையில் சாதியெதிர்ப்பு கருத்துக்களை வெளியிட்டு எழுதியமைக்காக ப. இராகவன் என்பவர் கொலை செய்யப்பட்ட செய்தியை அயோத்திதாசர் நடத்திய ‘தமிழன்’ என்கிற பத்திரிகையில் 1913 மார்ச்சில் வெளிவந்த இதழில் பதிவு செய்தார்.

திராவிட இயக்கங்களும், அதன் சித்தாந்தங்களும் தமிழ் நாட்டில் முளைவிட்ட வேளையில், தலித் மக்கள் தம்மை ஆதி திராவிடர் என்று அழைத்துக்கொண்டார்கள். சாதிப்பெயர்கள் கொண்டு அழைக்கப்பட்டு வந்த அவர்கள் ஆதி திராவிடர்கள் என்கிற அடையாளத்துக்குள் வந்தமை ஒரு முக்கிய திருப்புமுனையாக அமைந்தது.

இலங்கைக்கு குடிபெயர்ந்த இந்திய வம்சாவளி மக்கள் மத்தியிலும் இந்த சாதிய ஒடுக்குமுறைகளுக்கு எதிராகத் தோன்றிய இயக்கம் தான் ‘இலங்கை இந்தியர் சங்கம்’. அந்த சங்கத்தினால் தான் ஆதி திராவிடர் பத்திரிகை வெளிக்கொணரப்பட்டது.

ஆதி திராவிடன் இலங்கையின் முதலாவது தலித் இதழ் மாத்திரமல்ல, மலையகத்தின் முதலாவது பத்திரிகையும் கூட.

மலையகத்தை நாம் ஒரு தலித் சமூகமாக இனங்காண்கிறோம். மலையகம் தொடர்பாக வெளிவந்த முதல் பத்திரிகை தொழிலாளர் உரிமை சார்ந்து வெளிவரவில்லை என்பதையும், அப்பத்திரிகை தாழ்த்தப்பட்ட மக்களுக்கான பத்திரிகையாகத்தான் வெளிவந்தது என்பதையும் நாம் கணக்கில் எடுக்க வேண்டியிருக்கிறது.

## ஆதி திராவிடர் கருத்தாக்கம்:


ஆதி-திராவிடர் என்ற சொல்லாட்சி பறையர்களால் பறையர்களை மட்டுமே சுட்டுவதற்கு தோற்றுவிக்கப்பட்டது என்ற வாதம் இக்கட்டுரையில் ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

ஆதி-திராவிடர் என்ற சொல்லாட்சி உச்சபட்ச தீண்டாமைக்குள்ளான பறையர், பள்ளர், சக்கிலி போன்ற பெயர்களால் அழைக்கப்பட்ட மக்கள் பிரிவினர் அனைவரையும் சுட்டுவதற்காகவே ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்டு வந்தது. பிற்காலத்தில் டாக்டர் அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட அடிநிலை மக்களை ‘தலித்’ என்கிற சொல்லாடலுக்கூடாக அழைக்கத்தொடங்கியதன் பின்னர் இந்தியா முழுவதும் அந்த சொல் விரவியது. 90-களில் அம்பேத்கர் நூற்றாண்டு நிகழ்வுகள் தமிழகத்தில் பெரும் தலித் எழுச்சியைக் கொண்டுவந்தது. அம்பேத்கரின் எழுத்துகள் அனைத்தும் தமிழுக்கு கொண்டுவரப்பட அந்த நூற்றாண்டு எழுச்சி காரணமானது. ‘தலித்’ இயக்கங்கள், இலக்கியங்கள், தலித் அரசியல் கருத்தாக்கம் என அனைத்தும் வெகுஜனமயப்பட அந்த எழுச்சி காரணமானது. தலித் என்கிற பதம் அதன் பின்னர் ஆதி திராவிடர், பஞ்சமர் போன்ற பதங்களுக்கு மாற்றீடாக நிலைகொண்டது அதன் பின்னர்தான்.

தலித் என்கிற சொல்லாடல் வெறுமனே தாழ்த்தப்பட்டவர்களை அடையாளப்படுத்த மாத்திரம் பயன்படுத்தப்பட

வில்லை. மாறாக அது சமத்துவம், சுதந்திரம், ஜனநாயகம் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய கோட்பாடாக வளர்த்தெடுக்கபட்டதால் அதை முற்போக்குத் தளத்தில் அனைவருமே கையாள்கிற சொல்லாட்சியாக வலுப்பெற்றது.

அம்பேத்கர் இப்படிக் கூறுகிறார்: ‘பெயர்கள் ஒரு முக்கியமான நோக்கத்தைக் கொண்டுள்ளன. அவை சமூகப் பொருளாதாரத்தில் மகத்தான பங்கை வகிக்கின்றன. பெயர்கள் என்பவை அடையாளக்குறிகள். ஒவ்வொரு பெயரும் ஒரு குறிப்பிட்ட விஷயம் பற்றிய குறிப்பிட்ட கருத்துக்களையும்


ஆதிதிராவிடன்
AUDI DIRAVIDEN.

பத்திரிகையாகப் பதிவு செய்யப் பட்டது.
ஆசிரியர் கே. சுப்பையா.
வருட சந்தா. ரூ 1—00. [மாத வெளியீடு] தனிப் பிரதி விலை சதம் 5.

செடி 1. | ஸ்ரீமுக ஞு ஆடி மீ 17 வ. ஆகஸ்ட் 1. 1934. | கொடி 1.

ஆர்ற் என்கிரேவிங் வர்க்ஸ்,
மலபார் ரோட், கண்டி.

[illegible]

நமது ஏஜண்டு.

நமது “ஆதிதிராவிடன்” பத்திரிகைக்கு சந்தாதாரர்களை சேர்ப்பிக்க [illegible]

ஏ. ராஜமணி, மாணிக்கம்.
“குருஸ் ஸ்டோர்”
நர் 13. வாட் வீதி,
கண்டி.

ஆதிதிராவிட மித்திரன்.

தாழ்த்தப்பட்ட மக்களின் முன்னேற்றங் கருதி வெளி வரும் தமிழ் மாதப் பத்திரிகை. வருட சந்தா.
இந்தியா, இலங்கை, பர்மா முதலிய இடங்களுக்கு ரூ. 1-00
சிங்கப்பூர், பினாங்கு “ “ 1 8 0
தனிப்பிரதி 0 1 0

எண்ணப்போக்கையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அது ஒரு ‘லேபிள்’ - அடையாளச்சீட்டு. இந்த அடையாளச்சீட்டிலிருந்து அது என்ன என்பதை மக்கள் தெரிந்துகொள்கிறார்கள்’ (அம்பேத்கர்: பேச்சும் எழுத்தும், 1997: 467).

அதுவரை ஆதி திராவிடர் சொல்லாட்சியானது தாங்கள்தான் தென்னிந்தியாவின் பண்டைய மக்களென அடையாளப்படுத்திக் கொள்வதற்காகவும் உருவாக்கப்பட்டிருக்கிறது என்ற வரலாற்றுண்மையை முன்வைக்கிறது. மேலும் ஆதி-திராவிடர் சாதிகளைக் கடந்து சாதியற்ற, சமத்துவத்தையும் ஜனநாயகத்தையும் வலியுறுத்தும் கருத்தியலாக பரிணமிக்க முயற்சித்திருக்கும் வரலாற்றினையும் நிறுவுகிறது.

நால்வருண அமைப்பில் இடம்பெற்றிராத உச்சபட்ச தீண்டாமைக் கொடுமைக்குள்ளான புறத்தேயுள்ள மக்கட்பிரிவினரான பறையர், பஞ்சமர், தீண்டத்தகாதோர், ஹரிஜன் போன்ற பெயர்களால் அவர்களின் விருப்பத்திற்குட்பட்டோ அல்லது வெறுப்பிற்குள்ளாகியோ அழைக்கப்பட்டனர். தீண்டத்தகாதோர், ‘தீண்டப்படாதவர்’ அருவருப்பூட்டுகின்ற, பயமுறுத்துகிற சொல்லாடலாக சமூகத்தில் எப்படி நிலைபெற்றது என்பதை நாம் கவனிக்க வேண்டும்.

காந்தியின் ‘ஹரிஜன்’ (‘ஹரி’யின் மக்கள்) என்கிற கருத்தாக்கமானது, ‘ஹரிஜன்’ என்கிற பெயர் எவ்வளவு புனிதமாகயிருந்தாலும் சரி, அது யாரைக் குறிக்கிறதோ அவர்கள் மனதில் தாங்கள் தாழ்ந்தவர்கள் என்ற எண்ணத்தை அப்பெயரே புகுத்திவிடுகிறதுதென்று நான் நினைக்கிறேன். அவர்கள் எவ்வளவு முன்னேற்றமடைந்தாலும், ‘ஹரிஜன்’ என்ற பெயராலேயே அழைப்பதாயிருந்தால், அத்தகைய எண்ணத்தை அவர்கள் மனதிலிருந்து அகற்றுவது மிகவும் கடினமாக இருக்கும். ஹரிஜன் என்றவுடனேயே, தீண்டாமை, தாழ்த்தப்பட்டவரென்பவை தான் பாமர மக்களுக்குப்படும். இயற்கையிலேயே இத்தகைய எண்ணத்தைப் புகுத்தாமலும், எடுத்தவுடனேயே தாழ்த்தப்பட்ட நிலையைக் குறிக்காமலும் உள்ள ஒரு பெயரை உபயோகிப்பது நல்லதல்லவா? மற்ற வகுப்பினரையும் தழுவக்கூடிய ஒரு பெயரை உபயோகிப்பது உசிதமல்லவா? (தமிழ் ஹரிஜன், 1946: 5).

தமிழ்ச்சமூகத்தில் நால்வருணம் பிற்காலத்தில் கலந்தது தான் ஆனால் கம்மாளர் (அரசாணை எண். 1802), இடையர் (யாதவ மித்ரன், 1930) போன்ற சாதிகள் தங்கள் சாதியின் பெயரை விஸ்வபிராம்மணன், யாதவ் என்று மாற்றிக் கொண்டனர். தீண்டத்தகாதோர், பஞ்சமர், பறையர், சாதிக்கு புறத்தேயுள்ளோர் என அழைக்கப்பட்ட மக்கள், தங்கள் மீதான தீண்டாமை ஒடுக்குமுறைக்கெதிராக காலனிய ஆட்சிக் காலத்தில் திரட்சி பெற்றபோது அம்மக்கள் ஆதி-இந்து (Nandini Gooptu, 2006), ஆதி-தம் (Ronki Ram, 2004), ஆதி-திராவிடர் போன்ற பெயர்களில் தங்களை அடையாளப்படுத்திக் கொண்டனர். மண்ணின் மைந்தர்கள், ஆரியருக்கு முற்பட்டோர் என்ற உரிமையைக் கொண்டாட இவர்கள் ஆதி என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தினர் (Gail Omvedt, 1991: 18-19 Susan Bayly, 2000: 246). இப்படித்தான் திராவிடத்தை கைக்கொண்டனர்.

ஆதி திராவிடர் என்கிற சொல்லாட்சிக்கு உரியவர்கள் பறையர்கள் என்றும், பள்ளர், சக்கிலியர் ஆகிய சாதிகள் உள்ளடங்காது என்கிற வாதமும் எங்களை அந்த சொல்லாட்சிக்குள் அடைக்காதீர்கள் என்று அல்லர், சக்கிலியர் தரப்பில் இருந்தும் ஆங்காங்கு சலசலப்புகளைக் காண முடிகிறது.

பஞ்சமர், பறையர் ஆகிய பெயர்கள் நீக்கப்பட்டு ஆதி-திராவிடர் என்று மாற்றம் செய்வதற்கான போராட்டம் 1892-ம் ஆண்டு முதலே நடைபெறத் தொடங்கியிருக்கிறது. ஆதி-திராவிடர் என்கிற சொல் ஆரம்பத்தில் பறையர்களால் முன்வைக்கபட்டாலும் அது தமக்கானது என்று பறையர்கள்

வாதிட்டதில்லை. ஆதி திராவிடர் என பெயர் மாற்றக் கோரி சென்னையில் 1922-ம் ஆண்டு ஜனவரியில் நடத்தப்பட்ட போராட்டத்தில் 50,000 பேர் பங்கேற்ற பேரணி நடத்தப்பட்டி ருக்கிறது. பின்னர் அது பறையர்களுக்கு மட்டுமே உரியது அல்ல, மாறாக உச்சபட்சத் தீண்டாமைக் கொடுமைக்குள் ளான பள்ளர், சக்கிலியர் போன்ற சாதிகள் அனைவருக்கு மான பெயராகக் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

## அயோத்திதாசர்:

அயோத்திதாசர் ஆதிதிராவிடர் கருத்தை உள்வாங்கி, பின் னர் அதனைப் பரப்பிச் சென்றதில் முக்கிய முன்னோடி. ஆதி திராவிடர்களுக்கும் பௌத்தத்துக்கும் உள்ள உற வைப் பற்றி அவர் நிறைய எழுதியிருக்கிறார். இலங்கைக்கு



அவர் மேற்கொண்ட விஜயத்தின் போது அவர் பௌத்த தீட்சை பெற்று பௌத்தராக ஆனார். அந்த விஷயத்தைப் பற்றியும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்கும்.

19-ம் நூற்றாண்டில் பௌத்த மறுமலர்ச்சிக்கு அடித்தளமிட்ட நிகழ்வுகளில் மிகவும் முக்கியமானது 'பஞ்ச மகா விவாதங் கள்'. அந்த ஐந்து விவாதங்களின் இறுதி விவாதம் பாணந்து றையில் நிகழ்ந்தது. அன்றைய சிலோன் டைம்ஸ் பத்திரிகை யின் ஆசிரியர் ஜோன் கெபர் (John Capper) பாணந்துறை விவாதம் பற்றி எழுதிய தொடரானது, பின்னர் பிரசித்திபெற்ற நூலாக 1878-ல் அமெரிக்காவில் வெளிவந்தது (The great debate – Buddhism and Christianity – face to face). இலங்கை யில் ஏற்பட்ட பௌத்த எழுச்சியில் இந்த நூலுக்கு பெரும் பாத்திரம் உண்டு. இந்த நூலை வாசித்த அமெரிக்காவை சேர்ந்த கேணல் ஹென்றி ஸ்டீல் ஒல்கொட் இந்த நூலின் மீதும், அந்த விவாதத்தின் மீதும் அந்த விவாதத்தை நடத்தி யவர்கள் மீதும் ஈர்ப்புகொண்டார்.

அதன் பின்னர் அவர் விவாதத்தில் தொடர்புடைய மிகெட்டு-வத்தே குணானந்த தேரர், ஹிக்கடுவே சுமங்கல தேரர் ஆகி யோருடன் கடிதத் தொடர்புகளை ஏற்படுத்திக்கொள்கிறார். இந்தத் தொடர்பு அவரை இலங்கை வருகைக்கு வித்திட்டது.

அமெரிக்காவில் முதலாவதாக பௌத்தத்துக்கு மாறியவராக அறியப்பட்டவர் அவர். இந்த நிலையில் தான் பாணந்துறை விவாதம் குறித்த நூலை அறிகிறார். இலங்கை வர தீர்மா னிக்கிறார். 1875-ம் ஆண்டு அவர் நியுயோர்க்கில் பிரம்ம ஞான சங்கத்தை (Theosophical Society) எலேனா ப்லா-வட்ஸ்கி என்பவருடன் இணைந்து தொடங்கினார்.

அதன் பின்னர் 1880, மே 17 அன்று காலியில் பெரும் வர வேற்புடன் இலங்கை வந்தடைந்தார். ஜூன் 17-ல் பிரம்ம ஞான சங்கத்தை காலியில் அமைத்தார். அச்சங்கத்தின் தலைமையை புத்தர் பிறந்த பூமிக்கு மாற்றுவதற்காக இந்தி யாவில் பல இடங்களைத் தேடியலைந்து இறுதியில் சென்னை அடையாரில் 1882-ல் பிரம்மஞான சங்கம் நிறுவப் பட்டது.

## அயோத்திதாசரின் இலங்கை விஜயம்:

1882-ல் ஒல்கொட், பிளாவுட்ஸ்கி அம்மையார் ஆகியோரை சந்தித்த பண்டிதர் சென்னையில் ஆன்னி பெசென்ட் மற்றும் அயோத்திதாசர் ஆகியோருடன் இணைந்து ஒடுக்கப்பட்ட பஞ்சமர்களுக்கான சிறுவர் பள்ளிகளை அமைப்பதில் ஒல்-கொட் ஈடுபட்டார். ஒல்கொட்டின் வருகைக்கு முன்னரே பண் டிதர் பௌத்தத்தின் பால் ஈர்க்கப்பட்டிருந்தார்.

1890-ல் அயோத்திதாசப் பண்டிதர் ஒல்கொட் மற்றும் பிளா-வுட்ஸ்கி அம்மையார் ஆகியோருடன் இலங்கை சென்று அங்கு சுமங்கல தேரரின் மூலம் மூவரும் பஞ்சசீல தீட்சை பெற்று பௌத்தர்களாகினார்கள். இலங்கையில் இருந்து திரும்பிய சில ஆண்டுகளில் 1898-ல் அவர் தென்னிந்திய சாக்கைய பௌத்த சங்கத்தை உருவாக்கி மீண்டும் தென் னிந்தியாவில் பௌத்த மறுமலர்ச்சியை உருவாக்கினார். அதே ஆண்டு அவர் 'புத்தர் என்னும் இரவு பகலற்ற ஒளி' என்கிற நூலை வெளியிட்டார்.

'சாதிபேதமற்ற திராவிடர்களே இத்தேசத்தின் பூர்வகுடிகள் ஆகும். இவர்கள் பெரும்பாலும் தமிழ் பாஷா விருத்தியைக் கோரி நின்றவர்கள் ஆதலின் தென்னாட்டுள் தமிழர் என்றும், வடநாட்டார் திராவிடர் என்றும், திராவிட பௌத்தர்கள் என் றும் வழங்கி வந்ததுமன்றி, இலங்கா தீவகத்திலுள்ளோர்

சாஸ்திரங்களிலும் சரித்திரங்களிலும் இப்பூர்வக்குடிகளைத் திராவிட பௌத்தர்கள் என்று வரைந்திருப்பதுமன்றி வழங்கிக் கொண்டும் வருகின்றார்கள்'

(தமிழன் 2:21, நவ 4, 1908.) என அயோத்திதாசர் தரும் திராவிட அடையாளம் என்பது, தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட தமிழர்களை, அதிலும் குறிப்பாகச் சாதிபேதமற்ற தமிழர்களையே அடையாளப்படுத்தியிருப்பது முக்கியமான ஒன்றாகும்.

அயோத்திதாச பண்டிதரின் கருத்துகள் இப்பத்திரிகையின் வரவில் செல்வாக்கு செலுத்தியிருந்தபோதும் அவரைப் பற்றிய எந்த விபரங்களோ கருத்துக்களோ கிடைக்கப்பட பத்திரிகைகளில் இருக்கவில்லை என்பதையும் இங்கே பதிவு செய்ய வேண்டும்.

## ஆதி திராவிடர் கருத்து இலங்கையில் நிலை கொள்ளவில்லை:

நடேசய்யர் மலையக தொழிற்சங்க விடயத்தில் பெரும் முற்போக்கு பாத்திரத்தை வகித்தபோதும் ஒரு பிராமணராகவே வாழ்க்கை நடத்தியவர். அவரின் எழுத்துகளிலோ, செயலிலோ சாதிய விடுதலைக்கான கூறுகள் இருந்ததில்லை எனக் கூற முடியும். நடேசய்யர் திராவிட அல்லது ஆதி திராவிட கருத்துகளால் கவரப்பட்டவர் இல்லை.

ஆதி திராவிட கருத்தாக்கம் மலையகத்தில் சுமார் அரை நூற்றாண்டு காலம் செல்வாக்கு செலுத்தியிருக்கிறது என்பதற்கு பிற்காலத்தில் 1942-ம் ஆண்டு யூன் 28 அன்று ஏ.எம் துரைசாமி புசல்லாவையில் இலங்கை இந்திய ஆதி திராவிடர் காங்கிரஸ் என்கிற அமைப்பைத் தொடங்கியதை உதாரணமாகக் கொள்ளலாம். அது தொடர்பாக அன்று வீரகேசரியில் வெளிவந்த ஒரு செய்தி இப்படிக் குறிப்பிடுகிறது.

'இலங்கை இந்தியா ஆதித்தமிழர்களும் தற்காலம் தாழ்த்தப்பட்ட மக்கள் எனப்படுவோருமாகிய பல்வேறு வகுப்பினர்கள் அடங்கிய பொதுக்கூட்டம் ஒன்று கடந்த ஞாயிற்றுக்கிழமை காலை 10.15 கபுசலாவை சரஸ்வதி வித்தியாலயத்தில் நடைபெற்றது. இலங்கையின் பல பாகங்களில் இருந்தும் திரளாக பொது ஜனங்களும் பல பிரமுகர்களும் சமூகமளித்திருந்தார்கள். கூட்டத்திற்கு திரு ஏ.எஸ் ஜேசுபாபாதம் தலைமை வகித்தார். அச்சமயம் தாழ்த்தப்பட்ட மக்களெனப்படுவோரின் பல்வேறு வகுப்பினர்களை ஒன்று சேர்ப்பதற்காகவும் அவர்களின் சமூக பொருளாதார முன்னேற்றத்திற்காக பாடுபடுவதற்காகவும் இன்னும் அவர்களுக்காக வேண்டி எல்லாவித தொண்டுகளில் ஈடுபடவும் ஒரு ஸ்தாபனம் ஸ்தாபிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து திருவாளர்கள் கே. ராஜ-லிங்கம், எஸ். சோமசுந்தரம், கே.எஸ். எஸ்பி மற்றும் பலரும் பேசிய பின் 'இலங்கை இந்திய ஆதித் தமிழர் காங்கிரஸ்' என ஏகமனதாக ஸ்தாபிக்கப்பட்டது.'

1934-ம் ஆண்டு ஓகஸ்ட் முதலாம் திகதி வெளியான 'ஆதி திராவிடன்' பத்திரிகையின்படி கே. சுப்பையா அவர்களால் கண்டியில் உள்ள ஆதி திராவிடன் பிரஸில் அச்சிட்டு வெளியானதாக கூறுகிறது. அதாவது ஒரு அச்சகம் நடத்துமளவுக்கு பலமாக 'ஆதி திராவிடன்' பத்திரிகை இருந்திருக்கிறது என்று உணர முடிகிறது. இந்த அச்சகம் இல.11, அல்லுலுவ ரோட், கண்டி என்கிற விலாசத்தில் இருந்திருக்கிறது.

இதே வேளை பத்திரிகையின் உள் பக்கங்களின் கீழ் கோட்டின் கீழே பெரிய எழுத்தில் சில பழமொழிகளை வெளியிட்டிருக்கிறார்கள். அதில் சில 'முக்குலம்' பற்றியதாக இருக்கிறது. உதாரணத்துக்கு

**'முக்குல (திராவிடர்) வீரர் உயர்வுறல் திண்ணம்'**

**'ஒப்புடன் நாளும் (முக்)குல சேவை, செய்து தப்பாமல் வெற்றி சாதித்திடுக'**

**'ஏதும் முக்குலப் புத்திரர் இழிவுற்றிருப்பினும், சோதரரெனவே தாங்கி நடத்துக'**

ஆதிதிராவிட கருத்துருவாக்கமானது தாழ்த்தப்பட்ட 'தீண்டத்தகாத' பள்ளர், பறையர், சக்கிலியர் ஆகிய சாதிகளை குறிப்பதற்கான சொல்லாடலாகவே பிறப்பெடுத்திருந்தது. ஆனால் முக்குலம் என்பது 'கள்ளர், மறவர், அகமுடையார்' ஆகிய சாதிகளைக் குறிப்பதாக பொதுவில் பொருள் கொள்ளப்படுகிறது. மலையகத்தில் முக்குலத்தோர் என்போர் ஆதி திராவிடர்களை ஆதிக்கம் செலுத்தும் ஆதிக்க சாதிகளாக அடையாளம் காணப்படுபவர்கள் ஆக இங்கே ஆதிதிராவிடர் X 'முக்குலம் என்கிற முரண்பட்டதும் குழப்பகரமானதுமான அணுகுமுறைகளைக் காண முடிகிறது. அதேவேளை முக்குலத்தவரின் ஆதிக்கம் அன்றிருந்ததை விட பிற்காலத்திலேயே அதிகம் தலை தூக்கியிருப்பதையும் உணரமுடியாமலில்லை.

மேற்படி பத்திரிகையின் முதலாவது ஆசிரியராக எஸ்.பி.-கோபாலசாமி, 1919-ல் தொடங்கப்பட்டபோது பணியாற்றியிருக்கிறார். பின்னர் அதன் ஆசிரியராகவும், பதிப்பாசிரியராகவும் கே. சுப்பையா இயங்கியிருக்கிறார். அவரின் கட்டுரைகளைக்கூட அதில் காண முடிகிறது. ஆனால் உள்ளடக்கத்தில் சுமார் 70 சதவீதத்துக்கும் அதிகமாக தமிழக செய்திகளும், விபரங்களும், கருத்துக்களுமே உள்ளடங்கியுள்ளன. இலங்கை பற்றிய செய்திகள் குறைவாகவே உள்ளன.

எனவே ஆதி திராவிடர் பற்றிய தமிழக நிலைமைகளையும், கருத்துக்களையும் இந்திய வம்சாவளி மக்கள் மத்தியில் பரப்பும் இலக்கைக் கொண்டே அது இயங்கியிருக்கிறது என்று பொருள்கொள்ளலாம்.

மலையகத்துக்கு தாயகத் தமிழகத்திலிருந்து வெளிவந்த பத்திரிகைகள் அவர்களை தமிழகத்துடன் உணர்வுபூர்வமாக பிணைக்க உதவிற்று என்கிற நிலை இருந்தது. அவ்வப்போது தமிழகத்திலிருந்து வெளிவந்த பத்திரிகைகளின் ஊடாகவே நடப்பு செய்திகளையும், விபரங்களையும் அறிந்து கொண்டிருந்தார்கள். ஆறுதலையும், ஆனந்தத்தையும் கூடவே ஏக்கத்தையும் அடைந்தார்கள்.

ஆனால் அப்பத்திரிகைகள் தோட்டத் தொழிலாளர்களிடம் நேரடியாக வந்து சேருவதற்கு காலம் எடுத்தது. அதை விலை கொடுத்து வாங்கவும், வாசிப்பறிவு உடையவர்களும்,

அப்பத்திரிகையை அடையவும் சிலரே இருந்தார்கள். அவர்களிடம் சேரும் பத்திரிகை தோட்டத்தில் பொது வெளியிலும் வேலை இடங்களிலும் ஒருவர் உரத்து வாசிக்க மற்றவர்கள் செவி கொடுத்து கேட்கும் வழக்கமே இருந்தது. அவ்வாறு தோட்டத் தொழிலாளர்களை வந்தடைய சில வேலைகளில் மாதங்களும் ஆகலாம். அத்தனை பழைய செய்திகள் காலம் தாழ்த்தி அவர்களுக்குக் கிடைத்தாலும், அதுவே அவர்களை இன்பமூட்டுபவையாகவும், ஆறுதல் தருபவையாகவும் இருந்தன.

அவ்வாறு தமிழகப் பத்திரிகைகளுக்கு கணிசமான சந்தை இலங்கையில் இருந்தது.

நடேசய்யர் இலங்கைக்கு புறப்பட்டு வந்ததே தமிழகத்தில் வெளியாகிக்கொண்டிருந்த தனது பத்திரிகைக்கு சந்தா சேர்ப்பதற்கும், சந்தையை உருவாக்கிக் கொள்வதற்கும் தான். அப்படி வந்தவர் மலையகத் தொழிலாளர்களின் துயர் வாழ்க்கையைக் கண்டு அவர்களுக்காக சேவை செய்ய நிரந்தரமாக தங்கிவிட்டவர் தான் அவர். எனவே மலையகத் தமிழர்களின் இலக்கிய கலாசாரத்தை வளர்த்து விட்டத்தில், அன்று இலங்கை வந்து சேர்ந்த தமிழகப் பத்திரிகைகளின் வகிபாகம் குறைத்து மதிப்பிடக் கூடியதல்ல.

திராவிட இயக்கத்தின் முன்னோடி அமைப்பான நீதிக்கட்சியின் கருத்தியல்களோடு இந்த இதழ் தொடக்க காலகட்டத்தில் நல்லுறவு கொண்டிருந்தது. அதுபோல இவ்விதழ் வைதீக சார்பு கருத்துக்களை வெளியிட்டு வந்த போதிலும் சாதி ஒழிப்பு மனுதர்ம எதிர்ப்பு, தாழ்த்தப்பட்டோர் விடுதலை போன்ற குறிக்கோள்களில் எவ்விதக் கருத்தியல் சமரசத்தையும் மேற்கொள்ளவில்லை. தமிழகத்தில் நடைபெற்ற முதல் சாதிமறுப்பு மணம், மதமாற்றம் பற்றிய சில புதிய தகவல்களையும் ஆதிதிராவிடன் பதிவு செய்துள்ளது.

1920 மார்ச்சில் சங்கர கண்ணப்பர் எழுதிய 'நாம் சூத்திரர்களா? என்ற கட்டுரை இடம் பெற்றுள்ளது. இரண்டாவது இதழில் வெளிவந்த கட்டுரைகளின் விவரம் வருமாறு, 'மானிட சரீரமும் அதன் வாழ்க்கையும்', 'ஆதிதிராவிட சமூகத்தினரின் முன்னேற்றம்' 'பெண்கல்வி' (தொடர்) ஆகியவை இடம் பெற்றுள்ளன.

தென்னிந்திய தமிழ்ச்சாதி அமைப்பின் அடக்குமுறைகள், இலங்கையிலும் வேறு வடிவங்களில் தொடர்ந்தன. இலங்கையின் மலையகப்பகுதிகளில் குடியேறிய தமிழர்களிடம் சாதியம் வேரூன்றியிருந்தது. குடியானவ சாதிகளான (வேளாளர், மொட்டை, சோழிய சைவ வேளாளர்) முக்குலத்தோர். (கள்ளர், மறவர், அகம்படியார்) சிறுபான்மையின செட்டி, ரெட்டி, வண்ணார், கொட்டி வண்ணார், அம்பட்டர் ஆகியோர் அடங்குவர். இக்குடியானவரான சாதியினர் தாழ்த்தப்பட்ட மக்களான பள்ளர், பறையர், வண்ணார் இவர்களைக் கீழான சாதிகளாவே கருதினர். இவர்களில் 90 சதவீதத்தினர் தாழ்த்தப்பட்ட சமூகத்தினராக இருந்தனர். இவ்வாறாக தமிழக சாதியத்தின் நீட்சி இலங்கையிலும் தொடர்ந்து நீடித்தது.

மலையகப்பகுதிகளின் சாதியக் கொடுமையைவிட இறுக்கமான சாதியமைப்பு இலங்கையின் வடபகுதி வாழ் தமிழ் மக்கள் மத்தியிலும், சிங்களச் சமூகத்திலும் நிலவியது. தமிழகத்தில் தம்மை ஆதிக்கம் செலுத்திய சாதியினர் இலங்கையில் அத்தனை பெரிய எண்ணிக்கையில் இராதது ஆறுதலாக இருந்தாலும், தாழ்த்தப்பட்ட சாதியினருக்குள் இருந்த படிநிலை ஒழுங்கில் இருந்த ஆதிக்கமும், எண்ணிக்கையில் குறைந்த அளவில் இருந்த ஆதிக்க சாதியினரின் ஒடுக்குமுறைகளும், பாரபட்சங்களும் இருக்கவே செய்தன. சாதி ஒடுக்குமுறையானது தமிழக அனுபவத்திலிருந்து மாறுபட்டிருந்தாலும் அளவிலும், பண்பிலும், வடிவத்திலும் வேறுபட்டிருந்தது.

வடக்கு கிழக்கு தமிழ்ப்பகுதிகளிலும், தமிழர்கள் குடியேறிய மலையகம், கொழும்பு மற்றும் நாட்டின் ஏனைய பகுதிகளிலும் சாதிய அமைப்பின் கொடுங்கோன்மைக் கல்வி, சமய, பண்பாட்டுத் தளத்தில் நீக்கமற நிறைந்திருந்தது. வடக்கில் மோசமான தீண்டாமையும், பாரபட்சமும் உச்சத்தில் இருந்தன. அங்கே தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 19-ம் நூற்றாண்டின் ஆரம்பம் வரை அடிமைகளாக இருந்தனர். இவற்றுக்கு எதிரான போராட்டங்கள் 20-ம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் மெல்ல மெல்ல வலுக்கத் தொடங்கின. இவ்வாறாக சாதிய முரண்பாடுகளும், மோதல்களும் நிகழ்ந்த காலகட்டத்தில் இலங்கையில் 'ஆதிதிராவிடன்' இதழ் தோன்றுவதற்கான சூழல் உருவாகியது. (இரா பாவேந்தன்)

இதனைத் தொடர்ந்து இந்தியாவிலிருந்து கூலிகளாக சென்ற தமிழர்கள் பலரும் இணைந்து, 1912-ம் ஆண்டு 'இலங்கை இந்தியச் சங்கம்' என்ற அமைப்பை உருவாக்கினர். இந்த அமைப்பில் இந்து தமிழர்களும், கிறித்தவத் தமிழர்களும் இடம் பெற்றிருந்தனர். இந்த அமைப்பின் சார்பில் 1919-ம் ஆண்டு பெப்ரவரியில் ஆதிதிராவிடன் இதழ் வெளியிடப்பட்டது.

ஆதிதிராவிடன் இதழ் 1/8 அளவில் 16 பக்கங்களைக் கொண்ட முதல் இதழ், 'ஆதிதிராவிடன் ஒரு சிறந்த மாதாந்திரத் தமிழ்ப் பத்திரிக்கை' என்ற வாசகத்துடன் 1919-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் வெளியாகியது. 'தெய்வமிகழேல், சக்கரநெறிநில், ஊக்கமது கைவிடேல்' என்ற முழக்கத்துடன் கொழும்பு அல்பட்ர்ரோடு பொல்வத்தை இந்திய இலங்கைச் சங்கத்தின் சார்பில் வெளிவந்துள்ளது.

இந்த இதழ் கொழும்பு எண் 27, Barber Street, Robert Printers என்கிற அச்சகத்தில் அச்சிடப்பட்டு. ஒவ்வொரு மாதமும் 15-ம் தேதி வெளிவந்துள்ளது. ஆதிதிராவிடன் இதழின் முதல் கால்பக்கத்தில் இதழின் பெயர் முழக்கங்கள் இடம் பெற்றிருந்தன. இதழுக்கு பக்க எண்கள் தொடர் எண்களாக இட்டுள்ளனர். சில இதழ்களில் ஆதிதிராவிடர் பஞ்சாங்கம் வெளிவந்துள்ளது.

1919 தொடக்கம் 1921 வரையான ஆதி திராவிடன் இதழ்களைத் தொகுத்து 2008-ம் ஆண்டு இரா. பாவேந்தன் ஒரு நூலை வெளியிட்டிருக்கிறார். அத்தொகுப்பில் தாழ்த்தப்பட்டோர் அரசியல், கல்வி, சமயம், இலக்கியம், பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக ஆதிதிராவிடன் இதழில் வெளியிடப்பட்ட கட்டுரைகளும் செய்திகளும் தொகுக்கப்பட்டுள்ளது.

இத்தொகுப்பில் தாழ்த்தப்பட்டோர் அரசியல், கல்வி, சமயம், இலக்கியம், பெண்கள் முன்னேற்றம் தொடர்பாக ஆதிதிராவிடன் இதழில் வெளியிடப்பட்ட கட்டுரைகள் இடம் பெற்றுள்ளன. மகாத்மா ஜோதிராவ் ஃபூலே இயக்கத்தைச் சார்ந்த மன்னர் சத்ரபதி சாகு மகாராசர் ஆற்றிய உரையின் தமிழ் வடிவமானது ஃபூலே இயக்கத்திற்கும், தமிழகத்திற்கும் இடையேயான தொடர்பை விளக்கும் ஓர் அரிய ஆவணமாக இத்தொகுப்பில் இடம் பெற்றுள்ளது. 1934-ம் ஆண்டு 5 சதத்துக்கு விற்பனையான 'ஆதி திராவிடன்' சஞ்சிகை இலங்கை -இந்திய சங்கம் என்கிற அமைப்பின் மூலமாகவே நடத்தப்பட்டிருக்கிறது.

ஆரம்ப இதழ்களில் இலங்கை - இந்திய சங்கத்தின் கூட்ட அறிக்கைகள் இடம்பெற்றுள்ளன. அக்கூட்டங்களில் கலந்து கொண்டவர்கள் பற்றியும், அங்கு எடுக்கப்பட்ட தீர்மானங்கள் பற்றிய விபரங்களும்கூட அதில் இடம்பெற்றுள்ளன. அத்தீர்மானங்களில் ஒன்று சங்கத்தின் உறுப்பினர்களுக்கு திராவிடன் இதழை இனாமாக கொடுக்கப்படவேண்டும் என்கிற தீர்மானமும் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. (மலர் 2, இதழ் 3)

இலங்கை - இந்தியர் சங்கத்தின் ஒவ்வொரு கூட்டங்களின் போதும் புதிய ஒருவர் தலைமை தாங்கும் மரபை பின் பற்றியிருக்கிறார்கள். ஆதி திராவிடன் பத்திரிகையின் ஆசிரியர் எஸ்.பி. கோபாலசாமியும் அவ்வாறு சில தடவைகள் தலைமை தாங்கியிருக்கிறார் என்றும் அப்பத்திரிகை செய்திகளில் இருந்து அறிய முடிகிறது. இதன் உப ஆசிரியராக பொ. கனகசபை செயற்பட்டிருக்கிறார். (மலர் 2. இதழ் 8)

இந்த சங்கத்தின் தீர்மானங்களை இன்று பார்க்கையில்...

- தமிழகத் தலைவர் ஒருவர் இறந்துவிட்டால் அவருக்கு அனுதாபக் கடிதம் அனுப்புவது தொடர்பாக தீர்மானம் நிறைவேற்றுவது,
- இலங்கையிலும், தமிழகத்திலும் இறந்தவர்கள் பற்றிய அனுதாபக் கட்டுரைகளை வெளியிடுவது, பத்திரிகைக்கு நெருக்கமானவர்களின் குடும்ப திருமண நிகழ்வுகளைப் பற்றிய செய்திகளை வெளியிடுவது,
- தமிழகத்தில் நடந்த சில தேர்தல்களில் ஆதிக்க சாதி வெறிபிடித்தவர்களை வெற்றிபெற விடாமல் செய்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு சாதகமானவர்களை வெற்றி பெறச் செய்ய பரிந்துரைகளை செய்வது

போன்ற விபரங்கள் அதிகமாக இருப்பதை அவதானிக்க முடிகிறது.

தமிழகத்தில் இடம்பெறும் சாதியக் கொடுமைகள் பற்றிய செய்திகளும் தொடர்ச்சியாக பதிவு செய்யப்பட்டு வந்திருக்கிறது. சில உண்மைக் கதைகளும் பிரசுரமாகியுள்ளது.

இப்பத்திரிகையின் சாதியெதிர்ப்பு போக்குக்கு ஆதரவு தெரிவித்து ஒரு வாசகர் வாழ்த்தி பணஉதவி செய்த கடிதம் ஒன்று 1920-ம் ஆண்டு வெளியாகியிருக்கிறது.

*கனம் தங்கிய ஐயா பத்திராதிபர் அவர்கட்கு,*

*ஐயா! தாங்கள் அன்புடன் அனுப்பிய சஞ்சிகைகளும் மற்றும் சபையின் சட்டதிட்டமுதலான வகைகளையும் கண்ணுற்றேன், நம்மிந்திய சோதர சோதரிகள் தவறுதலுண்டாகுங்கால், அவர்கட்கு வேண்டிய உதவிகள் புரியுமாறு செய்திருக்கும் ஏற்பாடுகளை வாசித்து அகமகிழ்ந்தேன்.*

**'குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்**
**நடைமெலிந்தோமாரூர் நண்ணினு நண்ணுவர்'**

*என்னும் மூதுரைப்படி இவ்வேளை ஆதிகுலத் திருக்குலத்தாராகிய, கலிவாகு, வீரவாகு மற்றும் சக்கரவர்த்திகட்கு இத்தகைய இழிகாலமுண்டான நாள் முதல் இதுவரை ஜாதியெனும் தீராத சுழற் காற்றில் அகப்பட்டு அவதிப்படுபவர்களை ஈடேற்றுவான் வேண்டி இலங்கை இந்தியர் சங்கம் இதன் அங்கங்களாகிய தங்கங்களே! உங்கள் பெருமுயற்சிக்கு அதிக நன்றிபாராட்டுகிறேன். கடவுள் உங்களோடு இருப்பாராக.*

*'ஆதி திராவிடன் நிதிக்காக' தங்கள் பேருக்கு ரூபா 8.00 இன்றைய தினம் மணியாடர் செய்திருக்கிறேன். இவ்வுலகில் இவன் ஜீவனோடிருக்கும் வரை தமிழ் வருஷாவருஷம் ரூபா 10 பத்து சங்கத்திற்கு அனுப்பி வைப்பேன். எனையாளும் ஈசன் கிருபையுண்டாகவேணும்.*

*அன்பை அதிகமாக நேசிக்கும்,*

*எம்.எஸ். லாசரஸ்*
*19, ஏப்ரல் 1920*

மேற்படி கடிதத்தின்படி ஆண்டுதோறும் 10 ரூபாயை கொடுப்பதாக கூறியிருக்கிறார். பத்திரிகையின் விலை அப்போது ஐந்து சதம். மாதப் பத்திரிகை என்கிற வகையில் சந்தா கட்டினால் கூட அதற்கு ஆகும் 60 சதம் தான். தபால் செலவையும் சேர்த்து அப்போது வருடாந்த சந்தாவாக ஒரு ரூபாவை அறவிட்டிருக்கிறார்கள் எனும் போது, இந்த பத்து ரூபாய் அன்றைய காலத்தில் பெரிய தொகைதான். லாசரஸ் என்கிற அந்த வாசகர் சாதி எதிர்ப்புக்காக இயங்குவதை யொட்டி பாராட்டியிருக்கிற விதத்தில் அன்றைய காலப்பகுதியில் அரிதான பணியாகத் தெரிவதுடன், ஒரு துணிச்சல் மிக்க ஊடக முயற்சியாகவும் 'ஆதி திராவிடன்' பத்திரிகையைக் குறிக்க முடியும்.

ஆதிதிராவிடன் பத்திரிகை ஆரம்பத்தில் இருந்ததை விட போகப்போக தீவிரமும், கனதியும், தரமும் கூடிய பத்திரிகையாக ஆகியிருப்பதை 1934-ம் ஆண்டு பத்திரிகையைக் காணும் போது இனங்கண்டுகொள்ள முடியும்.

இந்த இடைக்காலத்தில் தமிழகத்தில் பகுத்தறிவு இயக்கத்தின் வளர்ச்சி, ஈ.வே.ரா பெரியாரின் வகிபாகம் போன்றவையும் ஊக்கியாக அமைந்திருக்க வேண்டும்.

தீண்டாமை பற்றி ஆதரவாகவும் எதிராகவும் வெளிவந்த கருத்துக்களை தொகுத்து 'பகுத்தறிவு ஏ', 'பகுத்தறிவு பி' என்கிற உப தலைப்பிட்டு முழுப்பக்கம் வெளிவந்திருக்கிறது.

பெரியார் கூறிய 'தீண்டாமை கொண்ட மதத்திற்கும் குஷ்டரோகம் நிறைந்த மனிதருக்கும் வித்தியாசம் தெரியவில்லை' என்கிற கருத்தும் அதில் இடம்பெற்றுள்ளது.

மேலும் நீதிக்கட்சியைப் போல 'தினசரி' நடத்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். இதற்கு அனைத்து தாழ்த்தப்பட்ட மக்களும் ஒன்றிணைந்து உட்சாதி, மத, வர்க்கப் பாகுபாடுகளை விட்டு ஒற்றுமையுடன் செயல்பட வேண்டுகோள் விடுத்திருக்கிறது ஆதி திராவிடன்.

'திராவிடர் இவ்வளவு முன்னேற்றமடைந்ததற்கும் அடைந்துவருவதற்கும் காரணம் அவர்களால் நடத்தப்பெற்றுவரும் 'ஜஸ்ற்றிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளே. அதுபோல நாமும் நம் குறைகளை கவர்மெண்டாருக்கும் எடுத்தோதி நன்மை பெற நமக்கென ஆங்கிலத்திலும், திராவிடத்திலும் தினசரி இன்றேல் வாரப் பத்திரிக்கைகள் இன்றியமையாதனவாம். மேற்கூறிய விஷயத்திற்கு நம்மவரெல்லோரும் (பள்ளர் பறையர் சக்கிலி என்ற முப்பிரிவாகும்) எச்சமயத்தாராயினும், என்னிமையுள்ளோராயினும் ஒன்றுபட்டு ஒற்றுமையுடனும் விடாமுயற்சியுடனும் பிரச்சார வேலை செய்யவேண்டும். (ஆதிதிராவிடன் 15 நவம்பர் 1921)

அதுவரை காலம் பத்திரிகைகள் தமிழகத்திலிருந்து இலங்கைக்கு வந்துகொண்டிருந்த நிலை இருக்கும் போதும் ஆதி திராவிடன் தமிழகத்துக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆதிதிராவிடன் இதழ் தபால் மூலம் தமிழகம், கோலார் தங்கவயல் பகுதி, பர்மா ஆகிய இடங்களுக்குக் அனுப்பப்பட்டுள்ளது.

இரண்டாம் வருட நிறைவின் போது தபால் செலவு பற்றிய சிக்கலை எடுத்துக் கூறும் ஒரு விளக்கமான செய்தி வெளியாகியிருக்கிறது. அதன்படி தமிழக சந்தாக்காரர்கள் தபால் செலவை கருத்திற்கொண்டு புதிய விலையை ஏற்றுக்கொள்ளும் படி கேட்டுக்கொண்டுள்ளனர். (1920 ஜனவரி ஆதி திராவிடன்)

மலையகப் பகுதிகளில் ஏமாற்றிப் பிழைக்கும் சம்பவங்கள் பற்றிய எச்சரிக்கை செய்திகளும் காணப்படுகின்றன.

***நோட்டீஸ்***

*பல்கட்டும் (Dentist) வேலை செய்கிற ஒருவன் நாளது மாதம் 1-திகதியாக கலகாவில் வந்து அனேகம் ஆட்களுக்கு பல்கட்டுகிறதாக பணத்தை வாங்கிக்கொண்டு ஏய்த்துப் போட்டுப் போய்விட்டான். தேடியும் அகப்படவில்லை. அவன் சிங்களமனுஷன், உயரமானவன், மெலிந்தவன், சப்பாத்து கால்சட்டை உடுத்தியிருப்பான். இவன் அநேகமாய் சின்ன டவுன்களில் உலாவித்திரிந்து மனுஷரை ஏமாற்றுகிறான். ஆகையால் இப்படிப்பட்டவனைப் பற்றி எச்சரிக்கையாக விருக்கவும்.*

*ஏ.ஏ. ஆபிரகாம் மலர் 2 இதழ் 6 பக் 85*

அதே வேளை ஆதி திராவிடன் பத்திரிகையும் 'இலங்கை தேசிய காங்கிரஸ்' அமைப்பும் உருவானது ஒரே காலத்தில் தான்.

7-வது இதழில் இப்படி ஒரு செய்தி காணப்படுகிறது.

'இது நிற்க, நாளது செப்ரெம்பர் மாதம் இவ்விலங்கையில் நடக்கும் இலங்கை நேஷனல் காங்கிரஸ்க்கு, நம்மவர்களின் நலவுரிமைகளைப் பற்றி பேசுவதற்காக மேற்படி இலங்கை இந்திய சங்கத்தின் பேரால் கனம் லாரி முத்துகிருஷ்ணா அவர்களையும், கனம் ஏ.எஸ். சாம்ஜான் அவர்களையும் பிரதிநிதியாக அனுப்பப்பட வேண்டுமென கனம் கே.பி. சிவன் அவர்கள் கொண்டுவந்த பிரேரணையை கனம் பி. கனகசபை அவர்கள் ஆமோதித்தனர்.'

இந்த செய்தி இலங்கை - இந்தியர் சங்கம் அன்றைய முக்கிய இலங்கைத் தலைவர்கள் இணைந்து ஆரம்பித்த பிரதான அரசியல் இயக்கமான இலங்கை இந்தியர் சங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதை அறிந்து கொள்ள முடிகிறது. துரதிஷ்டவசமாக அவர்கள் எத்தகைய கோரிக்கைகளை முன்வைத்து கதைத்திருக்கிறார்கள், யாரை சந்தித்தார்கள்? எப்போது, அதன் பிரதிபலன்கள் ஏதும் உண்டா என்பது போன்ற விபரங்களை அறிய முடியாத அளவுக்கு நம்மிடம் எந்த ஆதாரங்களும் கிடைக்காமல் போயிருக்கிறது.

நம் கைவசம் கிட்டிய 1934-ம் ஆண்டு பத்திரிகை கண்டியில் இருந்து வெளியாகியிருக்கிறது. 1919-ம் ஆண்டு பத்திரிகை கொழும்பு நகரில் இருந்து வெளியாகியிருக்கிறது. இரா.-பாவேந்தர் ஆதி திராவிடன் பத்திரிகையின் இரண்டாண்டு உள்ளடக்கங்களை மாத்திரம் தொகுத்து நூல் வெளியிட்டிருக்கிறார். இவை இரண்டும் வேறு வேறா அல்லது ஒரே பத்திரிகை தானா? இடையில் நின்று போனதா? பத்திரிகையின் காரியாலயம் கொழும்பில் இருந்து கண்டிக்கு மாற்றப்பட்டதா என்கிற கேள்விகள் எழாமல் இல்லை. ஆனால் அதன் பெயரும், உள்ளடக்க அரசியலும் தாழ்த்தப்பட்ட மக்களின் குரலாக ஒலிப்பதால் இது ஒன்றாகவே இருக்கும் என்கிற ஊகத்துக்கு வர முடியும். அந்த முடிவில் இருந்தே இக்கட்டுரை பார்க்கப்பட்டிருக்கிறது.

19-ம் நூற்றாண்டில் இலங்கையில் தமிழ்ப் பதிப்புத் துறை என்பது யாழ்ப்பாணத்திலேயே மையம் கொண்டிருந்தது. அது மட்டுமன்றி அச்சுத்துறையானது நாவலர் மற்றும், நாவலர் வழிவந்த சாதி ஆதிக்க சக்திகளின் பிடியிலேயே இருந்தது. மிஷனரிகளின் பத்திரிகைகள் சாதி இறுக்கங்கள் இன்றி ஓரளவு தளர்வாக இயங்கினாலும்கூட அவை தாழ்த்தப்பட்டவர்களுக்கான நேரடி பத்திரிகையாக இருந்ததில்லை. அப்படிப் பார்க்கும் போது ஆதி திராவிடன் பத்திரிகை ஒரு முற்போக்கானதும் துணிச்சலானதுமான பாத்திரத்தை ஆற்றியிருக்கிறது.

இன்று ஆதி திராவிடன் பத்திரிகையின் ஒரு இதழைக் கூட பெற முடியவில்லை. குறிப்பாக இலங்கை தேசிய சுவடி கூடத் திணைக்களத்தில் ஒரு பிரதியும் இல்லை (இ. சிவகுருநாதன், 1993). அது எப்போது நின்றுபோனது? ஏன் நின்று போனது? போன்ற விபரங்களைக்கூட மேலதிகமாக அறிய முடியவில்லை. இக்கட்டுரையானது இந்த இடத்தில் இருந்து அடுத்த கட்டத்துக்கு அதன் தடங்களைத் தேட உந்துதலாக இருக்கட்டும்.



sarawanan.n@thaiveedu.com




கார்ல் பொப்பர் (1902-1994) அனுபவவாத மரபைச் சேர்ந்த மெய்யியலாளர் ஆவர். விஞ்ஞானத்தை விஞ்ஞானம் அல்லா தவற்றில் இருந்து வேறுபடுத்திப் பார்த்தல் வேண்டும் என்ற கருத்துடையவராக இருந்த பொப்பர் பொய்ப்பித்தல் (Falsification) என்னும் கோட்பாட்டை அறிமுகம் செய்தார். இக் கோட்பாடு மெய்யியல் வரலாற்றில், குறிப்பாக விஞ்ஞானத் தின் மெய்யியலின் (Philosophy of Science) வரலாற்றில் பொப்பருக்கு முக்கியமான இடத்தை வழங்கியது. பிரான்சிஸ் பேக்கனால் அறிமுகம் செய்யப்பட்டு அனுபவவாத மெய்யி யல் பிரிவினரால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வந்த விஞ்ஞான முறைக்கு (Scientific Method) பதிலீடாகவே பொய்ப்பித்தல் கோட்பாடு என்ற புதியதொரு விஞ்ஞான முறையை பொப்பர் முன்மொழிந்தார்.

விஞ்ஞான முறையின் தொகுத்தறி முடிவுகள் நிச்சயமான முடிவுகள் அல்ல என்ற ஐயத்தை டேவிட் ஹியும் (1711-1776) என்ற மெய்யியலாளர் எழுப்பினார். ஹியும் எழுப்பிய சந்தே கமும் அது தொடர்பான விடயங்களும் 'ஹியுமின் பிரச்சினை' (Hume's Problem) என அழைக்கப்பட்டன. ஹியுமின் பிரச்சி னைக்கு அனுபவவாத நோக்குநிலையில் நின்று தீர்வு கூறியவராகப் பொப்பர் கருதப்படுகிறார்.

இக்கட்டுரையில் இனிவரும் பகுதி முழுமையாகப் பேராசிரி யர் ஜயதேவ உயன்கொடவின் 'Social Research - Philosophical and Methodological Foundations' என்னும் நூலின் 64-70 வரையான பக்கங்களில் உள்ளவற்றைத் தழுவித் தமிழில் தருவதாக அமைந்துள்ளது.

**கார்ல் பொப்பரின் 'பொய்ப்பித்தல்' கோட்பாடு:**

இருபதாம் நூற்றாண்டில் கார்ல் பொப்பர் என்னும் சிந்தனை யாளர் 'ஹியுமின் பிரச்சினை' பற்றி விரிவாக ஆராய்ந்தார். அவரது ஆய்வு அனுபவவாத அறிவாராய்ச்சியலின் தருக் கத்திற்கு (Logic of Empiricist Epistemology) உட்பட்டதாகவே அமைந்தது. ஆஸ்திரிய நாட்டினரான பொப்பர் அங்கிருந்து இங்கிலாந்து நாட்டிற்குச் சென்று லண்டன் பொருளியல் பள் ளியில் (London School of Economics) பேராசிரியராகப் பணி யாற்றினார். அவரது The Logic of Scientific Discovery) (விஞ் ஞானக் கண்டுபிடிப்பின் தருக்கம்) என்னும் நூல் 1934-ல் எழு தப்பட்டது. ஆயினும் அந்நூல் 1959-ம் ஆண்டிலேயே ஆங்கி லத்தில் வெளிவந்தது. பொப்பர் எழுதிய இன்னொரு முக்கி யமான நூல் 'Conjectures and Refutations' (ஊகித்தல்களும் மறுப்புரைகளும்) என்பதாகும். இந்நூல் 1963-ல் வெளியா யிற்று.

அவரது முன்னைய (1934) நூலான 'விஞ்ஞானக் கண்டுபிடிப் புகளின் தருக்கம்' என்ற நூலில் பொப்பர் கருதுகோள்க ளைப் பரிசோதிக்கும் (Testing) நடைமுறையை விளக்கிக் கூறினார். அவதானிப்பு, சரிபார்த்தல் (verification) என்ற இரண்டினையும் அவர் பரிசோதித்தலின் அடிப்படையாகக் குறிப்பிட்டார். பொப்பர் அனுபவவாத நிலைப்பாட்டை ஏற்ற வராயினும் அனுபவவாத விஞ்ஞானங்களின் பிரதான அளவு கோலாகத் தொகுத்தறிமுறை இருப்பதாகப் பேக்கன் கூறிய தைப் பொப்பர் ஏற்கவில்லை.

பொப்பர் 1930-ல் தமது முதலாவது நூலை ஜேர்மன் மொழி யில் வெளியிட்டவேளை விஞ்ஞானத்தின் மெய்யியலில் பெரிய மாற்றம் ஒன்று ஏற்பட்டிருந்தது. 1930-களிலும் 1940-களிலும் வியன்னா வட்டம் மிகச் செல்வாக்குள்ள மெய்யியல் பள்ளியாக வளர்ச்சியுற்றது. அது மேற்குலகில் அனுபவவா தத்திற்குப் புத்துயிர் அளிப்பதாகவிருந்தது. வியன்னா வட்டம் டேவிட் ஹியும், ஜோன் ஸ்டுவார்ட் மில், அகஷ்ட் கம்ட் ஆகி யோரின் பழைய நேர்க்காட்சிவாதத்திற்குப் பதிலாக புதிய நேர்க்காட்சிவாதம் (A New Positivism) ஒன்றை அறிமுகம் செய்திருந்தது. புதிய நேர்க்காட்சி வாதத்திற்கு குறியீட்டுத் தருக்கவியல் (Symbolic Logic) கணிதவியல், அறிவாராய்ச்சி யியல் என்பனவற்றினாலும் ஆராய்ச்சிகளாலும் விஞ்ஞானத்

தின் அடிப்படைகளை நிறுவி வலுச்சேர்த்தனர். (Blumberg and Feigel 1931) வியன்னா வட்டம் அனுபவவாதத்தின் தொகுத்தறிமுறைக்குப் புத்துயிர் அளித்தமை பொப்பருக்கு அதிருப்தியை உண்டாக்கியது. வியன்னா வட்டத்தின் முக்கிய உறுப்பினர்கள் சிலருடன் தனிப்பட்ட முறையிலும், அறிவுசார் நிலையிலும் அவர் முரண்பட்ட நிலைப்பாடு உடைய-வராக இருந்தார். தருக்கவியல் நேர்க்காட்சி வாதத்தின் பிடியில் இருந்து அனுபவவாத முறையை மீட்டெடுக்கும் கடமை தமக்கு உள்ளதாக பொப்பர் கருதினார். வியன்னா வட்டத்தின் பிடியில் அனுபவவாதம் குறுகிய குழுவாதமாக மாறி விட்டதாகக் கருதினார். 'விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளின் தருக்கம்' என்ற பொப்பரின் பிரபலமான நூலிலேயே (1930) அவர் தொகுத்தறி முறையின் குறைகளை எடுத்துக்காட்டி அதனோடு தனக்கு உடன்பாடு இல்லை என்பதை வெளிப்படுத்தினார். தனியன்களான அவதானிப்புகளினதும் பரிசோதனைகளினதும் அடிப்படையில் அமையும் தனிக்கூற்றுக்களை (Singular Statements) ஆதாரமாகக் கொண்டு கருதுகோள்கள் அல்லது கோட்பாடுகள் போன்ற சர்வவியாபகமான பொதுவான கூற்றுக்களைக் கூறமுடியாது என்பதே பொப்பர் சுட்டிக் காட்டிய முக்கியவிடயம்.

'சர்வ வியாபகமான பொதுக்கூற்றுக்களை தனியன்களின் படியான கூற்றுக்களில் இருந்து ஊகிப்பது நியாயத்திற்குப் பொருந்தாது. எவ்வளவு தொகையான வெள்ளை அன்னங்களை அவதானித்திருந்தாலும் அன்னங்கள் யாவும் வெள்ளை நிறத்தன என்ற கூற்றைத் தருக்கமுறையில் முடிவாகக் கொள்ள முடியாது. இது பொய்ப்பிக்கபடலாம்.

மேற்குறித்த கூற்று பொப்பரின் கருத்தை விளக்குவதாக உள்ளது. தொகுத்தறிமுறை உளவியல் பிரச்சினை ஒன்றை அறிவாராய்ச்சியியல் பிரச்சினையுடன் ஒன்று சேர்த்துக் குழப்புவதாக உள்ளது எனவும் பொப்பர் குறிப்பிட்டார். தொகுத்தறிமுறை அனுபவவாதத்தின் தனித்துவமான அடையாளத்தை எடுத்துக்காட்டும் இருபண்புகளான,

- அனுபவம் சார்ந்ததாக இருத்தல்.
- புலனறிவுக்கு அப்பாற்பட்டதாக இல்லாது இருத்தல்

என்பனவற்றைக் கொண்டதல்ல எனவும் பொப்பர் குறிப்பிட்டார். வேறு வார்த்தைகளில் கூறுவதாயின் விஞ்ஞானத்திற்கும் அபௌதீகத்திற்கும் இடையிலான வேறுபாட்டை எடுத்துக்காட்டும் அடையாளத்தைத் தொகுத்தறிமுறை கொண்டிருக்கவில்லை.

பேக்கனின் அவதானித்தல் விதி (Law of Observation) குறித்து ஹியும் எழுப்பிய பிரச்சினை பற்றி முன்னர் குறிப்பிட்டோம். மெய்யியலில் ஹியுமின் பிரச்சினை எனக் குறிப்பிடப்படுவதில் ஒரு சுவாரசியமான ஆராய்ச்சி முறையியல் வினா உள்ளடங்கி உள்ளது. விஞ்ஞானத்தில் இருந்து அபௌதிகத்தை (Metaphysics) வேறுபடுத்துவதற்கு அவதானித்தல் போதுமான திருப்தியான அளவுகோலாகுமா என்பதே அவ்வினா. இவ்வினாவில் இருந்து தனது வாதத்தை ஆரம்பிக்கும் பொப்பர் விஞ்ஞானத்தை விஞ்ஞானமல்லாததில் இருந்து வேறுபடுத்துவதற்குத் தொகுத்தறிமுறை ஏற்றதல்ல எனக்குறிப்பிடுகிறார். ஒரு கருதுகோளை எத்தனைதரம் அவதானிப்புகள் கொண்டு உறுதிப்படுத்தியிருந்தாலும், அதைப் பொய்ப்பிப்பதற்கு ஒரே ஒரு சான்று மட்டும் போதுமானது. இதுவே தொகுத்தறிமுறை என்ற சங்கிலித்தொடரில் மிகவும் பலவீனமான கண்ணியாகும். பொப்பர் அதற்கு மாற்றான முறையொன்றை முன்வைத்தார். சரிபார்த்தல் (Uerification) என்பதற்குப் பதிலாக பொய்ப்பித்தல் என்னும் விதியைப் புகுத்திய கால் பொப்பர் தொகுத்தறி முறையுடன் பொய்ப்பித்தல் விதியை இணைத்தார்.

பொப்பர் மரபு வழிப்பட்ட அனுபவ நேர்க்காட்சிவாதக் கருத்தான சரிபார்த்தல் என்பதைப் பற்றிய சுவாரசியமான அறிவாராய்ச்சியியல் வாதம் ஒன்றை முன்வைத்தார். இருந்து வரும் கோட்பாடு ஒன்றை நிராகரித்தல் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்தல் என்பவற்றால் அறிவு முன்னேற்றம் ஏற்படுவதில்லை. அவ்வாறு நிரூபிப்பதற்காக விஞ்ஞான ஆராய்ச்சியை மேற்கொள்வதால் நன்மை எதுவும் இல்லை. பொப்பர் இவ்விவாதத்தை மார்க்சியம் ஃபிராய்டிசம் என்பனவற்றின் மீதான விமர்சனத்தின் ஊடாக முன்வைத்தார். வியன்னாவில் பொப்பர் 1920-களில் மாணவராக இருந்தபோது அங்கு மார்க்சிசமும் உளப்பகுப்பியலும் மிகுந்த செல்வாக்கு உடையனவாக இருந்தன. மார்க்சியத்தினதும், ஃபிராய்டிசத்தினதும் ஆதரவாளர்கள் தம்மைச் சுற்றி நிகழும் நிகழ்வுகளும் சான்றுகளும் தமது கோட்பாடுகளுக்கு நிரூபணமாக அமைந்துள்ளதாகக் கூறி வருவதைக் கண்டார். இவ்வாறு கூறுவது ஏற்கமுடியாததாக அவருக்குத் தோன்றியது. இதே காலத்தில் நேர்க்காட்சிவாதிகள் விஞ்ஞானத்தை விஞ்ஞானம் அல்லாததில் இருந்து பிரித்துக் காட்டுவது அனுபவ ரீதியான சரிபார்த்தலே (Empirical Verification) எனக்கூறி வந்தனர். கோட்பாட்டைச் சான்றுகள் மூலம் உறுதிப்படுத்துதல் என்ற கருத்தைப் பொப்பர் அறிவாராய்ச்சியியல் நோக்கிலும், முறையியல் நோக்கிலும் நிராகரித்தார். சரிபார்த்தல், உறுதிப்படுத்தல் என்பன அறிவின் வலிதுடைமைக்கு ஆதாரங்களாக அமையமுடியாது எனவும் அவற்றால் எவ்விதப் பயனும் இல்லை எனவும் குறிப்பிட்டார். விஞ்ஞான அறிவு சரிபார்த்தல், உறுதிப்படுத்தல் வழியாக அல்லாது பொய்ப்பித்தல் வழியிலேயே முன்னேறிச் செல்கிறது எனப் பொப்பர் குறிப்பிட்டார். பொப்பரின் வாதம் புதுமையான கருத்தொன்றை முன்வைத்தது. விஞ்ஞான அறிவின் தனித்துவமான சிறப்புப்பண்பு இருந்துவரும் கோட்பாடு ஒன்றை புதிய சான்றுகளின் ஒளியில் பொய்ப்பித்தல் என்னும் செயல்முறை மூலம் மறுத்துரைக்கும் ஆற்றலில் உறைகிறது என்றார்.

பொய்ப்பித்தல் என்னும் கருத்து அனுபவவாத விஞ்ஞானத்திற்கு பொப்பர் வழங்கிய பங்களிப்பு ஆகும். பொய்ப்பித்தல் கோட்பாட்டின் படி விஞ்ஞானிகள் மிகவும் துணிச்சலான ஊகங்களையும் கருதுகோள்களையும் சான்றுகள் கொண்டு

நிறுவுவதற்கு முயற்ச்சிக்கும்போது புதிய அறிவை உற்பத்தி செய்கிறார்கள். அவர்கள் முன்வைத்த முடிவுகள் பின்னர் வேறு விஞ்ஞானிகள் முன்வைக்கும் ஊகங்களின் படியான ஆய்வுகள் மூலம் மறுத்துரைக்கப்பட்டுப் பொய்ப்பிக்கப்ப டும். இவ்வாறு பொய்ப்பித்தல் செயல்முறை தொடரும், அடுத்துவரும் ஒவ்வொரு ஊகமும் (Conjecture) பொய்ப்பிக் கப்பட்டதை விட வலிதுடையதாக இருக்கும். ஆகையால் விஞ்ஞானம் ஏற்கனவே இருந்துவரும் கோட்பாடுகளைச் சான் றுபடுத்தி உறுதி செய்வதால் வளர்வதில்லை. அதற்கு மாறாக இருந்துவரும் கோட்பாடுகளுக்கு எதிரான சான்று களை முன்வைத்து ஆராய்வதன் மூலமே வளர்ச்சியடைகி றது. சான்றுகள் மூலம் ஒரு கோட்பாடு மறுத்துரைக்கப்படும் போது அது கைவிடப்படும். அல்லது திருத்தம் செய்யப்ப டும். புதிய அறிவைப்பெறுவதில் அக்கறையுடைய விஞ் ஞானி எப்பொழுதும் பொய்ப்பித்தலுக்கு வேண்டிய சான்றுக ளையே தேடிக் கொண்டிருக்கவேண்டும். சிறந்தவொரு கோட் பாடு பொய்ப்பிப்பதற்கு ஏற்றதாகவே வடிவமைக்கப்பட்டிருக் கும். பொய்ப்பித்தல் சாத்தியமற்றதாக வடிவமைக்கப்படும் கோட்பாடு சிறந்த கோட்பாடாக இருப்பதில்லை. ‘எல்லா அன்னங்களும் வெள்ளை நிறத்தன’ என்று கூறுவதைவிட ‘எல்லா அன்னங்களும் வெள்ளை நிறத்தன அல்ல’ (All Swans are not White) என்று கூறுதலே விஞ்ஞான ஆய்வைத் தூண்டி வளர்க்கக் கூடிய கூற்று. விஞ்ஞானம் கோட்பாடுக ளையும் கருதுகோள்களையும் கடுமையான பரிசோதனைக் கும் சரிபார்த்தலுக்கும் உட்படுத்துகிறது. அவை நிராகரிக் கப்படமுடியாத வரைக்கும் ஏற்புடமை பெறுகின்றன. சிறந்த விஞ்ஞானக் கோட்பாடு அவதானித்தல் மூலம் பெறப்படும் சான்றுகளின் ஆதாரத்தில் தங்கியிருப்பதில்லை. அதைப் பொய்ப்பிப்பதற்கு எடுக்கப்பட்ட முயற்சிகள் தோற்றுப்போ கும் வரையில் அது பலத்தோடு நின்று நிலைக்கும்.

‘ஊகங்களும் மறுப்புரைகளும்’ என்ற நூலில் பொப்பர் மனித அறிவு (Human Knowledge) அடிப்படையில் ஊகங்களின்படி அமைவனவே என்று குறிப்பிட்டார். மனித அறிவு என்பதில் விஞ்ஞானக் கோட்பாடுகளும், இயற்கை விதிகள் (Laws of Nature) என்று அழைக்கப்படுவனவும் அடங்கும் என்றும் அவர் குறிப்பிட்டார். விஞ்ஞான அறிவு பரிசோதனை செய்து பார்ப்பதன் மூலம் தவறுகளைக் களைவதனால் முன்னேற்றம் அடைகிறது. சான்றுகள் மூலம் பொய்ப்பிக்கப்படும்போது விஞ்ஞானக் கோட்பாடுகளும் கருதுகோள்களும் நிராகரிக்கப் படுகின்றன - திருத்தப்படுகின்றன. முன்னையதைவிடத் திருந்திய வடிவில் ஏற்கப்படுகின்றன. காலப்போக்கில் புதிய கோட்பாடுகள் பழைய கோட்பாடுகளால் பதிலீடு செய்யப்ப டுகின்றன. ஆகையால் எல்லா அனுபவ அறிவும் பொய்ப் பிக்கப்படக் கூடியனவாகவே உள்ளன. விஞ்ஞான அறிவைப் புலன்கடந்த மெய்யியல் (Metaphysics) போலி விஞ்ஞானம் (Pseudo-Science) ஆகியவற்றில் இருந்து பிரித்துக் காட்டு வது விஞ்ஞானம் பொய்ப்பித்தலைச் சாத்தியமாக்குவதாய் இருத்தலாலாகும். ஒரு கோட்பாட்டைப் பரிசோதித்தல் என் பது சரிபார்த்தல் (Verification) அன்று பொய்ப்பித்தலே ஆகும். பிரபஞ்சம் பற்றிய மிகுந்த துணிச்சல் உடைய ஊகங்களைக் கூறிய கோட்பாடுகள் விஞ்ஞானத்தின் முன் னேற்றத்திற்குச் சிறந்த பங்களிப்பை வழங்கியிருக்கின்றன. தயக்கத்தோடும், துணிச்சலின்றியும் இருந்துவரும் கோட்பா டுகளுக்கு வெறுமனே உறுதிப்படுத்தும் சான்றுகளை தந்து கொண்டிருக்கும் கோட்பாட்டாளர்களை விடத் துணிச்சலுடை யவர்களான விஞ்ஞானிகளின் ஊகங்கள் நன்மை அளித்தன என்று பொப்பர் குறிப்பிட்டார். அவருடைய கூற்றுக்களின் உட்கிடத்தையான பொருள் விஞ்ஞான உண்மை என எது வும் இல்லை என்பதாகும். (There is no Scientific truth as such). உண்மையை நெருங்கிச் செல்வதற்கு விஞ்ஞானிகள் எடுக்கும் கடும் முயற்சி என்ற செயல்முறைதான் விஞ்ஞா னம். இச் செயல்முறையினூடே உண்மையெனக் கூறும் கோட்பாடுகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்படுகின்றன. பொப்பரின் இவ்விவாதத்தினை விமர்சன அறிவுவாதத்தின்படி அறிவு முடிந்த முடிவு அன்று (Hypothetical) அது ஒரு ஊகம் மட்டுமே. பொய்ப்பிக்கப்படக்கூடியது. தற்காலிகமா னது எனக் குறிப்பிடலாம். விஞ்ஞானமுறை என்பது தொகுத் தறிமுறையன்று. அது ஊகங்களும் அவற்றை மறுத்துக்கூறும் மறுப்புரைகளும் (Conjectures and Refutations) கொண்ட ஒரு செயல்முறையாகும். ஊகங்களை விஞ்ஞானிகள் பரிசோ தித்து உறுதிப்படுத்துவதை விடுத்து அவற்றை விமர்சனம் மூலம் கட்டுப்படுத்துவதோடு பரிசோதனைமூலம் மறுத்து ரைக்கின்றார்கள். இதுவே விஞ்ஞானம் முன்னேறிச் செல்லும் செயல்முறையாகும்.

பொப்பரின் பொய்ப்பித்தல் கோட்பாடு விஞ்ஞானத்தின் மெய் யியல் என்ற துறையில் விவாதங்களுக்கும் சர்ச்சைகளுக்கும் வழியமைத்தது. சில சிந்தனையாளர்கள் பொய்ப்பித்தல் ஏற் றுக் கொள்ளக்கூடியதன்று என நிராகரித்தனர். பொப்பரின் ஏனைய நூல்களில் அவர் மார்க்சியத்திற்கு எதிரான கருத் துக்களைக் கூறினார். இதனால் மார்க்சீய அறிஞர்கள் பொப்-பர் மீது கடுமையான எதிர்த்தாக்குதல்களைத் தொடுத்தனர். ஆயினும் பொப்பரின் பொய்ப்பித்தல் கோட்பாட்டை ‘விஞ் ஞான மெய்யியலுக்கு அவர் செய்த மிக முக்கிய பங்க ளிப்பு’ (His Most Important Contribution to Philosophy of Science) (Gorton 2005:16) என்று போற்றும் பொப்பர் ஆர்வ லர்களும் பலர் உள்ளனர். இவ்வார்வலர்கள், விஞ்ஞானம், விஞ்ஞானம் அல்லாததில் இருந்து வேறுபடுவது சரிபார்த்த லால் (Verification) அல்ல, அது பொய்ப்பித்தலால் மட்டுமே ஆகும் என்று கூறுவர். ஆயினும் மெய்யியலாளர்களிடையே பொப்பர் மெய்யியலுக்கு அளித்த பங்களிப்பு எனப் போற்று மளவுக்கு அவருக்கு மதிப்பு இருப்பதாகக் கூற முடியாது. அலன் மஸ்கிறேவ் (Alan Musgrave) பின்வருமாறு குறிப்பிட் டுள்ளார்.

‘பொப்பரின் விஞ்ஞானத்தின் மெய்யியலுக்கு விஞ்ஞானிகளி டம் மதிப்பு உள்ளது. ஆனால் பெரும்பான்மையான விஞ் ஞான மெய்யியல்துறை மெய்யியலாளர்கள் அவரின் கருத்து கள் குறைபாடுடையன என்று கருதுகின்றனர்.’ (Musgrauve (2004:16)

றொம் ஹரே என்னும் மெய்யியலாளர் பொப்பரின் ‘பொய்ப் பித்தல்’ என்ற கருத்து மேலோட்டமான பார்வையில் கவர்ச்சி கரமானது ஆனால் அது ஆழமற்றது என்றார். பொப்பரின் பொய்ப்பித்தலுக்கும் உண்மையான விஞ்ஞான நடைமுறைக் கும் சம்பந்தமில்லை, ஒரு விஞ்ஞானக் கோட்பாட்டை மாறு பட்ட சான்றுகளைக் கண்டறிந்தவுடன் விஞ்ஞானிகள் நிராக ரிப்பதில்லை. சாதாரணமாக மாறுபட்ட சான்றுகளைக் கண்ட போது மாறுபட்ட சான்றுகள் கிடைத்ததன் காரணத்தை விளக் கிக்கூற முற்படுவர் என்றும் ஹரே கூறுகின்றார். கருதுகோள் ஒன்றிற்குச் சாதகமற்ற எதிர்ச் சான்றுகள் கிடைக்கும்போது பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் விஞ்ஞானிகள் தமது கருதுகோளிற்குச் சார்பான சான்றுகளாக அவற்றை விளக் கும் கோட்பாட்டை உருவாக்குகின்றனர். அசௌகரியமான சான்றுகள் இதன்மூலம் சாதகமான சான்றுகளாகி விடுகின் றன. (Harre 1972:52) சேம்பர்ஸ் (1999) போல் பெயரபென்ட் (Paur Feyerabend) ஆகியோரும் இதனையொத்த கருத்துக்க ளைக் கூறியுள்ளனர்.

எதிரான சான்றுகள் கிடைத்தன என்ற காரணத்தால் ஒரு கோட்பாட்டை முழுமையாக விஞ்ஞானிகள் நிராகரிப்ப தில்லை, கோட்பாட்டின் மையமான கூறுகள் (Core Theory) நிராகரிக்கப்படுவதில்லை என விமர்சகர்கள் கருத்துரைத்துள் ளனர். சில கூறுகள் நிராகரிக்கப்படுகின்றன, சில திருத்திய மைக்கப்படுகின்றன, சில நிராகரிக்கவும் படுகின்றன. ஆனால் இவையாவும் உப அனுமானங்களே (Auxillary Assumptions). அவ்வகையில் இரண்டாம் நிலையானவை, முதன்மையான அனுமானங்கள் அல்ல. ஆகையால் விஞ் ஞானக் கோட்பாடுகள் சான்றுகளால் உறுதிப்படுத்தப்படுவது மில்லை, அவை சான்றுகள் கொண்டு நிராகரிக்கப்படுவது மில்லை. ஒரு கோட்பாட்டின் வாழ்வுக்காலம் சிக்கலான செயல் முறை மூலம் தீர்மானிக்கப்படுகிறது. பொய்ப்பித்தல் கோட்பாடு கூறுவது போல் நிராகரித்தல் நடைபெறுவ தில்லை.

**சுருக்கம்:**

இக்கட்டுரையில் கூறப்பட்டவற்றைச் சுருக்கிக் கூறுவோம்.

பேக்கனின் தொகுத்தறி முறையில் சில அடிப்படையான குறைபாடுகள் இருந்தன. இவற்றை டேவிட் ஹியூம் சுட்டிக் காட்டினர். அவர் எழுப்பிய பிரச்சினைகள் ‘ஹியுமின் பிரச் சினை’ (Hume’s Problem) என அழைக்கப்படும். ஒரு நிகழ்வு பலமுறை அவதானிக்கப்பட்டதன் அடிப்படையில் மட்டுப்ப டுத்தப்பட்ட எண்ணிக்கையுள்ள நிகழ்வுகளினைக் கொண்டு (A finite Number of occurrences of an event) பொதுக் கோட் பாட்டை (General Theory) வகுத்துக்கொள்ள முடியாது, காரண - காரியத் தொடர்பை அங்கே காணமுடியாது எனக் ஹியும் குறிப்பிட்டார். தொகுத்தறிமுறை பற்றிய பிரச்சி னையை ஹியுமிற்குப் பின்னர் இம்மானுவல் கான்ட், கார்ல் பொப்பர் ஆகிய இருவர் ஆராய்ந்தனர்.

கார்ல் பொப்பர் விஞ்ஞானமுறையின் தொகுத்தறிதல் செயல் முறையின் சரிபார்த்தல் (Verification) என்பதற்குப் பதிலாகப் பொய்ப்பித்தல் (Falsification) என்ற உத்தியை முன்மொழிந் தார். மரபுவழி அனுபவவாதத்தின் அளவுகோலான சரிபார்த் தல் விஞ்ஞானத்தை, விஞ்ஞானம் அல்லாததான அபௌதி கத்தில் (Meta - Physics) இருந்து பிரித்துப் பார்ப்பதற்கு உதவவில்லை எனப் பொப்பர் வாதிட்டார். அவர் அனுபவ அறிவின் விஞ்ஞானத்தன்மை (Scientificity) பற்றி இரண்டு முக்கிய வாதங்களை எடுத்துக்கூறினார்.

அவதானிப்பின் வழிப் பெறப்படுவதனை சரிபார்த்தல் செய் வது விஞ்ஞானத்தை அபௌதிகத்தில் இருந்து (Meta Physics) பிரித்தறியும் அளவுகோலாக (Criterian) இருக்க முடியாது.

ஒரு விஞ்ஞானக் கோட்பாடு சரிபார்த்தல் மூலமாக அல்லாது பொய்ப்பித்தல் மூலமாகவே உண்மையான விஞ்ஞான அறிவு என்ற தகுதியைப் பெற்றுக்கொள்கிறது.

இவ்வாறாகப் பொப்பர் முன்வைத்த மாற்று முறையான பொய்ப்பித்தல், விஞ்ஞான அறிவுக்குப் பலமான தருக்கவி யல் அடித்தளத்தை இட்டது. பொப்பரின் பொய்ப்பித்தல் கோட்பாடு விஞ்ஞானத்தின் மெய்யியல் துறையைச் சேர்ந்த மெய்யியலாளர்களிடையே பெரும் ஆர்வத்தைக் கிளரச் செய் தது. இதன் பயனாகத் தொகுத்தறிமுறையைக் கைவிட்டு கரு துகோள் பகுத்தறிமுறையை (Hypotnetieo - Deductive Model) விஞ்ஞானிகள் பின்பற்றத் தொடங்கினர். இதே வேளை சில மெய்யியலாளர்கள் பொப்பரின் பொய்ப்பித்தல் கோட் பாட்டை நிராகரித்தனர். விஞ்ஞானக் கோட்பாடுகள் எவ்வாறு ஏற்புடைமை பெறுகின்றன என்பதைப் பொய்ப்பித்தல் கோட் பாடு சரியாக விளக்கவில்லை என அவர்கள் கூறினர்.

இக்கட்டுரை ஐயதேவ உயன்கொடவின் Social Research Philosophical and Methodological Foundations என்ற நூலின் (2015) 3-ம் அத்தியாயத்தின் 54 - 70 பக்கங்களில் கூறப்பட்ட கருத்துக்களைத் தழுவித் தமிழில் எழுதப்பட்டது).



shanmugalingam@thaiveedu.com

*தாய்வீடு இதழ் பற்றிய விமர்சனங்களை எதிர்பார்க்கின்றோம்.*
*விமர்சனங்கள் எம்மை ஓர் ஆரோக்கியமான பாதையில் இட்டுச்செல்லும்.*

***E-mail: info@thaiveedu.com*** ***Fax: 1-416-849-0594*** ***Tel: 1-416-857-6406***

# இலங்கையின் கோப்பியுகத்து முதல் ஆங்கில நாவல்

மு. நித்தியானந்தன்

'சிலோன்' என்ற இந்தச் சின்னஞ்சிறு தீவைப் பற்றி இவ்வளவு 'கொள்ளை'யாக நூல்கள் எழுதப்பட்டிருக்கின்றன என்று வியந்துபோகிறார், இலங்கையின் காலனியச் செயலாளராகவிருந்த எமர்சன் டெனன்ட். இலங்கையில் பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் உயர் இராணுவ அதிகாரிகள், நீதிபதிகள், அரசாங்க அதிகாரிகள், மிசனரிகள், தோட்டத் துரைமார்கள் என்று பல தளங்களிலிருந்து எழுதப்பட்ட நூற்றுக்கணக்கான நினைவுக் குறிப்புகளும், இலங்கை பற்றிய வரலாற்றுப் புவியியல் விபரங்கள் அடங்கிய நூல்களுமாய் நிறையவே வெளியாகியுள்ளன.

இலங்கையில் 1820-களில், மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் கோப்பித் தோட்டங்கள் பயிரிடப்பட்ட ஆரம்பகாலப் பகுதியில், கோப்பித் தோட்டங்களைக் களமாகக்கொண்டு எழுதப்பட்டு, 1902-ல் வெளியான He died for me, A Story of English School Boys and Tamil Coolies என்ற ஆங்கில நாவல்[1] பற்றி, 'அப்புத்தளையில் கோப்பித் தொழிலாளி வீரமுத்துவின் கிளர்ச்சி' (வீரகேசரி, 24.9.1995) என்ற தலைப்பில், முதல்முறையாக அந்நாவலை ஆய்வுக்கு எடுத்துக் கொண்டிருந்தேன். இந்நாவல் வெளியாவதற்கு எட்டு ஆண்டுகளுக்கு முன்னர், அல்பிரெட் கிளார்க்(Alfred Clark)1894-ல், The Clock-Work Coolie[2] என்ற தலைப்பில் வெளியிட்ட நாவல்தான், இலங்கையின் கோப்பியுகத்தில் எழுந்த முதல் ஆங்கில நாவலாகும்.

1824-ல் கம்பளையில் முதல் கோப்பித் தோட்டத்தை உருவாக்கி, ஜோர்ஜ் பேர்ட் (George Bird) இலங்கையில் ஏற்படுத்திய கோப்பி யுகம், 1886-ல் இலங்கையின் பொருளாதார அரங்கிலிருந்து முற்றாக வெளியேறும் வரைப்பட்ட 1962-ம் ஆண்டு காலப்பகுதியில், ஓர் அரை நூற்றாண்டுக்காலம் கோப்பியின் இராஜ்யமாகவே இருந்தது. 'சின்னஞ்சிறு வெப்ப வலயத் தீவான இலங்கையின் கோப்பித் தோட்டம் ஒன்றில், ஒரு தலைமுறைக்கு முன்னால் நிகழ்ந்த விசித்திர நிகழ்ச்சிகள் இங்கே விபரிக்கப்படவிருக்கின்றன' என்ற பீடிகையுடன், The Clock-Work Coolie நாவல் ஆரம்பமாகிறது. இத்தலைப்பை, 'யந்திரக்கூலி' என்று தமிழில் இக்கட்டுரை பேசுகிறது. இந்நாவல் 24 செ.மீ x 17 செ.மீ அளவில், 64 பக்கங்களில் வெளியாகியிருக்கிறது. பிரிட்டிஷ் நூலகத்தின் கனத்த பல நூல்களின் தொகுதிக்குள் ஒன்றாகப் பிணைக்கப்பட்டிருக்கும் இந்த நூலின் பக்கங்கள் இப்போது உதிரும் நிலையில் உள்ளன.

இலங்கையின் ஆங்கில இலக்கியம் (English Literature in Ceylon (1815-1878), (1969) பற்றி, இங்கிலாந்தில் முனைவர்ப்பட்ட ஆய்வை மேற்கொண்ட ஆங்கிலப் பேராசிரியை யஸ்மின் குணரட்ன (Yasmine Gooneratne), மேற்குறித்த இரண்டு ஆங்கில நாவல்களையும் பற்றி எந்தக் குறிப்பையும் தராது விட்டது துரதிர்ஷ்டமானது.

இந்த நாவல் கோப்பித் தோட்டத்துரைமாரின் வாழ்க்கையை மையமாகக்கொண்டு விரிந்துசென்றாலும், நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முற்பட்ட கோப்பித்தோட்ட வாழ்வியலின் முக்கிய கூறுகளை வெளிப்படுத்தவே செய்கிறது.


குடியில் மூழ்கி, சித்தப்பிரமை பிடித்ததுபோல் நடக்கும் துரைமார்களின் போக்கு, தொழிலாளர்களைத் துரைத்தனம் எவ்வாறு நோக்கியது, தொழிலாளர் எதிர்ப்புணர்ச்சி, அதேசமயம் அனைத்திற்கும் பணிந்துபோகும் மனோபாவம், தோட்டங்களை விட்டுத் தொழிலாளர்கள் ஓடிப்போதல், சிங்கள, தமிழ் வார்த்தைகளின் பாவனை போன்ற பல்வேறு அம்சங்களை இந்த நாவலில் பார்க்கமுடிகிறது.

கோப்பியுகத்தில் எழுந்த, வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இந்த ஆங்கில நாவல்பற்றி முதல்முறையாக இந்த ஆய்வுக் கட்டுரை பேசுகிறது.

பிரித்தானியாவில் அதிகரித்துவரும் வேலையில்லாத் திண்டாட்டத்திற்குக் குடிபெயர்தல்தான் நிவாரணி என்ற நம்பிக்கை, 1830-களில் பிரிட்டனில் தலைதூக்கியிருந்தது. 19-ம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் இந்நிலை தீவிரமடைந்திருப்

பதை, மத்திய வலயத்தில் அமைந்துள்ள பிரிட்டிஷ் கால னிய நாடுகளின் வாழ்க்கை நிலைமைகள் பற்றிய தகவல் கள், விபரங்களை அறிந்துகொள்ளும் வேணவா, அங்கு எழுந்திருந்ததை, இக்குடியேற்ற நாடுகளிலிருந்து எழுதப் பட்ட வாழ்க்கை நிகழ்ச்சிக் கோவைகளும், வரலாற்றுக் குறிப் புகளும் எடுத்துக்காட்டுகின்றன.[3]

இக்காலப் பகுதியில் போர்பஸ் எழுதிய Eleven Years in Ceylon (1840)[4], இம்மாதிரி நினைவுக் குறிப்பிற்கு, அனுபவப்



THE CLOCK-WORK COOLIE.

BY ALFRED CLARK.

CHAP. I.—BODY-SNATCHERS.

THE strange things about to be related happened nearly a generation ago, on a coffee estate, in the mountains of the little tropical island of Ceylon. At that time Ceylon was as famous for its coffee as it now is for its tea. Scores of estates, planted with the dark-leafed bush, lay along its hill-sides and in its broad valleys. In the older coffee-districts every acre of available land, except the forest on the crest of the hills, or on precipitous and rocky hill-sides, had been cleared and planted. Cart-roads and bridle-paths led from estate to estate, to the distant hill-towns and away into the low-country. Every estate had its comfortable shingle-roofed bungalow, embowered among oranges, shaddocks, guavas and other fruit trees, and often over-grown with gorgeous-flowered creepers; its well built store, with broad barbacues or coffee drying-grounds; and its rows of picturesque coolie-lines or quarters buried in groves of plantain trees.

But, in the new planting districts, remote from towns and roads, thousands of acres of forest stretched over hill and dale to the horizon; the sea of tree tops being broken, only here and there, by isolated clearings, looking like scars on the face of the forest-clad country. Here could be heard, day by day, the ringing of axes and the crash of falling trees; sounds that announced the approaching transition of dark, primeval forest into trim plantations. Wattle and mud shanties, with grass thatched roofs; temporary wooden stores, with earth barbacues and jungle stick coolie-lines took the place of the neatly-built bungalows, the stone and iron stores and the permanent lines of the older districts. Narrow footpaths, winding down the steep hill sides, through lofty forest, formed the only outlets.

It was on a forest-surrounded estate in what was then a new district, about fifteen miles from Gampola, a small hill-station of Ceylon, that what is now to be related, happened.

* * * * *

"There are devils about tonight!" muttered Sellan, the old Tamil store-watcher, as he stood in the doorway of Yakgalla estate store and peered out into the darkness. The light of a lantern, which stood on the floor at his feet, shone on the old fellow's shaven pate, wrinkled face and white moustache. Covering his eyes with his hand to shut out the lantern light he gazed anxiously at something in the distance.

Night had descended some two hours before, on the Gonatalawa Valley. Along the bottom of the valley and half way up the hill-side, lay the Yakgalla coffee estate, in extent some two hundred acres. It was now buried in darkness, only illuminated by the dim starlight. The position of the Superintendent's bungalow, on the summit of a low hill at the upper end of the estate, was indicated by a star-like light that shone through the trees surrounding it. Gleams of light in different parts of the estate showed that coolie house-wives were busy at their lines preparing the evening meal for their lords. Lights of very erratic description were moving about, being firebrands carried by coolies, who waved them vigorously to keep them aglow, sending showers of sparks in all directions. Noisy voices rose on the night air, and the words *kāsu* (money) and *arisi* (rice), the staple subjects of coolie conversation, were distinctly audible. The sharp, jerky barking of pariah dogs punctuated the coolie-talk.

Forest-clad hills raised their dark heads on three sides of the estate. On its southern side the valley stretched away to the low-country, now invisible in the darkness. The roar of a waterfall in the forest above the estate, and the rush of the stream along its boulder-choked bed at the bottom of the valley could be distinctly heard.

As the old store-watcher stood watching the points of light glimmering, here and there, in the darkness in which the estate was steeped, clouds began to descend from the hill-tops above. Vast masses of shapeless vapour came pouring through the gorge at the head of the valley and to settle down into it. Soon a great portion of the estate and surrounding hills was blotted out by layers of dense curdy cloud. A few fleecy cloudlets detached themselves and floated away gracefully above, the stars shining through them like diamonds in the gauzy dress of a danseuse.

Suddenly the old man uttered an exclamation, and gazed intently at a light that appeared on the hill-side opposite. It was moving up through the coffee bushes.

"There they go!" he muttered "I knew there were devils about tonight! They are going up to the burying-ground, to dig up Paruvati's child no doubt. I told the woman that the devils would carry away the body if she did not have the ceremonies properly done. But what is the use of talking to a foolish woman?" And then he mumbled to himself

பகிர்வுக்கு நல்ல உதாரணமாகும். இலங்கைக் காடுகளில் யானைவேட்டைப் பிரியராகத் திகழ்ந்த போர்பஸ், அடர்காடு களைப் பற்றியும், யானைகளைப் பற்றியும், உயர் மலைச்சி கரங்களைப் பற்றியும் மிக நுட்பமாக எழுதியிருக்கிறார். யானை போன்ற பாரிய விலங்கை என்றுமே பார்த்திராத ஆங்கிலேயர்களை நோக்கி எழுதப்பட்டவையே அக்குறிப்பு களாகும். இலங்கையின் நிலத்தோற்றம், மலைகள், சமவெளி கள், நீர்வீழ்ச்சிகள், கடற்கரைகள், விலங்கினங்கள், தாவரப்ப ரம்பல், பட்டினங்கள், மக்களின் வாழ்நிலை, பழக்கவழக்கங் கள், சமய நம்பிக்கைகள் போன்ற தகவல்களை அறிந்து கொள்ள, பிரித்தானியாவில் பேரார்வம் கிளம்பியிருந்ததால், அத்தேவையை நோக்கியே இத்தகைய நூல்கள் எழுதப்பட் டன. இலங்கையின் நிலத்தோற்றம், இயற்கை அழகு என்பன வெளிநாட்டவர்களுக்கு எப்போதும், போதையை ஏற்படுத்தியி ருக்கின்றன.

குப்லாகான் சபையில் போப்பாண்டவரின் தூதராக இருந்த ஜோன் டி மரிக்னோலி (John de Marignolli) என்பவர், ரோமா புரிக்குத் திரும்பும்போது, சிலோனைக் கண்டு எழுதியதாவது: 'சிலோனிலிருந்து சுவர்க்கத்தின் தூரம் நாற்பது இத்தாலிய லீகுகள். சுவர்க்கத்தின் நீரூற்றுகளிலிருந்து விழும் தண்ணீ ரின் ஓசை அங்கு கேட்கிறது.'[5]

'கடுகணாவைக் கணவாயைக் கடந்ததும் விரியும் இயற்கை வனப்பும், செம்மாந்த பேரெழிலும் வியப்பூட்டுவன. திகிலூட் டும் பாதாளப் படுகுழிகளை நோக்கி, பேரோசை கிளப்பி, வீழ்ந்தோடும் நீர்வீழ்ச்சிகள். அதன் பக்கவாட்டில் அடர்ந்தெ ழும் பெரும் விருட்சங்கள். பள்ளத்தாக்கில் கோலங்காட்டும் பச்சைப்பசுந்தரை. அச்சமூட்டும் பாழுங் கிடங்குகள். தொங் கித் துருத்திக்கொண்டு நிற்கும் பெரும் பாறைகள். வேர்பிடித் துச் செழித்து, வண்ண நிறங்களில் பூச்சொரிந்து, பின்னிப் பிணைந்து கிடக்கும் அடர்க்கொடிகள். மலைமுகடுகளை எட் டியதும் எல்லையற்று விரியும் வெளியும், அதன் பேரழகும் இன்பக்கிளர்ச்சியை ஏற்படுத்துபவை. இந்தப் பிரமாண்டக் காட்சியைக் கண்ணுறுவோர், இறைவனின் பேராற்றலையும், மகிமையையும், மாண்பினையும் உணர்ந்து, தங்கள் உணர்வு களை வடிக்க வார்த்தைகளற்று நிற்பர். தாங்கள் இந்தப் பிர மாண்டத்தின் முன் சிறியோராய்க் குறுகி நிற்பர்.'[6]

இலங்கையின் நிலத்தோற்றத்தைப் பற்றிய சிந்தனை இல்லா மலேயே, ஆங்கிலேயர்கள் இருக்கிறார்கள் என்பது குறித்து, ஓர் அதிகாரி பின்வருமாறு வியாகூலம் அடைகிறார்:

'எனக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியம் என்னவென்றால், இந் தப் பிரதேசத்திலேயே நீண்டகாலமாகப் பல இராணுவ அதி காரிகள் தங்கியிருக்கிறார்கள் என்றாலும், இந்த நாட்டிற்கு வந்தபோது, எந்த அளவு இந்த நாட்டைப் பற்றித் தெரிந்து வைத்திருந்தார்களோ, அதே அளவு அறிவுடன் திருப்தி அடைந்தவர்களாய், இப்போதும் அவர்கள் இருந்துகொண்டி ருப்பதுதான்' என்று, ஜேம்ஸ் காம்பெல் (James Campbell), 1840-ல் தான் எழுதிய நூலில் குறிக்கிறார். 'சோம்பேறித்தன மும், தங்களைச் சூழ என்ன நடக்கிறது என்பதை அறிந்து கொள்ளும் ஆர்வமின்மையும் சேர்ந்து, தங்களது குடியிருப் புக்குச் சற்றுத் தள்ளிப்போய், சில மைல் தூரம் வண்டி யிலோ அல்லது நடந்து சென்றோ அங்குள்ள இடங்களைப் பார்வையிடுவதைத் தடுத்துவிடுகிறது' என்று அவர் மேலும் தெரிவிக்கிறார்.[7]

The Clock Work Coolie என்ற நாவலை, 1894-ல் எழுதி வெளியிட்ட அல்பிரட் கிளார்க், Sport in the Low Country of Ceylon[8] என்ற நூலையும், 1901-ம் ஆண்டு எழுதி வெளி யிட்டார். அந்நூலில் அவர் எழுதுகிறார்: 'இன்று வாழ்ந்து கொண்டிருக்கும் பலருக்கு, இலங்கை என்றதும், வேட் டைக்கு அது ஒரு சொர்க்கபுரி என்பதுதான் நினைவில் எழும் காலம் ஒன்றிருந்தது. அறுபது, எழுபது ஆண்டுகளுக்கு முன் னர், இந்தத் தீவு மத்திய மலைநாட்டின் உச்சியிலிருந்து கடற்கரைவரை, அடர்ந்த பெருங்காடாகவே இருந்தது. இத்தீ வின் உட்பிரதேசத்தில் இருந்த சிறிய பட்டினங்கள் வரை, காடுகளே எங்கும் வியாபித்துக்கிடந்தன. மிகச் சில கோப்

பித் தோட்டங்களே அங்கொன்றும் இங்கொன்றுமாய்க் காணப்பட்டன. தாழ்நிலப்பகுதியில் குளங்களும், வயல்க஌ம் கண்டபடி பரவிக்கிடந்தன. அங்குமிங்குமாகச் சிதறிக்கிடந்த கிராமங்கள் பெரும் விருட்சங்களின் சமுத்திரத்தில் மூழ்கிப்போயிருந்தன. காடுகள் அடர்ந்தும் தொடர்ந்தும் காணப்படுகின்றன. குரங்குக் கூட்டங்கள் பருத்தித்துறையிலிருந்து, தெற்கே தேவேந்திரமுனைவரை, 300 மைல்களுக்குத் தரையைத் தொடாமல், மரங்களில் தாவித்தாவியே போய்ச்சேர்ந்து விடும் என்று கூறப்படுவதுண்டு.'

'இலங்கை, அயர்லாந்தைவிடவும் சற்றுச் சிறிய தீவு. இந்தியாவின் புருவத்தில் மின்னும் முத்துத் துளி' என்று, அல்பிரட் கிளார்க் எழுதுகிறார்.

The Finding of Lot's Life, A Dark Place of the Earth, In a State of Nature ஆகிய நூல்களையும் எழுதியுள்ள அல்பிரட் கிளார்க், 'இலங்கையின் தாழ்நிலப்பகுதியில் வேட்டையாடுதல்' பற்றிய இந்தச் சிறு நூலைத் தயக்கத்தோடுதான் பொதுமக்கள்முன் வைக்கின்றேன். இப்பொருள் பற்றி எழுதுவதற்கு என்னைவிடத் தகுதிபடைத்தோர் இருக்கக்கூடும். ஆயினும், இலங்கையின் தாழ்நிலக்காடுகளில் எனது இருபத்தைந்து ஆண்டுகாலப்பகுதியில் பெரும் பகுதியைச் செலவழித்தவன் என்ற முறையில், வனவிலங்குகளின் குணாம்சங்களை அவதானித்தும், பெரும் செலவில்லாமலும், மகிழ்ச்சிகரமாகவும் வேட்டைக்கலையை அனுபவத்தால் நன்கறிந்தும் உள்ளவன் என்பதால், இம்மாதிரி நூலை எழுத எனக்குத் தகுதி இல்லாமலுமில்லை' என்கிறார். இங்கிலாந்து வாசகர்களை நோக்கி எழுதப்பட்ட நூல் இது என்பதில் எந்த ஐயமும் இல்லை. யானை வேட்டையைப் பற்றி, இந்த நூலில் மூன்று அத்தியாயங்கள் எழுதப்பட்டுள்ளன. சிறுத்தை, கரடி, காட்டெருமை, புள்ளிமான், சிவலை மான், காட்டுப்பன்றிகள், முதலைகள், காட்டுக்கோழிகள் என்று உயிரினங்களைப் பற்றிய சிறந்த விளக்கங்களைத் தந்திருக்கிறார். அல்பிரட் கிளார்க் தான் எழுதிய Peeps at Many lands, Ceylon (1910)[9] என்ற மற்றுமொரு நூலில், இலங்கையின் நிலத்தோற்ற வரைபடத்தை இணைத்திருக்கும் அவர், முழு இலங்கையையும் 6 பகுதிகளாக வரையறுக்கிறார். பாணந்துறையிலிருந்து மாத்தறைவரை தென்னந்தோப்புப் பிரதேசம் என்றும், இரத்தினபுரி சார்ந்த பகுதியை இரத்தினவலயம் என்றும், மத்திய மலைநாட்டினைத் தேயிலை மாவட்டம் என்றும், கிழக்கிலங்கையைப் பூங்காக்களின் தேசம் என்றும், அநுராதபுரம் சார்ந்த பகுதியைப் புதைந்துபோன நகரங்களின் பிரதேசம் என்றும், முழு வன்னிப் பிரதேசத்தையும் பெருங்காட்டுப் பிரதேசம் என்றும், இலங்கையை அடையாளம் காட்டுகிறார். காடுக஌ம், மரங்களும், செடிகளுமே அவரின் நிலத்தோற்ற எல்லை வகுப்புகளாக அமைந்துள்ளன.

அல்பிரட் கிளார்க் எழுதிய The Clock Work Coolie என்ற நாவல், இருபத்தாறு அத்தியாயங்களில் 64 பக்கங்களைக் கொண்டு அமைந்துள்ளது. இந்தக் கதையின் முதல் அத்தியாயம் 'பிணந்தூக்கிகள்' என்ற தலைப்பில் ஆரம்பமாகிறது.[10]

அந்த அத்தியாயத்தின் ஆரம்பம் இது: 'இலங்கை என்னும் சிறிய மத்திய கோட்டுத் தீவின் மலைப்பிரதேசத்துக் கோப்பித் தோட்டம் ஒன்றில், ஒரு தலைமுறைக்கு முன்னால் நிகழ்ந்த விசித்திர நிகழ்ச்சிகள் இங்கே கூறப்படப்போகின்றன. இன்று தேயிலைக்குப் பேர்பெற்றிருப்பதுபோல, அன்று இலங்கை கோப்பிக்குப் பெயர்பெற்றிருந்தது. மலைச்சரிவுகளிலும், பரந்த சமவெளிகளிலும் தோட்டம் தோட்டமாகக் கோப்பி பயிரிடப்பட்டிருந்தது. பயிர்செய்யக்கூடிய ஒவ்வொரு ஏக்கர் நிலத்திலும் கோப்பி பயிரிடப்பட்டது. மலைச்சிகரங்களில் உள்ள காடுகளைத் தவிர, அல்லது பாறைப்பாங்கான மலைச்சரிவுகளைத் தவிர, கிடைக்கும் சகல காணிகளிலும் காடுகள் அழிக்கப்பட்டு, பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டது. கரத்தை வண்டிகளும், குதிரைவழித் தடங்களும் ஒரு தோட்டத்திலிருந்து இன்னொரு தோட்டத்திற்கு இட்டுச்சென்றன. அவை தூரத்துப் பட்டினங்களையும், தாழ்நிலங்களையும் இணைத்தன. ஒவ்வொரு தோட்டமும் வசதியான, பங்களாக்களைக் கொண்டிருந்தன. வீட்டைச் சூழவும் தோடைச் செடிகளும், கொய்யா மரங்களும், ஏனைய பழமரங்களும் செழித்து வளர்ந்துகிடக்கும். நன்கு கட்டப்பட்ட ஸ்டோர் அறை. கோப்பி காயப்போட அகன்ற முன்தரை. கண்களைக் கவரும் கூலி லயங்களை வாழைமரங்கள் மூடிக்கிடக்கும்.

பட்டினங்களிலும், சாலைகளிலுமிருந்து தொலைதூரம் விலகிய பிரதேசங்களில், கண்ணுக்கெட்டிய தூரம்வரை ஆயிரக்கணக்கான ஏக்கர் காட்டுப்பகுதிகளில், புதிய தோட்டங்கள் திறக்கப்பட்டன. ஆங்காங்கே காடழிக்கப்பட்ட இடங்கள் தனியே தெரிந்தன. அடர்ந்த வனாந்தரங்களின் பச்சைப் போர்வையால் போர்த்ததுபோல் கிடந்த அப்பகுதியில், காடழிக்கப்பட்ட இடங்கள், அந்த வனப்பிரதேசத்தின் முகத்தில் விழுந்த தழும்புபோலத் தெரிந்தன. கோடரிகளின் மரம் வெட்டும் ஓசையும், மரங்கள் சரிந்துவிழும் பேரோசையும் தொடர்ந்து கேட்ட வண்ணம் இருந்தன. இருண்ட ஆதிக்காடுகள், நளினமான தோட்டங்களாக மாற்றமுறுவதற்கு அவை கட்டியம் கூறின. கம்புகழிகளாலும், களிமண்ணாலும் கட்டப்பட்ட மண்குடில்கள். மானாப்புல்லால் வேயப்பட்ட கூரைகள். மரத்தால் கட்டப்பட்ட தற்காலிக ஸ்டோர் அறைகள். காட்டுத் தடிகளால் கட்டப்பட்ட கூலி லயங்கள். கருங்கற்களாலும் இரும்பாலும் நிர்மாணிக்கப்பட்ட பெரிய ஸ்டோர்கள். செங்குத்தான மலைச்சரிவுகளில், குறுகலாக வளைந்தோடும் ஒற்றையடிப் பாதைகள். ஓங்கியுயர்ந்த வனப்பிரதேசங்களை, இந்தப் பாதைகளே வெளியுலகுடன் இணைத்தன. கம்பளையிலிருந்து பதினைந்து மைல்கள் தள்ளி, ஒரு மலைப் பிராந்தியத்தில், காடுகள் சூழ்ந்த ஒரு தோட்டத்தில்தான் இந்தக் கதை இடம்பெறுகிறது.

யக்கலத் தோட்டத்து ஸ்டோர் வாசலில் நின்றபடி, இருளைத் துளாவி உற்றுப்பார்த்துவிட்டு, 'இன்னைக்கு ராத்திரியும் பேய் வந்து திரியும்போல' என்று, ஸ்டோர் காவல்காரக் கிழவன் செல்லன் தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான். அவனது காலடியில் இருந்த லாந்தர் விளக்கின் வெளிச்சத்தில், வயதுபோன அவனின் மழித்த தலையும், சுருக்கம்

விழுந்த முகமும், நரைத்த மீசையும் பளிச்சிட்டன. லாந்தர் வெளிச்சத்திலிருந்து கைகளால் கண்களை மறைத்தவாறு, அவன் தூரத்தே எதையோ உற்று நோக்கினான்.

இரண்டு மணித்தியாலங்களுக்கு முன்பேயே கொனத்தலாவப் பள்ளத்தாக்கில் இருள் கவிய ஆரம்பித்துவிட்டது. அந்தப் பள்ளத்தாக்கிலிருந்து அம்மலைச்சரிவின் அரைவாசிப் பகுதி வரை, இருநூறு ஏக்கர் விஸ்தீரணத்தில் யக்கலக் கோப்பித் தோட்டம் விரிந்திருந்தது. இருளில் புதைந்துபோய்க்கிடந்த அத்தோட்டத்தில், மங்கிய நட்சத்திர ஒளிதான் ஒளியேற்றிக் கொண்டிருந்தது. அந்தத் தோட்டத்தின் மேற்பகுதியில், தாழ் வான உயரத்தில் அமைந்திருந்த சிறு மலையுச்சியில் இருந்த தோட்டத்துரையின் பங்களாவைச் சூழ்ந்திருந்த மரங் களுக்கூடாக நட்சத்திர வெளிச்சம் பிரகாசித்துக் கொண்டிருந் தது. தோட்டத்தின் பல பாகங்களிலும் தெரிந்த ஒளிக்கீற்று கள், லயங்களில் கூலிப்பெண்கள் தங்கள் வீட்டுக்காரருக் கான இரவு உணவைச் சமைப்பதில் சுறுசுறுப்பாக இருப் பதை எடுத்துக்காட்டியது. இருளில் நடந்துசெல்லும் கூலிகள் தீப்பந்தங்களை ஏற்றிக்கொண்டு, தீப்பந்தம் அணைந்துபோ காமல் இருப்பதற்காகக் காற்றில் வேகமாகச் சுழற்றுவதால், நாலாபக்கங்களிலும் தீக்கங்குகள் சிதறிப்பரவி, தாறுமாறாக வெளிச்சங்கள் அசைந்துகொண்டிருப்பதைக் காணமுடிகிறது. இரவின் காற்றில் உரத்த குரல்கள் ஓசை எழுப்புகின்றன. கூலிகளின் சம்பாஷணையில் நிரந்தரமாக அடிபடும் 'காசு', 'அரிசி' ஆகிய வார்த்தைகள் தெளிவாகக் கேட்டன. லயத்து நாய்கள் திடுதிப்பென்றும் தெளிவாயும் குரைக்கும் சப்தம், கூலிகள் பேசிக்கொண்டிருப்பதை இடைக்கிடையே நிறுத்த வும் செய்தன.

அத்தோட்டத்தின் மூன்று திசைகளிலும், காடுகள் படர்ந்த மலைச்சிகரங்கள் தங்களது இருண்ட தலைகளை உயர்த்தி யவண்ணமிருந்தன. தென் திசையில் அப்பள்ளத்தாக்கு, தாழ் நிலத்தை நோக்கி விரிந்து, அந்த இருளில் புலப்படவே யில்லை. தோட்டத்திற்கு மேலே காட்டிலிருந்து வீழும் நீர் வீழ்ச்சியின் பேரோசையும், பள்ளத்தாக்கின் நதிப் படுகை யின் கற்பாளங்களுக்கூடாக விரைந்தோடும் அருவியின் ஓசையும் துல்லியமாகக் கேட்டன.

வயதுபோன ஸ்டோர் காவல்காரன் செல்லன், தோட்டம் தோய்ந்துபோய்க்கிடந்த இருளில், வெளிச்சம் பிரகாசிக்கும் இடங்களைக் கூர்ந்து பார்த்துக்கொண்டிருந்த பொழுதில், மலைச்சிகரங்களிலிருந்து மேகங்கள் மெதுவாகக் கீழிறங்கிக் கொண்டிருந்தன. பள்ளத்தாக்கின் ஆரம்பத்தில் அருவி அரித்த மலை இடுக்கிற்கூடாக வடிவமற்ற, பெருந்திரளான வெண்புகையாவி வியாபித்துப் பரவி, பின் அமிழ்ந்து கொண் டது. அடர்ந்த மேக மண்டலத்திற்குள் தோட்டத்தின் பெரும்ப குதியும், சூழ்ந்துள்ள மலைப்பகுதியும் மூடுண்டு கிடந்தன. இந்த மேக மண்டலத்திலிருந்து விலகிய சில முகிற்கற்றை கள், மேலே அழகு பொலிய மிதந்துகொண்டிருந்தது. ஒரு நடன நர்த்தகியின் மென்பட்டுத் துகிலில் இழைத்த வைரக் கற்கள்போல, அந்த மேகக்கற்றைக்குள் நட்சத்திரங்கள் ஒளிர்ந்தன.

திடீரென்று கிழவன் ஆச்சரியப்படுபவனாய், எதிரேயிருந்த மலைச்சரிவில் தோன்றிய வெளிச்சத்தைக் கூர்மையாக அவ தானித்தான். அந்த வெளிச்சம் கோப்பிச் செடிகளுக்கூடாக அசைந்து சென்றுகொண்டிருந்தது.

'அங்கே பேய்கள்தான் போய்க்கொண்டிருக்கின்றன' என்று அவன் முணுமுணுத்தான். 'இன்று இரவு பேய்கள் நடமாட்டம் இருக்கும் என்று எனக்குத் தெரியும். பார்வதியின் குழந்தை யைப் புதைத்திருந்த சவக்குழியை நோக்கித்தான் அவை போய்க்கொண்டிருக்கின்றன என்பதில் ஒரு சந்தேகமும் இல்லை. ஒழுங்காய்ச் சவத்தை அடக்கம்செய்யாமல்விட் டால், பேய்கள் சவத்தைக் கொண்டுபோய்விடும் என்று அந்த மனுஷிக்குச் சொல்லியிருந்தேன். ஆனால், முட்டாள் பொம்பி ளையிடம் எதைச் சொல்லி என்ன?'

'ஏன் பேய்கள் வெளிச்சத்தைக் கொண்டுதிரிகின்றன என்று தான் எனக்கு ஆச்சரியமாக இருக்கிறது. ஏன் அவைகளால் இருட்டில் பார்க்க முடியாதா?' என்று அவன் வெளிச்சத்தைப் பார்த்தவாறு தனக்குள் முனகிக்கொண்டான்.

காவற்காரக் கிழவன் செல்லன் சொல்லிக்கொண்டிருந்த கூலி களின் சுடுகாடு, தோட்டத்தின் மேற்கே காட்டுத் தொங்கலில் உள்ள சிறிய பத்தனை நிலத்தில் உள்ளது. தோட்டத்தில் உள்ள ஆண், பெண், குழந்தைகள் எல்லோருமே அந்த இடத்தில் பேய்கள் உலவுகின்றன என்றே நம்பினார்கள். இருட்டானதும் அந்தப் பக்கம் போக யாருமே துணிவ தில்லை. அந்த இடத்தைப் பார்த்தாலே பேய்கள் அங்கு குடிகொண்டிருப்பது மாதிரியே தெரிகிறது. இருளில் தோய்ந்து, பனிப்புகார் கவிந்து, சுற்றிலும் காற்று ஊளை யிட்டுக்கொண்டிருக்கும் அந்த இடத்தைப் பார்த்தாலே, இருண்ட மாயப் பிரதேசம் மாதிரித்தான் இருக்கிறது.

சுடுகாட்டிற்குப் பக்கத்தில் உள்ள பழைய கைவிடப்பட்ட மாட்டுக்கொட்டில், காற்றின் ஒவ்வொரு வீச்சுக்கும் கிறீச்சிட் டுச் சடசடத்தது. எந்த நேரமும் அதன் மோசமான கூரையும், சிதிலமடைந்த சுவர்களும் கொட்டுண்டு போய்விடும்போலி ருந்தது. அந்தப் பத்தனையில் துலக்கமாகத் தெரிவது ஒரு கங்காணியின் கல்லறைதான். வெள்ளையடிக்கப்பட்ட பெரிய சமாதி அது. புகார்க் காற்றுக்குள் அது பூதாகரமாய், மங்க லாய்த் தெரிகிறது. பக்கத்தில் நிற்கும் பட்டுப்போன மரத்தில் இறந்துபோன கங்காணியின் நினைவாகக் கட்டிவிடப்பட்டி ருந்த வெள்ளைத் துணி, அந்த இரவின் தென்றல் காற்றில் மெதுவாக, அசைந்தாடிக் கொண்டிருப்பதுபோலத் தெரிகி றது. அங்குமிங்குமாகச் சில சவக்குழி மேடுகள். இறந்து, மறக்கப்பட்டுப் போய்விட்ட கூலிகளின் கடைசி இளைப்பா றுமிடங்களைப் போல இருந்தன. அவற்றில் பல, பழைய சவக்குழி மேடுகள். மானாப்புற்கள் அவற்றைச் சுற்றி மண்டி வளர்ந்து கிடக்கின்றன.

பழைய மாட்டுக்கொட்டிலுக்கு அருகில் சற்றே புதிய இரண்டு சவக்கிடங்குகள். ஒன்றின் சிறிய மேட்டிலிருந்து, தெளிவாகவே அது ஒரு குழந்தையின் சவக்கிடங்குதான். மற் றது வயதுபோன ஒருவரின் சவக்கிடங்கு. இந்தச் சவக்கிடங்

கின் மேல், காட்டுத்தடிகளால் செய்யப்பட்ட பாடையும், அதன்மேல், பிணத்தைக் காட்டுமிருகங்கள் தோண்டி இழுத்துக்கொண்டு போய்விடாமல் இருப்பதற்காக, பாரமான மரத்துண்டுகளும், பெருங்கற்களும் போடப்பட்டிருந்தன.

இந்தக் கூலியின் சவக்கிடங்கிற்கு முன்னால், இரண்டு பேர் நின்றுகொண்டிருந்தனர். அவர்கள் தங்களோடு லாந்தர் விளக்கைக் கொண்டுவந்திருக்கிறார்கள். இந்தச் சுடுகாட்டை நோக்கி, மலையில் இவர்கள் இருவரும் ஏறிச் சென்றுகொண்டிருந்தபோதுதான், இந்த லாந்தர் விளக்கின் வெளிச்சத்தைத்தான், காவற்காரக் கிழவன் பார்த்திருக்கிறான்.

அந்த நேரத்தில், அந்த இடத்தில் அவர்கள் காணப்படுவதையும், அவர்களது தோற்றத்தையும், நடத்தையையும் பார்க்கும்போது, அவர்கள் முறையாகவோ, நல்ல நோக்கத்திற்காகவோ அங்கு சென்றிருப்பதாகக் கூறுவதற்கில்லை.

அவர்களில் ஒருவன் வெள்ளைக்காரன். அவன்தான் அந்தத் தோட்டத்தின் துரை என்பது தெளிவாகத் தெரிகிறது. லாந்தரின் சுடர்விடும் மங்கலான ஒளியில், அவன் உயரமாயும், கூடுவிழுந்த நெஞ்சும், நொண்டி நடக்கும் மெலிந்த கால்களும் கொண்டவனாய்க் காணப்பட்டான். நீண்டு ஒடுங்கிய முகமும், ஆழ்ந்த கோடுகளும், நரைகொண்ட தலைமயிருமாய், அவனது உண்மையான வயதைவிடக் கூடிய வயது போன தோற்றத்தை அவன் காட்டிக்கொண்டிருந்தான். சற்றுக் கறுத்த நிறமாயும், நன்கு சவரம் செய்யப்பட்ட முகத்தோடும், துல்லியமான முகவமைப்பும் கொண்டு, அவன் காணப்பட்டான். அவனது ஆழப்பதிந்த, மங்கலான பழுப்புநிறக் கண்கள், கடுமையும், தீய நோக்கும் கொண்ட பார்வையை வீசின. அவனது மெல்லிய வாயின் கோணங்கள் சுருங்கி ஏளனத்தை வெளியிட்டது.

அவனோடு நிற்பவன், இறுக்கிக் கட்டப்பட்ட கோவணத்தோடுகூடிய ஒரு தமிழ்க் கூலி. பழைய கம்பளிக் கோட்டும், தலையைச் சுற்றித் தலைப்பாகைபோலக் கட்டப்பட்ட அழுக்கான டவலையும் அணிந்திருந்தான். இடது கையில் ஒரு மூங்கில் கூடையையும், தோளில் ஒரு மண்வெட்டியையும் வைத்திருந்தான். அவன் சரியான கறுப்பாயும், அவலட்சணமாயும் இருந்தான். அவனது வெறுங்கால்களும், கைகளும் பொருத்தமில்லாது மெலிந்தும், குட்டையாயும் காணப்பட்டன. அவனது வயிற்றின் வலதுபுறம் நன்கு வீங்கிப் புடைத்து நிற்பதிலிருந்து, அவன் மண்ணீரல் நோயால் அவதிப்படுபவன் என்று துலாம்பரமாகத் தெரிகிறது. அவனது நடத்தையிலும், தோற்றத்திலும் ஒருவித அசாதாரணத்தன்மை தெரிகிறது. அவன் தனது துரைக்கும், கூலியின் சவக்கிடங்கிற்கும் பின்னால் நிற்கிறான்.

அந்த நட்டநடுநிசியில், அச்சமூட்டும் அந்த மயானக்கரையில் நின்றுகொண்டிருப்பதில் பயமோ, அசூயையோ இல்லாதவன்போல அவன் காணப்பட்டான். ஓரிருமுறை அவன் நடுக்கமுற்றதுகூடப் பயத்தினால் அல்ல, குளிரினால்தான். இடதுபுறமோ, வலதுபுறமோ பார்க்காமல், அவன் தனது துரையையே வெறித்துப் பார்த்துக் கொண்டிருந்தான். தூக்கத்தில் நடப்பவன்போல அவன் இருந்தான்.

கூலியின் சவக்கிடங்கிற்கு மேலாக லாந்தர் விளக்கை உயர்த்திப் பிடித்தவண்ணம், தோட்டத்துரை சில கணங்கள் அமைதியாக அதனைப் பார்வையிட்டான். பின், காட்டுக்கழிகளால் செய்யப்பட்டிருந்த அந்தப் பாடையையும், சவக்குழியின் மீது குவிக்கப்பட்டிருந்த மரக்குற்றிகளையும் பெருங்கற்களையும் சுட்டிக்காட்டியவண்ணம், தனக்குப் பின்னால் நின்ற மனிதனை நோக்கித் தமிழில் தெளிவாகக் கூறினான்:

‘இதை எல்லாம் எடுத்து வெளியில் போடு.’

அந்த மனிதன் மருட்சியோடு துரையைப் பார்த்தான். அவன் அசையவில்லை. ஆனால், அவனது எஜமான் தனது கட்டளையை மீண்டும் அழுத்திச் சொன்னபோது, அவன் தன்னுடன் கொண்டுவந்திருந்த கூடையையும், மண்வெட்டியையும் மெதுவாகக் கீழே வைத்துவிட்டு, சவக்குழியின் மீது கிடந்தவற்றை அப்புறப்படுத்தத் தொடங்கினான். அந்த இடம் சீரானதும், தோட்டத்துரை லாந்தரை உயர்த்திப் பிடித்தவாறு, கூலியின் முகத்தை உற்றுப்பார்த்து, உத்தரவு பிறப்பித்தான்:

‘தோண்டு.’

அவன் சற்றே எதிர்ப்புத் தெரிவிக்கும் நோக்கில், நொய்மையான பார்வையை வீசினாலும், மண்வெட்டியை எடுத்துக்கொண்டு, மெதுவாக, யாந்திரீகமாகத் தோண்டத் தொடங்கினான்.

அந்த இரவில் இம்மயானத்திற்கு இந்த இரண்டு பேரும் எந்த நோக்கத்துடன் வந்திருக்கிறார்கள் என்பது இப்போது மிகத் தெளிவாகத் தெரிகிறது. புதைக்கப்பட்டிருந்த மனிதனின் சடலத்தைத் தோண்டி எடுக்கத்தான் வந்திருக்கிறார்கள். மண்வெட்டியுடன் இந்த வேலையைச் செய்துகொண்டிருக்கும் மனிதனும், தட்டமுடியாத கடுங்கட்டளைக்குப் பணிந்துதான் அந்த வேலையைச் செய்துகொண்டிருக்கின்றானே தவிர, மற்றபடி எந்த உற்சாகத்தோடும் அவன் அந்த வேலையைச் செய்யவில்லை என்பது தெளிவாகவே தெரிகிறது. மெதுவாகச் செய்தாலும், சீராக அவன் தோண்டுவதிலிருந்து, அவன் குடித்திருக்கவில்லை என்பதும் தெரிகிறது.

அந்தக் கூலி தானியங்கிக் கருவிபோல, இந்த அசாதாரண வேலையில் மூழ்கிப்போயிருந்தான். சற்று நேரத்தில், ஈரமான அந்தக் குழியிலிருந்து வீசிய துர்நாற்றத்துடன்கூடிய வாடை, எதற்காக அந்த இடத்தைத் தோண்டிக்கொண்டிருக்கிறார்களோ, அதற்குக் கிட்டத்தில் வந்துவிட்டார்கள் என்பதைக் காட்டியது. அப்போது, கூலியை வேகமாகத் தள்ளிவிட்டவாறு, அவனிடமிருந்த மண்வெட்டியை எடுத்துத் தானே அக்குழியிலிருந்து மண்ணை மெதுவாக அப்புறப்படுத்தினான்.

அக்குழி அத்தனை ஆழமாயில்லை. சில அடி ஆழம்தான். அக்குழியிலிருந்து இப்போது தடிபோல ஒன்று மண்ணிறத்தில் நீட்டிக்கொண்டிருந்தது. தோட்டத்துரை குனிந்து, அதனைத் தன் கைகளால் இழுத்து எடுத்தான். அது மனிதக் கால் எலும்பு.

‘கூடையைக் கொண்டுவா’ என்று துரை கட்டளையிட்டான்.

குந்திக்கொண்டு, நடப்பதையெல்லாம் கொஞ்சம் மட்டித்த னத்தோடு பார்த்துக்கொண்டிருந்த கூலி, மெதுவாக எழுந்து, கூடையைத் துரையிடம் எடுத்துக் கொடுத்தான். ஒவ்வொரு எலும்பாக லாந்தர் விளக்கில் சரிபார்த்துக்கொண்ட துரை, அவற்றைக் கூடையில் போட்டவாறு, மீண்டும் தோண்டத் தொடங்கினான். இப்போது, அவனுக்கு மேலும் பல எலும்பு கள் கிடைத்தன. அவை எல்லாவற்றையும் அவன் கூடைக் குள் போட்டுக்கொண்டான். எலும்புகளைக் கூடைக்குள் போடும்போது, அவன் விசித்திர வார்த்தைகளை முணுமு ணுத்துக் கொண்டான். அவை எலும்புகளின் பெயர்களாக இருந்தன.

இப்போது, மண்ணோடு நன்கு ஒட்டிக்கொண்டு, மண்ணிறத் தில் காணப்பட்ட மண்டையோடு வெளிவந்தது. லாந்தர் வெளிச்சத்தில் பார்த்தவாறு, அந்தக் கோரமான மண்டை-யோட்டைச் சுற்றியிருந்த களிமண்ணைக் கூலி, தன் கைவி ரல்களால் துடைத்து எடுத்துக்கொண்டிருந்தான். இறந்து போன அந்தச் சடலத்தை எந்த அருவருப்போ, வெறுப்போ இல்லாமல் எடுத்து வைத்துக்கொண்டிருந்தான்.

அக்குழியில் மிச்சம் மீதியில்லாமல் சகல எலும்புகளையும் எடுத்துக்கொண்ட பின், மண்வெட்டியையும், கூடையையும் கூலியை எடுத்துக்கொண்டுவருமாறு கூறித் துரை, தான் லாந்தரை முன்னால் எடுத்துக்கொண்டு, மலையிலிருந்து இறங்க ஆரம்பித்தான். அந்தக் குழியை மூடிவிட்டுப் போக வேண்டும் என்று இருவருக்குமே தோன்றவில்லை.

இருவரும் தோட்டத்திற்குத் திரும்பிவரும்போது நள்ளிரவாகி விட்டது. தோட்டம் இருளிலும் அமைதியிலும் ஆழ்ந்துகிடந் தது. இருவரும் தோட்டத்து ஸ்டோரைக் கடந்துபோகும் போது, விசித்திரமான வெளிச்சம் இப்போது மலையிலிருந்து கீழிறங்கி வருவதைப் பார்த்த ஸ்டோர் காவற்காரன் செல் லன், 'யாரது?' என்று குரல் எழுப்பினான்.

தோட்டத்துரை கிறீச்சிட்ட குரலில், 'பேய்' என்று உரத்துப் பதில் குரல் கொடுத்தான். 'கவனமாயிரு! உன்னை வந்து சாப்பிடப் போகிறோம்' என்றான்.

உடனே ஸ்டோர் கதவு அவசரகதியில் மூடப்பட்டு, தாளிடப் படும் சத்தம் கேட்டது. சில நிமிடங்களில் அந்த மலையின் அடிவாரத்திற்கு, பங்களாவிற்கருகில் வந்துவிட்டனர். அங்கி ருந்த நீரூற்றில் முகத்தைக் கழுவிக்கொண்டு, தான் கொண் டுவந்த எலும்புகளைத் தோட்டத்துரை நன்கு கழுவி எடுத்துக் கொண்டான். லாந்தர் வெளிச்சத்தில் கூடையில் இருந்த எலும்புக்கூடுகள் பளிச்சிட்டபோதுதான், கூடைக்குள் இருக் கும் பொருட்கள் எவ்வளவு கோரமானவை என்பதை அக் கூலி முதல் தடவையாகப் பார்த்துப் பீதி அடைந்தான். பின், துரை குறுக்குவழியால் தனது பங்களாவை நோக்கி நடந்து விட்டான்.

யக்கலத் தோட்டத் துரை பிலிப் அக்கர்ஸ் (Philip Akhurst) விசித்திரமான குணம் படைத்தவர். இயல்பு திரிந்த கோட்டிக்காரர். அவரை எல்லோரும் 'கிறுக்கன் அக்கர்ஸ்' என்றே அழைத்தார்கள். இவரது தந்தை கப்ரன் ஜோன் அக் கர்ஸ் பல ஆண்டுகள் சிலோன் றோயல் டிபென்சிபில் இரா ணுவ சேவையில் பணியாற்றியவர். கொடுமைக்காரராகப் பேரெடுத்தவர். பத்தாண்டுகளுக்கு முன்னர் உள்ளூர்க் குடி காரன் ஒருவனால் கொல்லப்பட்டார். அக்கர்ஸின் பாட்டனார் பல்கலைக்கழகத்தில் இயந்திரவியல் பேராசிரியராகக் கட மையாற்றியவர். நீண்டகாலமாக ஓர் இயந்திரப் பொறியை அமைத்து, அது தனது எதிர்பார்க்கைக்கு ஈடு கொடுக்காத தால், சினங்கொண்டு, அதனை உடைத்து நொறுக்கி, ஆத் திரத்தின் உச்சியில் சடுதியாக இறந்துபோனார். அக்கர்ஸின் தாய் சிறந்த பண்புகள் கொண்டவராய்த் திகழ்ந்தாரெனினும், இறுதிக்காலத்தில் மனநல மருத்துவமனையிலேயே இருந் தார். கணவனின் கொடூர நடத்தையால்தான் அவர் இக்க திக்கு உள்ளாக நேர்ந்தது என்பார்கள். பிலிப் அக்கர்ஸின் பிறப்பிலும் மர்மம் இருப்பதாகச் சொல்லிக்கொண்டார்கள். அக்கர்ஸ் இலங்கையில் பிறந்தாராயினும், அவருக்குப் பத்து வயதாய் இருக்கும்போது, கல்விக்காக அவரது தாய், அவரை இங்கிலாந்துக்குக் கொண்டுசென்றார். நான்கு ஆண் டுகள் பாடசாலையில் படித்துக்கொண்டிருக்கும்போது, ஒரு நாயைக் கொடூரத்திற்குட்படுத்தியதற்காக, அப்பாடசாலையி லிருந்து வெளியேற்றப்பட்டிருக்கிறார். சிலகாலம் லண்டனில் இயந்திர நிறுவனம் ஒன்றில் பணியாற்றியிருக்கிறார். இருபத் திரண்டு வயதில் அவர் இலங்கைக்கு வந்து, கோப்பித் தோட்டம் ஒன்றில் பயிற்சி பெற்றிருக்கிறார். ஏழாண்டுகளாக அவர் இலங்கையில் வாழ்கிறார்.

கொனத்தலாவ மாவட்டத்தில் அபகீர்த்தி கொண்டவராகவே அவர் இருந்திருக்கிறார். அவர் தனது தோட்டத்தைவிட்டு எங்குமே போனது கிடையாது. அவருக்கு இரண்டு, மூன்று தோட்டத்துரைமார்தான் நண்பர்களாய் இருந்திருக்கிறார்கள். அவருக்கு யாரைப் பற்றியும் அக்கறை கிடையாது. கசப் பான நாக்கு அவருடையது. மற்றவர்களின் உணர்வுகளைக் காயப்படுத்துவதைப்போல அவருக்குச் சந்தோஷம் தருவது எதுவுமில்லை. தமிழும், சிங்களமும் சரளமாகப் பேசக்கூடிய வர்.

இயந்திரப் பொறிமுறையில் திறமைமிக்கவர். தண்ணீர் இறைக்கும் இயந்திரம், கோப்பித் தொழில் சார்ந்த இயந்தி ரங்களில் கோளாறு ஏற்பட்டால், அவர் அவற்றைத் துரிதமா கத் திருத்த வல்லவர். கடிகாரப் பொறிமுறையில் ஆர்வமும், திறமையும் படைத்தவர். ஒருமுறை கூலி ஒருவர், தான் இட்ட வேலையை மிக மோசமாகச் செய்ததால் ஏற்பட்ட கோபத் தில், அவர் மனதில் சடாரென ஒரு விசித்திர யோசனை தோன்றியது. Your black soul என்று அந்தக் கூலியைப் பார்த் துக் கத்தினார். 'உன்னைவிடத் திறமையான கூலியை, செப் புச் சில்லுகளையும், உருக்குவிசை வில்லுகளையும் கொண்டு நான் ஆக்குவேன்' என்று மனதிற்குள் தீர்மானித் துக்கொண்டார். சாதாரண தோட்டத்துக் கூலி ஒருவன் செய் யும் வேலையை, ஒரு கடிகாரப் பொறிமுறைமூலம், தானி யங்கி இயந்திரத்தை உருவாக்கிச் செய்யமுடியும் என்று, மனதில் அத்திட்டத்தை வலுப்படுத்திக் கொண்டார். ஒரு யாந்திரிக மனித உருவைச் செய்து, அதனை இயக்கச் செய்து, அது தனது கைகளை உயர்த்தியும், நீட்டியும் இட்ட வேலைகளைச் செய்யக்கூடியதாகச் செயற்படுத்த முடியும் என்று தீர்மானித்து, அதற்கான வேலைகளில் அவர் தீவிர

மாக இறங்கிவிட்டார். அதற்கு அவருக்கு முதலில் தேவைப் பட்டது மனித எலும்புக்கூடுதான். தனது தோட்டத்தில் மூன்று மாதங்களுக்கு முன், ஒரு கூலி இறந்துபோனதை நினைவுப டுத்திக்கொண்ட அக்கர்ஸ், அந்தச் சடலத்தைத் தோண்டி எடுப்பது என்று முடிவு கட்டிக்கொண்டார். பகலில் சென்று தோண்டி எடுத்தால், கூலிகள் ஆத்திரம் கொண்டு, அல்லது மூடநம்பிக்கைகள் சார்ந்த பயத்தினால் கிளர்ந்தெழுந்து, தனது முயற்சியைத் தடுத்துநிறுத்தக்கூடும் என்றுதான், அவர் அதனைப் பகலில் செய்யத் துணியவில்லை. அதனால்தான், இந்த அருவருப்பான, தகாத செயலை, மாயன் என்ற தனது ஒரே வீட்டுவேலைக் கூலியைக்கொண்டு செய்தார்.

‘உலகின் சகல தீயனவற்றிற்கும் உருவம் கொடுப்பதுபோல், ஒரு ராட்சசனை நான் உருவாக்குவேன். எலும்போடு எலும் பைப் பொருத்திக் குழிக்குள் பிணைத்து, அதனை இயக்க ஆரம்பித்துவிட்டால், அது நடமாட ஆரம்பிக்கும். சகல மனித உணர்வும், அறிவும் கொண்டதாக அது அமையும். கற்பனை செய்து பார்க்கக்கூடிய தீமை அனைத்தையும், அந்த எலும்புக்கூட்டின் எலும்பு மச்சைக்குள் செலுத்துவேன். மனித இரக்கம், தாராள குணம், ஆகியன அதில் துளிக்கும் இடம் இராது. அதற்கு இதயம் இராது. ஆனால், ஒரு ராட்சச னின் மூளை இருக்கும். அது என்னுடைய அடிமைபோலச் செயற்படும். கேள்வி எழுப்பாமல், தவறு செய்யாமல், நான் சொல்வதைச் செய்யும். என் பழிதீர்க்கும் கருவி அது. எனக் குத் தவறிழைத்தவர்கள், என்னை இழித்துரைத்தவர்கள், என் மீது பரிதாபப்படத் துணிந்தவர்கள் என்று இவர்கள் எல்லோ ரையும் நட்டநடுநிசியில் அது சந்திக்கும்’ என்று, தனது பங்க ளாவிற்கு விருந்தினராக வந்திருந்த அயல் தோட்டத்துத் துரையான ஜொப் ஸ்லோம் என்பவரிடம், அக்கர்ஸ் துரை கூறும் தகவல்கள் இவை.

துரை இல்லாதபோது, பெரட்டுக்களத்தில் காலைவேளையில் கூலிகளுக்கு வேலை கொடுத்து அனுப்பிவிட்டதைத் துரையி டம் சொல்ல, பங்களாவிற்கு வந்த அந்தத் தோட்டத்துக் கிளார்க், துரை அமைதியாக, நுணுக்கமாக எலும்புக்கூடு களை வைத்து ஆராய்ந்து கொண்டிருப்பதைப் பார்த்து வியப்புடன் நிற்கிறார்.

‘ஒரு கறுத்த உருவம் பனிப்புகாரிலிருந்து தோன்றி வாசலில் நின்றது. அவர் ரைட்டர் அல்லது தோட்டத்துக் கிளார்க், நடுத்தர வயதான, மரநாயின் முகங்கொண்ட யாழ்ப்பாணத் துத் தமிழர்’ என்று அவர் நாவலில் அறிமுகம் செய்யப்படுகி றார்.

அல்பிரட் கிளார்க் இந்த நுணுக்க வேறுபாடுகளை அறிந்தவ ராக இருந்திருக்கிறார். மனித முகங்களை வர்ணிக்கையில் அவரது இனவாதப் பார்வை தெரிகிறது.

அந்தக் கிளார்க்கை ‘அலட்டும் முட்டாள்’ என்று முணுமு ணுத்துக்கொண்டு விரட்டிவிடுகிறார் அக்கர்ஸ். ஸ்டோருக்குத் திரும்பிய கிளார்க்கர், தான் துரை பங்களாவில் கண்டதை அங்குள்ளவர்களுக்கு எடுத்துச் சொல்லியதுடன், சுடுகாட் டுக்கு ஓர் ஆளை அனுப்பி, அங்கு ஏதாவது சவக்குழி தோண்டப்பட்டிருக்கிறதா என்று பார்த்துவரப் பணிக்கிறார். சுடுகாட்டில் புதைகுழி ஒன்று புதிதாகத் தோண்டப்பட்டிருப் பதாகத் தெரிவிக்கிறார். ஒரு மணித்தியாலத்திற்குள் அச் செய்தி தோட்டம் முழுதும் பரவுகிறது. மூன்று மாதங்களுக்கு முன் புதைக்கப்பட்ட மாட்டுக்கார வள்ளியப்பன் மகன் ராம னின் சடலம்தான் தோண்டி எடுக்கப்பட்டுள்ளது என்று தெரிய வருகிறது. துரை தனது மோசமான எதிரிக்கு மாந்திரீகம் செய்வதற்குத்தான், அந்தச் சடலத்தை எடுத்திருக்கிறார் என்று மக்கள் பேசிக்கொண்டார்கள். ஆனால், புதைகுழி யைத் தோண்டிச் சடலத்தை எடுத்ததுபற்றி, இறந்துபோன ராமனின் நெருங்கிய உறவினர்கள்கூட எதுவும் பேசத் துணி யவில்லை.

அக்கர்ஸ் துரை கடிகாரக் கூலிப் பொறிமுறையை ஆக்கிக் கொண்டு தோட்டத்தில் பலரையும் அச்சத்தில் ஆழ்த்துகி றார். தோட்டத்திலிருந்து அக்கர்ஸ் துரை திடீரெனக் காணா மல்போவதும், சில நாட்கள் கழித்து, அவரது சடலம் ஆற் றில் கிடப்பதாகவும் கதை பரவுகிறது. உண்மையில் அக் கர்ஸ் துரை சாகவில்லை என்றும், அவர் உயிரோடுதான் இருக்கிறார் என்றும், அக்கர்ஸ் துரையின் பங்களாச் சமை யற்கட்டில் வேலைபார்க்கும் பஸ்டியன் அப்புவிற்குச் சந்தே கம் பிறக்கிறது. காட்டில் ஒளிந்திருக்கும் துரைக்கு, பங்க ளாக் கூலி மாயன் ரகசியமாக உணவு கொண்டுபோய்க் கொடுத்துவருவதையும் பஸ்டியன் அப்பு அறிகிறான். அக்-கர்ஸ் துரையின் தந்தை கப்ரன் அக்கர்ஸுக்கும் சிங்களப் பெண்மணிக்கும் பிறந்தவன்தான் பஸ்டியன் அப்பு என்பதும், அக்கர்ஸ் துரை வைத்திருக்கும் உயிலைத் தேடித்தான், பஸ் டியன் அப்பு, துரை பங்களாவில் வேலைக்குச் சேர்கிறான் என்பதும் நாவலுக்குச் சுவாரஸ்யத்தைச் சேர்க்கிறது.

அக்கர்ஸ் துரை காணாமல் போவதிலிருந்து ஆரம்பமா கும் நிகழ்ச்சிகள் மர்ம நாவல்போல் விபரிக்கப்படுகின்றன.

ஒரு தோட்டத்தில் நடக்கும் சம்பவங்கள் மிக இயல்பாகச் சொல்லப்படுகின்றன. அக்கர்ஸ் துரையின் கடிகாரக் கூலிப் பொறிமுறை என்பது, இன்று நாம் கூறும் ரோபோ (Robot) விற்கு முன்மாதிரியாய் இருப்பது வியப்பை அளிக்கிறது. இந்த ரோபோ பற்றிய முதல் குறிப்பு, 1920-ல் செக் மொழி யில் எழுதப்பட்ட நாடகத்திலேயே காணப்படுகிறது. ஸ்லா விய மொழி வேர்கொண்ட இச்சொல்லுக்கு உழைப்பு என்று பொருள் கூறப்படுகிறது. கடந்த ஐம்பது ஆண்டுகாலப் பகு தியில் ரோபோவின் வளர்ச்சி பெரும் பாய்ச்சலைக் கண்டிருக் கிறது. நவீன மருத்துவத்தில், பெருந்தொழில் ஆலைகளில், நவீன ரோபோக்கள் வகிக்கும் பங்கு வியப்பூட்டுவன.

1894-ல் எழுந்த கோப்பியுகத்துத் தோட்டத்து நாவலில் தானி யங்கிப் பொறிமுறைபற்றிப் பேசப்பட்டிருப்பது இந்நாவ லுக்கு விசேஷ முக்கியத்துவத்தை அளிக்கிறது. கடுமையான உழைப்பிற்கு ஒரு மூர்த்தமாக தோட்டத்தொழிலாளியே உரு வகிக்கப்பட்டிருக்கிறார் என்பதை இந்நாவல் எடுத்துக்காட்டு கிறது. ஆனால், அந்தத் தொழிலாளியாக இந்நாவலில் காட் டப்பட்டிருக்கும் மாயன் என்ற துரைபங்களாக் கூலி, மிக இழிவாகவே சித்திரிக்கப்பட்டிருக்கிறார். இந்நாவலில் மாய னைப் பற்றிய அறிமுகம் பின்வருமாறு அமைகிறது:

‘தோட்டத்தைவிட்டு ஓடிப்போகும் யோசனை எதுவும் இல்லா

மல், அவருக்குத் (அக்கர்ஸ் துரைக்கு) தொடர்ந்து வேலையாளாக இருப்பது தமிழ்க் கூலி மாயன்தான். துரை, யக்கலத் தோட்டத்திற்கு வந்த நாளிலிருந்தே, மாயன் அவரிடம் வேலை பார்க்கிறான். அவன் சரியான முட்டாளும், மந்த புத்தி உள்ளவனுமாவான். ஒன்றுமறியாத பிரகிருதி. அக்கர்ஸ் துரை அவன்மீது வலிமையான ஆதிக்கம் கொண்டிருந்தார். அவனது கழுத்தை அறுத்துக்கொள்ளுமாறு துரை கட்டளையிட்டால், எந்தத் தயக்கமும் இல்லாமல் கழுத்தை அறுத்துக் கொள்ளக்கூடியவன் மாயன்.' [11]

துரை பங்களாவில் புதிதாக வேலையில் சேர்ந்திருக்கும் பஸ்டியன் அப்பு, தன் தாயிடம் பேசிக் கொண்டிருக்கும்போது மாயனைப் பற்றிக் கூறுகிறான்: '...அந்தக் கறுப்புத் தமிழ் நாயைப் பாருங்கள் (Look at that black dog of Demala). அக்கர்ஸ் துரைக்கு அவன் மனதாலும், உடலாலும் ஒரு அடிமை. துரை என்ன கட்டளை போட்டாலும், அவன் அதைச் செய்வான். கழுத்தை வெட்டிக்கொள்ளச் சொன்னாலும், அவன் அதைச் செய்வான்.'[12]

மயனைப் பற்றி இன்னுமொரு இடத்தில் வரும் குறிப்பு இது: 'யக்கலத் தோட்டத்தின் பங்களாவைப் புதிதாகப் பொறுப்பேற்றிருக்கும் செஸ்டர் துரை, வீட்டுவேலைக் கூலி மாயனின் அருவருப்பான தோற்றத்தையும், முட்டாள்தனமான நடத்தையையும் பார்த்து அதிருப்தி அடைந்து, அவனை வேலையிலிருந்து நிறுத்திவிட வேண்டுமென்று யோசித்தார்.'[13]

பிரிட்டிஷ் ஏகாதிபத்தியம் தனது எல்லைகளை விஸ்தரித்துச் செல்வதையும், புவிசார் நிலத் தோற்றத்தையே புதிதாக மாற்றியமைப்பதனையும், சமூக அடுக்கமைவுகளை உருவாக்குவதனையும் இந்நாவல் பேசுகிறது. ஆங்கிலேயர்கள் தனித்தனிக் குணாம்சம் கொண்டவர்களாகக் காட்டப்படும்போது தொழிலாளர்கள் மந்தைக்கூட்டமாகக் கருதப்படுகிறார்கள். கோப்பித் தோட்டங்களைவிட்டுத் தொழிலாளர்கள் ஓடிப்போவதைப் பற்றிப் பல குறிப்புகள் நாவலில் வருகின்றன. தோட்ட லயங்களுக்கு நெருப்புவைக்கும் நிலைமை, கோப்பித்தோட்டக் காலத்திலேயே செயற்பட்டிருப்பதைக் காணமுடிகிறது.

தோட்டத்தொழிலாளர்கள், துரைமாருக்கு மிகப் பணிந்து வேலைசெய்வதை நாவல் பல இடங்களில் பதிவுசெய்கிறது. சுதேசிகள்மீது வெள்ளையர்கள் கொண்டுள்ள இனரீதியான (racist prejudice) மனப்பாங்கினை, நாவலின் சில பாத்திரங்களின் நடத்தையிலிருந்து பெறமுடிகிறது. மலையகத் தமிழரின் நம்பிக்கைகள், சமய வழிபாட்டுமுறைகள் என்பன பற்றியும் இந்நாவல் எடுத்துரைக்கிறது.

'தென்னிந்தியாவிலிருந்து வந்து, தேயிலைத் தோட்டங்களில் வேலைபார்க்கும் தமிழ்க் கூலிகள் அனைவரும் பிறசமய வழிபாட்டினராவர். கோவில்களில் இவர்கள் ஆற்றும் சமயச் சடங்காசாரங்களை ஒரு வழிபாடு என்று எடுத்துக்கொள்வதற்கில்லை. கருணைக்காகவும், பாதுகாப்புக்காகவும் மனுக்குலம் நம்பியிருக்கக்கூடியதாக ஒரு தனித்த கடவுளை இந்து மக்களிடத்தில் காணக்கிடையாது. அவர்களுடைய கடவுளர்கள் எல்லாருமே பேயுருக்களும், தீய ஆவிகளுமாவர். இவர்களிடமிருந்து எந்த நன்மையையும் எதிர்பார்க்க முடியாது. இவர்கள் வழிபடும் சிலைகளின் பயங்கரத் தோற்றத்தைப் பார்த்தாலே, இவை நன்மை தரும் தெய்வங்கள் அல்ல என்பது தெரிந்துவிடும். அச்சமே இவர்களது சமயத்தினை இயக்கும் விசையாகும். சமகாலத்தில் நிகழும் தீமைகளின் மொத்த அச்சமே அது' (Peeps at Many Lands, Ceylon, Alfred Clark (1910), Adam and Charles Black, London, Page 21)[14] என்று ஆங்கிலேய வாசகர்களுக்குத் தெரிவிக்கும் கருத்தில் உண்மை இல்லை. ஆனால், இலங்கையைப் பற்றித் தாங்கள் கண்டுணர்ந்ததை, ஐரோப்பியக் கண்கொண்டு அவதானித்ததை, சர்வவியாபக உண்மையாக எடுத்துச் சொல்லும் போக்கு, அப்போதைய அறிவியல் பார்வையில் ஆதிக்கம் செலுத்தியிருக்கிறது. கோப்பித் தோட்டத்து மலையக மக்களின் வாழ்க்கை நிலைபற்றி அறிய, நமக்குக் கிடைத்திருக்கும் ஒரே புனைவு நூல் என்பதால், The Clock-Work Coolie மிக முக்கிய ஆவண அந்தஸ்தைப் பெறுகிறது.'

**Footnotes:**

- 1. He died for me, A Story of English English Boys and Tamil Coolies, (1902), Arthur Le Feuvre, London.
- 2. The Clock-Work Coolie, (1894), Alfred Clark, Colombo.
- 3. English Literature in Ceylon, (1968), Yasmine Gooneratne, Tisara Prakasakavo, Colombo.
- 4. Eleven Years in Ceylon, Sketches of the field sports and natural history of that colony and an account of its history and antiquities, (1840), Major Forbes, London
- 5. இலங்கைத்தீவு (1959), ஜே. விஜயதுங்க, தமிழாக்கம்: கே. வி. இராமச்சந்திரன், அருணோதயம், சென்னை.
- 6. Ceylon and the Cingalese: their history, government, and religion, the antiquities, institutions, produce, revenue, and capabilities of the island: with anecdotes illustrating the manners and customs of the people (1807- 1872), (1850), Sir. Henry Charles, London
- 7. Excursions, Adventures, and Field Sports in Ceylon: lts Commercial and Military Importance, and Numerous Advantages to the British Emigrant, Vol 1,(1843), James Campbell, London
- 8. Sport in the Low- Country of Ceylon (1901), Alfred Clark,
- 9. Peeps at many lands, Ceylon (1910), Alfred Clark, Adam and Charles Black, London, page 21.
- 10. The Clock- Work Coolie (1894), Alfred Clark, Colombo, page 1
- 11. ibid page 9
- 12. lbid page 11
- 13. ibid page 24
- 14. Peeps at many lands, Ceylon (1910), Alfred Clark, Adam and Charles Black, London, page 21.



nithiyananthan.m@thaiveedu.com

# இலங்கையில் மகிழ்ச்சிகரமான ஈராண்டுகள்

– சி. எஃப். கோர்டன் கம்மிங்



**தமிழில் : சா. திருவேணிசங்கமம்**

**பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதிக் காலங்களில் கோர்டன் கம்மிங் அம்மையார் இலங்கையின் பல பகுதிகளிலும் சுற்றுப் பிரயாணம் செய்தார். அதைப் பற்றி 'இலங்கையில் மகிழ்ச்சிகரமான ஈராண்டுகள்' (Two Happy Years in Ceylon) என்ற தலைப்பில் ஒரு நூலை 1901-ஆம் ஆண்டில் வெளியிட்டார். London CHATTO & WINDUS-ஆல் வெளியிடப்பட்ட அந்நூல் இலங்கை பற்றிய அரிய தகவல்களை கொண்டுள்ளது என்று பலரும் வியந்து பராட்டியுள்ளனர். ஆதன் 17-வது அத்தியாயமாக 'மட்டக்களப்பு' உள்ளது. அதில் ஒன்றரை நூற்றாண்டுகளுக்கு முன்னர் மட்டக்களப்பில் நிலவிய சூழலையும், மக்கள் வாழ்வையும் இந்தக் கட்டுரையில் அம்மையார் படம்பிடித்துக்காட்டுகிறார். அவ்வத்தியாயத்தின் தமிழ் மொழிபெயர்ப்பே இது.**

நாங்கள் ரூகத்திலிருந்து மட்டக்களப்புக்கு சென்றோம். குதிரை நகர மறுத்து நடு வீதியில் படுத்துவிட்டதால் வேறு ஒழுங்குகள் மேற்கொள்ளும் வரையும் தென்னை மரநிழலில் பல மணித்தியாலங்களை கழிக்க வேண்டியதாயிற்று. மீதித் தூரத்தை ஒரு மாட்டு வண்டியை வாடகைக்கு அமர்த்தி பூர்த்தி செய்தோம். குதிரைகளை வாடகைக்கு அமர்த்தும் போது இதுவே பெரும் சிக்கலாக உள்ளது. இதற்கு காரணம் குதிரைகளை வாடகைக்கு விடுவோர் அவைகளை நன்கு பராமரிக்காமல் வைத்திருப்பதாகும். அது பற்றி தனிப்பட்ட முறையில் நான் அறிவேன். குதிரைகளை அரைப்பட்டினி, கால்பட்டினி போட்டு கொடுமைப்படுத்துகின்றனர். அவைகளை நன்கு பராமரித்து நல்ல பயிற்சியும் கொடுத்தால் அவைகளைப் போல நல்ல நண்பர் வேறு யாரும் இல்லை என்பது எனது அபிப்பிராயம்.

மட்டக்களப்பு பிரதேசம் மிகவும் சம தரையை கொண்டது. சுகாதாரக்கேடான சதுப்பு நிலங்கள், பற்றைக்காடுகள் கொண்டதாக ஒரு காலத்தில் இருந்த அது பச்சைப் பசேல் என்று வளம்கொழிக்கும் நெல்வயல்களாக மாறி காட்சியளிக்கிறது. (இதற்கு காரணம் குளங்களை திருத்தி புராதன நீர்ப்பாச முறைமையை சீர்படுத்தியமையாகும்)

சேர் ஹொன்றி வோர்டின் (இவர்தான் காடுகளின் பாது காப்பை முதலில் வலியுறுத்தியவர்) முயற்சியால் கிழக்கு மற்றும் தெற்கு மாகாணங்களில் இருந்த புராதன நீர்ப்பாசனத் திட்டங்கள் புனரமைக்கப்பட்டன. இந்த வகையில் தூர்ந்து போன பெரும் குளங்களான இறக்காமம் மற்றும் அம்பாறை குளங்கள் புனரமைக்கப்பட்டன. இதனால் மட்டக்களப்பில் மலேரியா பெருகும் இடங்களாக இருந்தவை புன்னகை பூத்து வளங்கொழிக்கும் நிலங்களாக மாறின. மற்ற பயிர் வகைகளை தவிர மட்டக்களப்பில் நெல்விளையும் நிலங்கள் மாத்திரம் 20,000 ஏக்கருக்கு விரிந்து கிடக்கின்றன. ஐம்பது வருடங்களுக்கு முன்னர் அரைப்பட்டினி கால்பட்டினி கிடந்து நோயாலும் நொடியாலும் துன்புற்ற மக்கள் நன்கு உண்டு, குடித்து ஆரோக்கியமாக வாழ்கிறார்கள்.

மட்டக்களப்பில் கடற்கரைப் பிரதேசத்துக்கு சமாந்தரமாக முப்பது மைல் நீளமான ஒரு விந்தையான நன்னீர் ஏரி ஒன்று உள்ளது. இதற்கு சமாந்தரமாக இலங்கையின் மேற்கு கரையிலும் ஓர் ஏரி காணப்படுகிறது. அது 200 மைல்கள் தொட்டு 20 மைல்கள் வரை நீளமான பல ஆறுகள் சமவெளிக்குடாக பாய்ந்து வந்து சேர்க்கும் நீரால் நிறைகிறது. அப்பசிய சமவெளிகளில் blue kingfishers, snowy or rose-coloured cranes. pelicans மற்றும் பல வகை நீர்ப் பறவைகளை காண முடியும்.

இந்த நீர்நிலைகள் எல்லாம் அவைகளுக்கும் கடலுக்கும் இடையே இயற்கையாக தடைகளை உருவாக்கி (மணல் திட்டுகள்) கடல்நீர் உட்புகாமல் தடைசெய்கின்றன. இவை வியாபாரக் கப்பல்களின் போக்குவரத்துக்கு பெரும் இடையூறாக உள்ளன. இதனால் எந்தவித சலனத்துக்கும் உட்படாது இந்த வாவிகள் கண்ணாடி போன்று தூரத்திலிருந்து தெரியும் நீலமலைகள், பசுமை போர்த்திய குன்றுகளின் பின்னணியில் அமைதியாக கிடக்கின்றன.

மட்டக்களப்பு என்னும் பெயர் மட்ட, களப்பு என்னும் இரு தமிழ் சொற்களால் உருவானதாக சொல்லப்படுகிறது.

அங்கே உள்ள புளியமரத்தின் தீவு என்னும் பொருள்படும் புளியந்தீவு என்னும் சிறு தீவில் போர்த்துக்கீசர் தங்களுக்கு ரிய நகரத்தையும் கோட்டையையும் கட்டியிருந்தனர். இதனை அவர்கள் கண்டி அரசனின் அனுமதி பெறாமல் 1627-ல் கட்டினர். இதனால் கோபங்கொண்ட மன்னன் ஒல் லாந்தர்களின் உதவியை நாடவேண்டியதாயிற்று. ஒல்லாந்தர் கள் 1638-ல் ஆறு போர்க் கப்பல்களுடன் ஜாவாவிலிருந்து வந்து போர்த்துக்கீசர் கோட்டையை தாக்கி அழித்து தங்க ளுக்கான கோட்டை ஒன்றை அவ்விடத்தில் கட்டிக்கொண்ட னர். இதனுள்ளே அழகிய தேவாலயமொன்றும் காணப்படுகி றது.

இந்த கோட்டையின் நடுவில் புல்வெளி அமைத்துள்ளார்கள். வாவிப் பக்கத்தில் தென்னை மரங்கள் நிற்கின்றன. மற்ற மூன்று பக்கமும் வெள்ளையடிக்கப்பட்டு ஓடு போட்ட வீடு கள் உள்ளன. பக்கத்தில் மயானம் அமைந்துள்ளது. அவ்வீ டுகள் ஒன்றின் பக்கத்தில் இருக்கும் மயானத்தைப் பார்த்து எங்களுடைய முன்னோர்களின் வரலாற்றை அறிந்து கொள்ள முடிந்தது.

பழைய டச்சு கோட்டையின் மதிற்சுவரில் நின்று வாவியும் வானமும் தங்க தகடாக, மாணிக்க சிவப்பாக மாறும் மாலைக் காட்சியை பார்த்ததன் பின் நாங்கள் நிலவொளி யில் புகழ்பெற்ற பாடும் மீன் இசையை கேட்க புறப்பட் டோம். இவ்விசை கோடை காலத்தில் மாத்திரம் கேட்ட கூடி யதாக இருப்பதால் எங்களுக்கு நல்ல வாய்ப்பாக அமைந் தது. மழை காலத்தில் வாவி நிரம்பி இருப்பதால் மீனிசை சரியாக கேட்காது.

அன்று இரவு மெல்லிய காற்று தானும் இல்லாமல் சிறிய அலையும் அடிக்காமல் இருந்ததால் சிறிய ஓசையை தானும் கேட்ககூடியதாக இருந்தது எங்களுக்கு வாய்த்த நற்பேறு என்று சொல்ல வேண்டும். எங்களுக்கு அந்த இசை உருக்கு ஊசியால் கிளாசில் கீறுவது போலவும் அல்லது ஈர விரலால் கிளாசில் உரைவது போலவும் இருந்தது.

நாங்கள் மெல்லியதாக (படகை) வலித்து ‘இசைஞர்கள்’ பாடும் மையங்களை இனங்கண்டு சென்று இசையை கேட் டோம். தமிழ் மீனவர்கள் இந்த இசைஞர்களை சிறிய ஊரி கள் என்று அடையாளம் காணுகிறார்கள். அவர்கள் ஊரி பாடுவதை ‘ஊரி குழறுது’ என்று கூறுகின்றனர். ஆயினும் மற்ற ஏரிகளில் உள்ள இந்த வகை ஊரிகள் பாடாமையின் மர்மம் புரியவில்லை.

அந்த ஏரியில் யாரும் விரும்பாதது முதலையாகும். அவை கள் ஆறு அங்குலம் தொட்டு இருபது அடி வரை நீளமு டையனவாக பெருமளவில் காணப்படுகின்றன. இருபது அடி வரை நீளமான முதலை ஒன்று குட்டி போட்டுள்ளதாக கேள் விப்பட்டோம்.

அங்கே மீனவர்கள் குறி தவறாமல் மீன்களை அம்பெய்து பிடிப்பது எங்களுக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது. அவர்கள் பொழுதுபட்டவுடன் தோணியின் நடுப்பாகத்தில் பாத்திரமொன்றில் பிரகாசமாக நெருப்பை எரிய வைத்து கொண்டு ஏரிக்குள் செல்வார்கள். பிரகாசமான வெளிச்சத் தால் கவரப்பட்ட ஆயிரக்கணக்கான பூச்சிகள் அதை சுற்றி மொய்த்துக் கொண்டிருக்கும். அப்பூச்சிகளை உணவாக்கி கொள்ள மீன்கள் மும்முரமாக முனைந்து நீருக்கு மேல் பாயும். அவ்வேளையில் அணியத்தில் அம்புடன் நிற்கும் மீனவன் குறி தவறாமல் மீனுக்கு எய்வான். தோணியும் நெருப்பில் பிரதிபலிக்கும் பிம்பங்களும் நிலவொளியும் நீண்டு உயர்ந்து நிற்கும் தென்னை மரங்களும் மறக்க முடி யாத காட்சிகளாக இருந்தன.

சில நாட்களுக்கு பின்னர் வாழ்வில் என்றும் மறக்க முடியாத ஒரு காட்சியை காணும் வாய்ப்பொன்று எங்களுக்கு கிட்டி யது. ஒரு ஞாயிற்றுகிழமை, பிஷப் மட்டக்களப்பில் வாழும் பிரித்தானியர்கள், பறங்கிகளுக்கு ஆங்கிலம் வகுப்பையும் தமிழர்களை மதம் மாற்றுவதற்கான ஆலோசனை கூட்டத்தை யும் நடத்தினார்.

அவர்கள் அவரிடம் முக்கியமான விடயமொன்றை (அது இலங்கையிலே முக்கியமான ஒன்றாகும்) கூறினர். அது பக் கத்தில் உள்ள கிராமத்தவர்கள் தாம் இதுவரை வணங்கி வந்த தமிழ் (இந்து) கடவுளர்களை விட்டு ஒரே உண்மைக் கடவுளை சேவிக்க தொடங்கி உள்ளனர் என்பதாகும். அவர் கள் மிகவும் ஏழைகளாக, மரமேறி கள் இறக்கி பிழைக்கும் நளவர் சமூகத்தைச் சேர்ந்தவர்களாக இருந்த போதிலும் தங் களுடைய வழிபாட்டிற்கு வசதியாக இருக்கும் என்பதால் சேர்ச்சுக்கு பக்கமாக சிறுகச் சேர்த்து குடியிருக்க நிலம் வாங்கியுள்ளனர். அவர்களில் சிலர் ஏற்கெனவே தற்காலிக மாக சிறு குடிசைகளும் அங்கே அமைத்துள்ளனர்.

உள்ளூர் மதகுரு ஏற்கனவே மதம் மாறியவர்கள் ஞானஸ்ஞா னம் பெற ஆவலாக உள்ளனர் என்றும் அதனால் அங்கே வரும் படியும் பிஷப்பை வேண்டினார். பிஷப்பை காத்துக் கொண்டு இருப்பவர்களில் 20 ஆண்களும் 130 பெண்களும் சிறுவர்களும் அடங்குவர் என்றும் அவர் தெரிவித்தார்.

ஓர் அழகிய மாலைப்பொழுதில் ஒரு தோணியில் நாங்கள் நாவற்குடா (ரோஸ் அப்பிள் அல்லது நாவல் மரக்குடா என் பது பொருளாகும். மரத்தின் பழம் கருநீல நிறமுடையதும் இனிமையான மணமுடையதுமான சிறிய பழமாகும்) என்ற அக்கிராமத்துக்கு சென்றோம். பசிய தென்னோலைகள் சாம ரம் வீசும் தெளிவான நீல வாவிக் கரையில் எங்களை எதிர் பார்த்து ஆண்களும் பெண்களும் சிறுவர்களுமாக 160 பேர் காத்துக்கொண்டிருந்தனர். பழைய சமயத்தைவிட்டு புதிய சமயத்துக்கு பெருங்காலடி எடுத்துவைக்க அவர்கள் தயாரா கியிருந்தனர். புதிய சமயகுருவை எதிர்பார்த்து அவர்கள் காத்திருந்தனர். தலையில் தலைப்பாகை கட்டியிருந்த அந்த பழுப்பு நிற மனிதர்கள் இடையில் பிரகாசமான நிற காலிங்கோ துணியை கட்டியிருந்தனர். ஏழைகளாக இருந்தா லும் பெண்கள் உலோகத்தால் செய்யப்பட்ட ஓட்டியாணமும் கொலுசும் அணிந்திருந்தனர். அவர்களின் முகங்களில் இனிய சுபாவம் இழையோடி இருந்தது. உள்ளூர் பாணியில் தென்னம்குருத்தால் தற்காலிகமாக கட்டப்பட்டிருந்த சிறிய தேவாலயத்தை அலங்கரித்திருந்த அவர்கள் பிஷப் வருகை யின் அடையாளமாக வெள்ளை காலிங்கோ துணியை அங்கே தொங்கவிட்டிருந்தனர். (வெள்ளைத் துணி கௌரவத் தின் அடையாளமாகும்).

உடனடியாக ஞானஸ்நான செயற்பாடுகள் ஆரம்பமாகின. எல்லாரும் ஆழ்ந்த பக்தியுடன் பிஷப்பின் பிரசங்கத்தை கேட்டுக்கொண்டிருந்தனர். கடைசியில் பொழுது மறையும் வேளையில் எல்லா செயற்பாடுகளும் முடிவுக்கு வந்தன. பின்னர் நாங்களும் மட்டக்களப்புக்கு திரும்பினோம். நில வொளியில் நெருப்பு பந்தமேற்றிய தோணிகளில் மீனவர்கள் மீனை எய்யும் வேட்டையில் ஈடுபட்டிருப்பதை காணமுடிந் தது.

இதன் பிறகு குறுகிய காலத்தில் பிஷப்பின் உடல்நிலை மோசமடைந்ததால் அவர் இலங்கையில் தனது பணியை கைவிட்டு இங்கிலாந்து போக நேரிட்டது. என்னால் வாவிக் கரையில் கண்ட காட்சிகளை மறக்க முடியவில்லை. மிக அண்மையில் மிகத் துயரமான சம்பவங்கள் அங்கிருந்து வந்து மனதை வருத்துகின்றன. எங்களது சகோதர கிறித்தவ மக்களாக இருக்கும் அவர்கள் குறைந்த சாதியினராக இருக் கும் ஒரே காரணத்துக்காக கடுமையாக துன்புறுத்தப்படுகி றார்களாம். அங்கிருந்து கிடைக்கும் ஒரே ஆறுதல் பாட சாலை ஆசிரியர் ஒருவர் அவர்களின் குழந்தைகளுக்கு நல்ல ஆரம்ப கல்வியை புகட்டி வருகிறார் என்பதும் தமிழ ரான மதகுரு வண. ஏ. வேதாகன் என்பவர் எப்போதாவது வந்து அவர்களுக்கு சமயப் பிரசங்கம் செய்கிறார் என்பது மாகும்.

அவர்கள் மதம் மாறிய நாளிலிருந்து விக்கிரகக் கோயிலுக்கு விறகு கொண்டுவந்து கொடுக்க மறுத்துவிட்டனர். அதி காலை நேரத்தில் சில அத்தியாவசிய வேலைகளை தவிர ஞாயிற்றுக்கிழமைகளில் வேலைசெய்வதை தவிர்த்துவிட்டனர். இவைகளை கண்டு எரிச்சல் அடைந்த உயர்சாதியார் எனத் தம்மை கருதிக்கொள்பவர்கள் அவர்களை கடும்வெயில் நேரத்திலும் கூட குடைபிடிக்க அனுமதிப்பதில்லையாம். இதை மீறினால் அவர்கள் கடுமையாக அடித்து துன்புறுத் தப்படுகின்றனராம். அவர்கள் கள் இறக்கும் வேலைக்கு சென்று திரும்பி வரும்போது அவர்களின் குடிசைகளை சின் னாபின்னமாக்கி விடுகிறார்களாம். இந்த அநியாயங்களை அவர்கள் மட்டக்களப்பில் உள்ள கிறித்தவ சமூகத்தவர்களி டம் முன்வைத்த போதும் அவர்கள் ஒரு நடவடிக்கையும் எடுக்காமல் பாராமுகமாக இருந்திருக்கிறார்கள் என்று செய்தி வருகிறது.

1889-ல் அவர்களைப் போய்ப் பார்த்த தற்போதைய பிஷப் மட்டக்களப்பு சேர்ச் சமூகத்தை அவர்கள் மீது அநுதாபம் கொள்ள வைத்தார். விரைவில் சிறிய தேவாலயம் ஒன்றை கட்டி தருவதாக வாக்களித்தார். அவரின் வருகை மீனவர்க ளிடையே பொறாமையை தூண்டுவதாக இருக்கிறது. அவர் கள் 1890 ஜனவரி 6-ஆந் திகதி இந்த ஏழைக் கிறித்தவர்கள் மீது கடும் தாக்குதலை தொடுத்தனர். குடிசைகள், சிறிய கோயில் ஆகியவற்றை கொளுத்தினர். முழுக் கிராமத்தை யும் சாம்பல் மேடாக்கினர். பலத்த காயங்களுக்கு ஆளான இருவர் மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்கு எடுத்து செல்லப்பட்ட னர்.

இருந்த போதிலும் அடுத்து வந்த ஞாயிறுக்கிழமை பிராத் தனை அமைதியாக வாவிக் கரையில் மரங்களின் நிழலில் வழமைபோல நடந்து முடிந்தது. தனது கடமை என்று நினைத்த பிஷப் வண. வேதாகன் இந்த அநியாயங்களை மாஜிஸ்திரேட்டுக்கும் அரசாங்க அதிபருக்கும் அறிவித்தார். கலகத்துக்கு காலாக இருந்தவர்கள் சிறையில் அடைக்கப் பட்டனர். கிறித்தவர்கள் தரப்பில் ஒருவரும் கைதாகவில்லை.

பாதிக்கப்பட்டவர்கள் திரும்பவும் தங்களது பழைய இடத்தில் குடியேற விரும்பவில்லையாதலால் அரசாங்க அதிபர் மாவட் டத்தில் வேறு ஏதாவது இடத்தில் அவர்களை குடியேற்ற நட வடிக்கை எடுத்தார். சிறையில் இருந்த கலகம் செய்தவர்க ளின் தலைவன் சமாதானத்தை விரும்புபவன் போல பாசாங் குகாட்டி தான் அவர்களின் குடிசைகளை மீண்டும் கட்டி தரு வதாகவும் அவர்கள் வந்து இருக்கலாம் என்றும் அறிவித் தான். ஆயினும் பாதிக்கப்பட்டவர்கள் பயப்பட்டனர். வேதா கன் அவர்களோடு கதைத்து அவர்களை இணங்கச் செய்து கலகக்காரர்களுடன் பேசுவதற்கு தீர்மானித்தார்.

சமாதான நடவடிக்கையில் ஈடுபாடு கொண்ட அந்த முதிய மதகுரு வண. வேதாகன் காலை 7.30 அளவில் வாவியை கடந்து நாவற்குடாக்கு வந்தார். அங்கே கலகக்காரர்களின் தலைவன் நிற்பதை கண்டார். மற்ற உத்தியோகத்தவர்கள் அப்போது வரவில்லை. அவரை கண்டதும் அவன் இடை யில் நின்ற கிறித்தவர் ஒருவரையும் தாக்கிவிட்டு அவரை நோக்கி ஓடி வந்தான்.

அவன் கையில் துவக்கு, அரிவாள் இருந்தது. அவனின் கோலத்தை கண்டவுடன் வேதாகன் வாவிக்குள் நின்ற தோணியை நோக்கி ஓடினாரர். வயதான அவரால் விரைவாக ஓடி தப்ப முடியவில்லை. அவன் கற்களாலும் பொல்லுகளா லும் அவரை தாக்கினான், வாளால் சரமாரியாக வெட்டி னான். மயக்கமடைந்த அவர் அங்கே விழுந்து கிடந்தார். உதவிக்கு ஆட்கள் வரும் வரையும் இரண்டு மணித்தியாலங் கள் அவர் அப்படியே கிடந்தார் என்று சொல்லப்படுகிறது. அவர் கடுமையாக வாள்வெட்டுக்கு உள்ளாகி இருந்தது தெரிந்தது. அவரது இடதுகை பெருவிரல் துண்டாகி இருந் தது. அவரது உடலிலிருந்து பெருமளவு இரத்தம் வெளியேறி இருந்ததால் அவர் மயக்க நிலையில் இருந்து மீள வெகு நேரமாகிவிட்டது. அவரது உயிருக்கு ஆபத்து வருமோ என்ற அச்சம் ஏற்பட்டது.

சந்தோசப்படும் படியாக நல்ல பராமரிப்பும் கவனிப்பும் இருந்ததால் தனது பணிகளை மீண்டும் தொடரக்கூடிய நிலையை அவர் ஐந்து மாதத்தில் அடைந்துவிட்டார். கோர்ட் டில் வழக்கு பத்து மாதங்கள் நடந்தது. தாக்கியவன் குற்ற வாளியாக காணப்பட்டு பத்து மாதங்கள் சிறைத் தண்டனை பெற்றான். வழக்கு நீண்ட காலம் எடுத்ததற்கு காரணம் குற்ற வழக்குகளை விசாரிக்கதக்க நீதிமன்றம் மட்டக்களப்பிலோ திருகோணமலையிலோ இல்லாமையாகும். அங்கு நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக பொலிஸ் படை ஒன்று நிறுவப்பட்டது. அதற்காக மக்கள் வருடம் 1600 ரூபாய் கட்ட வேண்டும் என்று ஆணையும் பிறப்பிக்கப்பட்டது.

கிறித்தவர்கள் தங்களது பழைய இடத்தில் குடியேற விரும்ப வில்லையாதலால் மட்டக்களப்பின் மறுபக்கம் அவர்களை குடியேற்றுவதென்று தீர்மானிக்கப்பட்டது. ஆயினும் அவர்க ளின் கவலை என்னவென்றால் சாதிபேதம் பார்க்காத பக்

கத்து முகமதிய மக்கள் பெரும்தொகையில் வாழும் கிராமத்தைவிட்டு செல்கிறோம் என்பதாகும். அங்குதான் அவர்களுக்கு வேலைவாய்ப்பு அதிகம் கிடைத்து வந்தது.

இவ்வாறு நீண்ட காலமாக துன்பப்படும் கிறித்தவ மக்களை கருத்தில் கொண்டு பிஷப் ஒரு சேர்ச் ஒன்று கட்ட நிதி திரட்டி வருகிறார். ஆயினும் இடத்தை தீர்மானிக்க அவரால் முடியவில்லை. எதிராக செயற்படுபவர்களின் மனதை எவ்வாறாயினும் வெற்றிகொண்டு பழைய இடத்திலேயே அதை கட்ட வேண்டும் என்று அபிப்பிராயம் உள்ளது.

மொத்தப் பிரச்சினைக்கும் காரணம் என்னவென்றால் சிறிய சாதிகள் சுயகௌரவத்துடன் இயங்குவதையோ சமூகப் படிநிலையில் இருந்து மேலெழுவதையோ அங்குள்ள(ஆதிக்க சாதியினர்) மீனவர் சாதியினர் விரும்பவில்லை. ஆயினும் நிலைமை மெல்லவாக மாறி வருகிறதென்றுதான் சொல்ல வேண்டும். இன்று எறிக்கும் வெயிலில் அல்லது கொட்டும் மழையில் குடைபிடித்து செல்வதை யாரும் தடுப்பதில்லை.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நாவித சாதியினர் ஒரு கலியாணத்தின் போது குடைபிடித்து சென்றனர். இதை கண்டு வெகுண்ட மீனவர் சாதி ஆட்கள் அதை பிடுங்கி எறிந்தனர். கைகலப்பு ஏற்பட்டது. உயர் சாதியினர் எனப்படுபவர்களும் காயமடைந்தனர். பல மீனவர்கள் சிறைக்கு அனுப்பப்பட்டனர். பல நாவிதர்களின் வீடுகள் கொழுத்தப்பட்டன. அன்றிலிருந்து குடை பிடிப்பதை அவர்கள் விட்டுவிட்டனர். உள்ளூர்காரர்கள் இதை உரிமை நிலைநாட்டல் என்றனர். இதற்கெல்லாம் வழிகாட்டி நாவற்குடா நள சமூகத்தினர் என்று எண்ணிய மீனவர்கள் அவர்களுக்கு ஒரு பாடம்படிப்பிக்க வேண்டும் என்று தீர்மானித்தனர்.

உயர்தொழில் துறையிலும் சாதி வேற்றுமை எவ்வாறு நிலைகொண்டுள்ளது என்பதை நான் ஓர் உதாரணத்தின் மூலம் உணர்ந்து கொண்டேன். ஒரு நள சமூகத்தவர் தனது மகனை படிக்க வைத்து சட்டத்தரணியாக்கினார். அவனின் சொந்த நகரத்தில் இருந்த சட்டத்தொழில் சகபாடிகள் அவனை தம்மோடு கூட மேசையில் அமர அனுமதிக்கவில்லை. அவன் தனது சட்ட தொழிலை வேறு தூர இடமொன்றுக்குப்போய் மேற்கொள்ள வேண்டியதாயிற்று.

இந்த மாதிரியான விடயங்கள் பிரித்தானியாவில் புதினமானவைகளாகும். அங்கே ஒரு மனிதரை உருவாக்குவது காசாகும். அதை தங்கம் ஆட்சி செய்கிறது, அனைவரும் அதற்கு கீழ்படியும் நிலை ஏற்பட்டுள்ளது என்று கூறுவர்.

ஒரு அதிகாலை நேரத்தில் உடைந்த பல்லக்கு ஒன்றில் ஏறி மட்டக்களப்பைவிட்டு புறப்பட்டோம். அப்பல்லக்கை ஒரு மோசமான குதிரை நான்கு மைல்களுக்கு இழுத்து சென்றது. அதன் பின் வண்டில் சில்லு புதையும் மணல் பாதைக்கு வந்தோம். அங்கே பிஷப்பின் குதிரைகள் எங்களை முண்டிம் ஆற்றுக்கு அல்லது வாவிக்கு எடுத்து செல்ல காத்து நின்றன. அந்த ஆற்றை ஒரு படகு மூலம் கடந்து சந்திவெளிக்கு சென்றோம். அங்கே எனது சகோதரரின் நண்பருக்கு சொந்தமான பெரிய தென்னம்தோட்டம் இருக்கிறது.

அங்கிருந்த எளிய பங்களாவில் நாங்கள் தங்க வைக்கப்பட்டோம். அதுவே வருகின்ற பல நாட்களுக்கு எனக்கும் செல்வி ஜேர்மைனுக்கும் வாசஸ்தலமாக இருந்தது. எனக்கு ஒரு தென்னம்தோட்டத்துக்குள் வாழ்வது இதுவே முதல் தடவையாகும். ஒவ்வொரு நாட்காலையும் யானை பூட்டிய வண்டி ஒன்று தென்னம்தோட்டத்தை சுற்றி வரும். வண்டிக்குள் வேலையாட்கள் இரவில் விழுந்து கிடக்கும் தேங்காய்களை பொறுக்கி கொண்டு வந்து போடுவார்கள். அதை வண்டில் ஒரு குறித்த இடத்தில் கொண்டு வந்து கொட்டும். மதிய நேரமளவில் ஒரு பெரிய குவியலாக அது சேர்ந்திருக்கும். இத்தேங்காய்கள் நன்கு பழுத்தவைகளாக இருப்பதால் தும்பு பகுதி கடினமானதாக இருக்கும். அவைகளை கூலியாட்கள் கோடரிகளால் பிளந்து அதனுள் இருக்கும் தேங்காயை கரண்டியால் சூந்து எடுப்பார்கள். அவைகளை வெயிலில் காயவைத்து எண்ணெய் பிழியும் ஆலைக்கு எடுத்து செல்வார்கள்.

அங்குள்ள கிணற்றடியில் ஒவ்வொரு நாளும் பெரிய தலைப்பாகை அணிந்த பழுப்பு நிற ஆண்களும் பிரகாசமான நிறத்தில் சேலை கட்டி வெள்ளியில் காதணியும் கொலுசும் அணிந்த பெண்களும் சிறுவர்களுமாக வந்து சட்டி பானைகளை கழுவும் காட்சி பார்க்க சுவாரஸ்யமாக இருக்கும். அங்கிருந்த குட்டி யானை செல்லப் பிராணி மாதிரி எங்களுக்கு வேடிக்கை வேறுகாட்டிக்கொண்டு இருந்தது.

தெளிவான வானமும் நல்ல நிலவும் வெள்ளிகளும் ஒளிவீசும் ஒரு நாள் இரவில் நாங்கள் வீட்டில் இருக்கப் பிடிக்காமல் வெளியில் சென்றோம். அந்தப் பிரகாசத்தைவிட நாங்கள் தென்னோலையாலும் தும்பினாலும் கட்டியிருந்த பந்தம் பெரும் வெளிச்சத்தை அள்ளி வீசிக்கொண்டிருந்தது. சிறுத்தை வந்திருக்கிறது என்று கருத்த மந்தைகள் ஒன்று திரண்டு பந்தத்துக்கருகில் முண்டியடித்துக் கொண்டு வந்தன. இந்த அபூர்வ காட்சியை ஒரு தேர்ந்த ஓவியனாலும் தீட்டிக்காட்ட முடியாது.

ஒரு நாள் இரவு வெள்ளைக்காரப் பெண்களை சிறுத்தைகள் என்று தவறாக எண்ணிய மாடுகள் கட்டுக்களையும் வேலிகளையும் உடைத்துக் கொண்டு வெளிவந்து மிதிப்பட்ட காட்சி பெரும் சுவாரஸ்யத்தை ஏற்படுத்தியது.

நான் இங்கே சுவாரஸ்யமில்லாத விபரம் ஒன்றை சொல்லியாக வேண்டும். அது இந்த மாடுகள் தோட்டத்தின் பசளைத் தேவைக்காக பராமரிக்கப்படுவனவாகும். நான் தற்போது தங்கி இருக்கும் தோட்டத்தில் 180 மாடுகளை 500 பவுண்கள் கொடுத்து வாடகைக்கு வைத்திருக்கிறார்கள். இதை தவிர அவற்றால் பெறப்படும் பால், நெய் போன்றவற்றை மாட்டுக்காரர்கள் எடுத்துக்கொள்ளலாம். கோப்பி தோட்டச் செய்கை வீழ்ச்சியடைந்தவுடன் இந்த பசளைக்கு பெறுமதி குறைந்து விட்டது. இதனால் பல தோட்டக்காரர்கள் மாடுகளை விற்று விட்டனர். இப்போது தேயிலை செய்கைக்கான செயற்கை உரம் தயாரிக்க வேலைகள் நடந்து கொண்டிருப்பதாக கேள்வி.

1890ல் முறையன் என்னும் நோயினால் இந்த மட்டக்களப்பு மாவட்டத்தில் 14,000 ஆயிரம் எருமைகளும் 6,200 பசுமாடு

களும் இறந்துவிட்டன என்பதை அறிய பெரும் கவலையாக உள்ளது. மின்னேரி, பொலன்நறுவை மாவட்டங்களை சுற்றியுள்ள பகுதிகளிலும் 5,581 எருமை மாடுகளும் 5,223 பசுமாடுகளும் இறப்பை தழுவியுள்ளன. இதே போன்று ஹப்புத்தளை, ஊவா மாவட்ட கிராமங்களிலும் மந்தைகளின் அழிவு நிகழ்ந்துள்ளதாக தகவல் கிடைக்கிறது. இந்த பேரழிவுக்கு அடிப்படைக் காரணம் மக்களிடம் உள்ள மூடநம்பிக்கையாகும். அவர்கள் இது பேய் பிசாசுகளின் கைங்கரியம் என்று நினைக்கிறார்கள்.

எங்களுக்கு கிடைக்கும் காட்டுப் பன்றி இறைச்சி இங்கிலாந்தில் கிடைப்பது போன்று தரமானதில்லை. ஆயினும் இங்கே வயல் நிலங்களும் சதுப்பு நிலங்களும் பெருமளவில் உள்ளதால் பல வகை கீச்சான்கள் கிடைப்பதையிட்டு திருப்தியடைய வேண்டும். அண்மையில் இத்தோட்டத்திலிருந்து எனக்கு ஒரு கடிதம் வந்தது. அதில் திடீரென்று விருந்தாளிகள் வந்ததாகவும் அவர்களுக்கு 17½ சோடி கீச்சான்களை பிடித்து பொரித்து, அவித்து கறி வைத்து கொடுத்து சமாளித்ததாகவும் எழுதியவர் குறிப்பிட்டிருந்தார்.

1872-ம் ஆண்டில் கேணல் மீடென் திருகோணமலையில் தங்கி இருந்த போது பக்கத்திலிருந்த தம்பலகாமம் வாவிக்கு இலகுவில் செல்லக்கூடியதாக இருந்தது. அவர் ஜனவரி - ஏப்ரல் மாதங்களுக்கிடையில் 17 தடவைகள் கீச்சான் வேட்டைக்கு சென்று 482½ சோடி கீச்சான்களை வேட்டையாடினார் என்று சொல்லப்படுகிறது. கூடியதாக ஒரு நாள் 52 சோடிகளையும் குறைவாக ஒரு நாள் 2 சோடிகளையும் அவர் வேட்டையாடியுள்ளார்.

தீவின் தென்-மேற்கில் உள்ள பெந்தோட்டையில் எங்களுடைய சொந்தக்காரன் ஹெக்டர் மக்னீல் (பழைய காட்டுக் காவலாளியின் பேரன்) 1891-இன் மார்ச், ஏப்ரல், மே மாதங்களில் 375 சோடி கீச்சான்களை பிடித்தார் என்று கேள்விப்படுகிறோம்.

வாவிக்குப் பக்கத்தில் நாங்கள் தங்கியிருந்ததால் அதிகாலையிலும் மாலைவேளையிலும் எனது விருந்தாளியின் உதவியோடு தண்டு வலிக்க கற்றுக்கொண்டேன். அதனால் அடிக்கடி அக்கரையில் இருந்த வேடர் குடியிருப்பையும் போய்ப்பார்த்து வந்தேன்.

பாக் நாட்டிலிருந்து அதன் தென்முனையான மட்டக்களப்பு வரையும் நாங்கள் பயணம் செய்த எல்லா இடங்களிலும் பழங்குடி மக்கள்தான் பரவி இருந்திருக்கிறார்கள். அவர்களை வங்காளத்தில் இருந்து வந்த சிங்களவர்கள் வெற்றி கொண்டு தங்களது பண்பாட்டை தனிமைப்படுத்தி பராமரித்துள்ளார்கள். இதை போன்ற நடைமுறையையே மத்திய மலை நாட்டின் அடிவாரத்தில் வாழும் வேடர்களும் கடைப்பிடித்தனர். அவர்கள் பெரிய மலைகளின் அடிவாரக் குகைகளிலும் அடர்ந்த காடுகளிலும் தம்மை ஒளித்து வாழ்கின்றனர். இப்போது கணிசமான காடுகள் அழித்தமையால் இந்த காட்டுக் காய்ச்சல் பெருமளவு குறைந்திருக்கிறது.

மனிதப் பிரசன்னத்தை கண்டு கூச்சப்படும் இனக்குழுக்கள் தனிமைப்பட்ட வனப் பிரதேசத்தில் எப்போதாவது அம்பும் வில்லும் கொண்டு சத்தமில்லாமல் மிருகங்களை வேட்டையாடி வந்தனர். தப்பிப்பிழைத்து ஓடிச்சென்ற மிருகங்கள் மற்ற மிருகங்களை எச்சரிக்கும் அவ்வளவுதான்.

தண்ணீர்த் தடாகங்களை தேடி ஒரு மாவட்டத்தில் இருந்து மற்ற மாவட்டத்திற்கு புலம்பெயர்வதை வழக்கமாக கொண்ட அவர்கள் அங்குள்ள குகைகளிலும் புல்லால் வேய்ந்த குடிசைகளிலும் வாழ்ந்தார்கள். (பலர் சொல்வது போல் அவர்கள் மரங்களில் வாழவில்லை) நீர் வற்றும் போதில் இந்த மிருகங்கள் மலையடிவாரங்களில் நீர் தேங்கிய மடுக்களையும் குட்டைகளையும் நாடிப்போயின. இந்த வேடர்களும் தமது நாய்களையும் கூட்டிக்கொண்டு அவற்றைப் பின்தொடர்ந்தனர்.

அவர்கள் மிருகங்களை வேட்டையாட பெரிய வில் அம்புகளையும் பறவைகளை வேட்டையாட சிறிய வில் அம்புகளையும் பாவித்தனர். ஆறடி நீளமான பெரிய வில் வளைந்து கொடுக்கக் கூடிய மரத்தால் செய்யப்பட்டிருக்கும். அது ஐந்தடி உயரமான அந்த வில்லாளியைவிட நீளமாக இருக்கும். நாண் மரப்பட்டைகளை திரித்து கட்டப்பட்டிருக்கும். அம்பு இரண்டரை அடி நீளமாக இருக்கும். அதன் முனைகள் இரும்பினால் செய்யப்பட்டு ஆறு அல்லது பன்னிரெண்டு, பதினைந்து அங்குல நீளம் கொண்டதாக இருக்கும். இந்த முனைகள் நாகரிக உலக கொல்லர்களால் செய்யப்பட்டவைகளாகும். வில்லாளி வலது கையால் வில்லைப் பிடித்து இடது கையால் நாணை இழுத்து அம்பெய்வான். மெல்ல பதுங்கி கிட்ட வந்து பெரிய அம்பு முனை கொண்டு தாக்கத் தொடங்கினான் என்றால் பெரிய யானையும் தப்ப முடியாது. நவீன ரைபிளும் இதற்கு நிகராக முடியாது.

சில வேளைகளில் இந்த வில்லாளி யானையின் தாக்குதலுக்கு உள்ளாவதுண்டு. அவன் குறிப்பிட்ட தூரத்தில் இருந்து குறுகிய அம்பு முனை கொண்டு அதை தாக்க முனைந்தால் நாலெட்டில் யானை வந்து வில்லாளியை துவைத்துவிடலாம். தனது அம்பு யானையை காயப்படுத்திவிட்டதால் அது ஒரு வேளை சீழ்கட்டி அதை சாகடிக்க கூடிய அளவு மாறலாம் என்று நினைத்து அவன் திருப்தியடைதலுமுண்டு.

இந்த இலைதழைகளை உண்ணும் விலங்கின் சதையை ஆபிரிக்காவில் உண்டாலும் இலங்கையில் வேடர்கள் உட்பட எந்த இனத்தினரும் உண்பதில்லை. அவர்கள் எருமை, கரடி போன்றவற்றின் இறைச்சியையும் சாப்பிடுவதில்லை. அவர்கள் அணில், கீரிப்பிள்ளை, ஆமை, ஆந்தை, எலி, வௌவால் இறைச்சியை விரும்பி உண்கின்றனர். அவர்கள் வாட்டிய குரங்கு, உடும்பு இறைச்சியை மிக விருப்பி புசிப்பர்.

அவர்கள் ஆறுகளிலும் கைவிடப்பட்ட குளங்களிலும் மீன் பிடித்து உணவுத் தேவையை பூர்த்தி செய்து கொண்டாலும் மான் இறைச்சியை வாட்டி சேமித்து வைத்து பயன்படுத்துவார்கள். சில வேகைளில் மரப்பொந்துகளில் மான் இறைச்சியை தேனில் தோய்த்து காற்றுப் புகாமல் களியால் மூடி பயன்படுத்தலுமுண்டு. அது நீண்ட நாட்கள் கெட்டுப் போகாமல் அவர்கள் ஒரு சுற்று சுற்றி வரும்வரை இருக்கும்.

அவர்களின் வேட்டை பிழைத்தால் அவர்கள் காட்டுப் பழங்கள், கிழங்குகள் என்பனவற்றை தேடி வயிற்றை நிரப்பிக் கொள்வார்கள். ஒன்றும் கிடைக்காத போது தாங்கள் உடுக்கும் மரத்தின் பட்டையை நனைத்து நார் நாராய்க் கிழிய அடித்து துவைத்து சப்பி பசியை தணித்து கொள்வார்கள். இந்த மரப்பட்டை உடுப்பு அவர்களுக்கு செல்வத்தின் அடையாளமென்றுதான் கூற வேண்டும். ஏனென்றால் எனது சகோதரர் ஒரு பொழுது வழிதவறி மலைவேடர் கிராமமொன்றை அடைய நேரிட்டது. அங்கே இருந்த அநேக வேடர்கள் உடை ஒன்றும் அணியாமல் வெறும் நிர்வாணமாக இருந்தனராம். அவர்களின் நீண்ட தலைமுடியும் தாடியும் அவர்களின் உடலுக்கு பொருத்தமில்லாமல் பெரிதாக இருந்தன. அவர்களின் அகவயங்களும் அகன்ற மூக்கும் பெரிய தாடையும் வெளியே நீட்டிக்கொண்டிருக்கும் வாயும் பற்களும் இன்றைய அழகு ரசனைக்கு உகந்ததாக இல்லை.

இப்போது அவர்கள் சில பொருட்களுக்காக - இரும்பினால் செய்யப்பட்ட அம்பு முனைகள், கோடரிகள், சட்டி பானைகள், உப்பு முதலியவற்றுத்தாக - நாகரிக உலகத்துடன் தொடர்புகொள்ள வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு உள்ளாகி உள்ளனர். இவைகளை அவர்களுக்கு கொடுப்பவர்கள் முகமதியர்கள் என்று சொல்லப்படும் மூர்களாவர். இவைகளுக்கு பதிலாக தேன்மெழுகு, மான்கொம்பு, மான் இறைச்சி போன்றவற்றை வேடர்கள் மூர்களுக்கு கொடுக்கின்றனர்.

நீண்ட குழாயில் மெல்லிய சுள்ளிகளை நிரப்பி அதை கால் விரல்களில் இடுக்கி வைத்துக்கொண்டு தடிகளால் சிரமப்பட்டு தட்டித் தட்டி நெருப்புண்டாகும் பழைய முறைக்குப் பதிலான நெருப்பு பெட்டியை உபயோகிப்பதற்கு அவர்கள் இன்னும் பழகவில்லை.

இந்த விந்தையான இனத்தினரின் மொழியில் தொண்டையால் வரும் சத்தங்கள் வெகு குறைவு. இதனால் இதை சிங்களவர்கள் விளங்கிக் கொள்வது சிரமமானது. சமயம் என்ற கருத்தே இவர்களிடம் இல்லை. பூமி, வானத் தேவதைகளையும் யக்கா தெய்வத்தையும் முதாதையர்களையும் திருப்திப்படுத்தவும் இடி, மின்னல்களை விலக்கவும் படையல்களை படைத்து வணங்குவார்கள். நோய்வாய்ப்பட்டவரை சுகப்படுத்த டெவில் நாட்டியம் ஆடுவார்கள்.

இப்போது இவர்களின் தொகை மிகவும் அருகிக்கொண்டு வருகிறது. கூச்சமுள்ளவர்களாகவும் அழுக்கானவர்களாகவும் இருக்கும் இவர்களை தங்களோடு இரத்த தொடர்புள்ளவர்கள் எனக்கருதி சிங்களவர்கள் தங்களிடம் உள்ள உயர்ந்த வெள்ளாள சாதிக்கு அடுத்த நிலையில் வைத்து எண்ணுகிறார்கள்.

நாங்கள் கிராமத்து வேடர்களுடன் பல தடவை கலந்துரையாடினோம். அவர்கள் இயல்பான தோற்றம் கொண்டவர்கள். கண்டியர்களோடு கலப்புத் திருமணம் செய்து அவர்களின் இரத்தம் தூயதில்லாமல் ஆகிவிட்டது. சிங்களத்தை (கொச்சைத்தனமாக) பேசப் பழகிக் கொண்டுள்ளனர். கரை நாட்டு வேடர்கள் தமிழ் மீனவர்களுடன் இசைந்து வாழப் பழகிக் கொண்டுள்ளனர். அவர்கள் பாய் இழைக்கவும் கூடை பின்னவும் நன்கு தேர்ச்சிபெற்று திகழ்கிறார்கள்.

மொத்த வேடர்களின் தொகை இரண்டாயிரம் என்று கணக்கிட்டுள்ளனர். ஆயினும் இந்த கணக்கெடுப்பில் மலை வேடர்கள் இடம்பெற்றிருக்கமாட்டார்கள். ஜிப்சிகள் போன்று வேடர்களும் இடம்பெயர்வதில் விருப்பம் உள்ளவர்கள். அதனால் தமது இருப்பிடங்களை களி, கம்பு, கிடுகு கொண்டு எளிமையாக கட்டிக்கொள்வார்கள். அவர்களை பயிர்செய்கைக்குரிய நிலங்களில் நிரந்தரமாக குடியமர்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன. அந்நிலங்களில் தென்னைகள், ஈரப்பலா மரங்கள் நாட்டி சோளம், குரக்கன் தானியங்கள் பயிரிடவும் மரவள்ளி போன்றன செய்யவும் அவர்களுக்கு சொல்லிக்கொடுக்கப்பட்டது. விவசாய உபகரணங்களும் வழங்கப்பட்டன. இதனால் கணிசமான தொகையினர் தமது பழைய வாழ்முறையை விடுத்து விவசாய வாழ்க்கைக்கு திரும்பியுள்ளனர் எனலாம்.

1838-ல் மட்டக்களப்பில் சில வெஸ்லியன் மிசனறிகள் அவர்களுக்கு படிப்பிக்க முனைந்தனர். அதனால் பலர் படித்தது மல்லாமல் கிறித்தவத்தை தழுவியும் கொண்டனர்.

மட்டக்களப்புக்கு வடக்கே வண்டலூாஸ் குடாவின் (இங்கே உள்ள ஆறு சந்திவெளியில் உள்ளதைவிட உப்புத் தன்மை கூடியது) காடுகளை வெளியாக்கி அவர்களுக்கென அமைக்கப்பட்ட கிராமங்களில் குடியேறுமாறு கேட்கப்பட்டார்கள். அதற்கு முதல் அவர்கள் அங்கொருவர் இங்கொருவராக வாழ்ந்தனர். இந்தக் கரையில் பல தீவுகள் உள்ளன. மங்ரோ, அகாசியா மரங்கள் படர்ந்து காணப்படுகின்றன. அவைகளை பார்க்க கண்ணுக்கு பசுமையாக இருக்கும்

பல வேடர்கள் பிஷப்பை வரவேற்க கூடியிருந்தனர். சில பெண்களும் தமது வெள்ளைக்கார சகோதரிகளை (அவர்களின் முதல் பயணம் இது) பார்க்க வந்திருந்தனர்.

முதலாவதாக பிஷப் பாடசாலை மாணவர்களை பரிசோதித்தார். அவர்களில் முன்னேற்றமான மாணவர்கள் ஓலை என்று சொல்லப்படும் பனை ஓலையில் சில வசனங்களை எழுதிக் காட்டினர். பனை ஓலைக்கு பதிலாக தளப்பத்து ஒலையும் பாவிப்பில் உள்ளது.

நாங்கள் எல்லாரும் காய்ந்த புல்லின் மேல் விரிக்கப்பட்ட பாயில் அமர்ந்திருக்க உள்ளூர் மதகுரு தமிழில் பைபிளை வாசித்தார். அதன் பிறகு பிஷப் பிரசங்கம் செய்தார். அதனை திரு. சோமநாதர் தமிழில் விளக்கி கூறினார்.

இதன் பிறகு வேடர்களின் பிரபலமான வில் வித்தையை காண்பிக்குமாறு அவர்களிடம் கேட்டோம். ஆயினும் எந்த உண்மையான இலக்கும் இல்லாமல் எங்கள் பிரசன்னத்துக்கு முன்னர் செயற்படுவது அவர்களுக்கு கூச்சமாக இருந்ததால் அவர்களால் முழுத் திறமையும் வெளிக்காட்ட முடியவில்லை.

பின்னேரம் பிஷப் சுகவீனமுற்றதால் அவர் ஓய்வு எடுக்க வேண்டியதாயிற்று. அதனால் உள்ளூர் மதகுரு என்னையும் செல்வி ஜேர்மைனையும் தூரத்தில் தெரியும் வேட கிராமங்களுக்கு தோணியில் அழைத்து சென்றார். அக்கிராமங்களில் தென்னை மரங்களும் வேறு உயர்ந்த மரங்களும் வானளாவி

நிற்கும் காட்சி மனதுக்கு இதமாக இருந்தது. அவைகளுக்கு கீழே களிமண்ணாலும் வைக்கோலாலும் கட்டப்பட்டிருந்த சில குடிசைகளைக் கொண்ட வேட கிராமங்கள் பார்ப்பதற்கு அபூர்வ காட்சியாக இருந்தன. சிலரின் குடிசைகள் வயல்வெளியில் இரண்டடுக்கு கொண்டனவாக கட்டப்பட்டிருந்தன. மேல் உள்ளது வயலை காவல் காக்கவாகும். அக்கிருந்த வழமையான குடிசைகள் மிகவும் பணிவாக கட்டப்பட்டிருந்தன. அவைகளின் உயரம் எட்டடிக்கு மேற்படாது. அங்கே வாழ்ந்த மக்கள் அதிக கூச்ச சுபாபமுள்ளவர்களாக இருந்த போதிலும் சிநேகமானவர்களாக இருந்தார்கள்.

நாங்கள் ஒரு கிராமத்தை சுற்றிப் பார்த்துவிட்டு தோணியை சற்ற தூரத்தில் இருந்த அடுத்த கிராமத்தை நோக்கி செலுத்தினோம். அங்கிருந்தவர்கள் பாய் இழைத்து கொண்டிருந்தார்கள். சிலர் குரக்கன் அரைத்துக் கொண்டிருந்தனர். (சிறிய தானியமான குரக்கன் ஏழை மக்களின் பிரதான உணவாகும்.)

நான் அங்குள்ள ஒருத்தியின் குழந்தையை வாஞ்சையுடன் பார்த்துக் கொண்டிருந்தது விபரிதமாகப் போய்விட்டது. அவர்கள் பிள்ளைக்கு கண்ணூறு பட்டுவிட்டதாக பெரிதும் அங்கலாய்த்தனர். இந்த நம்பிக்கை இத்தாலியில் அதிகம் காணப்படுகிறது. ஸ்கொத்லாந்திலும் இது ஒரளவுக்கு உண்டு.

இவ்வாறு கண்ணூறுபடுவதை விலத்திவிட கிழக்கத்திய நாடுகளில் பல முறைகளை கையாளுகிறார்கள். பிள்ளைகளுக்கு அளவுக்கு அதிகமான நகைகளை போடுவது அல்லது அழுக்கு முகத்துடன் வெளியில் திரியவிடுவது, ஒட்டகம் அல்லது குதிரையை சிப்பிகளால் அலங்கரித்து கொண்டு செல்வது போன்ற செயல்களால் கண்ணூறுபடாது என்று கருதுகிறார்கள். முகமதியர்களிடம் தீக்கோழி முட்டையின் ஒட்டை எடுத்து வீட்டுவளையில் செருகிவிட்டால் கண்ணூறு நெருங்காது என்ற நம்பிக்கை நிலவுகிறது. இலங்கையில் வீட்டு மோட்டுவளையில் வெள்ளைச் சாயம் நிரப்பிய சாடியை கட்டித் தொங்கவிட்டால் கண்ணூறை அந்த சாடி பிடித்து வைத்துக்கொள்ளும், அதனால் வீட்டுக்குள் கண்ணூறு வராது என்று கருதும் நம்பிக்கை உள்ளது.

மாலையில் நாங்கள் இருப்பிடம் நோக்கி போக வெளிக்கிட்டோம். நாங்கள் ஒரு கிராமத்தின் பக்கமாக வந்து கொண்டிருந்த போது அக்கிராம தலையாரி கரையோரம் வந்து மத குரு துடுப்பு வலித்து போவதற்கு ஆட்சேபனை தெரிவித்தார். மதகுரு உயர் சாதியை நேர்ந்தவராக இருப்பதால் துடுப்பு வலிப்பதால் அவர் மக்களின் ஆதரவை இழக்கக்கூடுமாம். இந்தச் சிக்கலை தீர்க்கும் முகமாக நான் துடுப்பை எடுத்து வலித்தேன். நீர் நாங்கள் செல்லும் திசையில் ஒடிய தால் துடுப்பு வலிப்பது இலகுவாக இருந்தது.

சாதி வேறுபாடு இந்தியாவை போல் இலங்கையிலும் எந்த முன்னேற்றமான விடயங்களுக்கும் பெரும் தடையாக உள்ளது. விசேடமாக உயர் சாதி சிறுவர்கள் மிசனறி பாடசாலைக்கு வரும் தாழ்ந்த குலச் சிறுவர்களை கீழ்த்தரமாக பகடி பண்ணுகிறார்கள். சில வேளைகளில் அவர்கள் பாடசாலைக்கு வருவதையும் தடுக்கிறார்கள்.

சிங்களவர்கள் (சாதி வேற்றுமையை கடுமையாக கண்டித்த புத்தரை வணங்குபவர்கள்) இந்த வேற்றுமை பாராட்டுவதிலிருந்து விடுபட்டிருக்க வேண்டியவர்கள். அவர்கள்தான் பிராமணிய வெற்றியாளரை பின்பற்றும் இந்துக்கள் போல, சாதி வேற்றுமையை நடைமுறையில் கடுமையாக கடைபிடிக்கிறார்கள். பொ.ஆ.மு(கி.மு.) 543-ல் வங்காளத்திலிருந்து வந்து இலங்கையை ஆண்ட விஜயனின் சந்ததியாரான சிங்களவர்களுக்கு சாதி வேற்றுமை பாராட்டவேண்டிய எந்த நிர்ப்பந்தமும் இல்லை.

இலங்கையின் பழங்குடிகள் மத்திய மலை நாட்டில் உள்ள காடுகளுக்கும் குகைகளுக்கும் போய் பதுங்கிக் கொண்டனர். சிலர் வடக்கில் உள்ள தீவுக் கூட்டத்துக்கும் சென்று புகலிடம் தேடிக்கொண்டனர். முன்னவர்கள் (வேடர்களின் மூதாதையர் எனக் கருதப்படுபவர்கள்) யக்கா, பிசாசு போன்றவற்றின் சக்தியை கொண்டு செயற்படுபவர்கள். யக்காக்களின் உற்பத்தி எதுவென்று யாருக்கும் தெரியாது. அவைகளின் வேலைதான் தற்போது துரர்ந்து போய்க் கிடக்கும் இராச்சத குளங்கள், கோட்டை கொத்தளங்கள் எல்லாம் என்று கருதப்படுகின்றன.

வடக்குக்கு ஓடியவர்கள் நாக வணக்கத்தை கைக்கொண்டனர். அவர்களுக்கென்று நாகத்தின் தீவென்று கூறப்படும் நாகதீவில் ஒரு கோயில் இருக்கிறது. (நான் முன்னர் குறிப்பிட்டதைப் போல யாழ்ப்பாணத்தின் பக்கத்தில் இருக்கும் சிறு தீவில் ஒரு சிறிய கோவில் இருக்கிறது. இங்கே பூசாரிகளும் பூசாரிணிகளும் மிகுந்த பயபக்தியுடன் பாம்பை வணங்குகிறார்கள்.)

இக்காலத்தில் சிங்களவர்கள் மறைந்தும் அழுக்குடனும் வாழும் வேடர்கள் உயர்சாதியினர் பெறும் சகல கௌரவத்துக்கும் உரியவர்கள் என்பதை உணர்கின்றனர். ஒரு பெண் வேட ஆடவனை திருமணம் செய்வதில் எந்த கௌரவ குறைச்சலுமில்லை. ஆயினும் அப்பெண்களின் ரசனை இதற்கு ஒத்து வராது.

மற்றப் பக்கமாக, உயர் சாதி பெண்களுக்கு இழைக்கும் பெரிய அவமானமாக இருப்பது ரொடியா போன்ற கீழ்சாதி ஆணை திருமணம் செய்து வைத்தல் ஆகும். ரொடியாக்கள் மிகவும் அழகானவர்கள். ரொடியா என்ற பெயர் அழுக்கு என்ற சொல்லிலிருந்து வந்ததாகும்.

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அவர்களின் முன்னோர்கள் கண்டியை ஆண்ட அரசர்களுக்கு மான் இறைச்சி வழங்க வேண்டும் என்று ஏற்பாடாகி இருந்தது. அவர்கள் மான் இறைச்சி கிடைக்காத போது கொழுத்த மனித குழந்தைகளை திருடி அவைகளை கொன்று இறைச்சியை மான் இறைச்சி என்று அரசர்களுக்கு சாப்பிடக் கொடுத்தனர். இதனை எப்படியோ அறிந்த அரசன் அவர்களை கீழ் சாதியாக ஆக்கினான் என்று சொல்லப்படுகிறது. அவர்கள் ஆங்கில ஆட்சி வந்த பிறகுதான் சாதிக் கட்டுக்குள் இருந்து விடுவிக்கப்பட்டனர்.

அவர்கள் பௌத்த கோயிலுக்குள் போகவோ, கிராமத்துக்குள் நுழையவோ, நிலத்தை உழவவோ, கிணற்றில் இருந்து

தண்ணீர் எடுக்கவோ, படகில் ஏறவோ தடை விதிக்கப்பட்டி ருந்தது. இன்னும் அவர்கள் நிழல் விழுந்த அருவி கூட சற்று நேரம் தூய்மையற்றதாக கருதப்பட்டது. பாதசாரிகள் யாரும் எதிர்ப்பட்டால் அவர்களோடு உரசிவிடாமல் இருப்ப தற்காக பாதையைவிட்டு விலகி இருக்க வேண்டும், யாரை யாவது கண்டால் கைகளை தலைமேல் குவித்து சலூட் அடிக்க வேண்டும். அவர்களில் ஆணோ, பெண்ணோ முழங் காலுக்கு கீழேயோ இடுப்புக்கு மேலேயோ உடையணிய அனுமதிக்கப்படவில்லை. சுவர்கள் கொண்ட குடிசைகள் கட் டிக்கொள்ள அவர்களுக்கு உரிமை கிடையாது. அவர்கள் களியினால் சுவர் வைத்து கிடுகினாலான குடில்களை வேண் டும் என்றால் கட்டிக்கொள்ளலாம். இன்னும் விநோதமானது அவர்கள் சுமைகளை இரு கூறாக பிரித்து தோளில் வைத்து செல்லக் கூடாது. ஒன்றாகத்தான் கட்டி கொண்டு செல்ல வேண்டும்.

அவர்கள் வாழ்வாரத்தை மிருகங்களை புதைப்பதன் மூலமா கவும் மிருகங்களின் தோலை உரித்து அதைக் கொண்டு யானை பிடிக்க கயிறு திரித்து கொடுப்பதன் மூலமாகவும் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்தது. இதனால் எல்லா உயர் சாதியினரும் அவர்களை தங்கள் தேவைக்கு பயன்படுத்தி கொண்டனர். அவர்கள் அரசாங்கத்தின் தோல் வேலைகளை செய்ய தெண்டிக்கப்பட்டனர். உள்ளூர் மேளவாத்தியங்க ளுக்கான தோலை அவர்கள் குரங்கு போன்றனவற்றை கொன்று எடுத்து கொடுத்தனர். பிரித்தானிய ஆட்சியின் ஆரம்ப காலத்தில் பொலிஸாக பணிக்கமர்த்தப்பட்ட ஊரவர் கள் குற்றம்சாட்டப்பட்ட ரோடியாக்களை கையினால் பிடித் தால் தீட்டுப்பட்டுவிடும் என்பதற்காக அவர்களை துவக்கால் சுட்டுப் பிடித்தனர். இந்தச் செய்கை உள்ளூர் மக்களின் பார் வையின் படி ரொடியா ‘தீங்கான மிருகம்’ போன்றவனாத லால் சரியானதாகும். அரசாங்கம் அவர்களை நிலக்கரி எரிக் கவும் வேகமெடுத்து பாயும் அருவிகளை கடந்து செய்தி கொண்டு போகவும் பயன்படுத்துகிறது. சில வேளைகளில் அவர்கள் குறி சொல்பவர்களாகவும் மாந்திரிகம் செய்பவர்க ளாகவும் செயல்படுகிறார்கள்.

ரொடியாக்களின் தோற்றம் எப்படிப்பட்டதாக இருந்தாலும் உயர்சாதியினரும் தேசத்துரோகம், புனிதத்தை கெடுத்தல் போன்றவற்றை செய்தால் ரோடியாக்கள் தரத்துக்கு தாழ்த்தப் படுவார்கள் என்பதால் ஒருவரும் அம்மாதிரியான செயல்க ளுக்கு துணிவதில்லை. தப்பித்தவறி இப்படியான குற்றங்கள் புரிபவர்களால் ரோடியாக்களின் தொகையும் கூடி வருகிறது.

அவர்கள் உழுவதற்கு தடைசெய்யப்பட்டிருந்தாலும் அறு வடை போன்ற வேலையாள் தட்டுப்பாடு நிலவும் காலத்தில் வயல் சொந்தக்காரர்கள் சிறிதளவு அரிசி போன்றவற்றை ரொடியாக்களுக்கு கொடுத்து வேலைவாங்குவார்கள். அவர் கள் கொடுப்பது குறைவாக இருந்தால் ரொடியாக்கள் களத் தில் குவித்து வைத்திருக்கும் தானியத்தில் சிறியதளவு அரி சியை வீசி துர்ய்மையற்றதாக்கி விடுவர். பிரித்தானிய ஆட்சி நிலைபெற்றதன் பின்னர் மேற்குறிப்பிட்ட காரணங்களால் கோபங்கொள்ளும் மேல்சாதிக்காரர்கள் கண்டபாட்டில் சுட இயலாததாகிவிட்டது. வேண்டுமென்றால் அந்த ரோடியா மேல் வழக்குத் தொடுக்கலாம்.

பிரித்தானிய ஆட்சியில் சாதி வேற்றுமை நீக்கப்பட்டதால் ரொடியாக்களின் வாழ்க்கை தரம் உயர்ந்துள்ளது, அவர்கள் நல்ல வீடுகட்டி வசதியோடு வாழ்கிறார்கள், சிலருக்கு குறைந்தளவு வயல் நிலங்களும் உண்டு, ஆடு, மாடுகளை யும் வைத்திருக்கிறார்கள். ஆயினும், மாடுகளில் தோல்கயிற் றால் தென்னை சிரட்டையை கட்டி தொங்கவிடுமாறு கேட்கப் படுகிறார்கள். இதனால் அவர்களின் கீழ்நிலையை குத்தி காட்டிய திருப்தியை உயர்சாதியினர் அடைகிறார்கள்.

(பெலிக்கம வாடி வீட்டில் தங்கி இருந்து இயற்கையியல் வாதியான ஏனெஸ்ட் ஹக்கால் கடல் வாழ் உயிரினங்கள் பற்றி ஆராய்ந்து வந்தார். அவருக்கு உதவியாளாக ஒரு அழகான ரொடியா இளைஞன் இருந்தான். அவன் மிகத் திறமைசாலி, அவனை அவர் தனது வலது கை போல் வைத்திருந்தார். இதனை கண்டு பக்கத்து கிராமத்தவர்கள் எல்லாம் திகைப்படைந்தனர். ஒரு சபிக்கப்பட்ட கீழ்சாதிக்கு கிடைத்த பேறைக் கண்டு அவர்கள் பொறாமைப்பட்டனர். ஆயினும் அந்த இயற்கையியல் வாதி நாட்டைவிட்டு போனது அவனுக்கு பேரிடியாக இருந்தது).

சொல்லுவதற்கு ஆச்சரியமானது என்னவென்றால் இந்த கீழ் நிலை ரொடியாக்களுக்கு கீழே இரு சாதியினர் உள்ளனர். அவர்களோடு இந்த ரொடியாக்கள் பேச்சுக் கதை வைத்துக் கொள்ளமாட்டார்கள். அவர்களில் ஒருவர் ஊவாவின் ஹனோ மோரியோஸ் (வெற்றிலை பெட்டி செய்பவர்கள்) மற்றவர் அம்பெட்டியோஸ் என்று அழைக்கப்படும் நாவிதர். இங்கே இந்தியாவை போல நாவிதர் தாடியை சவரம் செய்து தலை-மயிரை வெட்டி சீர்படுத்துவர். ஆயினும் மற்ற நேரங்களில் அவர்கள் தொடுவது துடக்காக கருதப்படுகிறது. கிராமத்து வண்ணார சமூகத்தவர்களும் இதைப் போலத்தான். உயர் சாதியினரும் உடுப்பை துப்பரவு செய்ய அவர்களின் உத வியை நாட வேண்டியுள்ளது. தாங்கள் தங்கள் உடைகளை கழுவுதல் கௌரவ குறைச்சலாக கருதப்படுகிறது.

இவற்றைவிட எல்லா மாவட்டங்களிலும் வாடிவீடு இல்லாத இடங்களில் உத்தியோகத்தர்கள் தங்க தற்காலிக தங்குமிடம் அமைப்பது வண்ணார சமூகத்தவர்களின் கடமையாகும். நாங்கள் தங்கவும் ஏற்ற பந்தல்கள் அவர்களால் தயார் செய் யப்பட்டது. ஆளுநரோடு வந்ததால் எனக்கும் அந்த சலுகை கிட்டியது.

பிஷப்புக்கும் அவர் குழுவினருக்கும் சிறியதாக ஒரு கூடாரம் அமைக்கப்பட்டிருந்தது. எங்களுக்கும் தகுந்த குடிசைகள் அமைக்கப்பட்டன. அவற்றை மூங்கில் தடிகள், புல் தண்டு கள், கிடுகுகள் கொண்டு ஆக்கியிருந்தனர். உள்ளே வெள்ளை கலிங்கோ துணியை கொண்டு அவங்கரித்து இருந்தனர். இந்த அலங்காரங்களை கண்டவுடன் இவ்வளவு வெள்ளை துணியை எங்கு எடுத்தார்கள் என்று முதலில் ஆச்சரியப்பட்டேன். விசாரித்தவுடன் தான் தெரிந்தது ஒவ்வொ ருவரும் தம்மிடம் உள்ள ஒன்றோ இரண்டோ துணிகளை கொடுத்து உதவினர் என்பது. களைத்து வரும் பயணிக ளுக்கு நல்ல குளிர்ச்சியான இடமாக இவை உள்ளன. பய ணிகள் புறப்பட்ட ஒரு மணித்தியாலத்துக்குள்ளே அக்குடி சைகளை பிரித்து அவரவர் பொருட்களை அவரவர்கள் எடுத்து செல்வார்கள்.

பயணிகள் வெளிக்கிட தாமதமானால் குறும்புகார குரங்குகள் குடிசைகளை பிய்த்து எறிந்து நாசமாக்கிவிடும். எனக்கு ஞாபகம் வருகிறது பொலன்நறுவை குளக்கரையில் நாலைந்து நாட்கள் நாங்கள் தங்கியிருந்த குடில்கள் சில நாட்கள் ஆளில்லாமல் இருந்ததால் குரங்குகளால் பிய்த்தெறியப்பட்டிருந்தன.

இந்தக் குடிசைகளில் தரை வறண்டிருந்தால் பிரச்சினை இல்லை. மாறாக தரை ஈரமாக இருந்தால் பயணிகளின் பெட்டி, படுகைகள், தலையணைகள், நுளம்பு வலைகள் எல்லாம் நனைந்து பாவிக்க முடியாததாகிவிடும்.

தடம் தெரியாத பாதைகள் ஊடாக போவது சுவாரஸ்யமானது. நாங்கள் நாட்கணக்காக காட்டுப் பாதை ஊடாக சென்றோம். இந்தப் பாதை வேட தலைவனால் பிஷப்பை அழைத்து செல்லப் பயன்படுத்தபட்டதுண்டு. பிரமாண்டமான மரங்கள் கவிந்து நிற்கும் ஆற்றங்கரை வழியாக நாங்கள் சென்றோம். அவ்வாறுகள் எல்லாம் செப்டம்பர் மாதமளவில் வற்றிவிடும். அவைகளை இலகுவாக கடக்க முடிந்தது. இவைகளுக்கு விதிவிலக்காக மகாவலி கங்கை காணப்பட்டது. இந்த அழகிய ஆறே இலங்கையின் பெரியதாகும். கண்டியை சுற்றி ஓடும் இதனை முதலிலும் கண்டிருக்கிறேன்.

நாங்கள் ஆற்றின் ஓரத்தில் வானளாவி உயர்ந்து இனிய நிழலைத் தந்து கொண்டிருக்கும் மரங்களின் கீழே இருந்து இளைப்பாறிக் கொண்டிருக்க எங்கள் குதிரைகள் ஆற்றை நீந்தி கடந்து இருந்தன. நாங்கள் ஆற்றை கடந்து அக்கரைக்கு சென்றோம். அங்கே அழகிய புல் படர்ந்த வெளி காணப்பட்டது. அங்கே தேவதை போன்ற வண்ணாத்திப் பூச்சிகள் பறந்து கொண்டிருந்தது பார்க்க கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அதில் ஒரு வகை கரும் சிவப்பு நிறப் புள்ளிகளுடன் வெல்வெட்டு போன்ற சிறகை கொண்டிருந்தது. இன்னொரு வகையின் சிறகுகள் ஆறு அங்குல நீளத்தில் இருந்தன. சிறகு கரு நிறத்திலும் கரை மஞ்சள் நிறத்திலும் காணப்பட்டது. எல்லாப் பூச்சிகளும் பார்க்க கவர்ச்சியாக இருந்தன என்று சொல்ல முடியாது. எங்களை பல பூச்சிகளும் நுளம்புகளும் கடும் தொந்தரவு செய்ததை குறிப்பிட வேண்டும். ஆயிரக்கணக்கான நீண்ட கால் சிலந்திகள் ஒன்றாக திரண்டு காணப்பட்டது மயிர்க் கற்றை திரண்டு இருப்பது போல் தோன்றியது.

நாங்கள் முதல் நாள் இரவில் பண்டைய இரு குளங்களின் பக்கத்தில் தங்கியிருந்தோம். ஒரு குளம் முற்றாக வற்றிவிட்டது, மற்றது பகுதியாக வற்றியிருந்தது. உள்ளூர்க்காரர்கள் எங்களுடன் மிகவும் அன்பாக இருந்தனர். அவர்கள் எங்களுக்கு பால் கொண்டு வந்தனர். ஆயினும் அதை எங்களால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஏனென்றால் குடிப்பதற்கு தண்ணீரே அவர்களுக்கு கஷ்டமாக உள்ளது. சேறு கலந்த நீரை வடித்து கொதிக்க வைத்துதான் குடிக்கிறார்கள். நாங்கள் எந்த சூழ்நிலையிலும் வடித்து கொதிக்க வைக்காத நீரை குடிக்க வேண்டாம் என்று அறிவுறுத்தப்பட்டிருந்தோம். தூய்மையற்ற நீர் தான் பல வியாதிகளுக்கு மூலமாக இருக்கிறது. அதனால் காய்ச்சல், வயிற்றுப் போக்கு போன்றவை ஏற்படுகின்றன. ஆயினும் நீரை சுத்தப் படுத்தும் செயலை கைக்கொள்ள முடியாததால் அதை குடித்து கிராமத்தவர்கள் பெரிபெரி, குஷ்டரோகம், கொடுமையான பரங்கி போன்ற நோய்களுக்கு ஆளாகின்றனர். ஆயினும் குளங்கள் திருத்தப்பட்டு, நீர் வசதிகளும் நிறை உணவுகளும் கிடைப்பதால் இந்த நிலைமை மாறி வருகிறது.

உள்ளூர்காரர்கள் நீரை சுத்தப்படுத்த ஒரு இலகுவான முறையை கையாளுகிறார்கள். சில குறிப்பிட்ட விதைகளை பொடியாக்கி நீர் ஏனத்துக்குள் போட்டவுடன் நீரில் உள்ள கசடுகள் எல்லாம் ஓரிரு நிமிடத்தில் அடியில் போய் உறையும், நீரும் தெளிவாகிவிடும். இந்த விதை இன்னென்னி-கெடியா என்னும் பெரிய காட்டுமரத்தில் இருந்து கிடைக்கும் சுவையற்ற விதையாகும்.

பல வருடங்களுக்கு முன்னர் ஒரு குறித்த கிராமம் ஒன்றில் வடிகட்டும் முறையொன்று பயன்பாட்டில் உள்ளதை திரு. ஜி.டபிள்யு.ஆர். கம்பெல் கண்டுபிடித்தார். அக்கிராமத்தவர்கள் முதலில் ஒன்றைவிட ஒன்று பெரிதான மூன்று குடங்களை மணலால் நிரப்பியும் ஒன்றைவிட மற்றது பெரிதான இரண்டு குடங்களை கரியால் நிரப்பியும் வைத்துக் கொள்வார்கள். அடியில் இருக்கும் குடத்தைவிட்டு மற்றவைக்கு ஓட்டை போட்டிருப்பார்கள். பின்னர் கரி நிரப்பிய சிறிய குடத்துக்கு மேல் பெரிய குடத்தை வைப்பார்கள். அதன் மேல் சிறியதற்கு மேல் பெரிதாக மணல் நிரப்பிய குடங்களை வைப்பார்கள். பின்னர் அவைகளை நீர் நிலைகளில் தாழ்ப்பார்கள். சற்று நேரத்தில் கடைசியில் உள்ள குடத்தில் தெளிந்த தண்ணீர் கிடைக்கும். இது இலகுவான முறையாக இருந்த போதிலும் மக்கள் இயற்கையில் கிடைக்கும் விதைகளை பயன்படுத்தியே பெரும்பாலும் நீரை சுத்திகரிக்கிறார்கள்.

இந்த வடிகட்டியில் தாவரப் பொருட்களை எரித்து உடன் பெற்ற கரியால் தாவர கசடுகளை உடனடியாக நீக்க முடியும் என்றும் மிருகங்கள் எரிந்த கரியால் மிருகக் கசடுகளை நீக்க முடியும் என்றும் சொல்லப்படுகிறது. இதன் சரி பிழையை என்னால் சொல்ல முடியவில்லை.

பயணிகளுக்கு நான் ஒரு குறிப்பை சொல்லலாம். அவர்கள் தங்களுடன் ஈரத்துணியால் சுற்றப்பட்ட குளிர்ந்த தேயிலை தண்ணீர் போத்தல்களை கொண்டு போவது பாதுகாப்பானது. இந்த ஈரத்துணி எப்போதும் தண்ணீர்ப் போத்தலை குளிர்ச்சியாக வைத்திருக்கும்

நாங்கள் மணல் வார்த்துக் கிடந்த ஒரு ஆற்றை இலகுவாக கடந்து அழிபாடுகள் நிறைந்த புராதன பொலன்நறுவையை அடைந்தோம். அங்கே எங்களுக்காக மரநிழலுக்கு கீழே, புராதன வாவி ரொபா வேவாவுக்கு அருகில் குடிசைகள் அமைக்கப்பட்டிருந்தன. வாவிக் கரையில் நின்று பார்க்க அழகிய லில்லி மலர்கள் பூத்து கிடந்தது அழகான காட்சியாக இருந்தது. தூரத்தே மாத்தளை மலைத் தொடர்களும் அதனை சார்ந்து இருண்ட காடுகளும் தெரிந்தன.



thiruvenysangamam@thaiveedu.com

# தமிழவனின் திறனாய்வு முறைமை

**- சு. வேணுகோபால்**

தமிழ்த் திறனாய்வு வரலாற்றில் புதிய திசை வழியை உண் டாக்கியவரில் தமிழவன் முதன்மையானவர். கல்விப்புலம் சார்ந்த திறனாய்வு முறையை சிற்றிதழ் வட்டத்திற்குள் இறக் கியவர். முழுக்க முழுக்க இலக்கியத்தைக் கோட்பாட்டு முறையில் ஆய்வு செய்தவர். தமிழவனின் வருகைக்குப் பின் தான் பல்கலைக்கழகங்களில் கோட்பாட்டுரீதியான ஆய்வு கள் தோன்றின.

மார்க்சியமும் அமைப்பியலும் இவரின் திறனாய்வின் இரண்டு கட்டங்களில் இயங்கின. தொண்ணூறுகளுக்குப் பின் தமிழவன் தமிழ் நெடும்பரப்பைப் பண்பாட்டுத் தளத் தில் வைத்து ஆய்வு செய்யத் தொடங்கினார். திராவிட, மார்க்சிய, அமைப்பியல் சிந்தனைகளில் ஈடுபட்டு அல்லது ஈர்க்கப்பட்டு பின் அதிலிருந்தும் விலகி நின்று பார்த்தவர் தமிழவன். தமிழவனால் தமிழுக்கு அறிமுகம் செய்விக்கப் பட்ட அமைப்பியல், புதிதான சிந்தனை முறையை இங்கு தோற்றுவித்தது. அமைப்பியல் இலக்கியத்தின் பன்முகப் பரி மாணத்தை வெளிப்படுத்தியது. இலக்கியத்தைப் போலவே திறனாய்வும் ஒரு நிகழ்வு என்றதளத்திற்குத் தமிழவன் நகர்த் தினார். இரண்டும் வாழ்வின் அசலான அம்சமாகப் பார்த் தார்.

வெங்கட்சாமிநாதன், பிரமிள் முதலிய ரசனைமுறைத் திற னாய்வாளருடன் தமிழவன் மோத வேண்டிய சூழல் ஏற்பட் டது. தமிழவன் விமர்சனத்தை விஞ்ஞான முறைப்படி ஆய்வு செய்ததை அக்கால கட்டத்து விமர்சகர்கள் எதிர்த்தனர். ஆனால் அவர்களின் விமர்சன முறைக்குள் இயங்கும் தன்மை குறித்தும் திறனாய்வு செய்தார்.

க.நா.சு.வின் திறனாய்வில் இயங்குவது ஒரு 'மொத்தப்பார் வை'யின் வெளிப்பாடு என்று குறிப்பிட்டார். அவரின் விமர் சன முறையில் பேசுபவனின் உணர்வு தளத்தில் நிகழ்வதா கக் குறிப்பிட்டார். விமர்சனம் எழுத்து வடிவத்தில் இருந்தா லும் 'மொத்தப்பார்வை' என்ற சாராம்ச எண்ண வெளிப்பா டாக இருப்பதை தமிழவன்கண்டு சொல்கிறார். இதனை அனுபவ வெளிப்பாடு எனலாம். வாழ்க்கையில் அனுபவங் கள் நேர்வதைப் போலவே படைப்புகளும் வேறுசில அனுப வங்களைத் தருகின்றன. படைப்புத்தரும் வாழ்க்கையிலிருந்து பெறப்படும் அனுபவத்தை புதிதாக எட்டப்படும் ஒருதரிசனம் என்று க.நா.சு. கணக்கிட்டதாக ஆராய்கிறார்.

க.நா.சு. முன்வைக்கும் 'இலக்கியத்தின்மௌனம்' என்பதை மனவிகாசம் என்றும், 'இலக்கியத்தின்இடம்' என்பதை பேரனு பவத்தை படைப்பு படைக்கிற தருணம் என்றும் தமிழவன் விளக்கியிருக்கிறார்.

க.நா.சு., வெங்கட்சாமிநாதன், சுந்தரராமசாமி முதலியவர்க ளின் படைப்பாக்கச் சிந்தனைகளை அங்கீகரித்தும், அவர்க ளுக்குள் படிந்திருக்கும் சமஸ்கிருத கலைக்கோட்பாடுகளை நிராகரித்தும் விமர்சித்தார். பிராமணர்களின் படைப்பிலக்கிய சிந்தனைகளில் உள்ள முக்கியத்துவத்தை ஏற்றுக்கொண்டு தொல்காப்பிய திணைக்கோட்பாட்டையும், மொழிதல்கோட் பாட்டையும் படைப்பாக்கச் சிந்தனையாக மாற்றினார். சமஸ் கிருதகலை இலக்கியத்தில் உள்ளசாதி உணர்வை நீக்கி அதனுள் இயங்கும் கலைக்கோட்பாட்டை ஏற்றுக்கொண்டார்.

உணர்வுமுறை ஆய்வுக்கு மாறான மொழிவழி மரபை தன்னு டைய ஆய்வு முறையாகக்கொண்டு ஆய்வுசெய்தார். இதனை அறிவார்த்தப் பார்வை எனலாம். முக்கியமாகத் தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், சமணபௌத்த இலக் கியங்கள், சித்தர் இலக்கியங்கள், தலித், பெண்ணிய இலக் கியங்கள் வைதீக மரபிற்கு மாறான 'அவைதீக' மரபிலக்கி யங்கள் என்று பிரித்து ஆய்வை நகர்த்தினார்.

திருப்பாவையில் உள்மொழி பற்றிய ஆய்வை நிகழ்த்தும் தமிழவன், அதில் உள்ள ஆதிவாசி தெய்வத்தை வேண்டு கிற மந்திரப் பாடல்களையும் நாட்டுப் புறச்சடங்குகளையும் விளக்கி பாடல் - உடல், பாலியல் - போர் தன்மை - முன் னிலை போன்ற உறுப்புகள் உள்ளமைந்து திருப்பாவைக்கு ஒருகட்டமைப்பைத் தருவதை விளக்கியிருக்கிறார். வார்த்தை களை மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளாமல் அவை தரும் கருத்துருவங்களையும் கணக்கில் எடுத்துக்கொள்வ தால் இலக்கியப் பிரதியை இறுதிவரை இலக்கியப் பிரதியா கவே அணுகும் முறையை அறியலாம்.

'கசடதபற' என்ற இலக்கிய குழுதிராவிட இயக்கத்திற்கு மாறாக இயங்கிய அரசியலை அமைப்பியல்முறை கொண்டு விளக்கியிருக்கிறார். அதேபோல குமுதம் இதழை ஆய்வு



செய்து முக்கியமான முடிவை வெளியிட்டார். குமுதம் பத்திரிக்கையில் வரும் கதைகள், ஜோக்குகள், ஓவியங்கள் ஆகியவற்றை உருவவியல் அடிப்படையில் ஆய்வு செய்திருக்கிறார். (இந்த ஆய்விற்குப்பின் நாகார்ஜுனன் தொலைக்காட்சி எவ்விதம் சுரண்டலை நிகழ்த்துகிறது என்று ஆய்வு செய்திருக்கிறார்). குமுதம் நிர்மானிக்கும் வெகுசன கலாச்சாரத்தில் நாட்டுப் புறக்கலாச்சாரத்தின் அம்சங்கள் எப்படிப் புகுந்துள்ளன என்பதையும் மக்களின் பண்பாட்டுத் தளத்தை வணிக இதழ்கள் எப்படித் தம் விருப்பத்திற்குக் கட்டமைத்துக் கொள்கின்றன என்பதை விளக்கியிருக்கிறார்.

கலை சார்ந்த இயக்கத்தின் அடிப்படை, பண்பாட்டுக் கருத்துருவங்களால் உறையைப் பெற்றது. தோற்றத்தில் தெரியாவிட்டாலும் உண்மையில் அதுதான் பெரியபுரட்சி இயக்கம், இந்த உள்ளார்ந்த கருத்தியல் அசைவுகள் தத்துவ இயக்கமாக கவிதை, கதை, கலை இயக்கமாக கர்னாடகம், கேரளம், வங்காளம் போன்ற மாநிலங்களில் உண்டாகி இருக்கின்றன. கலை இயக்கமாக தமிழகத்தில் உருவாகவில்லை. இவ்விதமான பார்வை தமிழவனிடம் தோன்றுவதற்கு கர்னாடக கலை இலக்கியத்தோடு கொண்டிருக்கும் தொடர்பு ஒப்பிட வைக்கிறது.

மேலும் கலை பற்றிய உணர்வுகள் அங்கு விரிந்த பரப்பில் இயங்குகின்றன. காந்திய, திராவிட அரசியல் இங்கு இலக்கியத்தில் திணிப்புகளாகவே சொருகப்பட்டன. சுயத்தை அழித்த திணிப்புகள். திணிப்புகளே பூதாகரமாக ஒருசமயத்தில் இங்கு பெருகியது என்கிறார். கலை இலக்கியம் எந்திரத்தனமான அரசியலால் அழிக்கப்பட்டது. குறிப்பாகத் திராவிட எழுத்தாளர்களே இன்று இல்லாமல் போய் விட்டனர். இதற்கு இவர்களிடம் கலை பண்பாட்டு அடிப்படை குணம் இல்லாதிருந்ததே என்று ஆராய்ந்து முன் வைத்திருக்கிறார்.

மேலோட்டமாகத் தமிழ் பண்பாடு பற்றி திராவிட இயக்கத்தவர்கள் பேசினார்களே தவிர தமிழ்ப்பண்பாட்டின் கூட்டு நனவிலி மனத்தில் உயிரோட்டமாக வரும் படைப்பாக்கப் பண்புகளை இவர்கள் அறியவில்லை என்று விமர்சிக்கிறார். நாட்டுப்புற பண்பாடு, கிராம தெய்வங்கள், நாட்டார்கதைகள், பாட்டுக்கள், வட்டாரவழக்கின் அழகுகள் திராவிட மாயையால் அழித்தொழிக்கப்பட்டதை விவாதத்தில் வைக்கிறார். முக்கியமாகத் தமிழ் இலக்கிய வரலாற்றிலேயே தொடர்ந்து வரும் அவ்வைதீக மரபை இவர்கள் கற்கவில்லை என்கிறார். இந்தப் படைப்பாக்கப் பார்வையும் திறனும் இல்லாமல் போனதற்கு திராவிட சார்பாளர்களிடம் தமிழ் மையம் இல்லை. மாறாக ஆங்கில சார்பு இருக்கிறது. கன்னடம், மலையாளம், வங்காளம் போல ஆங்கிலத்தின் மீதான எதிர்ப்பு ஐம்பதுகளுக்குப் பின் இங்கு திராவிட படைப்பாளிகளிடம் இல்லாமல் போய் விட்டது. ஆங்கிலத்தை விட இந்திய மாநிலங்களில்தான் மண்ணின் தன்மை அதிகமிருக்கிறது என்பதை இவர்கள் விளங்கிக்கொள்ளவே இல்லை. ஒட்டாத ஆங்கில சரக்கு தமிழ் மையத்தை எப்படி ஆழப்படுத்த முடியும் என்று விமர்சிக்கிறார். புதிய திராவிட கலாச்சாரவாதிகள் தோன்றினாலொழிய இந்தப் பிழையிலிருந்து மீள முடியாது என்கிறார்.

எண்பதுகளின் மையத்தில் மிக்க உத்வேகத்துடன் தலித் இலக்கியம் குறித்து எழுதினார். கன்னடத்தில் சிறந்து விளங்கும் சித்தலிங்கையா தேவனுரு மகாதேவ போன்றோர்களை தமிழுக்கு அறிமுகப்படுத்தினார். 'கன்னட தலித் இலக்கியம்' தொகுப்பைக் கொண்டு வந்தார். தமிழவன் தான் நடத்திய 'படிகள்' இதழிலேயே தலித் இலக்கியம் எழுதுவதற்கான சூழல் தமிழகத்தில் கணிந்து வரும் என்றார்.

தமிழவன், இந்த இருபதாண்டுகால தலித் இலக்கிய வளர்ச்சியில் இன்றைய நிலை குறித்து விமர்சித்திருக்கிறார். தலித் இயக்கம்கூட இங்குசாதி சார்ந்த அரசியல் கட்டமைப்பாக மாறிப் போனதை விவாதத்தில் வைக்கிறார். திராவிடக் கட்சிகள் போன்று தலித் இயக்கத்தவர்கள் பதவியை அடையலாம். புதிய இலக்கிய மலர்ச்சியைத் தராமல் போகக் கூடிய வாய்ப்பு அதிகம் இருக்கிறது. அது திராவிடம் போன்ற சாதி இலக்கியமாக வளருமேயொழிய மானுட இலக்கியமாக வளர இங்கு வாய்ப்பு நழுவிப்போவதை விமர்சனம் செய்துள்ளார்.

அதே சமயம் ஒரு நூற்றாண்டிற்கு முன் தமிழ்ப் பண்பாட்டில் சுயமாக எழுந்த படைப்பாளியாக வள்ளலாரைக் காண்கிறார். வைதீக மரபிற்கு எதிராக ஆன்மீக தளத்தை மானுட உலகிற்குள் எழுப்ப முயன்றவராகக் கணிக்கிறார். வள்ளலாரிடம் இருந்த பார்வை என்பது சித்தர் மரபு வழியில் வந்ததாகக் குறிப்பிடுகிறார்.

பாரதி, ஆண்டாள், கலாப்பிரியா, ஞானக்கூத்தன், ந. பிச்சமூர்த்தி முதலிய கவிஞர்களின் கவியாக்கம் குறித்து விரிவாக எழுதியிருக்கிறார். கலாப்பிரியா கவிதையைத் தமிழ்ப் பண்பாட்டின் கூட்டு நனவிலிமன வெளிப்பாடு என்று கணிக்கிறார்.

சுந்தரராமசாமி, அசோகமித்திரன், மௌனி, க.நா.சு. வண்ணநிலவன், முதலிய படைப்பாளிகளின் புனைகதைகள் குறித்து ஆய்வு செய்திருக்கிறார்.

மரபான விமர்சனம், மையம் அல்லது ஆன்மா ஒன்றைப் படைப்பில் கண்டு பிடித்து அதைச் சுற்றித்தன் விவரணைகளை வைக்கும். 'ஜே.ஜே. சிலகுறிப்புகள்' நாவலில் மையம் என்பது இல்லையென்பதால் மையமற்ற விமர்சனப் பார்வையில் பல கூறுகளைப் பல தளத்தில் வைத்து அணுக வேண்டியதிருக்கிறது என்கிறார். கேள்வி பதில் பாணியில் இந்நாவலை அணுகி பல்வேறு முரண்களை முன்வைத்து ஆராய்கிறார். இதனை சற்று எளிய விதத்தில் சொல்வோமானால் படைப்பின் பல குரல் தன்மையை அமைப்பியல் அணுகுமுறை கொண்டு வெளிப்படுத்தினார் எனலாம்.

ந.பி.யின் ஒரு கவிதையை எடுத்துக் கொண்டு மார்க்சிய, அமைப்பியல், தொல்படிமவியல் என்ற மூன்று நிலைகளில் ஆராய்ந்து பார்த்திருக்கிறார். ரசனைத் திறனாய்வாளர்கள் கவிதையின் படிமம் வாசகனுக்கு வாசகன் புதிய பொருள் தருவதை விளக்கியுள்ளனர். தமிழவன் பல்வேறு அணுகுமுறையின் வழி புதிய அறிதலை வெளிப்படுத்துகிறார். இருபதாம் நூற்றாண்டு தமிழ்க் கவிஞர்களின் கவிதைகளில் இயங்கும் சமூகப் பார்வைக்கான அடிப்படைகள் குறித்து ஆராய்ந்திருக்கிறார்.

இலக்கிய விமர்சனம் தூயகலை இலக்கியவாதிகளிடம், மரபுவாதிகளிடம், மார்க்சியவாதிகளிடம் ஏதோவொரு வகையில் அகவயச்சார்பு இருப்பதைக் கண்டு அதற்கு எதிர்நிலையில் புறவயமான ஆய்வு முறையைத் தமிழ்ச் சூழலில் முதன் முதல் நிகழ்த்தினார்.

படைப்பாளியின் படைப்பாக்க உலகத்திற்கும் யதார்த்த உலகத்திற்கும் உள்ள வேறுபாட்டினை அடையாளப்படுத்தி மானுட வரலாற்றில் படிந்த பல தொன்மங்களின் சாராம்சங்கள் முன்பின்னாகக் குறுக்காக படைப்பில் படிந்திருப்பதைச் சுட்டி இந்த புதைநிலை அம்சங்களை விளக்கினார்.

தனிமனித வாழ்வியலை முதன்மைப்படுத்தி இலக்கியம் படைக்கப்பட்ட எழுபதுகளின் இறுதியில் கூட்டு இனக்குழு மக்களின் எழுத்துக்கு முக்கியத்துவம் தந்தவர் தமிழவன். லத்தின் அமெரிக்க எழுத்தக்களின் மாய எதார்த்த எழுத்து முறையை தமிழ்ச்சூழலுக்கு அறிமுகப்படுத்தி எண்பதுகளின் இறுதியில் படைப்பு முறையில் மாற்றங்களை நிகழ்த்தியவர்களில் தமிழவனும் ஒருவர். இந்த இலக்கியச் சூழலில் விமர்சகராக அறியப்பட்ட தமிழவன் படைப்புத் தளத்திலும் இயங்கினார். 'ஏற்கனவே சொல்லப்பட்ட மனிதர்கள் 'சரித்திரத்தில் படிந்த நிழல்கள்' என்கிற இரு நாவல்களும் மார்க்வெஸ்-பாணி கதையாடலை முன்வைத்தவை. பின் நவீனத்துவ படைப்புகளில் பழைய சொல்முறையைப் புதிய விசயங்களுக்காகப் பயன்படுத்தினர். தமிழவன் அந்த வகையில் 'ஜி.கே. எழுதிய மர்ம நாவல்' என்ற படைப்பைத் தந்தார். சில சிறுகதைகளும் எழுதியிருக்கிறார். தமிழவன் கூறுமுறைகளில் புதுப்புது உத்தியைப் பயன்படுத்துவதால் இலக்கியத்தின் முகங்களையும் மாற்ற முடியும் என்று செயல்பட்டார். ஓரளவு இதற்குரிய இலக்கியப் பலன் நவீன இலக்கியத்தில் விளைந்தது.

தமிழவன் சிற்றிதழ் மரபில் வந்த ஒருவர். சிற்றிதழ் அறிஞர்களுடன் அறிவார்த்த நிலைகளில் விவாதங்களை நிகழ்த்தியவர். 'படிகள்', 'மேலும்' இதழ் குழுவில் இருந்து பணியாற்றியவர். சிற்றிதழ் மரபே தமிழ் இலக்கியச் சூழலை உயிர்ப்புடன் இயங்கவைத்துக் கொண்டிருப்பதாகத் தொடர்ந்து எடுத்துரைத்து வந்துள்ளார்.

போலந்து வர்சா பல்கலைக்கழக திராவிட மொழித் துறையின் தமிழ்ப் பேராசிரியராக பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றவர். குப்பம் திராவிடப் பல்கலைக்கழகத்தில் சிறப்புப் பேராசிரியராகப் பணியாற்றும் வாய்ப்பைப் பெற்றிருக்கிறார். கன்னடச் சூழல் ஒரு தமிழ்ப் பேராசிரியருக்கு உரிய அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்திருக்கிறது. தமிழ்ச்சூழலில் பேராசிரியர் என்றால் பட்டி மன்றப் பேச்சாளராக இருக்க வேண்டும். மேடையில் அடுக்கு மொழியில் பேச தெரிந்திருக்க வேண்டும். அரசியல்வாதிகளை விண்ணளவு புகழத் தெரிந்திருக்க வேண்டும். இங்கு அங்கீகாரம் என்பது கேட்டு வாங்கும் சரக்கு. தமிழவன் போன்ற திறனாய்வாளர்களின் ஆற்றலை வாழையடி வாழையென வரும் சிற்றிதழ் வாசகன் மட்டுமே புரிந்து சிறப்பிப்பான்.



venugopal@thaiveedu.com




# லெனினின் உயில்: எழுதாத நகலும் மறையாத மெய்யும்

– தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

### தொடக்கக் குறிப்புகள்:

ரஷ்ய-உக்ரேன் நெருக்கடி புதிய கட்டத்துக்குள் நுழைகின்ற இக்காலப்பரப்பில் சோவியத் யூனியன் குறித்த கதையாடல்



கள் தவிர்க்கவியலாதன. ஜோசப் ஸ்டாலினைத் தவிர்த்து விட்டு சோவியத் யூனியன் குறித்துப் பேசிவிட இயலாது. கடந்த மார்ச் மாதம் 5-ம் திகதி ஸ்டாலினின் 70-வது நினைவு தினம். இன்றுவரை அவர்மீதான அவதூறுகளில் பிரதானமானது 'லெனின் தனது உயிலில் ஸ்டாலினைத் தலைமைப் பதவியில் இருந்து அகற்றச் சொன்னார்' என்ற வாதமாகும். இதற்கு வலுச்சேர்க்கின்ற, லெனினின் உயில் என்று கருதப்படுகின்ற ஆவணங்களில் முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்ற, ஸ்டாலின் தன் மனைவி க்ருப்ஸ்காயாவிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்ற லெனின் எழுதியதாகச் சொல்லப்பட்ட கடிதம் மார்ச் 5, 1923 என்று திகதியிடப்பட்டிருந்தது. ஒரு நூற்றாண்டுக்குப் பிறகும் இந்த உயில் ஒரு அரசியற் செய்தியைப் பிரதிநிதித்துவம் செய்கிறது. அது வரலாற்றின் மீள்விசாரணையை, பொய்ச்செய்தி (fake news) என்பது புதிதல்ல என்பதையும், உண்மைகள் எவ்வாறு மறைக்கப்பட்டும் திரிக்கப்பட்டும் பொதுவெளியை வந்து சேர்கின்றன என்பதையும் காட்டுகின்றது.

லெனின் உயில் என்று சொல்லப்படுகின்ற ஆவணங்களின் உண்மைத்தன்மை குறித்து எந்தவொரு வரலாற்றாசிரியரும் கேள்வி கேட்கவில்லை. அனைவரும் அதை நம்பினார்கள். அப்படியே ஏற்றுக் கொண்டார்கள். ஸ்டாலினிற்கு எதிரான பிரதான ஆயுதமாக அதைப் பயன்படுத்தினார்கள். இங்கு இரண்டு விடயங்கள் தொடர்ச்சியாக நிறுவப்பட்டது. முதலாவது லெனின் ஒரு உயிலை எழுதியுள்ளார் இரண்டாவது அதில் ஸ்டாலினைத் தலைமைப்பதவியில் இருந்து அகற்றக் கோரினார். இதை முதலில் ஸ்டாலினின் எதிர்ப்பாளர்கள் பயன்படுத்தினர். பின்னர் இதைத் தனது பிரதான ஆயுதமாக ஸ்டாலினின் அரசியல் எதிரியும் தலைமைப்பதவியைக் குறிவைத்திருந்தவருமாகிய ட்ரொஸ்கி பயன்படுத்தினார். பிறகு ஸ்டாலின் எதிர்ப்புப் பிரச்சாரத்திற்கு ஸ்டாலினின் மறைவின் பின்னர் அதிகாரத்துக்கு வந்த க்ருஷ்ச்சொவ் பயன்படுத்தினார், அதே ஸ்டாலினிச எதிர்ப்புக் கதையாடலை கொர்பச்சோவ் தொடர்ந்தார். இவ்வாறு இந்த உயில் ஸ்டாலிச எதிர்ப்புப் பிரச்சாரத்தின் முக்கிய கருவியாகியது. இன்றும் இது தொடர்கிறது. ஆனால் கடந்த இருபதாண்டுகளில் சோவியத் யூனியன் கால ஆவணக்காப்பகங்கள் ஆய்வாளர்களுக்குத் திறக்கப்பட்டுள்ளன. பல ஆவணங்களை ஆய்வாளர்களால் பார்வையிடவும், பிரதியெடுக்கவும் முடிகிறது. இது புதிய ஆய்வுக்கான களங்களைத் திறந்துள்ளது.

2003-ம் ஆண்டு மொஸ்கோ பல்கலைக்கழகப் பேராசிரியரான வலன்டின் சகரோவ் (Valentin A. Sakharov), 'லெனினின் உயில் வரலாற்றின் யதார்த்தமும் அரசியல் கட்டுக்கதைகளும்' என்ற தலைப்பில் 779 பக்க நூலை வெளியிட்டார். இந்த நூல் இன்னமும் ஆங்கில மொழியில் வரவில்லை.

இந்நூல் லெனினின் உயில் என்ற கருத்தாக்கத்தையே கேள்விக்குட்படுத்தியது. சகரோவ், லெனினின் செயலகத்தில் இருந்து இந்த முதன்மை ஆவணங்களைப் பார்வையிடுவதற்கும் ஆராய்வதற்கான அனுமதியையும் பெற்றார். இந்த ஆவணங்கள் மற்ற ஆராய்ச்சியாளர்களுக்கு இன்னும் கிடைக்கவில்லை. சகரோவ் இந்த ஆவணங்களில் பலவற்றிலிருந்து விரிவாக மேற்கோள் காட்டுகிறார், மற்றவற்றை விவரிக்கிறார் மற்றும் மிக முக்கியமான சிலவற்றின் புகைப்படங்களை பகிர்வதன் ஊடு தனது வாதங்களுக்கு வலுச்சேர்க்கிறார். இவரது நூலை அடிப்படையாக வைத்து சில நூல்கள் ஆங்கிலத்தில் எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக ஸ்டாலினின் சுயசரிதையை மூன்று பகுதிகளாக எழுதும் ஸ்டீபன் கொட்கின் Stalin: Paradoxes of Power, 1878-1928 என்று தலைப்பிடப்பட்ட முதலாவது தொகுதியில் சகரோவ்வின் வாதங்களை ஏற்றுக் கொள்கிறார். அதேபோலவே பேராசிரியர் குரோவர் ஃபர் தனது The Fraud of the 'Testament of Lenin' நூலுக்கான ஆதாரங்களை சகரோவ்வின் நூலிலிருந்தே பெற்றுக் கொண்டு அவரது வாதங்களுக்கு வலுச்சேர்க்கும் மேலதிக ஆதாரங்களையும் தருகிறார்.

இவர்கள் முன்வைக்கின்ற பிரதான வாதம், லெனினது உயில் என்றவொன்றே இல்லை என்பதே. லெனினது உயில் என்ற கருத்தாக்கமே ஒரு மோசடி என்றும் லெனின் அவ்வாறு தனது உயில் என்று எதையும் எழுதவில்லை, அதேவேளை அவரது எழுத்துக்களாகக் காட்டப்படுகின்ற எழுத்துக்கள் லெனினுடையவை அல்ல. இதன் பின்னால் ஒரு சதித்திட்டம் இருக்கிறது. அந்தச் சதித்திட்டம் ஸ்டாலினுக்கு எதிரானது. இந்த மோசடியில் பலர் தொடர்புபட்டுள்ளார்கள் என்று ஆதாரங்களுடன் நிறுவுகிறார்கள். இதில் முக்கியமானது ஸ்டாலினைச் சுயசரிதையினூடு தவறாகச் சித்தரிக்கும் ஸ்டீபன் கொட்கின் கூட இந்த உயில் மோசடியானது என்ற வாதத்தை ஏற்றுக் கொள்கிறார்.

லெனினின் கடைசி எழுத்துக்கள் பற்றிய குறிப்புகள் பொதுவில் லெனின் ஜோசப் ஸ்டாலினைப் பற்றிய பல எதிர்மறையான கருத்துக்களை உள்ளடக்கிய ஒரு 'உயிலை' விட்டுச் சென்றதையும், கம்யூனிஸ்ட் கட்சியின் (போல்ஷிவிக்) பொதுச் செயலாளர் பதவியில் இருந்து ஸ்டாலினை நீக்க லெனின் விரும்பியதையும் ஏற்றுக்கொள்கிறது. ஸ்டாலினிற்குப் பதிலாக கட்சித் தலைவராக வருவதற்கு ஆசைப்பட்டுத் தனது பிரச்சாரத்தில் அதை ஆர்வத்துடன் பயன்படுத்திய லியொன் ட்ரொட்ஸ்கியில் இருந்து இந்தக் கதையாடல் உருவாகிறது. இதில் லெனினின் மனைவி நடேஷ்டா கான்ஸ்டான்டினோவ்னா க்ருப்ஸ்காயாவிற்குப் பங்குண்டு. இதை நிகிதா க்ருஷ்ச்சொவ் தனது காலத்தில் வெளியிட்ட லெனினின் படைப்புகளின் கடைசித் தொகுதியின் ஊடு ஆவணமாக்கினார். இந்த ஆவணங்களின் வழியே 'லெனினின் உயில்' உயிர்பெற்றது.

லெனினின் கடைசி எழுத்துக்களில் எது அவருடைய 'உயிலை' உருவாக்குகிறது என்பதில் பல குழப்பங்கள் உள்ளன. 'லெனினின் உயில்' என்ற கருத்து மற்றவர்களால் உருவாக்கப்பட்டது, லெனினால் அல்ல. இந்தச் சொல்லையோ ஒரு 'உயிலை'த் தான் விட்டுச் சென்றதைப் பற்றியோ லெனின் ஒருபோதும் அறிந்திருக்கவில்லை. 1925-ல் அவரது மனைவி நடேஷ்டா க்ருப்ஸ்கயா லெனின் எதுவித உயிலையும் விட்டுச் செல்லவில்லை என்பதை ஒப்புக்கொண்டார். ட்ரொட்ஸ்கியும் இதை ஒப்புக்கொண்டார், இருப்பினும் சோவியத் யூனியனில் இருந்து நாடுகடத்தப்பட்ட பின்னர் லெனின் ஒரு 'உயிலை' விட்டுச் சென்றார் என்ற கருத்தை அவர் மீண்டும் எழுப்பினார். அவ்வாறு செய்வதற்கு அவரது சொந்த நலன்களே காரணமாக இருந்தன.

1922 முழுவதும் லெனினின் உடல்நிலை மோசமாக இருந்தது. மே 1922-ல் அவருக்கு முதல் பக்கவாதம் ஏற்பட்டது. டிசம்பர் 16, 1922-ல், லெனினின் தசைக் கட்டுப்பாடு மிகவும் பலவீனமடைந்தது, அவரால் எழுத முடியவில்லை. இந்தத் தேதியிலிருந்து அவர் உடல்நிலை சரியில்லாமல் போகும் வரை, லெனின் ஒரு செயலாளரிடம் கட்டளையிட வேண்டியிருந்தது. இது அவருக்குக் கடினமாக இருந்தது.

கிடைக்கப்பெற்ற பதிவுகளில் இருந்து நாம் தீர்மானிக்கும் வகையில், டிசம்பர் 12, 1922-க்குப் பிறகு லெனின் எந்தக் கட்சித் தலைவர்களையும் நேரில் சந்தித்ததில்லை. அவரது மனைவி நடேஷ்டா க்ருப்ஸ்கயா, அவரது சகோதரி மரியா இலினிச்னா உல்யனோவா, அவரது செயலகத்தில் உள்ள பெண்கள், அவரது மருத்துவர்கள் மற்றும் அவரது செவிலியர்கள் அவரை நேரில் சந்தித்தனர். டிசம்பர் 12, 1922-க்குப் பிறகு லெனினுடையதாகக் கூறப்பட்ட எந்த ஒரு எழுத்தும் அவருடைய தனிப்பட்ட, அதாவது கையால் எழுதப்பட்ட, கையொப்பம் அல்லது அவரது முதலெழுத்துக்களைக் கொண்டிருக்கவில்லை.

'லெனினின் உயில்' என்ற கருத்து லெனினின் மரணத்திற்குப் பிறகு உருவானது. அது தெளிவாக வரையறுக்கப்படாததால், லெனினுடையதாகக் கூறப்பட்ட ஆவணங்களில் எவை 'உயிலின்' ஒரு பகுதியாகக் கருதப்பட வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடு உள்ளது. சகரோவ் லெனினின் கடைசி எழுத்துக்களை இரண்டு பிரிவுகளாக்குகிறார்: முதலாவது, எதுவித ஐயத்துக்கிடமின்றி லெனினால் எழுதப்பட்டவை என்று வரன்முறையான ஆய்வின் மூலம் உறுதிசெய்யப்பட்ட எழுத்துக்கள். இரண்டாவது, லெனினுடையவை என்று அறிவியலாய்வு முறைகளின் ஊடு நிறுவ முடியாதவை. இவ்விரண்டு பிரிவுகளாக நோக்கும்போது பின்வருமாறு சொல்கிறார்: 'இவ்விடயம் தொடர்பில் ஒருவிடயம் மிகத் தெளிவானது. சவாலுக்குட்படுத்த முடியாத, அசல் வடிவில் உள்ள லெனினின் எழுத்துக்களில் (எந்தவொரு இடத்திலும்) ஸ்டாலினுக்கு எதிரான எண்ணங்களோ வெளிப்பாடுகளோ இல்லை என்பதை நாம் உறுதியாகக் கூற முடியும். அதேவேளை லெனினின் சர்ச்சைக்குரிய 'உயிலின்' பகுதிகள் ஸ்ராலினிசத்திற்கு எதிரானது, அரசியல் உள்நோக்கம் கொண்டது.'

இந்தப் பின்புலத்தில் லெனினின் உயில் என்று கருதப்படுகின்ற எழுத்துக்களானவை லெனினால் எழுதப்பட்டவை அல்ல என்று சகரோவ் குறிப்பிடுகிறார். குரோவர் ஃபரும் தனது மேலதிக ஆதாரங்கள் மற்றும் ஆய்வுகளோடு இந்தக் கருத்தை வலுப்படுத்துகிறார். ஸ்டாலின் மீது குற்றம் சாட்டப்படும் முக்கியமான லெனினின் எழுத்துக்களின் உண்மைத் தன்மையை நோக்கலாம்.

## 12-வது கட்சிக் காங்கிரசுக்கான பரிந்துரை:

1923 ஜனவரியில் லெனின் 'தொழிலாளர்களை மறுசீரமைப்பதும் விவசாயிகளை மேற்பார்வை செய்வதும் பற்றி' என்று

தலைப்பிட்டு எழுதியது இறுதியாக வெளியான லெனினின் தொகுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. இதில் பின்வருமாறு ஒரு பந்தி அமைந்துள்ளது.

நமது மத்திய குழு இறுக்கமாக மையப்படுத்திய மிகு அதிகாரங் கொண்ட குழுவாக வளர்ந்துள்ளது, ஆனால் இக்



குழு செயற்படும் நிலைமைகள் அதன் அதிகாரத்துக்கு இசைவானவையல்ல. நான் பரிந்துரைக்கும் சீர்திருத்தம் இக் குறைபாட்டை நீக்க உதவ வேண்டும். மேலும், அரசியற் குழுவின் அனைத்துக் கூட்டங்களிலும் அறுதியான ஒரு தொகையிற் கலந்துகொள்ளும் கடப்பாடுடைய மத்திய கட்டுப்பாட்டு ஆணைய உறுப்பினர்கள், பொதுச் செயலாளருக்கோ மத்திய குழுவின் பிற உறுப்பினர் எவருக்குமோ விலக்கின்றிக் கேள்விகளை முன்வைப்பதையோ ஆவணங்களைப் பரிசீலிப்பதையோ மறிப்பதையோ, பொதுப்பட, அனைத்து விடயங்களிலும் முழுமையான தகவலறிந்தோராவதையும், பொதுப்பட, அலுவல்களின் முறையான செயற்பாட்டின் மீது கண்டிப்பான கட்டுப்பாட்டைக் கடைப்பிடிப்பதையும் தடுக்கவோ அனுமதியாத ஒரு கட்டுப்பாடான குழுவாக வேண்டும்.

இதிலே கவனிக்க வேண்டியது யாதெனில் இதில் தடித்த எழுத்துக்களில் உள்ள சொற்கள் குறிப்பாகப் பொதுச் செயலாளர் பற்றிய சொற்கள் க்ருஷ்ச்சொவ் காலத்தில் வெளியான லெனினின் படைப்புக்கள் தொகுதியிலேயே உள்ளது. அதற்கு முன்னர் அவ்வாறானதொரு வசனம் இதற்கு முந்தையதில் இல்லை. இவை ஏன், எப்போது, எதற்காகச் செருகப்பட்டன. உண்மையில் என்ன நடந்தது? குறித்த அந்த வசனத்தின் முக்கியத்துவம் என்ன?

1922-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் லெனின் முன்மொழிவின் அடிப்படையில் ஜோசப் ஸ்டாலின் பொதுச் செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். இதன்மூலம் தனக்கு அடுத்த நிலையிலான தலைவரை லெனின் முடிவுசெய்தார். எனவே பொதுச்செயலாளர் தனியாகச் செயற்பட அனுமதிக்கக் கூடாது என்ற குறிப்பு நேரடியாக ஸ்டாலினையே சுட்டுகிறது. ஸ்டாலினைப் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அகற்ற லெனின் விரும்பினார் என்பதற்கு ஆதரவாக லெனினின் உயில் என்று குறித்தழைக்கப்படுகின்ற ஆவணங்களில் இது ஒரு ஆவணமாகும்.

1918-ம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் லெனினைக் கொலை செய்வதற்கான ஒரு முயற்சி நடந்தது. இதில் லெனின் காயங்களுக்கு உள்ளானார். அவரைத் தாக்கிய குண்டுகள் விஷம் கலந்ததாக இருந்தன என்றவொரு வாதமும் வைக்கப்படுவதுண்டு. இக்காயங்களிலிருந்து லெனின் முழுமையாகக் குணமடையவில்லை. 1921-ல் இருந்து அவரின் உடல்நிலை மோசமடையத் தொடங்கியது. 1922 ஏப்பிரலில் அவரது உடலில் இருந்த குண்டுகளை எடுப்பதற்கு சத்திரசிகிச்சை நிகழ்ந்தது. 1922 மே மாதம் அவரைப் பக்கவாதம் தாக்கியது. சிலகாலம் பேசச் சிரமப்பட்ட லெனின் ஒக்ரோபர் மாதம் பணிக்குத் திரும்பினார். 1922 டிசம்பரில் இரண்டாவது முறையாகப் பக்கவாதம் ஏற்பட்டது. இது இவரை முழுமையாக முடக்கியது. அவரைக் கவனித்துக் கொள்ள மருத்துவர்கள் நியமிக்கப்பட்டனர்.

லெனினது மேற்குறித்த கட்டுரை 1923-ம் ஆண்டு ஜனவரி மாதம் 25-ம் திகதி கட்சியின் உத்தியோகபூர்வ ஏடான பிராவ்தாவில் வெளியாகியிருக்கிறது. அக்கட்டுரையில் மேலே தடித்த எழுத்தில் உள்ள வசனம் காணப்படவில்லை. குறித்த கட்டுரையை ஜனவரி மாதம் 23-ம் திகதி லெனின் வாய்வழியாகச் சொல்லி எழுதி முடித்திருக்கிறார். இதற்கான ஆதாரத்தைத் தனது நூலில் சகரோவ் தருகிறார். லெனினின் மருத்துவர்களின் அன்றாடக் குறிப்புகளை ஆராய்ந்த சகரோவ் ஜனவரி 23-க்கான மருத்துவர்களின் குறிப்பைத் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

ஜனவரி 23 விளாடிமிர் இலிச் 2 சோமியாசெட்டின் மாத்திரைகளுக்குப் பிறகு 11 முதல் 4 மணி வரை தூங்கினார். விழித்தெழுந்து, மீண்டும் 2 மாத்திரைகள் சாப்பிட்டு, உடனடியாகத் தூங்கினார். 9.15 வரை தூங்கியவர், நல்ல மனநிலையில் எழுந்தார். காலை உணவை ஆர்வத்துடன் சாப்பிட்டார். காலையில் அவர் ஒரு தட்டச்சாளரிடம் (50) 45 நிமிடங்கள் தனது கருத்துகளை எழுதச்சொல்லிக் கதைத்தார். ஒன்றரை மணியளவில் டாக்டர்கள் விளாடிமிர் இலிச்சைப் பார்த்தார்கள். அவரது மனநிலை நன்றாக இருந்தது, அவரது தலைவலிக்கவில்லை. மதிய உணவுக்குப் பிறகு, விளாடிமிர் இலிச் 1 மணி நேரம் தூங்கினார். அவர் திருப்தியாக உணர்ந்தார். அவர் வாசித்தார்.

சகரோவ் இந்தக் கட்டுரையின் காப்பகப் பிரதிகளை ஆய்வு செய்தார். கட்டுரையின் இறுதிப் பதிப்பு நான்கு தட்டச்சுப் பிரதிகளால் குறிப்பிடப்பட்டது. அவை அனைத்தும் ஜனவரி 23, 1923 என்று திகதியிட்டவை. திகதி தட்டச்சு செய்யப்பட்டு, கட்டுரையின் உரையுடன் ஒரே நேரத்தில் செயல்படுத்தப்படுகிறது. அவற்றில் ஒன்று மார்ச் 10, 1923-ல் லெனின்

காப்பகத்திற்கு வந்தபோது பதிவு செய்யப்பட்டது. இவை ஒவ்வொன்றிலும் 'பிரவ்தா எண் 16-ல் 25.1.23 அன்று வெளியிடப்பட்டது' என்ற குறிப்பு இருந்தது. இக்கட்டுரையை லெனின் அச்சில் படித்தார் என்பதற்கு நல்ல சான்றுகள் உள்ளன. அவற்றையும் சகரோவ் பதிவுசெய்துள்ளார்.

லெனின் தனது கட்டுரையின் அச்சிடப்பட்ட பதிப்பைப் படித்தார் அல்லது எப்படியிருந்தாலும், லெனின் பொதுச் செயலாளரைப் பற்றிய வரிகளை எழுதியிருந்தால், அது நீக்கப்பட்டதைக் கண்டிருப்பார். முறையிட்டிருப்பார். அவ்வாறு முறையிட்டிருந்தால் அதுகுறித்த பதிவுகள் இருந்திருக்கும். பிராவ்தாவைத் தவறாமல் படிக்கும் அவர் இதைப் படிப்பார் என்பது வெளிப்படை உண்மை. எனவே மாற்றங்களோ திருத்தங்களோ மேற்கொள்ளப்படவில்லை என்பது தெளிவாகிறது. ஒருசாரார் குற்றஞ்சாட்டப்படுவது போல ஸ்டாலின் திருத்தங்கள் செய்திருந்தால் லெனினின் படைப்புகளில் வெளியிடுவதில் தலையிட்டிருப்பார். ஆனால் அவ்வாறு நடைபெற்றதற்கான எந்தவொரு சான்றுகளும் இல்லை என்று ஃபர் வாதிடுகிறார்.

முக்கியமானது யாதெனில் பொதுச்செயலாளர் என்ற வார்த்தையுடன் வருகின்ற வசனத்தை உள்ளடக்கிய லெனினின் கட்டுரையின் மூலத்தையும் சகரோவ் கண்டுபிடித்தார். மேலே விவாதிக்கப்பட்ட கட்டுரையின் உரைகள் சேமிக்கப்பட்ட காப்பகக் கோப்பிற்கு (எண். 23543) கூடுதலாக, மற்றொன்றும் (எண். 24821) இருக்கிறது. அதில் குறித்த கட்டுரையின் மூன்று பிரதிகள் தட்டச்சு செய்யப்பட்டு சேமிக்கப்பட்டுள்ளன. அவை அனைத்தும் கோப்பு எண். 23543-ல் உள்ள கட்டுரையிலிருந்து வேறுபடுகின்றன. அதில் அவை பொதுச் செயலாளரைப் பற்றிய வசனத்தையும் கொண்டுள்ளன. அதே நேரத்தில், அவை இரண்டு வழிகளில் வேறுபடுகின்றன. முதலாவது அவற்றின் திகதிகளில் இரண்டாவது அவற்றில் மாற்றங்கள் உள்ளடக்கப்பட்ட விதத்தில். கட்டுரையின் இரண்டு பிரதிகளில் ஜனவரி 22 என்று திகதியிடப்பட்டுள்ளன. மூன்றாவதில் ஜனவரி 23 என்று திகதியிடப்பட்டுள்ளது. இதில் 'ஜனவரி 25 அன்று பிராவ்தாவில் வெளியானது' என்ற குறிப்பு முதற்பக்கத்தில் தட்டச்சிடப்பட்டிருந்தது. இது கோப்பு எண். 23543-ல் சேமிக்கப்பட்ட ஜனவரி 23 திகதியிட்ட கட்டுரையிலிருந்து அடிப்படையில் வேறுபட்டதல்ல. எனவே, பொதுச் செயலாளர் பற்றிய குறிப்பைக் கொண்ட கட்டுரையின் இரண்டு பதிப்புகள் இருப்பது உறுதிசெய்யப்பட்டுள்ளது.

ஜனவரி 22 திகதியிட்ட நூல்களில், பொதுச் செயலாளர் பற்றிய வார்த்தைகள் தட்டச்சுச் செய்யப்பட்டுள்ளன, அதாவது அவ்வசனம் கட்டுரையின் ஒருங்கிணைந்த பகுதியாகும். ஜனவரி 23 தேதியிட்ட உரையில் பொதுச்செயலாளர் குறித்த அவ்வசனம் இல்லை. இருப்பினும் அதில் கையால் எழுதப்பட்ட செருகல் உள்ளது. குறித்த வசனத்தின் சொற்கள் துண்டு துண்டாகக் கையெழுத்தால் செருகப்பட்டுள்ளன.

கட்டுரையின் தட்டச்சு செய்யப்பட்ட காப்பக நகல்களின் புகைப்படப் பிரதிகள் மற்றும் பிராவ்தாவில் வெளியிடப்பட்ட கட்டுரையின் சான்றுகள், கையால் எழுதப்பட்ட 'பொதுச்செயலாளர்' என்ற வசனம் செருகப்பட்ட வரைவுகளின் பிரதிகள் சகரோவின் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன.

பிராவ்தாவில் வெளிவந்த அச்சிடப்பட்ட கட்டுரை லெனினுக்கு அனுப்பப்பட்டதால், அவர் அதைப் படித்திருப்பார், இது லெனின் குறித்த வசனத்தை எழுதவில்லை என்பதை மேலும் தெளிவாக்குகிறது. கிடைக்கக்கூடிய சான்றுகள் மூலம் லெனினின் செயலாளர்களில் ஒருவரான மரியா அகி-மோவ்னா வோலோடிசேவா தான் இந்த மோசடியில் பங்கு பெற்றவர் என்று தெரிகிறது. ஜனவரி 22 மற்றும் ஜனவரி 23-க்கு இடைப்பட்ட ஆவணங்களின் திகதியில் உள்ள மாறுபாடு, ஜனவரி 22-ம் திகதி பின்னர் செருகப்பட்டதற்கான சாத்தியத்தைப் பரிந்துரைக்கிறது. இது எழுப்புகிற கேள்வி யாதெனில் லெனினின் கட்டுரை வெளியிடப்பட்டதும், லெனின் அச்சிடப்பட்ட கட்டுரையைப் பார்த்த பின்னர், ஏன் குறித்த வசனத்தை ஒரு வரைவில் சேர்த்து பின்னர் அதை மறைக்க வேண்டும்?

வோலோடிசேவா ஒரு சுதந்திரமான அரசியல் செயற்பாட்டாளர் அல்ல. அவர் லெனினின் செயலாளர்களில் ஒருவர் மட்டுமே. இந்தப் போலித் திட்டத்தை அவரே உருவாக்கியிருக்க முடியாது. மேலும், லெனினின் கடைசி எழுத்துக்களைப் பொய்யாக்குவதற்கான ஒரே உதாரணம் இதுவல்ல. நாம் பார்க்கப்போவது போல், லெனினிடம் இருந்து கூறப்படும் முக்கியமான ஆவணங்களில் இன்னும் பல பொய்மைப்படுத்தல்கள் உள்ளன. வோலோடிச்சேவாவை இதைச் செய்யத் தூண்டியது யார்? லெனினின் செயலகத்தில் லெனினைத் தவிர, ஒருவருக்கு மட்டுமே செயலாளர்களுக்கு அறிவுறுத்தும் அதிகாரம் இருந்தது. அது லெனினின் மனைவி நடேஷ்டா க்ருப்ஸ்கயா.

ஸ்டாலின் மீது குற்றஞ் சுமத்தும் இந்த வசனத்தைச் செருகிய இந்த செயல் நிரூபிக்கப்பட்டிருப்பது மூலம் லெனினின் கடைசி எழுத்துக்கள் பொய்யானவை என்ற குற்றச்சாட்டு சக-ரோவின் கருதுகோள் மட்டுமல்ல என்பதற்கு உறுதியான ஆதாரமாக உள்ளது. இது சொல்லுகின்ற வலுவான செய்தி யாதெனில் லெனினின் சொந்த செயலகத்தில் மோசடிகள் நடந்தன என்பதையே. குறித்த உறுதியான ஆதாரம் இதை நிறுவுகிறது. இந்தச் செயல்களில் க்ருப்ஸ்கயாவின் பாத்திரம் பற்றி அறிவது முக்கியம். லெனினின் கடைசிக்கால எழுத்துக்களில் இன்னும் அதிகமான, மிகவும் குறிப்பிடத்தக்க, பொய்யாக்கல்களில் அவர் மைய நபராக இருந்தார் என்பதையும் இங்கு குறிப்பிடவேண்டியுள்ளது.


லெனினின் கடைசி எழுத்துக்களில் ஸ்டாலினுக்கு எதிரான போக்கைக் கொண்ட அனைத்து ஆவணங்களும் அவை எழுதப்பட்ட திகதிகளுக்கு நீண்ட காலத்திற்குப் பிறகு புழக்கத்தில் விடப்பட்டன. அவை அனைத்தும் க்ருப்ஸ்கயாவால் புழக்கத்தில் விடப்பட்டன. இந்த ஆவணங்களை வெளியிடுவதைத் தாமதப்படுத்த லெனின் விரும்பினார் என்று கொடுக்கப்பட்ட விளக்கம், எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாத நிலையில், அவர் பேசக்கூட முடியாத நிலையில் இருந்ததைக் காட்டுகிறது.

## காங்கிரஸுக்கு எழுதிய கடிதம்:

லெனினின் உயில் என்று சொல்லப்படுகின்ற ஆவணத் தொகுப்பின் மிகவும் முக்கியமானதும், சிக்கலானதுமான ஆவணம் லெனின் காங்கிரஸுக்கு எழுதிய கடிதமாகும். இந்

தக் கடிதத்தின் முதற்பகுதி டிசம்பர் 23, 1922 என்று திகதி யிடப்பட்டது. இது குறித்து சகரோவ் பின்வருமாறு குறிப்பி டுகிறார்:

'டிசம்பர் 23 அன்று எழுதப்பட்டதான கடிதம் வரலாற்றின் சரி யான கவனத்தை ஈர்க்கவில்லை, ஒருவேளை அதில் எழுப் பப்பட்ட கேள்விகள் அடுத்தடுத்த கடிதங்களில் மிகவும் விரி வான வளர்ச்சியைப் பெற்றதாலும் இந்தக் கடிதத்தின் உரு வாக்கத்தின் வரலாறு மிகவும் தெளிவாகத் தெரிந்ததும் ஒரு வேளை காரணமாயிருக்கலாம். இது 'காங்கிரஸுக்கு எழுதிய கடிதத்தின்' முதல் பகுதி என்று பாரம்பரியமாகக் கருதப்படு கிறது. இது பாரம்பரியமாகக் கருதப்பட்டாலும் இது முடிவா




னதோ, உண்மையானதோ என்று பொருளல்ல. க்ருஷ்சேவ் வின் காலத்தில் தான் குறித்த முதற்பகுதி என்று அழைக்கப் படுவது முதன்முதலில் கொம்யூனிஸ்ட் இதழில் (Communist, no. 9, 1956, pages 16-17) வெளியானது. ஆனால் Bulletin (30) of the XV Congress of the CPSU-இல் வெளியிடப்பட்ட லெனின் காங்கிரஸுக்கு எழுதிய கடிதங்கள் டிசம்பர் 23-ம் திகதி எழுதப்பட்ட கடிதம் இல்லாமலேயே வெளியாகின. க்ருஷ்சேவ்வின் காலத்திலேயே இந்த முதல்பகுதி சேர்க்கப் பட்டது.'

இந்த வரலாறு டிசம்பர் 23, 1922 ஆவணத்தின் மர்மத்தை ஆழப்படுத்துகிறது. லெனினது செயலாளர்களின் குறிப்புகள் வோலோடிச்சேவாவின் ஒரு பதிவைக் கொண்டுள்ளது, அதில் லெனின் தனக்கு ஆணையிட்டதாக அவர் கூறுகிறார்:

### டிசம்பர் 23 (எம்.ஏ. வோலோடிச்சேவாவின் பதிவு):

8 மணிக்குப் பிறகு விளாடிமிர் இலிச் என்னைத் தனது வீட் டுக்கு அழைத்தார். 4 நிமிடங்களில் அவர் கட்டளையிட்டார். மோசமாக உணர்ந்தேன். டாக்டர்கள் அழைத்தனர். ஆணை யிடத் தொடங்குவதற்கு முன், அவர் கூறினார்: 'நான் உங்க ளுக்குக் காங்கிரஸுக்கான ஒரு கடிதத்தை ஆணையிட விரும்புகிறேன். அதைக் குறித்துக் கொள்ளுங்கள்'. விரைவா கக் கட்டளையிட்டார், ஆனால் அவரது உடல்நிலை மோச மாக இருந்தது. கடைசியில் அவர் திகதி என்ன என்று கேட் டார். நான் ஏன் வெளிர் நிறமாக இருக்கிறேன், நான் ஏன் காங்கிரஸுக்குப் போகவில்லை? என்று கேட்டார். நான் அங்கு செலவழித்திருக்கக்கூடிய நேரத்தை அவர் எடுத்துக் கொண்டதற்காக வருத்தப்பட்டார். எனக்கு மேலதிகமான எந் தவொரு ஆணையும் கிடைக்கவில்லை.

இந்தப் பதிவு குழப்பமானது. இதில் 'காங்கிரஸ்' என்று இரண்டு முறை குறிப்பிடப்பட்டுள்ளது. ஏனெனில் வோலோ டிச்சேவா ஏன் காங்கிரஸ் கூட்டத்தில் கலந்து கொள்ள வில்லை என்று கேட்டார். இக்கூட்டம் 1922 டிசம்பர் 23 முதல் 27 வரை போல்ஷோய் தியேட்டரில் கூடிய சோவியத்துகளின் 8-வது அனைத்து ரஷ்ய காங்கிரஸாக இருக்க வேண்டும். லெனின் அடுத்த கட்சியின் காங்கிரஸுக்குத் (12-வது காங் கிரஸ்) தான் தனது குறிப்பைச் சொன்னார் என்பது தெளி வாக இல்லை.

குறித்த இதே திகதிக்கான மருத்துவர்களின் குறிப்புகள் பின் வருமாறு இருந்தன:

விளாடிமிர் இலிச் ஒரு தட்டச்சாளரிடம் 5 நிமிடங்கள் ஆணையிட அனுமதி கேட்டார், ஏனெனில் அவர் ஒரு கேள் வியைப் பற்றிக் கவலைப்படுகிறார், மேலும் அவர் தூங்க மாட்டார் என்று பயந்தார். இது அவருக்கு அனுமதிக்கப்பட் டது, அதன் பிறகு விளாடிமிர் இலிச் கணிசமாக அமைதிய டைந்தார்.

இந்த ஆவணத்தின் நீளத்தைப் பார்க்கும் போது (228 வார்த் தைகள்), இதை லெனின் ஐந்து நிமிடங்களில் அல்லது வோலோடிசேவா கூறியது போல் நான்கு நிமிடங்களில் கட்ட ளையிட்டிருக்கலாம் என்று கற்பனை செய்வது கடினம். லெனின் கட்டளையிடுவதற்குப் பழக்கமில்லாததால், அதில் சிக்கல் இருந்ததால் இது குறிப்பாக சாத்தியமற்றது என்று ஃபர் வாதிடுகிறார்.

இந்தக் கடிதத்தில் இரண்டு வரைவுகள் இருப்பதையும், அவை கணிசமாக வேறுபடுவதையும் சகரோவ் கண்டுபிடித் தார். தட்டச்சு செய்யப்பட்ட வரைவு வோலோடிச்சேவாவால் தொடங்கப்பட்டது. ஆனால் லெனினின் செயலகத்தில் கட மைச் செயலாளர்களில் ஒருவரும் ஸ்டாலினின் மனைவியு மான நடேஷ்டா எஸ். அல்லிலுவாவின் கையெழுத்தில் கையால் எழுதப்பட்ட வரைவு உள்ளது. இவ்விரண்டு வரை

வுகளின் பகுதிகளின் புகைப்பட மறுஉருவாக்கம் சகாரோவின் புத்தகத்தில் இடம்பெற்றுள்ளது.

லெனினின் செயலகத்தின் வெளிச்செல்லும் அஞ்சல் இதழை ஆராய்ந்த சகரோவின் கூற்றுப்படி, அல்லிலுவாவின் கையெழுத்திலான லெனினின் கடிதம் எழுதப்பட்ட அதே நாளில் (டிசம்பர் 23) பதிவு செய்யப்பட்டு அதில் பின்வருமாறு எழுதப்பட்டிருந்தது: 'ஸ்டாலினுக்கு (காங்கிரஸுக்கு தயார் செய்வதற்காக).' எனவே இந்தப் பதிவைச் செய்த அல்லிலுவாவோ அல்லது வேறு எவரோ அந்தக் கடிதம் உண்மையில் ஸ்டாலினுக்குத்தான் எழுதப்பட்டது என்று தெளிவாகக் குறித்துள்ளனர்.

சகரோவ் இவ்விரண்டு பதிப்புகளிலும் பல வித்தியாசங்களை அடையாளங் காண்கிறார். கையெழுத்துப் பதிப்பில் 'காங்கிரஸ் தயார்படுத்தலுக்கான கடிதம்' என்று அடிக்கோடிட்ட தலைப்பு உள்ளது. அத்தோடு மேல் வலதுபுறத்தில் 'கண்டிப்பாக ரகசியம்' என்ற அடிக்கோடிடப்பட்ட குறியீடும் இடப்பட்டுள்ளது. தட்டச்சு செய்யப்பட்ட பதிப்பிலோ அல்லது சோவியத் கால வெளியீடுகளில் இந்தக் குறியீடு இல்லை. இரண்டு பதிப்புகளிலும் பயன்படுத்தப்பட்ட சொல்லாடல் தனியொருவருக்காக எழுதப்பட்ட ஒருமைச் சொற்களைப் பயன்படுத்துகின்றனவேயன்றி ஒரு குழுவை நோக்கி எழுதப்பட்டதல்ல என்பதைப் புலப்படுத்துகிறது. அந்தக் கடிதம் ஒரு தனிநபருக்கானது, ஒரு குழுவிற்கு அல்ல, எனவே 'காங்கிரஸுக்கு' அல்ல என்று பொருள்கொள்ளப்பட வேண்டும் என்கிறார் சகரோவ். இதை பல ஆய்வாளர்கள் ஆமோதிக்கிறார்கள். காங்கிரஸைத் தயார்படுத்துவதை கடமையாகக் கொண்ட தலைமைச் செயலகத்துக்கும், அதனால் பொதுச் செயலாளராக இருந்த ஸ்டாலினுக்கும் லெனின் ஆலோசனைகளை முன்வைக்கிறார் என்று அந்தக் கடிதத்தின் உள்ளடக்கங்கள் தெரிவிக்கின்றன. வெளிச்செல்லும் அஞ்சல் பதிவிலுள்ள அல்லிலுவாவின் சிறுகுறிப்புடன் இது உடன்படுகிறது.

இவை அனைத்திலிருந்தும், இந்தக் கடிதத்தின் முதன்மைப் பதிப்புத் தெளிவாகக் கையால் எழுதப்பட்டது என்று சகரோவ் முடிக்கிறார். அது ஒரு தனிநபருக்கு எழுதப்பட்டது - கிட்டத்தட்ட நிச்சயமாக ஸ்டாலினுக்கு அனுப்பப்பட்டது. ஆனால் க்ருஷ்சேவ் காலத்தில் வெளியிடப்பட்ட பதிப்பு தட்டச்சு செய்யப்பட்ட பதிப்பாகும். நாம் பார்த்தபடி, இந்தப் பதிப்பு 'கண்டிப்பான இரகசியம்' என்ற தலைப்பையும் நீக்குகிறது. அப்படிச் செய்வதன் மூலம் அந்தக் கடிதம் ஒரு தனிநபருக்கானது அல்ல, கட்சிக் காங்கிரஸைப் போன்ற ஒரு கூட்டுக்கானது என்ற தோற்றத்தை உருவாக்குகிறது. இந்தக் கடிதத்தின் அச்சுப் பதிப்புகளை ஒப்பிட்டுப் பார்த்த சகரோவ், ஒருமையில் இருந்து பன்மையான தொனி மாற்றம் க்ருஷ்சேவ் காலப் பதிப்பிலேயே செய்யப்பட்டுள்ளது என்பதைக் கண்டுபிடித்தார். இந்த மாற்றம், குறைந்தபட்சம், ஸ்டாலினின் 'ஆளுமை வழிபாட்டு முறை' மீதான க்ருஷ்சேவின் தாக்குதலுடன் தொடர்புடையதாக இருக்கலாம், இது பிப்ரவரி 1956-ல் கட்சியின் இருபதாவது காங்கிரஸில் அவரது 'ரகசிய உரையில்' தொடங்குகிறது.

இந்தக் கடிதத்தின் அசல் வரைவில் தெளிவாக வோலோடிச்சேவா செய்த மாற்றங்களுக்கான நோக்கங்கள் என்ன என்பதை இன்று நாம் தீர்மானிக்க முடியாது. ஆனால் சில முடிவுகளுக்கு வரவியலும். முதலாவது லெனினினால் சொல்லப்பட்டு கையெழுத்தால் எழுதப்பட்ட பிரதியில் இருந்து பல மாற்றங்கள் தட்டச்சு செய்யும்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. அவை லெனினின் செயலகத்திலேயே நடைபெற்றுள்ளன. செயலகத்தில் உள்ள மற்ற தட்டச்சாளர்களுக்கோ செயலாளர்களுக்கோ லெனின் கட்டளையிட்ட எதையும் மாற்றும் எந்த ஒரு சுயாதீனமான அரசியல் பங்கையும் அல்லது அதிகாரத்தையும் கொண்டிருக்கவில்லை. லெனினைத் தவிர, ஒருவருக்கு மட்டுமே அத்தகைய அதிகாரம் இருந்தது. அந்த முழுமையான அதிகாரத்தைக் கொண்டிருந்த ஒரே நபர் லெனினின் மனைவி நடேஷ்டா கான்ஸ்டான்டினோவ்னா க்ருப்ஸ்கயா.


இந்தச் சர்ச்சைக்குரிய கடிதமானது மூன்று பகுதிகளைக் கொண்டிருந்தது. இதன் முதலாவது பகுதி குறித்தே மேலே பார்த்தோம். இதன் இரண்டாவது பகுதி 'குணவியல்புகள்' என்ற தலைப்பிலும் மூன்றாவது பகுதி 'மேலதிகக் குறிப்புகள்' என்ற தலைப்பிலும் அமைந்திருந்தன. குணவியல்புகள் என்ற பகுதி, டிசம்பர் 25, 1922 என்று திகதியிடப்பட்டிருந்தது. இந்தப் பகுதியின் ஆவணக் காப்பகப் பிரதிகளை ஆராய்ந்த சகரோவ் இந்தப் பகுதி ஒருமையில் எழுதப்பட்டிருந்ததாகவும் இது க்ருஷ்சேவ் காலத்தில் வெளியான லெனினின் தொகுதியில் பன்மையில் மாற்றப்பட்டிருந்தாகவும் தன் அவதானிப்புக்களைச் சுட்டுகிறார். டிசம்பர் 25, 2023 லெனின் வாய்மொழியாகச் சொன்ன குறிப்புப் பற்றி 1923 யூன் மாதம் 5-ம் திகதியே மற்றவர்களுக்குத் தெரிய வருகிறது. இந்த ஆவணங்களை லெனினின் மனைவி க்ருப்ஸ்கயா லெனின் மறைந்து (1924 ஜனவரி 21) சில மாதங்களின் பின்னர் 1924 மே 18 அன்றே ஒரு குறிப்புடன் கையளிக்கிறார். தனது குறிப்பின் வழியே க்ருப்ஸ்கயா முதன்முறையாக இரண்டு வெவ்வேறு ஆவணங்களை ஒருங்கிணைத்தார் என்றும் அவை இரண்டும் அதுவரை ஒன்றுக்கொன்று சுயாதீனமான ஆவணங்களாக இருந்தன என்பதை சகரோவ் எடுத்துக்காட்டுகிறார்.

குறித்த கடிதத்தின் சிக்கல்கள், முரண்பாடுகள், தவறுகள் எனப் பலவற்றை ஆதாரங்களோடு தனது நூலில் மிகவும் விரிவாகச் சகரோவ் எடுத்தாள்கிறார். குறித்த ஆவணம் கட்சி காங்கிரஸுக்கு அனுப்பப்பட்ட கடிதமாக இருக்க முடியாது என்பதை ஆதாரங்களோடு நிறுவுகிறார். 'காங்கிரஸுக்குக் கடிதம்' கட்டுரையில் லெனின் எவ்விடத்திலும் காங்கிரஸையோ அல்லது அதன் பிரதிநிதிகளையோ குறிப்பிடவில்லை என்ற உண்மையால் இந்த முடிவு ஆதரிக்கப்படுகிறது. அவர் 'தோழர்களே' என்று குறிப்பிடுகிறார். மேலும் காங்கிரஸால் பொதுச் செயலாளரை அகற்ற முடியாது. இதை லெனின் அறியாதவரல்ல. அப்படியிருக்க எவ்வாறு காங்கிரஸ் பிரிதிநிதிகளிடம் பொதுச்செயலாளரை அகற்றும்படி கோருவார். இதுவே இந்த ஆவணத்தின் உண்மைத்தன்மையைக் கேள்விக்குட்படுத்துகிறது. சகரோவ்வும் இன்னும் பலரும் வாதிடுகின்றபடி இந்த ஆவணம் பின்னர் 'காங்கிரஸுக்கு கடிதம்' என்று பெயரிடப்பட்டது. சகரோவ் இதற்கான ஆதாரத்தை ட்ரொஸ்கியின் ஆவணக் காப்பகத்தில் இருந்து எடுத்துக்காட்டுகிறார். அங்கிருந்த 'குணவியல்புகள்' என்ற கட்டுரையின் பிரதிக்குத் தலைப்பு இருக்கவில்லை. க்ருப்ஸ்-

காயா தனது குறிப்பில் இது காங்கிரஸுக்கு லெனின் எழுதியது என்றும் மத்திய குழுவுக்கு அல்ல என்றும் சொல்லியிருக்கிறார். அப்படியிருக்கையில் 'தோழர்கள் ஸ்டாலினை அகற்றுவதற்கான வழியைப் பற்றி சிந்திக்க வேண்டும்' என்ற வார்த்தைகள், கட்சி விதிகளுக்குப் புறம்பானவை மட்டுமல்ல ஒரு சதித்திட்டத்திற்கு ஈடானது.

காங்கிரஸுக்கு எழுதிய கடிதம் தொடர்பில் சகரோவ்வின் வாதங்கள், அதற்கான ஏனைய சோவியத் ஆய்வாளர்களின் கருத்துக்கள் என்பவற்றின் அடிப்படையில் பின்வரும் முடிவுகளுக்கு வரமுடியும் என்று ஃபர் கருதுகிறார்:

இந்த ஆவணமானது 12-வது கட்சி காங்கிரஸுக்கு முன்பு உருவாக்கப்பட்டிருக்க முடியாது. இது கட்சிக் காங்கிரஸுக் குப் பின்பே உருவாக்கப்பட்டு பிற்தேதியிடப்பட்டது. இதனடிப்டையில் லெனின் இதன் ஆசிரியராக இருந்திருக்க முடியாது. இந்த ஆவணம், ஒரு கட்சிக் காங்கிரஸுக்கோ, மத்திய குழுக்கோ அல்லது பொலிட்பீரோவுக்கோ வழங்கப்பட்ட முறையீடு அல்ல. தற்போதைய கட்சித் தலைமைக்கு எதிரான அரசியல் வட்டாரங்களில் இருந்து உருவான கோஷ்டிப் போராட்டத்தின் ஆவணம் இது. இந்தக் கடிதம் முடிக்கப்பட்ட ஆவணம் அல்ல. இது குறிப்புகள், கிறுக்கல்கள், தனிப்பட்ட பிரச்சினைகளைப் பற்றிய ஆய்வுகள், ஓரளவு தனக்காகவும், ஓரளவு மற்றவர்கள் படிப்பதற்காகவும் உருவானது. இந்த ஆவணத்தின் ஒரே நோக்கம் ஸ்டாலினைப் பொதுச்செயலாளர் பதவியில் இருந்து அகற்றுவதே.



அரசியல் நலன்களுக்காகவே இந்த ஆவணம் உருவாக்கப்பட்டது என்பது உறுதி. இது அதன் நோக்கத்தில் ட்ரொட்ஸ்கிக்கு உதவுவதற்காக என்பது தெளிவு. ஆனால் இது யாரால் உருவாக்கப்பட்டது என்பதை ஆதாரபூர்வமாக உறுதியாகச் சொல்ல முடியாது. ஆனால் இந்த ஆவணங்களை க்ருப்ஸ்கயா வழங்கினார். அதன் உருவாக்கத்தில் அவர் முக்கிய பங்கு வகித்திருக்க வேண்டும். 13-வது கட்சிக் காங்கிரஸில் (மே 23 - 31, 1924), ஜனவரியில் லெனின் இறந்த பிறகு, முழு காங்கிரஸும் 'காங்கிரஸுக்குக் கடிதம்' என்ற ஆவணத்தை வெளியிட வேண்டாம் என்று வாக்களித்தது. இதுவரை வெளியிடப்படாத ஒரு ஆவணத்தை மேற்கோள் காட்டும் சகரோவ், இந்த வாக்கெடுப்பு ஒருமனதாக இருந்தது, ட்ரொட்ஸ்கி கூட அவற்றை வெளியிட வாக்களிக்கவில்லை என்று குறிப்பிடுகிறார். 14-வது கட்சிக் காங்கிரஸில் (டிசம்பர் 18 - 31, 1925) ஜினோவியேவ் மற்றும் கமெனேவ் உட்பட்ட சிலர் லெனினின் 'உயில்' என்ற சொல்லைப் பயன்படுத்தத் தொடங்கினர்.

## இறுதி எச்சரிக்கை:

லெனினினுடைய உயில் என்ற கருத்தாக்கத்திற்கு வலுச் சேர்க்கப் பயன்படும் இன்னொரு நிகழ்வு, ஸ்டாலினுடனான உறவை முறித்துக் கொள்வதற்கான லெனினின் அச்சுறுத்தல் கடிதமாகும். இது பின்வரும் நிகழ்வுகளின் வழி விளக்கப்படுகிறது:

- டிசம்பர் 21, 1922-ல், லெனின் க்ருப்ஸ்காயாவினூடு வெளிநாட்டு வர்த்தகத்தின் ஏகபோக உரிமையைத் தக்கவைத்துக் கொள்வது தொடர்பில் ட்ரொட்ஸ்கிக்கு ஒரு கடிதம் எழுதினார்.
- டிசம்பர் 22 மாலை, ஸ்டாலின் க்ருப்ஸ்காயாவுக்குப் போன் செய்து, லெனினுடன் அரசியல் விவாதம் நடத்துவதற்கான தடையை மீறியதற்காக முரட்டுத்தனமாகத் திட்டினார்.
- டிசம்பர் 23 அன்று, க்ருப்ஸ்கயா, ஸ்டாலின் தன்னை நடத்தும் விதத்தை எதிர்த்தும், ஸ்டாலினின் முரட்டுத்தனத்திற்கு எதிராக அவருக்கும் ஜினோவியேவுக்கும் பாதுகாப்பைக் கேட்டும் கமெனேவுக்கு ஒரு கடிதம் எழுதினார்.
- மார்ச் 5, 1923-ல், க்ருப்ஸ்காயாவிடம் ஸ்டாலினின் முரட்டுத்தனத்தை அறிந்த லெனின், ஸ்டாலினுக்கு ஒரு கடிதம் எழுதினார், அவர் மன்னிப்புக் கேட்க வேண்டும் அல்லது தன்னுடனான உறவை முறித்துக் கொள்ள வேண்டும் என்று கோரினார்.
- மார்ச் 7, 1923-ல், ஸ்டாலின் லெனினுக்கு ஒரு குறிப்பை எழுதினார், அதில் அவர் தனது கருத்துக்களைத் திரும்பப் பெற்றார், ஆனால் முழுப் பிரச்சினையிலும் ஏதோவொரு குழப்பம் விளைந்திருப்பதாக வெளிப்படுத்தினார். இந்தக் குறிப்பு லெனினிடம் காட்டப்படவில்லை.

இந்தக் கதையாடலே இன்றும் பெரும்பாலும் முன்வைக்கப்படுகிறது. ஆனால் இந்த நிகழ்வுக் கோர்வையில் ஏராளமான முரண்கள் நிறைந்திருக்கின்றன. இவற்றை சகரோவ் விரிவாகவும் விளக்கமாகவும் ஆராய்கிறார். அவற்றை ஒவ்வொன்றாகப் பார்ப்போம். முதலில் டிசம்பர் 21, 1922-ல், லெனின் ட்ரொட்ஸ்கிக்கு எழுதிய கடிதம்:

- இக்கடிதத்தின் இறுதியில் வழமைக்கு மாறான விதத்தில் லெனினின் பெயர் இடம்பெற்றிருக்கிறது. தனது எழுத்துக்க

ளின் இறுதியில் 'லெனின்' என்று எழுதுவதே வழக்கம். ஆனால் குறித்த கடிதத்தில் 'E. லெனின்' என்று எழுதப்பட்டிருந்தது. லெனினின் ஆவணங்களின் இறுதியில் இவ்வாறு முன்னெழுத்தோடு பெயர் இல்லை. டிசம்பர் 16, 1922 திகதியிடப்பட்ட ஒரே ஒரு ஆவணத்தில் மட்டும் E. லெனின் என்று எழுதப்பட்டுள்ளது. ஆனால் டிசம்பர் 16, முதல் 23 வரை லெனின் ஓர் ஆவணத்தை எழுதியதற்கான (வாய்வழியாக சொன்னதற்கான) எந்தவொரு சான்றும் செயலாளர் குறிப்புகளில் இல்லை. டிசம்பர் 16 முதல் 22 வரையான நாட்களில் லெனின் எழுதியதற்கான அறிகுறிகள் எதுவும் மருத்துவர்களின் நாட்குறிப்புகளில் கூட இல்லை. இது இரண்டு விடயங்களைச் சொல்கிறது. முதலாவது டிசம்பர் 21-ம் திகதி ட்ரொட்ஸ்கிக்கு எழுதிய கடிதத்தைக் கேள்விக்குட்படுத்துகிறது. இரண்டாவது அதில் பயன்படுத்தப்பட்ட E. லெனின் என்ற கையொப்பத்தை நியாயப்படுத்த அதே கையொப்பத்தோடு டிசம்பர் 16-ம் திகதி கடிதம் உருவாக்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளது.

- லெனினது எழுத்துக்களைப் பிரதியெடுக்கும் க்ருப்ஸ்கயா, வழமையாக குறிப்பெடுத்தவர் பெயராக 'என்.கே' என்றோ 'என். க்ருப்ஸ்கயா' என்றோ இடுதுவதே வழக்கம். ஆனால் இந்த ஆவணத்தில் அவரது பெயர் என்.கே. உல்ய-னோவா என்றிருக்கிறது. இதே பெயரில் குறிப்பெடுக்கப்பட்ட பிற ஆவணங்கள் எதுவும் இல்லை.
- இந்தக் கடிதத்தின் மூலப்பிரதி எதுவும் இல்லை. லெனினின் காப்பகத்தில் கார்பன் நகல் கூட இல்லை. ட்ரொட்ஸ்கியின் காப்பகத்தில் ஒரு பிரதியாக்கப்பட்ட ஆவணமே உள்ளது, இது ஒரு 'பிரதி' என்ற குறிப்புடன் உள்ளது. எனவே மூலப்பிரதியோ அதன் துணைப்பிரதிகளோ இல்லை.
- ட்ரொட்ஸ்கியின் காப்பகத்தில் உள்ள பிரதியோடு க்ருப்ஸ்கயா எழுதிய குறிப்பொன்றும் உண்டு. அக்குறிப்பில்: 'பேராசிரியர். ஃபெர்ஸ்டர்' இன்று விளாடிமிர் இலிச்சை ஒரு கடிதத்தை ஆணையிட அனுமதித்தார், மேலும் அவர் பின்வரும் கடிதத்தை உங்களுக்கு எழுதக் கட்டளையிட்டார்'. டாக்டர் ஃபெர்ஸ்டர் 'இன்று', அதாவது டிசம்பர் 21 அன்று லெனினிடம் இருந்து ஆணையைப் பெறுவதை அனுமதித்ததாகக் கூறி க்ருப்ஸ்கயா தனது செயலை நியாயப்படுத்தினார். ஆனால் மருத்துவக் குறிப்புகளின் படி டாக்டர்கள் ஃபெர்ஸ்டர் மற்றும் கிராமர் லெனினைப் பரிசோதிக்க முந்தைய நாள், டிசம்பர் 20-ம் திகதி அன்றே வந்தனர். 21-ம் திகதி எந்தவொரு மருத்துவரும் லெனினைச் சந்தித்ததற்குப் பதிவு எதுவும் இல்லை. அதேவேளை ஸ்டாலின் கமெனேவுக்கு எழுதிய கடிதத்தின்படி, டாக்டர் ஃபெர்ஸ்டர் லெனின் வாய்வழியாகத் தனது எழுத்துக்களை ஆணையிடுவதை 'முற்றிலும் தடை செய்தார்'. டிசம்பர் 18, 1922-ல், மத்திய குழுவின் பிளீனம் 'தொழிலாளர்களுடனான தனிப்பட்ட தொடர்புகள் மற்றும் கடிதப் பரிமாற்றங்கள் தொடர்பாக லெனினைத் தனிமைப்படுத்துவதற்கான தனிப்பட்ட பொறுப்பை ஸ்டாலினுக்கு' வழங்கியது குறிப்பிடத்தக்கது.
- ட்ரொஸ்கி லெனினது கடிதத்தை க்ருப்ஸ்கயா கைப்பட எழுதித் தன்னிடம் தந்ததாக வெகுகாலத்தின் பின்னர் குறிப்பிடுகிறார். அப்படியாயின் அக்கடிதம் ட்ரொஸ்கியின் ஆவணங்களில் இருந்திருக்க வேண்டும். ஆனால் குறித்த ஆவணத்தின் கையெழுத்துப்பிரதி எங்கும் இல்லை. இவ்வாவணங்களை ஆராய்ந்த சகரோவ், லெனினின் ஆவணக்காப்பகத்தில் உள்ள பிரதியானது, ட்ரொஸ்கியிடம் இருந்த பிரதியில் இருந்து பிரதி செய்யப்பட்டது என்று அதில் உள்ள குறியீடுகளின் வழி நிறுவுகிறார். அத்தோடு இவ்வாறு ஒரு கடிதத்தை லெனின் எழுதவே இல்லை என்கிறார்.
- இது குறித்துத் தனது நூலில் கருத்துரைத்துள்ள கொட்கின் இரண்டு கேள்விகளை எழுப்புகிறார். இவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயம் தொடர்பில் எழுதப்பட்ட கடிதத்திற்கு நிச்சயம் ட்ரொஸ்கி பதில் கடிதம் எழுதியிருக்க வேண்டுமல்லவா? அந்தக் கடிதம் எங்கே, அவ்வாறானதொரு கடிதம் எந்தவொரு ஆவணக் காப்பகத்திலேயோ, பிற ஆவணங்களில் குறிப்பிடப்பட்டோ இருக்குமல்லாவா? ஏன் அப்படி ஒன்று இல்லை. கொட்கினின் இரண்டாவது கேள்வி, குறித்த விடயம் தொடர்பில் ஒரு கடிதத்தை எழுதிய லெனின் ஏன் இவ்விடயம் குறித்து இதன்பின்னர் எதுவுமே எழுதவில்லை? லெனினின் படைப்புகளை ஒழுங்காகப் படிப்பவர்கள், ஒன்றில் தொட்டுச் சென்றதை அடுத்த எழுத்துகளில் விரிப்பதும், விளக்குவதும், கருத்துரைப்பதுமாகவே அவரது எழுத்துக்கள் அமைவதை அவதானிக்கலாம்.
- அடுத்து இக்கடிதத்தின் உள்ளடக்கத்திற்கு வருவோம். ட்ரொட்ஸ்கி, டிசம்பர் 21 அன்று லெனின் க்ருப்ஸ்கயா வழியாக அவருக்கு (மிகச் சிறந்த தோழமை வாழ்த்துக்களுடன்) வெளிநாட்டு வர்த்தக ஏகபோகத்தின் மீதான வாதத்தில் வெற்றி பெற்றதற்காக ட்ரொட்ஸ்கிக்கு நன்றி தெரிவித்து ஒரு வாழ்த்துக் கடிதத்தை எழுதியதாகக் கூறினார். ஆனால் டிசம்பர் 18-ம் தேதி நடைபெற்ற மத்திய குழுக் கூட்டத்தில் மாநில வெளிநாட்டு வர்த்தக ஏகபோக உரிமையை நிலைநிறுத்துவதற்கு வாக்களிக்கப்பட்டது. இந்தத் தீர்மானத்திற்கான வரைபை மேற்கொண்டவர் ஸ்டாலின். மாநில திட்டக்குழுவின் கீழ் பொருளாதார நிர்வாகத்தை மறுசீரமைக்க வேண்டும் என்ற ட்ரொட்ஸ்கியின் வலியுறுத்தலை பிளீனம் நிராகரித்தது. மேலும் ஸ்டாலின் ஏற்பாடு செய்த சோவியத் ஒன்றியமான புதிய அரசுக் கட்டமைப்பின் லெனினின் விருப்பமான பதிப்பிற்கும் பிளீனம் வாக்களித்தது. எனவே ட்ரொஸ்கியை பாராட்டிய கடிதம் என்று ஒன்று இல்லை. அதேவேளை லெனின் சார்பாகக் க்ருப்ஸ்கயா, டிசம்பர் 18, 1922, பிளீனம் விவாதத்தில் லெனினுக்குப் பதிலாக யாரையாவது கண்டுபிடிக்குமாறு யாரோஸ்லாவ்ஸ்கிக்கு (ட்ரொட்ஸ்கியின் எதிரி) கடிதம் எழுதியிருந்தார். அதேவேளை வர்த்தக ஏகபோகம் குறித்த சந்திப்பு நெறிமுறைகள் பற்றிய எழுத்துபூர்வ நகல் ட்ரொட்ஸ்கிக்கு வழங்கப்படவுமில்லை அதை அவர் கோரவுமில்லை என்பது குறிப்பிடத்தக்கது.
- யாரோஸ்லாவ்ஸ்கிக்கு இது தொடர்பில் லெனினால் டிசம்பர் 14-ம் திகதி எழுதிய கடிதம் கிடைக்கிறது. இது குறித்தது லெனினைச் சந்தித்து உரையாடியதாக யாரோஸ்லாவ்ஸ்கியின் குறிப்புக்களில் உள்ளன. மேலும் தான் அவரது முன்னாள் மென்ஷிவிசத்தை ட்ரொட்ஸ்கிக்கு நினைவூட்டியதாக லெனினிடம் கூறியபோது, லெனின் சத்தமாக சிரித்துவிட்டு, 'அதற்காக ட்ரொட்ஸ்கி உங்களை ஒருபோதும் மன்னிக்க மாட்டார்' என்று இந்தக் குறிப்பில் யாரோஸ்லாவ்ஸ்கி பதிவு செய்துள்ளார்.
- உண்மையில், ட்ரொட்ஸ்கிக்கு வெளிநாட்டு வர்த்தகத்தின் ஏகபோகத்தைப் பாதுகாக்கும் தீர்மானத்தின் முன்மொழிவு மற்றும் நிறைவேற்றத்துடன் எந்தத் தொடர்பும் இல்லை.

டிசம்பர் 18, 1922-ல் மத்தியகுழு பிளீனத்தால் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தின் கையால் எழுதப்பட்ட வரைவு எஞ்சியிருக்கிறது. இது ஸ்டாலினின் கையெழுத்தைப் போன்றது, எனவே அவருடைய கையெழுத்தில் ஸ்டாலின், ஜினோவியேவ் மற்றும் காமெனேவ் கையெழுத்திட்டிருக்கலாம். சகரோவ் தனது நூலில் வழங்கியுள்ள இந்த ஆவணத்தின் விளக்கத்தின்படி, இந்த ஆவணம் ஸ்டாலினின் கையொப்பத்தின் அதே மையில் உள்ளது.

அடுத்து இக்கதையாடலின் இரண்டாவது நிகழ்வுக்கு வருவோம். அது டிசம்பர் 22 1922, ஸ்டாலின் க்ருப்ஸ்காயாவுக்கு தொலைபேசியில் திட்டிய நிகழ்வு பற்றியது. இது தொடர்பில் க்ருப்ஸ்காயா காமெனேவ்வுக்கு பின்வரும் குறிப்பை அனுப்புகிறார்.

*'மருத்துவர்களின் அனுமதியுடன் விளாடிமிர் இலிச் எனக்குக் கட்டளையிட்ட சொற்களில் நான் எழுதிய ஒரு சிறிய கடிதத்தின் காரணமாக, ஸ்டாலின் நேற்று என்னை நோக்கி வழக்கத்திற்கு மாறாக முரட்டுத்தனமாக நடந்து கொண்டார். கட்சியில் இது எனது முதல் நாள் அல்ல. இந்த 30 வருடங்களில் எந்த ஒரு தோழரிடமும் முரட்டுத்தனமான ஒரு வார்த்தையை நான் கேட்டதில்லை. கட்சி மற்றும் இலிச்சின் மீது ஸ்டாலின் காட்டுகிற அக்கறைக்குக் குறைவற்ற அக்கறை என்னிடமுண்டு. எனக்குத் தற்போது அதிகபட்ச சுயக்கட்டுப்பாடு தேவை. இலிச்சுடன் ஒருவர் எதைப் பற்றி விவாதிக்க முடியும், எதைப் பற்றி விவாதிக்க முடியாது என்பது பற்றி எந்த மருத்துவரை விடவும் எனக்கு நன்றாகத் தெரியும், ஏனென்றால் அவரைப் பதட்டப்படுத்துவது எது என்பது எனக்குத் தெரியும். எப்படியிருந்தாலும், ஸ்டாலினை விட எனக்கு நன்றாகத் தெரியும். நான் உங்களிடமும் ஜினோவியேவ்விடமும் மற்றும் எனது மிகவும் நெருக்கமான தோழர்களிடம், எனது தனிப்பட்ட வாழ்க்கையில் முரட்டுத்தனமான குறுக்கீடுகள் மற்றும் அச்சுறுத்தல்களிலிருந்து என்னைப் பாதுகாக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். ஸ்டாலின் என்னை அச்சுறுத்துவது பொருத்தமாக இருக்கும் என்று கருதும் கட்டுப்பாட்டு ஆணையத்தின் ஒருமனதான முடிவு என்னவாக இருக்கும் என்பதில் எனக்கு எந்த சந்தேகமும் இல்லை இருப்பினும், இந்த முட்டாள்தனமான சண்டையில் வீணடிக்க எனக்கு வலிமையும் இல்லை, நேரமும் இல்லை. மேலும் நான் ஒரு உயிருள்ள நபர் மற்றும் எனது நரம்புகள் மிகவும் சிரமப்படுகின்றன.'*

லெனினின் தேர்ந்தெடுத்த தொகுப்புகளில் இந்தக் கடிதத்தின் திகதி டிசம்பர் 23, 1922 என்று கொடுக்கப்பட்டுள்ளது. திகதி சரியாக இருந்தால், அதற்கு முந்தைய நாள் டிசம்பர் 22, 1922 அன்று க்ருப்ஸ்காயாவுடன் ஸ்டாலின் பேசியிருக்க வேண்டும். ஆனால் அது சரியல்ல என்று உறுதியாகச் சொல்லலாம். எனவே இத்திகதி இத்தொகுப்பைச் செய்த ஆசிரியர்களால் சேர்க்கப்பட்டது என்பது புலனாகிறது. அதே வேளை முதலில் வெளியான தொகுப்பில் தடித்த எழுத்துக்களில் உள்ள வரிகள் இல்லை என்பதும் பின்னாளில் அது சேர்க்கப்பட்டது என்பதையும் ஃபர் எடுத்துக்காட்டுகிறார்.

இங்கே க்ருப்ஸ்கயா மத்திய குழுவின் தீர்மானத்தை மீறி லெனினுடன் பேச உரிமை கோருகிறார். அரசியல் ரீதியாக இக்காலகட்டத்தில் றி காமெனேவ், ஜினோவியேவ் இருவரும் ஸ்டாலினை எதிர்த்தார்கள். ஆனால் ஸ்டாலினிடமிருந்து தன்னைக் காப்பாற்றுவதற்காக க்ருப்ஸ்கயா அவர்களிடம் உதவி கோரியதைப் பற்றி காமெனேவ்வோ அல்லது ஜினோவியேவ்யோ எதுவும் குறிப்பிடவில்லை என்று சகரோவ் குறிப்பிடுகிறார். இங்கே குறிப்பிடப்பட்டுள்ளது போல, ஸ்டாலினுக்கும் க்ருப்ஸ்கயாவுக்கும் இடையேயான இந்தச் சண்டை உண்மையில் 1922 டிசம்பரில் நடக்கவில்லை. க்ருப்ஸ்கயா மட்டுமே அது அப்போது நடந்ததாகக் கூறுகிறார். இந்தக் கதை பற்றிய மற்ற எல்லாச் சாட்சிகளும் இந்நிகழ்வு 1923 ஜனவரியின் பிற்பகுதியிலோ அல்லது பிப்ரவரி மாதத் தொடக்கத்திலோ நடந்ததாகப் பதிவு செய்தன. மேலே உள்ள கடிதம் ட்ரொட்ஸ்கிக்கு எழுதிய கடிதத்துடன் இந்த நிகழ்வை இணைக்கும் நோக்கில், பின்னர் எழுதப்பட்டு முற்தேதியிடப்பட்டது என்பதை இது தெரிவிக்கிறது.

லெனினுடன் மிகவும் நெருங்கியவரும் க்ருப்ஸ்காயாவிற்கும் ஸ்டாலினுக்கும் இடையிலான சர்ச்சையைக் கண்ட லெனினின் சகோதரி மரியா இலினிச்னா உல்யனோவா இந்த நிகழ்வை மிகவும் வித்தியாசமாகச் சித்தரிக்கிறார். அவர் பின்வருமாறு எழுதுகிறார்:

*'கடுமையான நோய்வாய்ப்பட்ட இந்தக் காலகட்டத்தில் லெனினுக்கு அரசியல் செய்திகள் எதுவும் எட்டாதவாறு கண்காணிக்கும் பொறுப்பை மருத்துவர்களின் கோரிக்கையின் பேரில் மத்திய குழு ஸ்டாலினுக்கு வழங்கியதால் இந்தச் சம்பவம் நடந்தது. அவர் வருத்தப்படக்கூடாது என்பதற்காகவும், அவரது உடல்நிலை மோசமடையக்கூடாது என்பதற்காகவும் இது செய்யப்பட்டது, அவர் (ஸ்டாலின்) இது போன்ற தகவல்களை லெனினுக்குத் தெரிவித்ததற்காக எனது குடும்பத்தினரைக் கூடத் திட்டினார்.'*

க்ருப்ஸ்காயா மட்டுமல்ல, லெனினின் ஒட்டுமொத்தக் குடும்பமும் ஸ்டாலினால் 'திட்டப்பட்டது' என்று சொல்லும் உல்யனோவா லெனினுக்கு அரசியல் செய்திகளை வழங்கத் தடை விதிக்கப்பட்டது பற்றிப் பேசுகிறார். ஆனால் இந்தத் தடை டிசம்பர் 24, 1922 அன்றே விதிக்கப்பட்டது. ஆனால் க்ருப்ஸ்கயா குறித்த சம்பவம் இத்திகதிக்கு முன் நடந்ததாகச் சொல்கிறார்.

லெனினைப் பற்றிய நினைவுக் குறிப்பில் அவரது சகோதரி மரியா இலினிச்னா உல்யனோவா டிசம்பர் 24, 1922 விதிக்கப்பட்ட தடையை இவ்வாறு பதிவு செய்கிறார்:

*'லெனினின் உடல்நிலையைக் கருத்தில் கொண்ட மருத்துவர்கள் (ஃபோர்ஸ்டர், கிராமர், கோசெவ்னிகோவ்) டிசம்பர் 24 அன்று ஸ்டாலின், கமெனேவ் மற்றும் புகாரினைச் சந்தித்தனர். எல்லோரும் கலந்துரையாடிப் பின்வரும் தீர்மானத்தை எட்டினர்:*

- விளாடிமிர் இலிச் தினசரி 5-10 நிமிடங்கள் ஆணையிடும் உரிமையைப் பெற்றுள்ளார், ஆனால் இது கடிதப் பரிமாற்றத்தின் தன்மையைக் கொண்டிருக்கக்கூடாது மற்றும் விளாடிமிர் இலிச் இந்தக் குறிப்புகளுக்கான பதிலுக்காகக் காத்திருக்கக்கூடாது. தனிப்பட்ட சந்திப்புகள் தடைசெய்யப்பட்டுள்ளன.
- விளாடிமிர் இலிச்சுடன் நண்பர்களோ அல்லது குடும்பத்தி

னரோ அரசியல் தொடர்பான விடயங்களைப் பேசக்கூடாது. இதனால் வருத்தத்திற்குரிய மற்றும் சிந்தனையைத் தூண்டுகிற செய்திகள் அவருக்குச் சென்றடையாமல் இருக்கும்.'

இதேவேளை, க்ருப்ஸ்காயாவிற்கு லெனின் தொலைபேசியில் திட்டியது பற்றிய தனது குறிப்புகளையும் லெனினது சகோதரி பகிர்ந்துள்ளார்.

*'க்ருப்ஸ்காயா அரசியல் விடயங்கள் தொடர்பில் உரையாடல்களை நிகழ்த்துகிறார் என்பது ஸ்டாலினுக்குத் தெரிய வந்தது. ஒருநாள் ஸ்டாலின் அவரைத் தொலைபேசியில் அழைத்து, மிகவும் கூர்மையாகப் பேசினார். லெனினுடன் அரசியல் வேலைகள் பற்றி விவாதிக்க வேண்டாம் என்று எச்சரித்தார். மீறினால் கட்சியின் மத்திய கட்டுப்பாட்டு ஆணையத்திற்கு க்ருப்ஸ்காயா பதில் சொல்ல வேண்டி வரும் என்று சொன்னார். இந்த உரையாடலால் க்ருப்ஸ்காயா தன் கட்டுப்பாட்டை முற்றிலும் இழந்தார். அவர் அழுது தரையில் உருண்டார். சில நாட்களுக்குப் பிறகு இதை அவர் லெனினிடம் சொன்னார். இந்தச் சம்பவம் தொடர்பில் தாமிருவரும் ஏற்கனவே சமரசம் செய்து கொண்டதாகவும் கூறினார். இதற்கு முன்னரே, ஸ்டாலின் தனது பேச்சின் கடுமை க்ருப்ஸ்காயாவில் எதிர்மறையான எதிர்வினையை உருவாக்கலாம் என்று ஊகித்து அவரிடம் தொலைபேசியில் அழைத்ததாகத் தெரிகிறது.'*

க்ருப்ஸ்காயாவின் 'தரையில் உருளுதல்' பற்றிக் கருத்துரைக்கும் கொட்கின் க்ருப்ஸ்கயா 'வேண்டுமென்றே ஒரு மறக்கமுடியாத சம்பவத்தை அரங்கேற்ற முயற்சித்திருக்கலாம்' என்கிறார். முக்கிய விஷயம் இதுதான்: க்ருப்ஸ்கயா இந்த நிகழ்வைப் பற்றி 'சில நாட்களுக்குப் பிறகு' லெனினிடம் கூறினார். இது க்ருப்ஸ்காயாவின் கருத்துடன் முற்றிலும் முரண்படுகின்றது. எனவே, க்ருப்ஸ்கயா கமெனெவ்வுக்கு எழுதிய கடிதம் உண்மையில் எப்போது எழுதப்பட்டது? ஜூலை 26, 1926-ல் தனது வாக்குமூலத்தில், லெனினின் எதிர்வினை மிதமானதாக இருந்தது என்று உல்யனோவா கூறுகிறார். தனக்கு வழங்கப்பட்டுள்ள வலுவான பாதுகாப்பும் மிகையான கவனிப்பும் பற்றி எப்போதும் கவலைப்பட்ட இலிச் இருவருக்கிடையில் நடந்த சம்பவம் குறித்து அறிந்து ஸ்டாலினைக் கடிந்து கொண்டார். ஸ்டாலின் மன்னிப்புக் கேட்டதையடுத்து, சம்பவம் முடிவுக்கு வந்தது.

லெனினின் எதிர்வினை மிகையானது என்று உல்ய னோவா கூறுகிறார்:

*'இந்தக் காலக்கட்டத்தில், நான் குறிப்பிட்டது போல், லெனின் இவ்வளவு மோசமாக நோய்வாய்ப்பட்டிருக்கவில்லை என்றால், அந்தச் சம்பவத்திற்கு அவர் வேறுவிதமாக எதிர்வினையாற்றியிருப்பார் என்பதைச் சொல்ல வேண்டியதில்லை.'*

தனது வாக்குமூலத்தை அவர் பின்வருமாறு நிறைவு செய்கிறார்:

*'இந்தச் சம்பவம் தொடர்பான ஆவணங்கள் உள்ளன, மத்திய குழுவின் முதல் கோரிக்கையின் பேரில் நான் அவற்றை முன்வைக்க முடியும். எனவே, லெனினுக்கும் ஸ்டாலினுக்கும் உள்ள தொடர்பு பற்றி எதிர்க்கட்சிகள் பேசும் அனைத்தும் யதார்த்தத்துடன் ஒத்துப்போவதில்லை என்பதை உறுதிபடுத்துகிறேன். இந்த உறவுகள் மிகவும் நெருக்கமாகவும் நட்பாகவும் அப்படியே இருந்தன.'*

இங்கு சில விடயங்களைக் கவனிக்க வேண்டும். முதலாவது லெனினின் சகோதரியின் குறிப்புகள், வாக்குமூலங்களில் ஸ்டாலின் 'மோசமாக நடந்துகொண்டார்' என்று எங்கும் சொல்லவில்லை. அதேவேளை அவரது வாக்குமூலத்திற்கு க்ருப்ஸ்காயா எதுவித எதிர்ப்பும் தெரிவிக்கவில்லை. அதேவேளை லெனினுக்கும் ஸ்டாலினுக்கும் இடையில் முரண்பாடு என்ற கட்டுக்கதை பொய்க்கின்ற இன்னொரு இடமுண்டு.

டிசம்பர் 22, 1922-ல், லெனின் ஃபோட்டிவாவை அழைத்து, 'உத்தியோகபூர்வக் குறிப்பேட்டுக்கு வெளியே' என்று ஒரு இரகசியக் குறிப்பை ஆணையிட்டார், அதில் அவர் ஒரு மனிதாபிமான நடவடிக்கையாக, மார்க்சின் மருமகன் பால் லபார்குவின் உதாரணத்தைக் குறிப்பிட்டு தனக்கு சயனைட் தரும்படி கோரினார். இக் குறிப்பு யாருக்கு எழுதப்பட்டது என்பதை ஃபோட்டிவா குறிப்பிடவில்லை. இக்குறிப்பு ஸ்டாலினுக்குத் தான் எழுதப்பட்டது என்பதை உறுதிசெய்தவர் க்ருப்ஸ்காயா. இதைப்போலவே மீண்டும் மார்ச் 1923-ல் லெனின் ஸ்டாலினிடம் சயனைட் கேட்டார் என்பதையும் அவரே உறுதி செய்கிறார். இது லெனினுக்கும் ஸ்டாலினுக்கும் இடையே உள்ள எந்தப் பிரிவினைக்கும் எதிராக வாதிடுகிறது.

ஸ்டாலின் - க்ருப்ஸ்காயா சம்பவம் மேலும் இருவரது குறிப்புகள் க்ருப்ஸ்காயாவின் கடிதத்தின் உண்மைத்தன்மையை மேலும் கேள்விக்குள்ளாக்குகின்றன.

ஸ்டாலினின் செயலாளராக இருந்து மேற்கு நாடுகளுக்குச் சென்ற போரிஸ் பசானோவ், தனது நினைவுக் குறிப்புகளில் குறித்த சம்பவத்தை நினைவுகூர்கிறார். குறித்த சம்பவம், க்ருப்ஸ்கயா கூறியதுபோலல்லாமல் 1923-ம் ஆண்டு மார்ச் மாதமளவிலேயே நடந்தது என்கிறார்.

க்ருப்ஸ்காயாவிற்கும் ஸ்டாலினுக்கும் இடையிலான இந்த மோதலைப் பற்றியும் மொலோடோவ் பேசுகிறார்: ஸ்டாலின் செயலகத்தின் முடிவை நடைமுறைப்படுத்தினார். மருத்துவர்களால் தடைவிதிக்கப்பட்டது முதல் லெனினைப் பார்க்க ஜினோவியேவ், கமெனேவ் ஆகியோரை அனுமதிக்கவில்லை. ஜினோவியேவ்வும் கமெனேவ்வும் க்ருப்ஸ்காயாவிடம் முறையிட்டனர். ஆத்திரமடைந்த க்ருப்ஸ்காயா இதை ஸ்டாலினிடம் கூறினார். ஸ்டாலின் 'லெனினுக்கு பார்வையாளர்கள் இருக்கக்கூடாது.' என்று பதிலளித்தார். இதற்கு 'ஆனால் லெனினே அதை விரும்புகிறார்!' என்றார் க்ருப்ஸ்காயா. ஸ்டாலின்: 'மத்தியக் குழு ஆணையிட்டால் உங்களையும் அவரைப் பார்க்க அனுமதிக்க மாட்டோம்.' (பார்க்க: Molotov Remembers. lnside Kremlin Politics, 132-133).

இறுதியாக, லெனினின் இறுதி எச்சரிக்கைக் கடிதத்திற்கு வருவோம். குறித்த கடிதம் 1923-ம் ஆண்டு மார்ச் மாதம் 5-ம் திகதி ஸ்டாலினுக்கு எழுதப்பட்டது. இக்கடிதம் எழுதப்பட்டது பற்றிய குறிப்பு செயலாளர் குறிப்பேடுகளில் உள்

ளன. அதன்படி இக்கடிதத்தை எழுதிய எம். வோலோடி சேவா அன்றைய தினம் லெனின் இரண்டு கடிதங்களைத் தனக்குச் சொன்னதாகவும், முதலாவது ஸ்ரொஸ்கிக்கு எழு தப்பட்டதாகவும் இரண்டாவது ஸ்டாலினுக்கு எழுதப்பட்டதாக வும் குறித்துள்ளார். ஆனால் இக்கடிதம் அனுப்பப்பட்டது குறித்த குறிப்புகள் இல்லை. இது உண்மையில் இப்படி யொரு கடிதத்தை லெனின் எழுதினாரா என்ற வினாவை எழுப்புகின்றன.

இக்காலகட்டத்தில் ஸ்டாலினுக்கு எதிரான ஒரு கூட்டுச்சதி அரங்கேறிக்கொண்டிருப்பதை இதற்கு முந்தைய நிகழ்வுகள் தெளிவாகக் காட்டுகின்றன. இந்தப் பின்புலத்திலேயே இக்க டிதத்தையும் நோக்க வேண்டும். லெனினின் செயலகத்தில் இருந்தோர் இந்தச் சதிக்குப் பங்காளிகளாக இருந்தனர் என் பதும் இதில் க்ருப்ஸ்கயாவாவின் பாத்திரமும் தவிர்க்க முடி யாதவை என்பதை இக்கட்டுரையின் முற்பகுதியில் சுட்டப் பட்ட நிகழ்வுகள் காட்டுகின்றன. அதேவேளை 2023-ல் நடை பெற்ற ஒரு நிகழ்வை க்ருப்ஸ்கயா 1922 டிசம்பருக்கு முன்ன கர்த்தியுள்ளார் என்பதும் தெளிவு. இதேவேளை இக்கடி தத்தை நியாயப்படுத்தி 1923 மார்ச் 7-ம் திகதி ஸ்டாலின் லெனினுக்குத் தனிப்பட்ட முறையில் எழுதிய கடிதம் முன் வைக்கப்படுகிறது. அதன்படி 5 வாரங்களுக்கு முன் க்ருப்ஸ் கயாவுடன் உரையாடியதாக அவர் குறித்திருக்கிறார். இதன் படி குறித்த சம்பவம் ஜனவரி இறுதியில் நடைபெற்றிருக்க வேண்டும்.

ஸ்டாலின் எழுதிய கடிதத்தில் ஏராளமான குழப்பங்கள் உள் ளன. இப்போது பொதுவெளியில் உள்ள கடிதம் தோழர் லெனினுக்கு ஸ்டாலினிடமிருந்து, 'தனிப்பட்ட ரீதியில்' என்று தலைப்பிடப்பட்டுள்ளது. ஆனால் உண்மையான கடிதத்தில் அவ்வாறான தலைப்பு இல்லை என சகரோவ் சொல்கிறார். வோலோடிசேவா இக்கடிதத்தை ஸ்டாலின் சொல்ல தான் எழுதியதாகச் சொல்கிறார். கடிதத்தின் பிரதி வோலோடிசே வாவின் கையெழுத்திலேயே உள்ளது. ஆனால் இதில் ஸ்டா லின் கையொப்பமிடவில்லை.

காப்பக ஆதாரங்களை மேற்கோள் காட்டும் சகரோவின் கூற் றுப்படி, லெனினின் இறுதிக் கடிதமோ அல்லது ஸ்டாலினின் பதிலோ லெனினின் செயலகத்தில் அல்லது லெனினின் காப் பகத்திற்குள் வந்ததற்கோ அல்லது இங்கிருந்து அனுப்பப் பட்டதற்கோ எந்தவொரு பதிவும் இல்லை. செயலகத்திற்கு வருகின்ற மற்றும் செயலகத்தில் இருந்து அனுப்பப்படுகின்ற கடிதங்கள் அனைத்தும் பதிவுப் புத்தகங்களில் இடம்பெற் றுள்ளன. வி.ஐ. லெனின் மூலம் வெளிச் செல்லும் அஞ்ச லைப் பதிவுசெய்யும் குறிப்புகள் என்ற பதிவுப் புத்தகம் இன் னும் உள்ளது. அதில் செப்டம்பர் 7, 1920 முதல் ஜனவரி 16, 1924 வரை அனுப்பப்பட்ட கடிதங்கள் பதிவு செய்யப்பட் டுள்ளன. அதில் 1923-ம் ஆண்டு மார்ச் 5 அல்லது 6-ம் திக திகளில் லெனின் ஸ்டாலினுக்கு அனுப்பிய கடிதம் குறித்த எந்தவொரு தகவலும் இல்லை. அதேவேளை செயலகத்தில் இருந்து லெனினின் தனிப்பட்ட காப்பகத்திற்கு அனுப்பப் பட்ட ஆவணங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதன் நான்காவது தொகுதியானது டிசம்பர் 19, 1922 முதல் ஏப்ரல் 16, 1923 வரை காப்பகத்திற்கு வந்த கடிதங்களைப் பற்றி யது. இங்கேயும் லெனின் ஸ்டாலினுக்கு எழுதிய கடிதமோ அல்லது அதற்கு ஸ்டாலினின் பதிலோ பதிவு செய்யப்பட்டி ருப்பதற்கான எந்தப் பதிவும் இல்லை.

லெனின் காப்பகத்தில் லெனினின் கடிதமும் ஸ்டாலினின் பதிலும் இருப்பதையும், அதேவேளை பதிவுகள் கடிதம் அனுப்பப்பட்டதற்கான எந்தவொரு பதிவோ பதில் பெறப்பட் டமைக்கான பதிவோ இல்லாமையும் எவ்வாறு விளக்குவது? மார்ச் 1923-க்குப் பிறகு, பதிவுப் புத்தகங்கள் பயன்பாட்டிலி ருந்து அகற்றப்பட்ட பிறகு, குறித்த கடிதங்கள் காப்பகத்தில் இடப்பட்டன என்றே கொள்ள வேண்டியுள்ளது.

இந்த முரண்பாடான விவரங்கள் அனைத்தும் லெனின் குறித்த இறுதி எச்சரிக்கைக் கடிதத்தை ஆணையிடவில்லை என்று கூறுகின்றன. இன்று நம்மிடம் உள்ள ஆதாரங்களின் அடிப்படையில், க்ருப்ஸ்கயா இந்தக் கடிதத்தை லெனினின் செயலாளர்களின் உதவியுடன் வரைந்திருக்கலாம். ஸ்டாலினு டனான உறவை முறித்துக் கொள்ள நேரிடும் என்று எழுதிய லெனின், அதற்கான பதிலை ஸ்டாலினிடம் இருந்து பெறாம லேயே, எச்சரிக்கை விடுத்த பன்னிரண்டு நாட்களுக்குப் பிறகு தனது வாழ்க்கையை முடிக்க ஸ்டாலினிடம் விஷம் கேட்டார். இது உணர்த்துகின்ற செய்தி லெனின் குறித்த இறுதி எச்சரிக்கைக் கடிதத்தை எழுதவில்லை என்பதே.

## நிறைவுக் குறிப்புகள்:

லெனின் எழுதாத ஆவணங்களை அவருடையதாக்கி ஸ்டா லின் மீது அவதூறு பரப்புவது இன்றும் தொடர்கிறது. இதில் முக்கியமான பங்கு ட்ரொஸ்கியவாதிகளுக்கு உண்டு. 1925 யூலை மாதம் 1-ம் திகதி 'ஈஸ்ட்மென் புத்தகம் தொடர்பான கடிதம்' என்று தலைப்பிட்ட கட்டுரையில் லெனினின் உயில் என்றவொன்று இல்லை என்று ட்ரொஸ்கி உறுதிசெய்கிறார். ஆனால் 1932 டிசம்பரில் 'மறைக்கப்பட்ட லெனினின் உயில் தொடர்பில்' என்ற நூலை வெளியிடுகிறார். இந்த நூலில் உள்ள தவறுகள், ட்ரொஸ்கியின் பொய்களைப் பலர் அம்ப லப்படுத்தியுள்ளனர்.

இதைத்தொடர்ந்து 1956-ல் க்ருஷ்ச்சேவ்வின் ஸ்டாலின் மீதான அவதூறுகள் இந்த உயில் தொடர்பான கதையாடலுக்கு புதிய உத்வேகத்தைக் கொடுத்தது. 1968-ல் மோஸே லெவின் 'லெனினின் இறுதிப் போராட்டம்' என்ற நூலை எழு தினார். அவர் முக்கியமான ஆவணங்கள் எதையும் பார்க்கா மல், ட்ரொஸ்கியின் கதையாடலை அப்படியே ஏற்றுக் கொண்டார். லெனினின் நூலில் உள்ள பிழைகளை விலாவா ரியாக ஃபர் தனது நூலில் சுட்டிக்காட்டியுள்ளார்.

சகரோவ்வின் நூலில் உள்ள இன்னொரு மிகவும் முக்கிய மாக குறிப்பு கவனத்திற்குரியது. 'பணியில் உள்ள செயலா ளர்களின் நாட்குறிப்பு' அல்லது செயலர்கள் இதழ் லெனி னின் உயில் மற்றும் அவரது அரசியல் மனநிலை மற்றும் அவரது சுறுசுறுப்பான வாழ்க்கையின் கடைசிக் காலத்தில் அவர் ஆற்றிய கருத்துக்கள் பற்றிய தகவல்களின் மிக முக் கியமான ஆதாரங்களில் ஒன்றாகப் பரவலாக நம்பப்படுகி றது. இவை லெனினின் படைப்புகளின் பகுதியாக வெளியி டப்பட்டும் உள்ளன. இருப்பினும், சகரோவ் இவற்றின் காப் பக மூலங்களை அணுகியுள்ளார். தற்போது கிடைத்துள்ள சான்றுகள், குறித்த இந்த நாட்குறிப்புகளின் பிந்தைய பகு திகள் ஒரு கட்டுக்கதை என்று வாதிடுகிறார். ஆதாரங்களி

னூடு அவர் காட்டுவது யாதெனில் இப்பொய்கள், கட்டுக்க தைகளில் சில 1920-களில் செய்யப்பட்டிருக்கலாம். மேலும் சில 1956-ல் நிகிதா க்ருஷ்சேவின் ‘இரகசிய பேச்சு’-க்குப் பிறகு செய்யப்பட்டிருக்கலாம். இதை மூல ஆவணங்கள் என்று உறுதியாகக் கூறுகின்றன என்கிறார்.

இதேவேளை செயலாளர்களின் குறிப்புக்கள் வெளியிடப்பட்ட அதேவேளை மருத்துவக் குறிப்புகள் வெளியிடப்படவில்லை. ஏனெனில் மருத்துவக் குறிப்புக்கள் பல இடங்களில் செயலா ளர்களின் குறிப்புகளோடு முரண்பட்டன. அவை இவர்கள் கட்டமைக்க விரும்பிய கதையாடலுக்கு எதிர்மாறானதாக இருந்தன. இன்றுவரை இந்த மருத்துவர்களின் குறிப்புகள் பொதுவெளியில் இல்லை. எங்கும் பதிப்பிக்கப்படவுமில்லை. லெனினின் பணி, அவருக்குப் பக்கவாதம் ஏற்பட்ட டிசம்பர் 18, 1922-க்குப் பிறகு அவரது உடல்நிலை மற்றும் பணிபுரி யும் திறன் குறித்து நிகழ்நேரத்தில் பதிவுசெய்யப்பட்ட முறை யான தகவல்களை வழங்கும் ஒரே ஆதாரமாக ‘கடமை மருத்துவர்களின் நாட்குறிப்பு’ மட்டுமே உள்ளது. மருத்துவர் களின் பல குறிப்புகள், செயலாளர்களின் குறிப்புக்களில் அதன் காலவரிசைகளில் நாம் காணும் லெனினின் பணியின் தன்மையைச் சவாலுக்குள்ளாக்குகிறது. நாம் ஏலவே பார்த்த துபோல மார்ச் 5 1923-ல் கட்டளையிடப்பட்டதாகக் கூறப்ப டும் முக்கியமான ஆவணங்களில் லெனினின் பங்களிப்பை மருத்துவர்கள் கிட்டத்தட்ட மறுக்கின்றனர். செயலாளர்களின் குறிப்புகளையும் மருத்துவர்களின் குறிப்புக்களையும் ஒப்பி டும் சகரோவ் குறிப்புகள் எழுதப்பட்ட டிசம்பர் 25 தொடக் கம் மார்ச் 3 வரையான 73 நாட்களில் எழுதப்பட்ட குறிப்பு களை ஒப்பிடுகிறார். இவற்றில் வெறும் 13 நாட்களில் மட் டுமே குறிப்புக்கள் பொருந்தி வருகின்றன. 26 நாட்களில் குறிப்புக்கள் முழுமையாக வேறானவையாக இருக்கின்றன. மேலதிகமாக ஜனவரி 24, 25, 26 மற்றும் பெப்ரவரி 9,10,12 ஆகிய நாட்களில் லெனின் தனது செயலாளர்களுடன் பணி யாற்றவில்லை என்று மருத்துவக் குறிப்புகள் குறிக்கின்றன. ஆனால் இந்நாட்களில் லெனினுடன் பணியாற்றி உள்ளதாக செயலாளர்கள் குறிப்பெழுதி உள்ளனர்.

நிறைவாக, விடுவிக்க வேண்டிய புதிர் யாதெனில், இந்த உயில் என்ற சதியாட்டத்தில் லெனினின் துணைவியாரான க்ருப்ஸ்காயா ஏன் தலைமைப் பாத்திரம் ஏற்றார். ஸ்டாலி னுக்கு எதிராக க்ருப்ஸ்கயா பொய்யான ஆவணங்களை உருவாக்கி, அதற்கு ‘லெனினின் உயில்’ என்று பெயர் சூட்டி, ஸ்டாலினுக்கு எதிராக ஒருவிதச் சதியை நடத்திக் கொண்டிருந்தார் என்பதற்குத் தற்போது ஏராளமான சான்று கள் உள்ளன. லெனினின் செயலகத்திலேயே ‘தொழிலாளர் களை மறுசீரமைப்பதும் விவசாயிகளை மேற்பார்வை செய் வது பற்றி’ என்ற கட்டுரையின் பொய்மைப்படுத்தல் நிகழ்ந் தது. லெனினின் செயலாளர்கள் தாங்களாகவே இதைச் செய் யத் துணிந்திருக்க மாட்டார்கள். க்ருப்ஸ்கயா அதில் ஒரு பங்காளியாக இருக்க வேண்டும். அது கிட்டத்தட்ட நிச்சய மாக இருந்தது. இது க்ருப்ஸ்கயாவால் அல்லது அவரது வழிகாட்டுதலின்படி செய்யப்பட்டது.

க்ருப்ஸ்கயா ஸ்டாலினுடனான தனது மோதல் சம்பவத்தின் தினத்தை முற்தேதியிட்டார். இச்சம்பவம் டிசம்பர் 22, 1922 அன்று அல்லது அதற்கு அருகில் நடந்ததாக அவரைத் தவிர வேறு யாரும் கூறவில்லை. மற்ற எல்லாருடைய சாட்சி களும் குறித்த திகதிக்கு சுமார் ஐந்து வாரங்களுக்குப் பிறகே நடந்தது என்று சொல்கின்றன. டிசம்பர் 23, 1922 திக தியிட்ட கமெனெவ்வுக்கு எழுதிய கடிதமானது 1923-ல் மென் ஷிவிக் பத்திரிகையான Sotsialisticheskii Vestnik-ற்குக் கசிய விடப்பட்டு வெளியிடப்பட்டது. க்ருப்ஸ்கயா இந்தக் கடி தத்தை வெளிநாட்டில் உள்ள மென்ஷிவிக்குகளுக்குக் கடத் தியிருக்கலாம் அல்லது அவ்வாறு செய்யக்கூடிய ஒருவருக் குக் கொடுத்திருக்கலாம். இக்கடிதம் வெளியாவது ஸ்டாலி னின் எதிராளிகளுக்கே வாய்ப்பானது. அவ்வகையில் 1920- களின் முதல் பாதியில் தன்னை ஆதரித்த, ட்ரொட்ஸ்கி முன் னெடுத்த எதிர்ப்புக் கூட்டுக்கு வலுச்சேர்க்க இதைச் செய் தார். ஆனால் க்ருப்ஸ்கயா 1925-ல் ‘Sunday Worker’ பத்திரி கைக்கு எழுதிய கடிதத்தில் லெனின் உயில் என்ற ஒன்று இல்லை என்று மறுத்திருந்தார். ஆனால் 1926-ல் மீண்டும் லெனினின் உயில் என்ற ஒன்று குறித்துப் பேசினார்.

ஸ்டாலின் லெனினின் உயில் என்ற சதியின் பின்னணியில் க்ருப்ஸ்கயா இருப்பதாக சந்தேகித்தார். க்ருப்ஸ்கயாவுக்கும் ட்ரொஸ்கியையும் இணைந்தே இந்தத் திட்டத்தை முன்னெ டுக்கிறார்கள் என்று ஊகித்தார். உண்மையில் லெனின் ‘உயில்’ என்று சொல்லப்படுகின்ற எந்த ஆவணத்திலும் கை- யெழுத்திடவில்லை, ஸ்டாலினுக்கு எதிரான நோக்குநிலை கொண்ட எந்த ஆவணங்களையும் லெனின் வாய்மொழியா கக் கூட ஒப்புக்கொள்ளவில்லை என்பது இப்போது தெளிவா கப் புலனாகிறது.

ஸ்டாலின் ஆவணங்களின் மூலத்தைத் தேடியிருந்தால் குறித்த கடிதங்களின் மூலங்கள் இல்லை என்பதையும், கொடுக்கப்பட்ட நகல்கள் எதிலும் லெனினின் கையெழுத்து இல்லை என்பதையும் அவர் கண்டுபிடித்திருப்பார். ஆனால் லெனினின் செயலகத்தில் என்ன நடக்கிறது என்பதை ஸ்டா லின் அறியாமல் இருந்திருக்க மாட்டார். தனது கணவர் மீதான விரோதப் போக்கைக் க்ருப்ஸ்கயா கொண்டிருப்பதை யும், ட்ரொட்ஸ்கியின் மீதான நட்பு மனப்பான்மையையும் உணர்ந்திருப்பார். அவர் அதை ஸ்டாலினிடம் தெரிவித்தி ருக்க வேண்டும். இதனாலேயே உயிலில் உள்ள தனக்கெதி ரான கருத்துக்களுக்குப் பின்னால் க்ருப்ஸ்கயா இருப்பதாக ஸ்டாலின் சரியாகச் சந்தேகித்தார். இன்று எங்களிடம் அதற் குப் போதிய ஆதாரம் உள்ளது.

லெனின் ஆவணக் காப்பகத்தில் பேராசிரியர் வலன்டின் சக ரோவ் மேற்கொண்ட ஆய்வு வரலாறு குறித்தும் எமக்குச் சொல்லப்பட்டுள்ளவை குறித்த முக்கிய பாடமொன்றைத் தரு கிறது. க்ருஷ்சேவின் நாளிலிருந்து சோவியத் வரலாறு, ஸ்டா லின் காலத்தின் பல முக்கிய நிகழ்வுகள் பற்றிய பொய்க ளையும் கட்டுக்கதைகளையும் அடிப்படையாகக் கொண்டது என்பதை அவரது பணி உறுதிப்படுத்துகிறது. ‘லெனினின் உயில்’ என்ற பொய் வரலாறு குறித்தும் வரலாற்றுவரைவி யல் குறித்தும் முக்கியமான பல கேள்விகளை எழுப்புகிறது. ஆழமான, பொறுமையான, அறிவியல்பூர்வமான ஆய்வுக ளின் தேவையையும் எதையும் கேள்விக்குட்படுத்த வேண்டிய தன் அவசியத்தையும் இந்த ஆய்வுகள் காட்டி நிற்கின்றன.



meenilankco@thaiveedu.com

# வட்டார வழக்கிலுள்ள பழமொழிகள் சம்மாந்துறை

– எம்.ஐ.எம். சாக்கீர்

சொற்களுக்கு அடுத்தாக வட்டாரவழக்கில் இடம்பெறும் பிர தானமான கூறாக பழமொழிகளையும் மரபுத் தெடர்களையும் குறிப்பிடலாம். சம்மாந்துறை மக்கள் மத்தியில் அவர்களின் வாழ்வியலில் தவிர்க்க முடியாத நாட்டாரியல் பண்பாட்டுக் கூறுகளிலொன்றாக பழமொழிகள் காணப்படுகின்றன. முஸ் லிம் மக்களிடையே வழக்கிலிருக்கும் பழமொழிகளில் எளிய சொற்கள். வழக்கிழந்த சொற்கள், குறியீட்டுச்சொற்கள், பிற மொழிச்சொற்கள் என மண்வளச்சொற்களின் பரந்த வீச்சி னைக் கண்டு கொள்ளலாம். இவை தமிழிற்கும் கிழக்கி லங்கை முஸ்லிம் மக்களிற்கும் இடையே வேரோடி விழைந்த உறவுகளை தூலாம்பரமாகக் காட்டுகின்றன.

## பழமொழிகள்:

*‘நுண்மையும் சுருக்கமும் ஒளியும் உடைமையும்*
*எண்மையும் என்றிவை விளங்கத் தோன்றிக் குறித்த பொருளை*
*முடித்தற்கு வரூஉம் ஏது முதலிய முதுமொழி யென்ப’*

- தொல்.பொருள்.செய்:177

என்று தொல்காப்பியபாவில் பழமொழியானது கூர்மையோடு திட்பநுட்பம் உடையதாயும், சுருங்கச் சொல்லிக் பொருளை விளங்கவைக்க கூடியதாயும் எளிமையானதாகவும், குறித்த பொருள் ஒன்றினை வரையறுத்துக் கூறுவதாகவும் அமைதல் வேண்டும் என்கிறார். அதாவது தமிழ் இணைய பல்கலைக் கழகத்தின் வரைவிலக்கணப்படி

‘ஏதேனும் ஒரு சமூகச் சூழலில் ஒரு குறிப்பிட்ட கருத்தை உணர்த்துவதற்குத் துணையாக வரக்கூடிய (அல்லது பயன் படுத்தக் கூடிய) ஆழ்ந்த அறிவினைச் சுருக்கமாகவும் தெளி வாகவும் எளிமையாகவும் கூறும் பழமையான மொழி பழ மொழி எனலாம்.’

## பழமொழியின் பண்புகள்:

பழமொழி தொடர்பான பல்வேறு வரைவிலக்கணங்கள் காணப்பட்டாலும் ஆர்.சி. ட்ரென்ச் (R.C. Trench) என்பவரின் கருத்துகள் தொல்காப்பியரின் கருத்துகளை ஒத்துள்ளன என் றும், பழமொழிகளின் இயல்புகள் என்று கூறும் அளவிற்கு அமைந்துள்ளன என்றும் தே. லூர்து (1988 : 5) குறிப்பிடு கின்றார். அக்கருத்துகள் வருமாறு:

- பழமொழி ஒரே மூச்சில் சொல்லக் கூடியது.
- சுருக்கச் சொல்வது.
- சிறந்ததும் செறிவானதுமான பொருளுடையது
- காரசாரமாக அல்லது கூர்மையுடன் எடுத்துரைப்பது
- பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டு அன்றாட வாழ்க்கையில் எல்லோராலும் ஒப்புக்கொள்ளப்பட்டு பயன்படுவது அல் லது பயன்பட்டது
- பழமொழிகள் வாய்மொழி இலக்கிய வழக்காறுகளில் நிலைத்த தொடர்புடையனவையாம். (Fixed phrasegenre)
- பழமொழி உரைநடை சார்ந்தது. எனினும் கவிதைக்குரிய எதுகை, மோனை, முரண்தொடை போன்ற ஒலிநயங்க ளைப் பழமொழியிலும் காணலாம்.
- பழமொழி நேர் பொருளும் உணர்த்தும். கருதிய பொருளை மறைத்து ஒன்று சொல்லி மற்றொன்றை விளக் குவனவாக அமையும்.
- அது வழங்கும் இயற்கைச் சூழலைப் பொருத்தே பழமொ ழியாகும்.
- உருவகமாகவும் அமையும். உவமைப் பண்பு கொண்ட தாகவும் அமையும்
- பழமொழி தற்சார்பற்றது
- வாழ்க்கை அனுபவத்திலிருந்து சிக்கலைத் தீர்க்க உதவு வது
- சில கதைகளின் சுருக்கப் பொழிப்பாகவும் காணப்படும்

பழமொழியின் இயல்புகளாக மேலே கூறப்பட்ட கருத்துகள் பழமொழிகளைப் புரிந்துகொள்ள, பிற இலக்கிய வகைகளி லிருந்து வேறு பிரித்து அறிய உதவும் என்பதில் ஐய மில்லை.

## சம்மாந்துறைப் பிராந்திய பழமொழிகளின் இயல்புகள்:

- அறங்கூறுபவையாக காணப்படும்
- அனுபவச்சாறுகளாக காணப்படும்.
- சிலமரபுக்கதைகளின் சம்பவங்களை நினைவூட்டுபவை யாக காணப்படும்.
- விவசாய பிண்ணணியுடன் கூடியவை
- பிரதேச வழக்குச் சொற்கள் கலந்து காணப்படும்
- வாய்மொழியாகப் பரவுதல்,
- தலைமுறை தலைமுறையாக கடத்தப்படுதல்
- ஒரே சமயத்தில் மாறிய வடிவிலும், நிலைத்த வடிவிலும் வழங்கப்படல்
- இரட்டை அர்த்தத்திலும், நேரடி அர்த்தத்திலும் வழங்கு தல்

இங்கு பிரபல்யமான வழக்கமான பழமொழிகள் தவிர்த்து சம் மாந்துறையில் வழக்கில் இருந்ததும் வழக்கில் உள்ளதுமான தேர்ந்தெடுக்கப்பட்ட 500 பழமொழிகள் இணைக்கப்பட்டுள் ளன. இப்பழமொழிகள் இடப்பெயர்களைப் போன்று பழங் கால வார்த்தைகளின் தொல் எச்சங்களாக இன்றும் காணப்ப டுகின்றன.

- அகத்தி ஆயிரங்காய் காச்சாலும் புறத்தி புறத்திதான்
- அசலூரு அழகிய விட உள்ளூரு மொடத்தி மேல்
- அசில் கெட்ட நாய்க்கு மெனக்கெட்ட வேலை
- அடி நொச்சி நுனி ஆமணக்கு
- அடி நாக்குல நஞ்சு நுனி நாக்குல தேன்
- அடியால கொல்லாதவனை நடையால கொல்லுதல்
- அண்ட ஊட்டோட அறக்க உறவாகோணும்
- அணிலுட்டு மாம்பழம் பிக்கிற சீலம்
- அந்துழந்த மாங்காய்க்கி அறுபதுபேர் காவலாம்.
- அப்பமெண்டால் புட்டுக்காட்ட வேணுமா
- அம்புட்டா கும்புட்டாலும் விடமாட்டான்
- அம்மாமுண்டி ஆள்விழுங்கி
- அரண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்
- அரண கடிச்சா மரணம், கரணம் தப்பினா மரணம்,
- அருமையற்ற வீட்டில் எருமையும் குடி இருக்காது
- அலியார்ர சிர்ர அல்லாஹ்தான் அறிவான்
- அவண்ட அடியில மிரிச்சாக் கண்கெடும்
- அளவுக்கு மிஞ்சினா அமிர்தமும் நஞ்சு,
- அவலை நினைச்சிக்கி உரலை இடிக்குறான்
- அறக்கூருமை மழுமொட்டு
- அறக்கூழ் மழுமட்டை
- ஆகுங்காய் பிஞ்சிலேயே தெரியும்
- ஆகுற புள்ளைக்கு அரைச்சல்லி போதும்
- ஆசைக்கு ரோசமில்லை
- ஆசை பெருகினா அலைச்சலும் பெருகும்
- ஆடின காலும் பாடின வாயும் நிக்காது
- ஆடு கொழுத்தால் இடையனுக்கு லாபம்
- ஆடு மாடு இல்லாதவன் அட மழைக்கு ராசா,
- ஆலிமுக்குத் தெரியாதா அரி உடாம அப்பம்சுட
- ஆள் ஆளக்குத்தும் பகடமணி பத்துப் பேர குத்தும்
- ஆளறிந்து பொல்லைப் பேர்டு
- ஆளில்லாத ஊடு பாழ்
- ஆறில்லாத ஊரும்பாழ், ஆலிமில்லாத ஊரும் பாழ்
- ஆளோடச் சோளம் தேரோடத் தென்னை
- ஆறுமாதச் சோறு முடிஞ்சாத் தெரியும் ஐயாட
- ஆன கேட்ட வாயால ஆட்டுக்குட்டி கேக்கிறயா?
- ஆன செத்தாலும் ஆயிரம் பொன் பெறும்
- ஆன திண்ட வாய்க்கு ஆட்டுக்குட்டி காணுமா?
- ஆன படுத்தாலும் குதிர மட்டம்தான்
- ஆனயைக் காட்டி சுளகால மறைப்பார்
- ஆனக்கி ஓடாத கால் அடுப்படிக்கா ஓடப்போகுது
- இட்ட உறவு எட்டு நாளைக்கி நக்கின உறவு நாலு
- இருந்தவனுக்கு இடத்தூரம் நடந்தவனுக்கு காதவழி
- இல்லாதாது பிறவாது அள்ளாதது குறையாது
- இலுப்பையில ஏறினிச்சாம் முடப்பேய்
- இறக்குற காலம் வந்தா ஈசலுக்கு சிறகு பிறக்குமாம்
- இறைச்ச கிணறு ஊறும், இறையாத கிணறு நாறும்
- இனம் இனத்தைச் சேரும்
- ஈக்கிமாத்துகட்டுக்கு பட்டுக்குஞ்சமா
- ஈக்கிமாத்துக்கட்டுக்கு முத்துமாலையாம் பேரு
- ஈயத்தைக் கண்டு இழிச்சதாம் பித்தளை
- ஈயாத உறவு இருந்தென்ன இறந்தென்ன
- ஈயாதவன்டபணம் நோய்க்கும் பேய்க்கும்
- ஈரை நினைக்கிறான் பேனை மறக்கிறான்
- ஈழைய உட்டுப்பொட்டு இருமலையா வாங்குற
- உசர உசர பறந்தாலும் ஊர்க்குருவி பருந்தாகுமா
- உட்ட வட்டைக்கி அதிகாரியாம்
- உண்டவன் உரம் செய்வான்
- உதட்டுல உறவு நெஞ்சில பகை
- உப்புத்திண்டவன் தண்ணிகுடிக்கத்தானே வேணும்
- உமலுக்க கட்டின பூன மாதிரி
- உள்ளத்தில கைப்பு உதட்டுல இனிப்பு
- உள்ளத சொன்னவன் ஊருக்குப் பொல்லாதவன்
- உள்ளது போகாது இல்லாதது வராது
- உள்ளனும் கள்ளனும் திண்டு திருயுற மாதிரி
- ஊண்டக் கொடுத்த பொல்லு உச்சியை உடைக்குது
- ஊத்த வாயன நம்பி நாற வாயன் செத்தானாம்
- ஊரான்ட பல்ல விட நம்மட மொரசு திறம்
- ஊரு ஓடக்கள ஒத்து ஓடணும்
- ஊருட்டுப் போனா ஆரூட்டு நாய்
- ஊருப்பஞ்சம் நாயில தெரியுது
- ஊரு ரெண்டுபட்டால் கூத்தாடிக்குக் கொண்டாட்டம்
- எட்டாப் பழத்துக்கு கொட்டாவி உடாத
- எட்டி பழுத்தென்ன, ஈயாதார் வாழ்ந்தென்ன?
- எடுக்கிறது பிச்சை ஏறுகிறது பல்லக்கு
- எண்ணிச்செய் கச்சவடம் எண்ணாமச்செய் வெள்ளாம
- எணல்லா அருமை வெயில்ல தெரியும்
- எரணம் கிடந்தா முடயாலயும் ஏலா
- எழுதாத கணக்கு கழுதைக்கணக்கு
- எலும்பில்லாத நாக்கு எல்லாத்தையும் பேசும்

- எள்ளுக்கு ஏழு உழவு கொள்ளுக்கு ஓர் உழவு
- ஐயோண்டாலும் பாவங்கிடைக்கும்
- ஒண்டிக்க ஆசை கேட்டுக்க வெக்கம்
- ஒரு ஊருக்கு ஒரு வழியா
- ஒரு ஊருப்பேச்சு மறு ஊருல ஏச்சு
- ஒரு குட்டையில் ஊறின மட்டைகள்
- ஒரு கொடம் பாலுக்கு ஒரு துளி விசம் போதும்
- ஒரு நாள் கூத்துக்கு மீசையச் சிரைக்கவா
- ஓட்டச்சட்டி எண்டாலும் கொளக்கட்ட வெந்தாச் சரி
- ஓட்டப்பானைக்க ஓணான் புகுந்த மாதிரி
- ஓடாவி வீடு ஒடஞ்ச வீடு
- ஓணான விட்டு வெத்திலை ஆயலாமா
- கக்கினா கண்கெடும் விழுங்கினா வயிறுவெடிக்கும்
- கட்டிக்கி வரச்சென்னா வெட்டிக்கி வருவான்
- கட்டுக்குக் கட்டு மாறிக்கட்டோணும்
- கட்டுப்பட்டாலும் கவரிமான் மயிரால கட்டுப்பட
- கட்டுப் பொலிக்க எலிபுகுந்த மாதிரி
- கட்டெறும்பு கட்டையோடதான் இரிக்கோணும்
- கடுகைப் பார்த்தவன் மிளக உர்ரயாம்
- கடுங்காத்து மழையக் கெடுக்கும்
- கண் கண்டத கை செய்யும்
- கண் குருடுண்ணடாலும் நித்திரைக்கு என்ன குறை
- கண்பொண்டாட்டி வளத்த கழிசற
- கண்டதச் செல்லாத கக்கட்டிய காட்டாத
- கண்டது பாம்பு கடிச்சது கருக்கு
- கண்ட பாவனையில கொண்டை முடியுற மாதிரி
- கண்டார வாலட்டி
- கண்டா சாய்பு காணாட்டி லெப்பை
- கண்டா ஒரு கதை காணாட்டி இன்னொரு கதை
- கண்ணடாச் சாயுபு காணாட்டி பாவா
- கத்த வித்தைய காச்சியா குடிக்கிற
- கத்தரிக்காய் முத்தினா சந்தைக்க வரும்தானே
- கத்தவனுக்கிட்டயா வித்தையக் காட்டுற
- கத்தி எடுத்தவனுக்கு கத்தியாலதான் சாவு
- கள்ளிக்கு கண் கழுத்துல
- கறந்த பால் மடியில ஏறாது
- கறையான் புத்துக் கட்ட பாம்பு குடியிருக்குது
- கனவுல கண்ட பணம் செலவுக்கு உதவுமா
- கனிஞ்ச பழம்தானே உழும்
- காகமும் கத்துறதான் ஏத்தும் இறக்கிறதான்
- காத அறுத்தவன் கண்ணக்குத்தினாலும் குத்துவான்
- காலச்சுத்தின பாம்பு கடிக்காம விடாது
- குட்டி நாய் வந்தா பட்டி நாய் போயிரும்
- குடலைல திண்ட பண்டி குண்டு பட்டாலும் மாறாது
- குடிக்கிறது மூத்திரம் கொப்புளிக்கிறது பன்னீரு
- குண்டும் மருந்தும் இல்லாம குருவி சுடலாமா
- குண்டி காஞ்சா குதிரை வைக்கல் திங்கும்
- குரு இல்லாத வித்தை பாழ்
- குருக்கள் செஞ்சாக் குத்தமில்லை
- குருடனுக்குப் பால் கொக்குப் போலயாம்
- குல்லாவப் போட்டுக்கு அல்லாஹ்வ ஏமாத்தேலா
- குலைக்கிற நாய் கடிக்காது
- குறத்தி புள்ளப் பெத்தா குறவன் காயம் தின்பான்
- குறைவேலைய குருவுக்கிட்டயும் காட்டிராத
- கெட்டிக்காரன் புழுகு எட்டுநாளில் தெரியும்
- கெடுமதி கண்ணுக்குத்தெரியாது
- கெழட்டாசை மோட்டப்பிரிக்குமாம்
- கேப்பார் புத்தியும் கட்டுச்சோறும் நிலைக்கிறல்ல
- கொத்தால கொடுத்து மரைக்கால்ல வாங்குறது
- கொமரு முத்தி கொரங்காப் போச்சு
- கைக்கு எட்டினது வாய்க்கு எட்டவில்லை
- கொஞ்ச அரிசிக்க கொதி கூட
- கொண்டவன் இருக்க கண்டவன் ஏன் கிளம்போணும்
- சட்டியோட பெய்த்தாம் பெலால் நாத்தம்
- சம்மான்காரணுக்கு பொண்வாய்ச்ச மாதிரி
- சண்டியனுக்கு சாவு சந்திலதான்
- சாணையோட வந்தது சந்தக்கோட போகும்
- சாளவாய் நாம்பன் வாழிபாயுதாம்
- சித்திரத்தின் கொக்கே ரத்தினத்தைக் கக்கு
- சிலுசிலுப்புத்தான் பலகாரமில்லை
- சிறுகச் சிறுக திண்டா மலைய விழுங்கலாம்
- சிறுக விதைச்சவன் சிறுக அறுப்பான்
- சுட்டமண்ணும் பச்சமண்ணும் ஒட்டுமா,
- சுண்டங்காய் காப்பணம் சுமைகூலி முக்காப்பணம்
- செகிட்டலியன்மாதிரி
- செட்டியார் வாழ்வு செத்தால் தெரியும்
- சொற்கேளாப் பிள்ளை குலத்துக்கீனம்
- சொறியக்குடுத்த நாம்பனப் போல
- சோகைக்கி புளி சொர்க்கத்துக் கனியாம்
- சோதையன் குடுமி சும்மாடு ஆகுமா
- தட்டானும் செட்டியும் போல
- தடி எடுத்தவனெல்லாம் தண்டல்காரன்
- தவிட்டுக்கு வந்த கை தங்கத்துக்கும் வரும்
- தன் முதுகு தனக்குத் தெரியாது
- தாய் பொறுக்காதத ஊர் பொறுக்குமா
- தாயப்பழிச்சாலும் தண்ணியப்பழிக்காத
- தானாடாட்டியும் தசையாடும்
- தானே தேடியது நோயே பலன்
- திம்பார்க்குத் தேன் எடுத்துக் கொடுத்தாப் போல
- திண்ட ஓரட்டிக்க ஓதின பாத்திஹா
- தீட்டின மரத்துலயே கத்தி பாயுதாம்
- துட்டனக் கண்டால் தூர விலகு
- தும்மல்ல நிண்டாலும் தூறல்ல நிக்கப்போடா.
- துள்ளுறமாடு பொதி சுமக்கும்
- தெத்ததப்பல்லன் தேசத்தை ஆளுவான்
- தென்னைய தெரிய நடு, வாழைய தாழ நடு
- தேங்காய்ல சிறிசவாங்கு மாங்காய்ல பெரிச வாங்கு
- தேசம்பார்த்த வீடும் தெருப்பார்த்த வயலும்
- தொழாதவன்ட கிப்லா எல்லாப்பக்கமும்
- தொழில் புருசலட்சணம்
- நலஞ்ச கௌவி வந்தா இறந்த விறகுக்கு சேதம்
- நாம ஒண்டு நினைக்க தெய்வம் ஒண்டு நினைக்கும்

- நாய் பர்ர பாடு கழிகம்புக்குத்தான் தெரியும்.
- நாய்க்கு எங்க அடிச்சாலும் கால்லதான் முடம்
- நாய்க்கு கடலுக்கு போனாலும் நக்குத்தண்ணிதான்
- நாய்க்கு கண்கெட ஊருக்கு வந்ததாம் அலைச்சல்
- நாய்க்கு பயந்து பேயில விழுந்த மாதிரி
- நாய்க்கு வேலையுமில்ல நிக்க நேரமுமில்ல
- நாய்க்கேன் தோல்தேங்காய
- நாயோட்டமம் சில்லறைப்பாய்ச்சலும்
- நான் புடிச்ச முசலுக்கு முன்றுகால்
- நான் நாய ஏவினா நாய் வால ஏவுமாம்
- நானும் பரிசாரியெண்டு நடக்காரம் மிரிவடியில
- நெத்துக்கு விட்ட காய் பொல
- நெருப்பத் திண்டவன் கரியா கழிப்பான்
- நெருப்புக் கொள்ளியால தலைய சொறியுறவன்
- நெனப்பு பொழப்பக் கெடக்குமாம்
- நொண்டிக்குதிரைக்கு சறுக்கினது சாக்கு
- நோய்க்கும் பாரு பேய்க்கும் பாரு
- நோயாளி விதியாளியானால் பரிசாரி பேராளி
- பசிக்கு ருசி தெரியாது
- பசுத்தோல் போர்தின புலி
- பஞ்சானும் குஞ்சிகளும் போல
- பட்டிக்காரன்ட கையில எண்பட்ட பாம்பு மாதிரி
- பட்டுப் பொடவையில் பொட்டுக் குத்தின மாதிரி
- பண்டியோட கூடினா கண்டும் பீ திண்ணும்
- பந்திக்கு முந்து படைக்குப் பிந்து
- பரம்பர ஆண்டியா பஞ்சத்துக்கு ஆண்டியா
- பரிசாரி பொண்டி புளுத்து சாகிறயாம்
- பருவந்தப்பினா பனங்கிழங்கும் நாராகிரும்
- பள்ளியத்திண்ட குடி பத்தி எரிஞ்சிபோகும்
- பழக்கம் பெரிசா, பரவணி பெரிசா
- பழிச்சாருக்குப் பாதிப்பங்கு, சிரிச்சாருக்கு சரிபங்கு
- பனங்காட்டுநரி சிலுசிலுப்புக்கெல்லாம் அஞ்சாது
- பல்லிக்கு அடிச்சாப் பத்து நன்மை
- பாவ கொடி நாட்டின படர மெலாறு குத்தணும்
- பாவம் ஒரு பக்கம் பழி ஒரு பக்கம்
- பானைக்க இருந்தாத்தான் அகப்பைக்க வரும்
- பிச்சக்காரனுக்கு பல ஊட்டுச்சோறு
- பிச்சச்சோத்துலையும் ஒரு கொழஞ்ச சோறு
- புடிச்சாலும் புளிங்கொம்பா பாத்துப் புடிக்கோணும்
- புத்தி கெட்ட ராசாவுக்கு மதிகெட்ட மந்திரி
- புத்தியுள்ள புள்ளைக்கு செவ்வரத்தம்பூ நஞ்சில்லை
- புதுச்சுளகக் கண்டா பழஞ்சுளகு பிடிக்காது
- புள்ள நசல்லையும் கள்ள நசல் இருக்காது
- புறப்பட்ட காலுக்குச் செருப்பில்லை
- பூ மலர்ந்து கெட்டது வாய் விரிந்து கெட்டது
- பூமி பொறுக்க நடக்க வேணும்
- பூன பெய்த்தாம் புடுக்கு பொறுத்துக்கிட்டாம்
- பெரிய மரத்த சுத்தின பல்லி சாகுறல்லியாம்
- பெருங்காயம் வெச்ச பானை நாறாம விடுமா
- பேச்சுப் பல்லக்கு தம்பி கால்நடை
- பேச்சைக் கொடுத்து ஏச்சு வாங்குவானேன்
- பேசினா வாய்காறி பெசாட்டி அம்மாமுண்டி
- பேசுற இடத்த பேசாத வாய் எச்சி வாய்
- பேய்க்கி வாண்டா புளிய மரத்திலதான் ஏறணும்,
- பேயாடும்போது மடையில கண்
- பொட்டக் கோழி கூவி விடியாது
- பொண்டாட்டி செத்தா புது மாப்பிள்ள
- பொய் சொன்ன வாய்க்கு பொரியும் கிடைக்காது
- பொறப்புல நல்லதுண்டா நடப்பல தெரியும்
- பொறுத்தார் பூமியாழ்வார் பொங்கினார் காடாழ்வார்
- மட்டக்களப்பார் பாயிலே ஒட்ட வைப்பார்
- மடவைக்கப் போய் பேயோட வாறாராம
- மடத்தனத்திற்கு மருந்து வாகடத்திலயும் இல்ல
- மடையக் கண்டால் ஆடாத பேயும் ஆடும்
- மண் சோத்துக்க கல்ல ஆராயாத
- மண்பூனதான் எலிபுடிக்கும்.
- மாப்பிளகொண்ட காசி கட்டி கரைக்க காணாது
- மயில் மக்குறு மயில் முட்ட சுக்குறு
- மாச்சக்காரனுக்கு சாச்சாட்ட கலியாணம்
- மாச்சக்காரணுக்கு சின்னப்பாட்ட கலியாணமாம்
- மாடு உசும்பாம மணி உசும்பாது
- மாடு கிழமானாலும் பால்ல ருசி போகுமா
- மாமியார் வீடு மகா சௌக்கியம்
- மாரி இல்லாம காரியமில்ல
- மாவுக்குத் தக்க பணியாரம்
- மீனும் தேனும் கண்டெடத்த
- முடவனுக்கு கள்ளுக்குடிக்க ஆசையாம்
- முத்தால நத்தைக்குப் பெருமை
- மெல்லப் பாயும் தண்ணி கல்லையும் குழியாக்கும்
- மேற்க மழை பேஞ்சா கிழக்கே வெள்ளம் வரும்
- வகுத்துப் புள்ள வாய்க்கு நஞ்சி
- வட்டி ஆசை முதலுக்குக் கேடு
- வந்தா மலை போனா மசிரு
- வளைஞ்சும் வழியால போ
- வாத்திபுள்ளை மக்கு
- வாய்கொழுப்பு சீலையால வடிகிறயாம்
- வாயக்கட்டினா புள்ள வகுத்தக்கட்டினா புருசன்
- வாயிருந்தா வங்காளம் போகலாம்
- வாயில்லாட்டி காகம் கொத்திக்குப் போகும்
- வாயில ஓதல் இருந்தா வழி எல்லாம் சோறு
- வெள்ளத்தில வந்தது வெள்ளத்தோட போய்த்து
- வெறுங்கை தாளம் போடாது
- வேணாங்குண்டி வெறுங்குண்டி
- வேணாண்ட புள்ளத்தான் வேலியால கொடுக்குற
- வேரோடி விளாத்தி முளைச்சாலும் தாய்வழி தப்பாது
- வேலக்கள்ளிக்கு புள்ளச்சாட்டு
- வேலைமுடிந்தால் வேலிக்குப் புறத்தி



saakir.mim@thaiveedu.com

# கிழக்கிலங்கைப் பூர்வ குடிகள் அமைப்பின் உருவாக்கம்

– க. பத்திநாதன்



கிழக்கு மாகாணத்தில் குறிப்பாக மூதூர், வெருகல், வாகரை முதலான பகுதிகளில் வசிக்கின்ற கிழக்கிலங்கைப் பூர்வகுடி மக்களாகிய வேடர்கள் மீது பன்னெடுங்காலமாக அவர்களைச் சூழவுள்ள முஸ்லிம் மற்றும் தமிழ் அயல்ச் சமூகங்கள், கிறிஸ்தவ சபைகள் போன்ற பல்தரப்பினராலும் கட்டவிழ்த்து விடப்பட்ட ஒடுக்குமுறைகளையும், ஒதுக்கல்களையும், பாகுபாடுகளையும் நேர்மையாகவும், சட்டரீதியாகவும் எதிர்கொள்ள வேண்டும் என்னும் நோக்குடன் பல சிரமங்களுக்கும், தியாகங்களுக்கும் மத்தியில் உருவாக்கப்பட்டதே இலங்கையின் முதலாவது தமிழ் பேசும் பூர்வ குடிகளுக்கான அமைப்பான குவேனி பழங்குடி அமைப்பாகும்.

ஒப்பீட்டளவில் கிழக்கில் வாழும் வளர்ச்சியடைந்த சமூகங்களுடன் சமமாக போட்டியிட்டு வளரமுடியாத நிலையில், பிற சமூகத்தவரால் கறிவேப்பிலை போன்று பயன்படுத்தப்படுவதன் மூலம் பழங்குடி சமூகமானது தொடர்ந்து நலிவுற்றுப் போவதை நீண்டகாலமாக அனுபவித்து, உணர்ந்து எழுந்த சில தனிநபர் மற்றும் கூட்டு சிந்தனையின் விழைவாக பழங்குடி மக்களுக்கான ஒரு அமைப்பு தேவை என்பதும், அமைப்பாக இணைவதனூடாகவே எமக்கு எதிராக கட்டமைக்கப்படும் அனைத்து அநீதிகளுக்கும் எதிராக வினையாற்ற முடியும் என்னும் அனுபவ ஒன்றிணைவின் மூலமாகவே இப்பழங்குடி அமைப்பானது உருவாக்கம் பெற்றது.

அதனைத் தொடர்ந்து பல சட்ட ரீதியான தீர்வுகளை நோக்கி நகர்வதற்கான பலத்தைப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக அமைந்தது. இலங்கைத்தீவின் மூத்தகுடிகளான வேடர்கள் நாம் என்பதையும், எங்களுக்கு இந்த தீவில் தனிச்சிறப்புரிமை உண்டு என்பதையும் உணர்ந்து கொண்டதுடன், உலகளவில் இருக்கும் பழங்குடிகளுக்கான உரிமைகள் என்னும் வகையில் எமது உரிமைகளை கண்டறிதல், அழிவின் விழிம்பில் இருக்கும் எமது ஆதி மொழியை மீட்டெடுத்தல், யுத்த காலங்களில் எம்மில் பலரிடம் இருந்து விடுபட்டுப்போன சடங்கார்ந்த நடவடிக்கைகள், கலையாற்றுகைகள் முதலான விடயங்களை மீளவும் பேணுதல் என்பவற்றோடு, இத்தீவின் நெடுகிலும் சிதறி வாழும் வேடப் பழங்குடிகளுடனும் ஒரு உறவு முறையைப் பேணுவது தொடர்பாகவும் அமைப்பு ரீதியான நடவடிக்கைகளை முன்னெடுத்தோம்.

### மூதூர் கிராமங்கள்:

அதன் முதற்கட்டமாக மூதூரில் இருக்கும் பழங்குடி கிராமங்களான: சந்தனவெட்டை, சலையூர் (ஒருபகுதி), சந்தோசபுரம், சீதனவெளி, பாட்டாளிபுரம், வீரமாநகர், இலக்கந்தை, நீலாக்கேணி போன்ற கிராமங்களையும் கூடவே வெருகல் பிரதேச சபைக்குள் அடங்கும் நல்லூர், உப்பூரல், சீனன் வெளி ஆகிய கிராமங்களையும் இணைத்து மொத்தம் பதினொரு கிராமிய இணைப்புடன் பழங்குடி அமைப்பின் செயற்பரப்பு அமைக்கப்பட்டது. இன்றைய நிலையில் குவேனி பழங்குடி மக்களின் நலன்புரி அமைப்பின் செயற்பாடுகள் மூதூர் பகுதியை கடந்து வெருகல், வாகரை பகுதிகளுக்கும் நகர்ந்திருக்கிறது.

### வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில்:

வெருகல் பிரதேச செயலாளர் பிரிவில் வட்டவன், சூரநகர், கருக்காமுனை, இலங்கைத்துறை முகத்துவாரம் (ஒரு பகுதி), இலங்கைதுறை, வெருகல் முகத்துவாரம், கல்லடி (ஒரு பகுதி) ஆகிய கிராமங்களில் பழங்குடி மக்கள் வாழ்ந்து வருகிறார்கள். இப்பகுதிகளில் வாழும் எம்மக்களின் உரிமைக் கோரிக்கைகளை வெளிக் கொண்டுவரும் செயற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

### வாகரை பகுதி:

வாகரை பகுதியில் இருக்கும் குஞ்சன்குளம் மற்றும் அதை ஒட்டியுள்ள கிராமங்களில் வேலாயுதம் அவர்களின் தலைமையில் இயங்கிவரும் மக்களை ஓர் அமைப்பு வடிவத்திற்குள் கொண்டுவரும் பணிகளில் பழங்குடி அமைப்பு ஈடுபட்டு வருகிறது. மட்டக்களப்பில் களுவன்கேணி, முறுத்தாணை, தளவாய் முதலான கிராமங்களில் உள்ள எமது சமூகத்தின் படித்த இளைஞர்களையும் உள்வாங்கி அமைப்பு எம்மக்களை நோக்கி தற்போது விரிவாக்கம் செய்யப்பட்டுள்ளது.

பழங்குடி மக்களின் பிரச்சினைகளையும் பழங்குடி அமைப்பையும் வெளிப்படுத்தும் முகமாக தொலைக்காட்சி, பத்திரிகை ஊடக சந்திப்புகளும் நிகழ்வுகளும் மேற்கொள்ளப்பட்டன. உள்ளூர் அளவில் மட்டும் நின்றுவிடாது அகில இலங்கை ரீதியாக இயங்கும் ஊடகங்களையும் புலம்பெயர்ந்த நாடுகளில் இருக்கும் தமிழ் ஊடகங்களிலும் எமது

வரலாறும், பிரச்சினைகளும் எடுத்துச் செல்லப்படுவதற்கான முயற்சிகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

அமைப்பு உருவாக்க செயற்பாடுகளின் பின்னர் அமைப்பை பதிவு செய்வதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளையில் எங்களுக்கு பல இழுத்தடிப்புச் செயற்பாடுகளும், அதிகார முட்டுக்கட்டைகளும் பெரும் சவால்களும் காத்திருந்தன. பதிவு வேலைகளுக்காக மூதூர் பிரதேச செயலகத்திற்கு சென்றிருந்த பொழுது 'பழங்குடி மக்களின் உரிமைகளுக்கான அமைப்பு' என்னும் பெயரில் உரிமை என்னும் பதத்தை மாற்றுமாறு கூறப்பட்டது. இதன் பின்னரான நிர்வாகக் குழுக் கூட்டத்தில் புராணம் கூறும் குவேனி அம்மையார் எமது வேட்டுவப் பெண்மணி என்னும் உரிமை கோரலுடன் எமது அமைப்பின் பெயரில் எமது மூதாட்டியின் பெயரை இணைத்துக் கொள்வது என்று தீர்மானிக்கப்பட்டது.

அமைப்பிற்கான பதிவு அடுத்தகட்டமாக மூதூர் பிரதேச செயலகத்திற்கு கொண்டு செல்லப்பட்டதும் எதுவித ஆலோசனைகளும் இன்றி இதனை மாவட்ட செயலகத்திற்கு கொண்டு சென்று பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது. மாவட்ட உதவி செயலாளர் மாவட்ட செயலகத்தில் உள்ள சமூக சேவைத் திணைக்களத்தில் பதிவு செய்யுமாறு ஆலோசனை வழங்கினார். அத்திணைக்களத்தினர் இந்தப்பதிவை மூதூர் பிரதேச செயலகத்திலேயே மேற்கொள்ள முடியும் என ஆலோசனை வழங்கப்பட்டதுடன் மீளவும் மூதூர் பிரதேச செயலகத்தில் பதிவுசெய்யுமாறு அறிவுறுத்தினர்.

மூதூர் பிரதேச செயலகத்தில் நாம் எமது அமைப்பை பதிவு செய்வதற்கு மீண்டும் எடுத்த முயற்சிகள் எம்மை சூழ்ந்து எமது வளங்களை சூறையாடும் சமூகங்களை சார்ந்த அதிகாரிகளாலும் இழுத்தடிக்கப்பட்டது. பழங்குடி அமைப்பின் சட்டரீதியான உருவாக்கம் என்பது எம்மை ஆக்கிரமித்து வாழும் சக குடிகளின் அதிகாரிகள், ஆக்கிரமிப்பாளர்கள், அரசியல்வாதிகள், அரச சார்பற்ற நிறுவனங்கள் ஆகியவைகளுக்குச் சவாலாகவும், அவர்களின் நடவடிக்கைகள் பலவற்றை அம்பலப்படுத்திவிடும் என்பதனாலும் அனைவரும் ஏதோ ஒருவகையில் கூட்டு சேர்ந்து எமது அமைப்பின் பதிவிற்கு முட்டுக்கட்டை போடுவதில் புதுப்புதுக் காரணங்களை கண்டுபிடிப்பவர்களாக இருந்தனர்.

பல ஆவணங்களை மாதக்கணக்காக கேட்டு இழுத்தடிப்பு செய்தனர். பின்னர் ஏதேதோ காரணங்களைச் சொல்லி மட்டக்களப்பு மாவட்ட கச்சேரிக்கும் எம்மை அனுப்பி வேடிக்கை பார்த்தனர். இவ்வாறாக அங்கும் இங்குமாக சுமார் ஒரு வருட காலமாக மிகச் சாதாரணமாக பதியப்படும் அமைப்பு பதிவினை இழுத்தடிப்புச் செய்தனர். மூதூர் பிரதேச செயலக அதிகாரி ஒருவரிடம் ஒரு வருடம் கழித்து மீண்டும் பதிவதற்காக சென்ற வேளையில் அவர் எம்மைப் பார்த்து அதிகாரத் தோரணையில் பின்வருமாறு கேட்டார்.

'உங்கள் உடைக்கும் எனது உடைக்கும் என்ன வித்தியாசம் இருக்கிறது? நீங்கள் வேடர் குடி என்பதற்கு என்ன ஆதாரம் உங்களிடம் இருக்கிறது?

நாம் வேடர்குடி என்பது நிரூபிக்கப்படும் பட்சத்தில்த்தான் பழங்குடி அமைப்பின் பதிவு சாத்தியம் என்று ஆணித்தரமாகக் கூறப்பட்டது. அவரின் பார்வையில் இன்றும் வேடர் என்போர் இலைதழைகளை கொத்துக் குலைகளாக கட்டிக் கொண்டிருக்க வேண்டிய ஒரு விழிம்பு நிலைச் சமூகமாக இருந்தது. உடனே எமது அமைப்பைக் கூட்டி எங்களின் சியாக்களுடன் (முதுசங்கள்) ஆலோசித்து ஒரு முடிவுக்கு வந்தோம். யார் என்ன சொன்னாலும் எங்களது பிறப்பு சான்றிதழ்களில் இருக்கும் வேடர் என்னும் பதிவு ஆதாரத்தை எவராலும் மறுக்கவியலாது. நாங்கள் அவற்றைச் சமர்ப்பித்ததை அடுத்து வேறுவழியின்றி மூதூர் பிரதேச செயலகம் எமது அமைப்பை பதிவு செய்யும் கட்டாயத்திற்கு தள்ளப்பட்டது.

2010-ல் இருந்து அனைத்துப் பிரச்சினைகளும் மூதூர் பிரதேச செயலகம், வெருகல் பிரதேச செயலகம், தோப்பூர் கமநல சேவை நிலையம் ஆகிய இடங்களுக்கு எடுத்துச் செல்லப்பட்ட நிலையில், கடமையாற்றும் அதிகாரிகளினால் இன்றுவரை இப்பிரச்சினைகளுக்கு தீர்வுகள் எதுவும் வழங்கப்படவில்லை. இதன் விளைவாக நாம் ஜனாதிபதி செயலகம், பிரதமர் செயலகம், பாராளுமன்றம், மாவட்ட அரசாங்க அதிபர், கிழக்கு மாகாண ஆளுநர், கிழக்கு மாகாண செயலகம், மனித உரிமை ஆணைக்குழு, அனைத்து அமைச்சுகள், மூவின அரசியல் வாதிகள், மதத் தலைவர்கள், கிராம மட்ட அமைப்புகள் என அனைத்திற்கும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. எமது அறிக்கைகளில் மக்கள் தொடர்பான அடக்குமுறைகள், புறக்கணிப்புகள், வளங்கள் மீதான ஆக்கிரமிப்புகள், பழங்குடிகளின் கல்வி சுகாதாரம் அபிவிருத்தி மற்றும் கலை கலாச்சாரத்தை மேம்படுத்துதல் என்னும் பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டதுடன் எமது கோரிக்கைகளுக்கான ஆதாரங்களும் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

இன்று குவேனி பழங்குடி மக்களின் நலன்புரி அமைப்பின் செயற்பாடுகள் மூதூர் பகுதியை கடந்து வெருகல், வாகரை, வாழைச்சேனை மற்றும் மட்டக்களப்பு வரையான பகுதிகளுக்கும் நகர்ந்திருக்கிறது. அமைப்பு பதிவு செய்யப்பட்ட பின்பான காலகட்டங்களில்த்தான் எமது மக்களின் அனைத்துப் பிரச்சினைகளையும் அமைப்பு ரீதியாகவும் சட்டரீதியாகவும் அணுகுவது தீவிரமடைந்துள்ளதுடன், பல சாதக பதிற்குறிகளை ஏனையோர் பிரதிபலிக்க வேண்டிய கட்டாயத்தினையும் ஏற்படுத்தியுள்ளது.

பல சவால்களையும், தடைகளையும் கடந்து எமது மக்களின் உரிமைகளுக்கான கோரிக்கைகளும் நல்வாழ்விற்கான முயற்சிகளும் உதிரி மக்கள், தனித்து விடப்பட்ட மக்கள் என்னும் நிலையைக் கடந்து ஒரே குரலாக ஒரே மக்கள் கூட்டமாக கிழக்கிலங்கையில் எமது சமூகத்தை கட்டியெழுப்புவதில் பழங்குடி அமைப்பு உறுதிப்பாடு கொண்டிருக்கிறது. எமது மக்களை ஒரு சமூகமாக எமக்குள் உணரவைப்பதும், இலங்கை தீவின் ஆதிக்குடிகளுக்கான உரித்துடன் வாழ்க்கையை அமைத்துக் கொள்வதற்கான கோரிக்கைகளை இலங்கை தீவில் வாழும் அனைத்து மக்கள் பிரிவுகளிடம் எடுத்துச் செல்வதும் எமது கடமையாகவும் எமது அமைப்பு உணருகின்றது.



pathinathan@thaiveedu.com




நரபலி கதையை அறிவாட்டிப் பாட்டி சொல்வதாகச் சொல்லி இரண்டு வாரங்கள் ஆகிவிட்டது. ஆதினி குட்டி போட்ட பூனையாக அறிவாட்டியின் வீட்டில் நாள்தோறும் வலம் வந்து கொண்டிருந்தாள். அறிவாட்டியை தனிமையில் சந்திப்பதற்கான சந்தர்ப்பம் அமையாமலேயே போய்க் கொண்டிருந்தது. உறவு என்று சொல்ல யாருமே இல்லாமல் இடையர்கல்லிற்கு வந்த அறிவாட்டிப் பாட்டியின் ஆரம்ப நாட்கள் பற்றி முன்னம் கோமதி சொல்ல ஆதினி கேட்டிருக் கிறாள். வாசுதேவ வாய்க்கால் பெருக்கெடுத்து பயிர் நிலங்க ளையும், கால்நடைகளையும் நாசம் செய்து ஊரில் பஞ்சம் தாண்டவம் ஆடிக் கொண்டிருந்த நாளொன்றில் அறிவாட்டி ஊருக்கு வந்ததாகச் சொன்னாள்.

அறிவாட்டியின் வருகையை ஊரிலுள்ள வயது வந்த பெரிய வர்கள் அனைவரும் நன்றாக ஞாபகம் வைத்திருக்கிறார்கள். விஜயராஜ விண்ணகரத்தில் அறிவாட்டி தேவரடியாராக தொண்டாற்றிய காலத்தில் அவளது நடன திறமைக்கு கிடைத்த பொன்னையும், பொருளையும் கொடுத்து ஆறு மாட்டு வண்டில்களில் தானியங்களையும், கிழங்குகளையும் ஊருக்கு கொண்டு வந்ததை கோமதி ஞாபகப்படுத்தினாள். அன்றைய நாட்களில் அவளது வருகையை ஊரே கொண் டாடி வரவேற்றிருக்கிறது. அந்த நன்றியை ஊர்மக்கள் என் றும் குறையாமல் வைத்திருந்தார்கள்.

ஊரவர் துணையுடன் தனக்கான குடிசையை அமைத்துக் கொண்ட அறிவாட்டி, அவளது தேவைக்கு அதிகமானதாகக் குடிசையின் திண்ணைப் பகுதியை அமைத்தது ஊரில் பல ருக்கும் வியப்பை தந்தது. ஆரம்ப நாட்களில் அறிவாட்டி யின் பூர்வீகத்தையும், அவளது எண்ணங்களையும் புரிந்து கொள்ள முயற்சி செய்த ஊரவருக்கு ஏமாற்றமே மிஞ்சியது. தம்பலகாமத்து தடித்த தோல்காரி என்ற சொற்பதம் அறி வாட்டியைக் குறிக்க ஊரில் வழக்கத்தில் இருப்பதற்கு இது தான் காரணம். இருந்தாலும் ஊரவர் அவர்மேல் வைத்திருக் கும் அன்புக்கும், மரியாதைக்கும் எந்தக்குறைவும் அதனால் ஏற்பட்டதில்லை.

அறிவாட்டி தன் குடிசையின் திண்ணைப் பகுதியை ஏன் பெரிதாக அமைத்தாள் என்பதை ஊரவர் புரிந்து கொள்ள மூன்று மாதங்கள் எடுத்திருக்கிறது. விஜயராஜ விண்ணகரத் தில் தான் கற்றுத் தேர்ந்த மருத்துவத்தை ஊர் மக்களுக்கு வழங்க அந்த இடத்தை அவள் உபயோகப்படுத்தத் தொடங்கினாள். ஓய்வு நேரங்களில் தனக்குத் தெரிந்த கைவினை நுட்பங்களை ஊர்ப் பெண்களுக்கு சொல்லிக் கொடுப்பதற்காகவும் அந்த இடத்தைப் பயன்படுத்திக் கொண்டாள். இவற்றிற்கெல்லாம் ஊரவர் காட்டும் நன்றி உணர்ச்சிதான் ஆதினி அறிவாட்டியை நெருங்குவதற்கு தடைக்கல்லாக இருந்தது.

ஒரு நாள் மதிய நேரம் யாரும் எதிர்பார்க்காத கண நேரத் தில் வானம் கறுத்து மழை கொட்டத் தொடங்கியது. அறி வாட்டி வீட்டில் உதவி செய்து கொண்டிருந்த பெண்கள் அனைவரும் அவர்களது வீடு நோக்கி ஓட வேண்டியதாகிப் போனது. தனது வீட்டில் எல்லா வேலைகளையும் முடித்து விட்டு அப்போதுதான் வந்திருந்த ஆதினிக்கு அது வசதியா கப் போனது. திடீரெனப் பெய்த மழை மண்ணை நனைத்த வாசம் குடிசை முழுவதையும் நிறைத்திருந்தது. வாசல் கத வைப் பூட்டிவிட்டு சுவரோரமாக உட்கார்ந்த அறிவாட்டிக்குப் பக்கத்தில் சென்று ஆதினி அமர்ந்து கொண்டாள்.

பாட்டி... பாட்டி... ஆதினி ராகம் பாடினாள்.

நரபலியா? எனக்கு நீ வீட்ட சுற்றி சுற்றி வரும் போதே தெரி யும்.

சொல்லுங்க பாட்டி. சொல்லுங்க பாட்டி. எனக்கு கேக்காட்டி தலையே வெடிச்சிடும் போல இருக்கு.



ஒரு நீண்ட மௌனத்தின் பின் பாட்டி மீண்டும் பேசத் தொடங்கினாள். கனகாலத்துக்குப் பிறகு நினைச்சுப்பாக்கி றன். இடையில கேள்வி கேட்டு என்னக் குழப்பக் கூடாது.

இடைமறித்தாள் ஆதினி. என்ன பாட்டி உங்க ஊர்ல இப்ப டித்தான் கத சொல்லத் தொடங்குவாங்களா?

இல்ல இது கதை இல்ல. உன்ன மாதிரி நான் இருக்கக்

குள்ள எங்களுக்கு நடந்தது. திரும்ப நினைக்கவே உடம்பெல்லாம் நெருப்பா கொதிக்குது. அறிவாட்டிப்பாட்டியின் சொற்களில் இருந்த உஷ்ணம் ஆதினியை பேச்சிழக்கச் செய்தது. மீண்டும் அந்த குடிசையை அமைதி ஆக்கிரமித்துக் கொண்டது.

நன்றாக நினைவிருக்கிறது. அது ஒரு மாலை நேரம். தம்பலகாமத்தின் கரிக்கட்டை மலையாற்று வெளியில் நானும், பூமகளும் வயல்வெட்டின் பின் சிதறிக் கிடந்த நெற்கதிர்களை சேகரித்துக் கொண்டிருந்தோம். கரிக்கட்டை மலையாற்று வெளி ஒரு பரந்த வயல்வெளி. கண்ணுக் கெட்டிய தூரம் வரை வயல்களால் நிறைந்த பிரதேசம். வயல்வெளியின் எல்லையாக இருந்த காட்டு மரங்கள் காற்றில் அசையும் ஓசை ஒருவித பய உணர்வை புதிதாக வருபவர்களுக்குத் தரவல்லது. எங்கள் இருவருக்கும் நினைவு தெரிந்த நாளில் இருந்து அது விளையாட்டுப் பிரதேசமென்பதால் கலகலப்பாக சிரித்த வண்ணம் இருந்தோம்.

என் தோழி பூமகள் துடிப்பானவள். சிறுவயது முதலே இருவரும் ஒன்றாக வளர்ந்து வந்ததால் என் மனதுக்கு நெருக்கமானவள். பூமகள் திருக்கோணேச்சரத்தில் தொழும்பு செய்யும் வைராவியரின் ஒரே மகள். நிலத்தை ஆழப்பிறந்த நிலமகள் என்பதால் தன் தந்தை தனக்கு பூமகள் என்று பெயர் வைத்ததாக என்னேரமும் பெருமை பேசிக்கொள்வாள்.

நாங்கள் இருவரும் பாட்டு பாடிக்கொண்டே கதிர்களை சேகரித்துக் கொண்டிருந்த பொழுது எனது தம்பி மாதவன் வேர்க்க விறுவிறுக்க தூரத்தில் ஓடி வருவது தெரிந்தது. நான் அதிர்ச்சியாகிப் பின் அவனை நோக்கி அம்மா... என்று கத்திக் கொண்டு ஓடத்தொடங்கினேன். பூமகள் என்னைத் தொடர்ந்து ஓடி வந்தாள்.

சில மாதங்களாக எங்கள் ஊரில் ஒரு வகை நோய் பரவி இருந்தது. திடீரென ஏற்பட்ட வயிற்றோட்டத்துடன் கூடிய வாந்தியைத் தொடர்ந்து மூச்சுத் திணறல் ஏற்பட்டு முதன் முதலில் பெரிய திடலில் ஒருவர் இறந்து போனார். பின்னர் படிப்படியாக அடுத்தடுத்த திடல்களிலும் அதே மாதிரியான மரணங்கள் அங்கொன்றும் இங்கொன்றுமாக நிகழத் தொடங்கி இருந்தது. நாங்கள் வசித்த நாயன்மார் திடலில் இரண்டு நாட்களுக்கு முன்னர்தான் இதேபோல ஒருவர் இறந்து போயிருந்தார். அன்று காலை நான் வரும்போது அம்மாவுக்கு இலேசாக மூச்சுத் திணறல் இருந்தது ஆனால் வயிற்றோட்டமோ, வாந்தியோ இருக்கவில்லை. நான் பல முறை சொல்லியும் அம்மா ஓய்வெடுக்க விரும்பவில்லை. வழக்கம் போல எல்லா வீட்டு வேலைகளையும் செய்து கொண்டிந்தாள். நான் அவளுக்கு முடிந்தவரை ஒத்தாசையாக இருந்து உதவிட்டே பூமகளுடன் வயலுக்கு வந்திருந்தேன்

அருகில் வருவதற்கு முன்னரே 'பூமகள் அக்காவை அவசரமாக வரச் சொன்னாங்க' என்று கூவிக் கொண்டு வந்த மாதவனின் சத்தம் என் ஓட்டத்தை தளர்த்தி நடையாக்கியது. ஆனால் அந்த செய்தியைக் கேட்ட பூமகள் திடீரென நிற்க முயற்சித்து நிதானம் தவறி வயல் வரம்பில் விழுந்தாள். நல்ல வேளையாக காயங்கள் எதுவும் ஏற்படவில்லை. நானும், மாதவனும் பூமகள் எழுவதற்கு உதவினோம். 'வைரவர்பூசையில் கலந்து கொள்ள அவசரமாக பூமகள் வரவேண்டுமாம்' இதுதான் பூமகளின் தந்தை மாதவனிடம் சொல்லியனுப்பியிருந்த செய்தி.

ஊரெல்லாம் நோய் பரவியதிலிருந்து வைரவருக்கு மடை வைக்க வேண்டும் என்ற குரல்கள் பரவலாக எழுத்தொடங்கியிருந்தன. வைரவரின் கோபம்தான் இந்த நோய்க்கு காரணம் என்று ஊரில் பலரும் பேசிக்கொண்டதை நாங்கள் அறிந்திருந்தோம். விடயத்தைச் சொல்லி முடித்த மாதவன் அவனது நண்பர்களுடன் விளையாடுவதற்காக உற்சாகத்தோடு ஊரை நோக்கி ஓடத் தொடங்கினான்.

மாதவா...

என்னக்கா? எரிச்சலோடு கேட்டான்.

யாரெல்லாம் வந்திருக்காங்க?

பூமகள் அக்காட உறவுக்காரங்க எல்லாம் பக்கத்து ஊர்களில இருந்து வந்திருக்காங்க. ஊர்த் தலைவர்மாரெல்லாம் கூடியிருக்கிறாங்க.

என்னத்துக்கு?

வைரவருக்கு மடை வைக்கத்தான்.

அதுக்கு ஏன் பூமகள்?

மாதவனிடம் பதில் இல்லை. அவன் திரும்பிப் பார்க்காமல் ஓடிப்போய் விட்டான்.

பூமகளுக்கு உற்சாகம் பிடிபடவில்லை. ஊருக்காகச் செய்யும் பூசையில் தன்னையும் முக்கியப்படுத்தி தந்தை அழைத்திருக்கிறார் என்பதே அவளுக்கு பெருமிதம் தருவதாக இருந்தது. அவளது துள்ளல் நடையிலும், மகிழ்ச்சியான முகத்திலும் அதனைப் புரிந்து கொள்ளக் கூடியதாக இருந்தது. இருவரும் விரைவாக வயல்வெளியைக் கடந்து மாக்கைத் திடல் ஊடாக குஞ்சடப்பன் திடலுக்கு வந்து கோயிலடியை அடைந்தோம். வைராவியரின் வளவு முழுக்க மனிதர்கள் நிறைந்திருந்தார்கள். இருவரும் தயங்கித் தயங்கி வீட்டின் அருகே சென்றோம்.

'பூசை நடக்கிற நேரம் இப்படியா காடு மேடெல்லாம் திரிஞ்சிட்டுவருவ. ஓடிப்போய் குளிச்சிட்டு வா' என்று அதட்டினாள் பூமகளின் பாட்டி. வீட்டுக்குள் இருந்து விறுவிறுவென வந்த பூமகளின் தாய் அவசர அவசரமாக பூமகளை உள்ளே இழுத்துச் சென்றாள். பூமகளுடன் உள்ளே செல்ல எத்தனித்த எனது தலைமுடியை கொத்தாகப் பிடித்து ஒருவர் இழுத்தது வலித்தது. நிமிர்ந்து பார்த்தேன். பூமகளின் பாட்டியின் கண்டிப்பான பார்வையைப் புரிந்து கொண்டு வீட்டுக்கு

வெளியில் வந்தேன்.

வைராவியர் வீட்டு முற்றம் முழுவதும் ஆண்களும், பெண்களுமாகப் பலர் கூடி நின்று ஏதோவொரு முக்கிய விடையமொன்றைப் பேசிக்கொண்டிருந்தார்கள். வளவின் ஒரு மூலையில் சிறுவர் பலர் விளையாடிக் கொண்டிருந்தார்கள். பூமகள் இல்லாமல் எனக்கு விளையாடப் பிடிக்கவில்லை. எனவே முற்றத்தில் நின்ற சிறிய தென்னை மரத்தின் நிழலில் இருந்து வெற்றிலை போட்டுக் கொண்டிருந்த கனகவல்லிப் பாட்டியின் அருகில்போய் அமர்ந்து கொண்டேன்.

யார் பாட்டி இவங்கெல்லாம்? பொறுமை இழந்தவளாக கனகவல்லிப் பாட்டியிடம் கேட்டேன். பாட்டி ஊர் விடயங்களை தன் விரல் நுனியில் வைத்திருப்பவள் என்று பெயர் எடுத்தவள்.

வைராவியரிட சொந்த பந்தங்கள்தான். திருகோணமலை, நிலாவெளி, குச்சவெளி, கொட்டியாரம், கந்தளாயில இருந்து எல்லோரும் வந்திருக்காங்க.

ஏன் பாட்டி திடீரெண்டு?

உனக்குத் தெரியாதா? வைரவருக்கு மடை வைக்கப்போறாங்க.

ம்... தெரியும். அதுக்கு பூமகள் என்னத்துக்கு.

பூக்கட்டிப் பாக்கத்தான்.

குடவோலை எடுக்கும் போதுதானே சின்னப்பிள்ளைகளை எடுக்கச் சொல்லுவாங்க. பூக்கட்டிப் போடிறதுக்கு ஏன் பூமகள்?.

உனக்கு விசயமே தெரியாதா? கனகவல்லிப் பாட்டி என்னை அதிசயமாகப் பார்த்தாள்.

எனக்கும், பூமகளுக்கும் ஒன்றுமே தெரியாது பாட்டி. திடீரெண்டு வரச்சொன்னாங்க என்று நான் பதட்டத்துடன் சொன்னேன்.

வைராவியர் குலத்தில நாலு கன்னிப் பெண்கள் இருக்கிறாங்க. அதில உன்ர தோழி பூமகளும் ஒருத்தி. இந்த நான்கு பேரில ஒருவர் மடைக்கு தெரிவு செய்யத்தான் பூக்கட்டிப் போடப் போறாங்க.

மடையில பூமகளா? என்ன பாட்டி சொல்லுறீங்க. சாதாரணமாக பூசை வைக்கக்குள்ள பூசாரி சாமியாடினாலே பூமகள் மயங்கி விழுந்திடுவாளே பாட்டி என்றேன்.

ஏதோ சொல்ல வந்த பாட்டி எச்சில் விழுங்கினாள்.

அந்த நேரம் பார்த்து வைராவியர் வீட்டின் வாசல் பக்கமாக சலசலப்புக் கேட்டது. எல்லோருடைய கவனமும் அங்கு குவிந்தது. முதலில் வைராவியர் வந்தார். அவரைத் தொடர்ந்து ஆண்கள் சிலர் வந்தனர். அவர்களது அங்க அமைப்புகள் வைராவியரின் உறவினர்கள் அவர்கள் என்பதை உணர்த்துவதாய் இருந்தது. இவர்களைத் தொடர்ந்து வெண்ணிற சேலையணிந்த சின்னப் பெண்பிள்ளைகள் நடக்கத் தெரியாமல் கால்கள் தடக்க குனிந்த தலை நிமிராமல் முன் சென்றவர்களைப் பின் தொடர்ந்தார்கள். அதில் மூன்றாவதாக பூமகளும் இருந்தாள். பூமகள்... என்று கத்திக் கொண்டு நான் எழும்பி ஓட எத்தனித்தபோது என்னை இறுக்கி கனகவல்லிப் பாட்டி பற்றிக்கொண்டாள். என்னால் அசைவே முடியாமல் போனது. அப்போதுதான் பார்த்தேன். என்னைப் போலவே சிறியவர்களும், பெரியவர்களுமாகப் பல பெண்களை அருகில் இருந்தவர்கள் பற்றிப்பிடித்திருந்தார்கள். பல்வேறு பெயர்களைச் சொல்லி பிடிபட்டிருந்தவர்கள் அழுது கொண்டிருந்தார்கள்.

பாட்டியின் பிடியில் இருந்தவாறே தலையைத் திருப்பிக் கேட்டேன். ‘உண்மையைச் சொல் பாட்டி இங்க என்ன நடக்குது?’ அடக்க முடியாமல் அழுகை வந்துவிடும்போல் இருந்தது.

உட்காரு சொல்கிறேன் என்றாள் கனகவல்லிப் பாட்டி.

வரிசையாகச் செல்பவர்களுக்குப் பின்னால் முற்றத்தில் கூடி நின்றவர்களும் செல்வதைப் பார்த்துக் குழம்பி நின்றேன்.

கிராம சாந்தி வைரவரிட்டதான் போறாங்க. இவங்க யாரையும் அங்க விடமாட்டாங்க என்ற பாட்டியின் குரலைக் கேட்டு வேறுவழியின்றி அவள் காலடியில் அமர்ந்தேன்.

உடம்பெல்லாம் நடுங்கத் தொடங்கி இருந்தது. பாட்டி அதனைப் புரிந்து கொண்டு பயப்படாத இப்ப பூக்கட்டிப் பார்க்கத்தான் போறாங்க என்றாள்.

பூ விழுந்தவங்கள என்ன செய்வாங்க பாட்டி? நடுங்கும் குரலில் கேட்டேன்.

நாளை காலையில வைரவர் மடையில பலி குடுப்பாங்க.

என் கண்ணுக்குள் பல பயங்கர உருவங்கள் வந்து போனது. நான் ஆகாயத்தில் இருந்து தவறி விழுவது போல உணர்தேன். பயந்து அலறிக்கத்திய போதும் சத்தம் ஏதும் வெளிவந்ததாகத் தெரியவில்லை. கை, கால் என்று உடலின் ஒரு அங்கத்தையும் அசைக்க முடியாமல் இருந்தது. திடீரென முகம் முழுக்க குளிர்ந்த நீர் பரவ திடுக்கிட்டு விழித்தேன். கனகவல்லிப் பாட்டி தன்மடியில் என்னைக் கிடத்தி தலையைக் கோதிக்கொண்டு இருந்தாள்.

தொடரும்...



jeevarajah@thaiveedu.com



# தொல்காப்பியத்தில் சமூகவியல் - மறுவாசிப்பு

## - பொன்னையா விவேகானந்தன்

தொல்காப்பியம் - இன்றளவில் தமிழ்ப்பற்றாளர்கள் போற்றும் தொன்மைச் சிறப்புமிக்க இலக்கண நூல். எழுத்து, சொல் என்ற மொழியின் பயன்பாட்டுப் பகுப்புகளுக்காக மட்டுமே இலக்கணம் எழுதிக்கொண்டிருந்த மொழிகளின் பொதுமை யில் புதுமையாக மானுட வாழ்வுக்கும் பொருளிலக்கணம் உரைத்த நூல். மானுட வாழ்வைப் போற்றியும் அக, புற ஒழுக்கநெறிகளை வகுத்தும் எழுந்த முதல் இலக்கண நூல். 2300 ஆண்டுகளுக்கு மேலாக எமது முன்னோர்களால் பாது காக்கப்பட்டு வருகின்ற தொன்னூல்.

ஏட்டு வடிவத்தில் காலங்காலமாகப் போற்றப்பட்டுவந்த இந் நூலின் எழுத்ததிகாரம் முதன்முதலாக 1847 பதிப்பிக்கப்பட் டது. பின்னர் 1858-ல் சாமுவேல்பிள்ளை என்பவரால் முழு மையாக அச்சிடப்பட்டது. எனினும் முதல் அச்சிடப்பட்ட இலக்கண நூல் நன்னூலே. இது 1812-ம் ஆண்டு அச்சிடப் பட்டது. அதைத் தொடர்ந்து இன்றுவரை தொல்காப்பியம் பல்வேறு சான்றோர்களால் பலவாறாகப் பதிப்பிக்கப்பட்டு வருகின்றது. தொல்காப்பியம் பற்றிய ஆய்வுகளும் தொடர்ந்து எழுந்தவண்ணமே உள்ளன. எனினும் தொல்காப் பியம் சுட்டிச் சென்ற மானுடவியல் கோட்பாடுகளையும் அதன் வழியே வெளிப்படும் சமூக வாழ்வியலையும் ஆய்வு நோக்கோடு வெளிப்படுத்த முயல்கின்றது இக்கட்டுரை.

### தோற்றகாலமும் பெயர்க்காரணமும்:

தொல்காப்பியத்தின் தோற்றகாலம் குறித்த தெளிவான முடி வுகள் இன்றுவரை பெறப்படவில்லை எனினும் பெரும்பா லான அறிஞர்கள் இந்நூல் சங்கவிலக்கியகாலத்துக்கு முற் பட்டது என்பதை ஏற்றுக்கொள்கின்றனர். காலந்தோறும் இந் நூலைப் படி செய்தோர் ஆங்காங்கே இடைச்செருகல்களை மேற்கொண்டிருந்திருக்கின்றனர் எனப் பல சான்றோர் கருது கின்றனர். தொல்காப்பியத்தின் தோற்றகாலம் பற்றிய கருத்து முரண்பாடுகளுக்கு இவ்விடைச்செருகல்களே காரணமாக உள்ளன எனவும் கூறுகின்றனர். எனினும் பல்வேறு சான்றுக ளையும் அறிஞர் பலரின் கருத்துகளையும் எடுத்துவிளக்கி தொல்காப்பியர் காலம் பொ.ஊ.மு.(கி.மு.) நான்காம் நூற் றாண்டுக்கு முற்பட்டதாக இருக்கலாம் எனப் பேராசிரியர் கு.முத்துராசன் தனது சங்ககாலம் என்ற நூலில் குறிப்பிடு கின்றார்.

தொல்காப்பியர் என்ற பெயர் குறித்து முன்வைக்கப்பட்ட பல் வேறு கருத்துகளும் கூட முடிவுகளுக்கு வந்துவிட்டன. தொல் காப்பியம் என்ற பெயருக்கு பலரும் தொன்மையான காப்பி யம் என்றே இன்றும் பொருள் உரைக்கின்றனர். அது தவறு. காப்பியனார் என்பது அக்காலத்தில் நிலவிய ஒரு இயற் பெயர். நற்றிணையில் காப்பியஞ் சேந்தன் என்பாரும் பதிற் றுப்பத்தில் காப்பியாற்றுக் காப்பியனார் என்பாரும் பாடல் கள் யாத்துள்ளனர். காப்பியாறு, காப்பியக்குடி என்ற ஊர்க ளும் இருந்திருக்கின்றன. தொல்காப்பியர் என்பது இயற்பெ யராகவும் நூலை எழுதிய இவர் பெயரே நூலுக்கும் ஆயிற்று எனக் கொள்ளலாம்.

தமிழிலக்கண வரலாற்றில் தொல்காப்பியம் முதனூலன்று என்பதை அனைவரும் அறிவர். தொல்காப்பியத்துக்கு முன் னெழுந்த பல இலக்கணநூல்களின் தொடர்ச்சியும் வளர்ச்சி யுமே தொல்காப்பியம் என்பதற்குப் பல சான்றுகள் உள்ளன.

### தொல்காப்பியத்தின் தனிப்பெரும் சிறப்பு:

தொல்காப்பியத்தையடுத்துத் தோன்றிய இலக்கண நூல் நன் னூல் என்றே இலக்கண வரலாறு கூறுகின்றது. இக்கருத்து உண்மையாயின் தொல்காப்பியத்துக்கும் நன்னூலுக்குமான கால இடைவெளி ஏறக்குறைய பதினேழு நூற்றாண்டுகள். இலக்கிய வளர்ச்சிக்கேற்ப, இலக்கணம் மாற்றங்களை ஏற் றுச் செல்லக்கூடியது என்றபோதும் இந்தப் பதினேழு ஆண் டுகால இடைவெளியில் இலக்கணநூல்கள் எதுவும் தோன்ற வில்லை என்பது வியப்பே. இந்தப் பேரிடைவெளியில் தமிழி லக்கிய உலகில் தனிப்பெரும் இலக்கண நூலாகத் திகழ்ந்து, தமிழ்ப்படைப்பாளிகளுக்கு வழிகாட்டிய ஒரே- யொரு இலக்கணநூல் தொல்காப்பியமே. இதுவே இதன் சிறப்புக்குத் தலையாய சான்று.

தொல்காப்பியம் எழுத்து, சொல், பொருள் என்ற மூன்று பெரும்பிரிவுகளையும் இருபத்தேழு உட்பிரிவுகளையும் கொண்டது. இவற்றுள் பொருள் என்ற பகுப்புக்குள் அடங் கும் ஒன்பது இயல்களும் தமிழரின் தொன்மைச் சிறப்புமிக்க வாழ்வியலை வெளிப்படுத்தும் பதிவுகளாகவே அமைந்துள்

என. இன்றளவில் தொல்காப்பியம் பெரிதும் போற்றப்படுவதற்கு முதன்மைக் காரணமாக அமைவது அதன் பொருளதிகாரமே. தொல்காப்பியத்துக்கு முற்பட்ட தமிழிலக்கண நூல்களும் பொருள் பற்றிப் பேசியுள்ளன என்பதை ‘என்மனார் புலவர்’, மொழிப, ‘என்ப’ எனத் தொல்காப்பியர் குறிப்பிட்டிருப்பதன் வாயிலாக அறியலாம்.

### தொல்காப்பியத்தின் பொருளதிகாரம்:

ஏறக்குறைய 2300 ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழ்ச்சமூகத்தின் பண்பட்ட வாழ்களங்களையும் அவற்றைத் தளமாகக் கொண்டெழுந்த வாழ்வியல் முறைமைகளையும் தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்கள் பதிவுசெய்துள்ளன. பொருளதிகாரம் கீழ்க்காணும் ஒன்பது பெரும்பிரிவுகளைக் கொண்டது.

- அகத்திணையியல்
- புறத்திணையியல்
- களவியல்
- கற்பியல்
- பொருளியல்
- மெய்ப்பாட்டியல்
- உவமவியல்
- செய்யுளியல்
- மரபியல்

இவற்றுள் முதல் நான்கு பகுப்புகளுமே தொன்மைத்தமிழரின் வாழ்வியல் சிறப்பைக் கண்டறியப் போதுமானவை. இந்தப் பகுப்புகளில் காணப்படும் பல நூற்பாக்கள் பிற்காலத்தில் வலுவாகப் பேசப்பட்ட நால்வருணங்கள், பிராமணர், பார்ப்பார் போன்றவை பற்றிய செய்திகளைக் கூறுகின்றன. தொல்காப்பியத்துக்குப் பின்னரான சங்கவிலக்கியத்தில் பெரிதும் பேசப்பட்டிராத இவை பற்றித் தொல்காப்பியர் கூற வாய்ப்பில்லை என்றும் இவை பிற்காலத்து இடைச்செருகல்களே என்றும் பலர் வாதிடுகின்றனர். எனினும் சாமி சிதம்பரனார் போன்ற சிலர் நால்வகைப் பாகுபாடு தொழில் அடிப்படையில் தமிழரிடையே காணப்பட்டதென்றும் தமிழரின் இவ்வழக்கே நாடோடிகளாக இந்தியாவுக்குள் நுழைந்த ஆரியரிடம் சென்றடைந்திருக்கலாம் என்றும் கூறுகின்றார்.

எது எவ்வாறாயினும் நாம் தொல்காப்பியம் என ஏற்றுக் கொள்ளப்பட்ட நூலில் காணப்படும் நூற்பாக்களின் அடிப்படையிலேயே பண்டையத் தமிழருடைய வாழ்வியலும் சார்ந்த கோட்பாடுகளும் இங்கே தொகுக்கப்படுகின்றன.

### தொல்காப்பியம் காட்டும் நிலஅமைவியல்:

அக்காலத்தே தமிழ்ச்சமூகம் பரந்து வாழ்ந்திருந்த நிலப்பகுதிகள் இயற்கை அமைவுகளாலும் தட்பவெப்பங்களாலும் வேறுபட்டிருந்தன. இப்பரப்பு மிகப்பெரியதெனினும் இலக்கணச் சான்றோர் அவற்றை நுண்ணிதில் ஆய்ந்து, மக்களின் வாழ்வியல் வேறுபாடுகளை உணர்ந்து நிலஅமைவுகளை ஐந்தாக வகுத்தனர். அவற்றுள் மலை சார்ந்த இடத்தை மலைப்பூவான குறிஞ்சியின் பெயரால் குறித்தனர். காடுகள் செறிந்திருந்த மலையில் சாரலான தாழ்நிலத்தை முல்லை என அழைத்தனர். மேடும் பள்ளமும் இல்லாது சமவெளியாகத் தென்பட்ட நிலத்தை மருதம் எனக் குறித்தனர். நிலத்தின் கடலோடு ஒட்டிய பகுதியை அங்கு தோன்றும் நெய்தல் பூவின் பெயரால் அழைத்தனர். வான்மழை பொய்த்துப்போகும் காலத்தில் எளிதில் வறட்சியுறவல்லவையான குறிஞ்சிநிலமும் முல்லைநிலமும் தன்னியல்பு அழிந்து புதியதொரு இயல்பைக் கொள்ளும். அது பாலை எனப்படும் எனவும் வகுத்துக் கொண்டனர்.

தமிழர்களின் வாழ்நிலம் பற்றிய தெளிவான சிந்தனைத்தளமே தொல்காப்பியர் உள்ளிட்ட இலக்கணிகள் தமிழர்களின் வாழ்வியல் கோட்பாடுகளை வகுப்பதற்கு ஏதுவாயிற்று. இது எளிதன்று. மக்கள் வாழும்நிலம்தோறும் பயணித்து, வாழ்க்கையின் நுட்பங்களையும் சிறப்புக்கூறுகளையும் கண்டறிந்து, வேறுபாடுகளைத் ஐயம்திரிபற உணர்ந்த பின்னரே கோட்பாடுகளை வகுக்க முடியும். திருவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் கடுகி நடந்தே இவ்வாய்வுகளைச் செய்திருப்பர் நம் முன்னோர்.

பிற்காலத்தே தோன்றிய மானுடவியல் அறிஞர்கள் ஆற்றங்கரைகளிலேதான் மானுட நாகரிகங்கள் தோற்றம் கொண்டன என்பதைக் கண்டறிந்தனர். இதை நம் முன்னோர் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே கூறிவிட்டனர்.

மலைமுகடுகளில் முட்டிமோதும் வான்மேகங்கள் குறிஞ்சியிலே சிற்றருவிகளாகி ஓடையென உருக்கொண்டு அந்த நிலத்துக்கு வளம் சேர்க்கும். மலைவிட்டுக் கீழிறங்கும் சிற்றாறுகள் முல்லைநிலத்தில் பேராறாகப் பாய்ந்தோடும். இந்த நீர்வளத்தில் புல்வெளிகள் செழிக்க மந்தையினம் சிறக்கும். முல்லை கடந்து செல்லும் ஆறு மருதநிலத்தில் மென்நடை பயின்று, குளங்கள், ஏரிகளை நிறைத்து, அந்நிலத்தில் நின்று வளம் செய்யும். நிறைவில் நெய்தல் நிலத்தாருக்கு நன்னீரால் நன்மை பல செய்து கடலன்னையுடன் இணைந்து கொள்ளும்.

குறிஞ்சியின் குன்றுகளில் உருவெடுத்து, முல்லை வழியே பொங்கிப் பாய்ந்து, மருதத்தில் மென்னடை பயின்று, நெய்தலில் கடலோடு கலக்கும் ஆற்றின் கரையெங்கிலும் அமைந்திருந்த தமிழர் குடியிருப்புகளே தொல்காப்பியம் சுட்டும் நானிலங்கள்.

பன்நெடுங்காலத்துக்கு முன்பே பழந்தமிழர் ஆறுகள், நீர்நிலைகள் போன்றவற்றுக்கருகில் குடியிருப்புகளை நிலைத்தனவாக அமைத்துக்கொண்டனர். இந்த நிலையான இருப்புகளின் வழியே சிறப்புற்ற வாழ்வில் மொழி, கலை, பண்பாட்டு மரபுகள் மேம்பட்டன. நாகரிகத்திலும் வளர்ச்சி பெற்றனர். தொல்காப்பியம் வகுத்த அறஞ்சார்ந்த அக, புற வாழ்வியல் கொள்கைகளுக்கு அடிப்படையாக அமைந்தன தமிழரின் நிலைத்தெழுந்த நிலஞ்சார் வாழ்வியல் முறைமைகளே.

### அன்பின் ஐந்திணை - அடிப்படைக் கோட்பாடு:

ஓர் ஆணும் பெண்ணும் உள்ளத்தெழும் அன்பின் வழியாக ஒன்றுபட்டு கூடிவாழும் வாழ்வை அகம் என்றும், இது தவிர்ந்த பிறவற்றைப் புறம் என்றும் பகுத்துக் குறிப்பிடுகின்

றார். அகத்தே தோன்றி வளரும் காதல் உணர்வால் கூடிவாழும் அன்பிணையர் வாழ்வில் தோன்றும் இன்பம் பேரின்பம் என்பவற்றின் முழுமையை நுகர்ந்துணரலாமே யன்றி மொழியால் விளக்குதல் அரிது. அகத்தே கட்டமைக் கப்படும் வாழ்வு என்பதால் தொல்காப்பியர் இதனை அகத் திணை என்றார். அகம் என்றால் மனம். திணை என்றால் ஒழுக்கம். அகத்திணை, களவியல் - கற்பியல் என இரண்டு பகுப்புகளைக் கொண்டது.

அகவாழ்வை ஏழு ஒழுக்கங்களாக வகுத்துக்காட்டுகின்றார் தொல்காப்பியர்.

*கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்*
*முற்படக் கிளந்த எழுதிணை என்ப.*

குறிஞ்சித்திணை, முல்லைத்திணை, மருதத்திணை, நெய்தல் திணை, பாலைத்திணை என்ற இந்த அன்பின ஐந்திணைக ளோடு கைக்கிளை பெருந்திணை என்ற இரண்டும் அகப்பு றத்திணைகளாகும்.

இவற்றுள் ஒத்த அன்புடையோர் மனமொத்த காதலராகும் அன்பின் ஐந்திணையே உயர்வாகப் போற்றப்படுகின்றது.

*இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு*
*அன்பொடு புணர்ந்த ஐந்திணை.*

அகத்துட் பெருகும் பேரன்பின் வழியே இணைவுற்று இன் பம், பொருள், அறம் என்ற முத்துறைகளிலும் சிறந்தோங்கும் காதலர் ஐந்திணைகளுக்குரியவரே.

பிற்காலத்தே ஒருதலைக்காதல் எனக் கருதப்பட்ட கைக் கிளை ஐன்பின் ஐந்திணைக்கும் தொடக்கமாக இருந்திருக்க லாம். அதாவது ஓர் ஆண் அல்லது பெண் உள்ளத்தே தோன்றும் முதற்காதல் உணர்வு கைக்கிளைத் தன்மையது. அந்த ஒரு பக்கத்து உணர்வு மற்றவர் அறியும்நிலையில் அவர் ஏற்றுக்கொண்டால் அது மனமொத்த காதலாகின்றது என்ற கருத்தையும் சில ஆய்வாளர் முன்வைக்கின்றனர்.

ஷேக்ஸ்பியரின் நாடகங்கள் குறித்து எழுதும் ஓர் ஆங்கிலப் பேராசியர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

'காதலாவது நெஞ்சு, அறிவு, புலன்கள் என்ற அனைத்தை யும் ஒருங்கே தூண்டிவிடும் ஒருபெரும் வேட்கை. காதலு ணர்ச்சி அவாவுடைதன்று, ஆர்வமுடையது. மேலெழுந்தவாரி யானதல்ல, மென்மையானது. துறவுடையதன்று, தூயது. ஆசா ரமுடையதன்று, அறமுடையது. விளையாட்டுத்தனமன்று, இன்பத்தை ஈந்தளிப்பது. இந்தக் காதல் மாந்தர்கள் திரும ணத்தில் நாட்டமுடையவர்கள். உரிமை நாட்டமோ, அன்பு மாற்றமோ அவர்களிடத்தே இல்லை. அவர்களுக்கு முதல் காதலே முழுக்காதலாகும்.'

இக்கூற்று தொல்காப்பியம் கூறும் அகத்திணைக் காதலர்க ளுக்கு அச்சொட்டப் பொருந்தும். ஒத்த இயல்புடைய ஆணும் பெண்ணும் எதிர்ப்பட்டுக் காதலில் பொருந்துவது குறுகிய நோக்கமுடையதன்று, அறஞ்சார்ந்த, அகன்றபெரும் குடும்ப வாழ்வைக் கட்டமைத்துக் கொள்வதை இலக்காகக் கொண்டது. இதுவே தொல்காப்பியர் கொண்ட அடிப்படை யான அகத்திணைக் கோட்பாடாகும். அறஞ்சான்றதே அன் பின் ஐந்திணை.

களவொழுக்கத்தில் புணர்ச்சி பற்றிய தொல்காப்பியர் கருத்து மிகத்தெளிவாக உள்ளது.

*'உள்ளப் புணர்ச்சியும் மெய்யுறு புணர்ச்சியும்*
*கள்ளப் புணர்ச்சியுள் காதலர்க்கு உரிய'*

இருவருடைய உள்ளத்திலும் ஊற்றெடுத்த அன்புப் பெருக் கினால், 'தான் - அவள்' என்ற வேற்றுமையின்றி இருவரும் ஒருவராகி ஒழுகும் உள்ளப் புணர்ச்சியே முதன்மையானது. உள்ளப்புணர்ச்சி முழுமைபெற்ற பின்னரே மெய்யாகிய உடல்கள் இணையும் புணர்ச்சி தோன்ற வேண்டும் என்கின் றார் தொல்காப்பியர். உள்ளப்புணர்ச்சியின்றி மெய்கள் கூடு மானால் அது அன்பின் ஐந்திணை என்ற வரம்புக்குள் உள் ளடங்காது.

மனம் ஒப்ப இயங்கினால் மட்டுமே அது களவொழுக்கம். களவொழுக்கத்தின்போதும் திருமணம் நடைபெறுதல் உண்டு. திருமணம் இருவகைப்படும் எனக் கூறும் தொல் காப்பியர்

*'வெளிப்பட வரைதல் படாமை வரைதல் என்று*
*ஆயிரண்டென்ப வரைதல் ஆறே'*
என்ற நூற்பாவால் விளக்குகின்றார்.

வெளிப்பட்டுத் திருமணம் செய்தல் ஒருவகை மற்றையது வெளிப்படாது திருமணம் செய்தல் எனக் குறிப்பிடுகின்றார்.

அதாவது களவு வாழ்வில் தோன்றும் மனமொத்த இணை வைத் திருமணம் என்றே குறிப்பிடுகின்றார். பொதுவாக காத லர் இருவரும் தனித்துச் சந்திக்கும்போது இருவரும் கண வன், மனைவி என தமக்குள் ஓர் உடன்பாட்டுக்குட்பட்ட பின் னரே களவொழுக்கத்தில் ஒழுகிச் செல்கின்றனர். இதனால் பண்டைத் தமிழ்ச் சமூகத்தில் காதலற்ற மணவாழ்வு பெரிதும் இருக்கவில்லை என்றே கருதலாம்.

களவு வாழ்வின் நிறைவை நோக்கிய நகர்வு அறத்தொடு நிற்றலுடன் தொடங்குகின்றது. அறத்தொடுநிற்றல் என்பதற்கு 'களவினைத் தமர்க்கு முறையே தெரியப்படுத்துதல்' எனக் கழகப் பேரகராதி விளக்கம் கூறுகின்றது. களவினைக் கற் பாக மாற்றுகின்ற அறச்செயலே 'அறத்தொடுநிற்றல்.'

தமிழரின் களவு வழக்கத்தை இழிந்துரைந்த ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழர் களவொழுக்கமானது, வழுவற்ற திரு மணத்தின் வழியே இன்பம்மிக்க குடும்ப வாழ்வைக் கட்ட மைப்பதையே இலக்காகக் கொண்டது என்பதை வலியுறுத் தும் நோக்கிலேயே கபிலர் குறிஞ்சிப்பாட்டு என்ற இலக்கி யத்தைப் படைத்தார் என்ற செய்தி தொல்காப்பியக் கோட்பா டுகளுக்கு வலுச் சேர்க்கின்றது.

தொடரும்..



vivekanandan.p@thaiveedu.com



# கம்பனின் கருவூலம் திறந்து... 14

-மாவிலி மைந்தன்
சி. சண்முகராஜா

சென்ற இதழில் பாலகாண்டத்தின் 13-வது படலமாகிய எழுச்சிப் படலத்தில் தசரத மன்னன் தனது பரிவாரங்களுடன் இராமனது திருமணத்துக்காக மிதிலை நகருக்குப் புறப்படுகின்ற செய்திகளையும், மிதிலைக்கு அவர்கள் செல்லும் வழியில் சந்திர சைலம் என்னும் மலைப் பகுதியில் தங்கியிருந்த போது கண்ட காட்சிகளைக் கூறும் 14-வது படலமாகிய வரைக்காட்சிப் படலத்தில் வருகின்ற செய்திகளையும் கூறும் கம்பரின் செய்யுள்கள் சிலவற்றிலுள்ள கவிநயத்தைப் படித்துக் களித்தோம்.

அடுத்து வருவது 15-வது படலமாகிய பூக்கொய் படலம். தசரதன் தனது சேனையோடு சோணையாற்றைச் சேர்ந்து அதன் கரையிலுள்ள சோலையில் தங்கியிருக்க, உடன் சென்ற ஆடவரும் மகளிரும் அச்சோலையில் பூக்கள் கொய்து மகிழ்ச்சியுடன் பொழுதைக் கழிப்பதைக் கூறும் நயம் மிகுந்த 39 செய்யுள்களைக் கொண்டதாக பூக்கொய் படலம் அமைந்திருக்கின்றது. அச்செய்யுள்களில் பூக்கொய்யும் மகளிர் பற்றிய வருணனைகளையும், ஆடவருடன் மகளிர் ஊடல் கொள்கின்ற காட்சிகளையும் மிகச் சிறப்பாகக் கம்பர் வடித்து வைத்துள்ளார். அவற்றிலிருந்து தேர்ந்தெடுத்த சில செய்யுள்களையும் அவற்றின் நயங்களையும் இப்பகுதியில் பார்க்கலாம்.

*'நதியினும் குளத்தும் பூவா நளினங்கள் குவளை யோடு*
*மதிநுதல் வல்லி பூப்ப நோக்கிய மழலைத் தும்பி*
*அதிசய மெய்திப் புக்கு வீழ்ந்தன அலைக்கப் போகா*
*புதியன கண்ட போழ்து விடுவரோ புதுமை பார்ப்பார்.'*

- கம்ப. பால. 982

பிறை போன்ற நெற்றியையுடைய மகளிராகிய பூங்கொடிகள் ஆறுகளிலும், குளங்களிலும் மலராத தாமரை மலர்களைக் குவளை மலர்களுடனே மலரச் செய்து நிற்க அதனைக் கண்ட இனிய ஓசையையுடைய வண்டினங்கள் வியப்படைந்து மொய்த்தனவாய் கைகளினால் அலைக்கவும் போகாதனவாக மொய்த்துக் கொண்டே இருந்தன. புதுமையை நாடி நிற்பவர்கள் புதிய பொருள்களைக் கண்டபோது விடுவரோ என்று அந்த வண்டுகளின் இயல்பைக் கூறிப் பொருள் தருகிறது இச்செய்யுள். மகளிரை மதிநுதல் வல்லி என்னும் பூங்கொடிகள் எனச் சாதாரண கொடிகளிலும் வேற்றுமை தோன்றக் கூறி அவர்களது முகத்தினைத் தாமரையாகவும், கண்களைக் குவளை மலர்களாகவும் உருவகம் செய்கிறார் கம்பர், ஆறுகளிலும் குளங்களிலும் பூக்கின்ற பூக்களை நிலத்திலே உள்ள கொடிகள் புதுமையாகப் பூத்திருக்கின்றன என வண்டுகள் வியப்புற்று அவர்களை மொய்க்கின்றன என்றும் கையால் அலைத்தும் விலகாமல் தங்கின என்றும் புதுமையான உருவக அணி நயத்துடன் நீர்நிலைகளிலே பூக்கின்ற பூக்கள் நிலத்திலே பூத்திருக்கின்றன என வேற்றுப் பொருள் வைப்பணி என்னும் அணிநயமும் பொருந்த இச்செய்யுளைக் கம்பர் சிறப்பாகப் படைத்துள்ளார். வியப்புற்று மொய்த்த வண்டுகள் கையால் அலைத்தும் விலகாமல் தங்கியதை மானிட உலகியலுடன் பொருத்தி வைத்துப் 'புதியன கண்ட போது விடுவரோ புதுமை பார்ப்போர்' என்னும் சிறப்பான சொற்றொடரால் செய்யுளின் ஈற்றடியை அமைந்திருப்பதும் கம்பரின் கவித்திறனைக் காட்டுகிறது.

அந்தச் சோலையினிடத்தே ஆடவரும் மகளிரும் பூக்களைப் பறித்து விளையாடுவதும், அவ்வேளைகளில் மகளிர் ஆடவரிடத்தே ஊடல் கொள்வதுமாகப் பல காட்சிகள் நிகழ்ந்தேறுவதைக் கம்பர் பல செய்யுள்களால் காட்சிப் படுத்துவார்.

*'போரென்ன வீங்கும் பொருப்பென்ன பொலங்கொள் திண்தோள்*
*மாரன் னனையான் மலர்கொய் திருந்தானை வந்தோர்*
*காரன்ன கூந்தற் குயிலன்ன வள்கண்பு தைப்ப*
*ஆரென்ன லோடும் அனலென்ன வெதும்பு கின்றாள்.'*

- கம்ப. பால. 991

போரென்று சொன்ன மாத்திரத்திலேயே பூரிப்படைகின்ற மலையையொத்த தோள்களையுடையவனும், மன்மதனை ஒத்தவனுமாகிய தலைவன் பூப்பறித்துக் கொண்டிருந்தபோது மழை மேகத்தையொத்த கூந்தலையுடையவளும் குயிலைப் போன்ற குரலினிமை கொண்டவளுமான அவனுடைய தலைவி பின்னால் நெருங்கி வந்து அவனது கண்களைக் கையினால் பொத்தி மூடினாள். அப்பொழுது அவன் 'கண்களை மூடியவர் யார்?' என வினாவியவுடனே அவள் ஊடலினால் நெருப்பைப்போல மூச்சு விட்டு வெதும்பத் தொடங்குகிறாள் என்பது இச்செய்யுளின் பொருள்.

கண்ணை மூடியவுடனே தன் மனைவியின் மெய்த் தீண்டலை அறிந்து கண்ணை மூடியவள் தன் மனைவி தானென்று திண் ணமாகத் தெரிந்து கொள்ள வேண்டிய கணவன், 'யார்' என்று வினவியது அவளுக்குச் சினத்தை ஏற்படுத்துகிறது. 'இவனிடத்தே நம்மைப்போல் விளையாடுவதற்கு வேறு பல மகளிர் இருக்கின்றனர் போலும்' என்று உடனே அவனுடன் ஊடல் கொண்டு நெருப்பைப்போல மூச்சு விட்டு வெதும்பு கின்றாள் எனக் கம்பர் நயம்படக் கூறுகின்றார்.

'யாரினும் காதலம் என்றேனா ஊடினாள் யாரினும் யாரினும் என்று' (திருக்குறள் 1314, புலவி நுணுக்கம்) என்னும் திருக் குறளை இச்செய்யுளுடன் ஒப்பு நோக்கலாம். உன்னைத்த விர வேறு யாருடனும் நான் காதல் கொள்ளவில்லை என்று கூறினேனா, 'அந்த யார் என்பவர் யார்?' எனக்கேட்டு என் னோடு ஊடினாள் என்னும் திருவள்ளுவரின் கவிநயத்தோடு கம்பரின் கவிநயம் ஒத்திருப்பதை இச்செய்யுளில் காண முடி கிறது. பொருப்பன்ன தோள், மாரன் னனையான், காரென்ன கூந்தல், குயிலன்ன அவள், அழலென்ன வெதும்பல் என இச்செய்யுள் முழுவதும் உவமையணி நயங்கள் பொலிந்து காணப்படுகின்றன.

**புனல் விளையாட்டில்**
**ஈடுபட்டுக் களித்து மகிழ்ந்து**
**இயற்கையோடு**
**ஒன்றி வாழும் மரபு**
**பழந்தமிழர் வாழ்வியலில்**
**காணப்பட்டதைச்**
**சங்க இலக்கியங்களும்**
**எடுத்துக் காட்டுகின்றன.**

இவ்வாறாகப் பல்வகையினரான ஆடவரிடத்தும் மகளிரிடத் தும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் கூறுவதாக அமைந்த செய்யுள் களிலே மேலுமொரு சுவைமிக்க செய்யுளைப் பார்க்கலாம்.

*'யாழொக் கும்சொற் பொன்னனை யாளோ ரிகல்மன்னன்*
*தாழத் தாழாள் ஆழ்ந்த மனத்தாள் தளர்கின்றாள்*
*ஆழத் துள்ளும் கள்ள நினைப்பாள் அவனின்ற*
*சூழற் கேதன் கிள்ளையை யேவித் தொடர்வாளும்.'*

- கம்ப. பால. 997

யாழின் இசையை ஒத்த இனிய சொல்லையுடைய திருமக ளைப் போன்றவளான பெண்ணொருத்தி ஊடல் கொண்டிருந் தபோது, ஒப்பற்ற வலிமையுடைய தன் கணவனான மன்னன் தன்னை வணங்கி நிற்கவும் முதலில் மனம் இளகாதவளாயி ருக்க, அவன் அப்பால் சென்றுவிடவே பின்னர் மனம் தளர்ந்து இளகியவளாக ஆழ்ந்து எண்ணுகின்ற கள்ளமான நினைப்பைக் கொண்டவளாகத் தன் கணவன் சென்று தங்கி யிருந்த இடத்திற்குத் தன் கிளிப்பிள்ளையை அனுப்பி அத னைத் தேடிச் செல்பவளைப்போலச் சென்றாள் என்பது இச் செய்யுளின் பொருள்.

முதலில் கணவன் தன்னை வணங்கி நின்றபோது ஊடலி னால் அவனை மதியாதிருந்தாள். அதனைப் பொறுக்க மாட் டாமல் தலைவன் அந்த இடத்திலிருந்து விலகிச் செல்கி றான். பின்னர் அப்பெண் தன்மனம் இளகித் தளர்ந்தவளாக 'ஊடல் நீடித்தால், ஒருவேளை தலைவன் வேறொரு மங்கை யைத் தேடிச் சென்று விடுவானோ' என அச்சம் கொள்கி றாள். தானாகவே கணவனை நாடிச் செல்வதானால் தனது சுய மதிப்புக்கு இழுக்காகிவிடும் என்னும் எண்ணம் மேலிட மூளை சாதுரியமாகச் சிந்திக்கிறது. முதலில் தனது கிளியை அவனுள்ள இடத்துக்கு அனுப்பிவிட்டு அதனைத் தேடிச் செல்பவளைப்போல தலைவனுள்ள இடத்துக்குத் தலைவி சென்று ஊடல் தணிப்பதற்கு மறைமுகமாக வழி காண்கி றாள். இவ்வாறு கம்பர் மனித மனங்களிலே ஏற்படுகின்ற உளவியல் வடிகால் மாற்றங்களை அழகாக இச்செய்யுளில் பதித்துள்ளார்.

பூக்கள் கொய்து விளையாடிப் பொழுதைப் போக்கிய ஆட வரும் மகளிரும் புனல் விளையாட்டில் மூழ்கிக் களிப்பதை அடுத்துவரும் 16-வது படலமாகிய புனல் விளையாட்டுப் பட லத்தில் 32 செய்யுள்களில் கம்பர் எடுத்து வருகிறார். ஆண் யானைகள் பெண் யானைகளோடு வருவதைப்போல ஆடவ ரும் மகளிரும் நீர் நிலைகளை நோக்கி வந்து நீரில் மூழ்கி விளையாடுகிறார்கள். மகளிர் நீர் நிலைகளில் இறங்கிய போது காணப்பட்ட காட்சியைக் கம்பர் இவ்வாறு வருணனை செய்கிறார்.

*'மையவாம் குவளை யெல்லாம் மாதர்கண் மலர்கள் பூத்த*
*கையவாம் உருவத் தார்தம் கண்மலர் குவளை பூத்த*
*செய்யதா மரைக ளெல்லாம் தெரிவையர் முகங்கள் பூத்த*
*தையலார் முகங்கள் செய்ய தாமரை பூத்த வன்றே.'*

- கம்ப. பால. 1015

கருமை நிறம் பொருந்திய குவளை மலர்களெல்லாம் அங் கேயுள்ள மாதர்களது கண்மலர்களைப் போலப் பூத்தன. அம்மகளிரது கண்கள் அங்கே மலர்ந்துள்ள குவளை மலர்க ளைப் போலத் தோன்றின. செந்தாமரைகள் எல்லாம் மடந் தையரின் முகங்களைப் போலப் பூத்தன. அம்மாதர்களு டைய முகங்கள் எல்லாம் செந்தாமரை மலர்கள் போல் விளங்கின. இவ்வாறு கம்பர் உவமையையும் உவமானத்தை யும் ஒன்றிற்கொன்று மாற்றி இச்செய்யுளில் வைத்திருக்கும் வேறுபட்ட உவமை உத்தியைப் புகழ் பொருள் உவமை யணி என்பர். இதனை இதரேதரம் என வடமொழியாலும் அழைப்பர்.

நீர் நிலைகளில் நீராடும் மகளிரின் விளையாடல்களைக்

கூறும் செய்யுள்களுள் மேலும் ஒரு செய்யுள் பின்வருமாறு:

*‘வண்டுணக் கமழும் சுண்ணம் வாசநெய் நானத்தோடும்*
*கொண்டெதிர் வீசுவாரும் கோதைகொண் டோச்சுவாரும்*
*தொண்டைவாய் பெய்து தூநீர் கொழுநர்மேல்*
*தூகின்றாரும்*
*புண்டரீ கக்கை கூப்பிப் புனல்முகத் திறைக்கின்றாரும்.’*
- கம்ப. பால. 1017

வண்டுகள் மொய்த்து உண்ணும்படி நறுமணம் வீசுகின்ற வாசனைச் சுண்ணத்தை நறுமணம் வீசுகின்ற தைலத்துடன் கஸ்தூரியையும் கொண்டு ஒருவர் மீது ஒருவர் தூவுகின்றவர்களும் மலர்மாலைகளை ஒருவர்மேலொருவர் வீசுகின்றவர்களும், தூய நீரையெடுத்து நீரைத் தூவுகின்ற கருவிகளின் வாயிலே சேர்த்துத் தமது கணவர்களின்மேல் தூவுகின்றவர்களும், தாமரை மலர்போன்ற கைகளினால் நீரையள்ளி மற்றவர்களின் மேல் சொரிகின்றவர்களுமாக ஆடவரும் மகளிரும் புனல் விளையாடிக் களிக்கின்ற இவை போன்ற பல காட்சிகளைக் கம்பர் வருணித்துக் காட்சிப்படுத்துக்கின்றார்.

புனல் விளையாட்டில் ஒருவர் மீது ஒருவர் சுண்ணம் முதலியவற்றைத் தூவி வீசி விளையாடுவதை,

*‘கண்ணிகொண் டெறிய வஞ்சிக் கால்தளர்ந் தசைந்து*
*சோர்வார்*
*சுண்ணமும் சாந்தும் வீழத் தொழுதனர் இரந்து நிற்பார்*
*ஒண்மலர் மாலை யோச்ச ஒசிந்துக் பிறழ வொல்கி*
*வெண்நெய்யிற் குழைந்து நிற்பார் வேற்கணாய்*
*ஆயினாரே.’*
- சிந்தா. 2659

என்னும் சீவக சிந்தாமணியிலுள்ள செய்யுளோடு ஒப்பு நோக்கலாம்.

இவ்வாறு புனல் விளையாட்டில் ஈடுபட்டுக் களித்து மகிழ்ந்து இயற்கையோடு ஒன்றி வாழும் மரபு பழந்தமிழர் வாழ்வியலில் காணப்பட்டதைச் சங்க இலக்கியங்களும் எடுத்துக் காட்டுகின்றன. வைகையாற்றில் புதுப்புனல் பொங்கிவழியும் போது மக்கள் நீராடிக் களிப்பதைச் சங்க இலக்கியமான எட்டுத் தொகை நூல்களில் ஒன்றான பரிபாடல் வையை பற்றிய பல பாடல்களில் மிக அழகாக எடுத்துரைக்கின்றது.

மேலும் ஒரு அழகான செய்யுள் இவ்வாறு வருகிறது.

*‘பொற்றொடி தளிர்க்கைச் சங்கம் வண்டொடு*
*பலம்பியார்ப்ப*
*எற்றுநீர் குடையுந் தோறும் ஏந்துபே ரல்குல் நின்று*
*குற்றைமே கலைகள் நீங்கிச் சீறடி கவ்வக் காலிற்*
*சுற்றிய நாக மென்று துணுக்கத்தாற் துடிக்கின்றாரும்.’*
- கம்ப. பால. 1023

தளிர் போன்ற கைகளில் அணிந்த பொன்னாலான தொடிகளும், சங்க வளையல்களும், அணிந்துள்ள மாலைகளில் மொய்க்கின்ற வண்டுகளுடனே மாறுபட்டு ஆரவாரித்து ஒலி-யெழுப்பிக் கொண்டிருக்க மோதுகின்ற நீரிலே மூழ்கும்போதெல்லாம் அகன்ற அல்குலையுடைய இடையைச் சுற்றியிருக்கின்ற மேகலை என்னும் இடையணிகள் நழுவி வந்து அவர்களது சிவந்த காலடிகளைச் சுற்றும்போது தங்கள் கால்களைப் பாம்பு சுற்றி விட்டதாக எண்ணித் துணுக்குற்றுத் துடிப்பவர்களானார்கள் என்பதாக இச்செய்யுள் பொருள் தருகிறது.

இயல்பாக நிகழ்கின்ற ஒன்றை மாற்றுச் சிந்தனை கொண்ட கற்பனையோடு கம்பர் கூறியுள்ளார். மேகலைகள் நழுவிக் காலைச் சுற்றியதை அரவம் கவ்வியதாகக் கருதிப் பேரச்சம் கொண்டார்கள் எனக்கூறியுள்ளது செய்யுள் உத்தியில் வரும் மயக்க அணி நயத்தின்பாற்பட்டதாகும்.

மங்கையொருத்தி நீரில் மூழ்கிக் குளிக்கின்ற காட்சியை வருணிக்கின்ற இன்னொரு செய்யுள் வருமாறு:

*‘தேரிடைக் கொண்ட அல்குல் தெங்கிடைக் கொண்ட*
*கொங்கை*
*யாரிடைச் சென்றும் கொள்ளா ஒண்குலா அழகும்*
*கொண்டாள்*
*வாருடைத் தனமீதாட மூழ்கினாள் வதனம் மைதீர்*
*நீரிடைத்தோன்றும் திங்கள் நிழலெனப் பொலிந்த தன்றே.’*
- கம்ப. பால. 1029

தேரிடத்தே கொண்ட அல்குலையம், தென்னை மரத்திற் கொண்ட கொங்கைகளையும் எவரிடத்தே போனாலும் கொள்ளமுடியாத ஒளிபொருந்திய அழகினைக் கொண்டவளுமான பெண்ணொருத்தி கச்சணிந்த தனங்கள் வெளிப்படுமாறு மூழ்கினாள். மூழ்கிய அவளுடைய முகமானது, தெளிந்த நீரினிடையே தோன்றுகின்ற முழுமதியின் நிழலைப் போல் பொலிந்து தோன்றிற்று என்பது செய்யுளின் பொருள். தேர்த் தட்டினைப் போன்ற அல்குலையும் இளநீர்க்காய்கள் போன்ற தனங்களையும் எவர்க்கும் இல்லாப் பேரழகையும் படைத்த மங்கையொருத்தி நீரில் மூழ்கிய காட்சியை அழகிய வருணனையுடன் படம் பிடித்துக் காட்டுகிறார் கம்பர்.

இவ்வாறு இரண்டு படலங்களிலும் ஆடவரும் மகளிரும் பூக் கொய்து விளையாடும் காட்சிகளையும், நீர்நிலைகளில் இறங்கி நீராடுகின்ற காட்சிகளையும் வருணித்துக் கம்பர் படைத்துள்ள அத்துணை செய்யுள்களும் அவற்றை நுவல்வோரின் உணர்ச்சிகளைத் தூண்டி உள்ளக் கிளர்ச்சியை ஏற்படுத்த வல்லன. இவ்விரு படலங்களிலுமுள்ள ஒவ்வொரு செய்யுளிலும் இயற்கையின் எழிலையும், இயற்கையோடு ஒட்டி வாழ்ந்த அன்றைய மாந்தரின் வாழ்வியலையும் கம்பர் தனது கவித்திறனுடன் வருணித்துக் காட்சிப் படுத்தியுள்ளதைக் காணலாம். அவற்றிற்குச் சான்று பகரக்கூடியதாகச் சில செய்யுள்களையே இக்கட்டுரையில் எடுத்துக் காட்டியுள்ளேன். இதனை அடுத்துவரும் படலங்களிலும் நாம் நயந்து சுவைக்கக் கூடிய செய்யுள்கள் அடங்கிய கம்பனின் கவிநயத்தை அடுத்த இதழில் எடுத்து வருகிறேன்.

(வளரும்)



shanmugarajah@thaiveedu.com

# தொன்மையைத் தேடி சங்க இலக்கியம் வழி - ஆதித் தமிழர், திணை வழிக் குடிகள்

- செல்வநாயகி ஸ்ரீதாஸ்

**தொ**ல்காப்பியம் பொருளதிகாரம், பாடல் பாடும் புலவனுக்காக வகுக்கப்பட்ட 'கவிதை மரபாகும்'. தொல்காப்பியப் பொருளதிகார நூற்பாக்களையே முன்னிறுத்தி அந்'நூற்பாக்களில் பயின்று வரும்' கவிதை மரபுகளிலிருந்து, அக்காலச் சமூகம், அரச உருவாக்கத்தின் அடிப்படை, வளர்ச்சி, அரச விரிவாக்கம் முதலாய தகவல்களைப் பிரித்தெடுத்து 'ஆதித் தமிழர், திணைவழிக் குடிகள், திணை வழியாகவே அரசு தென்னாட்டில் உருவாகியிருக்கிறது, விரிவாகியிருக்கிறது.' என்பதை நிறுவுவது இவ் ஆய்வின் கருதுகோளாகும்.

தொல்காப்பியம் பொருளதிகாரம் கூறும் மக்கள் குழுக்கள், அவற்றின் சமூக அமைப்பு, சமூகங்களுக்கு இடையேயான உறவு முதலிய விடயங்களைக் குழுத் தலைமைகள், மூவேந்தர், வேளிர், பிற குறுநிலமன்னர், உபகாரிகள் முதலியோரை முன்னிலைப்படுத்தி, அரச உருவாக்கம், விரிவாக்கம் பற்றிய ஒரு கருத்தாடலை நிலைநாட்டுவதற்குரிய தளத்தை, தொல்காப்பியம் என்னும் சங்க இலக்கணத்தையும் சங்க இலக்கியங்களான எட்டுத்தொகை, பத்துப்பாட்டு இலக்கியங்களையும் சான்றாக்கி நிலைநாட்ட முயலும் முயற்சி இதுவாகும்.

### கடந்தவை...

கடந்த 24 இயல்களிலும் சேர, சோழ, பாண்டியர், வேளிர் ஆகிய குழுத் தலைமைகளின் தொடக்கம், வளர்ச்சி முதலியவை இலக்கியச் சான்றுகள், கல்வெட்டுகள், அகழாய்வுச் சான்றுகளின் துணையுடன் ஆராயப்பட்டன.

இவற்றைக் கடந்து, தொல்காப்பியமும் சங்க இலக்கியமும் காட்டும் அரசியல், சமூக, பொருளாதார நிலைகளைக் காரண காரிய ரீதியாக விளக்க முயல்வது இவ்விறுதிப் பகுதியாக அமைகிறது.

## தமிழ் மொழி வரலாறு (தொகுப்பு):

ஏற்கெனவே விரிவாக ஆராயப்பட்ட தமிழ் மொழியின் வரலாற்றைச் சுருக்கி நினைவு கூர்வோம் -

### வரலாற்றுக்கு முற்பட்ட காலம்:

'தென், மத்திய இந்தியாவிலும் அதனைச் சூழவுள்ள நாடுகளிலும் வாழும் திராவிட மொழிக் குடும்பத்தின் இருப்பை ஏறக்குறைய 4500 ஆண்டுகளுக்கு முற்பட்டதாக' - மக்ஸ் பிளாங்க் சர்வதேச ஆய்வுத் தாபனம் (Max Planck Institute for the Science of Human History), என்னும் சர்வதேச குழு, மொழியியல் அடிப்படையில் மேற்கொண்ட ஓர் ஆய்வின் முடிவாக வெளியிட்டுள்ளது. இந்த ஆய்வின் முடிவு ஏற்கெனவே மேற்கொள்ளப்பட்ட மொழியியல், தொல்லியல் ஆய்வுகளுடன் உடன்படுகிறது.

'சிந்துவெளி, ஹரப்பா நாகரிகம் தமிழரது நாகரிகம்' என்பதை உறுதி செய்வதற்கான முயற்சிகளுக்கு ஆதரவின்மையுடன் தடைகளும் ஏராளம்.

சிந்துவெளி, ஹரப்பா நாகரிகம் திராவிட நாகரிகம் அல்ல என்பதையும் சிந்துவெளி நாகரிகத்தை விட ஆதிச்சநல்லூர் நாகரிகம் பிந்தியது என்பதையும் உறுதிப்படுத்துவதற்காக எடுக்கப்படும் மறைமுக நகர்வுகள் பல.

இவற்றையெல்லாம் தாண்டி சிந்துவெளி பற்றிய ஆய்வு வேறொரு திசையில் ஆமை வேகத்திலாவது நடந்து கொண்டு தான் இருக்கிறது. இன்றைய தலைமுறை இப்போது தானே உயிர்த்திருக்கிறது. காலம் கடந்தும் உண்மை வெளிவரத்தான் செய்யும்.

## பழைய கற்காலம் பற்றிய ஆய்வுகள்:

மனிதனின் வளர்ச்சிப் பாதையில் அவன், கடந்து வந்த படிகள் பல. ஆதியில் உணவுக்காகவும் தற்பாதுகாப்பிற்காகவும் கூட்டம் கூட்டமாகத் திரிந்த காலத்தில் அவனுக்குக் கிடைத்த முதல் ஆயுதம் கல். மனிதன், கல் ஆயுதங்களைப் பயன்படுத்தி வாழ்ந்த காலம் கற்காலம் எனப்படுகிறது. காலக்கிரமத்தில் மனிதன், கல்லைக் கொண்டு அதிபயனுள்ள நுட்பமான கருவிகளை வடிவமைத்துப் பயன்படுத்தப் பழகிக் கொண்டான். ஆயுதங்களின் வளர்ச்சியுடன் மனித நாகரிக வளர்ச்சியும் பின்னிப் பிணைந்தது. கல் ஆயுதங்களைப் பயன்படுத்திய காலப்பகுதியைப் பொதுவாக பழைய கற்காலம், இடைக் கற்காலம், புதிய கற்காலம் என்று மூன்று காலப்பகுதிகளாகப் பிரிப்பர். இந்தக் காலப்பகுதிகள் ஒவ்வொன்றினிடையேயும் பல்லாயிரக்கணக்கான ஆண்டுகால இடைவெளி இருந்திருக்கலாம் என்று அனுமானிக்கப்படுகிறது.

தென் இந்தியாவில் கற்காலத்தில் மக்கள் வாழ்ந்திருந்தார்களா என்பதே இப்போது எமது முக்கியமான கேள்வி. அதாவது நாம் இந்நாட்டின் தொல் பழங்குடிகளா அல்லது வந்தேறு குடிகளா?.

தென்னாட்டவர், கடல்கோள் காரணமாக இந்துமாக் கடலுள் மூழ்கிப்போன நிலப்பரப்பிலும் கடலுள் மூழ்காது தப்பிய நிலப்பரப்பிலும் தொன்மை தொட்டு வாழ்ந்து வந்தவர்கள் என்பதை ஆய்வுகள் பலவும் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. பழைய கற்காலம் குறித்த அகழாய்வுகள் தமிழகத்தில் திருவள்ளூர் மாவட்டத்தில், வரலாற்றுச் சிறப்புமிக்க அத்திரம்பாக்கம் பகுதியில் மேற்கொள்ளப்பட்டது. இங்கு பழைய கற்காலக் கற்கருவிகளை, 1863-ம் ஆண்டில் பிரித்தானிய நிலவியல் வல்லுநரும், தொல்பொருள் ஆய்வாளருமான இராபர்ட் புரூஸ் புட் கண்டறிந்தார். அத்திரம்பாக்கம் தவிர்ந்த பூண்டி, குடியம், நெய்வேலி, வடமதுரை, பரிக்குளம் போன்ற ஊர்களிலும் இது தொடர்பான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன.

இங்குதான், 1964-65-ல் இந்தியத் தொல்லியல் பரப்பாய்வுத் துறையினர் ஆய்வு மேற்கொண்டு, நான்கு மண்ணடுக்குகள் இருப்பதைக் கண்டறிந்தனர். இப்பகுதியில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில், பழைய கற்கால மக்கள் வாழ்ந்தமைக்கான எச்சங்கள் காணப்படுவதைக் கண்டறிந்தனர். அகழாய்வில், முதல், இடை, கடைப் பழைய கற்காலப் பண்பாடுகள் தொடர்ச்சியாக நிலவியிருந்ததை மண்ணடுக்குகளின் ஆய்வு மூலம் வெளிப்படுத்தியுள்ளனர்.

## அத்திரம்பாக்கம் அகழாய்வில் கண்டறியப்பட்டவை:

- முதற்கட்ட பழையகற்கால (Lower Palaeolithic) கருவிகள் 15 இலட்சம் ஆண்டுகள் என்றும், இரண்டாம் கட்ட பழையகற்கால (Middle Palaeolithic) கருவிகள் 385,000 ஆண்டுகள் பழமையானது என்றும் அறியப்படுகிறது.
- கற்கருவிகளைக் காசுமோசெனிக் - நியூக்லைட் எனப்படும் இயலுலக புவிப் பரப்பியல் ஒளி ஆய்வு (Cosmogenic - Nuclide Burial Dating Method) செய்ததில் இக்கால முடிவுகள் பெறப்பட்டன எனவும் ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
- நுண்கற்காலத்தைச் (Microlithic / Mesolithic Period) சேர்ந்த கற்காலக் கருவிகள் திருநெல்வேலிப் பகுதியிலும், வைகை மற்றும் குண்டாறு ஆற்று படுகைகளிலும், புதிய கற்காலப் பண்பாடுகளின் கருவிகள் தமிழகத்தின் வடக்கு, வடமேற்குப் பகுதிகளில் குறிப்பாக தருமபுரி, கிருஷ்ணகிரி, திருவண்ணாமலை, வேலூர் மாவட்டங்களில் கிடைத்துள்ளன. அதன் அடுத்த காலக்கட்டமான இரும்புக் காலத்தைச் சார்ந்த சேலம் வட்டாரத்திலுள்ள மாங்காடு மற்றும் தெலுங்கனூர் ஊர்களிலுள்ள பெருங்கற்படை ஈமச் சின்னங்களில் கண்டறியப்பட்ட மாதிரிகளிலிருந்து இரும்புக் காலம் பொ.ஊ.மு.(கி.மு) 2000 எனக் காலக் கணக்கீடு செய்யப்பட்டுள்ளது (தினமணி செப்டெம்பர் 26, 2020).

## பெருங்கற்படைக் காலம்:

தமிழகத்தில், பழைய கற்காலம் முதலாக தொடர்ச்சியாக மக்கள் வாழ்ந்து வந்திருக்கிறார்கள் என்பதை ஆய்வாளர் சான்றுகள் சிலவற்றின் மூலமாக நிலைநாட்டியிருக்கிறார்கள்.

பெருங்கற்படைக் காலம் என்பது பெருங்கற்களைக் கொண்டு இறந்தவர்களுக்கு நினைவுச் சின்னங்களை அமைத்த காலப் பகுதியாகும்.

தமிழர் பண்பாட்டின் சிறந்த அம்சங்களில் முக்கியமானது இறந்தவர்கள் நினைவாக அவர்களுக்கு நினைவுச் சின்னம் அமைப்பது. இறந்த வீரனின் உடலை மூடிய கற்குவியல்கள் 'பதுக்கை, கல்பதுக்கை, கல்திட்டை' என்று அழைக்கப்பட்டன.
நடுகல் அமைக்கும் முறை பற்றித் தொல்காப்பியம் (பொ.ஊ.மு. 711) விளக்கமாகக் கூறுகிறது.

*'காட்சி கல்கோள் நீர்ப்படை நடுதல்*
*சீர்த்தகு மரபில் கல்லொடு புணர'*

- புறத்திணையியல் நூ. 5

பெருங்கற்படைச் சின்னங்களான திட்டைகள், கற்பதுக்கைகள், குத்துக் கற்கள், நடுகற்கள், கற்குவைகள் முதலியன தமிழ்நாட்டின் குறிஞ்சி நிலப்பகுதியிலும் அதனை அடுத்த முல்லை நிலப்பகுதிகளிலும் அதிகம் காணப்படுகின்றன. இவை அதிகம் காணப்படும் இடங்களாகத் தொண்டை நாட்டுப்பகுதிகளும் கொங்கு நாட்டுப் பகுதிகளும் பாண்டி நாட்டின் மேற்குப் பகுதிகளும் இருக்கின்றன. பெருங்கற்படைச் சின்னங்கள் உருவாகுவதற்குக் கற்கள் அதிகம் தேவை. எனவே பண்டைக் கால மக்கள் குறிஞ்சி, முல்லை நிலங்களில் நீண்டகாலம் வாழ்ந்தபடியால் இச் சின்னங்கள் இப்பகுதியிலேயே அதிகம் கிடைக்கின்றன.

பெருங்கற்படைக் காலம் பொ.ஊ.மு. 1000 முதல் பொ.ஊ.பி. (கி.பி) முதலாம் நூற்றாண்டு வரை நீண்டு காணப்பட்டிருக்கலாம் என்கிறார் முனைவர் கா. ராஜன்.

வடமேற்கு அல்லது மத்திய தமிழகத்தில் பையம்பள்ளி, அப்புக்கல், மயிலாடும்பாறை போன்ற பகுதிகளில் செய்யப்பட்ட அகழாய்வுகள் வடதமிழகம் புதிய கற்காலத்தில் இருந்து (பொ.ஊ.மு. 3000-1000) பெருங்கற் காலத்திற்கு (பொ.ஊ.மு. 1000-300) மாறியதைக் காட்டுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

## தாழிக் காலம்:

தமிழகத்தின் மருத நிலப் பகுதிகளான தென் பெண்ணை, காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய ஆற்றுப் படுக்கைகளிலும் நெய்தல் பகுதிகளான காஞ்சிபுரம் போன்ற இடங்களிலும் அதிகமாக முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன.

மருதமும் நெய்தலும் மண் வளமிக்கவை என்பதால் இவற்

றில் தாழிகள் செய்வதற்கான மூலப் பொருட்கள் அதிகம் கிடைத்திருக்கும்.

பெருங்கற்படைக் காலமும் தாழிகளின் காலமும் ஒன்றென ஆராய்ச்சியாளர்கள் கொள்வர்:

- பெருங்கற்படைச் சின்னங்களில் காணப்படும் கறுப்பு சிவப்பு மட்பாண்டங்கள் இத்தாழிகளின் ஊடே காணப்ப டுகின்றன.
- தாழிகளினுள் கிடைக்கும் இரும்புப் பொருட்கள் பெருங் கற் படைச் சின்னங்களிலும் காணப்படுகின்றன.

பெருங்கற்படைச் சின்னங்களின் காலமும் தாழிகளின் கால மும் ஒன்றல்ல என்பதற்கான காரணங்கள்:

- முதுமக்கள் தாழிகளுடன் பெருங்கற்படைச் சின்னங்கள் இணைந்து காணப்படாமை.
- அகழாய்வில் கிடைக்கும் தரவுகளின் அடிப்படையில் தாழிகள் பெருங்கற்படைச் சின்னங்களுக்குக் காலத்தால் முந்தியவையாக இருக்கலாம்.
- பெருங்கற்படை சமூகத்தை அதிகம் சார்ந்த வடதமிழகம் புதிய கற்காலத்தில் இருந்து பெருங்கற் சமூகத்துக்கு நிலையான வளர்ச்சி அடைந்ததும், மாறாகத் தாழிகளை அதிகம் சார்ந்திருந்த மத்திய மற்றும் தென் தமிழக கடற் கரைக்கு நெருக்கமான இடங்கள் இடைக்கற்காலத்தில் இருந்து நேரடியாகத் தாழிகளின் காலத்திற்கு வளர்ச்சி அடைந்த தன்மையும்,
- மேற்குத் தொடர்ச்சி மலைச்சாரலில் அமைந்துள்ள தேனி-கம்பம் பள்ளத்தாக்குகளில் கிடைத்தவை அனைத்தும் தாழிகளாகவே உள்ளன. இப்பகுதி குறிஞ்சி மற்றும் மருத நிலப்பகுதிகள் இணைந்த இடமாகும்.
- தமிழ் இலக்கியங்களில் வரும் சான்றுகளின்படி பாண்டி யர் தெற்கிலிருந்து வடக்கு நோக்கி வந்த சான்றுகளே கிடைத்துள்ளமை.

## தொகுப்புரை:

- தென்நாட்டில் பழைய கற்காலம் முதலாக மக்கள் தொடர்ச்சியாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள்.
- பண்டைக் காலம் முதல் தமிழ் நாட்டவர் கடல் வாணிபத் தில் ஈடுபட்டிருந்தார்கள்.
- தென்னகம் உலகின் கேந்திரத் தானத்தில் அமைந்திருப்ப தால் யவனர், மிலேச்சர் முதலாய அயல் நாட்டார் வணி கத்தின் பொருட்டு இங்கு வந்து தங்கியிருந்திருக்கிறார் கள்.
- வடதமிழகம் புதிய கற்காலத்தில் இருந்து (பொ.ஊ.மு. 3000-1000) பெருங்கற் காலத்திற்கு (பொ.ஊ.மு. 1000-300) மாறியதைக் காட்டுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.
- அதே வேளையில், தென்தமிழகத்தின் மருத நிலப் பகுதி களான தென் பெண்ணை, காவிரி, வைகை, தாமிரபரணி ஆகிய ஆற்றுப் படுக்கைகளிலும் நெய்தற் பகுதிகளான காஞ்சிபுரம் போன்ற இடங்களிலும் அதிகமாக முதுமக்கள் தாழிகள் காணப்படுகின்றன. அப் பகுதிகள், குறுனிக் கற்காலத்திலிருந்து (பொ.ஊ.மு. 10,000 முதல் பொ.ஊ.மு. 2,000) நேரடியாகத் தாழிக் காலத்திற்கே வளர்ச்சி அடைந் ததைச் சுட்டுகின்றன என்பது ஆய்வாளர் கருத்து.
- காஞ்சிபுர அகழாய்வில் கிடைத்த தாழிகளில் பெருங்கற் காலக் குறிகள் காணப்படவில்லை. மேலும் இத்தளம் ஆதிச்சநல்லூரை விட பழமையானது எனவும் கருத முடி யும்.
- ஆதிச்சநல்லூரின் காலம் தற்போதைக்கு பொ.ஊ.மு. 905 எனக் கரிமப் பரிசோதனையில் தீர்மானமாயிற்று.
- பழனியிலிருந்து 12 கி.மீ தொலைவில் அமைந்திருந்த பொருந்தல் அகழ்வாய்வில், தாழி ஒன்றில் அடைக்கப் பட்ட பானை ஒன்றில் 2 கிலோ நெல் கெட்டுப்போகாத நிலையில் கண்டெடுக்கப்பட்டது. அதனை ‘Accelerator Mass Spectrometry (AMS) by the Bata Analytic Lab, USA’ என்னும் தாபனத்தால் கரிமப் பரிசோதனைக்கு உட்படுத் தப்பட்டு அதன் காலம் பொ.ஊ.மு. 490 என்று உறுதிப்ப டுத்தப்பட்டது.
- அவ்வாறே கீழடியின் காலம் பொ.ஊ.மு. 6-ம் நூற்றாண்டு என்று கணிக்கப்பட்டது.

தமிழ் நாட்டு மக்களின் வரலாற்றுக்கு முற்பட்ட காலம் பற் றிய தொகுப்புரையைக் கண்டோம்.

அடுத்து வரலாற்றுக் காலத்தில் தமிழ் நாட்டுத் திணை நிலை வளர்ச்சி பற்றிப் பார்க்கலாம்.

தமிழ்நாட்டு மக்களின் தொன்மை நிறுவப்பட்டது. அடுத்த தாக மானிடவியல் அடிப்படையில் தமிழ்மக்கள் வரலாறு ஆய்வுக்கு உட்படுத்தப்படுகிறது.

மனிதர் பற்றிய அறிவியல் ஆய்வே மானிடவியல்.

மானிடவியல் பற்றி பேரா. ப. மருதநாயகத்தின் விளக்கம்:

‘மானிடவியல் என்னும் அறிவுத்துறை மனித இனம், அதன் பண்பாடு, சமூகங்களின் அமைப்புகள், பழக்கவழக்கங்கள், நம்பிக்கைகள், உறவுமுறைகள், மொழிக்கூறுபாடுகள் ஆகி யவற்றையெல்லாம் கணக்கிலெடுத்துக் கொண்டு முழு மனி தரை அடையாளம் காண முயல்கிறது. காலத்தாலும் அதன் எல்லைகள் மிக விரிந்தவை’

- ப. மருதநாயகம்.

இங்கு, மானிடவியல் துறையின் நோக்கம் மற்றும் அதன் பரப்பு விளக்கப்படுகிறது. எமது ஆய்வு பற்றி விளங்கிக் கொள்வதற்கு மானிடவியல் பற்றிய புரிதல் அவசியம்.



தொடரும்.

selvanayaki.s@thaiveedu.com

# தமிழியல் ஆய்வுகள் - வரலாறும் வளர்ச்சியும் 37

– நா. சுப்பிரமணியன்

இத்தொடரிலே சிலப்பதிகாரம் தொடர்பாக நிகழ்ந்துள்ள முக்கிய ஆய்வுகள் என்ற வகையிலே டாக்டர் க. பஞ்சாங்கம் அவர்களின் 'சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை' (1993) என்ற நூலாக்கம் நோக்கப்பட்டு வருகிறது. அந்நூலின் முதல் நான்கியல்களின் சாராம்சங்களைக் கடந்த இரு கட்டுரைகளில் நோக்கியுள்ளோம். அடுத்து, அதன் இறுதியிரு இயல்கள் இங்கு கவனத்துக்கு வரவுள்ளன. அவ்வகையில் இங்கு முதற்கவனத்துக்கு வருவது 'இருபதாம் நூற்றாண்டுத் திறனாய்வும் சிலப்பதிகாரமும்' என்ற தலைப்பிலான ஐந்தாம் இயலாகும். இவ்வியல், 'கடந்த நூற்றாண்டிலே தமிழ்ச் சூழலுக்கு அறிமுகமாகியிருந்த இலக்கியத் திறனாய்வுப் பார்வைகளின் ஊடாகச் சிலப்பதிகாரம் அணுகப்பட்டுள்ள முறைமைகள் தொடர்பான திறனாய்வுநிலைசார் விவரிப்பாக' அமைந்துள்ளது. இவ்விபரிப்பானது 'சிலப்பதிகாரம் - ஓர் அவலநாடகம்', 'சிலப்பதிகாரமும் கதை மாந்தர்களும்', 'சிலப்பதிகாரமும் நாட்டுப்புற இயலும்', 'சிலப்பதிகாரமும் ஒப்பாய்வியலும்', 'சிலப்பதிகாரமும் சமூகவியலும்' ஆகிய ஐந்து துணைத் தலைப்புகளில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இவற்றில் முதலிரு தலைப்புகள்சார் பார்வைகளும் சிலப்பதிகாரத்தை 'நாடகவகைசார் கட்டமைப்பாக'க்கொண்டு அணுகுபவையாகும். முதலாவது பார்வையானது அதன் நாடக வடிவநிலையை - குறிப்பாக, நாடகப்பண்பை - மையப்படுத்தியதாகும். அடுத்தது, அதன் கதைமாந்தரின் குணாம்சங்கள் மற்றும் இயங்குநிலைகள் ஆகியன பற்றிய பார்வையாக அமைந்ததாகும். 3-ம், 5-ம் பார்வைகள் சமூக பண்பாட்டுப் பின்புலங்கள் தொடர்பானவை என்பதை அவற்றின் தலைப்புகளே உணர்த்திநிற்பன. இடையிலுள்ள 4-ம் பார்வையானது ஒப்பியல் நோக்காக அமைந்ததாகும். மேற்படி முதலிரு பார்வைகள் இங்கு முதற்கவனத்துக்கு வருகின்றன.

சிலப்பதிகாரமானது அதன் கட்டமைப்புநிலையிலே நாடகப் பண்புசார்ந்த ஆக்கம் என்பதும் அதனை 'இயல், இசை, நாடகம் ஆகியவற்றின் இணைப்பில் உருவான முத்தமிழ்க் காப்பியம்' எனக் காணும் மரபு தமிழ்ச்சூழலிலே பல்லாண்டுகளாக நிலவிவருகின்றன என்பதும் பொதுவாக நாமறிந்த செய்திகளேயாம். இவ்வாறாக நிலவிவந்த மரபான பொதுப் பார்வையை மேலும் ஆழப்படுத்தும் வகையில் - குறிப்பாக அதன் நாடகநிலைசார் கட்டமைப்புக் கூறுகளை ஆய்வுநிலையில் அடையாளங்காணும் வகையில் - கடந்த நூற்றாண்டில் மேற்கொள்ளப்பட்ட திறனாய்வுச் செயற்பாடுகளில் முக்கியமானவையே இங்கு 'சிலப்பதிகாரம் - ஓர் அவல நாடகம்' என்ற துணைத் தலைப்பிலான பார்வையிலே நமது கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன.

'அவல நாடகம்' என்பது 'துன்பச் சுவை நாடகம்' எனப் பொருள்தருவதாகும். நாடக வகைசார் ஆக்கங்களை அவற்றின் சுவையம்சத்தைக் கருத்துள்கொண்டு 'இன்ப இயல்' (இன்பியல்) மற்றும் 'துன்ப வியல்' (துன்பியல்) என இருவகைப்படுத்தும் திறனாய்வு மரபானது ஐரோப்பிய மண்ணிலே பண்டைய கிரேக்க நாகரிக காலம்முதலே - குறிப்பாக அரிஸ்டாட்டில் (கி.மு. 384-322) காலம்முதலே வழக்கிலிருந்து வருவதாகும். பிரபல ஆங்கில நாடகாசிரியரான ஷேக்ஸ்பியரின் (கி.பி. 1564-1616) நாடகங்களை மேற்சுட்டியவாறு இருவகைப்படுத்தி நோக்கும்மரபு நிலவிவருகிறது என்பது நாமறிந்த செய்தியேயாம்.

மேற்சுட்டியவாறான 'ஐரோப்பிய நாடக மரபு' சார்ந்ததான 'அவல நாடகமரபு பற்றிய பார்வைகள் ஊடாகச் சிலப்பதிகாரம் அணுகப்பட்டுள்ள முறைமைகளே இங்கு 'சிலப்பதிகாரம் - ஓர் அவல நாடகம்' என்ற மேற்படித் துணைத் தலைப்பினூடாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இவ்வாறான பார்வைகளில் முனைப்பாக ஈடுபட்டிருந்தவர்களான மார்க்கபந்து சர்மா, ச.க. கோவிந்தசாமிப்பிள்ளை, தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், தா.ஏ. ஞானமூர்த்தி, ஏ. சுப்பிரமணியன், சு. நடராசன், மு.வை. அரவிந்தன், கா. செல்லப்பன், சு. முத்துசாமி, ஆ. முத்தையா, கா. செல்லப்பன் முதலிய பல ஆய்வாளர்களின் எழுத்தாக்கங்கள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன.

இவர்களின் இப்பார்வைகள்சார் அணுகுமுறைகளில் மூன்று அம்சங்கள் கவனத்தைப் பெற்றிருந்தன என்பது இங்கு சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஒன்று, 'அவல நாடகம் தொடர்பான அரிஸ்டாட்டிலின் சிந்தனைகளின் துணைகொண்டு சிலப்பதிகாரத்துக்கு விளக்கம் தரும் முறைமை' ஆகும். இரண்டாவது அம்சம், 'ஷேக்ஸ்பியரின் நாடகங்களுடன் சிலப்பதிகாரத்தைத் தொடர்புபடுத்தி நோக்கும் செயன்முறை' ஆகும். மூன்றாவதாக இவர்கள் கவனம் செலுத்தியுள்ள அம்சம்,' துன்பவி

யல் என்ற தத்துவத்தை - அதாவது கோட்பாட்டம்சத்தை - மையப்படுத்திய பார்வை' ஆகும்.

மேற்சுட்டிய மூவகைப் பார்வைகள் மற்றும் அணுகுமுறைகளில் முதலாவதான 'அரிஸ்டாட்டில் சிந்தனைகளுடன் சிலப்பதிகாரத்தைத் தொடர்புறுத்தி நோக்குதல்' என்ற வகைசார் அணுகுமுறைகளில் முக்கிய கவனத்தைப்பெற்ற அம்சங்களிலொன்று அவ்வாக்கத்தின் தலைமைக் கதைமாந்தருள் ஒருவனான கோவலனை ஒரு அவலநாடகத் தலைவனாக அடையாளப்படுத்தும் முயற்சியாகும்.

அரிஸ்டாட்டில் சிந்தனைப்படி 'அவலநாடகம்' என்பதன் முக்கிய குறிக்கோளாக அமைவது பார்வையாளர்களின் உள்ளங்களில் இரக்கம் மற்றும் அச்சம் ஆகிய உணர்வுகளை ஏற்படுத்தி அவ்வுள்ளங்களைத் தூய்மைப்படுத்துவதேயாகும். இவ்வகையில் அவலநாடகமொன்றின் தலைவனாகத் திகழ்பவன் முற்றிலும் நல்லவனாகவோ அல்லது கொடிய தீயவனாகவோ இல்லாதவனாக - அதாவது இடைநிலைக் குணாம்சங்கள் கொண்டவனாகப் படைக்கப்படல் வேண்டும். அத்தகையவன் செய்யும் ஒரு சிறு தவறே அவனுடைய வீழ்ச்சிக்குக் காரணமாகிவிடுகிறது என்றவகையில் நாடகக்கதை நிகழ்வு அமைதல் வேண்டும். இவ்வாறான அவனுடைய வீழ்ச்சியானது நாடகச் சுவைஞர்களுக்கு அவன்மீது இரக்கத்தையும் அச்ச உணர்வையும் ஏற்படுத்துவதாக அமையும் என்பதே அவலநாடகம் பற்றிய அரிஸ்டாட்டில் சிந்தனையின் சாராம்சமாகும். (இச்சாராம்சவிளக்கமானது பேராசிரியர் அ.அ. மணவாளன் அவர்களின் அரிஸ்டாட்டிலின் கவிதையியல் நூலின் தரவுகளிலிருந்தே இவ்வியலில் எடுத்தாளப்பெற்றுளது.)

மேற்சுட்டியவாறான அரிஸ்டாட்டில் சிந்தனைகளோடு சிலப்பதிகாரமானது எந்த அளவுக்கு ஒத்தமைவது என்பதை அடையாளங்காட்ட முற்பட்டவர்கள் என்றவகையில் முக்கியமானவர்களாக ச.க. கோவிந்தசாமிப் பிள்ளை, தா.ஏ. ஞானமூர்த்தி முதலிய சிலர் இங்கு சுட்டப்படுகின்றனர். இவர்கள் கோவலனை அரிஸ்டாட்டில் சிந்தனைப்படியான ஒரு 'அவலநாடகத் தலை'வனாகவே தரிசித்தவர்களாவர். இத் தொடர்பிலே ச.க. கோவிந்தசாமிப் பிள்ளையவர்கள் எழுதிய 'சிலப்பதிகாரமும் கிரேக்க நாடக இயலும்' (1946) என்ற கட்டுரையிலிருந்தும், தா.ஏ. ஞானமூர்த்தி அவர்களின் 'அவல வீரர்கள்' (1973) என்ற நூலிலிருந்தும் சில மேற்கோள்கள் இங்கு சான்றுகளாக எடுத்துக்காட்டப்பட்டுள்ளன. (மேற்படி கோவிந்தசாமிப் பிள்ளையவர்களின் கட்டுரையானது 'தமிழ்ப்பொழில்' என்ற இதழின் 16-வது துணரில் இடம்பெற்றது என்ற தகவல் அடிக் குறிப்பிலே தரப்பட்டுள்ளது.)

மேற்குறித்த ஆய்வாளர்களிருவரும் கோவலனை அவலநாடகத் தலைவனாக அடையாளப்படுத்தும் முயற்சியிலே 'அவன் விட்ட சிறுதவறு' என்ற விடயத்தில் - அதாவது 'அவலப்பிழை' என்ற அம்சத்தை அடையாளப்படுத்துவதில் - வேறுபடுகின்றனர் என்பதும் இங்கு எடுத்துக்காட்டப்படுகிறது. கோவலன் மாதவியை ஒரு கட்டத்திலே 'நாடகக் கணிகை' எனத் தவறாக மதிப்பிட்டதே கோவிந்தசாமிப் பிள்ளையின் பார்வையிலே 'அவலப்பிழை'யாகும்.

' 'குலத்திற்குன்றாதவள்' என்ற அடிகளாலேயே காட்டப்படும் மாதவியை ஒரு நொடியிலே 'நாடகக் கணிகை' எனத் தவறாக மதிப்பிட்டுச் செய்கிற பிழையினால்தான்; கருணை மறவனான அவன் வீழ்ச்சியடைகிறான்.' என்கிறார் அவர். ஆனால், தா.ஏ. ஞானமூர்த்தி அவர்களின் பார்வையிலே, 'கோவலன் கண்ணகியை விட்டுப் பிரிந்தமை'யே 'அலப்பிழை' எனப்படுகிறது. (சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை. ப.88)

இவ்வாறாக அரிஸ்டாட்டில் சிந்தனைகளுடன் சிலப்பதிகாரத்தைத் தொடர்புறுத்தும் வகையில் மேற்கொள்ளப்பட்ட பார்வைகள் தொடர்பான சில குறிப்புகளையடுத்து இங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ள மற்றொரு முக்கிய அம்சம், 'சிலப்பதிகாரக் கதையம்சமானது அவலநாடகம் என்ற வரையறையைக் கடந்த ஒன்றாகவும் கணிக்கப்பட்டுள்ளது' என்பதாகும். இக்கணிப்பானது அதாவது 'வஞ்சிக்காண்ட'ப் பகுதிக் கதையம்சத்தையும் உட்கொண்ட விளக்கமாக இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. முத்துச்சண்முகம் அவர்களின் துறவு தந்த காப்பியம் என்ற ஆக்கத்தைச் சான்றாகச் சுட்டி இக்கணிப்பு இங்கு முன்வைக்கப்பட்டுள்ளது. இத்தொடர்பிலான குறிப்பு வருமாறு:

'அரிஸ்டாட்டில் விதிகளுக்கு ஏற்ப இயக்கங்கொண்டிருக்கும் சிலம்பு ஓர் அவலநாடமே ஆனாலும், அடிகள் பழிக்குப்பழி பேசிய மானிடமகள் கண்ணகி, வஞ்சிக் காண்டத்தில், 'பாண்டியன் தவறிலன்', 'நான் அவன் மகள்' என்று தெய்வமாகி அமைதியடைந்து விடுவதாகப் படைத்து, நாடகத்தை இன்பமாக முடிக்கிறார். இது கீழைநாட்டுப் பண்பாட்டைப் பின்பற்றி எழுந்த முறை என்று விளக்குகிறார் முத்துச்சண்முகன்' (பார்க்க: சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை. ப.89)

சிலப்பதிகாரத்தை ஷேக்ஸ்பியரின் நாடகங்களுடன் தொடர்புபடுத்தி நோக்கும் முயற்சிகள் என்றவகையில் மார்க்கபந்து சர்மாவின் சிலப்பதிகார ரசனை, மணிவேலன் என்பாரின் அவலநாடக நோக்கில் சிலம்பு (1979), க. முத்துசாமி, ஆ. முத்தையா ஆகியோர் இணைந்தெழுதிய சிலம்பின் அவலம், முத்துசண்முகம் பிள்ளையவர்களின் அறம் தந்த காப்பியம் ஆகியன இங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன. இவை தொடர்பாக இங்கு பதிவாகியுள்ளவற்றில் முக்கியமான சில மட்டுமே இங்கு சுருக்கமாக நோக்கப்படவுள்ளன.

மார்க்கபந்து சர்மா, மணிவேலன் ஆகிய இருவரும் ஷேக்ஸ்பியரின் முக்கிய திறனாய்வாளர்களுள் ஒருவரான ஏ.சி. பிராட்லி (A.C.Bradley-1851-1935) அவர்கள் 'ஷேக்ஸ்பியரின் துன்பநாடகங்கள்' பற்றி முன்வைத்த சிந்தனைகளை அடியொற்றிச் சிலப்பதிகாரத்தை அணுகியவர்களாவர்.

மார்க்கபந்து சர்மா அவர்களின் பார்வையின் முக்கிய அம்சமாக இங்கு எடுத்துக்காட்டப்படுவது 'நாடக அமைப்பு' மற்றும் 'நாடக உத்திகள்' ஆகியவற்றை மையப்படுத்திய அவருடைய அணுகுமுறையாகும். அவர், ஷேக்ஸ்பியரின் துன்பவியல் நாடகங்கள், 'தோற்றுவாய்', 'போராட்டத்தின் வளர்ச்சி', 'திருப்புமுனை', 'போராட்டத்தின் எதிர்வளர்ச்சி' மற்றும் 'வீழ்ச்சி' (அ) 'அழிவு' (ஆ) 'முடிவு' ஆகிய ஐந்து பகுதிகளைக் கொண்டு விளங்குவன' என்பதைச் சுட்டி, 'அவ்வகைக்

கட்டமைப்பைச் சிலப்பதிகாரத்திலும் காணமுடியும்' என விளக்கியுரைத்துள்ளார். அவ்வொப்பீட்டினூடாகச், 'சிலப்பதி காரம் சிறந்த ஒரு நாடக ஆக்கமாகத் திகழ்கிறது' எனவும் அவர் மதிப்பிட்டுள்ளார் என்பதும் இங்கு எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

இவ்வாறு மார்க்கபந்து சர்மா ஷேக்ஸ்பியரின் நாடகங்களுட னான ஒப்பீட்டிலே பயன்படுத்தியுள்ளதான மேற்படி ஐந்து பகுதிகள் என்ற கருத்தாக்கத்தோடு ஒத்த கருத்தாக்கமொன்று ஏற்கெனவே தமிழரின் சிந்தனைமரபில் நிலவிவந்துள்ள ஒன்று தான் என்பதை உணர்த்தும் வகையிலான ஆய்வுக் குறிப் பொன்றும் இங்கு பதிவாகியுள்ளது என்பதும் இங்கு குறிப்பி டப்படவேண்டிய முக்கிய செய்தியாகிறது. இதற்காதாரமாக இங்கு எடுத்துக்காட்டப்படுவது சிலப்பதிகாரத்தின் அடி யார்க்கு நல்லாருரையில் இடம்பெற்றுள்ள 'சந்தி' என்பதுபற் றித் தரப்பட்டுள்ள விளக்கமாகும். இவ்விளக்கமானது இங்கு ஆய்வாளர் மு.வை. அரவிந்தன் அவர்களின் 'இளங்கோவடி களின் நாடகத்திறன்' என்ற நூலினின்று எடுத்துக் காட்டப் பட்டுள்ளது. இத்தொடர்பில் இங்கு பதிவாகியுள்ள முக்கிய குறிப்பொன்று வருமாறு:

'மேற்கூறிய இந்த ஐந்து பகுதிகளை அடியார்க்கு நல்லார், 'சந்தி ஐந்து வகைப்படும்' என விளக்கும் பகுதியோடு மு.வை. அரவிந்தன் ஒப்பிட்டுக் காட்டுவது, உரையாசிரியர் கள் நாடகமாகவே சிலம்பைக்கண்டு தெளிந்தனர் என்பதற் குச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குவதோடு, இலக்கியம் பற்றிய ஆழமான பார்வைகளும் தமிழ்ச்சூழலில் நிலவிவந் துள்ளன: ஆனால் அவை ஒழுங்குபடுத்தப்படவில்லை என்ற கருத்துக்கு வலுச் சேர்க்கின்றன.' (இத்தொடர்பிலான மேல திக விளக்கங்களுக்குப் பார்க்க: மேற்படி நூல்: பக். 90-91)

சிலப்பதிகாரத்தைப் பற்றிய மணிவேலன் அவர்களின் ஆக்க மாக இங்கு எடுத்துக்காட்டப்படுவது அவலநாடகநோக்கில் சிலம்பு (1979) என்ற நூலாகும். ஏ.சி. பிராட்லி அவர்களின் அவலநாடகத் தலைவன் பற்றிய கருத்தாக்கத்தை' மையப்ப டுத்தியதாக அமைந்ததான மணிவேலனுடைய பார்வையா னது, 'கோவலனை அவலத் தலைவனாக அடையாளப்படுத் துவதில் மார்க்கபந்து சர்மா அவர்களின் பார்வையைவிடத் தெளிவானதாக உளது' என்பதான மதிப்பீடு இங்கு முன் வைக்கப்பட்டுள்ளது. (மேற்படி நூல் ப.92)

க. முத்துச்சாமி, ஆ. முத்தையா ஆகியோர் இணைந்தெழு திய சிலம்பின் அவலம் என்ற நூலானது 'இலக்கியமும் அவ லமும்', 'இளங்கோ நோக்கில் அவலம்', 'கதைப்பின்னலில் அவலம்' முதலான பல்வேறு துணைத் தலைப்புகளில் சிலப் பதிகாரத்தின் அவலம் என்ற அம்சத்தை விளக்கியுரைத்துள் ளது. முத்துசண்முகம் பிள்ளையவர்கள் தமது 'அறம் தந்த காப்பியம்' என்ற ஆக்கத்தில் சிலப்பதிகாரக் கோவலனைச் ஷேக்ஸ்பியரின் ஹம்லெட் பாத்திரத்துடன் ஒப்புநோக்கியுள் ளார். அவ்வொப்பீட்டிலே கோவலன் பாத்திரமானது அரிஸ் டாட்டிலின் அவலநாடக விதிகளுக்கு ஏற்ற ஒன்றாகச் சிறப் பானவகையில் திகழ்வதாக அவர் விளக்கியுள்ளார்.(மேற்படி நூல் ப.92)

'சிலப்பதிகாரத்தை ஒரு அவலநாடகமாகக் காணும் முயற்சி யிலே 'துன்பவியல் என்ற தத்துவத்தை மையப்படுத்திய பார்வை' -யை மேற்கொண்ட ஒருவராக இங்கு சுட்டப்படுப வர் பேராசிரியர் கா. செல்லப்பன் ஆவார். அவர் எழுதிய 'சிலம்பின் தீது' என்ற கட்டுரை சிலப்பதிகாரத் திறனாய்வு வரலாற்றிலே முதற்கவனத்தைப் பெறத்தக்க முக்கியத்துவமு டையதாக இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கட்டுரை உலக இதய ஒலி என்ற இதழில் 1971-ல் வெளிவந்தது என்ற தக வல் அடிக் குறிப்பாகத் தரப்பட்டுள்ளது. (மேற்படி:ப.93.) இக்கட்டுரையிலிருந்து இங்கு எடுத்துக்காட்டப் பெற்றுள்ள குறிப்பொன்று வருமாறு:

'இளங்கோ தீதின் தோற்றம், வளர்ச்சி ஆகியவற்றைத் தனிம னிதர் அல்லது சமுதாயநிலையிலே மாத்திரம் பார்த்தார் எனக்கொள்வது தவறு. அதை ஒரு நிரந்தர அறச்சிக்கலாகக் கண்டு, உலக அமைப்பிலே உள்ள ஒரு புரியாத புதிராக உணர்ந்தார்;. ஏனென்றால் என்னதான் தனிமனிதனோ சமுதா யமோ மாறினாலும் துன்பம் இந்த வையத்தில் இல்லாது போய்விடும் என்பதற்கில்லை. உலக அற அமைப்பு (World order) இவற்றோடு இணைந்தது.' (உலக இதய ஒலி ப.20 - மேற்படி நூல் பக்: 93-94).

'சிலப்பதிகாரமும் கதை மாந்தர்களும்' என்ற துணைத் தலைப்பிலமைந்த பகுதியானது அப்பேரிலக்கியத்தின் கதை மாந்தர்கள் திறனாய்வுநிலைகளில் அணுகப்பட்டுள்ள முறை மைகள் பற்றியபார்வையாக அமைந்ததாகும். இப்பகுதியா னது ஒருவகையில் மேலே நாம் நோக்கிய 'சிலப்பதிகாரம் - ஓர் அவல நாடகம்' என்ற பார்வையின் தொடர்ச்சியென்றே கொள்ளத்தக்கது. சிலப்பதிகாரக் கதைமாந்தரைப் பற்றிய சில குறிப்புகள் அரும்பதவுரை மற்றும் அடியார்க்கு நல்லா ருரை ஆகியவற்றில் இடம்பெற்றிருந்தாலும் காப்பியத்தில் அக்கதைமாந்தரின் இடம்பற்றி நுனித்து நோக்கும் திறனாய் வுப் பார்வைகள் பண்டு வழக்கிலிருக்கவில்லை என்பதும், கடந்த இருநூற்றாண்டுக்காலப் பகுதியிலேயே அத்தகு பார் வைகள் தோற்றம்பெற்று வளர்ந்துள்ளன என்பதும் இப்பகு தியிலே சுட்டப்பட்டுள்ளது.

மேற்சுட்டிய வகையிலான முதல்முயற்சி என இங்கு கவனத் துக்கு இட்டுவரப்படுவது 1898-99 காலப்பகுதியில் ஞானபோ தினி இதழிலே பிரணதார்த்திஹர சிவன் என்பாரால் எழுதப் பட்டதான 'சிலப்பதிகார ஆராய்ச்சி' என்ற கட்டுரையாகும். குறிப்பாகக், கண்ணகி, கோவலன், கவுந்தியடிகள் மற்றும் மாதவி ஆகியோரைப் பற்றிய ஆய்வுநிலைசார் கருத்துகள் அதிலே பதிவாகியுள்ளன என்பது இங்கு குறிப்பிடப்பட்டுள் ளது. கண்ணகி பற்றிய பிரணதார்த்திஹர சிவனின் பார்வைக் கான ஒரு சான்றும் இங்கே எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. அச் சான்று வருமாறு:

'கண்ணகியை இவ்வளவு பயங்கரமாகக் காட்டாமல் அடிகள் தம் நோக்கத்தை முடித்துக் கொண்டிருக்கலாம். சீதை, சாவித்திரி போலப் பொறுமையால் பிரகாசிக்க வைத்திருக்க லாம்.' (ஞானபோதினி 1898-99 ப.396 பார்க்க மேற்படி நூல் ப. 96).

இவ்வாறு 19-ம் நூற்றாண்டிறுதியில் தொடங்கி விட்டதான சிலப்பதிகாரக் கதைமாந்தர் பற்றிய பார்வையானது கடந்த

நூற்றாண்டில் ஆய்வாளர் பலரால் பல்வேறு முறைகளில் வளர்த்தெடுக்கப்பட்டு வந்துள்ளது. இவ்வாறான பார்வைகளை மேற்கொண்ட தமிழறிஞர்களில் முக்கியமானவர்களாக இங்கு எஸ். இராமகிருஷ்ணன், கா. மீனாட்சிசுந்தரம், ச.வே. சுப்பிரமணியன், தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், கா. செல்லப்பன், துரை சீனிச்சாமி ஆகியோர் இங்கு கவனத்துக்கு இட்டு வரப்பட்டுள்ளனர்.

மேற்படி ஆய்வாளர்களுள் சிலருடைய பார்வைகள் அவற்றின் இயல்புகளினடிப்படையில் இங்கு மூவகைப்படுத்தி நோக்கப்படுகின்றன. இவற்றுள் முதலாவது வகைப் பார்வையானது, 'கோவலன் மற்றும் கண்ணகி ஆகியோரைத் தலைமைக் கதைமாந்தராவும் மாதவி, கவுந்தி மற்றும் செங்குட்டுவன் ஆகியோரைத் துணைப் பாத்திரங்களாகவும்' கணித்து, விளக்கம்தரும் முறைமையில் அமைந்ததாகும். இவ்வாறான பார்வைக்கு ஒரு சான்றாக இங்கே எஸ். இராமகிருஷ்ணன் எழுதிய 'இளங்கோவின் பாத்திரப்படைப்பு' (1964) என்ற நூல் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

இரண்டாவது வகைப் பார்வையானது சிலப்பதிகாரத்தின் துணைப்பாத்திரங்களை அவற்றின் இயல்புகளுக்கேற்றவகையில் மேலும் நுட்பமாக வகைப்படுத்தி நோக்கும் முறைமையிலமைந்ததாகும். 'ஒன்றிய பாத்திரங்கள்', 'ஒட்டிய பாத்திரங்கள்' மற்றும் 'ஊன்றிய பாத்திரங்கள்' என நோக்கும் முறைமையில் அமைந்த இப்பார்வைக்குச் சான்றாக இங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்டது கா. மீனாட்சிசுந்தரம் என்பாரின் 'சிலம்பின் துணைப்பாத்திரங்கள்' (1973) என்ற நூலாகும்.

மூன்றாவது வகைப் பார்வையானது, சிலப்பதிகாரப் பாத்திரங்கள் 'அக்கதையிலே இயங்கும் கால அளவுகளை மையப்படுத்தி நோக்கும் முறைமை' ஆகும். 'கதையில் தொடக்கம் முதல் இறுதிவரை வருவன', 'இடையில் வந்து இடையில் மறைவன', 'முதலில் தோன்றி இடையில் மறைவன', 'இடையில் தோன்றி இறுதிவரை வருவன', 'ஒரு காதையில் மட்டும் தோன்றி மறைவன' என்பனவாக அமைந்த இந்த நோக்குமுறைமைக்குச் சான்றாக இங்கு ச.வே. சுப்பிரமணியன் அவர்களின் 'சிலம்பின் சில பரல்கள்' என்ற ஆக்கம் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

மேற்சுட்டியவாறமைந்த பார்வைகள் தவிர கதையம்சத்துடன் பாத்திரங்கள் கொண்டுள்ள உறவுநிலைகள் மற்றும் அவற்றின் தனித்தனிக் குணாம்ச நிலைகள் என்பன சார்ந்த ஆழமான பார்வைகளும் மேற்சுட்டிய அறிஞர்கள் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதும் இங்கு சுட்டப்பட்டுள்ளது. இவ்வகைப் பார்வைகளை மேற்கொண்ட ஆய்வாளர்களாக இங்கு தெ.பொ. மீனாட்சிசுந்தரனார், கா. செல்லப்பன், துரை சீனிச்சாமி ஆகியோர் சுட்டப்பட்டுள்ளனர்.

தெ.பொ.மீ அவர்கள் கண்ணகி என்ற பாத்திரத்தைச் சிலப்பதிகாரக் கதையின் மையப்புள்ளியாகவே காண்பவர். அவ்வகையில் கோவலன் முதலிய ஏனைய பாத்திரங்கள் கண்ணகியைச் சுற்றியே இயங்குகின்றன என்பது அவருடைய கணிப்பாகும். (நூல்: குடிமக்கள் காப்பியம் - ப.132) கா. செல்லப்பன் அவர்களுடைய பார்வையானது சிலப்பதிகாரக் கதைமாந்தர்கள், அதன் காப்பியக் கட்டமைப்புடன் இரண்டறப் பிணைந்துள்ள நிலைபற்றி விளக்கும்வகையில் அமைந்ததாகும். அவ்வகைப் பார்வையூடாக அவர் முன்வைத்த செய்தி, 'கதை வளர்ச்சியுடன் கோவலன், கண்ணகி மற்றும் மாதவி ஆகிய பாத்திரங்களும் பண்புநிலைகளில் வளர்ச்சியெய்தி வந்துள்ளன' என்பதாகும். (கட்டுரை: The Architectonics of Silappathikaram-1970). துரை. சீனிச்சாமியவர்கள், 'கதையின் நிகழ்ச்சிப் பின்னலிலிருந்து பிரித்துக் காணமுடியாத அளவுக்கு பாத்திரப்படைப்பு உயிர்ப்புடன் திகழ்கின்றன' என மதிப்பிடுகிறார். (நூல்: தமிழில் காப்பியக் கொள்கை - முதற் பகுதி ப.195)

இவ்வாறான பல செய்திகளையும் தொகுத்தளித்துள்ள இத்துணைத் தலைப்புப் பகுதியிலே நிறைவாக நமது கவனத்துக்கு முன்வைக்கப்படும் முக்கிய விமர்சனம், 'மேற்படிக் கதைமாந்தர்பற்றிய பார்வைகளில் ஒரு போதாமை தெரிகிறது' என்பதேயாகும். இதனை உணர்த்தும் வகையிலமைந்த குறிப்பு வருமாறு:

'இக்கதைமாந்தர்களைப் பற்றிய திறனாய்வு என்பது அக்கதைமாந்தர்கள் வரும் நிகழ்ச்சிகளைத் தொகுத்துத் தருவதாகத்தான் பொதுவாக அமைந்துள்ளது. ஆழமான உண்மையான திறனாய்வு என்பது அந்நிகழ்ச்சிகளைத் தாண்டிய ஒரு நிலையில், காப்பியக் கட்டுமானத்தோடும் படிப்பவன், படைப்பவன், கதைமாந்தன் ஆகியோருடைய உளவியல், சமூகத்தளம் ஆகியவற்றுடன் இணைத்து விளக்கமுறச் செய்வதாகும். இத்தகைய திறனாய்வுப் போக்கைத் தெ.பொ.மீ., கா. செல்லப்பன், துரை. சீனிச்சாமி, எஸ். இராமகிருஷ்ணன் ஆகியோரிடம் காணமுடிகிறது. ஆனால் மொத்தத்தில் தேடல்மிக்க அணுகுமுறைகள் குறைந்தே காணப்படுகின்றன.' (மேற்படி நூல் ப. 102).

அடுத்து, இவ்வியலின் பின்னைய மூன்று துணைத் தலைப்புகளான 'சிலப்பதிகாரமும் நாட்டுப்புற இயலும்', 'சிலப்பதிகாரமும் ஒப்பாய்வியலும்', 'சிலப்பதிகாரமும் சமூகவியல் திறனாய்வும்' ஆகியன சார்ந்த பார்வைகள் இங்கு கவனத்துக்கு வருகின்றன. (மேற்படி 'நாட்டுப்புறவியல்', 'ஒப்பாய்வியல்' மற்றும் 'சமூகவியல்' ஆகியன சார்ந்த திறனாய்வுப் பார்வைகள் மற்றும் அணுகுமுறைகள் என்பன கடந்த நூற்றாண்டின் நடுப்பகுதியை அடுத்தே தமிழாய்வுச் சூழலுக்கு அறிமுகமானவையாகும். இவ்வாறான இத்திறனாய்வுப் பார்வைகளின் வருகை மற்றும் இயங்குநிலை என்பன பற்றிய பொதுநிலை விளக்கங்கள் ஏற்கெனவே இத்தொடரிலே 10-ம் கட்டுரை முதலான சிலவற்றில் விரிவாகவே முன்வைக்கப்பட்டுள்ளன. எனவே அவ்விளக்கங்கள் இங்கு தவிர்க்கப்படுகின்றன. இங்கே 'சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை' என்ற இந்நூலாக்கத்தின் இவ்வியல் முன்வைக்கும் பார்வைகள் மட்டுமே கவனத்துக்கு இட்டுவரப்படுகின்றன.)

'சிலப்பதிகாரமும் நாட்டுப்புற இயலும்' என்ற துணைத் தலைப்பிலமைந்த இப்பகுதியிலே முதலில் தமிழ்ச் சூழலிலே அவ்வாய்வுத் துறை காலூன்றி வளர்ந்த வரலாறு சுருக்கமாக முன்வைக்கப்படுகிறது. அதனையடுத்து அவ்வியல்சார் பார்வைகளின் ஊடாகச் சிலப்பதிகாரம் அணுகப்பட்ட முறைமை

கள் வகைப்படுத்தி நோக்கப்பட்டுள்ளன. இவ்வகையில், 'நாட்டுப்புறக் கதைகள்', 'நாட்டுப்புறப் பாடல்கள்', 'நாட்டுப் புற ஆடல்கள்', 'நாட்டுப்புறத் தெய்வங்கள்', 'நாட்டுப்புற நம் பிக்கைகள்' மற்றும் 'புராணங்கள்' ஆகிய அறுவகைப் பார் வைகளை மையப்படுத்தி நிகழ்ந்துள்ள ஆய்வுகள் இங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன. இவற்றுள் பின்னை மூன்று பற்றியும் இங்கு விரிவான ஆய்வுத் தகவல்கள் இடம் பெறவில்லை. எனவே விரிவான தகவல்களுடனான முதல் மூவகைப் பார்வைகள் பற்றிய சில குறிப்புகள் மட்டுமே இங்கு கவனத்துக்கு இட்டுவரப்படவுள்ளன.

சிலப்பதிகாரத்தின் மூலக்கதையே சங்க இலக்கியக் காலத் தில் வழக்கிலிருந்த ஒரு பழைய கதை என்பதான குறிப்பு டன் மேற்படி முதலாவதுவகைப் பார்வை தொடங்குகிறது. மேலும் 'பத்தினியைப் பரவுதல்' என்ற நோக்கிற்கேற்ப இவ் வாக்கத்தில் ஏழு பத்தினியர் கதைகள் இடம்பெற்றுள்ளன என்பது முதலிய செய்திகள் இங்கு எடுத்துரைக்கப்படுகின் றன. இவ்வகைப் பார்வைகளை முன்வைத்தவை என்றவகை யில் தெ.பொ.மீ., நா. வானமாமலை, சோம. இளவரசு, முத் துச்சண்முகன், இரா. பிரேமா, துரை சீனிச்சாமி, குருவிக் கரம்பை சண்முகம் முதலியவர்களின் எழுத்துகள் இங்கு சான்றுகளாக எடுத்தாளப்படுகின்றன.

சிலப்பதிகாரத்தில் இடம்பெற்றுள்ள 'கானல் வரி', 'வேட்டுவ-வரி', 'ஆய்ச்சியர் குரவை', 'குன்றக் குரவை' ஆகிய காதை களும் 'வாழ்த்துக் காதை'யில் இடம்பெற்றுள்ளவையான 'ஊசல் வரி', 'கந்துக வரி', 'வள்ளைப் பாட்டு' முதலியனவும் தமிழரின் பண்டைய நாட்டுப்புறப் பாடல்கள் மற்றும் ஆடல் மரபுகளின் செல்வாக்கால் உருவானவை என்பதே மேற்கு றித்த இரண்டாவது மற்றும் மூன்றாவதுவகைப் பார்வைகளின் ஊடாக இங்கு சுட்டப்பட்டுள்ள முக்கிய விடயங்களாகும். இவ்வாறான உருவாக்கநிலையில் மேற்படி நாட்டுப்புறவகை சார் பாடல்களானவை, 'தூய்மையான நாட்டுப்புறப் பாடல் கள் என்ற நிலையிலிருந்து விலகி, காப்பியத்தின் போக்கிற் கேற்ப நயம்பட மாற்றமடைந்துள்ளன' என்பதான அவதானிப் பும் இங்கு பதிவாகியுள்ளது. துரை சீனிச்சாமி அவர்களின் 'தமிழில் காப்பியக் கொள்கை' என்ற நூலைச் சான்றுகாட் டியே இது இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ளது. (மேற்படி நூல் ப.104)

மேற்படி ஆடல்வகைகள் சார்ந்த பார்வைகளில் மேலதிக விளக்கமாக இங்கு முன்வைக்கப்படும் இருவகைசார் ஆய் வுக் குறிப்புகளும் இங்கு கவனிப்புக்குரியன. முதலாவது குறிப்பு, 'மாதவி ஆடிய பதினொரு ஆடல்கள் புராணக் கதைகள் சார்ந்தவை என்பதால் அவையும் நாட்டுப்புற ஆடல்களின் வளர்ந்த வடிவங்களே' என்பதாகும். பி. தட்சி-ணாமூர்த்தியவர்களின் 'இளங்கோவின் புராணங்கள்' என்ற நூலினின்று (ப.356) எடுத்துக்காட்டப்படுகிறது. (மேற்படி: ப.104)

இரண்டாவதுவகை சார்ந்ததாக இங்கு இடம்பெறும் குறிப்பு கள் சிலப்பதிகாரத்துக்கும் பண்டைய கூத்து மரபுகளுக்கும் உள்ள தொடர்புகள் பற்றியனவாகும். இவ்வகையில் மூவ கைப் பார்வைகள் இங்கு சுட்டப்பட்டுள்ளன. ஒன்று சிலப்பதி காரத்தைச் 'சாக்கியர்கூத்து நாடகம்' என நோக்கும் முறை மையாகும். இப்பார்வையானது கா. அப்பாத்துரை அவர்க ளின் 'சிலம்பு வழங்கும் செல்வம்' என்றநூலில் (ப.99) இடம் பெறுவது. இன்னொன்று அதனைத் 'தெருக்கூத்து நாடகம்' எனக்கருதும் பார்வையாகும். இது முத்துச் சண்முகன் அவர் களால் முன்வைக்கப்பட்டதாகும். 'சிலப்பதிகாரம் ஒரு தெருக் கூத்து நாடகம் என்ற தலைப்பிலான அவருடைய கட்டுரை யில் இப்பார்வை முன்வைக்கபட்டுள்ளது. (நூல்: தமிழிலக்கி யக் கோட்பாடுகள்-பக்: 165-178)

மூன்றாவதாக இங்கு சுட்டப்படுவது, 'கூத்துகளில் கண்ட பாத்திரங்களையே இளங்கோவடிகள் காப்பியப் பாத்திரங்க ளாக வளர்த்தெடுத்துள்ளார்' என்பதாகும். இப்பார்வை அ. அறிவுநம்பி என்பாரின் 'சிலம்பும் கூத்தும்' என்ற நூலில் (பக்: 51-91) இடம்பெற்றதாகும். (மேற்படி: ப. 106)

'சிலப்பதிகாரமும் ஒப்பாய்வியலும்' என்ற துணைத் தலைப்பி லமைந்த பார்வையிலே அவ்வாக்கம் ஏனைய தமிழிலக்கி யங்களுடனும் பிறமொழி இலக்கியங்களுடனும் ஒப்புநோக் கப்பட்டுள்ளமை தொடர்பான விபரங்கள் பல கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளன. ஏனைய தமிழிலக்கியங்களுடனான ஒப்பீடு என்ற வகையில் குறிப்பாக, சங்க இலக்கியம், திருக் குறள், மணிமேகலை மற்றும் கம்பராமாயணம் முதலியவற்று டன் நிகழ்ந்துள்ள ஒப்பாய்வுகளே இங்கு கவனத்துக்கு முன் வைக்கப்பட்டுள்ளன.

சங்க இலக்கியங்களுடனான ஒப்பீடுகள் சார்ந்து இங்கு எடுத்துரைக்கப்பட்டுள்ள முக்கிய கருத்தாக்கம், 'சிலப்பதிகா ரமானது சங்க இலக்கியமரபின் செல்வாக்கிற்கு உட்பட்டுத் தமிழ் மரபுப்படி இயல்பாகத் தோன்றிய தமிழ்க் காப்பியம்' என்பதாகும். இது தெ.பொ. மீனாட்சிசுந்தரனாரின் 'குடிமக் கள் காப்பியம்' மற்றும் அ. சிதம்பரநாதச் செட்டியாரின் இளங்கோவின் இன்கவி முதலிய பல ஆக்கங்களின் பார் வைகளின் ஊடாகக் கவனத்துக்கு இட்டுவரப்பட்டதாகும். (மேற்படி நூல்: ப.111)

திருக்குறளுடனான ஒப்பீட்டிலே கவனத்துக்கு இட்டுவரப்பட் டுள்ள முக்கிய கருத்தாக்கங்களிலொன்று, 'இளங்கோவடிகள் குறள்வழியில் நின்றுதான் சிலப்பதிகாரத்தை இயற்றியுள்ளார்' என்பதாகும். சு. அகத்தியலிங்கம் அவர்கள் 'குறளும் சிலம் பும்' என்ற தலைப்பில் 'செந்தமிழ்ச் செல்வி' என்ற இதழில் எழுதிய கட்டுரை (சிலம்பு: 53: பரல்: 6 ப.275) மற்றும் தெ.பொ.மீ. அவர்களின் மேற்சுட்டிய 'குடிமக்கள் காப்பியம்' என்ற நூல் முதலியவற்றிலிருந்து இக்கருத்தாக்கம் இங்கு எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. (பார்க்க: மேற்படி நூல் ப.112)

சிலப்பதிகாரத்தை மணிமேகலையுடன் ஒப்பிடும் செயற்பாட் டில் ஈடுபட்ட பலரில் முக்கியமானவராக இங்கு குறிப்பிடப்ப டுபவர் துரை. சீனிச்சாமி அவர்களாவார். அவர் தாம் எழு திய, 'தமிழில் காப்பியக் கொள்கை' என்ற நூலின் முதலாம் பகுதியிலே மேற்படி இவ்விரு ஆக்கங்களையும் கதையம்சங் கள், நிகழ்ச்சிப் பின்னல்கள், காப்பியக் கட்டமைப்புக்கூறு கள், பாத்திரப் படைப்பு ஆகியவற்றின் அடிப்படையில் ஆழமாக நோக்கியவராவார். அவ்வொப்பாய்விலே அவர் புலப்படுத்தியுள்ள முக்கிய முடிவாக இங்கு எடுத்துக்காட் டப்படுவது 'இரு ஆக்கங்களும் முதல்நிலைக் காப்பியங்கள்

அல்ல' என்பதும் புலமைக் காப்பியங்கள் ஆகும்' என்பதுமே யாகும். (மேலதிக விளக்கத்திற்கு: பார்க்க: மேற்படி நூல்: 113)

சிலப்பதிகாரத்தைக் கம்பராமாயணத்துடன் ஒப்பிடும் முயற்சி யிலே முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய கருத்துகளிலொன்றாக இங்கு சுட்டப்படுவது, 'இளங்கோவடிகளும் கம்பனும் இந்தி யப் பண்பாட்டின் பாலங்களாக அமைந்துள்ளனர்' என்பதா கும். இவ்வாறான ஒப்பாய்வுக் கருத்தாக்கத்தை முன்வைத்த முக்கியமான ஒருவராக இங்கு ம.பொ. சிவஞானம் அவர்கள் குறிப்பிடப்படுகிறார். 'இளங்கோவடிகள் வள்ளுவருக்கு வாரி சாகவும் கம்பனுக்கு வழிகாட்டியாகவும் விளங்குபவர்' என் பதே அவருடைய அவதானிப்பாகும். அவருடைய 'சிலப்பதி காரத் திறனாய்வு' என்ற நூலே இங்கு சான்றாக எடுத்துக் காட்டப்படுகிறது. அவருடைய இவ்வாறான கணிப்பானது கம்பராமாயணத்தை ஆரியம்சார்ந்த ஆக்கமெனக் கூறும் திராவிடச் சிந்தனையாளர்களுக்குத் தக்கதொரு பதிலடியாக அமைந்தது என்பது இங்கு சுட்டப்பட்டுள்ளது. (பார்க்க: மேற் படி நூல்: 114)

சிலப்பதிகாரத்துக்கும் பிறமொழி இலக்கியங்களுக்குமிடையி லான ஒப்பீடுகள் என்றவகையில் மேலே நாம் நோக்கியவா றான ஷேக்ஸ்பியரின் நாடகங்களுடன் ஒப்பிடுதல் முதலிய வகைகளிலமைந்த மேலதிகச் செய்திகள் சில இங்கு பதிவா கியுள்ளன. அவற்றுடன் சிலப்பதிகாரத்தின் மொழிபெயர்ப்பு கள் தொடர்பான சில தகவல்களும் கவனத்துக்கு இங்கு இட் டுவரப்பட்டுள்ளன.

'சிலப்பதிகாரமும் சமூகவியல் திறனாய்வும்' என்ற துணைத் தலைப்பிலான பார்வையானது அத்திறனாய்வு முறைமைசார் பார்வைகளின் ஊடாகச் சிலப்பதிகாரம் அணுகப்பட்டுள் ளமை தொடர்பான விவரிப்பாகவும் விமர்சனமாகவும் அமை வதாகும். சமூகவியல் திறனாய்வுகள் எனப்படுவன பொது வாக இருவகைப் பார்வைகளினுடாக மேற்கொள்ளப்படுவ னவாகும். இவற்றுள் முதலாவது வகையானது 'இலக்கியமா னது சமுதாயத்தின் சாரமாகத் திகழ்வது' என்றவகையிலான பொதுப் பார்வையாகும். இப்பார்வைசார் அணுகுமுறையா னது இலக்கியத்தில் அமைந்திருக்கும் சமூகக் கூறுகளைப் பகுத்தாராயும் செயற்பாடாக அமைவது. இரண்டாவதுவகைப் பார்வையானது, 'இலக்கியமானது தான் எழுந்த காலப்பகு திச் சமுதாயத்தின் வர்க்க முரண்பாடுகளின் விளைபொருள்' என்பதான மார்க்ஸியக் கருத்தாக்கத்தின் அடிப்படையிலான தாகும். இவ்வகைப் பார்வைசார் அணுகுமுறையானது, 'வர்க் கப் போராட்டம்' என்ற கருத்தாக்கம் சார்ந்த கோட்பாடுக ளைக் கருவிகளாகக் கொண்டு இலக்கியத்தைப் பகுப்பாய்வு செய்வதாகும். சிலப்பதிகாரமானது கடந்த நூற்றாண்டிலே மேற்படி இருவகைப் பார்வைகளின் ஊடாகவும் அணுகப்பட் டுள்ளமை இப்பகுதியிலே நமது கவனத்துக்கு இட்டுவரப்பட் டுள்ளது.

மேற்சுட்டிய முதலாவது கருத்தாக்கம் சார்ந்து மேற்கொள் ளப்பட்ட ஆய்வுகள் பொதுவாகச் சிலப்பதிகாரக் காலத்திலே சமூகநிலை, சமயநிலை, கல்வி, அரசியல், பொருளியல், நீதிமுறை முதலிய பல்வேறு நிறுவன நிலைசார் அம்சங்க ளும் பெற்றிருந்த முக்கியத்துவத்தைத் தெரிந்து தெளியும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டவையாகும். இவ்வகையில் நிகழ்ந்துள்ள முக்கிய ஆய்வுகள் என்றவகையில் சாமி. சிதம் பரனாரின் 'சிலப்பதிகாரத் தமிழகம்', ப. அருணாசலம் அவர் களின் 'சிலப்பதிகாரச் சிந்தனை' ஆகிய நூல்களும் சா. லைசாண் என்பாரின் 'சிலப்பதிகாரத்தில் பொருளாதாரம்' என்ற தலைப்பிலான முதுகலைப்பட்ட ஆய்வேடும் இங்கு எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

சாமி. சிதம்பரனார் அவர்கள் சிலப்பதிகாரத்தை ஒரு வரலாற் றுப் பதிவு என்ற நோக்கிலேயே அணுகியவராவார் என்பது இங்கு சுட்டப்பட்டுள்ளது. இத்தொடர்பில் அவருடைய கூற் றாக அமையும் குறிப்பொன்று இங்கு சுட்டத்தக்க முக்கியத் துவமுடையதாகும்.

'சிலப்பதிகாரம் கவிதை நயம்பற்றி எழுந்த நூலல்ல. அக்கா லத்தின் தமிழர் நாகரிகத்தை எடுத்துக்காட்டும் நோக்கோடு, வரலாற்று நூல்போலவே எழுதப்பட்ட நூலாகும்' என்பதே அக்கூற்று. (சிலப்பதிகாரத் தமிழகம் ப. 130 - பார்க்க மேற் படி நூல் ப. 119).

இவர் தமது மேற்படி நூலில் சிலப்பதிகாரக்காலச் சாதி வேற் றுமை, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள் சிற்றூருக்கும் நகரத் துக்குமிடையிலான வேறுபாடுகள் முதலிய பலவற்றையும் எடுத்துக்காட்டியுள்ளார் என்பதும் இங்கு குறிப்பிடப்பட்டுள் ளது.

ப. அருணாசலம் அவர்கள் சிலப்பதிகாரத்தை, 'சமயவுணர்ச் சியில் உந்தப்பட்டு உருவான ஆக்கமாகவே தரிசித்தவரா வார்' என்பதும் அவ்வகையில் அவ்வாக்கத்தின் சமய நிலை-சார் அம்சங்களை அவர் நுனித்து நோக்கி எடுத்துக்காட்டிய வர் என்பதும் இங்கு சுட்டப்பட்டுள்ளன. சா. லைசாண் என் பாரின் ஆய்வேடு தொடர்பாக இங்கு குறிப்பிடப்படும் முக் கிய செய்தி, 'அது சிலப்பதிகாரக் காலத்தின் பொருளுற்பத் திமுறை செயற்பட்ட நிலைபற்றிய பார்வை' என்பதேயாகும்.

மேற்சுட்டிய இரண்டாவதான 'வர்க்கப் பார்வை' என்ற கோணத்தில் சிலப்பதிகாரத்தை அணுகியவர்களுள் முக்கிய மானவர்களாக இங்கு கவனத்துக்கு இட்டுவரப்பட்டுள்ளவர் கள் கே. முத்தையர் என்பாரும் தொ.மு.சி. ரகுநாதனும் ஆவர். இவ்விருவரும் சிலப்பதிகாரத்தை, 'நிலவுடைமைச் சமூகத்தைச் சார்ந்திருந்த அரசுக்கு எதிராக வணிகவர்க்கம் எய்தியிருந்த வளர்ச்சியின் ஓர் அடையாளமாக'க் காட்ட முயன்றோராவர். இவ்வாறான அவர்களுடைய பார்வைகளுக் குச் சான்றுகளாக முத்தையா அவர்களின் 'சிலப்பதிகாரம் - உண்மையும் புரட்டும்' என்ற நூலும் ரகுநாதனுடைய 'இளங்-கோவடிகள் யார்? - சிலப்பதிகாரம்பற்றிய ஒரு சமூகவியல் ஆராய்ச்சி' என்ற நூலும் இங்கு எடுத்துக் காட்டப்படுகின் றன. இவ்வாறான இவர்களின் பார்வைகளுக்கான ஒரு சான் றாகக் கொள்ளக்கூடிய தொ.மு.சி. ரகுநாதன் அவர்களின் உரைப்பகுதியொன்று வருமாறு:

'இளங்கோவடிகள் கண்ணகி பற்றி நிலவிவந்த ஒரு பழைய கதையைப் பயன்படுத்தி, தமது காலத்தில் வளர்ந்தோங்கியி

ருந்த வணிகவர்க்கத்தின் தர்ம நியாயத்தை மிகவும் நயமாகவும் நாசூக்காகவும் உணர்த்துகிற அதே சமயத்தில், அதனை ஆணித்தரமாக வலியுறுத்தும் ஒரு வர்க்கப் போராட்டத்தின் அற்புதமான சித்திரத்தையே தமது சிலப்பதிகார நூலில் படைத்துத் தந்திருக்கிறார்.' (இளங்கோவடிகள் யார்? - பக்: 387-88 பார்க்க மேற்படி நூல் ப. 120).

இவ்வாறான சமூகவியல் பார்வைகளின் நிறைவாக இங்கு பதிவாகியுள்ள பொதுவான மதிப்பீட்டுக் குறிப்புகளிலொன்று, 'இவ்வகைப் பார்வைகள் மேலோட்டமானவையாகத்தான் உள்ளன' என்பதாகும். அதாவது 'இலக்கியத்திற்கும் சமூகத்திற்குமுள்ள பன்முகப்பட்ட உறவுநிலைகளைப் பற்றியும்... தெளிவான வரலாற்றுச் சான்றுகள் இல்லாத சூழலில்; சமூகவியல் அடிப்படையில் விளக்குவது மேலோட்டமானதாகத்தான் அமையும். சிலம்பு பற்றிய சமூகவியல் ஆய்வும் அவ்வாறுதான் அமைந்துள்ளது.' என்பதே இங்கு சுட்டப்பட்டுள்ள முக்கிய மதிப்பீடாகும். (மேற்படி நூல்: ப. 122)

கே. முத்தையா ரகுநாதன் ஆகியோருடைய வர்க்கப் பார்வைகள் தொடர்பாக முன்வைக்கப்பட்டுள்ள முக்கிய மதிப்பீடு, 'கணிதச் சமன்பாடு போன்ற நேர்கோட்டுப் பார்வையாக மட்டுமே அவை அமைந்துள்ளன' என்பதும், 'அவ்வாக்கத்தில் ஓடும் நுட்பமான நரம்பிழைகளைக் கொண்டுவர அவர்கள் முனையவேயில்லை' என்பதுமேயாகும். (மேற்படி நூல் ப. 122)

இந்நூலின் 'சிலப்பதிகார ஆய்வேடுகள் - சில குறிப்புகள்' என்ற தலைப்பிலான ஆறாவது இயலானது அவ்வாக்கம் தொடர்பாக உயர்பட்ட நிலைகளில் எழுதப்பட்டுள்ள ஆய்வேடுகளைப் பற்றிய ஒரு தொகுநிலைப் பார்வையாகும். சிலப்பதிகாரம் தொடர்பாக 1990-களின் தொடக்கம்வரை (அதாவது இந்நூல் உருவான காலகட்டம்வரை) எழுதப்பட்டிருக்கக்கூடிய ஆய்வேடுகளே இங்கு கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளன. இலக்கிய முதுவர் (M. Litt), ஆய்வியல் நிறைஞர் (M.Phil.), முனைவர் (Ph.D) ஆகிய பட்டங்களுக்காக எழுதப்பட்ட ஆய்வேடுகளே இங்கு ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன என்பதை டாக்டர் க. பஞ்சாங்கமவர்கள் இவ்வியலின் தொடக்கத்திலேயே குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாய்வேடுகளை இவற்றின் அணுகுமுறைகளைக் கருத்துள் கொண்டு 'மொழியியல் அணுகுமுறை', 'ஒப்பிலக்கிய அணுகுமுறை', 'சமூக இயல் அணுகுமுறை' மற்றும் 'கலை நுட்ப அணுகுமுறை' என நால்வகைப்படுத்தி நோக்கும் முறைமையே இங்கு மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி நால்வகைசார் ஆய்வேடுகள் பற்றிய சில பொது மதிப்பீட்டுக் குறிப்புகளுடன் இவ்வாறாமியல் நிறைவடைகிறது. இந்த ஆறாமியலானது உள்ளடக்கநிலையில் மேலே நாம் நோக்கிய ஐந்தாம் இயலின் தொடர்ச்சியாகவே கொள்ளக்கூடியதாகும்.

டாக்டர் க. பஞ்சாங்கமவர்களின் 'சிலப்பதிகாரத் திறனாய்வுகள் - ஒரு பார்வை' என்ற தலைப்பிலான இந்நூலும் மேற்சுட்டியவாறான ஒரு ஆய்வேடாக - முனைவர் பட்டத்துக்கான ஆய்வேடாக - உருவானதேயாகும் என்பது இங்கு நமது கவனத்துக்குரிய முக்கிய தகவலாகும். சிலப்பதிகாரம் என்ற பேரிலக்கியமானது உ.வே. சாமிநாதையரவர்களால் 'மூன்று காண்டங்களையும் உள்ளடக்கிய முழு நூலாக' முதலில் அச்சேற்றப்பட்ட ஆண்டு 1892 என்பதை நாம் முன்னரே நோக்கியுள்ளோம். அந்த அச்சேற்றத்தின் நூறாண்டு நிறைவிலே 1993-ல் டாக்டர் க. பஞ்சாங்கமவர்கள் இவ்வாய்வு நூலை நமக்களித்துள்ளார். 'அந்த இடைப்பட்ட நூறாண்டுக் காலத்தில் மேற்படி அப்பேரிலக்கியம் பற்றிய சிந்தனைகள் தமிழாய்வுச் சூழலிலே எய்தியுள்ள பல்வகைப் பரிமாணங்களையும் அடையாளங்காட்டும் ஒரு 'காலக் கண்ணாடி'யாக அவரின் இவ்வாக்கம் திகழ்கின்றது' என்பதான எனது மதிப்பீட்டை முன்வைத்து இந்நூல்பற்றிய பார்வையை இங்கு நிறைவு செய்கிறேன்.

(தொடரும்)



subramanian.n@thaiveedu.com



# விசாரணை

## - அகரன்




மயூரனை அன்று மதியம் 12 மணிக்கு சுட்டுவிடுமாறு A1-இல் இருந்து வந்த தகவல் வோக்கி டோக்கியில் மூன்று முறை இழுபட்டு இழுபட்டு வந்தது. நான்காவது முறை...

‘கவனம் சனங்கள்! யார் சுடுவது என்பதை நீயே தீர்மானி. K3-ஐ தொடர்பெடுக்கவும்’

என்றுவிட்டு அக்குரல் இரும்பு வெட்டும்போது துண்டாகும் சத்தம் போல் துண்டாகியது.

ஒரு கணம் வெப்பக் காற்று முகத்தில் அறைந்து கடந்தது போல இருந்தது. பிறகு உடல் எங்கும் நெருப்பு எரிவது போலிருந்தது. வேடுவன் இராணுவப் புலனாய்வு முகாம் அப்போது பணியாரக்குளத்தில் இருந்தது. முகாமில் 12 பேர் இருந்தோம். நான் அதன் பொறுப்பாளர்.

காலை எடுத்துக் கொழுவிக்கொண்டு கிணற்றடிக்குப் போகும்போது மணிக்கூட்டைப் பார்த்தேன். காலை 6 மணி 10 நிமிடம். அந்த மணிக்கூடு கறுப்பு நிறம். அதைக் கட்டினால் நேரம் மட்டும் வெள்ளை நிறத்தில் எழுத்து வரும். தண்ணீருக்குள் பொன்நிறத்தில் வரும். இருட்டில் அதன் மேல் தொட்டால் மட்டும் நேரத்தை காட்டும். 1990-ல் பலாலி விமானத்தளத்தைத் தொட்டு வந்ததற்காகக் கிடைத்த பரிசுப் பொருள். ஏழு ஆண்டுகள் கடந்தும் அது தன் இயக்கத்தை நிறுத்தவில்லை.

கிணற்றடியில் பல்லைப் பற்பொடியால் தீட்டிவிட்டு வாய் கொப்பளித்தேன். அதிகாலையிலேயே தாகம் எடுப்பது போல் இருந்தது. வாளித் தண்ணீரை ஒரு கையில் பிடித்து மறு கையில் தாங்கி மாடு குடிப்பது போல தண்ணீரை வாளி தீருமட்டும் குடித்தேன். வயிறு நிறைந்து விட்டிருந்தது. வோக்கிச் சத்தத்தில் பெடியள் எழும்பிவிட்டிருந்தனர். எட்டுப் போராளிகளும், முழுநேர வேலைக்காக அமர்த்தப்பட்ட நான்கு பெடியளும் இருந்தனர். அதில் ஆறு போராளிகள் பணிக்காக இராணுவப் பகுதிக்குள் சென்று விட்டனர். என்னோடு விமலும், அர்ச்சுனாவும் போராளிகள். கடந்த இரண்டு வருடமாக போராளிகள் போலவே எங்களோடு தங்கியிருந்து வரைபடம், கணினி வேலைகளைச் செய்யும் கதிர், குமரன், வரன் இவர்களோடு மயூரனும் இருந்தான்.

இவர்கள் நால்வருக்கும் மாதாமாதம் இயக்கம் 8000 ரூபா சம்பளம் வழங்கியது. சாப்பாடு, உடுப்பு எல்லாம் இயக்கம் தான். இவர்கள் வீட்டுக்கு போக முடியாது. இரகசிய நடவடிக்கைகளும், இராணுவத் தரவுகளும் என்பதால் இவர்களும், இவர்கள் அசைவுகளும், தகவல்களும் எமக்கு முக்கியமானது. ஒரு கட்டத்தில் அவர்களும் இயக்கம் போலவே ஆகி விட்டவர்கள். அவர்கள் கழுத்தில் குப்பி இல்லை. தகடு இல்லை. ஆனாலும் நால்வரும் கறுத்த நூலை கழுத்தில் தொங்க விட்டிருப்பார்கள்.

வட்டக் குடில் நோக்கிச் சென்று வோக்கி எடுத்து அன்ரனாவை இழுத்துவிட்டு மாமரம் நோக்கி நடந்தேன். அதன் கொப்பை பிடித்து தாவி ஏறி கிளையில் சாய்ந்திருந்து கொண்டு k3-க்கு தொடர்பெடுத்தேன். k3-இல் என்னோடு ஒன்றாகப் பயிற்சி எடுத்த பாண்டியன் பொறுப்பாக இருந்தான். அந்த முகாம் இயக்கத்துக்கான பிரத்தியேக விசாரணை முகாம். புதிதாக உருவாக்கப்பட்ட அமைப்பு. இயக்க அங்கத்தவர்களை விசாரித்து அது தீர்ப்பிடும். மயூரன் இயக்க உறுப்பினர் இல்லாவிட்டாலும் இயக்க இரகசிய சேவையில் வேலை செய்ததால் அங்கு தான் அனுப்பப்பட்டான்.

அதிகாலை என்பதால் k3-க்கு இலகுவாகத் தொடர்பு கிடைத்தது. கீழே எல்லாப் பெடியளும் மாமரத்தைச் சூழ்ந்து நின்றிருந்தனர். அதிகாலையில் A1-லிருந்து வந்த செய்தியை எல்லோரும் கேட்டுவிட்டது முகங்களில் தெரிந்தது.

‘பாண்டி... ஓவர்... ஓவர்... E1..E1... சொல்லுடா மச்சான்.’ ‘A1 காலையில் எடுத்தார். மயூரனுக்குப் பொட்டிடட்டாம். ஓவர்...’

‘ஓமடா, 5 பேர் கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு விசுவமடு, மல்லாவி, ஓமந்தை. ஒவ்வொரு இடத்திலும் பூசை ஓவர்.’

‘மயூரனை கொஞ்சம் வைத்திருந்திருக்கலாம். ஓவர்.’

‘இல்ல... எல்லாம் முடிஞ்சுது. அவன் கண்டன் கருவெள்ளை. வைத்திருக்கேல்லாது. ஓவர்.’

‘மச்சான் A1 எங்களையே பொட்டிடட்டாம். வேறு யாரையும் அனுப்பேலாதா? ஓவர்.’

‘இல்ல, உன்ர பெடியளில் ஒராளைத் தெரிவு செய். சரியாக




11 மணிக்கு E1-க்கு ஆளை அனுப்புவம். 12-க்கு சரியா பொட்டு.'

வயலெசை நிறுத்திவிட்டு அன்ரனாவை இடது கையின் உள் ளங்கையால் அமர்த்தி மூடிவிட்டு சற்று நேரம் அப்படியே இருந்தேன்.

'துலைவானை உடனே சுடச் சொல்லி இருந்தால் முடித்திருக் கலாம். இரண்டு மாதம் கடந்து விட்டது இப்போது மனம் வால் அறுந்த பட்டம் போல் அங்குமிங்கும் குத்திக் காற்றில் முறிகிறது. இந்த மனநிலையைப் பெடியளிடம் காட்டிக் கொடுக்கக் கூடாது.'

என்னால் குதித்து இறங்கி விடக் கூடிய மரக்கிளை என்றா லும் மெதுவாகவே இறங்கினேன். கீழே வௌவால் அடித்த பழங்கள் விழுந்து மாம்பழ வாசத்தைப் பரப்பி விட்டிருந்தது. இத்தனை பழங்களும் வௌவாலை ஏமாற்றினவா? அல்லது பழத்தின் மீதே தொங்கிக் கொண்டு பழம் தின்ற வௌவா லின் பிழையா? இந்தச் சிந்தனை முடிந்த நிலையில் என் னைச்சூழ ஐந்து பேருடைய கண்களும் சோகமும், ஏமாற்ற மும், கோபமும், அச்சமும் அதிர்ச்சியும் பாய என்னை ஏறிட் டன.

அர்ச்சுனா தன் சாரத்தை மடித்துச் சண்டிக்கட்டு கட்டியவாறு 'அண்ண என்னவாம்?' என்று அந்த இடைவெளியை வெட்டி னான்.

'மயூரனை இன்று 12 மணிக்கு போடச்சொல்லி ஓடர் வந்து ருக்கு. அவனை எங்கட பக்கம் கொண்டுவர முடியலப் போல. வைச்சிருந்தா எங்களுக்கு ஆபத்து எப்பவும் வரும் போல. எங்கள்ள ஒருவரை தெரிவு செய்யட்டாம். உங்கள்ள யாராவது விரும்பினால் முன்வரலாம்.'

எல்லோரும் பேயறைந்தது போல இருந்தார்கள். அர்ச்சுனா

ஒரு விறும்பன். ஒரு இடம் ஆபத்து என்று சொன்னால் அங்கு சென்று வருவான். அவன் கூட முகத்தை நெஞ்சில் கொண்டு சென்று வைத்துவிட்டு இருந்தான். எதிர்பாராத வகையில் வரன் 'அண்ண நான் செய்யுறன்' என்றான். எனக்கு உள்ளுக்குள் அதிர்ச்சியாக இருந்தது. வெளிக்காட் டாமல் 'இல்லயடா... இயக்க உறுப்பினர் மட்டும்தான் செய்ய லாம்' என்றேன். விமல் முகத்தைப் பார்த்தேன். அவன் முகம் சிவந்து போய் இருந்தது. அவங்கள் விரும்பேல்ல என்டதை என்னாலும் புரிய முடிந்தது.

'சரி விடுங்க, 11 மணிக்கு ஆளைக் கொண்டு வருவார்கள். 12 மணிக்கு மல்லாவி சந்திக்குப் போகோணும். வரன் நீ E2-க்கு தொடர்பெடுத்து அவனின் குற்ற அறிக்கையைத் தயார் செய். விமல் என்ர பிஸ்டலை சைலன்ஸரோட தயார் செய். AK-யையும் தயார் செய். அர்ச்சுனா கதிரையோட, குமரனையும் கூட்டிட்டு மல்லாவியில் இடம் ஒழுங்கு செய். சனம் வரும் கவனம். நீங்கள் அங்கேயே நில்லுங்க. சரியா 11:50க்கு நாங்கள் வருவம்'.

வழமைபோல 'சரி' என்ற வார்த்தையோ ´ok' என்றோ யாரும் சொல்லவில்லை. அலையொன்று நிலத்தை மோதி திரும்பிப் போவதுபோல அவர்கள் கலைந்தார்கள்.

நான் வட்டக் குடிலுக்குள் சென்று அமர்ந்தேன். விமல் தேனீ ரோடு வந்தான். 'அண்ண நீ சொன்னா நான் செய்யுறன். நானாக செய்ய முடியல' என்றான். 'இல்லையடா விடு. அந்த அந்த விஷத்தை நானே தின்னுறன்' என்றேன். இதை எப்படிச் சொன்னேன் எனக்கு தெரியவில்லை. இதுவரையும் இல்லாத மனநிலையில் கொதித்துக்கொண்டிருந்தது. இன்று மாலை அறிக்கை எழுதும் மனநிலை இருக்காது என்பது தெரியும். இப்போதே எழுதி விடுவோம் என்று நினைத்தவாறு காலையிலிருந்து நடந்ததையும் அன்றைய நடக்க இருக்கும் செயல்களையும் நடந்து முடிந்தது போலவே எழுதினேன். எழுத்தில் சரியாக 12 மணிக்கு மயூரனைச் சுட்டதாக எழுதி விட்டபோது பேனையைப் பிடித்த மூன்று விரல்களும் பேனை யும் நடுங்கியது. நான் இவ்வளவு பலவீனமாகி விட்டேனா என்று நினைத்து என்னை நானே விசாரித்தேன். இதுவரை இரகசிய இராணுவப் புலனாய்விலும், யுத்தமுனையிலும் எதி ரிகளுக்கு நீட்டிய என் துப்பாக்கிக்கு ஒரு நியாயம் இருந் தது. விசை தட்டும் விரல் ஒருபோதும் தயங்கியதில்லை. அது தயங்கும் ஒவ்வொரு நொடியும் எங்கள் உயிரை எடுக்க எதிரியின் விரல் இயங்கும். ஆனால் இது புது அனு பவம். எம்மோடு ஒன்றாக இணைந்து இரண்டு வருடங்கள் வாழ்ந்தவனை கைகள், கண்கள் கட்டப்பட்ட நிலையில் நானே சுட்டுக் கொல்வது, அதிலும் சூழ மக்கள் பார்த்திருக் கக் கொல்வது அசாதாரணமானவர்களாலேயே சாத்தியம். இயக்கம் வேறு யாரையாவது சுடுவதற்கு தெரிவு செய்திருக் கலாம். எங்களையே அதைச் செய்வதற்கு கட்டளை இட்ட தற்கும் காரணம் இருக்கலாம். A1-க்கு மீண்டும் தொடர்பெ டுத்து கேட்போமா என்று நினைத்தேன். இல்லை 'கட்ட ளைக்கு கீழ்ப்படிதல் இராணுவ விதி.' 'கட்டளை முடியும் போதே செய்துமுடித்தல் அன்றைய இயக்கவிதி' என் எண் ணத்தை மாற்றிக் கொண்டு இவன் எதிரியை விட மோசமா னவன். நான் ஏன் தயங்க வேண்டும் என்று நினைத்துக் கொண்டேன்.

அறிக்கை கொப்பியை மூடி வைத்துவிட்டு இரண்டு கைக ளையும் தேய்த்து சூட்டையும், உறுதியையும் ஏற்படுத்திக் கொண்டு இருந்தபோது தேநீர் குடிப்பதைத் மறந்து விட்டது தெரிந்தது. தேனீரினைக் கையில் எடுத்து வாயருகே கொண்டு வந்தபோது அதன் சிவப்பும் கருப்பும் கலந்த நிறத்தினுள் மயூரனின் முகமே தெரிவது போல் இருந்தது. அப்படியே தேனீரை வைத்துவிட்டு நிமிர்ந்தபோது செம்பகம் (செம்போத்து) இரண்டு விமானம் இறங்குவது போல் இறங்கி காலை வெயிலைக் கொத்த நிற்பது போல் நின்றன. அதன் கண்கள் நெருப்பு வட்டம் போல் எரிந்தது. வெயில் பட்ட கழுத்துப்பகுதி கருப்பு நிறம் நீலமாக மாறி மாறிக் கொண் டிருந்தது. அருகே இருந்த வட்டக் கண்ணாடியை பார்த் தேன். செம்பகத்தின் கண்கள் போல சிவந்து விட்டிருந்தது.

மயூரன் கோபமும், வெஞ்சினமும் மூட்டிய நினைவுகளைத் தந்து கொண்டிருந்தான். செம்பக அசைவுகள் போல அவன் நினைவுகள் வந்து தொலைத்தது.

1995-ல் யாழ்ப்பாணத்தில் இருந்து வன்னிக்கு களம் மாறிய போது A1-ன் அறிவிப்பின்படி பணியாரக்குளத்தில் ராணுவப் புலனாய்வுக்கான பாசறை முனையத்தை அமைக்கும்படி எனக்கு கட்டளை வந்தது. நான் மூன்று போராளிகளோடு மிகப்பொருத்தமான சன நடமாட்டம் அற்ற இடத்தில் அமைத்தபோது எனக்கு ஒன்பது பெடியள் A1-ல் தரப்பட்ட னர். எங்கள் செயல்ப்பாடு புலனாய்வுத் தகவல்களின்படி இலங்கை இராணுவ நிலைகளை வரைபடங்களாக்கி, பின்பு தாக்குதலுக்கான திட்ட நிலைகளையும், அறிக்கைகளையும் A1-க்கு அனுப்புவது.

வேறு போராளிகளுடன் கூட நான் இவை பற்றிப் பேசக்கூ டாது. எல்லாம் மிக இரகசியமானது. A1-ன் கட்டளை இன்றி தலைவர் வந்து கேட்டால் கூட வழங்க முடியாது. ஒவ்வொரு தகவலும் உயிரைப் பணயம் வைத்துப் பெறப்படுபவை.

அப்படிப்பட்ட வேலைகளுக்கு இயக்கத்தில் ஆள் பற்றாக் குறை இருந்தபோது சில படித்த இளைஞர்களை இயக்கம் சம்பளத்திற்கு எடுத்தது. அப்படி எடுத்த இளைஞர்களில் ஒருவன் தான் மயூரன்.

அவன் என் முகாமை அடைந்தபோது கலகலப்பாகவும் சுறு சுறுப்புடனும் பாசறை இயங்கியது. எனக்கான பன்னிரெண்டு பேரும் வந்து விட்டிருந்தனர். நான்கு பேருக்குமான வேலை-களை எமக்கு வரும் தகவல் அடிப்படையில் வழங்குவோம். அதன்படி அவர்கள் வரைபடங்களை வரைவார்கள். மயூரன் எல்லோருடனும் கலகலப்பாகவும் தானும் ஓர் உறுப்பினர் போலவும் நடந்து கொண்டான்.

முதல் நாள் ஒரு மழை விட்ட வெயில் மாலையில் டுமாலா சைக்கிளில் ஒரு முதுகுப் பையுடன் அவன் வந்து இறங்கி தன்னை அறிமுகப்படுத்தியபோது ஏதோ சுற்றுலாவுக்குப் போவது போலவே வந்திருந்தான். மாலை வெயிலின்நிறம், பருத்த கன்னங்கள், சுருண்ட கறுப்புக் கம்பிகள் போல் முடி, அரும்பி நின்ற மீசை, வெயில் படாமல் வளர்ந்த உடல்.

அவனைப் பார்த்ததும் 'இயக்கம் எப்படி பஞ்சு மூட்டைகளை அனுப்புது. பார்த்தால் வேலை செய்பவன் போல தெரி-யேல்ல' என்றுதான் நினைத்தேன். அவன் முதுகில் கொழுவி இருந்த பையைக் கழற்றி திறக்கப்படாத ஒன்றரை லிட்டர்

கொக்கக் கோலாப் போத்தலை எடுத்து திறந்து குடித்தான். கடும் களைப்பில் இருப்பவன் போல் 'சரியான வெயில்' என்றான். நான் பறையாமல் தம்பி இங்க கொக்காப் போத்தல் மட்டும் தான் இருக்கு. அதில் கிணற்று நீரை நிரப்பித் தான் குடிக்கணும். ஆஞ்சி அண்ண எல்லாம் சொல்லி இருபார் தானே?' என்றேன்.

சிரித்துக்கொண்டே 'எல்லாம் தெரியும் அண்ண' என்று என்னிடம் மீதிக் கொக்காவை நீட்டினான். நான் கையைக் காட்டினேன். எம் பேச்சைக் கேட்டதும் தென்னங்காணிக்குள் பயிற்சியில் இருந்த எல்லாப் பெடியளும் வந்தினம். 'அடே எங்களோட வேலை செய்ய புது ஆள் வந்திருக்கிறார். பெயர் மயூரன். படங்கள் வரைவார். கணினி வேலையும் ஆள் செய்யும்' என்றேன். தன் பையில் இருந்த மற்றொரு கொக்கா கோலாவை எடுத்து அர்ச்சுனாவிடம் மயூரன் நீட்டினான். 'எங்களைப் பற்றி நல்லா அறிந்து தான் வந்திருக்கிறார்' என்று சிரித்துக்கொண்டே அவன் அதை வேண்டி மடக்... மடக் என்று முழுவதையும் குடிக்கும் முயற்சியில் இருந்த போது விமல் அதைத் தட்டிப் பறித்தான். அது அப்படியே சுற்றுவட்டப் பாதையில் என்னிடமும் வந்தது. இந்த முறை மறுக்காமல் அதைக் குடித்தேன்.

பின்பு முகாம் நடவடிக்கைகளைக் கூறி இருப்பிடம், வேலை செய்யுமிடம், சக போராளிகள் என எல்லோரையும் அறிமுகப்படுத்தினேன். எல்லோரையும் விட மயூரன் விரைவாகவே என்னுடன் ஒட்டிக் கொண்டான். வெளியில் செல்லும்போது என்னுடன் வருவான். எனக்கு எப்படி கால் இல்லாமல் போனது? சண்டை அனுபவங்கள் என அடிக்கடி கேட்டுக் கொண்டே இருப்பான். 'ஏனடா நீ இயக்கத்துடன் சேர்ந்து விடன். இப்படி அக்கறையாய் இருக்கிறாய்' என்றேன்.

'இல்ல. எனக்கு ஒரு லவ்வர் இருக்கிறா!'

'எங்க?'

'மன்னாரில'.

ஓ..! அப்படியா?'

அவர்கள் மாலை 5 மணி வரை வேலை செய்ய வேண்டும். அதன் பிறகு ஓய்வெடுக்கலாம். 24 மணி நேரமும் போராளிகள் போல் செயற்படத் தேவையில்லை. மயூரன் 24 மணி நேரமும் செயற்படத் தயாராக இருந்தான். சாம வேளையில் எழுப்பி ஒரு இராணுவ முகாமின் வரைபடத்தை கீறித் தரு-வாயா என்றால் புன்னகையோடு எழுந்தமர்வான்.

ஓராண்டுகள் கடந்தன. நமது பாசறையில் பல முன்னேற்றங்கள் ஏற்பட்டன. நமது பெடியள் பல இராணுவ முகாம்களை உட்சென்று பகலெல்லாம் கற்களாகவும், மரங்களாகவும், இரவெல்லாம் உயிர் பெற்ற எறும்புகளாகிச் சேர்த்த தகவல்கள் மேலிடத்தில் பாராட்டைப் பெற்றன.

1998 மாசி மாதம், பகல் 12 மணிக்கு மல்லாவியில் கிபீர் தாக்குதல் நடத்தி பெண்கள் படையணி இருந்த முகாமிற்கு அருகே இருந்த கல்வீடு தரைமட்டமானது. பல பொதுமக்கள் இறந்தனர்.

கிபீர் அடித்த அன்று இரவு மேலிடத்திலிருந்து அவசர அழைப்பு... தனியே வருமாறு இருந்தது. அங்கிருந்த வட்டக் குடிலில் மேலிடத் தளபதி தயாராய் இருந்தார். என் முன்னே சில கடித ஒற்றைகள் இருந்தன. அவை மயூரன் தன் காதலி மலர்விழிக்கு எழுதிய கடிதங்களின் பிரதிகள்.

'ஓமண்ண. அவன் லவ் பண்றதச் சொன்னவன்.'

'சரி வேறு என்ன சொன்னவன்?'

'நல்லபெடியன். அவன் இயக்கம் இல்லத்தான லவ் பண்றது தவறோ?'

'யாரை லவ் பண்றான் என்று தெரியுமா?'

'மலர்விழியாம், மன்னார் பெட்டயாம்.'

'பெட்டையத் தெரியுமா உனக்கு?'

'இல்ல. ஒருக்கா போட்டோ காட்டினவன்.'

இப்ப அதிகமா கடிதம் போடுறானோ?'

'ஓம். ஏதோ பெட்டையோட பிரச்சினையாம்.'

'சரி. கடிதத்தை திருப்பி பின்பக்கம் பார்.'

அதில் எங்களின் முகாங்கள் இருக்கும் இடங்களும் சங்கேதக் குறிப்புகளும் இருந்தன. என் முகம் நெருப்பில் எரிந்து நூர்ந்த கட்டை போல் மாறியது.

'நான் சொல்றதக் கவனமாய்க் கேள். அவன் தகவலால் தான் கிபீர் அடிச்சது. நீ அவனிட்ட எந்த மாற்றத்தையும் காட்டாத. உனக்குத் தெரிஞ்சிட்டுது என்று நினைத்தாலே அவன் படுக்கையில் உங்களப்போட்டுட்டு ஓடிடுவான். அவனோடு இன்னும் குளோசாப் பழகு. மெதுவாக செயல்களை ஆராய். உன்னோட நிக்கிற யாருக்கும் தெரிய வேண்டாம். மிக அவதானம், கொஞ்சம் விட்டுப் பிடிக்கணும். இன்று இரவு அவன் காதலிக்கு ஒரு கடிதம் எழுதுவான். அதை எங்கு வைக்கிறான்? எப்போ வெளியில் போகிறான்? என்ற முழு விபரமும் எனக்கு அனுப்பு.'

என்னால் இந்தத் துரோகத்தை தாங்க முடியவில்லை. அவன் அப்படிச் செய்வானோ? என்று ஐயமும் ஏமாற்றமும் கலந்து கலந்து வந்து கொண்டிருந்தது. மோட்டார் சைக்கிளில் முகாம் திரும்பிக் கொண்டிருந்தபோது, 'இரவு எங்கள் எல்லோரையும் சுட்டு விட்டு ஓடி விடலாம்' என்ற நினைப்பு வந்த போது... முதன் முதலில் சாவு வந்து கிள்ளிப் பார்த்தது. தமிழனாய் இருந்து இந்தத் துரோகத்தை ஏன் செய்கிறான்? குழப்பமான மனதில் எல்லாக் கெட்ட வார்த்தைகளையும் சொல்லிக்கொண்டு முகாமடைந்தேன்.

அங்கு எல்லோரும் பங்கர் வெட்டிக் கொண்டு கலகலப்பாக இருந்தனர். என்னைக் காட்டிக் கொடுக்காமல் இருக்க 'கால் வலிக்கிறது தூங்கப் போகிறேன் என்னை எழுப்ப வேண்டாம்' என்று பொதுவாகப் பெடியளிடம் சொல்லியபடி பாயை எடுத்து விரித்து அதில் படுத்தேன். என் முழங்காலோடு

துண்டிக்கப்பட்ட காலினுள் சிறுபீஸ் இருப்பதும் அது சில வேளை மரண வலியைத் தருவதும் பெடியளுக்குத் தெரியும். பெடியளோடு பெடியளாக சிரித்தபடி கும்மாளம் போட்டபடி இருந்தா மயூரனைப் பார்த்து ‘துரோகி, நாயே’ என்று எனக்குள் சொல்லிக் கொண்டேன்.

இரவாகியது. மயூரன் குப்பி விளக்கை வைத்து எழுதிக் கொண்டிருந்தான் நான் தூக்கம் போல அவதானித்தபடி படுத்திருந்தேன். இரவு ஒரு மணி இருக்கும். அதைச் சிறிதாக மடித்து மேசைக்குக் கீழ் வைத்தான். அது விழவில்லை. சென்று படுத்துவிட்டான். நான் இரு மணித்தியாலமாக தூங்காதிருந்து அந்த மேசையின் கீழ் குனிந்து பார்த்தேன். கடிதம் ஒரு பசையால் மேசையின் கீழ் பகுதியில் ஒட்டப்பட்டிருந்தது. அதை எடுத்துக் கொண்டு டோற்ச் லைற் உடன் கக்கூசு இருக்கும் இடம் சென்று பார்த்தேன்.

மேற்பகுதி கடிதமாகவும் பின்பகுதி மல்லாவியில் கிபீர் தாக்கிய இடத்தில் இருந்து கிழக்கு பக்கம் 500 மீட்டர் அடையாளம் வகுத்து படம் வரையப்பட்டிருந்தது. அது அச்சொட்டாக பெண்கள் படையணி இருந்த முகாம். அங்கு குறிப்பிட்ட தளபதி நிற்பது வழமை. எனக்கு உடலெங்கும் நடுங்குவது போலிருந்தது. கடிதத்தை அப்படியே இருந்தது போல் வைத்து விட்டு வயர்லசை எடுத்துக் கொண்டு வெளியேறி A1 தொடர்பெடுத்து விடயத்தைக் கூறினேன். ‘ஆள் பத்திரம். உசாராய் இரு’ என்று பதில் வந்தது.

சில நாட்கள் கழிந்தன. என் உடல் எங்கும் எப்போதும் நெருப்பெரிந்து கொண்டே இருந்தது. A1-ல் இருந்து தகவல் வந்தது. இந்தக் கிழமை எப்படியும் ஆள் ஓடப்போகுது. மன்னாரில் இருந்து கடிதம் வந்தது. நாளை அது வந்து சேரும்.

மேலிடம் வரும் கடிதத்தை ஒட்டுப் பார்த்து விட்டதைப் புரிந்து கொண்டேன். அடுத்த நாள் சொன்னபடி கடிதம் வந்தது. மறுநாள் அன்று ஒரு சனிக்கிழமை அதிர்ச்சியாக முகாமிற்கு இறைச்சிக் கறியும் சோறும் வந்தது. மயூரன் தன் பணத்தில் எல்லோருக்கும் ‘கொக்கா’ மல்லாவி சென்று வேண்டிவந்தான்.

அன்று இரவு மட்டுமல்ல தகவல் கிடைத்த இரு மாதமாக எனக்கு தூக்கம் இல்லை. என் கைத்துப்பாக்கி எப்போதும் இயங்கு நிலையிலேயே இருந்தது. ஓர் அதிகாலை நான்கு மணி இருக்கும். மயூரன் எல்லோரையும் இருட்டில் பார்த்தான். என் தலகணிக்குக் கீழ் பிஸ்ரல் கையில் இருந்தது. அவன் மெதுவாக வெளியேறி காம்பன் முற்றத்தில் நின்று திரும்பிப் பார்த்தான். பிறகு கதவை மெதுவாகத் திறந்து தன் சைக்கிளில் வெளியேறினான். நான் M1-க்கு உடன் தகவல் கொடுத்தேன்.

அன்று மாலை வெள்ளாங்குளம் கடற்கரையில் மன்னாருக்கு படகு மூலம் செல்ல பேரம் பேசிக்கொண்டிருந்தபோது இயக்கத்தால் கைது செய்யப்பட்டான்.

இரண்டு மாத கடும் விசாரணை முடிந்து அன்று தீர்ப்பிடும் நாள். என் மனம் ஒன்றாக இரண்டு வருடம் இருந்த துரோகியை எண்ணிக் கொண்டே இருந்தது. அவன் ஏன் அப்படியானான்? எப்படி அவனால் காட்டிக் கொடுக்க முடிந்தது? சிங்கள மொழியை எங்கு கற்றான்? எப்படி எங்களுக்குள் நுழைந்தான்? மனம் போதை கொண்ட விலங்கு போல் குலைந்திருந்தது.

காட்டிக் கொடுப்பவன் எவனாகிலும் துரோகி தான் என்று... என் பிஸ்ரலை முதன் முதல் ஒரு துரோகியைச் சுடத் தயாராக்கினேன். என்னருகே வந்த விமல் ‘அண்ண இந்த நாய நான் போடுறன்’ என்றான். நான் தலையசைத்து விட்டு அதற்குள் போட இருந்த குண்டுகளை ஒருமுறை மீண்டும் பார்த்தேன்.

சரியாக காலை பத்து மணிக்கு கண்கள் கட்டியபடி கறுப்பு பிக்கப்பில் மயூரன் கொண்டுவரப்பட்டான். ஒவ்வொருத்தராய் பார்த்து விட்டு வந்தனர். நான் பார்க்கவில்லை. தான் எங்கே இருக்கிறேன் என்று அவன் புரிந்திருக்க வேண்டும். தண்ணீர் கேட்கிறான் என்றான் அர்ச்சுனா. ‘கொடு’ என்றேன்.

மல்லாவியில் ஒலிபெருக்கியில் எல்லா மக்களும் அறியும்படி துரோகி பற்றி அறிவித்தாகிவிட்டது. 12:00 சரியாக வரும்படி தகவல் வந்தது. நான் அவனைப் பார்க்க விரும்பவில்லை. 11:45-க்கு பிக்கப் புறப்பட்டது. நானும் விமலும் மோட்டார் சைக்கிளில் சென்றோம். சனம் திரண்டுவிட்டிருந்தது. எல்லோர் முகத்திலும் காய்ந்த பார்வை ஏக்கத்தோடு இருந்தது.

பிக்கப்பை சனம் நெருங்கியபோது கிட்ட வரவேண்டாம் என்று மக்கள் விலத்தி வைக்கப்பட்டனர். குற்றசாசனம் வாசிக்கப்பட்டது. நாங்கள் 8 பேரும் வரிசையில் நின்றோம். மயூரன் கண்கள் கட்டப்பட்டு கதிரையில் இருத்தி வைக்கப்பட்டிருந்தான். மணிக்கூட்டைப் பாரத்தேன் 11:59. பிஸ்ரலை அம்மாவின் கையைப் பிடிப்பது போல் பிடித்தேன். ஆட்காட்டிவிரல் மூன்று முறை அசைந்தது. கதிரையோடு மயூரன் வீழும் சத்தம் நாலாவதாக வந்தது.

விமல் பைக்கை எடுத்தான். நான் விமலின் முதுகில் சாய்ந்திருந்தேன்.

இருபத்தி ஐந்து வருடம் கடந்து, இறுதியில் இராணுவத்திடம் சரணடையுமாறுவந்த கட்டளையை நிறைவேற்ற நகர்ந்த போது வடலி ஒன்றின் குருத்துக்குள் என் குப்பியும், தகடும் வைத்து விட்டு நடந்தபோது நான் பிணம். புனர்வாழ்வு என்ற வதைமுகாமில் எங்கள் இரகசியங்களை, நாங்களே ஒப்பித்தோம். ஊர் சென்று சேர்ந்த போது என் மூளை அதிசயமாக இயங்கியபடி இருந்தது தோற்றவனாக ஊர் நோக்கி சென்றேன். ஊர் என்னை ஊத்தையாகப் பார்த்தது. முறுநாளே விதானையாரிடம் இருந்து பதிவுக்கான அழைப்பு வந்தது. அங்கு சென்ற போது ஓர் இளம் பெண் திரைப்படம் பார்ப்பதுபோல் என்னைப் பார்த்தபடி இருந்தாள். அவளை எங்கோ பார்த்த நினைவு நீரில் தெரியும் மரங்களென அசைந்து கொண்டிருந்தது. விதானையாராய் இருந்த அந்தப் பெண் ‘உக்காருங்கோ’ என்றாள். உக்காரும் போது அவள் மேசையில் எழுதி இருந்த பெயரைப் பார்த்தேன்.

‘இ. மலர்விழி’.



akaran@thaiveedu.com



# கனவுகள் பொய்ப்படும்

- பொன்னையா விவேகானந்தன் -

விமானம் மெல்லமெல்லக் கீழிறங்கிக் கொண்டிருந்தது. அருள் ஜன்னல் வழியாக கண்வெட்டாமல் கீழே பார்த்தபடியே இருந்தான். எந்நேரத்திலும் கடலோடு ஒட்டிய கரை தென்படலாம். அதோ... கரை... ஈழத்தின் கரை. 26 ஆண்டுகளுக்குப் பின் விழித்திரைகளில் விழுகின்றது தாய்மண். கண்கள் மேலிருந்தவாறே தென்பட்ட கரையை, கடல் தழுவிய மண்ணை ஆரத்தழுவின.

அது மயிலிட்டிக் கடற்கரையாக இருக்க வேண்டும். விமானம் இன்னும் தாழப் பறந்தது. தென்னைகள், தோட்டங்கள், வீடுகள் எல்லாமே தெளிவாகத் தெரிந்தன. மனதெங்கும் இனம் புரியாத துள்ளல். இன்னும் சில நிமிடங்களில் விமானம் பலாலி விமான நிலையத்தில் இறங்கிவிடும். பேரிடைவெளிக்குப் பின் அருள் தாய்மண்ணில் கால்பதிக்கப் போகின்றான்.

அருளுக்கு இப்போது 56 வயது. வெளிநாட்டுக்கென 30 வயதில் புறப்பட்டவன். உலகில் உருவாக்கப்பட்ட எல்லாவகை ஊர்திகளிலும் கால்நடையாகவும் பயணித்துக் கனடா சென்றடைந்தபோது அவனுக்கு 33 வயதாகியிருந்தது. இந்த நாடு காண் பயணம் உடலில் சற்றே முதிர்ச்சியைக் கூட்டி, தலையில் முடியைக் குறைத்திருந்தது.

அவன் விரும்பியிருந்தால் புறப்பட்டு ஓரிரு ஆண்டுக்குள் ஏதேனுமொரு ஐரோப்பிய நாட்டுக்குச் சென்றிருக்கலாம். ஆனால் காதல் பெண்டு கீதா கனடாவில்தான் இருந்தாள். கீதாவுக்காகவே அருள், நாடு, காடு, கடல், மலை எல்லாம் கடக்க வேண்டியிருந்தது.

அருளின் ஊர் மிருசுவிலின் தெற்காக உள்ள உசன். மரஞ்செடிகள் நிறைந்த பசுமையான பகுதி. தந்தை சுப்பிரமணியம் சற்றே வசதியான தலைமுறையில் வந்தவர். ஆசிரியர் அவருடைய பரம்பரை முதுசமாகக் கிடைத்த நாற்சார வீட்டிலேதான் குடும்பமாக வாழ்ந்தார். அது அழகான விசலாமான வீடு. அங்குதான் அருளும் இரு மூத்த சகோதரர்களும் ஓர் இளைய சகோதரியும் பிறந்து வளர்ந்தார்கள். சுற்றுவட்டாரத்துக்குள் அந்த வீடு தனித்துத் தெரியும்.

அருள் குடும்பம் போர்காலத்தில் பெருமளவுக்குப் பாதிப்புக்கு உள்ளாகவில்லை என்றாலும், அடிக்கடி இடம்பெயர வேண்டியிருந்தது. ஒரு மகனை வெளிநாட்டுக்கு அனுப்பும் வாய்ப்பு வரவே, வாத்தியார் அருளைத் தெரிவு செய்தார். தன் மொத்த உழைப்பையும் முதலீடு செய்து அருளை வழியனுப்பினார். அருள் கிளாலி வழியாகப் பெரும் இடர்கள் கடந்து கொழும்பு சென்றான். ‘உன்னைக் கனடாவுக்கு அனுப்புவேன்’ எனக் கற்பூரச்சட்டியில் சத்தியம் செய்த ஒரு முகவர் அவனை மொஸ்கோவரை கூட்டிச் சென்றார். சென்றவர், அவனையும் வேறு சிலரையும் மொஸ்கோ நதிக்கரை-யோரத்தில் விட்டுவிட்டுத் தலைமறைவாகி விட்டார்.

அடுத்து என்ன செய்வது என்றறியாது தவித்து நின்ற அருளையும் வேறு சிலரையும் பாலன் என்ற தமிழர்தான் அழைத்துச்சென்று உறையுளும் உணவும் வழங்கினார்.


மாஸ்கோவில் சாண்டில்யன் எழுத்தில் வடித்திருந்த யவனராணிகளை மொஸ்கோவில் நேரில் காணக்கிடைத்தபோதும் அந்த அனுபவத்தை அருளால் மனதார உணர முடியாதிருந்தது.

வெளிநாடுகளில் வாழ்ந்த சில நண்பர்களின் உதவியால் அங்கு உயிரைத் தக்கவைத்துக் கொள்ள முடிந்தது. அங்கு நின்ற இரண்டாண்டுகளில் வெதங்கா பூங்காவில் வைக்கப்பட்டிருந்த விண்வெளி சென்ற பதப்படுத்திப் பாதுகாக்கப்பட்டுவரும் லைக்கா எனும் நாயை நூறு தடவைகளுக்கு மேல் பார்த்திருப்பான்.

ஓர் ஐரோப்பிய முகவருக்கு ரஷ்ய உதவியாளனாகச் செயற்படக் கிடைத்த வாய்ப்பைப் பயன்படுத்தி, இரண்டுமாதக் கொடும் பயணத்தினூடாக ஜேர்மனியைச் சென்றடைந்தான். அதே முகவரின் உதவியே அருள் கனடா செல்லவும் உதவியது.

கனடாவில் அருள் நிலைத்து எழுவதற்குக் கைகொடுத்தவை ரஷ்யாவில் பெற்ற பட்டறிவுகளும் கீதாவும்தான். தொடக்கத்தில் ஓர் உணவகத்தில் அடிநிலை வேலையாளாகப் பணிக்குச் சேர்ந்தவன், இன்று ஓர் உணவகத்தின் உரிமையாளன். உணவகத்தின் வெற்றிக்கு அடிப்படை சுவைதான். தூங்கும் நேரம் தவிர உணவகத்தோடே ஒன்றிக் கிடப்பான் அருள். அருளுக்கு ஆண், பெண் என இரு பிள்ளைகள். இப்போது இருவரும் பல்கலைக்கழகத்தில் பயில்கின்றார்கள்.

உழைப்போடு ஒன்றிவிட்ட அருளால் விடுமுறை எடுத்து எங்கும் செல்ல முடிவதில்லை. அதை அவன் விரும்பவுமில்லை. ஊரில் தாய், தந்தை இருவருமே இறந்துபோக, அண்ணன்மாருக்கும் தங்கைக்கும் இவனே உதவ வேண்டியிருந்தது. ‘தந்தையின் மொத்தச் சேமிப்பையும் வாங்கிப்



புறப்பட்டவன் நான், ஆதலால் உடன்பிறப்புகளுக்கு உதவுவது என் கடமை' எனக் கருதியவன் அருள். அவர்களுக்கு மனமுவந்து உதவினான். கேட்கும்போதெல்லாம் பணம் அனுப்பி வைத்தான். எல்லோரும் மணம்முடித்து குழந்தைகளோடு உசனிலேயே வாழ்கின்றார்கள்.

சகோதரர்களின் அழைப்பும் கீதாவின் வற்புறுத்தலும் அதிகரிக்கவே தாயகத்துக்குப் போவதென முடிவெடுத்தான். 'சென்னை சென்று, அங்கு வேண்டிய பொருட்களை வாங்கிக்கொண்டு பலாலி வழியாக ஊருக்குப் போகலாம்' என ஒரு நண்பர் கூறிய அறிவுரையை ஏற்றுப் பயணத்தைத் தொடங்கியிருந்தான்.

தரையிறங்கிய விமானம்... ஓடி, ஊர்ந்து ஒருவழியாக நின்றது. படிகளின் வழியே கீழிறங்கித் தாய்மண்ணில் கால் பதித்தான். காலில் இருந்து புறப்பட்ட இனம்புரியாத உணர்வு உடலெங்கும் பரந்தோடியது. உயிரின் அணுக்களில் இருந்து துளிர்த்தெழுந்த பரவசம் அவனைப் புதிதாய்ப் பிறப்பித்தது. அன்னையின் பரிவோடு தாய்மண் அருளைத் தாங்கியிருக்க வேண்டும்.

தன் உடன்பிறப்புகளுக்கு இன்ப அதிர்ச்சி கொடுக்கவேண்டும் என்பதற்காக, தான் ஊர் செல்லும் திகதியை யாருக்கும் வெளிப்படுத்தவில்லை.

அருள் பைகளை இழுத்துக்கொண்டு வெளியே வர, பகல் பன்னிரெண்டு மணியாகியிருந்தது. இணையவழியாகப் பதிவுசெய்த ஒரு வாடகைக்காரின் ஓட்டி, அருளை இலகுவாய் அடையாளம் கண்டு அறிமுகமாகிக் கொண்டான். அந்த வாடகைக்கார் சிறியதாக இருந்தது. இதில் பைகளை வைக்க முடியுமா? என்ற ஐயம் அருளுக்கு.

'அண்ணை, இதைவிட இன்னும் நாலு பை வைக்கலாமண்ணை. இஞ்சை பாருங்கோ' என்றவன், மிக இலாவகமாக பைகளை அடுக்கி ஏற்றினான். இந்த இலாவகம் கனடாவில் இல்லைத்தான்.

கார் புறப்பட்டது. சற்றுப் பரட்டையாகத் தென்பட்ட நிலங்களைக் கடந்து, தோட்டக்காணிகள் வழியே கார் ஊர்ந்தது. தோட்டக்காணிகள் பலவும் பயிர் செய்வாரின்றிப் புல்பூண்டுகளால் நிறைந்திருந்தன. வழியில் கடந்து சென்றதோர் உழவியந்திரத்தில் துப்பாக்கிகள் ஏந்திய இரு இராணுவத்தினர் காணப்பட்டனர்.

அருள் அதைத் துணுக்குற்றுப் பார்க்க, 'என்னண்ணை, பழைய பயம் தலைகாட்டுதோ, இவங்கள் இங்க எங்கட நிலங்களிலை தோட்டம் செய்யுறாங்கள்' என்றான் கார்க்கார இளைஞன்.

'ஏன் தம்பி இந்த நிலங்கள் இப்பிடிக் கிடக்கு? ஏதேனும் பயிர் செய்யலாமே' என்று அருள் கேட்க,

'அண்ணை, இப்பிடி இங்க நிறையக் காணிகள் கிடக்கு, வெளிநாட்டுக்காரரின்ர காணிகள் கனக்கச் சும்மா கிடக்குது. அவையள் 'காணி பறிபோயிடும்' எண்ட பயத்திலை குத்தகைக்குக் குடுக்க மாட்டினம். இருக்கிறவை அப்பிடியே பயிர் செய்ய வெளிக்கிட்டாலும் வேலைக்கு ஆள்பிடிக்க முடியாது. முந்தினமாதிரி இல்லையண்ணை' என்றான் ஓட்டி.

கார் ஓர் ஊருக்குள் நுழைய, 'அண்ணை.. இங்கை பாருங்கோ.. இதுதான் தெல்லிப்பழை துர்க்கையம்மன் கோவில்.. வெளிநாட்டுக்காரர் எக்கச்சக்கமா வந்துபோவினம்'.

எட்டிப் பார்த்தான் அருள். வண்ணமயமாக, செல்வந்தப்பொலிவோடு தோரணவாயிலும் கோயில் கோபுரமும் தென்பட்டன. அம்மாளுக்கு ஒரு வணக்கம் வைத்துக் கொண்டான்.

இன்னும் ஒரு மணிநேரத்தில் உசனுக்குப் போய்விடலாம். அந்த நாள் வாழ்வு அலையலையாய் எண்ணங்களில் விரிந்தது. நாற்சார வீட்டைச் சுற்றிநின்ற மாமரங்களும் பலாமரங்களும் நிழலாடின. அந்தப் பழங்களின் சுவைகள் மீண்டும் நாவோடு ஒன்றத் தொடங்கின.

தந்தையார் தனக்கென வாங்கியதொரு சாய்மனைக் கதிரை எப்போதும் திண்ணையில் நட்டுவைத்ததைப்போல் இருக்கும். அது வைக்கப்பட்டிருக்கும் கோணத்தை யார் மாற்றினாலும் கண்டறிந்து கொதிப்பார் மணியத்தார். நல்ல முதிர்ந்த அது முதிரையால் செய்யப்பட்ட சாய்மனைக் கதிரை. தந்தையாருக்குப் பின் அதை தான்தான் பயன்படுத்த வேண்டும் என்ற நினைப்பைக் கொண்டிருந்தவன் அருள். விருந்தினர் வந்தால்கூட அதில் அமரமாட்டார்கள். அது தந்தையாருக்கு மட்டுமே உரியதாக எல்லோரும் கருதினார்கள். அதிலிருந்தபடியே அவர் செய்தித்தாள்களையும் நூல்களையும் வாசிக்கும் அழகே தனி. அதனருகே இருக்கும் ஒரு சிறிய தேநீர் மேசையில் ஒரு வானொலி, சில நூல்கள், செய்தித்தாள்கள் என்பன எப்போதும் இருக்கும். அவருக்கான உணவு, தேநீர் எல்லாம் சாய்மனைக் கதிரைக்கே வந்துசேரும். அதிலிருந்தபடி ஓசைகளையும் அசைவுகளையும் கொண்டே வீதியில் போவோர் வருவோர் யாவர் என்பதைக் கணித்து விடுவார். அதிலிருந்தபடிதான் அவர் உயிர்விட்டார் என அண்ணன்மார் கூறியிருந்தார்கள். ஊரை மீறியதொரு வாழ்வு அவருக்கு இருந்ததில்லை.

முற்றத்திலும் வீட்டுக்குப் பின்னாலும் பலவிதமான சுவைகளைக் கொண்ட மாமரங்களும் பலாமரங்களும் நின்றன. பழங்களை யார் முந்திச் சாப்பிடுவது என்பதில் அருளுக்கும் அணில்களுக்கும் கிளிகளுக்கும் எப்போதும் போட்டிதான்.

வீட்டுக்குப் பின்னால் ஆழமான நல்லதண்ணீர்க் கிணறு இருந்தது. அந்தக் கிணற்றுக்கு ‘நல்லதண்ணிக் கிணறு’ என்றுதான் பெயர். அயலட்டைக் கிணறுகளில் தண்ணீர் சற்றே மஞ்சளேறிக் கிடக்கும். கிணற்றுத் தண்ணீரால் செழித்து வளர்ந்த வாழைகள் பின்வளவில் நிறைந்து நின்றன. வீட்டின் காவலாளிகள் போல சுற்றிக்கிடந்த நாற்புற வேலிகளிலும் தென்னைகளும் பனைகளும் நிமிர்ந்து நீண்டிருந்தன.

உசனுக்குத் தெற்கில் விடத்தற்பளையை அண்டிய பகுதியில் வாத்தியாருக்கு ஐந்து ஏக்கர் விவசாய நிலம் இருந்தது. அங்கே மாரிகாலத்தில் நெல்லையும் கோடைகாலத்தில் பயறு, உழுந்து போன்ற தானியங்களையும் வாத்தியார் விளைவிப்பார். அங்கேயும் நல்ல பயன்தரும் தென்னைகள் இருந்தன. சற்றே பள்ளக்காணி என்பதால் நீர் தேங்கிநின்று நல்ல பயன் தரும்.

‘அண்ணை, கொடிகாமம் கடந்திட்டம். அடுத்தது மிருசுவில்தான். எங்கை போகவேணும் எண்டு சொல்லுங்கோ.’ என்று கார்க்காரன் சொல்லால் உலுப்ப,

‘என்ன கொடிகாமம் கடந்திட்டமோ அவ்வளவு கெதியா?’

ஓமண்ணை, மருதனாமடத்தடியால திரும்பி, கோப்பாய்க்கால கைதடியிலை ஏறிச் சாவச்சேரி, கொடிகாமம் கடந்து வந்திட்டம்.

அருள் இருபுறமும் பார்த்தபடிதான் வந்தான். ‘இதுதானா அந்த இடம்’ என்று ஒன்றையும் நினைவுபடுத்திக்கொள்ள முடியாதிருந்தது. வீதிகள் குன்றும் குழியுமாக இல்லாமல் செம்மையாக இருந்தன.

‘அப்பிடியே ஸ்டேசனுக்குப் பக்கத்தால வலதுபக்கம் திருப்புங்கோ தம்பி’ என்றான் அருள். சைக்கிள் கூட ஓட்ட முடியாதிருந்த பழைய தெரு நினைவில் எழ, ‘பார்த்துப் போங்கோ தம்பி, றோட்டு உதவாது’ என்று தன் ஞாபகசத்தியை அருள் வெளிப்படுத்த முயல,

‘என்னண்ணை சொல்லுறியள்.. சும்மா கம்பளம் விரிச்சமாதிரி கிடக்குது றோட்.’ கார்க்காரனின் குரலில் கிண்டல் தொனித்தது. வீதியை நிமிர்ந்து பார்த்தான். உண்மைதான். எண்ணெய் வைத்துச் சீவிய கன்னியின் கருங்கூந்தல் போல் காட்சி தந்தது ஸ்டேசன் வீதி. மகிழ்ச்சிதான். ஆனால் குன்றுங்குழியுமான அந்த பழந்தெரு தந்த ஆனந்த அனுபவம் இதில் கிட்டாதே.

‘தம்பி. அப்பிடியே நேரா போங்கோ இரண்டு முடக்கு வரும், அதைத் தாண்டிப் போங்கோ சொல்லுறன்.’

‘அண்ணை, இரண்டு முடக்கும் கடந்திட்டன்.’

‘ஓ. அப்பிடியே வாற சந்தியிலை இடதுபக்கம் திருப்புங்கோ.’

‘திருப்பிட்டன்.. பிறகு..’

அருள் சுற்றுமுற்றும் பார்த்தான். மதில்களுக்குள் பெரியதுமாய் சிறியதுமாய் பல வீடுகள் அடர்ந்து கிடந்தன. கார் நின்றவிடத்தில் இருபுறமும் இரு பெரிய வீடுகள் போட்டிக்குக் கட்டியது போன்றிருந்தன. அங்கெங்கும் அருள் தான் வாழ்ந்த வீட்டிற்குரிய அடையாளங்களைக் காணவில்லை.

‘தம்பி.. காரைத் திருப்பு, றோட்டு மாறி வந்திட்டம் போல..’

‘அண்ணை, சொல்லுறன் எண்டு குறை நினையாதையுங்கோ. நீங்கள் பழைய நினைப்பில வீட்டைத் தேடுறியள். எல்லாம் மாறிப் போச்சுதண்ணை. ஆரிட்டையும் விசாரிப்பம்’

என்னது... நான் பிறந்து வளர்ந்த ஊரில, என்ர வீட்டை ஆரிட்டையும் விசாரிச்சுக் கண்டு பிடிக்கிறதோ... கேவலமாய் இல்லையே தம்பி...’

‘விளங்குதண்ணை, இப்ப இங்க புதுப்புது றோட்டுகளும் வந்திட்டுது. வயல்காணி, தோட்டக்காணி எல்லாத்திலையும் வீடு கட்டுறாங்கள். நீங்கள் பாக்கிறதெல்லாம் புதுக்காட்சியள் அண்ணை. உங்கட ஞாபகங்கள்தான் பழசாய்க் கிடக்கு.’

‘சரி அடுத்த றோட்டுக்கு விடு.’

மீண்டும் ஸ்டேசன் வீதிக்கு வந்த கார் திரும்பித் தெற்காக ஓடியது. எதிரே இரு இளைஞர் மோட்டார் சைக்கிளில் வர, கார்க்காரத் தம்பி அவர்களை நிறுத்தினான்.

‘கேளுங்கோ.. அண்ண..’

உடனே அருள், ‘தம்பி.. இங்க சுப்பிரமணியம் வாத்தியாற்ர வீடு எங்கையெண்டு தெரியுமோ?

இருவரும் ஆளையாள் பார்த்துவிட்டுத் ‘தெரியாது’ என்றார்கள்.

‘அண்ணை, இது உங்கட அப்பாவின்ர பெயரே... இவங்கஞக்கு அதெல்லாம் தெரியாது... உங்கட சகோதரங்களின்ர பெயரைக் கேளுங்கோ.’ கார்க்காரத் தம்பியின் குரலில் சற்றுக் கடுப்பேறியிருந்தது.

‘திருநந்தன்... திருநந்தன்ரை வீடு தெரியுமோ...?’

அப்போதும் இருவரும் யோசித்தார்கள். பின்னாலிருந்தவன், ‘டேய் இது சதீஷின்ர அப்பா திருவங்கிள் ஆக இருக்குமோ?’

‘இருக்கும்... இருக்கும்.., அங்கிள்... இங்க திருவங்கிள் எண்ட ஒருவர் இருக்கிறார். அவரா இருக்கலாம். காரைத் திருப்புங்கோ... கொஞ்சத் தூரம் வடக்கால போய், ரைட் சைட்டில திருப்புங்கோ... வலதுபக்கம் இரண்டாவது பெரிய வீடு அவற்ரைதான்’ என்றான் மோட்டார் சைக்கிளை ஓட்டி வந்தவன்.

‘தாங்ஸ் தம்பியவை...’

தான் வாழ்ந்த வீட்டையே தான் தேடிக்கொண்டிருப்பது அருளுக்கு மன உளைச்சலை ஏற்படுத்தியது.

கார்க்காரன் தெளிவாக இருந்தான்... மோட்டார் சைக்கிள்காரர் சொன்ன குறிப்புகளுக்கேற்ப, ஒரு வீட்டின் முன் காரை நிறுத்தினான்.

வெளியே உற்றுப் பார்த்தபடியிருந்த அருள், ‘இல்லை... இது என் வீடாக இருக்க வாய்ப்பில்லை’ என நினைத்தபடியே இறங்கினான். சுற்றுமுற்றும் பார்த்தான். வேலிகள் இல்லை, வேலைப்பாடு கொண்ட மதிலால் சூழப்பட்டிருந்தது அந்த வீடு. வளவுக்குள் பனை, தென்னை எதுவுமில்லை. வானுயர்ந்த மரங்கள் இல்லை. அவற்றின் நடுவே இருந்த நாற்சார வீட்டைக் காணவில்லை.

‘இல்லை... இது வேறை தம்பி... என்ர வீடு இப்படியில்லை.’

கார்க்காரனுக்குத் தன்னுடைய நேரம் இழுபடுகிறதே என்ற கடுப்பு. ‘அண்ணை, உங்கட சகோதரங்களின்ர போன் நம்பர் இருக்கே... தாங்கோ... என்ர போனில அடிக்கிறன்.’

வேறுவழி தெரியவில்லை அருளுக்கு. போன் நம்பரைச் சொல்லிக் கொண்டிருக்க, அந்தப் பெரிய வீட்டின் கேட்டைத் திறந்து ஒருவர் வெளியே வந்தார். அருளை உற்றுப் பார்த்தவர்,

‘டேய் தம்பி அருள்... எப்படா வந்தனீ? சொல்லாமல் கொள்ளாமல் வந்திட்டாய்...’

அருளும் அண்ணன் திருவை அடையாளம் கண்டுகொண்டான்.

கார்க்காரன் நிம்மதிப் பெருமூச்சு விட்டபடியே பைகளை இறக்கினான். அவன் கணக்கை முடித்துவிட்டு, கேட்டைத் திறந்து உள்ளே நுழைந்தான் அருள்...

அதற்குள், வீட்டிலிருந்த திருவின் மனைவி, வேறு சிலர் எல்லோரும் கூடிவிட்டனர். அருளுக்கு மனதில் மகிழ்ச்சி இல்லை.

‘அண்ணா, இந்த வீடு...’

‘ஓமடா தம்பி, இப்ப கொஞ்சக்காலத்துக்கு முதல்லதான் கட்டி முடிச்சனான்.’

‘அப்ப, பழைய நாற்சார வீடு...?’

‘அதுதான் உடைஞ்சு பழுதாய்ப் போச்சுதே. அதை இடிச்சுப்போட்டு இதைக் கட்டியிருக்கிறன். நீயுந்தானே காசு அனுப்பினனீ.

அருளின் இதயமும் இடிந்து போனது. எண்பது, தொண்ணூறு ஆண்டுகள் பழைமையான வீடு. முதிரை, கருங்காலி, வேம்பு, பனை போன்ற வலிமையான மரங்களாலும் செங்கற்களாலும் கட்டப்பட்டிருந்த வீடு. ஒருவகையில் மரபுரிமைச் சொத்து என்ற அடிப்படையில் பேண வேண்டிய வீடு. அதை இடிச்சுப்போட்டன் எண்டு மிகச் சாதாரணமாகச் சொல்கிறானே அண்ணன்.

கனவுகள் சிறுகச் சிதைந்து கொண்டிருக்க, கடுப்பும் கவலையும் உச்சத்தில் ஏறியது. முப்பது ஆண்டுகளாய் வெளிநாட்டில் பெற்றுக்கொண்ட பக்குவம் அவனை அமைதிப்படுத்தியது.

இங்கே இருந்த மரங்கள் எல்லாம் எங்கே...?

வீடு கட்டும்போது இடைஞ்சலாக இருந்தது. அதோட வீட்டின்ர வடிவை அதுகள் மறைச்சுது. வெட்டிப் போட்டன்.

கறி சமைக்கக் காய்கறிகளை வெட்டியது போல் சொல்கின்றானே. மரங்களின் மான்மியங்கள் இவனுக்குத் தெரியாதா? பக்குவம் தலையெடுத்துப் பதற்றத்தைத் தணித்தது.

வீட்டுக்குள் நுழைந்தான். இரண்டடுக்கு வீடு. மேல்நோக்கிப் போக வேலைப்பாடுகளுடன் கூடிய மரத்தாலான படிகள். அந்த வீடு மேலைநாட்டு வீடுகளைப் போல் வெகு நேர்த்தியாகக் கட்டப்பட்டிருந்தது.

‘அருள்.. பாத்தியே வீட்டை.. மொசாக் கல்லிலை தரை. இந்த சட்டங்கள், படியள் எல்லாம் நல்ல தேக்கில செய்தது. இந்த லைட்டுகள் கூடக் கொழும்பிலை இருந்து எடுப்பிச்சுக் கொழுவியிருக்கிறன். இப்படியாக, மகாபலிபுரத்து வழிகாட்டி போல் சரளமாய் பெருமை பொங்கப் பொழிந்து கொண்டிருந்தான் திரு.

திருவின் மொழியை உள்வாங்கும் இயல்புநிலையில் அருளின் செவிகள் இல்லை. பயணக்களைப்போடு மனதிலும் அடுக்கடுக்காய் வலிகள் தோன்ற, அங்கிருந்த சோபாவில் அமர்ந்தான்.

'தம்பி, நல்லாக் களைச்சுப் போயிருப்பியள். இதைக் குடியுங்கோ' எனப் பளபளக்கும் கிண்ணமொன்றில் எலுமிச்சம் பழச்சாறு கொடுத்தாள் அண்ணி.

'தாங்ஸ் அண்ணி' என்றவன், ஒரே மிடற்றில் குடித்து முடித்தான். மேலே சுழன்றுகொண்டிருந்த மின்விசிறி இதமான காற்றை வழங்கினாலும் எண்ணங்கள் புழுக்கத்தில் மிதந்தன.

'அருள். மேல உனக்கு ஒரு அறையை ஒதுக்கிட்டன். அங்க போய் ரெஸ்ட் எடு. தம்பி தேவனுக்கும் கலாவுக்கும் போன் பண்ணிட்டன் இப்ப வருவினம்.'

சட்டென, ஏதோ ஞாபகம் வர, 'அண்ணா, அப்பாட சாய்மனைக் கதிரை எங்க கிடக்கு?'

'சாய்மனைக் கதிரையோ..' இதற்கு விடை சொல்ல திரு நினைவுகளைத் திரட்ட வேண்டியிருந்தது. 'அது... அது... கனகாலத்துக்கு முதல் உடைஞ்சு போய்ச்சுது.. எறிஞ்சிட்டம்.'

திண்ணையில் சாய்மனைக்கதிரையில் தந்தை இருக்காத போதும் கூட, தந்தைக்குக் கொடுக்கும் மதிப்பை அக்கதிரைக்குக் கொடுத்திருந்தவன் அருள்.

பதறிப் பற்றி எரிந்தது அருளின் உணர்வு. 'அண்ணா, இஞ்சை என்ன நடக்குது..?' அருளின் குரலில் சுவர்கள் கூட அதிர்ந்திருக்க வேண்டும். பக்குவம் பதறிப்போய் பதுங்கிக் கொண்டது. அண்ணிக்காரி உள்ளேயிருந்து ஓடிவந்தாள்.

'அப்பாவின்ர வீடு இல்ல, கதிரை இல்ல, நாங்கள் ஏறி விளையாடின மரங்கள் இல்ல, பனை தென்னை இல்லை, வேலி இல்ல. அந்த வாழ்க்கை இங்க முழுசா இல்லை. நான் உங்களை மட்டும் பாக்க வரேல்லை. அந்த இழந்து போன வாழ்க்கையையும் பாக்கிறதுக்கெண்டு வந்தன். என்ர சொந்த வீட்டை நானே நாலு பேரிட்ட விசாரிச்சுக் கண்டுபிடிக்கிற இழிநிலை இண்டைக்கு எனக்கு.'

மின்விசிறி மட்டுமே ஏதோ தன்பாட்டில் முணுமுணுத்துக் கொண்டிருந்தது.

'சொறி.. நான் எதிர்பார்த்தது எதுவும் இங்க இல்லாமல் இருக்க, டென்சனாகிட்டன்.' மௌனம் படர்ந்திருந்த நிலையில் தேவனும் கலாவும் உள்ளே வந்தார்கள்.

அருள், 'சொல்லியிருந்தா நான் எயாப்போட்டுக்கு வந்திருப்பன்' என்றபடி தேவனும் 'அண்ணா நல்லா வாடிப்போயிருக்கிறீங்கள்' என்றபடி கலாவும் வந்தமர்ந்தனர்.

அருள் மென்மையாகப் புன்னகைத்தபடி 'சரி பின்னேரம் கதைப்பம், நான் கொஞ்சம் படுக்கப்போறன்' என்று ஒதுக்கப்பட்ட அறைக்குள் சென்றுவிட்டான்.

அந்த வீட்டின் நேர்த்தியான கட்டமைப்புக்குப் பொருத்தமான கட்டில்தான். வலிகளை மீறித் தூக்கம் அவனை ஆட்கொண்டது.

மாலை நான்கு மணியளவில் எழுந்துவிட்டான். எனினும் மனதில் ஏறிய பாரம் குறைந்தபாடில்லை. மாடியில் இருந்த குளியலறையும் மேல்நாட்டு அமைப்பிலேயே காணப்பட்டது.

தன்னைக்காண பலர் அங்கு வந்திருப்பதை செவி தொட்ட ஒலிகள் உணர்த்தின. மெல்லக் கீழிறங்கி வந்தான். சேதி கேட்டு, உறவுகள், அயலட்டைக்காரர் எனப் பலர் வந்திருந்தனர். அவர்களுள் சிலர் பழைய உறவுகளைச் சொல்லி தம்மை அறிமுகப்படுத்திக் கொண்டனர். ஏனையோர் சிலர் வில்லங்கத்துக்கு வந்திருப்பது போல வந்திருந்தனர்.

மெல்லிய புன்னகையோடும் சில வார்த்தைகளுமாய் அந்தக் காணும் சடங்கை நிறைவேற்றிக் கொண்டிருந்தான் அருள். அண்ணியும் கலாவும் வந்திருந்தவர்களுக்குக் கதைகதையாய்க் கூறியபடி தேநீர் வழங்கிக் கொண்டிருந்தனர்.

ஏறக்குறைய எல்லோரும் போனபின், 'அண்ணா, சைக்கிள் இருக்கா? நான் ஒருக்கா வயல்காணி வரைக்கும் போகவேணும்' என்று அருள் கேட்க,

'வயற்காணியோ.. இங்கை ஆர் தம்பி வயற்காணி, தோட்டம் செய்யிறது? அதை வித்துத்தான் நீ அனுப்பின காசோட இந்த வீட்டைக் கட்டினனான்.'

வலிகள் விளைந்திருந்த அருளின் மனவயலுக்குள் எறிகணையொன்று விழுந்து வெடித்தது. அவன் பேச முயற்சிக்கும் வார்த்தைகள் யாவும் மூச்சை இழந்து போயின.

மனதுக்குள் துளிர்த்த கண்ணீரைத் துடைத்துக்கொண்டு 'சரி.. சைக்கிளைத் தாங்கோ.. கந்தசாமி கோயில் வரைக்கும் போயிற்று வாறன்.' கந்தசாமியர் மாற்றங்களுக்கு ஆட்பட்டிருக்கமாட்டார் என நம்பினான் அருள்.

'இங்க ஆர் சைக்கிள் பாவிக்கினம் தம்பி. அதெல்லாம் அந்தக்காலம். இப்ப எல்லாரிட்டையும் மோட்டார் சைக்கிள்தான். சதீஷ் இப்ப வந்திடுவான். அவனோட போய் இடங்களைப் பார்.' என்று தேவன் சொல்ல, 'சித்தப்பா' என்றபடி சதீஷ் ஒரு கையில் கிரிக்கெட் மட்டையையும் மறுகையில் செல்போனுமாய் உள்ளே வந்தான்.

அருள் கலாவையும் அண்ணியையும் அழைத்து, கொண்டு வந்த இரு பெரிய பைகளையும் கொடுத்து, 'எல்லாம் உங்களுக்குத்தான் பார்த்துப் பிரிச்செடுங்கோ' என்று கூறிவிட்டுச் சதீசுடன் புறப்பட்டான்.

'சித்தப்பா இதுதான் கோயில்'

கோயிலின் மதில்களும் சுவர்களும் வண்ணப்பூச்சுகளால் மிளிர்ந்தன. ஆங்காங்கே ஓவியங்களும் தெரிந்தன. கோபுரமும் ஒளி வீசியது. 'வெளிநாட்டுக்காரர் கோயிலுக்கு நல்லாச் செலவழிப்பினம், இதெல்லாம் அவையின்ர திருப்பணி' என்றான் சதீஷ். ஊர்கள்தோறும் வெளிநாட்டுக்காரர் தங்கள் செல்வாக்கை (செல்வ வாழ்வை) வெளிப்படுத்தும் இடங்கள் கோயில்களும் பள்ளிகளும்தான் போல.

செந்தழிப்பான தோர் ஐயர் தீபம் காட்டிக்கொண்டிருந்தார். கருவறையும் கந்தசாமியாரும் மட்டுமே தீபஒளியில் மாற்ற மின்றித் தென்பட்டனர்.

ஒருவாரம் முடிந்திருந்தது. வீட்டில் மட்டுமல்ல, ஊரார் சில ரும் அவனை அழைத்து விருந்து கொடுத்திருந்தார்கள். அவனுடைய வயிற்றை மகிழ்விக்க முயன்றவர்களால் மனதை நெருங்க முடியாமல் இருந்தது. அருளின் அன்பும் கனவுகளும் நிறைந்து கிடந்த எல்லைகளுக்கருகில் எவரா லும் செல்ல முடியவில்லை.

திட்டமிட்ட நாளுக்கு முன்பாகவே, அருள் புறப்படப் போவ தாக அண்ணன்மாருக்குக் கூறினான்.

‘வந்தனீ.. இன்னும் இரண்டுகிழமை நிண்டிட்டுப் போகலாமே’ என்றான் திரு.

‘எனக்கு உங்களத் தவிர இங்கை ஆரையுமே தெரியேல்ல.. திருவின்ர, தேவன்ர தம்பி, சதீசின்ர சித்தப்பா, கண்ணனின்ர மாமா எண்டுதான் நான் அறிமுகமாகிறன். எனக்கெண்ட தனிச்ச அடையாளங்கள் எதுவும் இப்ப இங்க இல்ல. அப் பாவைக் கூட கனபேருக்குத் தெரியுதில்லை. விலகியிருக்கிற இடைவெளிகளுக்குள்ள என்னென்ன நடக்க வேணுமோ எல் லாம் நடந்திருக்கு. நான் நினைக்கிறன், இதுதான் இயல்பு, காலத்தின்ர நடைமுறை. இதிலை கவலைப்படவோ, சினக் கவோ எதுவும் இல்லை. அங்கையும் கீதா தனிய, போனால் உதவியாக இருக்கும்.’

பிற்பகல் 2 மணிக்குமுதல் பலாலி விமானநிலையத்தில் நிற்க வேண்டும். தேவன் தெரிந்த நண்பரின் மினிவான் ஒன் றைக் வரவழைத்திருந்தான். ஏறக்குறைய அறுபது வயதை எட்டிய ஒருவர் ஓட்டுநராக வந்திருந்தார். திரு, தேவன், சதீஷ் மூவரும் விமானநிலையம்வரை செல்லக் காத்திருந்தார் கள். அண்ணிமாரும் கலாவும் பலகாரங்களால் அருளின் இரு பைகளையும் நிரப்பி வானில் ஏற்றியிருந்தார்கள்.

வான் பலாலியை நோக்கி ஓடிக்கொண்டிருந்தது.

‘அண்ணா, சொல்லுறன் எண்டு கோவிக்காதையுங்கோ. அப்பா, தன்ர சேமிப்பு எல்லாத்தையும் தந்து என்னை வெளி நாட்டுக்கு அனுப்புறபோதே, இந்தக் குடும்பப் பொறுப்பெல் லாம் என்னட்ட வந்திட்டுது எண்டு நினைச்சுகொண்டன். இடையில பயணம் தடைப்பட்டு இடர்ப்பட்ட நேரத்தில, என்ர கவலையெல்லாம் எங்கட குடும்பத்தைப் பத்தித்தான் இருந்தது.

கனடாவுக்குப் போனதிலையிருந்து, இண்டைவரைக்கும் நான் உங்களுக்கு ஒரு குறையும் வைக்கேல்ல எண்டுதான் நினைக்கிறன். நீங்கள் கேட்டதையெல்லாம் செய்திருக்கிறன். ஏன் எதுக்கு எண்டு கேட்டதில்லை. இது அப்பா எனக்குத் தந்த பொறுப்பு எண்டு நினைச்சு சந்தோசமாவே செய்தன். எதையும் விசாரணைக்குட்படுத்தேல்ல.

ஆனா, இப்ப என்ர மனசிலை உங்கட எதிர்காலம் பற்றிய கவலையோட ஒரு பயமும் வருகுது.’

தேவன் அதிர்வு தொனிக்க, ‘என்ன தம்பி சொல்லுறாய்?’ எனக் கேட்க,

ஆற்றை வாழ்வுக்கும் உத்தரவாதமில்லை. என்ர உழைக்கிற வலு எப்ப இல்லாமல் போகுமெண்டு எனக்குத் தெரியாது. என்னால இயலும்வரைக்கும்தான் நான் உதவலாம்.. பிறகு..?

பிறகு..? திரு அதிர்ச்சியோடு கேட்டான்.

அருள், துயரம் மெலிதாய்ப் படிந்த புன்னகையுடன், ‘என்ர பிள்ளைகள் ஒருக்காலும் உதவ மாட்டார்கள்’ என்றான்.

வான் வேகத்தடை ஒன்றின்மீது துள்ளிக் குதித்துச் சென்றது. திருவும் தேவனும் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள்.

‘உண்மை, என்ர வயதான காலத்திலை என்ர பிள்ளைகள் என்னைப் பராமரிப்பார்கள் எண்ட நம்பிக்கையோட நானே இல்லை. அவை உங்களோட போனில பேசினாலேயே பெரிய விசயம். எனக்குப் பிறகு, உங்கள, உங்கட பிள்ளை யளின்ர வாழ்க்கையைக் கொண்டுபோறத்துக்கான வழிவகை யள நீங்கள்தான் செய்யவேணும். ஏதேனும் தொழில், வேலை எண்டு வருவாய்க்கான வழியளத் தேடிக் கொள் ளுங்கோ.

இது எங்கட குடும்பத்துக்கு மட்டுமில்ல. வெளிநாட்டு வருவா யில வாழுற எல்லாருக்கும் பொருந்தும். இப்ப இலங்கை முழுவதும் பொருளாதார நெருக்கடி. ஆனா வடக்குக் கிழக் காருக்குப் பெரிய சிக்கல் இல்ல, காரணம் வெளிநாட்டு வரு வாய். இதையே காலாகாலத்துக்கும் நம்பிக்கொண்டிருந்தா, இன்னும் முப்பது நாப்பது வருசத்தில நெருக்கடி இங்கால தான் வரும்.’

சதீசைத் திரும்பிப் பார்த்தான் அருள். ‘பிள்ளைகளை வெளி நாட்டு ஆசையில வளர்க்காதையுங்கோ. நல்லாப் படிப்பிச்சு தொழில் செய்ய வையுங்கோ. நான் இருக்கும் வரைக்கும் முடிஞ்சதைச் செய்வன். அதுக்குப் பிறகும் வலுவோட ஓடுற வலிமை உங்களிட்ட இருக்க வேணும்.’

திருவும் தேவனும் எதுவும் பேசவில்லை. சதீசுக்கு அருள் பேசியதில் பாதி புரிந்திருக்கவில்லை.

ட்ரைவர் பைகளை இறக்கி வைக்க, அருள் பணத்தைக் கொடுத்தான். ட்ரைவர் பணத்தைப் பெற்றுக்கொண்டு கைகூப்பினார். அவர் கண்கள் பனித்திருந்தன.

கையசைவோடு பிரிந்தான் அருள். அவனுக்குள் நீண்டகால மாக இருந்த வினாவுக்கு இப்போது விடை கிடைத்திருந்தது.

அண்ணன்மார் இருவர் இருக்க, சுப்பிரமணியம் வாத்தியார் வெளிநாட்டுக்கு அனுப்பறத்துக்கு என்னை ஏன் தெரிவு செய் தார்?

தந்தை மீண்டுமொருமுறை அவனுக்குள் தெய்வமானார்.



vivekanandan.p@thaiveedu.com

# சாம்பரில் திரண்ட சொற்கள்

## – தேவகாந்தன்




செங்கறுப்பாயிருந்த வானம் கருஞ்சிவப்பாகி இருளாகும் மாயத்தைத் துவங்குவதை அண்ணாந்த பார்வையில் ஜன்னலூடு கண்டபடியிருந்த சுந்தரத்திற்கு, உட்படிகளில் இறங்கி பாதி வழியிலிருந்து சாந்தரூபிணி, 'அங்கிள்...!' என குரலெடுத்தபோதே தெரிந்துவிடட்டது, முக்கியமான செய்தியொன்று பாதி தூரம் கடந்து நிலக்கீழ் வீட்டுள் இறங்கிவிட்டதென.

கீழ், மேல் வீட்டுக் குடும்பங்கள் அந்தவகையாக பழக்கத்தின் தத்தம் இடைவெளிகளை வகுத்துக்கொண்டிருந்தமை, விரும்பத்தக்கதாக இருக்கவில்லைத்தான், ஆனால் நன்மை விளைத்தது. வீட்டினுள்ளே அந்தளவு சுமூகம் போதும் என்பதை சில மாதங்களின் முன் கீழ் வீட்டுக்கும் மேல் வீட்டிற்குமிடையிலான ஊடாட்டத்தில் ஒரு பிரச்சினையிலிருந்து வெடித்தெழுந்த ஒரு பிரச்சினைமூலம் சந்தரம் புரிந்துகொண்டிருந்தார்.

ஒருநாள் காலையில் அவர் ஏதோ தேவைகருதி வெளியே சென்றிருந்தவேளை, 'அன்ரீ...!'யென அழைத்தபடி வெகு சுயாதீனமாக சாந்தரூபிணி கீழே வந்திருந்தாள். பதிலில்லாததில், படியேறமுடியாத அன்ரி வேறெங்கே வாஷ் றூம் தவிர போகப்போகிறாரென உடனடியாகத் திரும்பிவிடாமல் காத்திருக்கக் கருதி கூடத்துள் அமர்ந்தாள்.

வெளியே வந்து சாந்தரூபிணியை கூடத்துள் அமர்ந்திருக்கக் கண்ட மலர் திடுக்கிட்டுப்போனார். திடீரென ஒருவரை அவ்வாறு எதிர்ப்படும் எவருக்கும் ஒரு திடுக்காட்டம் ஏற்படுமாயினும், மலர் கொண்டதோ அவ்வாறு கொண்டிருக்கவேண்டிய தாய் இல்லாதிருந்தது. அது, சுமுகமாய் இருந்திருக்க வேண்டிய உரையாடலை முதலில் வீட்டு வாடகைதாரரிடத்திலும், பின்னர் வீட்டு உரிமையாளரிடத்திலும் உடைத்துப்போட்டது.

'என்னவேணும்? இந்த மாச வாடைக் காசு தந்திட்டம்தானே?' என்றார் மலர்.

அவரின் பார்வையிலேயே தனது திடும் பிரவேசத்தின் அவரது விருப்பமின்மையைத் தெரிந்ததோடு தனது செயற்பாட்டையும் வீட்டுச் சொந்தக்காரரென்ற எண்ணத்தின் அத்துமீறலாய் உணரத் துவங்கியிருந்த சாந்தரூபிணி நிலைமையைச் சமாளிக்க முயன்றாள். 'அதுக்காண்டியில்லை, அன்ரி, நான் சும்மாதான் வந்தனான். நீங்களும் தனிய இருப்பியள்... கொஞ்சநேரமெண்டான்ன ஒரு பேச்சுத் துணையாய் இருக்குமேயெண்டு...'

'நான் கேட்டனானோ...?'

சிதறிப்போனாள் சாந்தரூபிணி. பின் ஒருவாறு தன் சிதறல்களை ஒன்றுகூட்டி, 'இல்லை... மன்னிச்சிடுங்கோ...' என்று நாக்குழறிவிட்டு நாலு தாவலில் படிகளைக் கடந்து மேலே சென்றாள்.

'அன்ரியாம்... அன்ரி... என்னண்டு உந்த முறை வந்ததெண்டு எனக்கெண்டா விளங்கேல்ல...' என மலர் வெடித்து திர்த்த வார்த்தைகள் படிகளைத் தாண்டி சாந்தரூபிணியை அடைந்து, அவரது வெடிப்பின் முதன்மைக் காரணத்தைப் புலப்படுத்த தாமதமாகிவிட்டிருந்தன. அதற்கு முன்னரே அவள் கதவினைச் சாத்திவிட்டிருந்தாள்.

காலம் அந்த மனப் பாதிப்பை ஓரளவேனும் ஆற்றியதில் தேவைகள் கருதி அவ்வாறான பாதி அணுகுகைகள் நடை-முறைப்பட்டிருந்தன.

அதை நினைத்துக்கொண்டே, 'வாறன்' என்றபடி கூடத்திலிருந்து சுந்தரம் படிக்கட்டை அணுகி மேலே நோக்க சாந்த-ரூபிணி அங்கே நின்றிருந்தாள்.

'மயில்வாகனமெண்டு, ஆரோ, உங்கட சொந்தக்காறராம்... மொன்றியல்லயிருந்து உங்களைப் பாக்க மத்தியானம்போல இஞ்ச வந்தவர்... நீங்ளில்லையெண்டு சொன்னம்... ரெலிபோன் நம்பர் தந்திட்டுப் போயிருக்கிறார்... கூப்பிடட்டாம்' என நின்றவாறே தொலைபேசி எண் எழுதிய துண்டை நீட்டினாள். பாதிப் படிகளை ஏறி சுந்தரம் அதை வாங்கினார்.

அவள் திரும்பி மேற்றளம் அடைவதற்குள், 'கேளுங்கோ, எங்கட நம்பர் எதாவது குடுத்ததோண்டு' என கீழே அறையிலிருந்து மலர் கத்தியது கேட்டது. 'எந்த நம்பரும் ஒருத்தருக்கும் குடுக்கப்படாதெண்டு முந்தியே சொல்லிவைச்சிருக்கிறன்.'

இல்லையென்ற சாந்தரூபிணியின் பதிலைக் கொண்டுவந்து மலரிடம் தெரிவித்துவிட்டு திரும்ப, 'போன் எடுக்கப்போறியளோ உந்தாளுக்கு?' என வெடித்தது மலரின் கேள்வி.



‘எனக்கென்ன வில்லங்கம்?’ என நிதானமாய்ச் சொன்னார் சுந்தரம். ‘அவர் உங்கட சொந்தக்காறர். விரும்பினா எடுங்கோ, இல்லாட்டி விடுங்கோ. போன் நம்பர் இதில இருக்கு’ என துண்டை சின்ன மேசைமேல் எட்டி போட்டுவிட்டு படியேறி பின்முற்றம் வந்தார்.

வெள்ளி பூக்காத வானமாயினும் நிலாக்கீறு மரங்கள் அடர்ந்திராத திசையில் ஒரு வீட்டின் கூரைமேல் நின்று ஒளி சிந்தியது.

சுந்தரம் அங்கிருந்த சலாகை வாங்கில் அமர்ந்தார். மயில்வாகனத்தின் பிரச்சினை அந்தளவில் முடிந்துவிடவில்லை, இன்னும் தொடரவிருக்கிறது என்பது அவருக்குத் தெரிந்திருந்தது. அப்போது நடந்தது அதன் துவக்கம் மட்டுமே.

மயில்வாகனத்தை சின்ன வயதிலிருந்தே தெரிந்தவர். தேவை

யானபோது பேசிக்கொண்ட சந்தர்ப்பங்களும் இருந்திருந்தன. ஆனாலும் நாடிவந்த பின்னால் சில சம்பவங்களின் ஞாப கங்களின்போது வேறு பேர்களுடன் சேர்த்து நினைக்க நேர்ந் திருக்கிறதே தவிர, அவர் குடும்ப நிலையென்ன, அவர் எந்த நாட்டில் வசிக்கிறாரென்ற விபரங்களேதும் சுந்தரத்திற் குத் தெரிந்திருக்கவில்லை. தெரிகின்ற ஆர்வமும் எழுந்த தில்லை.

மயில்வாகனத்தின் தமக்கை புவனேஸ்வரியோடிருந்த தொடர் பளவுகூட அவருடன் சுந்தரம் கொண்டிருந்ததில்லை. புவ-னேஸ்வரியிடத்திலிருந்த பழக்கத்தின் இதய சுத்தம் மயில்-வாகனத்திடத்தில் இருந்திருக்கவில்லை என்பதை அவர் அறிந்தே இருந்தார்.

இந்த நிலையில் எவ்வளவோ காலத்தின் பின் தொலைபேசி எண் கிடைத்திருக்கிறது. உறவுமுறையை ஒதுக்கிக்கொண்டா லும், ஒரே நாட்டில் இருந்துகொண்டு, ஒரே ஊரவரும் அயல-வருமான ஒருவருடன் ஓர் உரையாடலை நடத்துவதில் சுந் தரத்திற்குத் தடையில்லை. ஆனால் நெருங்கிய சொந்தக்கா ரியாயிருந்தும் திருமணப் பேச்சுக் காலத்தில் தன்னை மறுத லித்த காரணம்கொண்டு ஒரு கோபம் இன்னுமே இருப்பது சாத்தியமென்றாலும், அது அத்தனை காட்டமாக மலரிடத் தில் வெளிப்பட்டிருக்க வேண்டியதில்லை என்பதே சுந்தரத் தின் அபிப்பிராயமாக இருந்தது. அதனால் மலரின் பிரதிப லிப்பு அவருக்கு ஆச்சரியம் செய்தது. இன்னும் பல விஷ யங்களை பூடகமாய்ச் சுற்றிப் படரும்படியான கூறுகளைக் கொண்டு அது இருந்ததாயும் அவரை நினைக்கவைத்தது.

மலரின் சுயம் மறந்த புலம்பல்களில் மயில்வாகனத்தின் பெயர் ஓரிருமுறை குறிப்பிடப்பட்டமையை அவதானித்திருந் தாலும், அவற்றைப் பொருளற்ற பிதற்றலாய் சுந்தரம் உதா சீனப்படுத்தியிருந்தார். ஆனால் மயில்வாகனத்தின் மேலான அன்றைய வெடிப்பு அவரை ஏதேதோ நினைக்க வைத்தது. மயில்வாகனம் குடும்பத்தாரின் திருமண மறுப்பின் காரண மாயன்றி வேறொரு காரணத்தைக் காண மனம் கைதுளாவி நின்றது.

அது என்னவாயிருக்கும்?

ஆறு நிமிடங்களில் தன் சிகரெட் புகைப்பை முடித்துக் கொண்டாலும் சுந்தரம் எழும்ப மனமின்றி அக் கேள்வியைச் சுற்றி தன் மனத்தை அலையவிட்டபடி அமர்ந்திருந்தார்.

தன் சிற்றப்பா சண்முகநாதனின் பேர்த்தி திருமணத்திற்குச் செல்வதா வேண்டாமாவென்று மலர் பிள்ளைகளுடன், சில நண்பர்களுடன் ஆலோசிக்கத்தான் செய்தார். யுத்த நிறுத்த காலத்தில், அதுவும் ராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதியில் நடைபெறவிருந்த கல்யாணத்திற்குப் போவதை யோசிக்க வேண்டியதில்லையென நடராஜசிவம்கூட சொன்னான். ஒரு வாரம் நிற்கக்கூடியமாதிரி தானும் வரப்போவதாகக் கூறி 'கர வெட்டியில சந்திப்பம்... பை... பை...' என்றாள் லண்டனிலி ருந்த அபிநயவல்லி. பிறகுதான் தன் ஆரோக்கியமும் சீர்கு லையாதிருந்த மலரும் புறப்படத் தீர்மானமெடுத்தார்.

ஆனால் கல்யாணம் முடிந்து, சந்திக்கத் திட்டமிட்டிருந்த உறவினர் நண்பர்களைச் சந்தித்து, அபிநயவல்லி லண்டன் போன பின்னாலும் ஒரு மாதம் நின்று வர மலர் திட்டமிட்டி ருக்கையில் திடீரென யுத்த நிலைமைகள் கிழக்கில் மாறின.

குண்டுகள் மறுபடி வெடிக்கத் துவங்கின.

தீவையே நடுங்கச் செய்வதுமாதிரி விடுதலைப் புலிகளின் விமானப்படைப் பிரிவு தலைநகர் கொழும்பிலும், கட்டுநா யக்க சர்வதேச விமான நிலையத்திலும் குண்டு வீசித் தாக்கு தல் நடத்தியதும் அப்போதுதான்.

விளைவாக, கொழும்பில் பிற ஊர்களிலிருந்தும் நாடுகளிலி ருந்தும் வந்து தங்கி நின்றிருந்த இலங்கைத் தமிழர்கள் அச் சமெழும்வகையில் கண்காணிக்கப்பட்டார்கள். அத் தீவிரக் கண்காணிப்பு அவர்களது நண்பர் உறவினர்மீதும் தொடர்ந்தது.

இவ்வாறான கெடுபிடி தொடர்ந்துகொண்டிருக்கையில் பாது காப்புப் படையின் திடீர் உத்தரவில் ஹோட்டல்கள் லொட்ஜ் களில் தங்கியுள்ளோர் இருபத்து நான்கு மணி நேரத்தில் அறைகளைவிட்டு வெளியேற நிர்ப்பந்திக்கப்பட்டனர்.

அதன்படி 2007 ஜுன் 7-ம் தேதி ஓர் அதிகாலை வேளையில், காலி வீதியோரம் எதிர்த்திசையின் சமுத்திரக் காற்று சேலையை உருவுகிறபடி சீறிக்கொண்டு வீசும் குளிரில், தன் ஒற்றைச் சூட்கேசுடன் வெளியேறும் முதலாவது ஆள்போல வந்துநின்றார் மலர்.

அவ்வாறு தங்க இடமேதுமின்றி தனியனாய், குடும்பமாய் தலைநகர்த் தெருக்களில் அந்தரித்தோர் தொகை ஆயி ரத்தை அணுகுமென கொழும்பு ஆங்கிலப் பத்திரிகை-யொன்று செய்தி வெளியிட்டிருந்தது.

கொழும்பிலிருந்த தமிழர்கள் நடுக்குறுத்தும் துயர் சூழ்ந்தவ ராய் ஆகிப்போனார்கள்.

வெள்ளவத்தை லொட்ஜைவிட்டு வெளியேறிய மலர் சில நாட்கள் காணாமல் ஆகியிருந்ததாகவும் கொழும்பு நண்பர் களிடமிருந்து தகவல் கசிந்தது. அது அப்படியல்ல, லொட் ஜிலிருந்து வெளியேறிய மலர் கொழும்புப் புறநகரிலுள்ள தூரத்து உறவினர் ஒருவருடைய வீட்டில் நலமாகவும் பாது காப்பாகவும் இருப்பதை புவனேஸ்வரி பின்னர் உறுதிப்ப டுத்தினார்.

அவ்விடர்க் காலத்தில் மயில்வாகனம் கொழும்பிலிருந்ததாய் சுந்தரம் அறிந்திருக்கவில்லை. அவரது முன்னாள் இயக்கத் தொடர்பு யுத்தம் முடியும்வரை அவரை இலங்கையை அணு கும் எண்ணத்தைக்கூட அவரிலிருந்து விரட்டியடிக்கும். பின் னர் போய் வந்தார்தான். அவர்போல் பல இயக்கத் தொடர் புடையோர் போய்வந்தார்கள். ஆனால் அது 2009-க்கு முன் பாகயில்லை.

ஒருவேளை மயில்வாகனம் அவ்விடர்க் காலத்தில் கொழும் பில் நின்றிருந்தாலும், அவரால் நேரடியாக மலருக்கு ஏதும் கெடுதி விளைந்திருக்குமென சுந்தரம் நம்பவில்லை. அனர்த் தமேதாவதில் தொடர்புபட்டிருக்க முடியும். அவ்வாறான நரித் தனம் அவரிடமிருந்ததுதான்.

சுந்தரத்திற்கு ஓய்வூதியம் கிடைத்து, அவருக்கான ஸ்பொன்

சர் விண்ணப்பத்தின் முடிவுக்காக அவர் வடமராட்சியில் காத்திருந்தவேளையில், புவனேஸ்வரி மூலமாகவும், அவருடைய நண்பர்கள் மூலமாகவும், அவர்போல் இங்கிலாந்திலுள்ள மனைவியின் ஸ்பொன்சர் விண்ணப்பத்தின் முடிவுக்காகக் காத்திருந்த ஆசிரிய நண்பர் சிவநாயகம் மூலமும் அவர் பலவும் அறிந்துகொண்டுதான் இருந்தார். பல இன்னல்களின் வடிவங்களை பயண நேரங்களில் அவரே நேரில் கண்டுமிருந்தார். அவையெல்லாம் மலர் கொழும்பில் தங்கியிருந்த அந்தக் காலகட்டத்தில் தாண்டியிருக்கக் கூடிய அல்லது அடைந்திருக்கக்கூடிய இன்னல்களின் பாரதூரத்தனத்தினை அவருக்கு போதுமானவளவிற்கு பயமுறுத்தும்படியே தெரிவித்திருந்தன.

மலர் கடந்திருக்கக்கூடிய துன்பங்களை எண்ணி எண்ணியே சுந்தரம் தூக்கமிழந்து நெஞ்சு வேகினார். மேலும் மலர் கொழும்பிலிருந்த காலத்தில் அவர்களுக்கிடையில் நிகழ்ந்த இரண்டு மூன்று உரையாடல்களில் வழக்கமாகத் தென்படும் அவரது இறுமாப்பின் மெல்லிய ரேகையினை சுந்தரத்தால் காணக்கூடவில்லை. மிக ஆரோக்கியமாகவும் அந்நியோன்யமாகவும் சிரிக்கச் சிரிக்க அமைந்த அவ்வுரையாடல்களால் வெகுகாலம் மனத்துள் அடங்கிக் கிடந்த காதல்பொறியும் அவர் ஊதப்பட்டுப் போனார்.

ஆனால் இலங்கையிலிருந்து வந்திறங்கிய அன்றைய இரவில் தூக்கத்திலே மலர் கத்திய விதமும், விடிந்ததும் தனக்கு தனியறை வேணுமென நடராஜசிவத்துக்கு போன் பண்ணியதும் சுந்தரத்தை பழையபடி சஞ்சலத்திற்கும் மனவுடைவுக்கும் சலிப்புக்கும் ஆளாக்கிவிட்டன. அவர் யோசிக்க நிர்ப்பந்திக்கப்பட்டார்.

நீண்ட காலம் கைவிட்டிருந்த புகைப் பழக்கம் அப்போதுதான் துன்பங்களின் சரணாலயமாக அவருள் மீள் பிரவேசம் செய்தது.

அவர் காதுகொடுக்கத் துவங்கினார். தான் இயல்பில்லாததெனக் கருதிய மலரது முணுமுணுப்புகளும் சுயசம்பாஷணைகளும் உள்ளோடிய அல்லது வெளிப்படையான உண்மையின் கீறுகளைக் கொண்டிருக்கின்றனவெனக் கண்டடையும் ஓர் உளவில் தன்னைப் புகுத்தினார்.

இரவுகளில் அவள் தன் கதையைச் சொன்னாளென்று இல்லை. அலறிய குரலில் அரங்கேற்றினாள். சில கதைகளின் சப்த ரூபம் உக்கிரமாயிருந்தது. சில அச்சத்தை விளைத்தன. இன்னும் சில நியாயக் கேட்புகளாக இருந்தன. சில வெறும் சத்தங்களாய் சீணித்தன.

வெளப்பாடொன்றும் சுகமான அனுபவமாயிருக்கவில்லை. அதில் மலர் படும் துடிப்பில் தன் நோக்கத்தையே பல சமயங்களில் அவர் கைநழுவிப் போகவிட்டார். பிரக்ஞையோடு.

மனங்கள் விலகி, உடல்களும் விலகியாயிற்று. அவருக்கு உடம்பில் உணர்ச்சி வெறி பீறிடவில்லை. மனத்தில் அது பீறிட்டது. மலரின் மனோரீதியான சித்திரவதையின் காரணம், அதன் தொடக்கப் புள்ளி அவருக்குத் தெரிந்தாகவேண்டும்.

அதற்கு மலரின் சுயம் மறந்த இரவுப் பிதற்றல்கள் திசைகாட்டியாக முடியும்.

அவர் தன் உளவில் காத்திருக்கிறார்.

உடல் நிலை கருதி மேலும் குளிரத் துவங்கும் அவ்விரவினைத் தப்ப எழுந்து உள்ளே நடந்தார்.

காலத்தின் சிறு துகள் மிகப் பிரமாண்டம் காட்டி விநாடிகளாய் உதிர்ந்துகொண்டிருந்தது. அதன் பெரும்பொழுதான மணத்தியாலத்தையே சிறு துகளாய்க் கழித்த காலங்கள் அவளுக்கு இருந்திருந்தன. இப்போது இல்லை. எல்லாம் ஓர் அந்திம திசையடைந்து இரண்டு வருஷங்கள். எனினும் உள வெடிப்பின் ரேகைகள் எதுவும் வெளித் தெரிவதில்லை. சேஷ்டைகள் இருந்தன. சிரிப்பு இருந்தது. புல்வெளி உலாவுகையும், கடைத் தெரு செல்லலும், சினிமா பார்த்தலுமென எல்லாம் இருந்தன. அவை இயல்பின் காட்சியாய் முன்னே துருத்திக்கொண்டு இருக்கையில், அடுத்த வீடுகூட உள்ளேயொரு முரணினை சந்தேகந்தானும் படுவதாயிருக்கவில்லை. அவர்கள் மகன் ரவிதாஸ்கூட மூன்று அறைகளும் மூன்று கட்டில்களும் இருக்கிற நிலையிலும் அவர்களது அந்நி-யோன்யத்தில் ஏது முரணையும் காணாதவனாகயிருந்தான்.

அவள் அதைத் தன் வசதியாகவே எடுத்துக்கொண்டாள். தன் சுதந்திரத்தின் எல்லை விரிதலின் அறிகுறியாக அது அவளுக்குப் பட்டது. பெற்றோர் செய்துவைத்த கல்யாணமாகயிருந்தும் ஏழு வயது மகனிருக்கையிலேயே காதல் அவளுக்குள் இருந்தது. ஒருபொழுது கண்ணில் அவனைக் காணாவிட்டால் தவிக்கிற மனமிருந்தது. ரவீந்திரநாதன் எல்லாவற்றினையும் போட்டுடைத்தான். திருந்திவிட்டேனென ஒருநாள் திரும்பிவந்து மன்றாடினான். ‘திருந்தியிருந்தா நல்லதுதானே?’யென்றாள் அவள். அவ்வளவுதான் சொன்னாள்.

வேறொருநாள், தாசுக்கு ஒன்பது வயதாகிறது, அந்த இடைவெளியே அதிகம், அவனுக்கு ஒரு சகோதரத்துக்கு இன்னும் ஜாதகத்தில் இடமிருக்கிறதாமென பேச்சுவாக்கில் பறைஞ்சான்.

ஒன்றே போதுமென்றுவிட்டாள் அவள். தன்னை மீண்டும் ஒரு பொறிக்குள் அடைத்துக்கொள்ள அவள் தயாராகயிருக்கவில்லை.

முன்பெல்லாம் அவளுக்கு ஒரு நாளிலே இருபத்துநான்கும், அவனுக்கு இருபத்துநான்கும், அதுபோல் தாசுக்கும் அதேயளவு மணி நேரங்கள் இருந்தன. ஆனால் மூவரின் காலத்தையும் ஒருமிக்கப் பார்த்தபோது மொத்தமாகவும் இருபத்துநான்கு மணி நேரமே வந்தது. அது ஒருவர் வாழ்வை ஒருவர் வாழ்வதான, ஒருவருக்காக ஒருவர் இயங்குவதான குடும்பமொன்றின் ஸ்திதியைக் காட்டியது.

ஆனால் என்று அவர்களது ஒற்றைப் பெரும் படுக்கையிலிருந்து ரவீந்திரநாதன் கழன்றுபோனானோ, அன்றே ரஸம் கழன்ற கண்ணாடியாக இருவர் வாழ்வும் ஆகிப்போனது.

சாந்தரூபிணிக்கு, தன் கல்லூரிக் கால சிநேகிதியொருத்தியை, அவள் கனடா லண்டனிலிருந்து மார்க்கம் வந்திருந்தபோது சந்திக்க முடிந்திருந்தது. சந்திக்க அத்தனை காலமெடுத்ததே தவிர, அவள் நினைவு மனப் பரப்பில் இவளுக்கு கலையாதே என்றும் இருந்திருந்தது.

அவளுக்கு கமலாசனியென்று பெயர். வகுப்பில் ஏற்கனவே ஒரு கமலா இருந்தவரையில் புதிதாக கட்டைப்பிராயிலிருந்து வந்தவளை சனியென கூப்பிடலாமென்று யாரோ சொன்னதை எல்லோரும் சில்லென்ற சிரிப்போடு ஏற்றுக்கொண்டார்கள். இவள்தான் சொன்னாள் அது சரிப்படாதென. சனி வாறாள் என்றால், சனியன் வருகிறதெனவும் அர்த்தமாகிவிடுமென மறுத்தாள். கமலாசனிதான், அதில் பாதகமில்லை, சனி யென்றே கூப்பிடச் சொல்லிவிட்டாள். எந்த அவமானத்தையும் கிரீடமாய் எதிர்கொள்ளலில் இருந்த உறுதியில் இவளும், தன்னை தகுந்த சமயத்தில் காப்பாற்ற கைநீட்டிய இவளை அவளுமென நேசிக்குமளவு இருவரும் இதயம் நெருங்கிப் போனார்கள். அதன் பின்னர், த. கமலாசனிக்கு ஒரு வடமொழிச் சொல்லையிட்டு த. கமலாஸனியென மாற்றி, அதைப் பழக்கத்தில் கொண்டுவர வைத்து ஆசுவாசம்கொண்ட இவளின் அன்பில் கமலாஸனியும் கரைந்துபோனாள்.

நினைக்கிறபோதெல்லாம் சாந்தரூபிணிக்கு மனதை இளக்கி முறுவலைச் சிந்தவைப்பதாகயிருந்தது, அந்தக் கல்லூரிக் காலச் சம்பவம். மார்க்கம் வெளியில் ஒரு கனடாச் சுதந்திர தினத்திலன்றான வாண வேடிக்கை இரவில் சந்தித்தபோதும் இருவரும் அதை ஞாபகம் மீண்டு சிரித்தோய்ந்தார்கள்.

அன்றுதான் அவள் இவளுக்கு ஒரு வேலையின் அவசியத்தை, குடும்ப உட் பிளவுகள் தெரியாமலே, அறிவுறுத்திப் போனாள்.

சமீப காலத்தில் சாந்தரூபிணியின் சிந்தனையை ஆக்கிரமித்திருந்தது அந்த எண்ணம்தான். வெளியே முன்புறத்து நாற்காலியில் அப்போதும் அதுபற்றி எண்ணியவளாகவே சாந்தரூபிணி அமர்ந்திருந்தாள். ரவிதாஸ் சமீபத்திலுள்ள அவனது பாடசாலைக்கு அந்தத் தெருவிலிருந்து அங்கே கற்கச் செல்லும் இரண்டொரு மாணவர்களுடன் சேர்ந்து போய்வரக்கூடிய சாத்தியத்தை தான் அத்தனை காலம் எண்ணாதிருந்ததை ஒரு வலியோடு அவள் நினைத்தாள்.

தடைகளென நினைத்திருந்தவை அகற்றப்படக் கூடியவையாய் இருந்தவகையில் இனி தான் வேலை தேட ஆரம்பிக்கலாமென்பது அவளின் தேர்வாக இறுதியில் வந்தது. முடிவை ரவீந்திரநாதனிடம் விரைவில் சொல்லிவிட தீர்மானமும் கொண்டாள்.

வாழ்க்கையை அவ்வண்ணம் கழிப்பதில் எந்தளவு பாதிப்பு வந்துவிடும்? காமத்தின் தவனம் தெப்பமாய்த் தேங்கும். அது வாழ்வின் தாங்கமுடியாத் துயராக அவளுக்குத் தோன்றவில்லை. தனிமனிதரின் உடல் மன நிலைகளின் விசை அதன் அவசியமாகும் பங்கினைக் கணிக்கிறதென்பது அவளது அபிப்பிராயமாகயிருந்தது.

பொருளாதாரச் சிக்கலிலிருந்து ரவீந்திரநாதன் ஓரளவு மீண்டுகொண்டிருந்தாலும், இரண்டாண்டுகளுக்கு முன்பிருந்த நிலையை அடைந்துவிடவில்லையென்பதை அவனே அவளிடம் சொல்லியிருந்தான். அவன் சொன்னதுபோல் அதிலிருந்து விரைவில் அவன் மீளக்கூடும். மீண்டுவிடுவான். அவளுக்குச் சந்தேகமில்லை. அவளது முடிவில் குடும்பத்தின் பொருளாதார மந்தம் அல்லது செழிப்பு எதுவும் எவ்விதத்திலும் சம்பந்தப்பட்டுப் போகவில்லை. தனித்துவமான, சுயாதீனமான வாழ்வின் ஆதார நாதமாயே அதை அவள் கண்டாள்.

கீழே குடியிருக்கும் சுந்தரம் அங்கிள்கூட, தன் நண்பர்கள் தெரிந்தவர்களுக்கு வீடு விற்பனை - வாங்குதல்களில் ரவீந்திரநாதனுக்கு சகாயம் செய்துகொண்டிருந்தார். அவரால் ஒரு வீட்டை விற்றுக்கொடுக்கவும் முடிந்திருந்தது. தனது பங்குக்கான வருமானத்தில் ஐயாயிரம் டொலரை அன்பளிப்பாக ரவீந்திரநாதன் அவருக்குக் கொடுக்க முன்வந்தபோது அவர் அதுவோர் உதவியேயில்லையென பெருந்தன்மையோடு மறுத்துவிட்டமையில் ஏற்கனவே கலைஞர், ஆசிரியப் பணி புரிந்தவரென்ற தளங்களில் வெகு கௌரவத்துடன் நினைத்திருந்தவள் மேலும் மதிப்பேறிப்போனாள்.

அன்றொருநாள் மயில்வாகனம் மொன்றியலிலிருந்து அவர்களைக் காண வந்த விபரம் தெரிவிக்க பாதி தூரம் படிக்கட்டு தாண்டிவந்து இடையில் நின்று அங்கிள் எனக் கூப்பிட்டதும், அவர் கீழே வந்தபோது, தொலைபேசி எண் எழுதிய துண்டை தான் நகராமல் நின்று நீட்ட அவரே மூசிமூசி மேலே ஏறிவந்து வாங்கியதை எண்ணினாள். அது அவளை வருத்தத்தான் செய்தது. அவரையும் அது வருத்த நிச்சயம் செய்திருக்கும். அவர் எவ்வளவுதான் உலகியல் நடப்பு தெரிந்தவராயினும் தன் வயதுக்கு அளிக்கப்படாத மரியாதையின் மன வலியிலிருந்து அவர் தப்பியிருக்க முடியாது.

தன் காட்டமான நடவடிக்கைகளை தவிர்க்கவியலாமையின் விளைவுகளாய் அவரைப் பொறுத்துப்போகச் செய்யுமென்ற நம்பிக்கையில் அவள் மனம் தணிந்தது. 'உங்கட மனிசியின்ர கதையால உங்களையும் சிலவேளை மரியாதைக் குறைவாய் நடத்திறதாய் ஆகியிடுது, என்னை மன்னிச்சிடுங்கோ.'

ரவீந்திரநாதன்கூட நடந்தது அவள் சொல்லக் கேட்டு, 'அவையோட உமக்குச் சமாளிக்கிறது கஷ்ரமெண்டா, எழும்பச்சொல்லியிடுவம்' என்றிருந்தான். அவள்தான் வேண்டாமென்றாள். 'மனுஷியின்ர வாய்தான் பொல்லாதது. மற்றப்படி அங்கிள் நல்லவர்தான? அவருக்காண்டியாச்சும் நாங்கள் பொறுத்துத்தான் போகவேணும்.'

அப்போது ரவீந்திரநாதனின் பெரியப்பா வீடு வந்தார். சாந்தரூபிணியோடு நீண்டநேரமாய் ஊர்க் கதைகள் பேசிக்கொண்டிருந்தார். தண்ணி போட்டா நல்லாய்க் கதைசொல்லும் மனிஷன். என்னவொன்று, எந்த நேரத்தில, என்ன தூஷணை வார்த்தை மனிஷன்ர வாயிலயிருந்து வருமெனக் கணிக்க முடியாது. திட்டமிட்டு அவர் எதையும் சொல்வதில்லை. அவரது சுபாவமே அதுதான். உணர்ச்சி வசப்படுகிறபோது ஊரில்போல் அது தானாக வந்துவிடுகிறது. கனடா வந்து பதினைந்து வருஷங்களுக்கு மேலே. இன்னும் அல்வாய்ப் பேச்சு மாறவில்லை.

ஆனாலும் ஒருநாள் அவர் ஒரு நல்ல கதை சொன்னார்.

உலை வைத்துச் சோறாக்கிறது எப்படி என்பது பற்றிய கதை.

பிரான்ஸிலிருந்து வந்த ஒரு பதின்ம வயதுப் பிள்ளைக்கு அதுபற்றிய ராசாமணி ரீச்சரின் செய்முறை விளக்கமது.

அது கொஞ்சக் காலம் பிரான்ஸில் தமிழ்ப் பகுதி முழுக்கத் திரிந்தது சிறகெடுத்து. செய்முறை விளக்கம் ராசாமணி ரீச்சரிடம் கேட்ட தமிழ் பிள்ளையும் தன் வகுப்புப் பிரெஞ்சுப் பிள்ளைகளுக்குக் கூற, அவர்கள் தமது நண்பர்கள் பெற்றோர்களுக்குக் கூறவென ஏறக்குறைய பிரான்ஸின் குறிப்பிட்டளவு விஸ்தீரணத்தில் அந்தக் கதை இரண்டு மொழிகளிலும் உலவித் திரிந்து சிரிப்பலைகளை எழுப்பியது.

'உலை வைக்கிறதென்டா என்ன, அம்மம்மா? சோறு காய்ச்சிறதுக்கு உலை ஏன் வைக்கவேணும்?'

தனது அம்மம்மாவுக்கும் இன்னொரு தமிழ்ப் பாட்டிக்குமிடையே, ஒருகாலத்தில் பல்வேறு தமிழ் விடுதலை இயக்கங்களுக்கும் மத்தியில் அடிபாடுகளும் துவக்குச் சூடுகளும் நடந்த றூ டி கல்வினோ தெருவில் இடம்பெற்ற சம்பாஷணையைக் கிரகித்த அலீஸ் சின்னத்துரையென்ற பெண் பிள்ளை வீடு திரும்பியதும் கேட்ட கேள்விதான் அது.

தமிழ்ப் பிள்ளையும் அதன் பாட்டியும் அதற்கான பதிலை, புரிந்துகொள்ளவும் புரியவைக்கவும் பட்ட கஷ்டத்திலிருந்து உருவாகுகின்றது நிகழ்வு.

உலை வைக்கிறது பற்றி பேச்சில் அறிந்துகொண்ட அலீஸ் சின்னத்துரையென்ற தன் பேர்த்தியின் கேள்விகளுக்கு விளங்கும்படியான பதில் சொல்லமுடியாது போன அந்தப் பிள்ளையின் அம்மம்மாவான சாந்தம்மா தாவீது, அவளது மரபிலிருந்த ஆர்வத்தை மழுங்கடிக்காது நாட்டிற்கே அழைத்துச் சென்று செய்முறை விளக்கத்தை நேரில் அளிக்கத் தீர்மானிக்கிறார். தேசத்திலும் யுத்தம் முடிவுக்கு வந்திருந்தமையால் ஒருமுறை ஊரைப் பார்த்துவருவதும் நல்லதென ஒரு 2010-ம் ஆண்டு பிரான்ஸில் பள்ளிகளுக்கு கோடை விடுமுறை விட்டிருந்த காலப் பகுதியில் அலீஸ் சின்னத்துரையை அழைத்துக்கொண்டு ஒரு சுருங்கிய பயணத்தை இலங்கைக்கு மேற்கொள்கிறார்.

தன் நோக்கத்தை நிறைவேற்ற முதலில் கொழும்பிலிருந்த தம் உறவினரை அணுகியவர், உலை வைத்து சோறு சமைப்பதற்கான செய்முறை விளக்கமளிக்கிற வாய்ப்பு கொழும்பில் இல்லையென்ற அவர்களது பதிலில் திகைக்க நேர்ந்தது. அவர்கள் மேலும், அதற்கு யாழ்ப்பாணம் தோதான இடமாகலாமென்றும், அங்குகூட மண்ணெண்ணெய் அடுப்புப் போய் மின்சார அடுப்பும், எரிவாயு அடுப்பும் பிரஷர் குக்கரும் வந்துவிட்டதைச் சொல்லி கிராமப்புறம் ஏதாவதை அணுகிப் பார்க்கும்படியும் ஆலோசனை சொன்னார்கள்.

அதன்மேல் சாந்தம்மா தாவீது யாழ்நகர் வந்து, கரவெட்டியில் ஒரு நண்பரை நெருங்கி, அவர்மூலம் தனக்கு உதவக் கூடிய தும்பளையிலுள்ள ஓய்வுபெற்ற ஆசிரியையான ராசாமணி ரீச்சரைக் கண்டடைந்தார்.

சாந்தம்மா தாவீதின் விருப்பத்தைக் கேட்டு ராசாமணி ரீச்சர் அசந்துபோனாரென்றே சொல்லவேண்டும். என்றாலும் வெளிநாட்டில் பிறந்த தமிழ்ப் பிள்ளைக்கு தம் மரபார்ந்த விஷயங்களில் ஏற்பட்டிருக்கும் ஆர்வத்தை மதித்து அதற்குச் சம்மதித்தார்.

மறுநாள் பேர்த்தி அலீஸ் சின்னத்துரை சகிதம் சாந்தம்மா தாவீது ராசாமணி ரீச்சர் வீடு வந்தபோது அவரும் ஆயத்தமாகவே நின்றிருந்தார்.

உலை வைத்து சோறாக்கல் செய்முறை விளக்கத்தை அலீஸ் சின்னத்துரை வீடியோ படமாக்க முயற்சிக்க, அது அவருக்கு தயக்கமாகவும் கூச்சமாகவும் ஆகிப்போயிற்று. ஆயினும் ஆசிரியராயிருந்த அனுபவத்தால் சொற்கள் அவருக்கு மிக இலகுவாக வந்து கைகொடுத்தன. அது உண்மையில் அவரது பாட்டியின் மொழியேயாகும். அந்த மொழியிலுள்ள சில சொற்களுக்கு சாகாவரமளிக்கும் முயற்சியாக அந்த வீடியோப் பதிவினைக் கருத அவரது தயக்கம் முற்றாக அவரிடத்தில் அற்றுப்போனது.

தன் பாட்டியின் மொழியைக் கடனெடுத்து தன் செய்முறை விளக்கத்தை அளிக்கத் தொடங்கினார் ராசாமணி ரீச்சர்.

விளக்கச் செய்முறை முடிந்தபோது அரிசி புடைத்தல், கொழித்தல், அரிசி கிளைதல் போன்றவற்றை தன் கைபட சிறிதுநேரம் அலீஸ் சின்னத்துரை முயன்று பார்த்தாள். பின்னர் அது அப்போதைக்கு கைவராதென அம் முயற்சியைக் கைவிட்டாள். மற்ற விஷயங்கள் சுலபமானதாகையால் தான் பிரான்ஸ் போன பின் அங்கே செய்துபார்த்துக்கொள்வதாகக் கூறினாள்.

நாடு திரும்பியதும் உடனடியாக உலை வைத்து சோறு ஆக்குவது பற்றிய செய்முறை விளக்கத்தை நோட்டுக் கொப்பியில் முதலில் பிரெஞ்சு மொழியிலும், பின் அம்மம்மாவின் உதவியோடு தமிழிலுமாய் எழுதிமுடித்தாள் அலீஸ் சின்னத்துரை.

- உலை வைத்து சோறு ஆக்குவதற்குத் தேவையான மண் இயத்துக்களாகிய பானை, உலை மூடி, அரிக்கன் சட்டிகளையும் மற்றும் அகப்பையையும் கழுவி அட்டாளையில் நன்றாகக் காயவைக்கவேண்டும்.
- பானையை எடுத்து தேவையான அளவு தண்ணீரை வார்த்து மூட்டிய அடுப்பிலே வைத்தலே உலைவைத்தல் எனப்படும்.
- உலைவைத்தல் என்பதற்கு பேச்சுவழக்கில் ஒரு நல்ல காரியத்தைக் கெடுக்கின்ற முயற்சி என்றொரு பொருளும் உண்டு.
- இது இவ்வாறிருக்க, அடுத்த காரியமாக தேவையான அளவு அரிசியை எடுத்து முதலில் அதை சுளகிலே போட்டுப் புடைத்து தூசு தும்புகளை அகற்றவேண்டும். பின் அரிசியிலுள்ள குறுணலை கொழித்தெடுக்கவேண்டும். அவ்வாறு கொழித்தெடுத்ததை வேறு தேவைகளுக்காக பத்திரப்படுத்தியும் வைக்கலாம். பலர் கோழிகளுக்கான தீவனமாக குறுணல் அரிசியைப் பாவிப்பார்கள் (புடைத்தல், கொழித்தல் காரியங்களை சுளகில் செய்து காட்டுகிறார் ராசாமணி ரீச்சர்).
- அதன் பின்னர் அரிசியை நன்கு சிலாவிய அரிக்கன் சட்டியில் நீரெடுத்து நன்றாகக் கழுவவேண்டும். (அரிக்கன் சட்டியெனப்படுவது அரிசியிலிருக்கக்கூடிய மிகச் சிறு கற்களையும் அரித்தெடுக்கும் சட்டி வடிவிலுள்ள மட்பாண்டமாகும் அரித்தெடுக்கும் சட்டியானதால் அரிக்கன் சட்டி).

- கழுவிய அரிசியில் மேலும் நீர்விட்டு, கல்லைக் களைந்து அரிசியை எடுத்து நீர் கொதித்துள்ள உலையில் போட வேண்டும். (கல்லைக் களைவதை கிளைவதென பேச்சு வழக்கில் சொல்வார்கள்.)
- கற்குறுணிகளிருந்தால் சட்டியின் அடியில் மீந்து வரும். (கிளைதல் எப்படியென செய்துகாட்டுகிறார் ராசாமணி ரீச்சர்).
- உலையில் அரிசியைப் போட்டதும் உலைமூடியினால் மூடிவிடவேண்டும்.
- அரிசி பதமாக அவிந்துவிட்டதை நீரும் ஆவியும் உலை மூடியை மிதத்திச் சீறிக்கொண்டு வெளிவருவதிலிருந்தும் ஓரளவு அறிந்துகொள்ளலாம். அகப்பையினால் ஒரு சோற்றினை எடுத்து நசித்துப் பார்ப்பதன் மூலமும் அரிசி பதத்திற்கு அவிந்துவிட்டதா இல்லையா என்பதை அறியமுடியும். 'ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என ஒரு பழமொழி அங்கே நிலவுகிறது.
- சிலபேர் சோற்றுக்கு உப்பு போடுவார்கள். அவரவர் விருப்பத்தின்படி செய்யும் காரியம் அது.
- அடுத்து முக்கியமான காரியம் கஞ்சி வடித்தலாகும். மிகவும் அவதானமாகச் செய்யவேண்டிய காரியமிது. கஞ்சியை உலையிலிருந்து வடித்தெடுப்பதற்கான பாத்திரத்தை முதலில் அடுப்பின் முன்னால் வைத்துவிடவேண்டும்.
- பின் உலைமூடியினால் பானையின் வாயை கஞ்சி வடிவதற்கான சிறு இடைவெளியை வைத்துக்கொண்டு அழுத்தமாய்ப் பிடித்தபடி பானையை மெதுவாக முன்னோக்கிச் சரிக்கவேண்டும்.
- கஞ்சி முற்றாக வடிந்துவிட்டமை தெரிந்ததும் பானையை நிமிர்த்தி சிறிதுநேரம் மெல்லிய தணல் அடுப்பில் உணர்வதற்காக (உலர்வதற்காக என்பது எழுத்து மொழி) இருக்க விடுதல் நல்லது. பானையில் இப்போது சோறு அடைந்திருக்குமாதலால் பானையை உலுப்பிவிட வேண்டும். அதனால் சோற்று மணிகள் நன்கு பிரிந்து தனித்தனிச் சோறாக வரும்.
- உலை வைத்து சோறு சமைக்கும் இச் செயற்பாடு பெரும்பாலும் இலங்கையில் மறைந்துவிட்டது. ஆனாலும் அபூர்வமாய் சில இடங்களில் பயில்வில் இருக்கின்றது. அதனால் அச் செயற்பாட்டை விளக்குவதற்கான சொற்களும் இன்னும் வாழ்ந்தபடி இருக்கின்றன.
- இவ்வண்ணம் சோறாக்கும் மரபார்ந்த விதத்தை இனிமேலும் காப்பாற்றிவிட முடியுமென நான் நம்பவில்லை. ரைஸ் குக்கர் பெருமளவில் பாவனைக்கு வந்துவிட்டது. இந்தியத் தயாரிப்புக் குக்கர்கள் அதிகமாய் விற்பனையாகின்றன. மேலும் அந்த கொழித்தல், புடைத்தல், சிலாவுதல், உணர்த்துதல், கிளைதல் போன்ற அகராதியில் இடம்பெறக்கூடிய தமிழ்ச் சொற்களை காப்பாற்றுவதற்கு இந்த வீடியோப் பதிவு உதவலாம்.

ஒருநாள் அலீஸ் சின்னத்துரை மேசையில் நோட்டுக் கொப்பியைத் திறந்தபடி வைத்துவிட்டு தூங்கப் போயிருக்கையில் அங்கே வந்த சாந்தம்மா தாவீது, அவள் தன்னைக் கேட்டுக் கேட்டு தமிழில் எழுதியதை முழுவதுமாக வாசித்துப் பார்த்தார்.

அதனால் மெய், மனம் யாவும் ஒருங்கே சிலிர்த்துப் போனார். அலீஸ் சின்னத்துரையினது தமிழ் மொழிக்கு முக்கியமான இளந்தொண்டென குதூகலப்பட்டார்.

தான் தாயாயிருந்து வளர்த்த தாயைத் தின்னியான தன் பேர்த்தியின் வளர் திசை வளப்பம் அவருக்குத் தெரிந்தது.

மறுபக்கத்தில் பிரெஞ்சில் எழுதியிருந்த எழுத்தையும் வாசித்து புரியமுனைந்தார்.

'நான் அச் செய்முறை வழிகாட்டலின்படி முயன்றபோதெல்லாம் இன்றுவரை சோற்றை பதமாக வடித்தெடுத்ததில்லை. ஒருமுறை கஞ்சி வடிக்கையில் சுடுகஞ்சி கையில் ஊற்றுண்டு போனது பானையும் விழுந்து உடைந்துபோனது. இங்கே தமிழ்க் கடைகளில் பானை கிடைக்கலாம். கிடைக்காவிட்டால் இலங்கையிலிருந்துதான் எடுப்பித்தாகவேண்டும். அதையும் அவசரமாகச் செய்யவேண்டியுள்ளது. அம்மம்மா அதற்கு என்ன சொல்வாரோ தெரியாது. தகுந்த வேளைக்காகக் காத்திருக்கிறேன்.'

முயற்சியையும் மீறி சாந்தம்மா தாவீதிடத்தில் சிரிப்பெழுந்தது.

அதுதான், அந்தச் சிரிப்புத்தான், கதையிலிருந்த பிரதானமான அம்சமாகி கதையையே பிரான்ஸ் முழுக்க, உலகம் முழுக்க காவிக்கொண்டு போயிருக்குமோ?

அலீஸ் சின்னத்துரை கண் விழித்து, 'என்ன, அம்மம்மா?' என்றாள்.

'ஒண்டுமில்லை. நீ படு.'

ரவீந்திரநாதன் வீடு திரும்ப நேரமாகுமெனத் தெரிந்து பெரியப்பா கிளம்ப, அந்தக் கதையையும் சொற்களினூடே பின்னப்பட்ட அதன் நகைச்சுவை ஊற்றையும் மீண்டும் மீண்டும் நினைவுகொண்டு உள்ளே நகைத்தாள் சாந்தரூபிணி.

பின் கூடத்துள் சென்று கதவைச் சாத்தினாள். செய்ய எதுவுமிருக்கவில்லை. மேலே போய் அறையில் தாஸ் என்ன செய்கிறானென எட்டிப்பார்த்துவிட்டு கீழே வந்து சோபாவில் அமர்ந்ததும் சுந்தரத்தின் நினைவு மறுபடி வந்தது. கூட, அன்று சுந்தரத்தையும் அவரது மனைவியையும் தேடி மொன்றியலிலிருந்து வந்த மயில்வாகனமென்ற மனிதரையும்.

ஏனோ அந்த மனிதரின் பார்வையும் பேச்சும் அவளுக்குப் பிடித்திருக்கவில்லை. அந்த மனிதரின் வெளிச் சிரிப்புக்குள்ளே கங்குகள் பறப்பதை அவள் கண்டிருந்தாள். அவர்களுக்கு இடையேயிருந்த உறவை அல்லது பகையை பெரியப்பாவைக் கேட்டு அறிந்துகொள்ள ஏனோ உள்ளத்துள் அவசியமான காரியம்போன்ற அவசம் அவளுக்குப் பிறந்தது.

(தொடரும்)



devakanthan@thaiveedu.com

# பிறிஸ்பிற்றேறியன் பாடகர் குழு

## - வில்லியம் சரோயன்

## தமிழில்: என்.கே. மகாலிங்கம்

எங்கள் நாட்டில் ஆர்வமிக்க மகிழ்ச்சியான பல விஷயங்கள் உள்ளன. அதில் ஒன்று, எங்கள் மக்களில் சிலர் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு எளிதாக மாறிப் போய் விடுகிறார்கள். எந்த மதமுமே இல்லாதிருந்த ஒருத்தன் இன்னொரு மதத்திற்குப் போய் விடுகிறான். அல்லது ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்குப் போய் விடுகிறான். அவனுக்கு அதில் இலாபமோ நட்டமோ இருக்காது. அவன் அதை அப்பாவித்தனமாகவே செய்கிறான்.

நான் ஒருவகையான கத்தோலிக்கனாகவே பிறந்தேன். ஆனால் எனக்கு பதின்மூன்று வயது வரும்வரை ஞானஸ்நானம் நடைபெறவில்லை. அதனால் நான் ஞானஸ்நானம் பெற்றபோது அதைச் செய்த பாதிரியார் எரிச்சல் அடைந்தார். எனது சுற்றத்தவரை பார்த்து நீங்கள் பைத்தியக்காரர்களா என்று கேட்டார். அவர்கள் நாங்கள் வெளியே போயிருந்தோம் என்று சொன்னார்கள். அவை அனைத்தும் எனக்கு இன்னும் தெளிவாக நினைவில் இருக்கின்றன.

பதின்மூன்று வயது இன்னும் ஞானஸ்நானம் பெறவில்லை! பாதிரியார் சத்தம் போட்டார். எப்படிப்பட்ட மனிதர் நீங்கள்?

என்னுடைய மாமா மெலிக்கே அதற்குப் பதிலளித்தார். நாங்கள் விவசாயிகள். இருந்தும் எங்களில் மிகவும் திறமையானவர்களும் இருக்கிறார்கள் என்றார்.

அதுவொரு சனிக்கிழமை பின்மதியம். ஞானஸ்நானம் முழுவதுமே ஏழு நிமிஷங்களுக்கு மேல் செல்லவில்லை. ஞானஸ்நானம் பெற்ற பின்னரும் நான் எந்த வித்தியாசத்தையும் உணரவில்லை.

நீ இப்ப ஞானஸ்நானம் பெற்று விட்டாய். ஏதாவது நன்றாக உணர்கிறாயா? என்று என்னுடைய பாட்டி கேட்டார்.

அதன் பின் சில மாதங்கள் நான் புத்திசாலி போல உணர்கிறேன் என்று அவர்களுக்கு சொல்லிக் கொண்டிருந்தேன். அதைக்கேட்ட என் பாட்டி நான் ஏதோ மர்மமான ஒரு நோயால் பாதிக்கப்பட்டிருக்கிறேன் என்றும் எனக்கு மனம் பேதலித்து விட்டது என்றும் நினைக்க துவங்கினார்.

அப்படித்தான் நானும் உணர்கிறேன் என்று நானும் சொன்னேன்.

நீ இப்போ கடவுளை நம்புகிறாயா? அல்லது அதில் உனக்கு இன்னும் சந்தேகம் இருக்கிறதா? என்று சத்தம் போட்டார்.

கடவுளை நம்புகிறேன் என்று எளிதாகச் சொல்லி இருக்கலாம். ஆனால் உண்மையா இல்லையா என்பதில் எனக்கு இன்னும் சந்தேகம் இருந்தது. ஆனால் உண்மையில் நான் கிறிஸ்தவனாக இருக்கவே விரும்பினேன்.

அப்படி என்றால் அதை நம்பிக் கொண்டு உன் வேலையைப் பார் என்றார்.

என்னுடைய வேலை ஒருவகையில் சாதாரணமானது. சிலவகையில் நம்ப முடியாதது.

துலாரே வீதியிலுள்ள பிறிஸ்பிற்றேறியன் தேவாலயத்தில் நடைபெறும் சிறுவர் பாடகர் குழுவில் நானும் பாடிக் கொண்டிருந்தேன். அதற்காக எனக்கு கிழமைக்கு ஒரு டொலர் கிடைத்தது. அதை முதிய கிறிஸ்தவ சீமாட்டி ஒருத்தி கொடுப்பார். அவர் பெயர் ப்பலைாஃபல். ஐவி செடியால் மூடிய ஒரு வீட்டில் சோகத்திலும் தனிமையிலும் வாழ்ந்து வந்தார். அந்த வீடு என்னுடைய நண்பன் பண்ட்றோ கொல்கிஷோயனின் வீட்டுக்குப் பக்கத்தில் இருந்தது.

அவனும் என்னைப் போல உரத்த குரலில் கெட்ட வார்த்தை பேசுவான். அதாவது நாங்கள் இருவரும் கெட்ட வார்த்தைகள் அதிகம் பேசுவோம். எல்லாமே வஞ்சகமில்லாமல் தான். அதனால் திருமதியோ செல்வியோ என்று அறியாத ப்பலை-ஃபலை பலமுறை துயரத்துக்குள்ளாக்கி இருக்கிறோம். அவர் எங்களை அதிலிருந்து காப்பாற்றுவதற்கு இன்னும் காலம் போய் விடவில்லை என்று எண்ணினார். எங்களைக் காப்பாற்றுவது பற்றி எனக்கு எந்தப் பிரச்சினையும் இருக்கவில்லை. அதை ஒருபோதும் நான் எதிர்க்கவோ வெறுக்கவோ போவதில்லை.



செல்வி ப்பலைஃபல் (அவரை இனிமேல் அப்படித்தான் அழைக்க இருக்கிறேன். அவர் எனக்குத் தெரிந்தவரை நிச்சயமாக மணம் முடிக்காதவராகவே இருந்தார். அவர் எப்போதாவது மணம் முடித்தவரா என்பது எனக்கு நிச்சயமாகத் தெரியாது. அல்லது மணம் முடிக்க எண்ணி இருந்தாரா, அல்லது காதலைப் பற்றி அதிகம் கவலைப்படாத ஓர் அயோக்கியனைக் காதலித்தாரா, அதாவது அவரின் இளமைக் காலத்தில், எனக்குத் தெரியாது) நான் சொல்வதென்னவென்றால் செல்வி ப்பலைஃபல் ஒரு பண்பான பெண். றொபேட் ப்பிறவுணிங்கின் கவிதைகளை வாசிப்பவர். உணர்வுத்திறன் மிக்கவர். அவருடைய வீட்டின் தாழ்வாரத்தில் ஒரு முறை அவர் நின்றபோது நாங்கள் பேசுவதைக் கேட்டுக் கொண்டிருந்தார். எங்கள் பேச்சைக் கேட்க முடியாமல் சிறுவர்களே சிறுவர்களே என்று கத்தினார். எங்களைப் பார்த்து நீங்க அசிங்கம் அசிங்கமான வார்த்தைகளைப் பேசக் கூடாது என்றார்.

பண்ட்றோ கொல்க்கோஷியன் உலகத்திலேயே மோசமான பண்பற்ற ஒரு சிறுவனாகத் தோன்றினான். அந்த இயல்புதான் என்னை அவனிடம் கவர்ந்திழுத்தும் இருந்தது. உண்மையில் அதனால் அவன் மிகவும் மரியாதையானவனும் பரிவுள்ளவனாகவும் எனக்குத் தோன்றினான்.

செல்வி ப்பலைஃபம்.. என்றான் அவன்.

அவன் அப்படிச் சொன்னபோது, அப்படி இல்லை, செல்வி ப்பலைஃபல் என்று அவர் திருத்தினார். தயவுசெய்து இரண்டு பேரும் இங்கே வாருங்கள் என்றார்.

நாங்கள் இரண்டு பேரும் படிகளில் ஏறிச் சென்று என்ன வேண்டும் என்று கேட்டோம்.

என்ன வேணும், செல்வி ப்பலைஃபம்? என்றான் பண்ட்றோ.

செல்வி ப்பலைஃபல் அவருடைய மேலங்கிப் பைக்குள் கையை விட்டு ஒரு கைநிறைய சிற்றேடுகளை வெளியே எடுத்தார். அவற்றில் இரண்டை எடுத்து அவற்றைப் பார்க்காமலே எங்கள் இருவருக்கும் ஒவ்வொன்று கொடுத்தார். என்னுடைய கையேடு விமோசனம், ஒரு குடிகாரனின் கதை என்று தலைப்பிடப்பட்டிருந்தது. பண்ட்றோவின் கையேடு இறுதியில் அமைதி, ஒரு குடிகாரனின் கதை என்று தலைப்பிடப்பட்டிருந்தது.

இது எதற்காக? என்றான் பண்ட்றோ.

இந்தக் கையேடுகளை நீங்க வாசித்து ஒழுங்காக இருக்க முயல வேணும். கெட்ட வார்த்தைகள் பேசுவதை நிறுத்த வேணும்.

இதில் எந்த இடத்திலும் கெட்ட வார்த்தைகளைப் பற்றி எழுதி இருக்கவில்லையே என்றான் பண்ட்றோ.

இந்த கையேடுகளில் உங்களுக்கு நல்ல படிப்பினைகள் எழுதப்பட்டிருக்கின்றன. அவற்றை வாசித்து இனிமேல் கெட்ட வார்த்தைகள் பேசுவதை நிறுத்துங்க.

ஓம் அம்மா என்றேன் நான். அவ்வளவுந்தானா?

இன்னும் ஒன்று. என்னுடைய வாத்தியக்கருவியை சாப்பாட்டு அறையிலிருந்து வரவேற்பறைக்கு தூக்கிக் கொண்டுபோக உங்களால் உதவ முடியுமா?

நிச்சயமாக, செல்வி ப்பலைஃபம் என்றான் பண்ட்றோ. எப்ப வும் நாங்க தயார்.

அப்படியாக நாங்கள் சீமாட்டியின் வீட்டுக்குள் சென்றோம். கருவியை எப்படி சேதப்படுத்தாமல் தூக்குவது என்று அவர் சொல்லிக் கொண்டிருக்கும்போது நாங்கள் அதை மெது மெதுவாக சாப்பாட்டு அறையிலிருந்து வரவேற்பறைக்குத் தூக்கிக் கொண்டு சென்றோம்.

இப்போ அந்த கையேடுகளை வாசியுங்கள் என்றார் செல்வி ப்பலைஃபல்.

ஓம் அம்மா என்றான் பண்ட்றோ. அவ்வளவுந்தானா?

சரி. இப்போ நான் வாத்தியத்தை வாசிக்கும்போது நீங்கள் பாட வேணும் என்றார்.

எனக்குப் பாட வராது, செல்வி ப்பலைஃபம் என்றான் பண்ட்றோ.

அது முட்டாள்த்தனம். உன்னால் பாட முடியும் பீட்றோ.

பண்ட்றோ தான் என் மச்சானின் பெயர்.

உண்மையில் என் மச்சானின் பெயர் பன்வொர். அது ஆர் மெனியன் மொழியில் கைதி என்று பொருள். அவன் பள்ளிக் கூடம் சென்றபோது அவனுடைய ஆசிரியர் அதைப் பற்றிக் கவலைப்படவில்லை. அல்லது பன்வொர் என்ற சத்தம் பிடிக் காமல் பண்ட்றோ என்று அவனுடைய அட்டையில் எழுதி னார். அவை எல்லாம் நல்லபடியாகவே நடந்தது. அதனால் எவருக்கும் எந்த தீங்கும் விளையவில்லை.

அவனுக்குப் பதில் அளியாமல் அந்த முதிய பெண் முக்கா லியில் இருந்து கொண்டு தன் பாதங்களை வாத்தியத்தின் மிதிகட்டைகளில் சரியாக வைத்து எங்களுக்கு எந்த அறிவு றுத்தல்களும் தராமல் பாடல் ஒன்றை வாத்தியத்தில் இசைக் கத் துவங்கினார். அதன் மந்தமான தன்மையால் அதுவொரு சமய கீர்த்தனைப் பாடலாக இருக்க வேண்டும் என்று எனக்கு வெளிப்படையாகவே தெரிந்தது, ஒரு கணத்தின் பின் அவரே பாடவும் துவங்கினார். அப்போது பண்ட்றோ மெது வான குரலில் மிகக் கெட்ட வார்த்தை ஒன்றை எனக்குச் சொன்னான். அது அந்தளவு கொச்சையானதல்ல. அதிர்ஷ்ட வசமாக அது செல்வி ப்பலைஃபல்லுக்கு கேட்கவில்லை. செல்வி ப்பலைஃபல்லின் குரல் அத்தனை இனிமையான தல்ல. அவரின் குரலிலும் பார்க்க மிதிகட்டைகளிலிருந்து வரும் கிரீச்சிடும் சத்தம் அதிகமாக இருந்தது. வாத்தியத்தின் தொனிகளும் தெளிவானதாக இருக்கவில்லை.

கலிலீ, ஒளி பொருந்திய கலிலீ என்று அவர் பாடினார்.

எங்களைத் திரும்பிப் பார்த்து தலையாட்டி, சிறுவர்களே இப்போ பாடுங்கள் என்றார்.

எங்களுக்கு பாடலின் வார்த்தைகளோ இசையோ தெரியாது. ஆனால் குறைந்தளவு பொது மரியாதைக்காக நாங்கள் பாட முயன்றோம். வாத்தியத்திலிருந்து வரும் இசையையும் செல்வி ப்பலைஃபல்லின் வாயிலிருந்து வரும் நாடகபாணி வார்த்தைகளையும் கேட்டு பாடினோம்.

அவரே புயலின் ஆளுநர், அவரே பொங்கும் கலிலீயின் ஆளுநர் என்று பாடினார்.

எல்லாமாக மூன்று பாடல்களைப் பாட முயன்றோம். ஒவ் வொரு பாடல் முடிந்த பின்னும் பண்ட்றோ மிகவும் நன்றி செல்வி ப்பலைஃபம் என்று சொல்லுவான். பின் நாங்கள் இப்போ போகலாமா என்று கேட்பான்.

கடைசியில் அவர் தன் வாத்தியத்திலிருந்து எழும்பி, நீங்கள் தான் பாடுவதற்கு சிறந்தவர்கள் என்பது எனக்கு நிச்சயமா கத் தெரியும். கெட்ட நண்பர்கள் குடிக்கக் கூப்பிட்டால் அவர்களுடன் செல்லாதீர்கள் என்றார்.

நாங்கள் போக மாட்டம், செல்வி ப்பலைஃபம் என்றான் பண்ட்றோ. என்னைப் பார்த்து இல்லையா அறம்? என்றான்.

நானும் ஓம் என்றேன்.

நானும்தான் என்றான் பண்ட்றோ. இப்போ நாங்க போக லாமா? செல்வி ப்பலைஃபம்.

கையேடுகளை வாசியுங்கள். இப்பவும் காலம் கடந்து போக வில்லை என்றார் அவர்.

நாங்க வாசிப்பம் என்றான் பண்ட்றோ. வீட்டுக்குப் போனவு டன் அதைச் செய்வம்.

நாங்கள் அவரின் வீட்டை விட்டு அகன்று பண்ட்றொவின் வீட்டின் முற்றத்திற்குப் போய் கையேட்டை வாசிக்கத் துவங் கினோம். அதில் அரைவாசியைத் தாண்டுவதற்கு முன் சீமாட்டி அவருடைய தாழ்வாரத்திற்கு வந்து உரத்த பரபரப் பான குரலில் அது யார் பாடியது என்றார்.

யார் அது என்றால் என்ன? என்றான் பண்ட்றோ.

அவன் மிகவும் திகைத்துப் போனான்.

அதை யார் பாடியது? என்றார் செல்வி ப்பலைஃபல்.

நாங்கள் இரண்டு பேரும் தான் என்றேன் நான்.

இல்லை என்றார் அவர். ஒரு ஆள் தான் பாடினீங்க. அந்த ஒருவருக்கு அழகான கிறிஸ்தவக் குரல் இருக்கிறது என்றார்.

அது நான் இல்லை என்றான் பண்ட்றோ.

நீ தான் அது என்றார் செல்வி ப்பலைஃபல், என்னைப் பார்த்து. நீ ஜுஜீன். அது நீ அல்லவா?

நான் அறம் என்றேன். ஜுஜீன் அல்ல என்றேன்.

சிறுவர்களே இங்கே வாருங்க.

யாரைச் சொல்றீங்க? என்றான் பண்ட்றோ.

இரண்டு பேரையும் தான் என்றார் அவர்.

நாங்கள் திரும்பவும் அவருடைய வீட்டுக்கு போனபோது செல்வி ப்பலைஃபல் வாத்தியத்தின் முன்னால் இருந்து கொண்டிருந்தார். பண்ட்றோ சொன்னான், எனக்குப் பாட விருப்பம் இல்லை. நான் பாட மாட்டன்.

அப்படி என்றால் நீ பாடு என்றார் என்னைப் பார்த்து.

நான் பாடினேன்.

செல்வி ப்பலைஃபல் பாய்ந்தெழுந்து நின்று கொண்டு நீ தான் அது. இனிமேல் நீ தேவாலயத்தில் பாட வேண்டும் என்றார்.

நான் பாட மாட்டன் என்றேன்.

நீ கெட்ட வார்த்தைகள் பேசக் கூடாது.

நான் கெட்ட வார்த்தைகள் பேசுவதில்லை. திரும்பவும் சொல்றன் நான் என் உயிர் உள்ளவரை கெட்ட வார்த்தைகள் பேச மாட்டன். ஆனால் தேவாலயத்தில் பாடவும் மாட்டன் என்றேன்.

உன்னுடைய குரல் நான் கேட்ட குரல்களிலியே மிகவும் உயர்வான கிறிஸ்தவக் குரல்.

அப்படி அல்ல.

ஓம் அது உண்மை.

சரி நான் இனி பாடப்போவதில்லை.

நீ கட்டாயம் பாட வேணும். கட்டாயம்.

அதிக நன்றி செல்வி ப்பலாஃபல் என்றான் பண்ட்றோ.

அப்போ நாங்க போகலாமா? அவன் தேவாலயத்தில் பாட மாட்டானாம்.

ஏன்?

தன் ஆன்மாவின் நன்மைக்காக.



வில்லியம் சரோயன் 1908-1981 - அமெரிக்க நாடகாசிரியர், நாவலாசிரியர், சிறுகதை ஆசிரியர். இவர் ஆர்மேனிய அமெரிக்கர். கலிஃபோர்ணியாவில் பிறந்தவர். இவரின் தந்தை ஓட்டோமன் பேரரசிலிருந்து அமெரிக்காவில் குடியேறியவர். சரோயன் ஆர்மேனியக் குடியேறிகளின் வாழ்க்கை பற்றி விரிவாக எழுதியுள்ளார். இவருடைய சிறந்த படைப்புக்களாக அறியப்பட்டவை: The Time of Your Life, My Name is Aram, My Heart's in the Highlands. இங்கே மொழியாக்கம் செய்யப்பட்ட கதை இரண்டாவதாக மேலே குறிப்பிட்ட நூலிலிருந்து எடுக்கப்பட்டது. 1940-ல் நாடகத்திற்கான புலிற்சர் பரிசு இவருக்குக் கிடைத்தது. 1943-ல் The Human Comedy என்ற அவருடைய நாவலைத் தழுவி எழுதிய சினிமா நாடகத்திற்காக அதிசிறந்த கதைக்கான அகடெமி விருது கிடைத்துள்ளது.

இவர் ஹெமிங்வே, ஸ்ரைன்பேக், ஃபோக்னர் போன்றவர்களுடன் ஒப்பிடக் கூடியவர். இருபதாம் நூற்றாண்டு அமெரிக்க இலக்கியத்தில் முக்கியமானவர். ஆனால் 'இருபதாம் நூற்றாண்டில் குறைத்து மதிப்பிடப்பட்ட ஒருவர் இவர்' என்று ஒரு விமர்சகர் இவரைப் பற்றிச் சொல்கிறார். இவர் மக்களையும் அமெரிக்காவையும் மிகவும் நேசித்தவர். வாழ்வில் பிறர் தரிசிக்காத இலக்கிய உலகை இவர் படைத்துள்ளார்.

பண்ட்றோ திரும்பவும் அந்த கெட்ட வார்த்தையை குசுகுசுத்தான்.

இப்போ சொல், உனது பெயரென்ன? என்றார் சீமாட்டி.

நான் என் பெயரைச் சொன்னேன்.

நீ ஒரு கிறிஸ்தவன் தானா?

அப்படித்தான் நினைக்கிறன்.

பிறிஸ்பிற்றேறியன் இல்லையா?

அதைப்பற்றி எனக்குத் தெரியாது.

நீ பிறிஸ்பிற்றேறியன் தான். நிச்சயமாக பிறிஸ்பிற்றேறியன் தான். துலாரி வீதியில் உள்ள பிறிஸ்பிற்றேறியன் தேவலாயத்தில் நீ பாட வேண்டும். சிறுவர்களின் சேர்ந்திசைக் குழுவில். அடுத்த ஞாயிறு.

ஏன் என்று பண்ட்றோ கேட்டான் திரும்பவும்.

எங்களுக்குப் பாடக் கூடியவர்கள் தேவை. இளம் பாடகர்கள். இவன் வருகிற ஞாயிறு பாட வேணும்.

எனக்குப் பாட விருப்பம் இல்லை. தேவாலயத்திற்குப் போவதற்கும் எனக்கு விருப்பம் இல்லை.

சிறுவர்களே இருங்கள் என்றார் செல்வி ப்பலைஃபல். உங்க ளுடன் நான் கதைக்க வேணும்.

நாங்கள் இருந்தோம். செல்வி ப்பலைஃபல் குறைந்தது முப் பது நிமிடங்கள் எங்களுடன் கதைத்தார்.

அவர் கதைத்ததில் ஒரு வார்த்தையைக் கூட நாங்கள் நம்ப வில்லை. இருந்தும் மரியாதைக்காக அவருடைய கேள்விக ளுக்கு நாங்கள் பதில் சொல்லிக் கொண்டிருந்தோம். அவர் எந்தப் பதில்களை விரும்பினாரோ அதற்கு ஏற்றது போல பதில் சொல்லிக் கொண்டிருந்தோம். ஆனால் அவர் தன்னு டன் சேர்ந்து முழங்காலில் இருந்து பிரார்த்தனை செய்யச் சொல்லிக் கேட்டபோது நாங்கள் அதைச் செய்யவில்லை. செல்வி ப்பலைஃபல் அதைப்பற்றிக் கொஞ்ச நேரம் விவா தித்தார். பின் எங்களை அப்படியே விட்டு விட்டார். ஒரு கணத்தின் பின் திரும்பவும் அதை முயன்றார். நாங்கள் செய்யவில்லை. பண்ட்றோ சொன்னான் வாத்தியத்தை எந்த நேரம் என்றாலும் தூக்குவதற்கு உதவி செய்வதாக. அல் லது அப்படிப் பட்ட எந்த வேலை என்றாலும் செய்வதாக. ஆனால் முழங்காலில் மட்டும் இருக்க மாட்டம் என்றான்.

செல்வி ப்பலைஃபல் சரி அப்படி என்றால் நீங்கள் கண் களை மூடுவீர்களா என்று கேட்டாள்.

எதற்கு என்றான் பண்ட்றோ.

மற்றவர்கள் பிரார்த்தனை செய்யும்போது அனைவரும் கண் களை மூடிக் கொள்வது வழக்கம் என்றார்.

யார் பிரார்த்திக்கும்போது?

இன்னும் ஒருவரும் பிரார்த்திக்கவில்லை. நான் பிரார்த்திக் கும்போது நீங்கள் கண்களை மூடுவதாக உறுதி மொழி தரு வீர்கள் என்று சொல்ல வேண்டும் என்றார்.

நீங்கள் எதற்காக பிரார்த்திக்கப் போகிறீர்கள்?

உங்களுக்காகத் தான்.

எதற்காக?

நீங்கள் ஒரு தீங்கையும் விளைவிக்க மாட்டீர்கள் என்பதற் காக, உங்களுக்காக சிறியதொரு பிரார்த்தனை என்றார் செல்வி ப்பலைஃபல். இப்போ நீங்க கண்களை மூடுவீர் களா?

ஓ, சரி என்றான் பண்ட்றோ.

நாங்கள் எங்கள் கண்களை மூடினோம். செல்வி ப்பலை-ஃபல் பிரார்த்தனை செய்தார்.

எந்த விதத்தில் பார்த்தாலும் அது சிறியதொரு பிரார்த்தனை அல்ல.

ஆமேன் என்றார் கடைசியில். இப்போ சிறுவர்களே நீங்கள் நன்றாக உணரவில்லையா என்று கேட்டார்.

உண்மையைச் சொன்னால் நாங்கள் எதையுமே உணர வில்லை.

ஓம், நாங்கள் உணர்ந்தோம் என்றான் பண்ட்றோ. அப்ப இப்ப நாங்க போகலாமா, செல்வி ப்பலைஃபம். எப்போவா வது வாத்தியத்தை தூக்க வேண்டுமானால் நாங்க அதைத் தூக்குவதற்கு உதவி செய்வம் என்றான் பண்ட்றோ.

உன்னுடைய திறமைக்கேற்ப நீ பாட வேணும் என்று எனக் குச் சொன்னார் செல்வி ப்பலைஃபல். அத்துடன் உன்னைக் குடிக்க அழைக்கும் கெட்ட சகவாசிகளிடம் இருந்து நீ வில கிச் செல்ல வேண்டும் என்றார்.

ஓம், அம்மா.

தேவாலயம் எங்கே இருக்கிறது என்று உனக்குத் தெரியுமா?

எந்தத் தேவாலயம்?

துலாறே வீதி பிறிஸ்பிற்றேறியன் தேவாலயம்.

எனக்குத் தெரியும்.

திரு சோகஸ் ஞாயிறு காலை ஒன்பதரை மணிக்கு உன்னை எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்.

என்னை அவர் மடக்கி விட்டார் போல நான் உணர்ந்தேன்.

பண்ட்றோ என்னுடன் தேவாலயத்திற்கு அந்த ஞாயிறு வந் தான். ஆனால் அவன் சேர்ந்திசைக்கும் மற்றச் சிறுவர்களு டன் நின்று பாடுவதற்கு மறுத்து விட்டான். தேவாலயத்தின் கடைசி வரிசையில் இருந்து நிகழ்ச்சிகளைக் கவனித்துக் கொண்டிருந்தான். நான் அன்று பாடினேன். இருந்தும் என் வாழ்வில் என்றுமே அதுபோல மகிழ்ச்சியற்று நான் இருந்த தில்லை.

எல்லாம் முடிந்த பிறகு இனிமேல் நான் பாடவே மாட்டேன் என்று பண்ட்றோவுக்குச் சொன்னேன். ஆனால் அதனால் எந் தவித பயனும் விளையவில்லை. காரணம், செல்வி ப்பலை-ஃபல் எங்களை மீண்டும் தன் வீட்டுக்கு அழைத்து வாத்தி யத்தை இசைத்தார், பாடினார், எங்களையும் பாடச் செய்தவ தற்கும் பிரார்த்தனை செய்யச் செய்வதற்கும் முயன்றார். அத் துடன் என்னை சேர்ந்திசை குழுவில் பாடுவதற்கு தீர்மானத்து டன் முயன்றார். நான் முடியவே முடியாது என்று மறுத்து விட்டேன். செல்வி ப்பலைஃபல்லோ அனைத்தையும் உலகா யுத முறையில் தீர்ப்பதற்கு தீர்மானித்தார்.

உன்னிடம் எவருக்கும் இல்லாத அரிதான கிறிஸ்தவக் குரல் இருக்கிறது என்றார். அதாவது கிறிஸ்தவத்திற்கு தேவை யான குரல். நீயும் ஆழமாக மதத்தில் நம்பிக்கையான ஆள். அது உனக்கு இதுவரை தெரியாது. அதனால் எனக்காக ஒவ் வொரு ஞாயிறும் பாட வேணும் என்று உன்னிடம் நான் கேட் டுக் கொள்கிறேன். உனக்கு நான் பணம் தருவேன்.

எவ்வளவு? என்றான் பண்ட்றோ.

ஐம்பது சதம் என்றார் செல்வி ப்பலைஃபல்.

நாங்கள் வழக்கமாக நாலோ ஐந்தோ பாடல்கள் தான் பாடுவோம். அதற்கு எல்லாமாக அரை மணி நேரம் எடுக்கும். அதன் பிறகு போதகர் தன் பிரசங்கத்தை அரை மணி நேரம் செய்வார். அப்போது நாங்கள் அங்கே குந்தி இருக்க வேணும். சுருக்கமாகச் சொன்னால் அந்தப் பணம் போதுமானதில்லை.

அதன் காரணமாக அவருக்கு என்னால் பதில் கூற முடியாதிருந்தது.

அப்போ எழுபத்தைந்து சதம் என்றார் செல்வி ப்பலைஃபல்.

அந்த இடம் காற்றோட்டமில்லாதது. போதகரின் பிரசங்கம் ஒரு அலுப்பு. எல்லாம் மிகவும் மனச்சோர்வை அளிப்பவை.

ஒரு டொலர் என்றார் செல்வி ப்பலைபல். ஒரு சதம் கூட அதற்கு மேல் இல்லை.

ஒன்றே கால் டொலர் ஆக்குங்கள் என்றான் பண்ட்றோ.

ஒரு டொலருக்கு மேலாக ஒரு சதம் கூடத் தர மாட்டன் என்றார் செல்வி ப்பலைஃபல்.

முழு சேர்ந்திசைக் குழுவிலுமே இவனுக்குத் தான் மிகவும் நல்ல குரல் இருக்கிறது என்றான் பண்ட்றோ. ஒரு டொலர் போதாது. இப்படியான ஒரு குரலுக்கு எந்த மதத்திலும் இரண்டு டொலர் கொடுப்பார்கள்.

என்னால் கொடுக்கக் கூடியதைச் சொல்லி விட்டேன் என்றார் செல்வி ப்பலைஃபல்.

இன்னும் வேறு மதங்கள் இருக்கின்றன என்றான் பண்ட்றோ.

அது செல்வி ப்பலைஃபல்லை குழப்பிவிட்டது என்று நினைக்கிறன்.

இவனுடைய குரல் ஒரு கிறிஸ்தவனின் குரல் என்று கசப்புடன் சொன்னார். அதிலும் அது ஒரு பிறிஸ்பிற்றேறியனுடையது.

ஆனால் பப்ரிஸ்ற் அப்படியான ஒரு குரலை இரண்டு டொலர் கொடுத்துப் பெறுவதற்கு விரும்புவார்கள் என்றான் பண்ட்றோ.

பப்ரிஸ்ற்! செல்வி ப்பலைஃபல் வெறுப்புடன் சொன்னார். அப்படிச் சொல்ல நான் விரும்பவில்லை என்றாலும் சொல்கிறன்.

அவர்கள் பிறஸ்பிற்றேறியனிலும் பார்க்க வேறானவர்கள் அல்ல என்றான் பண்ட்றோ.

ஒரு டொலர் மட்டுந்தான் என்றார் செல்வி ப்பலைஃபல். உன்னுடைய பெயர் நிகழ்ச்சி நிரலில் இருக்கும்.

எனக்குப் பாட விருப்பம் இல்லை, செல்வி ப்பலைஃபல் என்றேன் நான்.

இல்லை, நீ பாடுகிறாய். உனக்கு விருப்பம் இல்லை என்று நீ நினைக்கிறாய். பாடும்போது உன் முகத்தைப் பார்த்தால்... நீ விரும்புகிறாய் என்று நல்லாத் தெரியும்.

அவனுக்கு தேவதையின் குரல் என்றான் பண்ட்றோ.

வெளியே வா. உன்னைக் கவனித்துக் கொள்கிறன் என்றேன் அவனுக்கு ஆர்மேனியன் மொழியில்.

அது ஒரு டொலர் குரல் அல்ல என்றான் பண்ட்றோ.

சரி சிறுவர்களே, ஒரு டொலரும் பதினைந்து சதமும். அதற்கு மேல் இல்லை என்றார் செல்வி ப்பலைஃபல்.

ஒரு டொலர் இருபத்தைந்து சதம் என்றான் பண்ட்றோ. அல்லது நாங்கள் பப்ரிஸ்ற்காரர்களிடம் சென்று விடுவோம்.

சரி சரி என்றார் செல்வி ப்பலைஃபல். ஆனால் ஒன்று சொல்ல வேணும், நீங்க கடுமையாக பேரம் பேசுறீங்க.

ஒரு நிமிஷம் பொறுத்திருங்க என்றேன் நான். எனக்குப் பாடுவதற்கு விருப்பம் இல்லை. ஒன்றே கால் டொலருக்கோ எதற்குமே நான் பாட விரும்பவில்லை.

பேரம் என்றால் பேரம் தான் என்றார் செல்வி ப்பாலைஃபல்.

நான் பேரம் எதையும் பேசவில்லையே. பண்ட்றோ தான் பேசினான். அப்படியானால் அவன் பாடட்டும்.

அவனால் பாட முடியாது என்றார் செல்வி ப்பலைஃபல்.

உலகத்திலே எனக்குத் தான் மோசமான குரல் என்றான் பண்ட்றோ, மிகவும் பெருமையுடன்.

அவனுடைய மோசமான குரல் பெறுமதியே இல்லாதது. பத்துச் சதத்திற்கும் பெறுமதி இல்லை என்றார் செல்வி ப்பலை-ஃபல்.

ஐஞ்சு சதத்திற்கும் கூடப் பெறுமதி இல்லை என்றான் பண்ட்றோ.

சரி, நான் பாடப் போவதில்லை. ஒன்றே கால் டொலருக்கோ எதற்குமே. எனக்குக் காசு தேவையில்லை என்றேன் நான்.

நீ பேரம் பேசி ஒத்துக் கொண்டாய் என்றார் அவர்.

ஓம், அப்படித்தான் என்றான் பண்ட்றோ.

நான் பண்ட்றோவில் பாய்ந்து அவனுடன் கட்டிப் புரண்டு உருண்டேன், செல்வி ப்பலைஃபல்லின் வீட்டின் வரவேற்பறையிலேயே. முதிய கிறிஸ்வச் சீமாட்டி எங்களை விடுவிக்க முயன்றார். எந்தச் சிறுவனுக்கு தேவதையின் குரல் இருக்கிறது என்பதைத் தீர்மானிக்க முடியாமல் அவர் பிரார்த்தனை செய்யத் துவங்கினார். அறையிலிருந்த தளபாடங்கள் எல்லாம் புரண்டு அங்குமிங்கும் விழுந்தன. மல்யுத்தம் தொடர்ந்து கொண்டிருந்தது. வாத்தியம் மட்டும் புரள

வில்லை. மல்யுத்தம் கடைசியில் சமமாகவே முடிந்தது. வீரர்கள் மிகவும் களைத்துப் போய் மல்லாந்து கிடந்தார்கள்.

திருமதி ப்பலைஃபல், பண்ட்றோ சேர்ந்திசைக் குழுவில் பாடினால் நானும் பாடுகிறன் என்றேன்.

ஆனால் அவனுடைய குரல் மிகவும் பயங்கரமானது என்றார் அவர்.

அதைப்பற்றி எனக்குக் கவலை இல்லை. நான் பாடினால் அவனும் பாட வேணும்.

அவன் சேர்ந்திசைக்கும் குழு பாடலையே சீர் குலைத்து விடுவான்.

அவனும் என்னைப் போல ஒவ்வொரு ஞாயிறும் மேடையில் ஏறிப் பாட வேணும். அல்லாவிட்டால் நான் பாட மாட்டன்.

சரி பார்ப்போம் என்றார் செல்வி ப்பலைஃபல்.

அதைப்பற்றி கணிசமான நேரம் சிந்தித்தார்.

மேடையில் ஏறி சேர்ந்திசைக் குழுவில் பாடாமல் சும்மா நின்றால் என்ன செய்வது? அல்லது பாடுவது போல நடித்தால் என்ன செய்வது? என்றார் அவர்.

அது எனக்குப் பிரச்சினை இல்லை. ஆனால் அவன் என்னுடன் அங்கே முழு நேரமும் நிற்க வேணும்.

அப்படியானால் எனக்கு என்ன கிடைக்கும் என்றான் பண்ட்றோ.

உனக்கும் நான் பணம் தர வேணும் என்று நீ எதிர்பார்க்கக் கூடாது.

நான் மேடையில் ஏறினால் எனக்கும் பணம் தர வேணும் என்றான் பண்ட்றோ.

சரி. பாடுபவனுக்கு ஒரு டொலர். பாடாதவனுக்கு இருபத்தைந்து சதம்.

எனக்கு உலகத்திலேயே மிகவும் மோசமான குரல் என்றான் பண்ட்றோ.

நீ நியாயமாக நடக்க வேணும். நீ அங்கே பாடக் கூடாது. அங்கே மற்ற சிறுவர்களுடன் பாடாமல் சும்மா நிற்க வேணும்.

இருபத்தைந்து சதம் காணாது.

நாம் இருவரும் நிலத்திலிருந்து எழும்பி தளபாடங்களை ஒழுங்கு படுத்தினோம்.

சரி ஒரு டொலர் பாடுபவருக்கும் முப்பது சதம் பாடாதவனுக்கும் என்றார் செல்வி ப்பலைஃபல்.

ஐம்பது சதம் ஆக்குங்கள் என்றான் பண்ட்றோ.

சரி சரி. உனக்கு ஒரு டொலர். இவனுக்கு ஐம்பது சதம்.

அடுத்த ஞாயிறு நாங்கள் வேலையைத் துவங்கலாமா? என்றான் பண்ட்றோ.

சரி என்றார் செல்வி ப்பலைஃபல். பிரார்த்தனைகள் முடிந்த பின் இங்கே உங்களுக்குப் பணம் தருகிறன். சேர்ந்திசைக் குழுவில் இருக்கும் மற்றச் சிறுவர்களுக்கு இது பற்றி ஒரு சொல்லும் சொல்லக் கூடாது.

நாங்கள் எவருக்கும் ஒன்றும் சொல்ல மாட்டம் என்று பண்ட்றோ சொன்னான்.

இப்படியாக என்னுடைய பதினொரு வயதில் நான் ஏறக்குறைய ஒரு பிறிஸ்றிபிற்றியனாக மாறினேன். குறைந்தது ஒவ்வொரு ஞாயிறு காலையிலும். காசுக்காக அல்ல. பேரம் பேசி ஒப்பந்தம் செய்ததற்காக. செல்வி ப்பலைஃபல் தன் சமயத்தில் என்னைப் பாட வைப்பதற்கு மிகவும் விரும்பியதால்.

ஆறோ ஏழு நிமிஷங்களுக்கு முன் நான் சொல்லத் துவங்கியது போல எங்கள் நாட்டில் உள்ளவர்கள், குறைந்தது எனக்குத் தெரிந்த பலர், மிகவும் எளிதாக எங்கள் சமயத்தை மாற்றிக் கொள்கிறோம். எனக்கு பதின்மூன்று வயதாக இருக்கும்போது ஆர்மேனியன் கத்தோலிக்க தேவாலயத்தில் எனக்கு ஞானஸ்நானம் நடைபெற்றது. அப்போது பிறிஸ்பிற்றேறியன் தேவாலயத்தில் பாடிக் கொண்டிருந்தேன். அந்தக் காலத்தில் மொத்தமாக மரபார்ந்த மதங்களில் நானே நம்பிக்கை இழந்து கொண்டும் இருந்தேன். பல வழிகளில் அதைப் பற்றி நான் புரிந்து கொள்ளவும் சர்வவல்லமையுள்ளவருடன் என்னளவில் சமரசம் செய்யவும் முயன்று கொண்டிருந்தேன். ஞானஸ்நானம் பெற்ற பின்னரும் ஆழமான அதிருப்தி ஒன்று என் நெஞ்சில் குடிகொண்டிருந்தது.

ஞானஸ்நானம் பெற்று இரண்டு மாதங்களின் பின் என் குரலில் மாற்றம் ஏற்பட்டது. அதனால் செல்வி ப்பலைஃபல்லுடனான என்னுடைய ஒப்பந்தம் இரத்து செய்யப்பட்டது. அது எனக்கு பெரும் ஆறுதலைத் தந்தது. அது அவருக்கு பயங்கரமான தாக்கத்தைக் கொடுத்தது.

வென்ஞ்சூரா சாலையில் இருந்த ஆர்மேனியன் கத்தோலிக்க தேவாலயத்திற்கு நான் ஈஸ்ரருக்கும் கிறிஸ்மசுக்கு மட்டும் தான் போவேன். மற்ற நேரங்களில் ஒரு மதத்திலிருந்து இன்னொரு மதத்திற்கு மாறிக் கொண்டிருந்தேன். முடிவில் எல்லா அமெரிக்கர்களைப் போல நான் எல்லா மதத்தையும் நம்புகிறேன். அதேவேளை என்னுடைய சமயத்தையும் நம்புகிறேன். அது பரவாயில்லை என்றுதான் நினைக்கிறேன். எவரிலும் எனக்கு பகைமை இல்லை. அவர்கள் எதை நம்புகிறார்களோ நம்பவில்லையோ எனக்குப் பிரச்சினை இல்லை. அவர்கள் ஆளுமை நல்லதாக இருந்தால் போதும்.



mahalingam.k@thaiveedu.com


BUYERS
If Yathavann Doesn't Negotiate at Least
$10,000 Off The List Price,
He'll Give You $2000
Cash on Closing.
FREE Home Inspection When You Buy With Us.
Sellers
Your Home SOLD in 60 Days
Guaranteed!
OR I'LL SELL IT FOR FREE**
**SOME CONDITIONS MAY APPLY
For More Information On My
Exclusive Guaranteed Sales Program
ORDER A FREE REPORT BY VISITING
WWW.HOUZZVALUE.CA
Free Home Evaluation.
No Cost. No Obligations
RE/MAX
Crossroads Realty Brokerage Inc.
Independently Owned & Operated
Off:416.491.4002
YATHAVANN
SELVARAJAH
Sales Representative
416-992-4474



FOR SALE/ LEASE
FOR ALL YOUR REAL ESTATE NEEDS
கனவு இல்லம்
கைகளில் வர...
உங்கள் வீடு விற்பனை முகவர்...
RE/MAX
Outstanding Agent
for Outstanding Results.
RE/MAX
Excel Realty Ltd., Brokerage*
Bus: 905.475.4750 Fax: 905.475.4770 50 Acadia Ave. Suite 120, Markham, ON L3R 0B3
RAJ NADARAJAH
SALES REPRESENTATIVE
DIR: 416.333.6115
nanohomes@gmail.com

# கடன் தொல்லையா?




பல்லாண்டுகாலம் Bankruptcy, Consumer proposal போற்ற சேவைகளில் அனுபவமுடையவர்கள்

## கட்டணங்கள் ஏதுமற்ற சேவை

- கடன் பிரச்சினையால் நிம்மதியற்ற வாழ்க்கையா?
- நாளாந்த வாழ்கை கைநழுவிப் போகிறதா?
- வீடு, கார் பறிமுதலாகிவிடும் என்ற ஏக்கமா?
- Collection Agnecyயின் தொலைபேசி மிரட்டலா?
- உங்கள் சம்பளம் கடன் தந்தோரால் பறிமுதலாகும் என்ற கவலையா?

- ✓ சேவைக்கான கட்டணம் (Consulting fee) நாங்கள் அறவிடுவதில்லை
- ✓ மறைவான கட்டணங்கள் (Hidden charges) ஏதும் கிடையாது
- ✓ Consumer Proposal செய்வதன் மூலம் உங்கள் கடன்தொகையில் ஒரு பகுதியை மட்டுமே வட்டியில்லாது செலுத்த நாங்கள் ஒழுங்கு செய்து கொடுப்போம்.
- ✓ Consumer Proposal ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கு உடனேயே கடனட்டடை ஒன்றைப் பெற்றுக்கொள்ள ஒழுங்கு செய்து கொடுக்கப் படும்

**Trustee in bankruptcy இணைந்து ஒரே கூரையின் கீழ் இயங்கும் ஒரு தமிழர் நிறுவனம்**

அனைத்து கடன் பிரச்சினைகளுக்கான இலவச ஆலோசனைகளுக்கு

## Sri Vallipuranathar

Certified Insolvency & Bankruptcy Counsellor

**CSC Credit Solution Centre**

309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: **416.439.0224**
Cell: **416.450.5011**
Fax: 416.439.0226

www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com







BRING YOUR PARENTS AND GRANDPARENTS WORRY FREE

Visit your one stop solution center
for all your super visa insurance needs...

SuperVisa.Today

www.supervisa.today #416 321 6000


BUY OR SELL
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS
www.pyramidgroup.com
POWER BROTHERS
REAL 1 ESTATE
UTHAYAN SIVARAJAH BROKER 416.301.5555
RAJ SIVARAJAH BROKER 416.843.3333
KUMAR SIVARAJAH SALES REPRESENTATIVE 416.453.7777
@uthayansivarajah @uthayansivarajah
ROYAL LEPAGE ignite Realty, Brokerage
795 Milner Avenue, Toronto, ON M1B 3C3
Office: 416-282-3333 | Fax: 416-272-3333
INDEPENDENTLY OWNED AND OPERATED
INTEGRITY | KNOWLEDGE | SUCCESS | TEAMWORK


MORTGAGE FINANCIAL
Residential / Commercial / Vacant Land / Industrial / Construction Properties
SUBRA
MORTGAGE SOLUTIONS
புதிய, முதல் தரம் வீடு
வாங்குவோருக்கான மோட்கேஜ்,
1ஆம், 2ஆம், Bridge,
Private மோட்கேஜ்
சுய தொழில் புரிவோருக்கான
மோட்கேஜ்
பழுதடைந்த கிரடிற்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
குறைந்த வருமானம்
உள்ளவர்களுக்கான மோட்கேஜ்
Residential Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
Commercial Mortgages
1st & 2nd Mortgages
Refinance, Renewal & Switches
Equity Line of Credits
NESAN
416-908-5656
mortgage@subra.com
www.subra.com
Powered by
MORTGAGE ALLIANCE
WE DEAL WITH ALL BANKS
Brokerage # 10330
Canada Trust
Scotiabank
FIRST NATIONAL
radius financial
RFA
EQUITABLE BANK
HOME TRUST
MCAP
O: 1-844-878-2721| F: 647-351-3099 | 1585 Markham Rd, Unit # 406, ON, M1B 2W1.



# வீடு வாங்க விற்க...

18 வருடங்களுக்கு மேலான வீடுப்பரிசோதனை அனுபவத்துடன்

## ஒரு வீட்டுப் பரிசோதகர் வீடு விற்பனை முகவரானால்...

### வாங்கப் போகிறீர்களா?

- ☒ தரமான வீடு தவறிப்போகாது
- ☒ பிடித்த வீடு மலிவாய் கிடைக்கும்
- ☒ வாங்கியபின் ஏமாற்றம் இல்லை
- ☒ பெருவருவாய் தரும் முதலீடு

### விற்கப் போகிறீர்களா?

- ☐ இலவச பரிசோதனையும் ஆலோசனைகளும்
- ☐ விற்றபின் வரும் தடங்கல்கள் தவிர்ப்பு
- ☐ சந்தை விலைக்குக் குறையாத பெறுமதி
- ☐ உச்சப் பெறுமதிக்கான உபாயங்கள்
















HOMELIFE HIGHER STANDARDS
HomeLife/Future Realty Inc. Brokerage
GRAND MASTER CLUB 2021

Chairman's Club Award Winner 2015

Chairman's Club Award Winner 2017

Platinum Club Winner 2022

Chairman's Club Award Winner 2016

## Vela Subramaniam

Experienced Home Inspector
Sales Representative

Dir: **416-786-0760**
**info@vela4homes.com**
**www.vela4homes.com**

**Homelife/Future Realty Inc.** Brokerage
Independently Owned and Operated
Bus: 416-264-0101 Fax: 905-201-9229
205-7 Eastvale Dr., Markham, ON L3S 4N8





அரிய சந்தர்ப்பத்தைத் தவற விடாதீர்கள்!
முற்றிலும் இலவசமான சேவை!
12வருடத்திற்கு மேற்பட்ட
உங்கள் Gas Furnace இற்கான CO அளவீடு
வீட்டிற்கு வந்து பரிசோதிக்கப்படும்.
AATEK HEATING & COOLING
$2100 Rebate Available Now
call us 416-414-2280
FREE Inspection in GTA
Over 10 yrs in Business Experience
Flat Rate Pricing
Parts and Labour guarantee
Guaranteed Repairs
Professional Service
Fully Insured
Gas Furnaces, Air Conditioners,
Thankless Water Heater, Gas line install
10 வருடங்களுக்கு மேலாக ரொறன்டோவின் முன்னணி நிறுவனங்களில் பணியாற்றிய அனுபவத்துடன்
Licensed Technician | ELENGO THIYAGARAJAH
ALL MAJOR APPLIANCES E : aatekcanada@gmail.com
We Are Specialists in customs homes Ductwork System
We Are Professional trouble shooters for all major gas appliances
416.414.2280




Buy, Sell Invest
RE/ON
Homes Realty Inc.
Brokerage
Gnani & Judy
Real Estate
www.reongtahomes.com
www.reongtacondos.com
Judy
Gnanendran
Gnanendran
Realtor
416.629.9797
(905) 209 8080
25 KARACHI DR, UNIT #15
MARKHAM, ON L3S 0B5
Narasingham
Realtor
416.937.8090




Eruvamatin
NANOCAL
Kasturi
SABONA
www.sabona.ca 416-264-8787




Ceycan Transhipping Inc.
INTERNATIONAL FORWARDING LOGISTICS
EXCLUSIVE SOLE AGENTS FOR CEYLON SHIPPING LINES IN CANADA
REGULAR PERSONAL EFFECTS SHIPMENTS BY SEA & AIR TO SRI LANKA
OUR AGENTS ACROSS CANADA
For Shipping Schedule Visit
www.ceycantranship.com
SRI LANKA'S BEST CLEARING FACILITIES
COLOMBO
KANDY
BATTICALOA
1981 Boylen Road, Unit #5, Mississauga, Ontario L5S 1R9
sales@ceycantranship.com web: ceycantranship.com




Bringing Your Dreams To Life!
மனையும் மனை சார்ந்த நிலமும்
மகிழ்வுற மக்கள் பெற்று விற்றிடவும்
மனமுறப் பணிவதே மகேசனின் பணி
Mahesan
Subramaniam
BROKER
Free Home Evaluation with No Obligation
416-816-0141





Daniels FirstHome at Markham & Sheppard
Starting from $299,000
OPENING ON NOVEMBER 6TH
ஒரு வீட்டை வாங்க விரும்புகிறீர்களா?
CONTACT ME FOR
REGISTRATION & MORE INFO
416-556-4881
HOMELIFE
HIGHER STANDARDS
HomeLife/Champions Realty Inc, Brokerage
Office :416-281-8090
E-mail: raveenvi@gmail.com
RAVEEN
VINAYAKAMOORTHY
SALES REPRESENTATIVE




LIFE, HEALTH & TRAVEL INSURANCE
InforceLife
Sutharshan Sirinivasan
Advisor
416-854-6768
10 Milner Business Ct. Unit-707 | Scarborough




Finding Homes to Fit Your Lifestyle
Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage


NO MEDICAL
UP TO $500,000
$0 first month's premium
No medical exams
Simple and straightforward
18-80 years can apply
MEDICAL INSURANCE FOR
SUPER VISA
100%
REFUND IF VISA DENIED
Sritharan Thurairajah
416.918.9771
416.321.2500
MDRT
Life100
INSURANCE & INVESTMENTS INC.
10 Milner Business Court, Suite 208, Scarborough, ON M1B 3C6
Are you getting Million Dollar advice


Residential Mortgages | Commercial Business Loans | 1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation | No Down Payment Confirmation
Call me more details...
வீட்டுக்கடன்
வியாபாரக்கடன்
முதலீட்டுக்கடன்
வருமான உத்தரவாதம்
இல்லாமலே
பெற்றுக் கொடுக்கப்படும்
கடன் தேவையா?
என்னை அழையுங்கள்
ரம்போ தர்மலிங்கம்
KAPITAL CARE
MORTGAGE INC.
Rambo
Tharmalingam
Mortgage Agent
5200 Finch Ave. E. Unit 306, Scarborough, ON. M1S 4Z5
647-290-3416 / 416-543-1111


வீடு | வணிகம்
★ வாங்க ★ விற்க ★ வாடகைக்கு...
Residential | Commercial
★ BUY ★ SELL ★ LEASE
CALL YOUR PROFESSIONAL SERVICE
Rave
P. Raveenthiran
Sales Representative
Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com
HOMELIFE
HomeLife G1 Realty Inc.
HomeLife/Future
Realty Inc.Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977
List your property
with me...
FREE!
• Home Evaluation
• Home Staging
• Professional Photography
• Social Media Marketing
• Just Listed & Feature Sheet


நியூ ரங்கனாஸ் நகைமாடம்
சிங்கப்பூர் நகைகளை மிகக் குறைவான விலையில் பெற்றுக்கொள்ளலாம்
பழைய தங்க நகைகள் அதிகூடிய விலைக்கு வாங்கப்படும்
தங்க நகை அடகு சேவை குறைந்த வட்டி வீதம்
புதிய தங்க நகை சேமிப்பு திட்டம் ஆரம்பம்
647-702-2159
MARKHAM & STEELES
YELLOW BUILING
6055 STEELES AVE ESCARBOROUGH, ON M1V 5P6


COMMITTED TO EXCELLENCE
Call me now to get your HOME SOLD 416-725-7284
CENTURY 21
Percy Fulton Ltd.
Ravi Kana
Cell 416.725.7284 (RAVI)


"Serving With Dignity,
Compassion and Excellence"
WELL GUARD INSURANCE
220 Commerce Valley Dr W Suite 480,
Thornhill, ON L3T 0A8
LOTUS
Funeral and Cremation Centre Inc.
121 City View Dr. Etobicoke,
ON M9W 5A8.
Patricia Peter BBM
Licenced Funeral Preplanning Director & After Care Advisor
Licenced Insurance & Investment Advisor
Direct: 416-834 5753
Email: advisorpat10@gmail.com


Residential Mortgages | Commercial Business Loans
1st and 2nd Mortgages | Private Funds Available
Debt Consolidation - Refinance | No Income Confirmation
Call us more details...
KAPITAL CARE
MORTGAGE INC. Lic#12623
Kethes
Sivasubramaniyam
Mortgage Agent
416-873-5780
5200 Finch Ave. East, Unit 306, Toronto, ON. M1S 4Z5


DEVADAS LAW
PROFESSIONAL CORPORATION
Real Estate
HST
Tax Law
Family law
Immigration
Business law
Employment Law
Estate Planning and Last Wills
Vasuki Devadas
Barrister, Solicitor & Notary Public
vasuki@vdlaw.ca
Vinayagamoorthy Devadas CPA, CMA, MBA
Barrister & Solicitor
devadas@vdlaw.ca
1415 Kennedy Road, Unit 3 | Toronto, Ontario | M1P 2L6
Tel: (416) 266-1234 | Fax: (416) 266-2000 | www.vdlaw.ca
Contacting us should be easy as 1,2,3,4 Just remember "266"

NAVA WILSON LLP
BARRISTERS AND SOLICITORS
10 Milner Business Court, Suite 210
Toronto, ON M1B 3C6
416.321.1100
416.321.1107
info@navawilson.law
www.navawilson.law

RAMAN HOME COMFORT INC
HEATING
Quality Products, Certified Technicians, Reliable Service & Reasonable Prices
SAVE $2000 WHEN PURCHASING A NEW HIGH-EFFICIENCY FURNACE
LENNOX
Raman Chelliah
Sales Person
647-893-4414
Tel: 416-332-2989
Email: info@ramanhomecomfort.com
Scarborough : C105-6055 Steeles Ave. East, Scarborough, ON M1X0A7

15 years of Success
500+ Agents
Selva Vettyvel
Broker of Record
HomeLife/Future Realty Inc., Brokerage
416.568.4301
VettyvelLaw
Rishani Vettyvel
BARRISTER AND SOLICITOR
Real Estate Law
416.261.1544

AEREN Thiyagarajah BEng
Realtor
aeren.realtor@gmail.com
Dir: 647-888 3500
DILEEP Thangavel
Realtor
dileep.realtor@gmail.com
Dir: 416-666 2300
BUS: 905 201 9977 | FAX: 905 201 9229
HomeLife/ Future Realty Inc., Brokerage
Independently Owned And Operated
205 - 7 Eastvale Drive, Markham, ON L3S 4N8

நீங்கள் வீடு வாங்கும்போது
$8475⁰⁰
வரை அரச வரிச்சலுகை
பெற்றுக்கொள்ள தகுதியானவரா?
விபரங்களுக்கு 416-888-9492
Swapna Chari, Broker HomeLife Galaxy Realestate Brokerage, Ltd.
301-111 Grangeway Ave, Toronto, Ontario, M1H 3E9 tel: 416-284-5555

ALL YOUR REAL ESTATE & MORTGAGE NEEDS
வீடு என்பது தொடுவானம் அல்ல
கலங்கரை விளக்கு...
Thana Yoganathan
Sales Representative
416.418.5749 www.thanahomes.com
HOMELIFE LANDMARK REALTY INC.BROKERAGE* OFFICE: 905-305-1600

வீடு வியாபார நிலையம்
வாங்க விற்க
HomeLife Today Realty Ltd., Brokerage*
31 Progress Ave., Suite 210, Toronto, ON, M1P 4S6
Bus: 416-298-3200, Fax: 416-298-3440,
E-mail: kuna@kunahomes.ca
*Independently Owned and Operated.
Kuna Nagalingam
Sales Representative
Sujatha Kunasegar
Sales Representative
416.402.4545

RL RAMACHANDRAN LAW
PROFESSIONAL CORPORATION
CIVIL LITIGATION
REAL ESTATE
FAMILY
CORPORATE
EMPLOYMENT
WILLS & ESTATE
VITHU RAMACHANDRAN
J.D., B.Com (Honours)
Barrister & Solicitor
416-902-8225
VITHU@RAMACHANDRAN.LAW | FAX: 416-391-6056

Ahilan Thanabalasingham
Sales Representative
RE/MAX ROYAL PROPERTIES
416.617.1767
RE/MAX Royal Properties Realty Ltd., Brokerage
Office: 905.471.0002
7595 Markham Road, Unit 19 Markham, ON L3S 0B6

UTHAYAN SIVARAJAH
416.301.5555
SUGAN SIVARAJAH 416.890.9999
RAJ SIVARAJAH 416.843.3333
SIVAKUMAR SIVARAJAH 416.453.7777
ROYAL LEPAGE Ignite
PYRAMID GROUP
REAL ESTATE PROFESSIONALS

Your Lifelong Realtor
Nanda Kandasamy
Broker
DIR: 416 457 4509
OFF: 416 270 1111
nandakandasamy@gmail.com
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE

Mega Financial Group
Call Now
Raj Nadarajah
President & CEO
416-666-1120

Sri Vallipuranathar
Certified Insolvency & Bankruptcy Counsellor
CSC Credit Solution Centre
309-80 Corporate Drive
Scarborough, ON M1H 3G5
Tel: 416.439.0224
Cell: 416.450.5011
Fax: 416.439.0226
www.creditsolutioncanada.com
contact@creditsolutioncanada.com

Suba Aynkharan
Broker
Cell: 416-722-4444
E-mail: suba_ay@hotmail.com
1265 Morningside Ave, Suite 203
Toronto, ON M1B 3V9
Tel: 416-287-2222
Fax: 416-282-4488
RE/MAX COMMUNITY REALTY INC., Brokerage

- Ervamatin முடிவை செழிப்பாக வைத்திருக்க உதவுகிறது
Azazen
416-264-8787
www.4162648787.com
2466 Eglinton Ave. East Unit 12A, Toronto ON M1K 5J8

சொர்க்கமே என்றாலும் அது சொந்த வீடு போல வருமா...
Uthayan Alex Sivasambu B.Sc (Hons), M.B.A
Broker
Ottawa: 613.276.SALE (7253)
Toronto: 416.659.SELL (7355)
COLDWELL BANKER

Vaheesan Jeyaveerasingam
Sales Representative
Re/Max Ace Realty Inc. Brokerage
3-1286 Kennedy Road, Scarborough, Ontario. M1P2L5
Dir:
Bus:416-270-1111 | Fax:416-270-7000
RE/MAX ACE
REALTY INC., BROKERAGE
www.vaheesanrealtor.com
Email:gvaheesan@hotmail.com

BUY / SELL / INVEST
Please Contact
RAVI PARAMU
Broker
Dir : 416-262-4176
Bus : 416-298-3200
rparamu1558@gmail.com
HomeLife Today Realty Ltd., Brokerage* 31 Progress Ave, Suite 210, Toronto ON, M1P 4S6
HOMELIFE HIGHER STANDARDS

NOW HIRING
JOIN OUR DYNAMIC TEAM
iNFORCE LIFe Financial Services Inc.
10 Milner Business Court, Suite 707
Scarborough, ON M1B 3C6
Dir: 416-909-0400 Bus: 416-321-6000 x400
career@inforcelife.com www.inforcelife.com
QUALITY ADVICE YOU CAN TRUST
CHANDRAN RASALINGAM CHS
President & CEO

Tharma Iyathurai
Sales Representative
HomeLife/GTA Realty Inc., Brokerage*
5215 Finch Ave. E., Suite: 203
Toronto, Ontario
Cell: 416 505 8532
Office: 416 321 6969
Fax: 416 321 6963
tharma11@yahoo.com
5215 Finch Ave. E., Suite: 203, Toronto, Ontario

DR. YALINI ARAVINTHAN BDS. DDS.
DENTIST
YA Smiles Dental Clinic
ALL YOUR DENTAL NEEDS...
CALL US: 905-554-5524
7475 MCCOWAN RD, MARKHAM, ON L3S 3J6 WWW.YASMILES.CA

RE/MAX NORTH REALTY
077 566 0000
www.remaxnorth.lk
info@remaxnorth.lk
83 Kannathiddy Road, Jaffna
LATHAN VARATHARAJAH